# வரலாறு

## மேல்நிலை – இரண்டாம் ஆண்டு

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

தீண்டாமை ஒரு பாவச்செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

**தமிழ்நாடு பாடநூல் மற்றும்**
**கல்வியியல் பணிகள் கழகம்**
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

© தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2007

திருத்திய பதிப்பு – 2016

மறு பதிப்பு – 2017

**விலை : ரூ.**

பாடங்கள் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
பள்ளிக் கல்வி இயக்ககம் தமிழ்நாடு.

இந்நூல் 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

**ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :**

# மேல்நிலை இரண்டாம் ஆண்டு – வரலாறு
# பாடத்திட்டம்

| | | பாடவேளை |
|---|---|---|
| **அலகு 1** | | |
| 1. | கிழக்கிந்திய வணிகக்குழுவின் கீழ் இந்திய நிருவாகம் – பட்டயச் சட்டங்கள் – விரிவாக்கக் கொள்கை – குடியேற்ற, பொருளாதாரக் கொள்கைகள் | 10 |
| 2. | கிழக்கிந்திய வணிகக்குழுவின் கீழ் கல்வி – ஆங்கிலேயத் தலைமை ஆளுநர்கள் அறிமுகம் செய்த நவீன சமூக சீர்திருத்தங்கள் (பெண்டிங், டல்ஹவுசியின் சீர்திருத்தங்கள்) | 10 |
| **அலகு 2** | | |
| 3. | தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி – பாளையக்காரர் கிளர்ச்சி – வேலூர் கலகம் | 10 |
| 4. | 1857 பெருங்கலகம் – காரணங்கள் – விளைவுகள் முதல் இந்திய விடுதலைப் போர் – வணிகக்குழுவின் ஆட்சி முடிவு – அரசியின் பேரறிக்கை | 10 |
| **அலகு 3** | | |
| 5. | 19 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் சமூக, சமய, சீர்திருத்த இயக்கங்கள் (பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், தியாசாபிகல் சங்கம், இராமகிருட்டிண இயக்கம், முஸ்லீம், பார்சி, சீக்கியர் சீர்திருத்த இயக்கங்கள்) | 10 |
| 6. | 1858க்குப்பின் இந்திய நிருவாகத்தில் மாறுதல்கள் – (1861 ஆம் ஆண்டுச் சட்டம் – ரிப்பன் – 1892 ஆம் ஆண்டுச் சட்டம் – கர்சன் பிரபுவின் நிர்வாகச் சீர்திருத்தங்களும் அதன் விளைவுகளும் | 10 |
| **அலகு 4** | | |
| 7. | இந்திய விடுதலை இயக்கம் (முதல் இரண்டு நிலைகள்) தோற்றம் – வளர்ச்சி – மிதவாதிகள் – தீவிரவாதிகள் – மின்டோ – மார்லி சீர்திருத்தங்கள் – தன்னாட்சி இயக்கம் – மாண்டேகு – செம்சுபோர்டு சீர்திருத்தங்கள் | 15 |
| 8. | இந்திய விடுதலை இயக்கம் (காந்தியின் காலம்) – ஒத்துழையாமை இயக்கம் – சுயராஜ்ய கட்சி – சைமன் குழு – உப்பு அறப்போர் – வட்ட மேசை மாநாடுகள் – காந்தி – இர்வின் ஒப்பந்தம் – தனிநபர் அறப்போர் – கிரிப்சு தூதுக்குழு ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் முதலியன | 15 |

| | | |
|---|---|---|
| 9. | இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழகத்தின் பங்கு – (நீதிக்கட்சி ஆட்சி – காங்கிரசுஇயக்கம்) | 15 |

**அலகு 5**

| | | |
|---|---|---|
| 10. | விடுதலைக்குப்பின் இந்தியா – சமூக, பொருளாதார, அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் – அயல்நாட்டுக் கொள்கை (1947 – 2000) | 10 |

**அலகு 6**

| | | |
|---|---|---|
| 11. | மறுமலர்ச்சி – புதிய கடல்வழிகள் கண்டுபிடிப்பு – சமயச் சீர்திருத்தம் – எதிர் சமயச் சீர்திருத்தம் | 15 |
| 12. | அமெரிக்க விடுதலைப் போர் – பிரெஞ்சுப் புரட்சி – காரணங்கள் – விளைவுகள் | 10 |

**அலகு 7**

| | | |
|---|---|---|
| 13. | தொழில், வேளாண்மைப் புரட்சிகள் – காரணங்கள் – விளைவுகள் | 10 |
| 14. | குடியேற்றம் பரவுதல் – பேராதிக்கம் – முதல் உலகப் போர் – ரஷ்யப் புரட்சி – பன்னாட்டுச் சங்கம் | 15 |

**அலகு 8**

| | | |
|---|---|---|
| 15. | பாசிசம், நாசிசம் எழுச்சி – இரண்டாம் உலகப் போர் – காரணங்கள் – விளைவுகள் | 10 |

**அலகு 9**

| | | |
|---|---|---|
| 16. | ஆசிய நாடுகளின் வளர்ச்சி – இரண்டாம் உலகப் போருக்குப் பின் சீனா, ஜப்பான் | 15 |

**அலகு 10**

| | | |
|---|---|---|
| 17. | ஐக்கிய நாடுகள் அமைப்பும் உலக அமைதியில் அதன் பங்கும் | 10 |
| 18. | கெடுபிடிப் போர்கள் – உச்சச் சக்திகள் – மண்டலப் பாதுகாப்பு ஏற்பாடுகள் (நேட்டோ, சீட்டோ, வார்சா உடன் படிக்கை) அணு ஆயுதப் பெருக்கம் – ஏவுகனைகள் அமைதி முயற்சிகள் – சமதர்ம நாடுகளின் வீழ்ச்சி – தாராளமயம் – உலகமயம் – இன்றைய உலகம் | 15 |

# பொருளடக்கம்

## நவீன இந்திய வரலாறு


| பாடம் எண். | | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | கிழக்கிந்திய வணிகக்குழுவின் கீழ் இந்தியா<br>வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772–1785) | 1 |
| 2. | காரன் வாலிஸ் பிரபு (1786–1793) | 11 |
| 3. | வெல்லெஸ்லிபிரபு (1798–1805) | 17 |
| 4. | ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813–1823) | 27 |
| 5. | வில்லியம் பெண்டிங் பிரபு (1828–1835) | 33 |
| 6. | டல்ஹவுசி பிரபு (1848–1856) | 41 |
| 7. | வருவாய் நிர்வாகம், பிரிட்டிஷாரின் பொருளாதாரக் கொள்கை | 49 |
| 8. | கல்வி, சமுதாய சீர்திருத்தங்கள் | 56 |
| 9. | பாளையக்காரர் கிளர்ச்சி | 63 |
| 10. | வேலூர் கலகம் | 69 |
| 11. | 1857 ஆம் ஆண்டு பெருங்கலகம் | 74 |
| 12. | 1858 ஆம் ஆண்டுக்குப்பின் பிரிட்டிஷ் இந்தியா<br>லிட்டன் பிரபு (1876–1880),<br>ரிப்பன் பிரபு (1880–1884),<br>கர்சன் பிரபு (1899–1905) | 83 |
| 13. | சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் | 91 |
| 14. | இந்திய தேசிய இயக்கம் (1885 – 1905) | 101 |
| 15. | இந்திய தேசிய இயக்கம் (1905 – 1916) | 108 |
| 16. | இந்திய தேசிய இயக்கம் (1917 – 1947) | 115 |
| 17. | இந்திய தேசிய இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கு | 129 |
| 18. | நீதிக்கட்சியின் ஆட்சி | 135 |
| 19. | அரசியல் அமைப்பின் வளர்ச்சி (1858–1947) | 140 |
| 20. | விடுதலைக்குப்பின் இந்தியா | 148 |

## நவீன உலக வரலாறு


| | | |
|---|---|---|
| 21. | மறுமலர்ச்சி | 160 |
| 22. | புவியியல் கண்டுபிடிப்புகள் | 168 |
| 23. | சமய சீர்திருத்தம் மற்றும் எதிர்சமய சீர்திருத்த இயக்கம் | 174 |
| 24. | அமெரிக்க விடுதலைப்போர் (1776–1783) | 182 |
| 25. | பிரெஞ்சுப் புரட்சி (1789) | 189 |
| 26. | வேளாண்மைப் புரட்சியும், தொழிற்புரட்சியும் | 198 |
| 27. | முதல் உலகப்போர் | 206 |
| 28. | 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி | 213 |
| 29. | பன்னாட்டுக் கழகம் | 219 |
| 30. | பாசிச, நாசிச கொள்கைகளின் எழுச்சி | 226 |
| 31. | இரண்டாம் உலகப்போர் | 235 |
| 32. | ஆசியநாடுகளின் வளர்ச்சி – சீனாவும், ஜப்பானும் | 242 |
| 33. | ஐக்கிய நாடுகள் அவை | 248 |
| 34. | கெடுபிடிப்போர் | 256 |
| 35. | இன்றைய உலகம் | 262 |

# சில முக்கியமான தலைமைஆளுநர்கள்
## வங்காள தலைமை ஆளுநர்கள்
## (ஒழுங்குமுறைச் சட்டம் 1773)

| பெயர் | காலம் |
|---|---|
| வாரன் ஹேஸ்டிங்சு | 1774–1785 |
| காரன் வாலிஸ் பிரபு | 1786–1793 |
| வெல்லெஸ்லி பிரபு | 1798–1805 |
| காரன் வாலிஸ் பிரபு மீண்டும் தலைமை ஆளுநர் | 1805 |
| ஹேஸ்டிங்சு பிரபு | 1813–1823 |
| வில்லியம் பெண்டிங் பிரபு | 1828–1833 |

## இந்திய தலைமை ஆளுநர்கள்
### (பட்டயச் சட்டம் 1833)

| | |
|---|---|
| வில்லியம் பெண்டிங் பிரபு | 1833–1835 |
| டல்ஹவுசி பிரபு | 1848–1856 |
| கானிங் பிரபு | 1856–1858 |

## தலைமை ஆளுநர் / அரச பிரதிநிதிகள்
### (1858ம் ஆண்டுச் சட்டம்)

| | |
|---|---|
| கானிங் பிரபு | 1858–1862 |
| லிட்டன் பிரபு | 1876–1880 |
| ரிப்பன் பிரபு | 1880–1884 |
| கர்சன் பிரபு | 1899–1905 |
| செம்சுபோர்டு பிரபு | 1916–1921 |
| இர்வின் பிரபு | 1926–1931 |
| வில்லிங்டன் பிரபு | 1931–1934 |
| லின்லித்கோ பிரபு | 1934–1936 |
| மவுண்ட்பேட்டன் பிரபு | 24 மார்ச் 1947–<br>15 ஆகஸ்டு 1947 |

## விடுதலைக்குப் பின்

| | |
|---|---|
| மவுண்ட்பேட்டன் பிரபு | 1947–1948 |
| இராஜகோபாலாச்சாரி | 1948–1950 |

# பாடம் – 1

# வாரன் ஹேஸ்டிங்ஸ் (1772 – 1785)

**கற்றல் நோக்கங்கள்**

*மாணவரை பின்வருவனவற்றை அறியும்படி செய்தல் :*

1. *இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் வளர்ச்சி.*
2. *முதலாவது தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள்.*
3. *1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிமுறைகள், நிறைகுறைகள்.*
4. *வாரன் ஹேஸ்டிங்ஸின் விரிவாக்கக் கொள்கை - முதல் மராட்டியப் போர், முதல் மைசூர் போர்.*
5. *1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம்.*
6. *வாரன் ஹேஸ்டிங்ஸ் மீதான தேசதுரோகக் குற்றம்.*

## ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக்குழு

1600 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் ஆங்கிலேயே கிழக்கிந்திய வணிகக்குழு நிறுவப்பட்டது. இதற்கான அரச பட்டயத்தை இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத் வழங்கினார். 1608 ஆம் ஆண்டு கேப்டன் ஹாக்கின்ஸ் என்பவரை வணிகக்குழு முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் அவைக்கு அனுப்பி சூரத்தில் வணிக நிலையம் அமைப்பதற்கான அனுமதியைக் கோரியது. முதலில் இதனை நிராகரித்தாலும், ஆங்கிலேயர் தங்களது முதலாவது வணிக நிலையத்தை சூரத்தில் நிறுவ ஜஹாங்கீர் 1613ல் ஆணை வழங்கினார். பின்னர், சர் தாமஸ் ரோ என்பவர் மேலும் பல சலுகைகளையும் உரிமைகளையும் வணிகக் குழுவிற்கு பெற்றுத் தந்தார். இதனால், ஆங்கிலேயர் ஆக்ரா, அகமதாபாத், புரோச் ஆகிய இடங்களில் தமது வாணிப மையங்களை அமைத்தனர். இவ்வாறு ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக்குழுவினர் படிப்படியாக தங்களது வாணிப எல்லையை விரிவுபடுத்தி வந்தனர்.



**சர் தாமஸ் ரோ**

1639ல் பிரான்சிஸ் டே என்பவர் சென்னையை நிறுவி அங்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அமைத்தார். மேற்குக் கடற்கரையில், 1668ம் ஆண்டு அரசர் இரண்டாம் சார்லசிடமிருந்து ஆண்டுக்கு பத்து பவுன் வாடகைக்கு வணிகக்குழு பம்பாய் தீவைப் பெற்றது. 1690 ஆம் ஆண்டு ஜாப் சார்னாக் என்ற வணிகக் குழுவின் முகவர் சுதநூதி, கோவிந்தபூர். காளிகட்டம் என்ற மூன்று கிராமங்களை விலைக்கு வாங்கினார். இவை பின்னர் கல்கத்தா நகரமாக வளர்ச்சியடைந்தது. அங்கு அமைக்கப்பட்ட கோட்டைக்கு ஆங்கில அரசர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக வில்லியம் கோட்டை என்று ஜாப் சார்னாக் பெயரிட்டார். இந்தியக் கடற்கரை ஓரங்களில் நிறுவப்பட்ட ஆங்கில வணிக நிலையங்கள் அனைத்தும் பம்பாய், சென்னை, கல்கத்தா மாகாணங்களாக பின்னர் ஒருங்கிணைக்கப்பட்டன.



**வாரன் ஹேஸ்டிங்ஸ்**

1757 ஆம் ஆண்டு பிளாசிப் போர், 1764 ஆம் ஆண்டு பக்சார் போர் ஆகியவற்றின் விளைவாக வணிகக் குழு ஒரு அரசியல் சக்தியாக மாறியது.

1858 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு இந்திய நிலப்பகுதிகளை தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் வரை, இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியே நடைபெற்றது. வணிகக்குழு ஆட்சியின் போது வில்லியம் கோட்டையின் முதலாவது ஆளுநராக ராபர்ட் கிளைவ் பதவி வகித்தார். அவரைத் தொடர்ந்து வெர்ல்ஸ், கார்ட்டியர் இருவரும் அப்பதவியில் இருந்தனர். 1772 ஆம் ஆண்டு வணிகக்குழு வில்லியம் கோட்டையின் ஆளுநராக வாரன் ஹேஸ்டிங்ஸை நியமித்தது.

**வாரன் ஹேஸ்டிங்சின் சீர்திருத்தங்கள்**

1772 ஆம் ஆண்டு வங்காளத்தின் ஆட்சிப் பொறுப்பை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்றபோது அங்கு குழப்பமே நிலவியது. வணிகக் குழுவின் நிதி நிலைமை மோசமாக இருந்தது. அப்போது நிலவிய பஞ்சம் மேலும் பற்றாக்குறைக்கே வித்திட்டது. ஆகவே, பெருவாரியான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் கட்டாயத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் உணர்ந்தார்.

**இரட்டையாட்சியை ஒழித்தல்**

கிழக்கிந்திய வணிகக் குழு தாமே 'திவானி' பொறுப்பையும் ஏற்று தமது முகவர்கள் மூலமாக நேரடியாக நிலவரி வசூலிக்க தீர்மானித்தது. எனவே, ராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டையாட்சி முறை ஒழிக்கப்பட்டது. வணிகக்குழுவின் நிதிநிலைமையை சீரமைப்பதற்காக, வாரன் ஹேஸ்டிங்ஸ் நவாபிற்கு அளிக்கப்பட்டுவந்த நிதியுதவி 32 லட்ச ரூபாயை பாதியாகக் குறைத்தார். முகலாயப் பேரரசருக்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு ஓய்வூதியம் 26 லட்ச ரூபாயையும் நிறுத்தினார்.

**வருவாய் சீர்திருத்தங்கள்**

இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டபிறகு வரிவசூல் செய்யும் பொறுப்பை வணிகக்குழுவே ஏற்றது. அதற்காக, கல்கத்தாவில் ஒரு வருவாய் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. வரிவசூலை இது மேற்பார்வை செய்தது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்கிலேய கலெக்டர்கள் நியமிக்கப்பட்டனர்.

கருவூலம் மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது. ஒரு தலைமைக் கணக்கரும் நியமிக்கப்பட்டார். இவ்வாறு, கல்கத்தா 1772ல் வங்காளத்தின் தலைநகராகியது. பின்னர், அது பிரிட்டிஷ் இந்தியாவிற்கும் தலைநகராயிற்று.

வருவாய் வாரியம் நிலங்களை அவற்றின் உண்மை மதிப்பை அறிந்து கொள்வதற்காக, ஓராண்டுக்குப்பதில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஏலத்துக்கு விட்டது. ஏலத்தில் ஜமீன்தாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இருப்பினும், குடியானவர்களின் நலனைப் பாதுகாப்பதற்காக ஒரு சில நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. தன்னிச்சையான மேல்வரிகளும் அநியாயமான அபராதங்களும் ஒழிக்கப்பட்டன. மேலும் குத்தகையை உயர்த்துவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இருப்பினும் இந்த வருவாய்த் திட்டம் தோல்வியில் முடிந்தது. பல ஜமீன்தார்கள் வரிகட்டத் தவறினார்கள். வருவாய் நிலுவை அதிகரித்தது.

**நீதித் துறையை சீரமைத்தல்**

வாரன் ஹேஸ்டிங்ஸ் பதவியேற்றபோது, நீதித்துறையில் முறைகேடுகள் மலிந்து காணப்பட்டன. அதுவரை நீதி நிர்வாகத்தை நடத்திவந்த நவாப் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வந்தார். அவரது பல தீர்ப்புகள் கொடுமையானதாக இருந்தன. ஜமீன்தார்கள் தங்களது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் நீதிபதிகளாக செயல்பட்டு வந்தனர். அவர்கள் பாரபட்சமாக நடந்து கொண்டதுடன், ஊழல் மிக்கவர்களாகவும் இருந்தனர். மொத்தத்தில், நீதித்துறை ஊழலின் உறைவிடமாகவே காணப்பட்டது.

நீதி நிர்வாகத்தை சீரமைக்க வேண்டியதன் அவசியத்தை வாரன் ஹேஸ்டிங்ஸ் உணர்ந்தார். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கலெக்டரின் கீழ் ஒரு உரிமையியல் நீதிமன்றமும், இந்திய நீதிபதியின் கீழ் ஒரு குற்றவியல் நீதிமன்றமும் செயல்படுவதற்கு வழிவகை செய்யப்பட்டன. மாவட்ட நீதி மன்றங்களிலிருந்து வரும் வழக்குகளை விசாரிக்க, உரிமையியல் வழக்குகளுக்கு ஒன்றும், குற்றவியல் வழக்குகளுக்கு ஒன்றும், ஆக இரண்டு மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டன. உரிமையியல் மேல் முறையீட்டு நீதிமன்றம் சதர் திவானி அதலத் என்று அழைக்கப்பட்டது. இதற்கு, ஆளுநரும், ஆலோசனைக்குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் தலைமை வகிப்பர். அதேபோல், குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றம் சதர் நிசாமத் அதலத் எனப்பட்டது. இதற்கு ஆளுநரும் அவரது ஆலோசனைக் குழுவால் நியமிக்கப்பட்ட இந்திய நீதிபதி ஒருவரும் தலைமை வகிப்பர்.

நீதிபதிகளுக்கு உதவியாக இந்து மற்றும் முஸ்லீம் சட்டங்களின் வல்லுனர்கள் நியமிக்கப்பட்டனர். கற்றறிந்த பண்டிதர்களால் இந்து சட்டத்தொகுப்பு ஒன்று வடமொழியில் உருவாக்கப்பட்டது. இது பாரசீக மொழியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் ஆங்கில வடிவம் – இந்து சட்டங்களின் தொகுப்பு என்ற பெயரில் ஹால்ஹெட் என்பவரால் உருவாக்கப்பட்டது.

**வணிக விதிமுறைகளும் பிற சீர்திருத்தங்களும்**

தஸ்தக்குகள் எனப்பட்ட இலவச அனுமதிச் சீட்டுகளை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழித்தார். உள்நாட்டு வாணிபத்தை முறைப்படுத்தினார். சுங்கவரி நிலையங்களின் எண்ணிக்கையை குறைத்தார். இந்திய மற்றும் அயல்நாட்டு பொருட்கள் அனைத்துக்கும் 2.5 விழுக்காடு என ஒரே சீரான சுங்கவரி வசூலிக்கப்பட்டது. வணிகக் குழு பணியாளர்கள் தொடர்ந்து தனிப்பட்ட வாணிகத்தில் ஈடுபட்டபோதிலும் அவை ஒரு வரம்புக்குட்பட்டே நடைபெற்றன. நெசவாளர்களின் நலன்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஒரே மாதிரியான முன் கட்டண அஞ்சல் முறையை அவர் அறிமுகப்படுத்தினார். கல்கத்தாவில் ஒரு வங்கி தோற்றுவிக்கப்பட்டது. கல்கத்தாவின் காவல்துறை மேம்படுத்தப்பட்டு கொள்ளையர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ஒழுங்குமுறை சட்டம் (1773)**

1773 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒழுங்குமுறை சட்டம் வணிகக் குழுவின் அரசியலமைப்பு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயமாகும். இதற்கு முன்பு, இங்கிலாந்தில் இருந்த இயக்குநர்கள் குழுவும், வணிகர்கள் மன்றமும் வணிகக்குழுவை நிர்வகித்து வந்தன. ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட இயக்குநர்கள் குழுவே வணிகக் குழுவின் அலுவல்களை நிர்வகித்து வந்தது. இந்தியாவிலிருந்த மூன்று மாகாணங்களும் தனித்தனியாக செயல்பட்டன. அவை ஒவ்வொன்றும் தாய்நாட்டு அரசுக்கே நேரடி

பொறுப்பானதாகும். மாகாண அரசின் நிர்வாகம் ஆளுநர் மற்றும் அவரது ஆலோசனைக் குழுவின் கட்டுப்பாட்டில் இருந்தது.

வணிகக் குழுவின் அலுவல்களில் நாடாளுமன்றம் தலையிடுவதற்கான. சூழ்நிலைகள் அப்போது உருவாயின. ஆங்கிலேய கிழக்கிந்திய வணிகக்குழு, இந்தியாவின் நிலப்பகுதிகளைக் கைப்பற்றியதோடு திவானி உரிமைகளையும் பெற்றதன் மூலம் ஆட்சியதிகாரத்தைப் பெற்றது. அதன் ஆரம்பகால ஆட்சி ஊழல் மலிந்ததாகவும் கொடுமையானதாகவும் இருந்தது. வணிகக்குழு நிதிப்பற்றாக்குறையால் தவித்தபோது, அதன் பணியாளர்கள் செல்வத்தில் கொழித்தனர். 1770 ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சம் குடியானவர்களை பெரிதும் பாதித்தது. இதனால், வரிவசூல் மந்தமாயிற்று. வணிகக்குழு திவாலாகும் நிலைக்குத் தள்ளப்பட்டது. 1773 ஆம் ஆண்டு வணிகக்குழு அவசரக் கடனுதவி கேட்டு பிரிட்டிஷ் அரசாங்கத்தை நாடியது. இத்தகைய பின்னணியில்தான் வணிகக்குழுவின் அலுவல்களை ஒழுங்குபடுத்துவது என இங்கிலாந்து நாடாளுமன்றம் முடிவு செய்தது. இங்கிலாந்தில் பிரதமராக இருந்த நார்த் பிரபு வணிக்குழுவின் விவகாரங்களை விசாரித்து அறிய ஒரு தேர்வுக்குழுவை நியமித்தார். அக்குழு அளித்த அறிக்கையே ஒழுங்கு முறைச் சட்டம் இயற்றப்படுவதற்குக் காரணமாக அமைந்தது.

**ஒழுங்குமுறை சட்டத்தின் விதிமுறைகள்**

ஒழுங்குமுறை சட்டம் வணிக குழுவின் அரசை இந்தியாவிலும், தாய்நாட்டிலும் மாற்றியமைத்தது. அதில் இடம்பெற்றிருந்த முக்கிய விதிமுறைகள்;

1. இயக்குநர்கள் குழுவிலுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் ஓராண்டிலிருந்து நான்கு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. அவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் ஆண்டுதோறும் ஓய்வு பெறுவர். ஓய்வு பெற்றவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியை இழந்தவர்களாவர்.

2. வங்காள ஆளுநர் இனி வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநர் என அழைக்கப்படுவார். அவரது பதவிக்காலம் ஐந்தாண்டுகளாகும்.

3. தலைமை ஆளுநருக்கு உதவியாக நான்கு பேர் கொண்ட ஒரு ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டது. பெரும்பான்மை முடிவுப்படியே அரசு செயல்படவேண்டும். தலைமை ஆளுநருக்கு முடிவுசெய்யும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

4. தலைமை ஆளுநர் மற்றும் ஆலோசனைக்குழுவிற்கு போர், அமைதி, உடன்பாடு போன்ற விவகாரங்களில் மற்ற மாகாணங்களை கட்டுப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டது.

5. கல்கத்தாவில் ஒரு உச்சநீதிமன்றம் ஏற்படுத்த இச்சட்டம் வகை செய்தது. இதில் ஒரு தலைமை நீதிபதியும் மூன்று துணை நீதிபதிகளும் இருப்பர். இது, தலைமை ஆளுநர் மற்றும் ஆலோசனைக் குழுவிற்கு அப்பாற்பட்டு தனித்து இயங்கும். 1774 ஆம் ஆண்டு அரச பட்டயத்தின்படி உச்ச நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது.

6. தலைமை ஆளுநர், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட வணிகக்குழுவின் பணியாளர்கள் எவரும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பரிசுப் பொருட்கள், நிதி வெகுமதிகள் போன்றவற்றை பெறுவதற்கு இச்சட்டம் தடைவிதித்தது.

**சட்டத்தின் நிறைகுறைகள்**

வணிகக் குழுவின் அலுவல்களை நாடாளுமன்றம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தமையே ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கியத்துவமாகும். மேலும் இங்கிலாந்து நாடாளுமன்றம் இந்திய மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ளது என்பதை இச்சட்டம் வெளிப்படுத்தியது. வணிகக் குழுவின் தன்னிச்சையான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தமையே இச்சட்டத்தின் மிகப்பெரிய நிறையாகும். இந்தியாவின் எதிர்கால நிர்வாகத்திற்கும் சட்டங்களுக்கும் ஒரு வரைச்சட்டமாக இது விளங்கியது.

தலைமை ஆளுநருக்கு போதிய அதிகாரம் அளிக்கப்படவில்லை என்பது இச்சட்டத்தின் மிகப்பெரிய குறைபாடாகும். ஆலோசனைக் குழுவிற்கு உச்ச அதிகாரம் அளிக்கப்பட்டமையால், தலைமை ஆளுநரின் முடிவுகளை இது அவ்வப்போது தடை செய்து நிர்வாக முடக்கத்துக்கு வித்திட்டது. இருப்பினும், இச்சட்டத்தின் பெரும்பாலான குறைகள் 1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டத்தின்மூலம் சரி செய்யப்பட்டன.

**வாரன் ஹேஸ்டிங்சின் விரிவாக்கக் கொள்கை**

வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது விரிவாக்கக் கொள்கைக்கு புகழ் பெற்றவராவார். இவரது ஆட்சிக் காலத்தில் ரோகில்லாப் போர், முதல் ஆங்கிலேய – மராட்டியப் போர், இரண்டாம் ஆங்கிலேய – மைசூர்ப்போர் ஆகிய போர்கள் நடைபெற்றன.

**ரோகில்லாப் போர் (1774)**

மராட்டியப் பகுதிகளுக்கும் அயோத்திக்கும் இடையே இருந்த ஒரு சிறு அரசு ரோகில்கண்ட். இதன் ஆட்சியாளர் ஹபிஸ் ரகமத் கான். மராட்டியப் படையெடுப்பின் அச்சம் காரணமாக, ரகமத்கான் 1772ல் அயோத்தி நவாப்புடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால் அத்தகைய படையெடுப்பு ஏதும் நடைபெறவில்லை. ஆனால், நவாப் அதற்கான கட்டணத்தை தருமாறு வற்புறுத்தினார். ரகமத் கான் காலதாமதம் செய்யவே, பிரிட்டிஷார் உதவியுடன் நவாப் ரோகில்கண்ட் மீது படையெடுத்தார். ரோகில்கண்டுக்கு எதிராக பிரிட்டிஷ் துருப்புகளை அனுப்பிய வாரன் ஹேஸ்டிங்ஸ் அத்தகைய செயலுக்காக கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

**முதல் ஆங்கிலேய – மராட்டியப் போர் (1775 – 82)**

1761 ஆம் ஆண்டு மூன்றாம் பானிப்பட்டுப் போருக்குப் பின்பு மராட்டியர்கள் பெரும்பாலும் ஒற்றுமை குன்றி காணப்பட்டனர். பிரிட்டிஷார் தங்களது விரிவாக்கக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இதனை தகுந்த வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டனர்.

1775 ஆம் ஆண்டு மாதவ ராவ் மற்றும் அவரது சித்தப்பா ரகுநாத ராவ் இருவருக்கிடையே பேஷ்வா பதவிக்காக போட்டி நிலவியது. 1775 மார்ச் திங்களில் பம்பாயிலிருந்த பிரிட்டிஷ் அரசு ரகுநாத ராவுடன் சூரத் உடன்படிக்கையை செய்து கொண்டது. இதன்படி சால்செட், பசீன் பகுதிகளை பிரிட்டிஷாருக்குக் கொடுப்பதாக அவர் வாக்களித்தார். பின்னர், அவர் அதற்குத் தயக்கம் காட்டவே, பிரிட்டிஷார் அப்பகுதிகளைக் கைப்பற்றினர். பம்பாய் அரசின் இந்த நடவடிக்கையை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஏற்கவில்லை. இச்சிக்கலைத் தீர்ப்பதற்காக வாரன் ஹேஸ்டிங்கஸ் 1776 இல் கர்னல் அப்டன் என்பவரை அனுப்பி வைத்தார் சூரத் உடன்படிக்கையை ரத்து செய்துவிட்டு மற்றொரு மராட்டியத் தலைவரான

நானா பட்னாவிஸ் என்பவருடன் புரந்தர் உடன்படிக்கையை அவர் செய்து கொண்டார். இந்த உடன்படிக்கைப்படி இரண்டாம் மாதவராவ் பேஷ்வாவாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். பிரிட்டிஷார் சால் செட்டை தக்க வைத்துக்கொண்டதுடன், பெரும்தொகையை போர் இழப்பீடாகப் பெற்றனர்.

ஆனால், தாய்நாட்டு அரசாங்கம் புரந்தர் உடன்படிக்கையை நிராகரித்தது. வாரன் ஹேஸ்டிங்சும் புரந்தர் உடன்படிக்கையை வெற்றுக்காகிதம் எனக் கருதினார். மராட்டியருக்கெதிராக படையெடுக்கவும் அனுமதியளித்தார். இதற்கிடையில் மராட்டியர்கள் பம்பாய் அரசின் துருப்புக்களை முறியடித்தனர்.

1781ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் கேப்டன் பாப்ஹாம் என்பவர் தலைமையில் பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்பினார். இப்படை மராட்டிய தலைவர் மகாதாஜி சிந்தியாவை பல இடங்களில் முறியடித்து குவாலியரைக் கைப்பற்றியது. 1782 மே திங்களில் வாரன் ஹேஸ்டிங்ஸ் மகாதாஜி சிந்தியா இருவருக்குமிடையே சால்பாய் உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. இதன்படி, சால்செட், பசீன் பகுதிகள் பிரிட்டிஷாருக்கு கிடைத்தன. ரகுநாத ராவுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இரண்டாம் மாதவராவ் பேஷ்வா என ஏற்றுக்கொள்ளப்பட்டார்.

இந்திய அரசியலில் சால்பாய் உடன்படிக்கை பிரிட்டிஷ் செல்வாக்கை உறுதிப்படுத்தியது. மராட்டியருடன் அடுத்த இருபது ஆண்டுகால அமைதிக்கும் வழிவகுத்தது. மராட்டியர் உதவியுடன் மைசூர் ஆட்சியாளர் ஹைதர் அலியிடமிருந்து இழந்த பகுதிகளைப் பெறுவதற்கு இவ்வுடன்படிக்கை உதவியாகவும் இருந்தது. இந்திய அரசுகளின் ஒன்றுபட்ட எதிர்ப்பிலிருந்து தங்களை காப்பாற்றிக் கொண்டதுடன், அவர்களை பிரித்து வைப்பதிலும் பிரிட்டிஷார் வெற்றி கண்டனர் என்று கூறலாம்.

**இரண்டாம் ஆங்கிலேய – மைசூர் போர் (1780 – 84)**

முதல் ஆங்கிலேய – மைசூர் போர் 1767 – 69 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. பிரிட்டிஷாருக்கு எதிராக ஹைதர் அலி பெரும் வெற்றி பெற்றார். போரின் முடிவில் ஹைதர் அலி மற்றும் பிரிட்டிஷாருக்கிடையே ஒரு பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.


**ஹைதர் அலி**

பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டாம் மைசூர் போர் தொடங்கியது. இரண்டாம் ஆங்கிலேய – மைசூர் போருக்கான முக்கிய காரணங்களாவன.

1. 1771ல் மராட்டியர் மைசூரைத் தாக்கியபோது, பிரிட்டிஷார் ஹைதர் அலியுடன் செய்துகொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை மதிக்கத் தவறினர்.
2. அமெரிக்க சுதந்திரப் போரின்போது, ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலியின் கூட்டாளிகளான பிரஞ்சுக்காரர்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன.
3. ஹைதர் அலியின் ஆட்சிப் பகுதிக்குள்ளிருந்த பிரெஞ்சு குடியேற்றமான மாஹி என்ற இடத்தை பிரிட்டிஷார் கைப்பற்றினர்.
4. 1779ல் மராட்டியர் மற்றும் ஹைதராபாத் நிசாம் ஆகியோருடன் ஹைதர் அலி பிரிட்டிஷாருக்கு எதிராக ஒரு பெரும்கூட்டிணைவை ஏற்படுத்திக் கொண்டார்.

வடசர்க்கார் மாவட்டங்களிலிருந்த குண்டூரைக் கைப்பற்றுவதற்காக பிரிட்டிஷார் ஹைதர் அலியின் ஆட்சிப்பகுதி வழியாக தமது துருப்புக்களை அனுப்பியதால் போர் தொடங்கியது. 1780ல் ஹைதர் அலி கர்னல் பெய்லி என்பவரை முறியடித்து ஆற்காட்டை கைப்பற்றினார். அதற்கடுத்த ஆண்டில், வாரன் ஹேஸ்டிங்ஸ் தனது அரசியல் திறமையால் கூட்டிணைவை சிதறடித்தார். அவர் நிசாமுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். மராட்டியத் தலைவர்களான பான்ஸ்லே மற்றும் சிந்தியா ஆகியோருடனும் சமரசம் செய்து கொண்டு ஹைதர் அலியை தனிமைப்படுத்தினார். 1781 மார்ச் திங்களில் சர் அயர் கூட் பரங்கிப் பேட்டையில் ஹைதர் அலியை முறியடித்தார். 1782 டிசம்பரில் தனது அறுபதாவது வயதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு ஹைதர் அலி இறந்தார். அவரது புதல்வர் திப்பு சுல்தான் பதவியேற்கும் வரை இச்செய்தி ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

1784 ஆம் ஆண்டு மங்களூர் உடன்படிக்கைப்படி இரண்டாம் மைசூர்போர் முடிவுக்கு வந்தது. இருதரப்பிலும் கைப்பற்றப்பட்ட பகுதிகள் திரும்ப அவரவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இருதரப்பிலும் போர்க்கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

**பிட் இந்திய சட்டம் (1784)**

ஒழுங்கு முறைச் சட்டம் சில குறைபாடுகளைக் கொண்டிருந்தது எனக் கண்டோம். 1784 ஜனவரித் திங்களில் இளையபிட் (பொதுத் தேர்தல்களுக்குப் பின் இங்கிலாந்து பிரதமரானார்) என்பவர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இந்தியாவுக்கான வரைவு மசோதாவைக் கொண்டு வந்தார். இரு அவைகளிலும் கடும் வாக்குவாதம் நடைபெற்றபோதிலும், ஏழு மாதங்களுக்குப் பிறகு அது நிறைவேற்றப்பட்டது. 1784 ஆகஸ்டில் அரச ஒப்புதலும் வழங்கப்பட்டது. இச்சட்டமே, பிட் இந்திய சட்டம் என புகழ் பெற்றது.

**முக்கிய விதிமுறைகள்**

1. ஆறு உறுப்பினர்கள் கொண்ட கட்டுப்பாட்டு வாரியம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் இங்கிலாந்து அரசரால் நியமிக்கப்பட்டனர்.
2. இயக்குநர்கள் குழுவில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.
3. இந்திய நிர்வாகத்தில் இச்சட்டம் முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. தலைமை ஆளுநரின் அவை உறுப்பினர் எண்ணிக்கை நான்கிலிருந்து மூன்றாக குறைக்கப்பட்டது. இதில் படைத் தளபதியும் அடங்குவார்.

அயலுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை பிட் இந்திய சட்டம் சிறப்புமிக்கதாகும். இச்சட்டத்தை நுணுகி ஆய்வு செய்தால், வணிகக் குழுவின் நிர்வாகத்தில் ஒருவிதமான இரட்டைத்தன்மை ஏற்படுத்தப்பட்டதை உணரலாம். இயக்குநர் குழுவின் கட்டுப்பாட்டில் வணிக நடவடிக்கைகளும் கட்டுப்பாட்டு வாரியத்தின் கீழ் அரசியல் நடவடிக்கைகளும் விடப்பட்டன. அரசரின் பிரதிநிதியாக கட்டுப்பாட்டு வாரியமும், வணிகக் குழுவின் அடையாளமாக இயக்குநர் குழுவும் திகழ்ந்தன.

**வாரன் ஹேஸ்டிங்ஸ் மீதான தேசத்துரோக குற்றச்சாட்டு**

1784 ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் வாரன் ஹேஸ்டிங்ஸ்சைப் பொறுத்தவரை அதிர்ச்சியாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது.

வங்காள அரசின் கொள்கையைக் கண்டித்து பிரதமர் ஆற்றிய உரை தனது தனிப்பட்ட ஆளுமையை குறை கூறுவதாக வாரன் ஹேஸ்டிங்ஸ் கருதினார். இங்கிலாந்தில் அவரது

புகழும் நற்பெயரும் களங்கப்படுத்தப்பட்டது. எனவே, 1785 ஜுன் திங்களில் தமது பதவியைத் துறந்துவிட்டு இந்தியாவிலிருந்து திரும்பினார்.

1787 ஆம் ஆண்டு, எட்மண்ட் பர்க் மற்றும் விக் கட்சியினரால், அதிகார வரம்பு மீறல்களைக் காரணமாகக் காட்டி வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு கொண்டுவரப்பட்டது. எட்மண்ட் பர்க் அவர்மீது 22 குற்றங்களைச் சுமத்தினார். அவற்றில் ரோகில்லாப் போர், நந்தகுமார் விவகாரம், செயித் சிங் பதவியிறக்கம் செய்யப்பட்டது. அயோத்தி பேகம்கள் துன்புறுத்தப்பட்டது போன்றவை முக்கியமானவையாகும். 1795 ஆம் ஆண்டு வரை விசாரணை நீடித்தது. இறுதியில் வாரன் ஹேஸ்டிங்ஸ் குற்றச் சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட்டார். வணிகக் குழுவிடமிருந்து ஓய்வூதியம் பெற்று, 1818 வரை உயிர் வாழ்ந்தார்.

நந்தகுமார் என்பவர் வங்காளத்தில் செல்வாக்கு பெற்ற அதிகாரியாவார், பொய் கையெழுத்து என்ற குற்றத்திற்காக கல்கத்தா உச்ச நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இத்தீர்ப்பில் ஆங்கிலேயச் சட்டம் பின்பற்றப் பட்டது. நந்தகுமாருக்கு எதிராக வாரன் ஹேஸ்டிங்ஸ்சும் தலைமை நீதிபதி சர் எலிஜா இம்பே என்பவரும் சதி செய்தனர் என்று கூறப்பட்டது.

காசி அரசர் செயித் சிங் மீது வாரன் ஹேஸ்டிங்ஸ் கப்பம் கட்டத் தவறியதற்காக அதிகப்படியான அபராதம் விதித்தார். பின்னர், அவரை முறையற்ற வகையில் பதவி நீக்கம் செய்தார்.

வங்காள நவாப்பின் அன்னையும் பாட்டியும் அயோத்தி பேகம்கள் எனப்பட்டனர். அவர்களிடமிருந்து பணம் பறிக்க முயன்ற நவாப்பிற்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் படையுதவி அளித்தார். இது அதிகார வரம்பை மீறிய செயலாகும்.

**வாரன் ஹேஸ்டிங்ஸ் பற்றிய மதிப்பீடு**

மனத்திட்பம், பேராற்றல், கடும் உழைப்பு போன்ற குணங்களைக் கொண்ட சிறந்த மனிதராக வாரன் ஹேஸ்டிங்ஸ் திகழ்ந்தார். முகலாயர் காலப் பண்பாட்டில் திளைத்திருந்த வங்காளத்தில் நீண்டகாலம் தங்கியிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளம், பாரசீகம் போன்ற கீழ்த்திசை மொழிகளைக் கற்றதோடு, கீழை நாட்டு பழக்க வழக்கங்களையும் வளர்த்துக் கொண்டார். திறமையான நிர்வாகத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு இந்தியப் பண்பாட்டை புரிந்து கொள்ள வேண்டும் என்பதில் வாரன் ஹேஸ்டிங்ஸ் கவனமாக இருந்தார். எனவே, இந்திய மொழிகளைக் கற்பதையும், கலைகளைப் பேணுவதையும் ஆதரித்தார். எதிர்ப்புகள் நிறைந்த சூழ்நிலையில் அவர் மேற்கொண்ட பணிகள் சவால்கள் நிறைந்தவையாகும். புற எதிரிகளை அசாத்திய துணிச்சலுடனும், வற்றாத வலிமையுடனும் எதிர்கொண்ட வாரன் ஹேஸ்டிங்ஸ் உடனிருந்த எதிரிகளை அசாதாரண பொறுமையுடனும் திடமனதுடனும் கையாண்டார். வாரன் ஹேஸ்டிங்ஸ் விட்டுச் சென்ற அடித்தளத்தின்மீது தான் அவருக்குப் பின் வந்தோர் பிரிட்டிஷ் ஆட்சியை நிறுவினர்.

**கற்றல் அடைவுகள்**

இந்த பாடத்தைக் கற்றபின் மாணவர் பின்வருவனவற்றை நன்கு விளக்கமாகக் கூறமுடியும்.

1. *இந்தியாவில் ஆங்கில வணிகக் குழு எப்படி ஆட்சியை நிறுவியது.*
2. *வாரன் ஹேஸ்டிங்ஸ் கொண்டுவந்த வருவாய், நீதித்துறை, வணிகம் சார்ந்த சீர்திருத்தங்கள்.*
3. *ஒழுங்குமுறைச் சட்டத்தின் நோக்கம், நிறை குறைகள்.*
4. *வாரன் ஹேஸ்டிங்ஸ் விரிவாக்கக் கொள்கை மற்றும் முதல் மராட்டியப் போர், இரண்டாம் மைசூர்ப் போரின் முடிவுகள்.*
5. *1784 ஆம் ஆண்டு பிட் இந்திய சட்டத்தின் முக்கியத்துவம்.*
6. *வாரன் ஹேஸ்டிங்ஸின் பொதுவான சாதனைகள்.*

## பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பிளாசிப் போர் நடைபெற்ற ஆண்டு

அ. 1757 ஆ. 1764

இ. 1772 ஈ. 1777

2. இரண்டாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை

அ. சால்பாய் ஆ. மங்களூர்

இ. புரந்தர் ஈ. மைசூர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வங்காளத்தில் இரட்டையாட்சியை அறிமுகப்படுத்தியவர் ____________

2. ஹைதர் அலி மறைந்த ஆண்டு ____________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ. | பிரான்சிஸ் டே | அ. | பிட் இந்திய சட்டம் |
| ஆ. | சதர் திவானி அதாலத் | ஆ. | ரோகில் கண்ட் |
| இ. | ஹபிஸ் ரஹ்மத் கான் | இ. | புனித ஜார்ஜ் கோட்டை |
| ஈ. | கட்டுப்பாட்டு வாரியம் | ஈ. | சிவில் நீதிமன்றம் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. வாரன் ஹேஸ்டிங்ஸ் 1774ல் வில்லியம் கோட்டையின் ஆளுநராக பதவியேற்றார்.

ஆ. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆட்சி காலத்தில் ரோகில்லாப் போர் நடைபெற்றது.

இ. ஒழுங்குமுறை சட்டத்தின்படி இயக்குநர்கள் மன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஈ. ராஜா செயித் சிங் அயோத்தியின் ஆட்சியாளர் ஆவார்

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழு 1600 ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாள் நிறுவப்பட்டது.

2. சால்பாய் உடன்படிக்கை வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் இரண்டாம் மாதவராவ் ஆகியோருக்கிடையே செய்து கொள்ளப்பட்டது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ரோகில்லா போர்

2. பிட் இந்திய சட்டம்

3. இரண்டாம் ஆங்கில மைசூர் போர்.

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. முதல் ஆங்கில – மராத்திய போர் பற்றி குறிப்பு எழுதுக.

2. ஒழுங்குமுறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகள் பற்றி விவாதிக்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக.

2. வாரன் ஹேஸ்டிங்ஸின் விரிவாக்கக் கொள்கையை ஆய்க.

# பாடம் – 2

## காரன் வாலிஸ் பிரபு (1786 – 1793)

**கற்றல் நோக்கங்கள்**

இப்பாடத்தில் மாணவர் புரிந்து கொள்வது :

1. *மூன்றாம் மைசூர்ப்போர் - பிரிட்டிஷாரை முறியடிக்க திப்பு சுல்தான் மேற்கொண்ட முயற்சிகள்.*
2. *காரன்வாலிஸ் பிரபுவின் ஆட்சித்துறை சீர்திருத்தங்கள்.*
3. *நீதித்துறை சீர்திருத்தங்கள்.*
4. *காவல்துறை மற்றும் பிற சீர்திருத்தங்கள்.*
5. *காரன்வாலிஸ் பிரபுவின் சாதனைகள்*

ஒரு சிறந்த ஆட்சியாளரும் போர்த் தளபதியுமான காரன் வாலிஸ் பிரபு, வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபுவைத் தொடர்ந்து 1786ல் தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். இவர் அரசியல் தொடர்புகள் மிகுந்த செல்வாக்கும் செல்வமும் நிறைந்த குடும்பத்தை சேர்ந்தவர். பிரதம அமைச்சர் பிட் என்பவரின் நெருங்கிய நண்பர். கட்டுப்பாட்டு வாரியத்தின் முக்கிய உறுப்பினராக இருந்த டுண்டாஸ் எனபவருக்கும் நெருக்கமானவர். அமெரிக்க விடுதலைப் போரில் ஒரு சிறந்த வீரர் என்பதை நிரூபித்தவர். 1781ல் அமெரிக்கப் படைகள் முன்பு சரணடைந்த போதிலும், அவரது புகழ் சற்றும் மங்கவில்லை. இங்கிலாந்து அரசாங்கத்தின் நம்பிக்கையை அவர் தொடர்ந்து பெற்றிருந்தார். அமெரிக்காவிலிருந்து திரும்பியவுடன், அவருக்கு இந்தியாவில் தலைமை ஆளுநர் பதவி வழங்கப்பட்டது.




காரன் வாலிஸ் பிரபு

கடமையாற்றுவதில் தீவிரப்பற்று கொண்ட காரன்வாலிஸ் தமது நாட்டு மக்களின் நம்பிக்கைக்கும் உரியவராகத் திகழ்ந்தார். எனவே வங்காள நிர்வாகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்த வசதியாக அவருக்கு சட்ட ரீதியான சில சிறப்பு அதிகாரங்களை வழங்கவும் நாடாளுமன்றம் முன்வந்தது. 1786ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி பிட் இந்திய சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தேவைப்பட்டால், ஆலோசனைக் குழுவின் முடிவை நிராகரிக்க தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. காரன்வாலிசின் நியமனம் மற்றொரு சிறப்பையும் பெற்றிருந்தது. செல்வந்தக் குடும்பத்திலிருந்து தலைமை ஆளுநர் பதவிக்குரிய நபரை தேர்ந்தெடுப்பது என்ற புதிய நடைமுறை இவரது நியமனத்தால் தொடங்கி வைக்கப்பட்டது. ஜான் ஷோர், ஜேம்ஸ் கிராண்ட், சர் வில்லியம் ஜோன்ஸ் போன்ற கீழ் அதிகாரிகள் கிடைத்தமை காரன்வாலிசின் பெரும்பேறு ஆகும். இத்தகைய சாதகமான சூழ்நிலைகள் அமையப் பெற்றிருந்தாலும், காரன்வாலிஸ் தமது கொள்கையை வகுப்பதில் மிகுந்த கவனத்துடன் செயல்பட்டார்.

### திப்பு சுல்தானும் மூன்றாம் மைசூர் போரும் (1790 – 92)

மங்களூர் உடன்படிக்கை (1784) மைசூர் அரசின் படைவலிமையை மட்டுமில்லாமல் ஆங்கிலேயரின் பலவீனத்தையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது. மேலும், அது திப்பு

சுல்தானுக்கும் வலிமை சேர்த்தது. தனது தந்தையைப் போலவே, ஆங்கிலேயரை இந்தியாவை விட்டு அகற்றுவதில் திப்பு ஆர்வம் கொண்டிருந்தார். தக்க தருணத்தில தனது தந்தையைக் கைவிட்டு பிரிட்டிஷாருடன் சேர்ந்துகொண்ட ஹைதராபாத் நிசாமையும் மராட்டியரையும் பழிவாங்கவும் திப்பு முடிவு செய்தார்.

**மூன்றாம் மைசூர் போருக்கான முக்கிய காரணங்களாவன**

1. பல்வேறு உள்நாட்டு சீர்திருத்தங்களை மேற்கொண்டு திப்பு தனது வலிமையை பெருக்கிக் கொண்டார். இதனால், பிரிட்டிஷாரும், ஹைதராபாத் நிசாம் மற்றும் மராட்டியரும் கவலை கொண்டனர்.
2. மேலும், பிரான்சு, துருக்கி போன்ற நாடுகளுக்கு தூதுவர்களை அனுப்பிய திப்பு ஆங்கிலேயருக்கெதிராக அவர்களது உதவியைக் கோரினார்.
3. பிரிட்டிஷாரின் கூட்டாளியான திருவாங்கூர் அரசர் போன்றவர்களிடமிருந்து நிலப்பகுதிகளைக் கைப்பற்றி திப்பு தமது அரசின் பரப்பை விரிவு படுத்தினார்.
4. 1789ல் திப்புவுக்கு எதிராக, ஹைதராபாத் நிசாம் மற்றும் மராட்டியருடன் சேர்ந்து ஒரு முக்கூட்டிணைவை பிரிட்டிஷார் ஏற்படுத்தினர்.



**திப்பு சுல்தான்**

1790ல் ஆங்கிலேயருக்கும் திப்புவுக்கும் இடையே போர் தொடங்கியது. இப்போரின் போக்கை மூன்று கட்டங்களாகக் காணலாம். முதலாவதாக, சென்னை ஆளுநர் மேடோஸ் மைசூர்மீது படையெடுத்தார். திப்புவின் விரைவான முன்னேற்றம் ஆங்கிலேயத் துருப்புக்களை திணறடித்தது. பெரும் இழப்புகளையும் ஏற்படுத்தியது. 1790ல் காரன்வாலிஸ் தாமே படைத்தலைமையை ஏற்றார். இது இரண்டாம் கட்டப் போராகும். வேலூரிலிருந்து புறப்பட்ட காரன்வாலிஸ் 1791 மார்ச் திங்களில் பெங்களூரைக் கைப்பற்றினார். ஆனால், திப்புவின் திறமையான போர்த் திட்டங்களால் போர் நீடித்தது. போதிய தளவாடங்கள் இல்லாமையால் காரன்வாலிஸ் மங்களூருக்கு பின்வாங்க நேரிட்டது. போரின் மூன்றாம் கட்டமாக, தக்க தருணத்தில் மராட்டியர் அனுப்பிய உதவிகளால், காரன்வாலிஸ் மீண்டும் போரைத் தொடங்கி தமது படைகளுடன் ஸ்ரீரங்கபட்டணத்தை நோக்கி முன்னேறினார். ஆனால் இப்போது நிலைமை திப்புவுக்கு சாதகமாக இல்லை. ஆங்கிலேயப் படைகள் விரைந்து முன்னேறி ஸ்ரீரங்கப் பட்டணத்திற்கருகிலிருந்த மலைக்கோட்டைகளைக் கைப்பற்றின. 1792 பிப்ரவரியில் திப்புவின் தலைநகரமும் கைப்பற்றப்பட்டது. அதேயாண்டில் திப்பு பிரிட்டிஷாருடன் ஸ்ரீரங்கப்பட்டணம் உடன்படிக்கையை செய்துகொண்டார். உடன்படிக்கையின் விவரம் :

1. திப்பு தனது ஆட்சிப் பகுதியில் பாதியை பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுத்தார்.
2. போர் இழப்பீடாக திப்பு மூன்று கோடி ரூபாய் கொடுப்பது என்றும் அதுவரை தனது இருபுதல்வர்களை பிணையாக ஆங்கிலேயரிடம் விட்டுவைப்பது என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.
3. இருதரப்பினரும் போர்க்கைதிகளை விடுவிக்க ஒப்புக் கொண்டனர்.

தென்னிந்திய வரலாற்றில் ஸ்ரீரங்கப்பட்டணம் உடன்படிக்கை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். மலபார் கடற்கரையில் பிரிட்டிஷார் ஒரு பரந்த நிலப்பரப்பை இதன்மூலம் பெற்றனர். மேலும், பாரமகால் மாவட்டத்தையும் திண்டுக்கல் பகுதியையும் பிரிட்டிஷார் பெற்றனர். இந்த போருக்குப்பின் மைசூரின் புகழ் மங்கியது என்றாலும் முற்றிலும் அழிந்துவிடவில்லை எனலாம். திப்பு தோற்கடிக்கப்பட்டாரே தவிர, முற்றிலும் அழிக்கப் படவில்லை.

**சீர்திருத்தங்கள்**

காரன்வாலிஸ் மேற்கொண்ட உள்நாட்டு சீர்திருத்தங்களை மூன்று பிரிவுகளாக அறிந்து கொள்ளலாம்.

1. ஆட்சித்துறை சீர்திருத்தங்கள்.
2. வருவாய் சீர்திருத்தங்கள் அல்லது நிலையான நிலவரித்திட்டம் (இப்பகுதி 7 ஆம் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது)
3. நீதித் துறை மற்றும் பிற சீர்திருத்தங்கள்.

**ஆட்சித் துறை சீர்திருத்தங்கள்**

திறமையான மற்றும் நேர்மையான பணியாளர்களை நியமித்து ஆட்சிப் பணித்துறையை செம்மைப்படுத்தியதே காரன்வாலிஸ் மேற்கொண்ட சீர்திருத்தங்களில் முதன்மையானதாகும். சிக்கனம், எளிமை, தூய்மை ஆகியவற்றை அவர் தனது நோக்கங்களாகக் கொண்டிருந்தார். வணிகக்குழுவில் பணியாற்றிய ஊழியர்களுக்கு சொற்ப ஊதியமே வழங்கப்பட்டு வந்தது. ஆனால், அவர்கள் வருவாய்க்குமேல் பெருமளவு தரகுப் பணத்தைப் பெற்று வந்தனர். மேலும், தடை செய்யப்பட்டிருந்த அதிக வருமானமுள்ள தனிப்பட்ட வாணிகத்திலும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பெயரில் ஈடுபட்டு வந்தனர். ஆட்சித் துறையை தூய்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட காரன்வாலிஸ், குறைந்த ஊதியம் மற்றும் அதிக ஈட்டுப்படிகள் என்ற வழக்கத்தை ஒழித்தார். வணிகக்குழு ஊழியர்களுக்கு நிறைவான ஊதியம் வழங்கும்படி இயக்குநர் குழுவிடம் கேட்டுக்கொண்டார். இதன்மூலம், ஊழல் மிகுந்த வணிக முறைகளைக் களையமுடியும் என்று எடுத்துரைத்தார்.

மேலும், தகுதியின் அடிப்படையிலேயே நியமனங்கள் செய்யப்படவேண்டும் என்ற கொள்கையையும் காரன் வாலிஸ் தொடங்கி வைத்தார். இவ்வாறு இந்திய ஆட்சிப் பணித்துறைக்கு அவர் அடித்தளம் அமைத்தார். செலவினங்களைக் குறைப்பதற்காக, பல்வேறு அதிகப்படியான பணியிடங்களை ரத்து செய்தார். வணிகம், நீதி, வருவாய் ஆகிய மூன்று துறைகளின் செயல்பாடுகளை தனித்தனியே பிரித்து ஒரு புதிய வகை ஆட்சியமைப்பை அறிமுகப்படுத்தினார். ஆட்சியமைப்பின் அச்சாணிகளாக இருந்த மாவட்ட கலெக்டர்களிடமிருந்து நீதித்துறை அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. அவர்கள் வருவாய்த்துறையில், வரிவசூலிக்கும் பணியை மட்டும் கவனித்து வந்தனர்.

நீதித் துறையை சீரமைக்கும் பணியில், நீதிபதியும் சிறந்த அறிஞருமான சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவரின் சேவைகளை காரன் வாலிஸ் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார். உரிமையியல், குற்றவியல் நீதிமன்றங்கள் முழுவதுமாக சீரமைக்கப்பட்டன.

1. நீதித் துறையின் மேல்மட்டத்தில், சதர் திவானி அதாலத் என்ற உரிமையியல் நீதிமன்றமும், சதர் நிசாமத் அதலத் என்ற குற்றவியல் நீதிமன்றமும் கல்கத்தாவில் செயல்பட்டு வந்தன. இவ்விரு நீதிமன்றங்களும் தலைமை ஆளுநர் – அவரது ஆலோசனைக் குழுவின் தலைமையில் இயங்கின.

2. கல்கத்தா, டாக்கா, மூர்ஷிதாபாத், பாட்னா ஆகிய நகரங்களில் நான்கு மாகாண மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றிலும் மூன்று ஐரோப்பிய நீதிபதிகள் இந்திய ஆலோசனையாளர்களின் உதவியுடன் செயல்பட்டனர்.

3. மாவட்டந்தோறும் ஒரு நீதிமன்றம் ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட மற்றும் நகர நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் ஒரு ஐரோப்பிய நீதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்கியது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, மாவட்ட ஆட்சியர்கள் நீதித்துறை பணியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். எனவே, புதிதாக மாவட்ட நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர்.

4. நீதித் துறையின் கீழ்மட்டத்தில் இருந்த அனைத்து நீதிமன்றங்களிலும் இந்திய நீதிபதிகள் அல்லது முன்சீப்கள் நியமிக்கப்பட்டனர்.

குற்றவியல் வழக்குகளைப் பொறுத்தவரை இஸ்லாமிய சட்டம் மேம்படுத்தப்பட்டு பின்பற்றப்பட்டது. உரிமையியல் வழக்குகளில், வழக்கு தொடர்புடையவர்கள் சமயத்தின் அடிப்படையில் இந்து மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்பட்டன. இந்து முஸ்லீம்ஆகியோருக்கிடையிலான வழக்குகளில் நீதிபதியின் முடிவே இறுதியானது. கருணை உள்ளம் கொண்ட காரன்வாலிஸ், காட்டுமிராண்டித்தனமான தண்டனைகளை வெறுத்தார். உறுப்புகளை சிதைத்தல், துன்புறுத்தி விசாரித்தல் போன்ற நடைமுறைகளை அவர் ஒழித்தார்.

காரன்வாலிஸ் ஆட்சித்துறையைவிட சட்டவியலில் அதிக அக்கறை செலுத்தினார். தனது சக பணியாளரான ஜார்ஜ் பார்லோ என்பவரின் உதவியுடன், ஒரு முழுமையான சட்டத்தொகுப்பை காரன்வாலிஸ் உருவாக்கினார். ஆட்சித்துறையின் பிரிவுகளான, நீதி, காவல், வாணிகம், செலவினங்கள் போன்ற அனைத்து நடைமுறைகளையும் இது உள்ளடக்கியிருந்தது. 18ம் நூற்றாண்டில் மேலை நாடுகளில் புகழ்பெற்றிருந்த மான்டெஸ்கியூ என்பவரின் அதிகாரப் பகிர்வு கோட்பாட்டை (இச்சட்டத் தொகுப்பு) அடிப்படையாகக் கொண்டு விளங்கியது.

**காவல்துறை சீர்திருத்தங்கள்**

நீதித்துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் செம்மையாக நடைமுறைப் படுத்துவதற்கு காவல்துறையின் சீரமைப்பும் தேவையாக இருந்தது. மாவட்ட நீதிபதியின் கட்டுப்பாட்டில் காவல்துறை இருந்தது. ஒவ்வொரு மாவட்டமும் சுமார் 20 மைல் பரப்பளவு கொண்ட 'தாணா' (காவல் சரகம்) என்ற பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு 'தாணா' பிரிவும் 'தரோகா' எனப்பட்ட இந்திய அதிகாரியின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன. அவருக்கு உதவியாக பல காவலர்கள் நியமிக்கப்பட்டனர். இருப்பினும் காவல் துறை திறமையானதாக இல்லை. மார்ஷ்மேன் என்பவரது கூற்றுப்படி – தரோகா வரம்பற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்ததோடு நாட்டில் நிலவிய கொடுமைகளுக்கும் காரணமாக இருந்தார்.

**பிற சீர்திருத்தங்கள்**

வணிகக் குழுவின் வாணிப முதலீடுகளை நிர்வகித்து வந்த வணிக வாரியத்தை காரன்வாலிஸ் சீரமைத்தார். சார்லஸ் கிராண்ட் என்பவரின் உதவியோடு அதில் நிலவிய

எண்ணற்ற முறைகேடுகளையும் ஊழல் நடவடிக்கைகளையும் அவர் ஒழித்தார். இந்திய தொழிலாளர்களுக்கும் நெசவாளிகளுக்கும் நியாயமான சலுகைகளை வழங்கினார். நேர்மையான பணியாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தினார்.

**காரன்வாலிஸ் குறித்த மதிப்பீடு**

செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த காரன்வாலிஸ் நாட்டுப்பற்று மிக்கவராகத் திகழ்ந்தார். தனது கடமைகளை அச்சமின்றி நிறைவேற்றினார். கடமையும் தியாகமும் அவரது மூச்சாக விளங்கியது. திப்புவின் வளர்ச்சி அஞ்சும் நிலைக்கு சென்றபோது, தலையிடாக் கொள்கையை கைவிட்டு துணிச்சலுடன் அதனை எதிர்கொண்டார். ஒரு ஆட்சியாளராக, வணிகக்குழுவின் ஆட்சியை இந்தியாவில் நிலைப்படுத்தினார்.

தூய்மையான, திறமையான நிர்வாகத்திற்கு அடித்தளம் வகுத்தார். அவர் கொண்டுவந்த நிலையான நிலவரித் திட்டத்தில் குறைகள் இருந்தபோதிலும், ஆட்சித் துறை, நீதித்துறை சீர்திருத்தங்களில் தமது முத்திரையை காரன் வாலிஸ் பதித்துவிட்டுச் சென்றார். தற்கால இந்திய ஆட்சிப் பணியின் தந்தை என்று அவரைக் கருதலாம்.

காரன்வாலிசை தொடர்ந்து சர் ஜான் ஷோர் (1793 – 98) தலைமை ஆளுநராக பதவி வகித்தார். இவரது ஆட்சிக்காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏதும் இல்லை எனலாம்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தில மாணவர்கள் அறிந்தவை :*

1. *மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்கள், போரின் போக்கு மற்றும் விளைவுகள்.*
2. *காரன்வாலிஸ் கொண்டு வந்த ஆட்சித்துறை மாற்றங்கள்.*
3. *நீதித்துறை சீர்திருத்தங்களும் அதன் சிறப்பும்*
4. *காவல்துறை சீரமைப்பு*
5. *காரன்வாலிஸ் பிரபு குறித்த ஒரு பொது மதிப்பீடு*

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ. மகல்வாரி முறை ஆ. நிலையான நிலவரித்திட்டம்

இ. இரயத்துவாரி முறை ஈ. ஜாகீர்தாரி முறை

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. காரன்வாலிஸ் பிரபு தனது சக பணியாளரான ____________ துணையுடன் சட்டத்தொகுப்பை உருவாக்கினார்.

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. மூவர் கூட்டணி | அ. 1784 |
| 2. ஸ்ரீரங்கபட்டினம் உடன்படிக்கை | ஆ. 1786 |
| 3. மங்களூர் உடன்படிக்கை | இ. 1789 |
| 4. பிட் இந்திய திருத்தச் சட்டம் | ஈ. 1792 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரர்களிடம் ஸ்ரீரங்கபட்டணம் உடன்படிக்கையை – செய்து கொண்டார்.

ஆ. தரோகா என்பவர் ஒரு வருவாய் அதிகாரி.

இ. மூன்றாம் ஆங்கிலேய – மைசூர் போர் ஹைதர் அலி மறைந்தபிறகு நடைபெற்றது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. மங்களூர் உடன்படிக்கை ஆங்கிலேயரின் பலவீனத்தை வெளிப்படுத்தியது.
2. காரன்வாலிஸ் பிரபு ஆட்சிக்காலத்தில் குற்றவியல் வழக்குகளில் இந்து சட்டம் பின்பற்றப்பட்டது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ஸ்ரீரங்கபட்டிணம் உடன்படிக்கை.
2. காரன்வாலிஸ் பிரபுவின் காவல்துறை சீர்திருத்தங்கள்.

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்களை விவாதிக்க.
2. காரன்வாலிஸ் பிரபுவின் நீதித்துறை சீர்திருத்தங்களை எழுதுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. காரன்வாலிஸ் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.
2. ‘காரன்வாலிஸ் பிரபுவின் வாழ்க்கை கடமையும் தியாகமும் நிறைந்தது’ – கருத்துரைக்க.

# பாடம் – 3


## வெல்லெஸ்லி பிரபு (1798–1805)

**கற்றல் நோக்கங்கள்**

*மாணவர்கள் பின்வரும் கருத்துக்களை அறிந்துகொள்ளச் செய்தல்.*

1. *வெல்லெஸ்லி பிரபு இந்தியாவுக்கு வந்தபோது காணப்பட்ட அரசியல் நிலைமை.*
2. *துணைப்படைத் திட்டத்தின் பொருள்*
3. *துணைப்படைத் திட்டத்தின் நிறை, குறைகள்*
4. *இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட இந்திய அரசுகள்*
5. *நான்காம் மைசூர் போரும் திப்பு சுல்தானின் வீழ்ச்சியும்*
6. *மராட்டியருடனான போர்*
7. *வெல்லெஸ்லி பிரபு பற்றிய மதிப்பீடு*

ரிச்சர்ட் கோலி வெல்லெஸ்லி தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டது பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும். பேரரசுக் கொள்கையுடைய அவர் தம்மை 'வங்கப்புலி' என்று கூறிக்கொண்டார். அவர் ஆதிக்கக் கொள்கையைப் பின்பற்றி, 'இந்தியாவில் பிரிட்டிஷ் அரசு' என்பதற்குப்பதில் 'பிரிட்டிஷ் இந்தியப் பேரரசு' ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்துடனேயே இந்தியாவுக்கு வந்தார். தனது குறிக்கோளை எட்டுவதற்கு அவர் பின்பற்றிய திட்டம் 'துணைப்படைத் திட்டம்' என்று அழைக்கப்படுகிறது.



வெல்லெஸ்லி பிரபு

**வெல்லெஸ்லி பதவியேற்றபோது இந்திய அரசியல் நிலைமை**

வடமேற்கு இந்தியாவில் எந்நேரமும் சாமன் ஷா படையெடுக்கலாம் என்ற செய்தி பிரிட்டிஷ் இந்திய அரசுக்கு அச்சத்தை கொடுத்தது. இந்தியாவின் வடக்கிலும், மத்தியிலும் மராட்டியர்கள் வலிமையான அரசியல் சக்தியாக விளங்கினர். ஹைதராபாத் நிசாம் தனது படைகளுக்கு பயிற்சியளிப்பதற்கு பிரெஞ்சுக்காரர்களை நியமித்தார். கர்நாடகப் பகுதியில் குழப்பம் நீடித்தது. பிரிட்டிஷாருக்கு, திப்பு சுல்தான் சமரசத்துக்கு உடன்படாத எதிரியாகவே தென்பட்டார்.

காரன்வாலிஸ் பிரபுவுக்குப்பிறகு தலைமை ஆளுநராக பொறுப்பு வகித்த சர் ஜான் ஷோர் ஆட்சிக் காலத்தில் அவர் பின்பற்றிய தலையிடாக் கொள்கையால் இந்தியாவில் அரசியல் குழப்பமே எஞ்சியது. இதனால், ஆங்கிலேயரின் புகழ் பாதிக்கப்பட்டது. அவரது தலையிடாக் கொள்கை பிரிட்டிஷாருக்கு எதிரான உணர்வுகள் பெருகவும் காரணமாயிற்று. மேலும், நெப்போலியனின் கீழைப்படையெடுப்பு குறித்த செய்திகள் ஆங்கிலேய ஆட்சியாளர்களுக்கு அச்சத்தை கொடுத்தது. இத்தகைய பின்னணியில் தான் வெல்லெஸ்லி தமது கொள்கையை வகுத்தார். பிரிட்டிஷ் புகழைத் தக்கவைப்பது, இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் குறித்த அச்சத்தை அகற்றுவது ஆகிய இரண்டுமே அவரது முக்கிய குறிக்கோள்களாக இருந்தன.

இந்திய அரசுகளில் நிலவிய கொடுங்கோன்மை மற்றும் ஊழலைக் களைவதற்கு இந்தியாவில் ஒரு வலிமைமிக்க பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று அவர் கருதினார். ஆகவே, தலையிடாக் கொள்கையைக் கைவிட்டு, 'துணைப்படைத்திட்டம்' என்ற தமது குறிக்கோள் நிறைந்த திட்டத்தை அவர் வகுத்தார்.

**துணைப்படைத் திட்டம்**

வெல்லெஸ்லிக்கு முந்தைய ஆட்சியாளர்கள்கூட அயோத்தி நவாப், ஹைதராபாத் நிசாம் போன்ற இந்திய அரசர்களுடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டனர். இந்திய அரசுகளை பாதுகாப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கு ஆகும் செலவினங்களை ஈடுகட்ட அந்தந்த ஆட்சியாளர்களிடமிருந்து உதவித்தொகையையும் அவர்கள் பெற்றனர். இவ்வாறு ஏற்கனவே நடைமுறையிலிருந்த வழக்கத்தை வெல்லெஸ்லி தமது திட்டமாக விரிவுபடுத்தினார். இருப்பினும், அத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியதில்தான் அவரது தனித்தன்மை வெளிப்பட்டது.

**துணைப்படை திட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

1. பிரிட்டிஷாருடன் துணைப்படை ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பும் இந்திய அரசர் தனது ஆட்சிப்பகுதியில் பிரிட்டிஷ் படையை வைத்து பராமரிக்க வேண்டும். இப்படைக்கு பிரிட்டிஷ் அதிகாரி தலைமை வகிப்பார். அத்தகைய இந்திய அரசு 'பாதுகாக்கப்பட்ட அரசு' என்று அழைக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசு 'தலைமை அரசு' என்று குறிக்கப்படும். அயல் நாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள்நாட்டு அமைதி ஆகியவற்றை பாதுகாப்பது பிரிட்டிஷாரின் கடமையாகும். படைகளுக்கு ஆகும் செலவினை சரிகட்ட 'பாதுகாக்கப்பட்ட அரசு' ஒரு தொகை அல்லது ஒரு நிலப்பகுதியை பிரிட்டிஷாருக்கு கொடுக்க வேண்டும்.

2. பாதுகாக்கப்பட்ட அரசு ஆங்கிலேயர் தவிர வேறு ஐரோப்பிய அரசுகளுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டும். குறிப்பாக பிரஞ்சுக்காரர்களுடன் உறவு முற்றிலும் தடை செய்யப்பட்டது. மேலும், பிரிட்டிஷாரின் அனுமதியின்றி பாதுகாக்கப்பட்ட அரசு வேறு இந்திய அரசுகளுடனும் அரசியல் தொடர்பு வைக்கவும் தடை விதிக்கப்பட்டது.

3. பாதுகாக்கப்பட்ட அரசின் ஆட்சியாளர் தனது படைகளைக் கலைப்பதுடன், ஒரு பிரிட்டிஷ் தூதுவரையும் தனது அரசவையில் வைத்துக்கொள்ள வேண்டும். தலைமை அரசின் அனுமதியின்றி அவர் ஐரோப்பியர்களை பணியில் அமர்த்தக்கூடாது.

4. பாதுகாக்கப்பட்ட அரசின் உள்விவகாரங்களில் தலைமை அரசு தலையிடக்கூடாது.

**பிரிட்டிஷாருக்கு ஏற்பட்ட நன்மைகள்**

பிரிட்டிஷ் பேரரசுக் கொள்கையின் திறமைமிக்க செயல்களில் ஒன்றாக வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் கருதப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட அரசுகளின் செலவில் வணிகக்குழு இந்தியாவில் தனது படை வலிமையை பெருக்கிக்கொண்டது. வணிகக் குழுவின் ஆட்சிப் பகுதிகளில் போர்க்கால அழிவுகள் ஏற்படாமல் இத்திட்டம் பாதுகாத்தது. இதனால், இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சி நன்கு நிலைப்படுத்தப்பட்டது. இந்தியாவிற்குள்ளிருந்த மற்றும் அயல்நாட்டு பகைவர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் ஆட்சி மேலும் வலிமையடைந்தது. இத்திட்டத்தின்கீழ் பிரிட்டிஷ் ஆட்சி மேலும் எளிமையாக விரிவடைந்தது. வெல்லெஸ்லி பிரபுவின் இத்தகைய அரசியல் வெல்திறனால் பிரிட்டிஷார் இந்தியாவின் தலைமையிடத்தைப் பிடித்தனர்.

**துணைப்படைத்திட்டத்தின் குறைகள்**

இந்தியப் பகுதிகளில் பிரிட்டிஷ் துணைப்படையை நிறுத்திவிட்டு, இந்திய அரசர்கள் தங்களது படைகளைக் கலைத்து வீரர்களை வீட்டுக்கு அனுப்பியதால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. வேலையிழந்த வீரர்கள் கொள்ளையில் ஈடுபட்டதால் ஏற்கனவே பிண்டாரிகளின் தொல்லைக்குட்பட்டிருந்த மத்திய இந்தியா பெரிதும் பாதிக்கப்பட்டது.

மேலும், துணைப்படைத்திட்டம் பாதுகாக்கப்பட்ட அரசுகளின் ஆட்சியாளர்களிடையே பொறுப்பின்மையை ஏற்படுத்தியது. அயல்நாட்டு அச்சம், உள்நாட்டு கலகம் ஆகியவற்றிலிருந்து அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதால் தங்களது ஆட்சி பொறுப்புகளை அவர்கள் அலட்சியம் செய்தனர்.

உல்லாச வாழ்க்கையில் நாட்டம் செலுத்த ஆரம்பித்தனர். இதனால், முறைகேடான நிர்வாகம் தோன்றியது. காலப்போக்கில் இத்தகைய அரசுகளின் நிலவிய முறைகேடான ஆட்சியினால், பிரிட்டிஷாரே அவற்றை இணைத்துக் கொள்ளவும் வழிவகுத்தது. இவ்வாறு, துணைப்படைத்திட்டம் நாடுகளை இணைப்பதற்கு அடிகோலியது. மேலும், பாதுகாக்கப்பட்ட அரசுகளிடமிருந்து பிரிட்டிஷார் அதிகபட்ச உதவித்தொகையை வாங்கியதால் பொருளாதாரமும் வெகுவாக பாதித்தது.

**துணைப்படைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

**ஹைதராபாத்**

வெல்லெஸ்லி வகுத்த துணைப்படைத்திட்டம் 1798ல் முதன்முதலில் ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை தற்காலிகமானதாகும். அதன்படி துணைப்படை நிர்வாகத்துக்காக ஆண்டுக்கு 24 லட்சம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டது. ஹைதராபாத்திலிருந்த பிரஞ்சுப்படைகள் முழுவதும் வெளியேற்றப்பட்டன. அதற்கு பதில் பிரிட்டிஷாரின் துணைப்படை நிறுத்திவைக்கப்பட்டது. 1800 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட புதிய உடன்படிக்கைப்படி நிசாம் பெரும் நிலப்பகுதியை பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுத்தார். இப்பகுதி 'கொடை மாவட்டங்கள்' எனப்படும்.

**அயோத்தி**

ஆப்கானிய சாமன் ஷாவின் படையெடுப்பு அச்சத்தை காரணமாகக் காட்டி வெல்லெஸ்லி அயோத்தி நவாப் மீது துணைப்படை ஒப்பந்தத்தை திணித்தார். இதன்படி, நவாப் செல்வ வளமிக்க பகுதிகளான ரோகில் கண்ட், கீழ் தோ ஆப், கோரக்பூர் போன்றவற்றை பிரிட்டிஷாருக்கு வழங்கினார். அயோத்தி தலைநகரில் நிறுத்தப்பட்டிருந்த பிரிட்டிஷ் துருப்புக்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது. நவாப்பின் படையில் வீரர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைக்கப்பட்டது. அயோத்தியில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க விதிமுறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் பிரிட்டிஷாரே மேற்கொண்டனர். இதனால், அயோத்தியின் உள்விவகாரங்களிலும் அவர்கள் தலையிடும் உரிமையைப் பெற்றனர். வணிகர் குழுவிற்கு வளமிக்க நிலப்பகுதிகள் கிடைக்க வழிசெய்த போதிலும், வெல்லெஸ்லியின் வரம்புமீறிய இந்த நடிவடிக்கை கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

**தஞ்சாவூர், சூரத், கர்நாடகம்**

தஞ்சாவூர், சூரத், கர்நாடகம் ஆகிய பகுதிகளின் ஆட்சியாளர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டு அந்த அரசுகளின் நிர்வாகத்தை வெல்லெஸ்லி தாமே எடுத்துக்கொண்டார். தஞ்சையை ஆண்ட மராட்டியருக்கிடையே வாரிசுரிமைச் சிக்கல் நிலவியது. 1799ல் தஞ்சை அரசர் சரபோஜியுடன் வெல்லெஸ்லி உடன்படிக்கை செய்து கொண்டார். இதன்படி ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷாரே ஏற்றனர். சரபோஜி, 'ராஜா' என்ற பட்டத்தை தக்க வைத்துக் கொண்டதுடன் ஆண்டுக்கு நான்கு லட்ச ரூபாய் ஒய்வூதியமும் பெற்றார்.

ராஜா சரபோஜி பண்பு நலனும் ஒழுக்கமும் நிரம்பியவர். சுவார்ட்ஸ் என்ற அறிஞரின் சீடர். தஞ்சையில் இவர் ஏற்படுத்திய சரஸ்வதி மகால் நூலகத்தில் பல அரிய புத்தகங்களும் கையேடுகளும் உள்ளன. இவர் கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரிதும் உதவினார்.

1759 ஆம் ஆண்டிலேயே சூரத் பிரிட்டிஷாரின் காப்பரசாக மாறியது. 1799ல் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நகரத்தின் நவாப் மறைந்தார். அவரது சகோதரர் ஆட்சிக்கு வந்தார். இத்தருணத்தை நன்கு பயன்படுத்திக்கொண்ட வெல்லெஸ்லி சூரத்தின் ஆட்சிப் பொறுப்பை தாமே ஏற்றார். நவாப்பிற்கு பட்டத்தை சூட்டிகொள்ளும் உரிமையும், ஆண்டுக்கு ஒரு லட்சரூபாய் ஒய்வூதியமும் வழங்கப்பட்டது.

கர்நாடகத்தில் வாழ்ந்த மக்கள் நீண்டகாலமாகவே இரட்டையாட்சியின் கொடுமையை அனுபவித்து வந்தனர். நவாப் உமாதத் – உல் – உமாரா திறமையற்றவராகவும் செலவாளியாகவும் இருந்தமையால் முறைகேடான ஆட்சி ஏற்பட வழிவகுத்தது. 1801 ஆம் ஆண்டு அவர் மறைந்தார். அவரது மகன் அலி உசேன் நவாப் பதவியை ஏற்றார். ஓய்வூதியம் பெற்றுக்கொண்டு ஆட்சியை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்குமாறு வெல்லெஸ்லி அவரிடம் கூறினார். அதற்கு, நவாப் மறுக்கவே, 1801 ஆம் ஆண்டு மறைந்த நவாப்பின் ஒன்றுவிட்ட மகனான ஆசிம் உத் தௌலாவுடன் வெல்லெஸ்லி ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார். இதன்படி கர்நாடகத்தின் ராணுவ மற்றும் சிவில் ஆட்சி முழுவதும் பிரிட்டிஷாரின் கைக்கு வந்தது.

**நான்காவது ஆங்கிலேய – மைசூர் போர் (1799)**

நான்காம் மைசூர் போருக்கு வழிவகுத்த சூழ்நிலைகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம். பிரிட்டிஷாரிடம் அடைந்த படுதோல்விக்கும், தன்மீது திணிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் பழிவாங்குவதற்கான தருணத்தை திப்புசுல்தான் எதிர்நோக்கி இருந்தார். மேலும், மைசூரை ஒரு வலிமைவாய்ந்த அரசாக மாற்றவும் அவர் தீர்மானித்தார்.

பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராகப் போரிட பல்வேறு உதவிகளை திப்பு நாடினார். பிரான்சு, அரேபியா, துருக்கி போன்ற நாடுகளின் உதவியைப் பெற முயற்சிகள் மேற்கொண்டார். 1798 ஜூலையில் பிரஞ்சு புரட்சி அரசாங்கத்துடன் அவர் தொடர்பு கொண்டார். ஸ்ரீரங்கப்பட்டணத்தில் ஜாகோபியின் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. பிரெஞ்சு குடியரசின் கொடியும் அங்கு பறக்கவிடப்பட்டது. சுதந்திர மரம் நடப்பட்டது. பின்னர், நெப்போலியன் ஆட்சிக்கு வந்தபிறகு, அவரிடமிருந்து நட்புக்கடிதம் ஒன்றையும் திப்பு பெற்றார். (அப்போது நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்திருந்தார்).

இத்தருணத்தில்தான் வெல்லெஸ்லி பிரபு கல்கத்தாவை அடைந்தார். வரும்போதே நெப்போலியப் படையெடுப்பு குறித்த அச்சம் அவருக்கு இருந்தது. எனவே, மைசூருக்கு எதிராகப் போரிடுவது என அவர் தீர்மானித்தார். இதற்காக 1790 ஆம் ஆண்டு முக்கூட்டிணைவை மீண்டும் புதுப்பிக்க அவர் முயற்சியெடுத்து மராட்டியருடன் தொடர்பு கொண்டார். அவரது யோசனையை மராட்டியர் ஏற்கவில்லை. இருப்பினும் நடுநிலை வகிப்பதாக உறுதியளித்தனர். இதற்கிடையில், ஹைதராபாத் நிசாமுடன் துணைப் படை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டு அங்கிருந்த பிரஞ்சுப்படை விலக்கப்பட்டது.

வெல்லெஸ்லி திப்பு சுல்தானுடனும் துணைப்படை ஒப்பந்தம் செய்துகொள்ள விழைந்தார். பிரஞ்சுக்காரர்களை விரட்டும்படியும், ஆங்கிலத் தூதரை ஏற்கும்படியும் வணிகக் குழுவுடனும் அதன் கூட்டாளிகளுடனும் இணக்கமாக செல்லும்படியும் கோரி வெல்லெஸ்லி திப்புவுக்கு கடிதங்கள் எழுதினார். இவற்றை திப்பு அலட்சியப்படுத்தியதால் நான்காம் மைசூர் போர் தொடங்கியது. இப்போர் குறுகிய காலமே நடைபெற்றது. ஆங்கிலேயரின் திட்டப்படி பம்பாய் ராணுவம் தளபதி ஸ்டூவர்ட் தலைமையில் மேற்கிலிருந்து மைசூரைத் தாக்கியது. தலைமை ஆளுநரின் சகோதரர், ஆர்தர் வெல்லெஸ்லியின் சென்னைப் படைகள் திப்புவை அவரது தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கே பின்வாங்கும்படி செய்தது. படுகாயம் அடைந்த நிலையிலும் திப்பு இறுதிவரை போரிட்டார். ஸ்ரீரங்கப்பட்டணம் கைப்பற்றப்பட்டது. திப்பு சுட்டுக் கொல்லப்பட்டார்.

**போருக்குப்பின் மைசூர்**


திப்பு சுல்தானின் வீழ்ச்சிக்குப் பிறகு, மைசூர் வெல்லெஸ்லியின் காலடியில் கிடந்தது. மைசூர் அரசின் மையப் பகுதியில் மீண்டும் இந்து அரசை அவர் ஏற்படுத்தினார். மூன்றாம் கிருஷ்ணராஜா என்ற ஐந்து வயது சிறுவன் மன்னராக முடி சூட்டப்பட்டான். சுமார் 200 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் மைசூர் தலைநகராகியது. முந்தைய அமைச்சரான பூரணய்யா திவானாக நியமிக்கப்பட்டார். மைசூர் அரசின் எஞ்சிய பகுதிகளை பிரிட்டிஷாரும் நிசாமும் பங்கிட்டுக் கொண்டனர். கனரா, வையநாடு, கோயம்புதூர், தர்மபுரி, ஸ்ரீரங்கப்பட்டணம் ஆகியவற்றை பிரிட்டிஷார் தம்வசமே வைத்துக்கொண்டனர். கூட்டியை சுற்றியிருந்த பகுதிகள், சித்தூரின் ஒரு பகுதி, சித்தலதுர்க்கா மாவட்டங்கள் ஆகியவை நிசாமுக்கு கொடுக்கப்பட்டன. மைசூரில் ஆங்கிலேய தூதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டார். திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**வெல்லெஸ்லியும் மராட்டியர்களும்**

துணைப்படைத் திட்டத்திற்கு உட்படாத ஒரே பகுதி மராட்டியமாகும். மராட்டியர்களின் தலைவராக நானாபட்னாவிஸ் திறம்பட செயல்பட்டார். பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் சிக்காமல் மராட்டிய அரசை சுதந்திரமாக வைத்திருக்க அவர் பாடுபட்டார். திப்புவுக்கு எதிராக காரன் வாலிசுக்கு உதவியதால், மைசூரிலிருந்து பெரும் நிலப்பகுதிகள் அவருக்கு கிடைத்தன. 1800 ஆம் ஆண்டு நானா பட்னாவிஸ் மறைந்தது மராட்டியருக்கு பேரிழப்பாகும்.

பேஷ்வா இரண்டாம் பாஜிராவ், கல்விமானாகவும் தோற்றப் பொலிவுடனும் இருந்தபோதிலும், அவரிடம் அரசியல் அறிவு குறைவாகவே காணப்பட்டது. மராட்டிய தலைவர்களுக்கிடையே காணப்பட்ட உட்பூசல் அழிவுக்கே இட்டுச் சென்றது. ஜஸ்வந்த் ராவ் ஹோல்கரும், தௌலத்ராவ் சிந்தியாவும் ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக் கொண்டனர். பேஷ்வா, ஹோல்கருக்கெதிராக சிந்தியாவை ஆதரித்தமையால், ஹோல்கர் பேஷ்வாமீது

படையெடுத்தார். இப்போரில் பேஷ்வா, சிந்தியா இருவரும் தோல்வியடைந்தனர். பூனாவைக் கைப்பற்றிய ஹோல்கர் அந்நகரை சூரையாடினார். பெரும் கொள்ளைப் பொருளுடன் தமது தலைநகர் திரும்பினார்.




வெல்லெஸ்லியின் கீழ் ஆங்கிலப் பகுதிகள் (1799 – 1805)

பீதியடைந்த பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் பசீன் என்ற இடத்துக்கு தப்பியோடினார். 1802ல் அவர் பசீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். இது ஒரு துணைப்படை ஒப்பந்தமாகும். இதன்படி, பேஷ்வா மீண்டும் மராட்டிய அரசின் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இது பெயரளவுக்கே என்ற போதிலும், பசீன் உடன்படிக்கை வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தின் மணிமகுடமாக கருதப்படுகிறது.

ஏனெனில், இவ்வுடன்படிக்கைப்படி மராட்டியரின் அயலுறவுக் கொள்கை பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. இதனால், மராட்டியத் தலைவர்கள் பிரிட்டிஷாருக்கு எதிராக செயல்படுவது தவிர்க்கப்பட்டது. எனவேதான் மராட்டியர்கள் இந்த உடன்படிக்கையை அடிமை சாசனம் என்று குறிப்பிட்டனர்.

பசீன் உடன்படிக்கையின் உடனடி விளைவாக, பிரிட்டிஷ் படைகள் ஆர்தர் வெல்லெஸ்லி தலைமையின் கீழ் பூனாவிற்கு சென்று அங்கு பேஷ்வாவை மீண்டும் பதவியில் அமர்த்தியது. ஹோல்கர் பூனாவிலிருந்து தப்பியோடினார்.

**இரண்டாம் மராட்டியப் போர் (1803 – 1805)**

தௌலத்ராவ் சிந்தியாவும், இரகூஜி பான்ஸ்லேயும் பசீன் உடன்படிக்கையை மராட்டியரின் தேசத்திற்கு ஏற்பட்ட இழுக்காக கருதினர். இவ்விரு தலைவர்களின் படைகளும் ஒன்றிணைந்து நர்மதை ஆற்றைக் கடந்து வந்தன. 1803 ஆகஸ்டில் வெல்லெஸ்லி மராட்டியருக்கெதிராக போர் அறிவிப்பு செய்தார். 1803 ஆகஸ்டில் அகமது நகரை கைப்பற்றிய ஆர்தர் வெல்லெஸ்லி, மராட்டியக் கூட்டுப்படைகளை அவுரங்காபாத்துக்கு அருகிலுள்ள அசே என்ற இடத்தில் முறியடித்தார்.

பின்னர், மராட்டிய தேசத்துக்குள் நுழைந்த ஆர்தர் வெல்லெஸ்லியின் படைகள் போன்ஸ்லேயை அரகான் சமவெளியில் தோற்கடித்தன. இதன் விளைவாக, வெல்லெஸ்லி போன்ஸ்லேயுடன் தியோகன் உடன்படிக்கையை செய்துகொண்டார். இதுவும் ஒரு துணைப்படை ஒப்பந்தமாகும். இதன்படி ஒரிசாவின் கட்டாக் மாகாணம் பிரிட்டிஷாருக்கு கிடைத்தது.

சிந்தியாவுக்கு எதிராக பிரிட்டிஷ் படைத்தளபதி லேக் மேற்கொண்ட படையெடுப்பு பிரமிக்கத் தக்கதாகும். வரலாற்றுப் புகழ்வாய்ந்த டெல்லி நகருக்குள் நுழைந்த லேக். அங்கிருந்த முகலாயப் பேரரசர் ஷா ஆலத்தை பிரிட்டிஷாரின் பாதுகாப்பில் கொண்டு வந்தார். பரத்பூர் அரசருடன் பேச்சுவார்த்தை நடத்திய லேக் ஆக்ராவை ஆக்ரமித்துக் கொண்டார். இந்த படையெடுப்பில் ஆயிரக்கணக்கான மராட்டிய வீரர்கள் கொல்லப்பட்டனர். சிந்தியா பிரிட்டிஷாருடன் துணைப்படை ஒப்பந்தம் செய்து கொண்டார். இது சுர்ஜி – அர்ஜுன்கான் உடன்படிக்கை எனப்படும்.

சிந்தியாவின் பகைவர் என்பதால், ஹோல்கர் இப்போரில் மராட்டியரை ஆதரிக்காமல் தனிமை காத்தார். வெல்லெஸ்லி ஒப்பந்தம் செய்யத் தூண்டியபோது பெரும் கோரிக்கைகளை ஹோல்கர் முன்வைத்தார். இதனால், வெல்லெஸ்லி அவர்மீது போர் தொடுத்தார். இப்படையெடுப்பு நன்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆங்கிலேய தளபதிகளின் சில தவறுகளால் ஹோல்கரை வெல்லத் தவறினார்.

**வெல்லெஸ்லி பற்றிய மதிப்பீடு**

ஆதிக்கக் கொள்கையை பின்பற்றிய வெல்லெஸ்லி நாடுகளை வென்று இணைப்பதிலேயே குறியாக செயல்பட்டார். பேரரசுக்கு அடிகோலிய மாமனிதர்களில் வெல்லெஸ்லியும் ஒருவர். இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு என்பதை பிரிட்டிஷ் இந்தியப் பேரரசு என்று மாற்றிய பெருமை அவரையே சாரும். இந்தியாவில் பிரிட்டிஷ் தலைமையை ஏற்படுத்தியதே அவரது முக்கியச் சாதனையாகும். இந்திய அரசுகளின் பலவீனத்தை கண்டறிந்து தனது அரசியல் நுட்பத்தை (துணைப்படைத் திட்டம்) அவர் நன்கு பயன்படுத்தினார். கர்நாடகம், தஞ்சாவூர் அரசுகளை இணைத்தமையால் சென்னை மாகாணம் உருவாக அவர் வழிவகுத்தார். சென்னை மாகாணத்தையும் ஆக்ரா மாகாணத்தையும் உருவாக்கியவர் என்று இவரை அழைக்கலாம். இத்தகைய வழிகளில், இந்திய துணைக் கண்டத்தின் பெரும்பகுதி வணிகக்குழுவின் பாதுகாப்பின்கீழ் கொண்டு வரப்பட்டது. "வாணிப கழகமாக இருந்த கிழக்கிந்திய வணிகக் குழுவை ஒரு பேரரசு சக்தியாக இவர் மாற்றினார்".

அடுத்த தலைமை ஆளுநராக சர் ஜார்ஜ் பார்லோ (1805 – 1807) இரண்டு ஆண்டுகள் பதவி வகித்தார். இவரது ஆட்சியின் போதுதான் 1806 ஆண்டு வேலூர் சிப்பாய் கலகம் நடைபெற்றது. அடுத்து மின்டோ பிரபு (1807 – 1813) தலைமை ஆளுநரானார். இவர் 1809ல் பஞ்சாப் அரசர் ரஞ்சித் சிங்குடன் உடன்படிக்கையை செய்து கொண்டார். 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டமும் இக்காலத்திலேயே நிறைவேற்றப்பட்டது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை கற்றதனால் மாணவர்கள் அறிந்து கொண்டவை :*

1. *வெல்லெஸ்லி பதவியேற்றபோது இந்திய அரசியல் நிலைமை பிரிட்டிஷாருக்கு சாதகமாக இல்லை.*
2. *இந்திய அரசுகளை பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு வெல்லெஸ்லி பயன்படுத்திய துணைப் படைத்திட்டம் என்ற நடைமுறை.*
3. *இத்திட்டத்தில் இந்திய அரசுகள் கொண்டு வரப்பட்ட விதம்.*
4. *பிற்காலத்தில் அவை நிரந்தரமாகவே பிரிட்டிஷ் பேரரசில் இணைக்கப் படுவதற்கான சூழ்நிலைகள்.*
5. *நான்காவது மைசூர் போரின் முடிவில் திப்பு சுல்தானின் வீழ்ச்சியால் இந்தியாவில் பிரிட்டிஷ் விரிவாக்கத்துக்கு இருந்த பெரும் தடை நீங்கியது.*
6. *மராட்டிய கூட்டிணைவின் பலவீனத்தை இரண்டாம் மராட்டியப் போர் வெளிப்படுத்தியது. இதனால் பிரிட்டிஷார் பெற்ற நன்மைகள்.*
7. *இந்தியத் துணைக் கண்டத்தில் வணிகக்குழுவை ஒரு பேரரசு சக்தியாக வெல்லெஸ்லி மாற்றினார்.*

## பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 1798ல் வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட முதல் நாடு

அ. அயோத்தி ஆ. தஞ்சாவூர்

இ. சூரத் ஈ. ஹைதராபாத்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. நான்காம் மைசூர் போர் நடைபெற்ற ஆண்டு ____________

2. சிந்தியா பிரிட்டிஷாருடன் செய்துகொண்ட துணைப்படைத் திட்ட உடன்படிக்கையின் பெயர் ____________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மூன்றாம் கிருஷ்ணராஜா | அ. | மராட்டியர் |
| 2. | சரபோஜி | ஆ. | கர்நாடகம் |
| 3. | நானா பாட்னாவிஸ் | இ. | மைசூர் |
| 4. | உமாதத்–உல்–உமாரா | ஈ. | தஞ்சாவூர் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1798ல் வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட முதல் சுதேச அரசு தஞ்சாவூர் ஆகும்.

ஆ. வெல்லெஸ்லி 1789 ஆம் ஆண்டு மூவர் கூட்டணியை புதுப்பிக்க முயற்சி செய்தார்.

இ. 1802 ஆம் ஆண்டு இரண்டாம் பேஷ்வா பாஜிராவ் ஆங்கிலேயருடன் பசீன் உடன் படிக்கையில் கையெழுத்திட்டார்.

ஈ. சிந்தியா பிரிட்டிஷாருடன் தேவகான் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. சர் ஜான் ஷோர் வெல்லெஸ்லி பிரபுவுக்குப்பின் பதவிக்கு வந்தார்.

2. 1802ல் இரண்டாம் பாஜிராவ் பசீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்.

3. நான்காம் மைசூர் போருக்குப்பிறகு, திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. துணைப்படைத் திட்டத்தின் குறைகள்

2. பசீன் உடன்படிக்கை

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. துணைப்படைத்திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

2. நான்காம் மைசூர் போருக்கு வழிவகுத்த நிகழ்ச்சிகளை விவாதிக்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதை ஆய்க.

2. வெல்லெஸ்லி பிரபுவின் சாதனைகளை மதிப்பிடுக.


# பாடம் – 4

## ஹேஸ்டிங்ஸ் பிரபு (1813 – 1823)

**கற்றல் நோக்கங்கள்**

*மாணவர் இப்பாடத்தைப் படிப்பதன்மூலம் அறிந்து கொள்வது*

1. *ஹேஸ்டிங்ஸ் பிரபு பதவியேற்றபோது இந்தியாவின் நிலைமை.*
2. *கூர்க்கா அரசான, நேபாளத்துடன் நடைபெற்ற போர்.*
3. *பிண்டாரிகள் யார் என்பதும் அவர்கள் ஒடுக்கப்பட்டதும்.*
4. *மூன்றாவதும் இறுதியுமான மராட்டியப் போர்.*
5. *பிரிட்டிஷாரிடம் மராட்டியர் தோற்றதற்கான காரணங்கள்.*
6. *ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட சீர்திருத்தங்கள்.*
7. *ஹேஸ்டிங்ஸ் பிரபு பற்றிய மதிப்பிடு*



**ஹேஸ்டிங்ஸ் பிரபு**

1813 ஆம் ஆண்டு ஹேஸ்டிங்ஸ் பிரபு தலைமை ஆளுநராகப் பதவியேற்றார். ஆதிக்கக் கொள்கையை தீவிரமாக பின்பற்றிய அவர் பல போர்களில் ஈடுபட்டார். அவரது தீவிர மற்றும் பேரரசுக் கொள்கைகள் பிரிட்டிஷ் பேரரசின் விரிவாக்கத்திற்கு வித்திட்டன. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை முதன்மையானதாக உண்மையில் மாற்றியவர் இவரேயாகும்.

ஹேஸ்டிங்ஸ் பதவியேற்றபோது இந்தியாவின் நிலைமை பிரிட்டிஷ் ஆட்சிக்கு பெரும் அச்சத்தை அளிப்பதாகவே இருந்தது. மத்திய இந்தியாவில் குழப்பம் நீடித்தது. பிண்டாரிகள் அப்பகுதியை கொள்ளையடித்த வண்ணம் இருந்தனர். மராட்டியரால் அவர்களை ஒடுக்க முடியவில்லை. மராட்டிய தலைவர்களுக்குள் உட்பூசல்கள் தொடர்ந்தன. இருப்பினும், அவர்கள் பிரிட்டிஷாரை இந்தியாவைவிட்டு விரட்டுவதிலேயே குறியாக இருந்தனர். பேஷ்வா பிரிட்டிஷாருக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டார். கூர்க்காக்களின் ஆக்ரமிப்பு ஹேஸ்டிங்சுக்கு கவலையளிப்பதாக இருந்தது. எனவே, பிண்டாரிகளை ஒடுக்கி அமைதியை நிலை நாட்டவும், மராட்டியருடனும் கூர்க்காக்களுடனும் போரிட்டு பிரிட்டிஷ் அரசுக்கு இருந்த அச்சத்தைப் போக்கவும் அவர் உறுதி பூண்டார்.

**கூர்க்காவினருக்கு எதிரான போர் (1814 – 1816)**

1768ல் நேபாளம் ஒரு வலிமை மிக்க கூர்க்கா அரசாக எழுச்சி பெற்றது. இந்தியாவின் வடக்கிலிருந்த நேபாளம் சீனாவை வடக்கிலும் வங்காளத்தை கிழக்கிலும் அயோத்தியை மேற்கிலும் எல்லைகளாகக் கொண்டிருந்தது. 1801 ஆம் ஆண்டு அயோத்தி நவாப்பிடமிருந்து கோரக்பூர், பாஸ்தி மாவட்டங்களை பிரிட்டிஷார் பெற்றனர். இதனால், பிரிட்டிஷ் ஆட்சியின்

எல்லை நேபாளம் வரை விரிவடைந்தது. பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியில் கூர்க்காக்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகள் போருக்கு இட்டுச் சென்றது. 1814 ஆம் ஆண்டு மே மாதம், கூர்க்காக்கள் பிரிட்டிஷ் காவல் நிலையத்தை தாக்கி அங்கிருந்த அதிகாரியையும் 18 காவலர்களையும் கொன்றனர். எனவே, ஹேஸ்டிங்ஸ் நேபாளத்தின்மீது போர் தொடுத்தார். 1814ல் பிரிட்டிஷாருக்கும் கூர்க்காக்களுக்கும் இடையே பல இடங்களில் மோதல்கள் நடைபெற்றன. இறுதியில் நேபாளப் படையின் திறமைமிக்க படைத்தளபதியான அமர் சிங் தாபா சரணடைந்தார்.

1816 மார்ச்சில், சகௌலி உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. தராய் பகுதியில் தாங்கள் கோரிய உரிமையை கூர்க்காக்கள் விட்டுக் கொடுத்தனர். மேலும், குமான், கார்வால் பகுதிகளையும் பிரிட்டிஷாருக்கு அளித்தனர். இதனால், சிம்லாவைச் சுற்றியிருந்த பகுதிகள் பிரிட்டிஷாருக்கு கிடைத்தன.

அவர்களது வடமேற்கு எல்லை இமாலயப் பகுதிகளைத் தொட்டது. சிக்கிமிலிருந்து வெளியேறிய கூர்க்காக்கள், காத்மண்டுவில் ஒரு பிரிட்டிஷ் தூதரை வைத்திருக்கவும் ஒப்புக்கொண்டனர். ஆங்கிலேயரைத்தவிர வேறு எந்த அயல்நாட்டவரையும் பணியில் அமர்த்துவதில்லை என்றும் அவர்கள் உறுதியளித்தனர். மலைவாழிடங்களான சிம்லா, முசூரி, நைனிடால், ராணிகட் போன்றவை பிரிட்டிஷார் வசமாகியது. அவற்றை சுற்றுலாத் தலங்களாகவும் நலவாழ்வு ஓய்விடங்களாகவும் பிரிட்டிஷார் மாற்றியமைத்தனர். கூர்க்காப் போரில் வெற்றி பெற்றமைக்காக ஹேஸ்டிங்சுக்கு மார்குயிஸ் பட்டம் வழங்கப்பட்டது.

**பிண்டாரிகளை ஒடுக்குதல்**

பிண்டாரிகளின் தோற்றம் பற்றி தெளிவான தகவல்கள் இல்லை. மராட்டியப் பகுதியில் படையெடுத்தபோதுதான் பிண்டாரி குறித்த தகவல் கிடைக்கிறது. அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பையோ அல்லது சமயத்தையோ சார்ந்தவர்களல்லர். ஊதியம் ஏதுமின்றி அவர்கள் ராணுவத்திலும் பணியாற்றுவதுண்டு. அதற்கு ஈடாக அவர்கள் கொள்ளையடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். முதலாம் பாஜிராவ் காலத்தில் மராத்திய ராணுவத்தில் குதிரை வீரர்களாக அவர்கள் பணிபுரிந்தனர். ஆனால், அவர்கள் ஒருபோதும் ஆங்கிலேயருக்கு உதவியதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ராஜபுதனப் பகுதிகள், மத்திய மாகாணங்கள் ஆகியன பிண்டாரிகளின் முக்கிய இருப்பிடங்களாகும். கொள்ளையடிப்பதே அவர்களது அடிப்படைத் தொழிலாகும். பிண்டாரிகளின் தலைவர்கள் இந்து மற்றும் முஸ்லிம் என்ற இரு இனத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். அவர்களில், வாசில் முகமது, சிட்டு, கரிம் கான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஆயிரக்கணக்கானவர்கள் இவர்களது தலைமையை ஏற்று செயல்பட்டனர்.

1812ல் பிண்டாரிகள் மீர்சாபூர், ஷாஹாபாத் மாவட்டங்களைத் தாக்கி கொள்ளையடித்தனர். 1815ல் நிசாமின் ஆட்சிப் பகுதிகளை சூரையாடினர். 1816ல் வடசர்க்கார் மாவட்டங்களில் புகுந்து கொள்ளயடித்தனர். எனவே, ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரிகளை ஒடுக்குவது என உறுதிபூண்டார். இதற்கென, 1,13,000 வீரர்கள், 300 துப்பாக்கிகள் கொண்ட ஒரு பெரும்படையைத் திரட்டினார். நாற்புறமிருந்தும் இப்படை பிண்டாரிகளைத் தாக்கியது. வடக்கில் இப்படைக்கு ஹேஸ்டிங்சே தலைமை வகித்தார். தெற்கில் சர் தாமஸ் வாஸ்லாப் படை நடத்தினார். 1818 ஆம் ஆண்டு வாக்கில் பிண்டாரிகள் முழுதும் ஒடுக்கப்பட்டனர். அவர்களது கூட்டங்கள் கலைக்கப்பட்டன. உத்திரப்பிரதேசம் கோரக்பூர் மாவட்டத்தில் கரீம்கானுக்கு ஒரு சிறிய பண்ணை கொடுக்கப்பட்டது. வாசில் முகமது சிந்தியாவிடம் தஞ்சமடைந்தார். ஆனால்,

சிந்தியா அவரை பின்னர் பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தார். வாசில் சிறையில் தற்கொலை செய்து கொண்டார். சித்து பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து காடுகளுக்கு தப்பியோடினார். அங்கு புலிக்கு இரையானார். 1824ம் ஆண்டு வாக்கில் பிண்டாரிகளின் தொல்லை முழுவதுமாக முடிவுக்கு வந்தது.

**மராட்டியக் கூட்டிணைவின் வீழ்ச்சி**

மராட்டியக் கூட்டிணைவை முறியடித்தது ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் மூன்றாவது முக்கிய சாதனையாகும். மூன்றாம் பானிப்பட்டுப் போர் (1761), அதைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டு ஆங்கிலேய–மராட்டியப் போர்களினால் மராட்டியர்கள் வலிமை குன்றியிருந்தனர். ஆனால், முற்றிலும் அழிக்கப்படவில்லை. தங்களுக்குள்ளேயே போரிட்டுக்கொண்டிருந்த அவர்கள், வலிமையும் திறமையும் குன்றிய வாரிசுகளால் மேலும் பலம் இழந்தனர். மராட்டியத் தலைவர்களிலேயே சக்திமிக்கவர்களான போன்ஸ்லே, கெயிக்வார், சிந்தியா, ஹோல்கர் மற்றும் பேஷ்வா ஆகியோருக்கிடையே ஒற்றுமையின்றி ஒருவருக்கொருவர் பொறாமையுடன் பூசல்கள் நிறைந்து காணப்பட்டனர்.

பேஷ்வா இரண்டாம் பாஜிராவ் மராட்டியக் கூட்டிணைவின் தலைவராக விரும்பினார். அதே சமயம், பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுதலை பெற முயற்சித்தார். அவரது முதலமைச்சரான திரிம்பக்ஜியும் இதனை ஊக்குவித்தார்.

வணிகக் குழுவின் ஆலோசனையின்படி, கெயிக்வார் தனது பிரதம அமைச்சர் கங்காதர் சாஸ்திரியை பேஷ்வாவுடன் சமரசம் பேச அனுப்பிவைத்தார். திரும்பும் வழியில் கங்காதர் சாஸ்திரி 1815 ஜுலையில் நாசிக்கில் திரிம்பக்ஜியின் ஆட்களால் கொல்லப்பட்டார்.

இது மராட்டியரிடையே மட்டுமல்லாமல் பிரிட்டிஷாரையும் வருத்தப்பட வைத்தது. திரிம்பக்ஜியை ஒப்படைக்குமாறு பேஷ்வாவை பிரிட்டிஷ் அரசு கேட்டுக் கொண்டது. பேஷ்வாவும் இதற்கு உடன்பட்டார். பிரிட்டிஷார் திரிம்பக்ஜியை தானா சிறையில் அடைத்தனர். ஆனால், அவர் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டார். பின்னர், 1817 ஜுன் 3ல் பிரிட்டிஷ் தூதுவர் எல்பின்ஸ்டன் பேஷ்வாவை வற்புறுத்தி பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு செய்தார். மராட்டியர்களின் தலைவராகும் ஆசையை பேஷ்வா துறக்கவேண்டியதாயிற்று.

**மூன்றாம் மராட்டியப் போர் (1817 – 1818)**

சிறிது நாட்களிலேயே இந்த உடன்படிக்கையை பேஷ்வா ரத்து செய்துவிட்டு 1817 நவம்பர் 5ல் பிரிட்டிஷ் தூதரகத்தின்மீது தாக்குதல் தொடுத்தார். ஆனால், கிர்கே என்னுமிடத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டார். அதேபோல், போன்ஸ்லே தலைவர் அப்பாசாகிப் தாம் 1817 மே 17ல் கையெழுத்திட்ட நாக்பூர் உடன்படிக்கையை ஏற்க மறுத்தார். இவ்வுடன்படிக்கைப்படி நாக்பூர் வணிகக் குழுவின் கட்டுப்பாட்டில் வந்தது. அப்பாசாகிப் 1817 நவம்பரில் பிரிட்டிஷாருடன் நடைபெற்ற சிதாபல்தி போரில் முறியடிக்கப்பட்டார். பேஷ்வா இச்சமயத்தில் ஹோல்கரின் உதவியை நாடினார். ஆனால், பிரிட்டிஷார் 1817 டிசம்பர் 21ல் பரோடாவில் ஹோல்கரை முறியடித்தனர். இவ்வாறு, 1817 டிசம்பரில் மிகப்பெரும் மராட்டியக் கூட்டிணைவு என்ற கனவு தவிடுபொடியாகியது.

1818ல் சிந்தியா பிரிட்டிஷாருடன் ஒரு புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட நேரிட்டது. இதன்படி, பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்த போபால் நவாப்புக்கு ஆஜ்மீரை விட்டுக் கொடுத்தார். பரோடாவின் கெயிக்வார் துணைப்படை ஒப்பந்தத்தை

ஏற்று, அகமதாபாத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷாருக்கு வழங்கினார். பிண்டாரிகளின் ஒடுக்குதலுக்குப் பிறகு இராஜபுத்திர அரசுகள் சுதந்திரமாக செயல்பட்டன.

பல்வேறு அரசியல் சாதனைகள் **1818**ல் நடத்தப்பட்டதால், பிரிட்டிஷாருக்கு அந்த ஆண்டு முக்கியத்துவம் பெற்றதாகும். இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்க நினைத்த மராட்டியரின் திட்டம் முற்றிலும் தகர்க்கப்பட்டது. பிரிட்டிஷ் தலைமைக்கு தடையாக இருந்த மராட்டியர்கள் வீழ்த்தப்பட்டனர்.

**மராட்டியரின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**

ஆங்கிலேய – மராட்டியப் போர்களில் மராட்டியர் தோல்வி அடைந்ததற்கு பல காரணங்கள் கூறலாம். அவற்றில் முக்கியமானவை :

- திறமையான தலைமை இல்லாதது
- படைவலிமை இல்லாதது
- அவர்களுக்கிடையே நிலவிய உட்பூசல்கள் மற்றும் ஒற்றுமையின்மை
- தாங்கள் வென்ற பகுதிகளின் ஆதரவைப் பெறத் தவறியது.
- இந்தியாவில் ஆட்சிசெய்த மற்ற அரசர்கள், நவாபுகளுடன் நட்புடன் இல்லை.
- பிரிட்டிஷார் அரசியல் மற்றும் ராஜதந்திரத்தை சரியாக மதிப்பிடத் தவறியது.

**ஹேஸ்டிங்சின் சீர்திருத்தங்கள்**

ஹேஸ்டிங்சின் பதவிக்காலத்தில் ஆட்சிப் பரப்பின் எல்லை பெருகியது மட்டுமல்லாமல் ஆட்சித் துறையிலும் முன்னேற்றம் காணப்பட்டது. சென்னை மாகாணத்தில் சர்தாமஸ் மன்றோ அறிமுகப்படுத்திய ரயத்துவாரி முறையை அவர் அங்கீகரித்தார். நீதித்துறையைப் பொறுத்தவரை காரன்வாலிஸ் சட்டத்தொகுப்பு சீரமைக்கப்பட்டது. வங்காளத்திலிருந்த காவல் அமைப்பு பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்தில் இந்திய முன்சீப்களின் முக்கியத்துவம் அதிகரித்தது. வருவாய் மற்றும் நீதித் துறைக்கு இடையே நிலவிய பகிர்வு கட்டாயமாக பின்பற்றப்படவில்லை. மாவட்ட ஆட்சியர் நீதிபதியாகவும் கடமையாற்றினார்.

சமயப் பரப்பாளர்களாலும், பிறராலும் தாய்மொழிக் கல்விக் கூடங்கள் அமைக்கப்படுவதை ஹேஸ்டிங்ஸ் பிரபு ஊக்குவித்தார். ஆங்கிலம் மற்றும் மேலை நாட்டு அறிவியல் கல்விக்காக கல்கத்தாவில் பொது மக்களால் இந்துக் கல்லூரி **1817**ல் நிறுவப்பட்டது. இக்கல்லூரியின் புரவலராக ஹேஸ்டிங்ஸ் பிரபு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பத்திரிகை சுதந்திரத்தை அவர் ஊக்குவித்தார். **1799**ல் கொண்டுவரப்பட்ட தணிக்கை முறையை அவர் ரத்துசெய்தார். **1818**ல் சீராம்பூர் சமயப்பரப்பாளரான மார்ஷ்மேன் என்பவரால் **‘சமாச்சார் தர்பன்’** என்ற வங்காளமொழி வார இதழ் தோற்றுவிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

ஹேஸ்டிங்ஸ் பிரபு சிறந்த படைவீரராகவும் திறமைமிக்க ஆட்சியாளராகவும் திகழ்ந்தார். கல்வி, பத்திரிக்கை போன்ற துறைகளில் அவரது தாராளக்கொள்கை பாராட்டத்தக்கது. அவர், பிண்டாரிகளை ஒடுக்கினார். மராட்டியரை வீழ்த்தினார், கூர்க்காக்களின் கொட்டத்தை நசுக்கினார்.

அவர் கைப்பற்றிய நிலப்பகுதிகளால் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி மேலும் வலுவடைந்தது. பம்பாய் மாகாணத்தை உருவாக்கியவர் என்று அவர் போற்றப்பட்டார். வெல்லெஸ்லி பெற்ற வெற்றிகளை ஒன்றிணைத்து முழுமைப்படுத்தியவர் ஹேஸ்டிங்ஸ் பிரபு என்றால் மிகையாகாது.

ஹேஸ்டிங்ஸ் பிரபுவுக்குப்பின் ஆம்ஹர்ஸ்ட் பிரபு **(1823–28)** ஆட்சிப்பொறுப்பு ஏற்றார். அப்போது முதல் ஆங்கிலேய பர்மியப் போர் நடைபெற்றது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை படித்தபின் மாணவர் அறிந்து கொண்டது.*

1. *ஹேஸ்டிங்ஸ் இந்தியா வந்தபோது அவர் ஆற்ற வேண்டியிருந்த முக்கிய பணிகள்.*
2. *கூர்க்காக்கள் பெற்ற படிப்பினை - பிரிட்டிஷாரிடம் அவர்கள் சரணடைந்தது.*
3. *மத்திய இந்தியாவில் பிண்டாரிகளின் தொல்லை அவர்களை ஒடுக்க ஹேஸ்டிங்ஸ் மேற்கொண்ட முயற்சிகள்.*
4. *மராட்டியக் கூட்டிணைவின் பலவீனங்கள் - பிரிட்டிஷாரின் வலிமை மற்றும் வெற்றி*
5. *ஹேஸ்டிங்ஸ் பிரபு கொண்டுவந்த சீர்திருத்தங்கள்.*

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின்மீது போர் தொடுத்த ஆண்டு

அ. 1814 ஆ. 1815

இ. 1816 ஈ. 1817

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. 1768ல் ______________ ஒரு வலிமைமிக்க கூர்க்கா நாடாக எழுச்சி பெற்றது.
2. மூன்றாம் பானிபட்டுப் போர் நடைபெற்ற ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | அமர்சிங் தாபா | அ. | பிண்டாரிகள் |
| 2. | கரீம்கான் | ஆ. | வங்காள வார இதழ் |
| 3. | சர் தாமஸ் மன்றோ | இ. | நேபாள தளபதி |
| 4. | சமாச்சார் தர்பன் | ஈ. | ரயத்துவாரி முறை |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ஹேஸ்டிங்ஸ் பிரபு தலையிடாக் கொள்கையை பின்பற்றினார்.

ஆ. 1815ல் சகௌலி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது.

இ. பிண்டாரிகள் சீக்கிய இனத்தை சேர்ந்தவர்கள்.

ஈ. கல்கத்தா இந்து கல்லூரியை ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆதரித்தார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. கூர்க்கா போருக்குப்பிறகு, காத்மண்டுவில் பிரிட்டிஷ் தூதரை நியமிக்க கூர்க்காக்கள் சம்மதித்தனர்.
2. திரியம்பக்ஜி இரண்டாம் பாஜிராவின் முதலமைச்சராவார்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. கூர்க்கா போர்
2. ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் சீர்திருத்தங்கள்.

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகளை – விவாதிக்க.
2. மராட்டிய கூட்டிணைவின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் ஆட்சியை மதிப்பிடுக.
2. மூன்றாம் மராட்டியப் போருக்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை ஆய்க.

# பாடம் – 5

# வில்லியம் பெண்டிங் பிரபு (1828 – 1835)

**கற்றல் நோக்கங்கள்**

*இப்பாடத்தில் மாணவர் அறிந்துகொள்வது :*

1. *சீர்திருத்தங்கள் குறித்து பெண்டிங்கின் அடிப்படை கருத்து.*
2. *இந்திய அரசுகள் மீதான அவரது கொள்கை*
3. *இரஞ்சித் சிங்குடன் அவர் கொண்டிருந்த நல்லுறவு*
4. *1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம், அதன் சிறப்பு.*
5. *பெண்டிங்கின் ஆட்சித்துறை, நீதித்துறை சீர்திருத்தங்கள்.*
6. *சமூக சீர்திருத்தங்கள் - சதி ஒழிப்பு, தக்கர்களை ஒடுக்குதல், பெண்சிசுக் கொலை தடுப்பு.*
7. *கல்வித்துறை சீர்திருத்தங்கள்*

1828 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு தலைமை ஆளுநராக பதவி ஏற்றார். 1774ல் பிறந்த அவர் ஒரு போர்வீரராக வாழ்க்கையைத் தொடங்கினார். தனது 22வது வயதிலேயே நாடாளுமன்ற உறுப்பினரானார். 1803 ஆம் ஆண்டு சென்னையின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அப்போது, சர் தாமஸ் மன்றோ செயல்படுத்திய வருவாய் சீர்திருத்தங்களை ஆதரித்தார். 1806 ஆம் ஆண்டு வேலூர்க்கலகம் காரணமாக அவர் திருப்பியழைக்கப்பட்டார். இருப்பினும், மீண்டும் அவரை தலைமை ஆளுநர் பதவிக்கு நியமனம் செய்தது அவரது புகழுக்கு தக்க சான்றாகும். தலைமை ஆளுநராக, பெண்டிங் ஒரு முற்போக்கு சீர்திருத்த சகாப்தத்தையே தொடங்கி வைத்தார் எனலாம்.

இந்திய மக்களின் நலனைப் பேணுவதே இந்தியாவில் ஆளும் பிரிட்டிஷாரின் தலையாய கடமை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட முதல் தலைமை ஆளுநர் பெண்டிங் என்பதில் ஐயமில்லை.



வில்லியம் பெண்டிங் பிரபு

**இந்திய அரசுகள் மீதான கொள்கை**

வில்லியம் பெண்டிங் இந்திய அரசுகளைப் பொறுத்தவரை, ஆக்ரமிப்பு அற்ற, தலையிடாக் கொள்கையையே பின்பற்றினார். அப்படி அவர் இந்திய அரசுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டிருப்பாரானால், அது அங்கு நிலவிய முறைகேடான ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவே தவிர, எந்த நிலப் பகுதியையும் இணைக்கும் எண்ணத்தில் அல்ல.

**மைசூர்**

மைசூரில், வெல்லெஸ்லியால் இந்து அரசர் மூன்றாம் கிருஷ்ணராஜா பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார். தொடக்கத்தில் மைசூர் அரசர் அவரது திறமையான அமைச்சர் பூரணய்யாவின் வழிகாட்டுதலுடன் நன்கு ஆட்சி புரிந்தார். ஆனால், முழு ஆட்சிப் பொறுப்பையும் அவர் மேற்கொண்ட போதுதான் அவரது திறமையின்மை வெளிப்பட்டது. அந்த அரசில் வாழ்ந்த குடியானவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வந்தனர். அவற்றுக்கான தீர்வுகள் காணப்படவில்லை. எனவே, **1830**ல் குடியானவர்கள் கலகத்தில் ஈடுபட்டனர். சென்னை ராணுவத்தின் துணை கொண்டு அக்கலகம் ஒடுக்கப்பட்டது. பின்னர், பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் மைசூரின் ஆட்சிப் பொறுப்பை தாமே மேற்கொண்டனர். மைசூரில் ஒரு ஆணையாளர் நியமிக்கப்பட்டார். அரசருக்கு ஓய்வூதியம் அளிக்கப்பட்டது.

*சர் மார்க் கப்பன் என்பவர் 1834 முதல் 1861 வரை ஆணையாளராக இருந்தபோது மைசூர் மக்கள் பல்வேறு பயன்களைப் பெற்றனர். பெங்களூரிலுள்ள கப்பன் பூங்கா இன்றும் மைசூருக்கு அவர் ஆற்றிய சேவைகளை நினைவூட்டுவதாக உள்ளது.*

**கச்சார், ஜெயிந்தியா**

வடகிழக்கு எல்லைப்பகுதியில் அமைந்துள்ள கச்சார் அரசு முதல் பர்மியப்போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட்ட **யாண்டபூ உடன்படிக்கை**ப்படி பிரிட்டிஷ் பாதுகாப்பில் விடப்பட்டது. இந்த சிறிய நாட்டின் அரசர் **1832**ல் படுகொலை செய்யப்பட்டார். அவருக்கு வாரிசுகள் இல்லாமையால், அந்த நாட்டு மக்களின் விருப்பப்படி பெண்டிங் கச்சார் ஆட்சியை இணைத்துக் கொண்டார்.

முதல் பர்மியர் போரின் முடிவில் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்ட மற்றொரு நாடு ஜெயிந்தியா. இச்சிறிய நாட்டின் ஆட்சியாளர் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். காளி தேவதைக்கு பலிகொடுக்கும் நோக்கத்துடன் பிரிட்டிஷார் சிலரை இவர் கடத்தினார். இத்தகைய கொடுஞ்செயலை தவிர்க்கும் பொருட்டு தலைமை ஆளுநர் பெண்டிங் இந்நாட்டையும் இணைத்துக்கொண்டார்.

**குடகு**

குடகை ஆட்சிப்புரிந்த அரசர் வீரராஜா கொடுங்கோலராகத் திகழ்ந்தார். மக்களை காட்டு மிராண்டித்தனமாக நடத்தியதுடன், தனது உறவினர்களில் ஆண்பாலர் அனைவரையும் கொன்றார். வில்லியம் பெண்டிங் கர்னல் லிண்ட்சே என்பவரை குடகு தலைநகரான மெர்க்காராவுக்கு அனுப்பினார். **1834**ல் அரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு குடகு இணைத்துக் கொள்ளப்பட்டது.

**இரஞ்சித் சிங்குடன் உறவு**

இந்தியாவுக்கு ரஷ்ய படையெடுப்பு என்ற அச்சம் இருப்பதை முதலில் ஊகம் செய்தவர் வில்லியம் பெண்டிங் பிரபு. எனவே, பஞ்சாப் அரசர் மகாராஜா இரஞ்சித் சிங் மற்றும் சிந்துப் பகுதியின் அமீர்கள் ஆகியோருடன் நட்புறவு மேற்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்தார். இந்தியாவிற்கும் எந்தவொரு படையெடுப்பாளருக்கும் நடுவே ஆப்கானிஸ்தான் இடைப்படு நாடாக இருக்க வேண்டும் என்றும் பெண்டிங் விரும்பினார். பஞ்சாபின் தலைநகர் லாகூர். தலைமை ஆளுநரின் இருப்பிடம் கல்கத்தா. நல்லதொரு

தொடக்கமாக இவ்விருவருக்கும் இடையே பரிசுப் பொருட்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இதைத் தொடர்ந்து 1831 அக்டோபர் 25ல் பெண்டிங் பிரபுவும் இரஞ்சித் சிங்கும் சட்லஜ் நதிக்கரையிலிருந்த ரூபார் என்ற இடத்தில் முதன் முதலாக சந்தித்தனர். மிகவும் ஆடம்பரமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த சந்திப்பின்போது பெண்டிங்க் இரங்சித் சிங்குடன் தனது நட்பை உறுதி செய்து கொண்டார். இருவருக்குமிடையே சிந்து நதி படகுப் போக்குவரத்து உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன்படி, சட்லஜ் நதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டது.

மேலும், வணிகத் தொடர்புடைய உடன்படிக்கை ஒன்றுக்கும் இரஞ்சித் சிங்குடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. சிந்துவின் அமீர்களிடமும் இத்தகைய நட்பு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

### 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டத்தில் இருபது ஆண்டுகளுக்குப்பிறகு வணிகக் குழுவின் பட்டயம் புதுப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, 1793 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வணிகக் குழுவின் ஆயுட்காலத்தை மேலும் இருபது ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்த இச்சட்டம் ஆட்சியில் சில சிறு மாறுதல்களையும் செய்தது. 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம், இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்காக வணிகக் குழு ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கவேண்டும் என்று விதித்தது. மேலும் இருபது ஆண்டுகளுக்கு வணிகக் குழுவின் பட்டயம் புதுப்பிக்கப்பட்டது.

1833 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பட்டயச் சட்டம் முக்கியத்துவம் பெற்றதாகும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் அதிகார வரம்பெல்லையை இது வரையறை செய்தது. இச்சட்டத்தின் விதிகள் பெந்தாம் என்பவரின் தாராள மற்றும் பயன்பாட்டு தத்துவங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.

### இதன் முக்கிய பிரிவுகளாவன

1. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்தியாவில் தனது வாணிகத்தை தொடர அனுமதிக்கப்படவில்லை. இனி, அது பிரிட்டிஷ் அரசரின் அரசியல் முகவராக மட்டும் செயல்படும் என்று தெளிவாக்கப்பட்டது.

2. வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநர் இனிமேல் இந்தியாவின் தலைமை ஆளுநர் என்று அழைக்கப்படுவார். இதனால், இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் என்று கூட கூறலாம்.

3. தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்ட முதல் சட்ட உறுப்பினர் டி.பி. மெக்காலே என்பவராவார்.

4. இந்தியாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் மேதகு மன்னரின் குடிமக்களாக எவரும், தங்களது சமயம், பிறப்பிடம், குடிவகை அல்லது நிறம் காரணமாக எவ்வித பதவி அல்லது பணியில் இருப்பதை தடை செய்யக்கூடாது என இச்சட்டம் தெளிவாக வரையறுத்துக் கூறியது. பொது ஆட்சிப் பணிகள் இந்தியமயமாக்கப்படுவதற்கு இச்சட்டம்தான் அடிகோலியது எனலாம்.

இருபது ஆண்டுகளுக்குப்பிறகு 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதுவே பட்டயச் சட்டங்கள் வரிசையில் இறுதியானதாகும்.

**வில்லியம் பெண்டிங் பிரபுவின் சீர்திருத்தங்கள்**

இந்திய வரலாற்றில் வில்லியம் பெண்டிங் பிரபுவின் வருகை பலவிதத்தில் ஒரு புதிய சகாப்தத்தை தோற்றுவித்தது எனலாம். அவரது ஆட்சி ஏழு ஆண்டுகளே நீடித்தது என்ற போதிலும், பல்வேறு நிலையான சீர்திருத்தங்கள் அப்போது மேற்கொள்ளப்பட்டன. இவற்றை நிதித்துறை, ஆட்சித்துறை, சமூகம் மற்றும் கல்வி என்ற தலைப்புக்களாக வரையறுக்கலாம்.

**நிதித்துறை சீர்திருத்தங்கள்**

1828 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பதவியேற்றபோது இந்தியாவின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. கருவூலம் காலியாக இருந்தது. அரசின் நிதிநிலை அறிக்கை ஒரு மில்லியன் ரூபாய் பற்றாக்குறையுடன் காணப்பட்டது. எனவே உடனடியாக நிதிநிலைமையை சரிசெய்ய வேண்டிய கட்டாயம் தலைமை ஆளுநருக்கு இருந்தது. அதற்காக பெண்டிங் பல நடவடிக்கைகளை எடுத்தார்.

அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுவந்த ஊதியம் மற்றும் படிகள் குறைக்கப்பட்டதோடு அதிகப்படியான பணியாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இராணுவத்துறையில் நடைமுறையிலிருந்த பணிக்காலத்தின்போது வழங்கப்பட்ட இரட்டைப்படி (பேட்டா) முறையை ஒழித்தார். இத்தகைய சீர்திருத்தங்களினால், அவர் திரும்பிச் செல்லும்போது, கருவூலத்தில் 1.5 மில்லியன் ரூபாய் உபரியாக இருந்தது.

**ஆட்சித் துறை சீர்திருத்தங்கள்**

பெண்டிங் அறிமுகப்படுத்திய ஆட்சித் துறை சீர்திருத்தங்கள் அவரது அரசியல் முதிர்ச்சியையும் அனுபவத்தையும் பறை சாற்றியது. நீதித்துறையில், காரன்வாலிஸ் கொண்டு வந்த மாகாண மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் அகற்றப்பட்டன.

பெரும்பாலான வழக்குகள் நிலுவையில் இருந்தமைக்கு இந்த நீதிமன்றங்களே காரணமாக இருந்தன. அரசின் செலவு குறைந்தமையால் இயக்குநர்கள் இந்த நடவடிக்கையை உடனடியாக ஒப்புக்கொண்டனர். கீழ்மட்ட நீதிமன்றங்களில் அந்தந்தப் பகுதியின் மொழிகளிலேயே வழக்குகள் நடைபெற அனுமதிக்கப்பட்டது பெண்டிங்கின் மற்றொரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். மேலும் உயர்மட்ட நீதிமன்றங்களில் பாரசீக மொழிக்கு பதிலாக ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வருவாய்த் துறையிலும் பெண்டிங் தனது முத்திரையைப் பதித்து விட்டுச் சென்றார். ஆர்.எம்.பெர்ட் தலைமையில் வடமேற்கு மாகாணத்தில் வருவாய் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. நில உடமையாளர்கள் அல்லது நிலத்தை பயிரிடுபவர்களிடம் 30 ஆண்டுகால ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

**சமுக சீர்திருத்தங்கள்**

வில்லியம் பெண்டிங் கொண்டு வந்த சமுக சீர்திருத்தங்கள் பிரிட்டிஷ் இந்திய வரலாற்றில் அவரது பெயரை நிலைபெறச் செய்தன. சதிமுறை ஒழிப்பு, தக்கர்களை ஒடுக்குதல், பெண் சிசுக்கொலை தடுப்பு போன்றவை இவற்றில் அடங்கும்.

**சதிமுறை ஒழிப்பு**

கணவரின் சிதையிலேயே விதவையைத் தள்ளி கொன்றுவிடும் பண்டைய ‘சதி’ என்ற வழக்கம், இந்தியாவில் பல காலமாக பின்பற்றப்பட்டு வந்தது. மனிதாபிமானமற்ற இச்செயல் வட இந்தியாவில், குறிப்பாக வங்காளத்தில் பரவலாக காணப்பட்டது. வங்காளத்தில் ஒரேயாண்டில் அத்தகைய 800 நிகழ்வுகள் நடைபெற்றன என்ற செய்தி கேட்ட பெண்டிங் அதிர்ச்சியடைந்தார். இயற்கை நியதிக்கு மாறான இச்செயலை குற்றம் என்று கருதிய பெண்டிங் அவ்வழக்கத்தை ஒழித்துக்கட்ட முடிவு செய்தார். 1829 டிசம்பர் 4 ஆம் நாள் ‘விதிமுறை 17’ என்ற சட்டம் அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் ‘சதி’ என்ற உடன்கட்டையேறும் வழக்கம் சட்டப்படி ஒழிக்கப்பட்டது. சதிமுறையைப் பின்பற்றுவோர் சட்டப்படி நீதிமன்றத் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என இச்சட்டம் கூறியது. 1830 ஆண்டு இச்சட்டம் சென்னை, பம்பாய் மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

**தக்கர்களை ஒடுக்குதல்**

மக்களின் அன்றாட வாழ்வில் நிம்மதியேற்படுத்தும் விதத்தில் பெண்டிங் பிரபு மேற்கொண்ட பாராட்டத்தக்க நடவடிக்கை தக்கர்கள் என்னும் வழிப்பறி கொள்ளையர்களை ஒடுக்கியதாகும். 50 அல்லது 100 பேர் கொண்ட குழுக்களாக செயல்பட்ட தக்கர்கள், வணிகர்களாகவோ, யாத்ரீகர்களாகவோ மாறுவேடம் அணிந்து, பயணிகளின் கழுத்தை நெரித்துக்கொன்று வழிப்பறியில் ஈடுபடுவது வழக்கம், முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, மத்திய, வட இந்தியாவில் நிலவிய குழப்பத்தினால் இத்தகைய கொள்ளையர்களின் எண்ணிக்கை பெருகியது. 1830 ஆம் ஆண்டு தக்கர்களுக்கு எதிரான நடவடிக்கையை கர்னல் சீலீமேன் என்பவர் தொடங்கினார். ஐந்து ஆண்டுக்காலத்தில் கிட்டத்தட்ட 2000 பேர் பிடிபட்டனர். அவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் அந்தமான் நிக்கோபர் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தக்கர்களை ஒடுக்கும் பணியினை திறமையுடன் செய்த காரணத்தால், சர் வில்லியம் சீலீமேன் ‘தக்கீ சிலீமேன்’ என்று அழைக்கப்பட்டார்.

**பெண் சிசுக்கொலை**

பெண் சிசுக்கொலை என்ற இந்த வன்மையான மனித நேயமற்ற செயலை சில நாகரீகமுள்ளவர்களும் செய்து வந்தனர். ராஜபுதனம், பஞ்சாப், மாளவம், கட்ச் போன்ற பகுதிகளில் பெண் குழந்தைகளைக் கொல்லும் இந்த வழக்கம் பரவியிருந்தது. வங்காளத்தில் சவுகர் தீவில் நடைபெற்ற குழந்தை பலி சடங்கை ஒழிப்பதற்கு பெண்டிங் தீவிர நடவடிக்கையெடுத்தார். பெண் சிசுக்கொலையையும் தடை செய்தார். அதனை தண்டனைக்குரிய குற்றமாக அறிவித்தார்.

**ஆங்கிலக் கல்விமுறையை அறிமுகப்படுத்துதல்**

வில்லியம் பெண்டிங்கின் ஆட்சியில் ஆங்கிலக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும். கல்வி வளர்ச்சி குறித்து பரிந்துரைகள் செய்வதற்கு மெக்காலே பிரபு தலைமையில் அவர் குழுவை நியமித்தார். தனது அறிக்கையில், ஐரோப்பிய இலக்கியம் மற்றும் அறிவியலை இந்திய மக்களுக்கு ஆங்கில வழியில் கற்பிக்க வேண்டும் என்று மெக்காலே வலியுறுத்தினார். இந்த பரிந்துரையை வில்லியம் பெண்டிங் முழுமனதுடன் ஏற்றார். 1835 ஆம் ஆண்டு அரசின் தீர்மானம் ஆங்கிலத்தை இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் அறிவித்தது. அதே ஆண்டில் பெண்டிங் கல்கத்தா மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டினார்.

**வில்லியம் பெண்டிங் பற்றிய மதிப்பீடு**

வில்லியம் பெண்டிங் நேர்மையான, விருப்பு வெறுப்பற்ற, தாராள குணமுடைய, பகுத்தறிவுள்ள மனிதராகத் திகழ்ந்தார்.

சதி ஒழிப்பு, பெண் சிசுக்கொலை தடுப்பு போன்ற தனது சமூக சீர்திருத்தங்கள் மூலம் இந்து சமுதாயத்தில் காலம் காலமாக நிலவி வந்த கொடுமைகளை ஒழித்துக் கட்டினார். மற்றவர்கள் சொல்லால் மட்டும் கூறிவந்ததை பெண்டிங் தமது செயலால் நடத்திக் காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. சதி ஒழிப்பு குறித்த அரசு தீர்மானத்தை நிறைவேற்றும் போது தனது பதவிக்கு ஆபத்து வருவதைக்கூட அவர் பொருட்படுத்தவில்லை. அத்தகைய மனோதிடமும் நேர்மையும் அக்காலத்திய ஆட்சியாளர்களிடம் அரிதாகவே காணப்பட்டது. அவரது கல்வி சீர்திருத்தங்களால் இந்தியா ஒரு புதிய சகாப்தத்தில் அடியெடுத்து வைத்தது எனலாம்.

*வில்லியம் பெண்டிங்கைத் தொடர்ந்து ஆக்லாந்து பிரபு (1836-1842) தலைமை ஆளுநராக பதவியேற்றார். அவரது ஆட்சிக்காலத்தில் முதல் ஆப்கானியப் போர் (1836-1842) நடைபெற்றது. அவரது ஆப்கானியக் கொள்கை தோல்வியடையவே, பதவியிலிருந்து 1842ல் திருப்பியழைக்கப்பட்டார். பின்னர் ஆட்சி பொறுப்பேற்ற எல்லன்பரோ பிரபு ஆப்கானியப் போரை முடிவுக்கு கொண்டு வந்தார். சிந்துப்பகுதியை அவர் இணைத்துக் கொண்டார். அவரைத் தொடர்ந்து பதவிக்குவந்த ஹார்டிஞ்ச் பிரபு (1844-48) காலத்தில் முதல் ஆங்கிலேய - சீக்கியப்போர் நடைபெற்றது. லாகூர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.*

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற செய்தி :*

1. *வில்லியம் பெண்டிங், தலையிடாக் கொள்கையை பின்பற்றிய போது மைசூர் போன்ற அரசுகளை இணைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.*
2. *அவர் பஞ்சாப் அரசர் இரஞ்சித்சிங்குடன் நட்புடன் பழகி அமிர்தசரஸ் உடன்படிக்கையை செய்துகொண்டார்.*
3. *1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் சிறப்பு.*
4. *நிதித்துறை, ஆட்சித்துறை சீர்திருத்தங்கள் மூலம் பெண்டிங் திறமையான ஆட்சிக்கு வழிவகுத்தார்.*
5. *பெண்டிங் சமூக சீர்திருத்தங்களின் காலத்தை தொடங்கிவைத்தார். சதி ஒழிப்பு, தக்கர்களை ஒடுக்கியது, பெண் சிசுக்கொலை தடுப்பு ஆகியன அவற்றில் அடங்கும்.*
6. *அவரது கல்வி சீர்திருத்தங்கள் இந்தியாவை நவீனப் படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்தன.*

## பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்ட ஆண்டு

அ. 1833 ஆ. 1835

இ. 1837 ஈ. 1839

2. 'சதி' வழக்கம் இவரது ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது.

அ. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ. காரன் வாலிஸ் பிரபு

இ. வெல்லெஸ்லி பிரபு ஈ. வில்லியம் பெண்டிங் பிரபு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வேலூர் சிப்பாய் கலகம் தோன்றிய ஆண்டு ______________

2. ராணுவத் துறையில் வில்லியம் பெண்டிங் பிரபு ____________ முறையை ரத்து செய்தார்.

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மெக்காலே பிரபு | அ. | தக்கர்கள் |
| 2. | வீரராஜா | ஆ. | சட்ட உறுப்பினர் |
| 3. | வில்லியம் சீலிமேன் | இ. | பஞ்சாப் |
| 4. | இரஞ்சித் சிங் | ஈ. | கூர்க் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1773 ஆம் ஆண்டு ஒழுங்கு முறை சட்டம் வணிகக் குழுவின் பட்டயத்தை முப்பது ஆண்டுகளுக்குப்பிறகு புதுப்பிக்கவேண்டும் என விதித்தது.

ஆ. 1813 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாயை ஒதுக்கியது.

இ. 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் வில்லியம் பெண்டிங் பிரபுவை இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக்கியது.

ஈ. 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பிக்கப்பட்டது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. 1838ல் வில்லியம் பெண்டிங் பிரபு தலைமை ஆளுநராகப் பொறுப்பு ஏற்றார்.

2. வில்லியம் பெண்டிங் பிரபு கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. இரஞ்சித்சிங்

2. ‘சதி’

3. மெக்காலே பிரபு

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விவாதிக்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. இந்திய அரசுகள் மீது வில்லியம் பெண்டிங் பிரபு பின்பற்றிய கொள்கையை ஆய்க

2. ‘பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார்’ – கருத்துக் கூறுக.

# பாடம் – 6

## டல்ஹவுசி பிரபு (1848 – 1856)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தில் மாணவர் அறியப் போவது :*

1. *டல்ஹவுசி பின்பற்றிய இணைப்புக்கொள்கை.*
2. *பஞ்சாப் மற்றும் கீழ் பர்மா இணைக்கப்படுதல்*
3. *வாரிசு இழக்கும் கொள்கை இந்திய அரசுகள்மீது நடைமுறைப் படுத்தப்படுதல்.*
4. *முறைகேடான ஆட்சியை காரணம் காட்டி அயோத்தியை இணைத்தல்.*
5. *டல்ஹவுசியின் உள்நாட்டு சீர்திருத்தங்கள் ரயில்வே மற்றும் தந்தி அறிமுகம்.*
6. *கல்வி மற்றும் பிற சீர்திருத்தங்கள்.*

1848 ஆம் ஆண்டு டல்ஹவுசி பிரபு பதவியேற்றபோது அவர்தான் இந்தியாவில் பதவிவகித்த தலைமை – ஆளுநர்களிலேயே இளைய வயதுடையவராயிருந்தார். அவரது ஆரம்பகால வாழ்க்கை சிறப்புமிக்கதாகும். ஆக்ஸ்போர்டிலுள்ள கிறிஸ்து கல்லூரியில் கல்வி பயின்றவர். நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தார். இங்கிலாந்து பிரதமர் சர் ராபர்ட் பீல் என்பவரின் நம்பிக்கையைப் பெற்றுத் திகழ்ந்தார். வணிக வாரியத்தின் தலைவராக பொறுப்பு வகித்தபோது ரயில்பாதை வளர்ச்சிக்கு பாடுபட்டார். 1847 ஆம் ஆண்டு அவருக்கு இந்தியாவின் தலைமை ஆளுநர் பதவி வழங்கப்பட்டது. அதை ஏற்று 1848 ஜனவரியில் இந்தியாவுக்கு வந்தார்.



**டல்ஹவுசி பிரபு**

### இணைப்புக் கொள்கை

டல்ஹவுசி ஆட்சிக்காலத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் அவர் நடத்திய ‘இணைப்பு’களேயாகும். வணிகக் குழுவின் எல்லைகளை அவர் விரிவுபடுத்தியதற்கு அரசியல் ஆதிக்கம், பேரரசு விரிவாக்கம், வணிக மேம்பாடு, நிதி ஆதாரத்தைப் பெருக்குதல் போன்ற நோக்கங்கள் இருந்தன. தனது இணைப்புகளுக்கு அவர் வெவ்வேறு காரணங்களைக் கூறினாலும், இணைக்கப்பட்ட நாடுகளில் நிலவிய முறைகேடான ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதே அவரது முதன்மையான நோக்கமாக இருந்தது. குறிப்பாக அயோத்தி இணைப்பிற்கு இதுவே காரணமாகும். இணைக்கப்பட்ட நாடுகளில் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் அவர் உறுதியாக இருந்தார். அதே சமயம், இத்தகைய இணைப்புகளால் பேரரசுக்கு பாதுகாப்பு, வணிகம் மற்றும் நிதி ஆதாயங்கள் போன்ற நன்மைகளையும் அவர் கருத்தில் கொண்டிருந்தார். டல்ஹவுசி இந்தியாவிற்கு வரும்போதே இணைப்புக் கொள்கையை பின்பற்றியாகவேண்டும் என்ற எண்ணத்துடன் வந்தார் என்றும் கூறமுடியாது.

ஆனால், இணைப்புக் கொள்கையை பின்பற்றியதன் மூலம் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை மேலும் வலிமைப்படுத்தினார். பஞ்சாப், கீழ்பர்மா, மத்திய மாகாணத்தின் பெரும்பகுதி, அயோத்தி போன்றவை அவரால் இணைத்துக் கொள்ளப்பட்டவற்றுள் குறிப்பிடத்தக்கதாகும்.

**பஞ்சாப் இணைப்பு**

1849 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது ஆங்கிலேய சீக்கியப்போரின் முடிவில் டல்ஹவுசி பஞ்சாபை இணைத்துக் கொண்டார். பஞ்சாபின் நிர்வாகத்தை அவர் திறமையான வகையில் சீரமைத்தார். அம்மாகாணம் சிறு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு மாவட்ட அதிகாரிகள் கட்டுப்பாட்டில் விடப்பட்டது. அவர்கள் துணை ஆணையர்கள் என அழைக்கப்பட்டனர். இந்த துணை ஆணையர்கள் தமது உதவியாளர்கள் மூலம் மக்களுடன் நெருங்கிய நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். வருவாய் மற்றும் நீதித்துறைகள் ஒன்றிணைக்கப்பட்டன. இதனால் அதிகாரத்துடன் கூடிய பொறுப்பு உறுதி செய்யப்பட்டது. மக்களின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப சட்டங்களும் நடைமுறைகளும் எளிமைப்படுத்தப்பட்டன. பஞ்சாபின் முழு ஆட்சியதிகாரமும் முதன்மை ஆணையரிடம் வழங்கப்பட்டது. உண்மையில், தலைமை ஆளுநரே பஞ்சாபின் ஆட்சியாளராகத் திகழ்ந்தார். பஞ்சாபின் ஆட்சியில் லாரன்ஸ் சகோதரர்கள் ஆற்றிய சேவைகள் சிறப்பானவையாகும். மூன்றே ஆண்டுகளுக்குள் அந்த மாகாணத்தில் முழு அமைதி ஏற்படுத்தப்பட்டது. உள்நாட்டு, அயல்நாட்டு பகைவர்களிடமிருந்தும் அது பாதுகாக்கப்பட்டது. 1859ல், சர்ஜான் லாரன்ஸ் பஞ்சாபின் துணை ஆளுநராகப் பதவியேற்றார்.

**இரண்டாவது பர்மியப் போரும் கீழ்பர்மா இணைக்கப்படுதலும்**

1852 ஆம் ஆண்டு ரங்கூனில் ஏற்பட்ட வாணிகப் பூசல்களே பிரிட்டிஷாருக்கும் பர்மியருக்கும் இடையே மீண்டும் பகைமை தோன்ற காரணமாகும். இரண்டாம் பர்மியப் போரின் முடிவில் (1852) டல்ஹவுசி ‘பெகு’ என்ற இடத்தை தலைநகராகக் கொண்ட கீழ் பர்மாவை இணைத்துக்கொண்டார். மேஜர் ஆர்தர் பைரே என்பவர் புதிய மாகாணத்துக்கு ஆணையராக நியமிக்கப்பட்டார். அவரது நிர்வாகம் திறமையானதாக விளங்கியது. கீழ் பர்மாவை இணைத்துக் கொண்டதால் பிரிட்டனுக்கும் மிக்க பயனுடையதாக இருந்தது. இப்போரின் போது கைப்பற்றப்பட்ட ரங்கூன் ஆசியாவின் மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றாகும்.

**வாரிசு இழக்கும் கொள்கை**

அமைதி வழியில் நாடுகளை இணைப்பதற்கு ஏதேனும் தருணம் கிடைக்குமானால் அதை டல்ஹவுசி தக்க வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டார். இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக்குழு வலிமை பெற்ற அரசாக உருவெடுத்து வந்தது. இந்திய ஆட்சியாளர்களுடன் அது பல ஒப்பந்தங்களை செய்து கொண்டது. அவர்களையும் அவர்களது வாரிசுகளையும் ஆதரிப்பதாக உறுதிகொடுத்து அதற்குப்பதில் பல சலுகைகளை வணிகக் குழுவின் ஆட்சி பெற்று வந்தது. இத்தகைய ஒப்பந்தங்களை பிரிட்டிஷார் விரும்பியதால், டல்ஹவுசி மேலும் வலிமை பெற விரும்பினார்.

இந்து சட்டப்படி ஒருவர் தனக்கு ஆண் வாரிசு இல்லையெனில், ஒரு புதல்வரை தத்தெடுத்துக்கொண்டு தனது சொத்துக்களை அவருக்கு உரிமையாக்கலாம். ஆனால், தலைமை அரசால் (பிரிட்டிஷ் அரசு) பாதுகாக்கப்பட்டுவரும் ஒரு இந்து அரசர் தனக்குப் பிறகு அரச பதவியேற்பதற்கு ஒரு ஆண்வாரிசை தத்து எடுக்க முடியுமா என்ற கேள்வி எழுந்தது. பொதுவாக, பிரிட்டிஷ் அரசின் அனுமதியோடுதான் அவ்வாறு தத்து எடுப்பது வழக்கமாக இருந்து வந்தது.

டல்ஹவுசியின் கொள்கைப்படி பிரிட்டிஷ் அரசு அவ்வாறு தத்து எடுப்பதற்கு அனுமதி மறுக்குமானால், அந்த அரசுக்கு வாரிசு இல்லாமல் போகும். எனவே, வாரிசு இல்லா அரசு பிரிட்டிஷ் ஆட்சியின் ஒரு பகுதியாக இணைக்கப்படும் என்று டல்ஹவுசி கருதினார். ஒரு தனி நபர் தத்து எடுத்து தனது தனிப்பட்ட சொத்துக்களுக்கு அவரை வாரிசு ஆக்குவதற்கும், தத்து எடுக்கப்பட்டவர் நாட்டை ஆளும் உரிமை பெறுவதற்கும் வேறுபாடு உள்ளது என்று டல்ஹவுசி வாதிட்டார். டல்ஹவுசியின் இக்கொள்கை வாரிசு இழப்புக் கொள்கை என அழைக்கப்படுகிறது.

டல்ஹவுசி தனது வாரிசு இழக்கும் கொள்கையை பயன்படுத்தி 1848ல் ‘சதாரா’வை பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக் கொண்டார். ஜான்சி, நாக்பூர் ஆகியன 1854ல் இணைத்துக் கொள்ளப்பட்டன. இவற்றை இணைத்துக் கொண்டதால், மத்திய மாகாணங்களின் பெரும்பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கட்டுப்பாட்டில் வந்தது. இந்த புதிய மாகாணம் 1861 ஆம் ஆண்டிலிருந்து ஒரு முதன்மை ஆணையரின் தலைமையில் நிர்வகிக்கப்பட்டது.

வாரிசு இழக்கும் கொள்கை சட்டத்துக்கு புறம்பானது என்று கூற முடியாவிட்டாலும், அக்கொள்கையை டல்ஹவுசி நடைமுறைப்படுத்தியதே கவலையளிக்கும் ஒரு புதிய கண்டுபிடிப்பாகும். சதாரா, ஜான்சி, நாக்பூர் இணைப்புகளால் பிரிட்டிஷாருக்கு பெருத்த நன்மை விளைந்தது. எனினும், வாரிசு இழக்கும் கொள்கையை தமது நாடிணைக்கும் கொள்கைக்கு ஒரு கருவியாக பயன்படுத்தியதற்கு டல்ஹவுசி மீது குற்றம் சாட்டப்பட்டது.

1857 ஆம் ஆண்டு பெரும் கலகத்திற்குப்பிறகு வாரிசு இழக்கும் கொள்கை திரும்பப் பெறப்பட்டது.

*1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்தின்போது இக்கொள்கையால் பாதிக்கப்பட்ட ஜான்சி ராணி லட்சுமிபாய் பிரிட்டிஷாருக்கு எதிராக தீவிரமாகப் போரிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.*

### அயோத்தி இணைப்பு

பிரிட்டிஷாருக்கும் அயோத்தி அரசுக்கும் இடையிலான உறவு 1765 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட **அலகாபாத் உடன்படிக்கை**யிலிருந்தே தொடங்குகிறது. வாரன் ஹேஸ்டிங்ஸ் தொடங்கி பல தலைமை ஆளுநர்கள் தனது நிர்வாகத்தை மேம்படுத்துமாறு அயோத்தி நவாப்பிடம் அவ்வப்போது கேட்டுக் கொண்டனர். ஆனால், அயோத்தியில் நிர்வாகம் மோசமானதாகவே இருந்து வந்தது. அயோத்தி நவாப் பிரிட்டிஷாருக்கு மிகவும் கடமைப்பட்டவராக இருந்தமையால் அயோத்தியை அவர்கள் இணைத்துக் கொள்ளாமல் இருந்தனர். 1851 ஆம் ஆண்டு, லக்னோவில் தூதுவராக இருந்த வில்லியம் சீலீமேன் தனது அறிக்கையில் ‘மக்கள் படும் துன்பங்களையும் உணர்வுகளற்ற ஆட்சி சீர்கேடுகளும் அயோத்தியில் நிலவுகிறது என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், அயோத்தியை இணைக்கும் கொள்கைக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். அயோத்தியின் நிலைமையை ஆய்வு செய்த டல்ஹவுசி 1856ல் அதனை இணைத்துக் கொண்டார். நவாப் வாஜித் அலி என்பவருக்கு ஆண்டுக்கு 12 லட்சம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இணைக்கப்பட்ட பகுதி ஒரு முதன்மை ஆணையரின் கட்டுப்பாட்டில் விடப்பட்டது.

டல்ஹவுசி மேற்கொண்ட இணைப்புகளிலேயே இறுதியானது அயோத்தி இணைப்பாகும். இதனால், பெரும் அரசியல் ஆபத்து உருவாயிற்று. அயோத்தி இணைப்பு

முஸ்லிம்களிடையே பெருத்த எரிச்சலை ஏற்படுத்தியது. மேலும், பிரிட்டிஷ் படையிலிருந்த இந்திய வீரர்கள் பெரும்பாலோர் அயோத்தியைச் சேர்ந்தவர்கள். இணைப்புக்கு முன்பு அவர்கள் சிறப்பானதொரு நிலையைப் பெற்றிருந்தனர். அயோத்தி இணைப்பினால், அவர்கள் தங்களது கவுரவத்தை இழந்துவிட்டதாக கருதினர். சிப்பாய் கலகத்தின் போது அவர்கள் பிரிட்டிஷாருக்கு எதிராகத் திரும்பினர். இவ்வாறு பல்வேறு வழிகளில் அயோத்தி இணைப்பு 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழிவகுத்தது.

**டல்ஹவுசி மேற்கொண்ட உள்நாட்டு சீர்திருத்தங்கள்**

டல்ஹவுசி கைப்பற்றிய நிலப்பகுதிகளால் இந்தியாவின் வரைபடமே மாற்றம் பெற்றது எனலாம். அவர் ஒரு படையெடுப்பாளர் மட்டுமல்ல சிறந்த ஆட்சியாளரும்கூட. வங்காளத்துக்கென தனியாக துணை ஆளுநர் நியமிக்கப்பட்டதால், டல்ஹவுசி தனது முழு கவனத்தை நிர்வாகத்தில் செலுத்த முடிந்தது.

புதிய மாகாணங்களை செம்மைப்படுத்தி ஒரு நவீன அரசாக அவற்றை மாற்றியது அவரது மிகப்பெரும் சாதனையாகும். புதிதாக வெல்லப்பட்ட பகுதிகளை மத்திய கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வகையில் **"சீரமைக்கப்படாத அமைப்பு"** (Non-Regulation System) என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இதன்படி, புதிதாக வெல்லப்பட்ட பகுதி ஒவ்வொன்றிலும் ஒரு ஆணையர் நியமிக்கப்பட்டார். இந்த ஆணையர்களை தமது நேரடிக்கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். வங்காள தரைப்படையின் தலைமையகத்தை கல்கத்தாவிலிருந்து மீரட்டுக்கு மாற்றினார். சிம்லா பிரிட்டிஷ் ராணுவத்தின் நிரந்தர தலைமையிடமாக இருந்தது.

**ரயில் பாதைகள் அறிமுகம்**

இந்தியாவில் ரயில்பாதைகள் அறிமுகத்தால் பொருளாதாரத்தில் ஒரு புதிய சகாப்தமே தோன்றியது. பிரிட்டிஷார் அதிக அக்கரையுடன் செயல்பட்டு விரைவாக ரயில்பாதைகளை அமைக்க முற்பட்டதற்கு மூன்று முக்கிய காரணங்களைக் கூறலாம். முதலாவது வாணிப வசதி, இரண்டாவது நிர்வாக வசதி, மூன்றாவது பாதுகாப்பு வசதி.

கலகம் போன்ற குழப்பங்களின் போது துருப்புகளை அனுப்புவதற்கு ரயில் பாதைகள் பெரிதும் பயன்பட்டது. ரயில்பாதை வளர்ச்சிக்கு டல்ஹவுசியின் பங்களிப்பு போற்றத்தக்கதாகும். 1853ல் அவர் 'ரயில்வே அறிக்கை' ஒன்றை தாமே தயாரித்தார். இந்தியாவின் எதிர்கால ரயில்பாதை கொள்கையை இது வடிவமைத்தது. "உத்திரவாத முறை"யின் கீழ் அவர் ரயில்பாதை அமைக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். இதன்படி, ரயில்பாதைகளில் முதலீடு செய்தவர்களுக்கு குறைந்தபட்சம் 54 சதவீத வட்டி உறுதியளிக்கப்பட்டது. ஒப்பந்த காலம் முடிந்தவுடன் ரயில்பாதைகளை திரும்ப வாங்கிக் கொள்ளும் உரிமையை அரசு தக்க வைத்துக்கொண்டது. பம்பாயிலிருந்து தானே வரை செல்லும் முதல் ரயில்பாதை 1853ல் தொடங்கப்பட்டது. கல்கத்தாவையும் ராணிகஞ்ச் நிலக்கரி சுரங்கத்தையும் இணைக்கும் ரயில்பாதை 1854 ஆம் ஆண்டிலும், மற்றும் சென்னை அரக்கோணம் இடையிலான ரயில்பாதை 1856 ஆம் ஆண்டிலும் தொடங்கப்பட்டன.

*உலகின் முதல் ரயில்பாதை 1825 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப்பட்டது.*

### தந்தி

அதேபோல், தந்தியின் பயன்பாட்டினால் தகவல் தொடர்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இந்தியாவில் டல்ஹவுசி இதற்காக மேற்கொண்ட பணிகள் சிறப்பானவையாகும். 1852 ஆம் ஆண்டு ஒ ஷாகன்னசே என்பவர் தந்தித் துறையின் முக்கிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நாட்டின் முக்கிய நகரங்களான கல்கத்தா, பெஷாவர், பம்பாய், சென்னை போன்றவை தந்தி மூலம் இணைக்கப்பட்டன. டல்ஹவுசி தாயகம் திரும்புமுன் சுமார் 4000 மைல்கள் நீளத்திற்கு தந்திக்கம்பிகள் நிறுவப்பட்டன. 1857 ஆம் ஆண்டு கலகத்தின்போது தந்திமுறை ஆங்கிலேயருக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. அதன் ராணுவ மதிப்பு அப்போதுதான் பெரிதும் உணரப்பட்டது.



**அஞ்சல் துறை**

தற்கால அஞ்சல் துறைக்கு அடித்தளம் அமைத்தவர் டல்ஹவுசி பிரபு ஆவார். 1854ல் ஒரு புதிய அஞ்சலகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனால், தூரத்தைக் கணக்கில் எடுக்காமல், இந்தியா முழுவதும் செல்லக்கூடிய ஒரே மாதிரியாக அரை அணா அஞ்சல் அட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. அஞ்சல் தலைகளும் முதன் முறையாக அறிமுகம் செய்யப்பட்டன.

**கல்வி**

கல்வி வளர்ச்சியிலும் டல்ஹவுசி தனது கவனத்தை செலுத்தினார். சர் சார்லஸ் உட் என்பவரின் 1854 ஆம் ஆண்டு 'கல்வி அறிக்கை' 'இந்தியாவின் அறிவுப்பட்டயம்' எனக் கருதப்படுகிறது. தொடக்கக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்ற அனைத்து நிலை கல்வி வளர்ச்சிக்கும் ஒரு செயல் திட்டத்தை இது அளித்தது. சார்லஸ் உட் கருத்துக்கள் முழுவதையும் டல்ஹவுசி ஒப்புக்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தார். கல்வித் துறைகள் சீரமைக்கப்பட்டன. கல்கத்தா, பம்பாய், சென்னைப் பல்கலைக் கழகங்கள் 1857 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன.

**பொதுப் பணித்துறை**

டல்ஹவுசி காலத்திற்கு முன்பு பொதுப் பணித்துறையின் அலுவல்களை ராணுவ வாரியம் கவனித்து வந்தது. டல்ஹவுசி தனியாக ஒரு பொதுப் பணித்துறையை ஏற்படுத்தி, கால்வாய்கள் வெட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும் கூடுதல் நிதியை ஒதுக்கினார். 1854ல் மேல் கங்கைக் கால்வாய் பணி நிறைவடைந்தது. பல பாலங்கள் கட்டப்பட்டன. பொதுப்பணித் துறையை நவீனப்படுத்தியன் மூலம் இந்தியாவின் பொறியியல் பணித்துறைக்கு டல்ஹவுசி அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

**டல்ஹவுசி பற்றிய மதிப்பீடு**

1856ல் டல்ஹவுசி இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பினார். அடுத்த ஆண்டிலேயே சிப்பாய் கலகம் வெடித்தது. அதற்கு அவரது இணைப்புக் கொள்கையே காரணம் என விமர்சிக்கப்பட்டது. இந்தியாவில் ஓயாமல் பணி செய்தமையால், நோய்வாய்ப்பட்ட டல்ஹவுசி 1860ல் இறந்தார். அவர் ஒரு திறமையான ஆட்சியாளர், தொலைநோக்கு பார்வை கொண்டவர் என்பதில் ஐயமில்லை. பிரிட்டிஷ் இந்தியாவின் பரப்பை விரிவுபடுத்தி வலிமையை ஏற்படுத்தினார். பலதுறைகளிலும் வளர்ச்சிக்கான சகாப்தத்தை அவர் தொடங்கி வைத்தார். ரயில் பாதை மற்றும் தந்தித் துறைகளின் தந்தை என்று அவரைத் கருதலாம். இந்தியாவில் நவீன மயமாக்கலை அவர் தொடங்கி வைத்தார். 'நவீன இந்தியாவை உருவாக்கியவர்' என்றும் அவர் புகழப்படுகிறார்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை கற்றபின் மாணவர் அறிந்து கொள்வது :*

1. *அயோத்தி போன்ற இந்திய அரசுகள்மீது டல்ஹவுசி பின்பற்றிய இணைப்புக்கொள்கை அங்கு நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டது.*
2. *பஞ்சாப், கீழ்பர்மா மற்றும் மத்திய இந்தியப் பகுதிகளை அவர் இணைத்துக் கொண்டது பிரிட்டிஷ் பேரரசை விரிவுபடுத்தும் கொள்கையின் அடிப்படையில்தான்.*
3. *தனது இணைப்புக் கொள்கைக்கு வாரிசு இழப்புக் கொள்கையை ஒரு கருவியாக டல்ஹவுசி பயன்படுத்திக் கொண்டார்.*
4. *ரயில் பாதைகள், தந்தி போன்ற நவீன தகவல் தொடர்பு முறைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம் டல்ஹவுசி ஒரு முற்போக்கு சீர்திருத்த வாதியாகத் திகழ்கிறார்.*
5. *டல்ஹவுசி பற்றிய ஒரு தலைப்பட்சமற்ற மதிப்பீட்டை மாணவர் கொடுக்க இயலும்.*

## பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. டல்ஹவுசி பிரபு பஞ்சாபை இணைத்துக்கொண்ட ஆண்டு

அ. 1839 ஆ. 1849

இ. 1853 ஈ. 1856

2. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

அ. பர்மா ஆ. பஞ்சாப்

இ. வங்காளம் ஈ. மைசூர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பம்பாய் – தாணாவை இணைத்த முதல் ரயில்பாதை திறக்கப்பட்ட ஆண்டு____________

2. நவீன அஞ்சல் முறையை தொடங்கி வைத்தவர் ______________

### III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | வுட் அறிக்கை | அ. | 1857 |
| 2. | இரண்டாம் பர்மியப் போர் | ஆ. | 1856 |
| 3. | அயோத்தி இணைப்பு | இ. | 1852 |
| 4. | சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்படுதல் | ஈ. | 1854 |

### IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது

அ. வெல்லெஸ்லி பிரபு வாரிசு இழக்கும் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.

ஆ. வாரிசு இழக்கும் கொள்கை சட்டபூர்வமாகக் கருதப்பட்டது.

இ. கீழ் பர்மாவை இணைப்பதற்கு வாரிசு இழப்புக் கொள்கை பயன்படுத்தப்பட்டது.

ஈ. 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்குப்பின் வாரிசு இழக்கும் கொள்கை திரும்பப் பெறப்பட்டது.

### V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. 1850ல் ஒ ஷாகன்னசே தந்தித்துறையின் முக்கிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.
2. 1853ல் பம்பாய்க்கும் தாணாவுக்கும் இடையேயான முதல் இரயில் போக்குவரத்து துவக்கப்பட்டது.

### VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. வுட் அறிக்கை
2. இரண்டாம் பர்மியப் போர்
3. டல்ஹவுசியின் அஞ்சல்துறை சீர்திருத்தங்கள்

### VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. டல்ஹவுசி பிரபு அயோத்தியை இணைத்ததை பற்றி விவாதிக்க.
2. வாரிசு இழக்கும் கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.

### VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. டல்ஹவுசி பிரபுவின் நாடிணைப்பு கொள்கையை – ஆய்க.
2. டல்ஹவுசி பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

# பாடம் – 7

# வருவாய் நிர்வாகம், பிரிட்டிஷாரின் பொருளாதாரக் கொள்கை

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தில் மாணவர் அறிந்துகொள்ளப் போவது :*

1. *பிரிட்டிஷாரின் வேளாண் கொள்கை*
2. *பிரிட்டிஷார் அறிமுகப்படுத்திய பல்வேறு நிலவருவாய் திட்டங்கள்*
3. *வருவாய் நிர்வாகத்தின் நிறை குறைகள்*
4. *கைத்தொழில்கள் மீதான பிரிட்டிஷாரின் கொள்கை*
5. *இந்திய கைத்தொழில்கள் அழிவுக்கான காரணங்கள்*

**பிரிட்டிஷாரின் வேளாண் கொள்கை**

இந்தியா வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடு என்பது அனைவரும் அறிந்ததே! பெரும்பான்மை மக்கள் தங்களின் வாழ்வாதாரமாக வேளாண்மையை நம்பியுள்ளனர். மகசூல் நன்றாக இருந்தால் செல்வம் செழிக்கும். இல்லையேல் பசியும் பஞ்சமும் தலைவிரித்தாடும்.

18ஆம் நூற்றாண்டுவரை, இந்தியாவில் வேளாண்மைக்கும் குடிசைத் தொழில்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. உலகின் பெரும்பாலான நாடுகளைவிட இந்தியா வேளாண்மையில் செழித்திருந்தது. அதேபோல் கைத்தொழில் உற்பத்தியிலும் உலகின் முக்கிய இடத்தை அது பெற்றிருந்தது. ஆனால், பிரிட்டிஷார் கைத்தொழிலை நசுக்கியதோடு, புதிய நில உடைமை முறைகள், வருவாய் கொள்கையை அறிமுகப்படுத்தி வேளாண் கட்டமைப்பையே மாற்றியமைத்தனர்.

இந்தியாவின் தேசிய வருமானம், அயல்நாட்டு வாணிபம், தொழில் விரிவாக்கம் போன்ற பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளும் நாட்டின் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்றன. ஆனால் பிரிட்டிஷாரின் கொள்கைகள் நிலவரியை எப்படி வசூலிப்பது என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. இந்தியக் குடியானவர்களின் நலன்களை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. காலங்காலமாக பின்பற்றப்பட்டு வந்த வருவாய் முறை புறக்கணிக்கப்பட்டது. அதற்குப் பதில் வருவாய் திரட்டுகின்ற இரக்கமற்ற கொள்கையை அவர்கள் பின்பற்றினார்கள்.

தங்களது வருகைக்குப்பின், பிரிட்டிஷார் மூன்று வகை நிலஉடைமை முறைகளை பின்பற்றினர். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த மொத்த நிலப்பரப்பில் சுமார் 19 சதவிகிதம் ஜமீன்தாரி முறை அல்லது நிலையான நிலவரித் திட்டத்தின்கீழ் இருந்தது. வங்காளம், பீகார், காசி, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் நடுப்பகுதி, வடக்கு கர்னாடகம் ஆகிய பகுதிகள் இவற்றில் அடங்கும். சுமார் 30 சதவீகித நிலப்பரப்பில்

மகல்வாரி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் பெரும்பகுதி, மத்திய மாகாணங்கள், பஞ்சாப் ஆகிய பகுதிகளில் ஒரு சில மாற்றங்களுடன் இம்முறை பின்பற்றப்பட்டது. எஞ்சிய 51 சதவிகித நிலப்பரப்பில் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை, பம்பாய் மாகாணங்கள், அஸ்ஸாம், பிரிட்டிஷ் இந்தியாவின் பிற பகுதிகள் இம்முறையின் கீழ் வந்தன.

**நிலையான நிலவரித்திட்டம்**

காரன்வாலிஸ் பிரபுவின் மிக முக்கியமான நிர்வாக சீர்திருத்தம் அவர் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய நிலையான நிலவரித் திட்டமாகும். பின்னர், இது பீகார், ஒரிசா பகுதிக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வாரன் ஹேஸ்டிங்ஸ் அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவருக்கு ஆண்டுக் குத்தகை விடும் முறையை அறிமுகப்படுத்தியது நமக்கு நினைவிருக்கும். இதனால், நிர்வாகக் குழப்பம் ஏற்பட்டது.

காரன்வாலிஸ் நியமனத்தின்போது, வணிகக்குழு மற்றும் சாகுபடியாளர்கள் ஆகிய இருவரது நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நிலவருவாய் திட்டத்தில் நிலவும் சிக்கல்களுக்கு நிறைவான, நிலையான தீர்வு காணும்படி இயக்குநர்கள் அவருக்கு அறிவுறுத்தினர். எனவே, தலைமை ஆளுநர் பொறுப்பேற்றவுடன் அவர் வங்காளத்தில் நிலவிய நிலஉடைமை மற்றும் குத்தகை ஆகிய விவரங்களை ஆய்வு செய்தார். இதற்கு மூன்றாண்டு காலம் பிடித்தது. தனது சக பணியாளர்களான சர் ஜான் ஷோர், ஜேம்ஸ் கிராண்ட் போன்றோருடன் நீண்ட விவாதம் நடத்திய பிறகு அவர் ஆண்டுக் குத்தகை விடும் முறையை இரத்து செய்வது என முடிவெடுத்தார். அதற்குபதில் பத்து ஆண்டுகளுக்கு குத்தகை என்ற முறையை நடைமுறைப்படுத்தினார். இதுவே, பின்னர் நிரந்தரமாக அறிவிக்கப்பட்டது. நிரந்தர நிலவரித் திட்டத்தின் முக்கிய கூறுகள் :

1. வங்காளத்தின் ஜமீன்தார்கள், அவர்கள் முறையாக கிழக்கிந்திய வணிகக் குழுவிற்கு வரி செலுத்தும் காலம் வரை, நிலத்துக்கு உடைமையாளர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

2. வணிகக் குழுவிற்கு ஜமீன்தார்கள் செலுத்த வேண்டிய வரி நிலையாக நிர்ணயிக்கப்பட்டு, அது எந்த சூழ்நிலையிலும் உயர்த்தப்பட மாட்டாது என்றும் உறுதியளிக்கப்பட்டது. அதாவது கிழக்கிந்திய வணிகக்குழு மொத்த வருவாயில் 89 சதவிகிதத்தை எடுத்துக்கொண்டு எஞ்சியதை ஜமீன்தார்களுக்கு விட்டுக் கொடுத்தது.

3. நிலத்தை உழுத குடியானவர்கள் குத்தகையாளர்களாகக் கருதப்பட்டனர்.

4. இத்திட்டத்தின்படி, ஆட்சித்துறை, நீதித்துறை பொறுப்புகளிலிருந்து ஜமீன்தார்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

மிகவும் அவசர அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதற்காக, காரன் வாலிசின் நிலையான நிலவரித்திட்டம் பெரிதும் விமர்சிக்கப்பட்டது. நிலங்களை அளக்கவோ அல்லது அவற்றின் மதிப்பை ஆய்வு செய்யவோ எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பது இத்திட்டத்தின் மிகப்பெரிய குறைபாடாகும். ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வந்த வரிகளின் அடிப்படையில் ஏறத்தாழ அரைகுறையாகவும் வரி மதிப்பீடு செய்யப்பட்டது. ஜமீன்தார்களும், உழவர்களும் இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டனர். இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட வரித் தொகை மிகவும் அதிகமாக இருந்தமையால் பல ஜமீன்தார்கள் வரி கட்டத் தவறினர். அவர்களுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களது

நிலை மோசமாகியது. அதே சமயம் பணவசதி மிக்க ஜமீன்தார்கள் ஆடம்பர வாழ்க்கை நடத்தினர், கிராமங்களைவிட்டு நகரங்களுக்கு குடிபெயர்ந்தனர். வரி வசூலிக்கும் பொறுப்பை தங்களது முகவர்களிடம் விட்டுச் சென்றதால், உழவர்களை அவர்கள் கசக்கிப் பிழிந்து சட்டத்துக்குப் புறம்பான வரிகளை அவர்களிடமிருந்து வசூலித்தனர். இதனால், குடியானவர்கள் பெரும் துன்பங்களை அனுபவித்தனர். காரன்வாலிஸ் கொண்டுவர எண்ணிய நட்புமிக்க நிலப்பண்ணை முறை தோல்வியடைந்தது என்றே கூறவேண்டும். ஜமீன்தாரி வர்க்கம் உழவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்று பேடன் பவுல் குறிப்பிடுகின்றார். தொடக்கத்தில், வணிகக் குழுவிற்கு நிதியளவில் பயன்கிடைத்த போதிலும், தொலைநோக்கில் வணிகக் குழுவிற்கு பெருத்த நட்டமே ஏற்பட்டது. நிலங்களில் உற்பத்தி பெருகினாலும்கூட நிலவரி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டதால் வருவாய் சொற்பமாகவே இருந்தது. பிரிட்டிஷாருக்கு முன்பு இருந்த முறைப்படி விளைச்சலில் ஒரு பங்கு நிலவரியாக நிர்ணயிக்கபட்டிருந்ததை நாம் இங்கே நினைவு கூறவேண்டும்.

இருப்பினும், வங்காள அரசுக்கும் ஜமீன்தார்களுக்கும் இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. சீரான வருமானம் கிடைத்ததால் வணிகக் குழுவின் அரசாங்கம் நிலையாக இயங்க முடிந்தது. ஜமீன்தார்கள் குத்தகைதாரர்களின் உழைப்பில் செல்வச் செழிப்பில் திளைத்தனர்.

**இரயத்துவாரி முறை**

சென்னை, பீகார், பம்பாய், அஸ்ஸாம் பகுதிகளில் இரயத்துவாரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சர் தாமஸ் மன்றோ சென்னை மாகாணத்தில் இதனைக் கொண்டு வந்தார். இந்த முறையின்கீழ் குடியானவரே நிலத்தின் உடைமையாளராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். குடியானவருக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஜமீன்தார் போல எந்தவொரு இடைத்தரகரும் இல்லை. குடியானவர் தொடர்ந்து வரிசெலுத்தும் காலம் வரை அவர் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தபட மாட்டார். மேலும், நிலவரி 20 முதல் 40 ஆண்டுகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்டது. ஒவ்வொரு குடியானவரும் அரசாங்கத்திற்கு தாமே நேரடியாக வரி செலுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இருப்பினும், இந்த திட்டமும் தோல்வியிலேயே முடிந்தது. ஒரு ஒழுங்கான முறையில் வரிவசூலிப்பது கடினமாக இருந்தது. வரி கட்டாவிட்டாலோ, தாமதமானாலோ, வருவாய் அதிகாரிகள் கடுமையான முறைகளைப் பயன்படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மகல்வாரி முறை**

பஞ்சாப், மத்திய மாகாணங்கள், வடமேற்கு மாகாணங்களில் சில பகுதிகள் ஆகியவற்றில் 1833 ஆம் ஆண்டு மகல்வாரி முறை அறிமுகம் செய்யப்பட்டது. இம்முறையின்படி, கிராமம் அல்லது ஓரிரு கிராமங்கள் அடங்கிய மகல் அரசுக்கு வரி செலுத்தும் பொறுப்பை மேற்கொள்ளும் கிராமத்திலுள்ள நிலங்கள் கிராம சமுதாயத்துக்கே சொந்தம் என்பதால், அரசாங்கத்துக்கு வரிசெலுத்த வேண்டிய பொறுப்பும் கிராமத்தையே சார்ந்தது என்று விதிக்கப்பட்டது. வரி நிர்ணயம் செய்வதற்கு முன்பு கிராம நிலங்கள் அனைத்தும் அளக்கப்பட்டன. மகல்வாரி திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வரியும் அதிகபட்சமாகவே காணப்பட்டது.

இத்திட்டத்தின்படி கிராம சமுதாயத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தரகர்கள் எவரும் இல்லை. சில இடங்களில் நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. ஆனால், அவற்றின் பலன்கள் அனைத்தும் அரசாங்கத்துக்கே கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்திய கைத்தொழில்கள்மீது பிரிட்டிஷாரின் கொள்கை**

16 ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு ஐரோப்பிய வணிகக் குழுக்கள் இந்தியாவிற்கு வரத்தொடங்கின. தொடக்கத்தில் அவர்களுக்குள் பலத்த வாணிகப் போட்டி நிலவியது. இந்திய வணிகத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர அவர்கள் ஒவ்வொருவரும் பாடுபட்டனர். ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக் குழுவும் அத்தகைய நோக்கத்தோடுதான் செயல்பட்டது. தனது முற்றுரிமையை நிலைநாட்டி மொத்த லாபத்தையும் தாமே பெறவேண்டும் என அது பாடுபட்டது. அதில் வெற்றியும் பெற்றது. 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் இந்தியாவில் வணிகக் குழுவின் வணிகத்துக்கு முடிவு கட்டிய பிறகும், இந்தியாவின் செல்வத்தை சுரண்ட வேண்டும் என்ற கொள்கையை மட்டும் அது தொடர்ந்து பின்பற்றி வந்தது. இதற்கு முன் இந்தியாவில் ஆட்சி செய்தவர்களிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி இந்த விதத்தில் மாறுபட்டிருந்தது.

பரம்பரையாக கைத்தொழில் உற்பத்தியிலும், கலைச்சின்னங்கள் செய்வதிலும் இந்தியா உலகின் ஏனைய நாடுகளைவிட முதலிடம் வகித்து வந்தது. இந்தியத் தொழில்களிலேயே மிகவும் முக்கியமானது ஜவுளி உற்பத்தியாகும். டாக்கா மஸ்லின், லாகூர் கம்பளம், காஷ்மீர் சால்வை, பனாரஸ் கைப்பின்னல் போன்றவை உலகப் புகழ் பெற்றவையாகும். தந்தத்திலான பொருட்கள், மரவேலைப்பாடுகள், அணிகலன்கள் போன்ற இந்தியப் பொருட்களை மக்கள் பெரிதும் விரும்பி வாங்கினர்.

மஸ்லின் துணிக்குப் பெயர் பெற்ற டாக்கா தவிர, கிருஷ்ணா நகர், சந்தேரி, ஆரணி, பனாரஸ் போன்ற ஜவுளி உற்பத்தி மையங்கள் புகழ் பெற்றவை. அகமதாபாத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி, துப்பட்டா, லக்னோ சிகான், நாக்பூர் சரிகைப் பட்டுப்புடவை போன்றவையும் உலகப்புகழ் பெற்றவை. வங்காளத்திலிருந்த மூர்ஷிதாபாத், மால்டா தவிர, பிற சிறு நகரங்களும் பட்டுத்துணிக்கு பெயர் பெற்றவையாகும். காஷ்மீர், பஞ்சாப், மேற்கு ராஜஸ்தான் கம்பளித் துணிக்கு பெயர் பெற்றவையாகும்.

ஜவுளித் தொழில் தவிர, கப்பல் கட்டுதல், தோல் மற்றும் உலோக உற்பத்தியும் இந்தியாவின் சிறந்த தொழில்களாகும். பளிங்கு கற்களை வெட்டி வழவழப்பாக்குவது, தந்த வேலை, சந்தன சிற்பங்கள் இந்திய தொழில்களில் குறிப்பிடத்தக்கவையாகும். பித்தளை, செம்பு, வெண்கலப் பாத்திரங்களுக்கு மொராதாபாத், காசி ஆகிய நகரங்கள் பிரசித்தி பெற்றவை. நாசிக், பூனா, ஹைதராபாத், தஞ்சாவூர் சிறந்த உலோக வேலைப்பாடுகளுக்கு பெயர் பெற்றவை. கண்ணாடித் தொழில் கோல்ஹாபூர், சதாரா, கோரக்பூர், ஆக்ரா, சித்தூர், பாலக்காடு போன்ற இடங்களில் சிறந்து விளங்கியது. கட்ச், சிந்து, பஞ்சாப் ஆகிய இடங்களில் ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தங்கம், வெள்ளி, வைர நகைகள் உற்பத்தி இந்தியாவின் பல இடங்களில் நடைபெற்றன. இந்தியப் பொருளாதாரம் சுறுசுறுப்பாக இயங்கியது என்பதற்கு இத்தகைய கைத்தொழில்கள் சான்றாகும்.

இத்தகைய உலகப் புகழ்பெற்ற இந்திய கைத்தொழில் 18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சரியத் தொடங்கியது.

இதற்கு பல காரணங்களைக் கூறலாம். முதலாவதாக, ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழுபின்பற்றிய கொள்கை இந்திய கைத்தொழிலுக்கு கேடு விளைவிப்பதாக இருந்தது. தொழிற்புரட்சியின் விளைவாக, இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட விலை மலிந்த பொருட்கள் இந்திய சந்தையில் குவிக்கப்பட்டன. இதனால், இந்திய பொருட்களின் விற்பனை உள்நாட்டிலும், அயல் நாட்டிலும் பெருமளவு குறைந்தது. 1769ல் வணிகக்குழு

வங்காளத்தில் பட்டு இழை உற்பத்திக்கு ஆதரவளித்தது. ஆனால் பட்டுத்துணி விற்பனைக்கு பல தடைகளை விதித்தது. 1813 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பொருட்களை இந்தியாவில் விற்பதற்கேற்ற வகையில் வணிகக்குழு பல்வேறு திட்டங்களை தீட்டியது. இதற்காக, வரிக்கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. எடுத்துக்காட்டாக, 1835ல், பிரிட்டிஷ் பருத்தி துணிக்கு இறக்குமதி வரி 2.5 சதவிகிதம் என்று புதிய கடல் வாணிக விதிமுறைகள் நிர்ணயித்தன. அதேபோல், இங்கிலாந்து பொருட்கள் இங்கிலாந்து நாட்டு கப்பல்களில் மட்டுமே கொண்டுவரப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது. இத்தகைய கொள்கைகளால், இந்திய பருத்தி ஆடைகள் இங்கிலாந்து சந்தைக்கு செல்ல இயலவில்லை. அதே சமயம், இங்கிலாந்து பொருட்கள் இந்திய சந்தையில் குவிந்து கிடந்தன.

இரண்டாவதாக. இந்தியாவில் பிரிட்டிஷாரின் அரசியல் செல்வாக்கு அதிகரித்த பிறகு, இந்திய ஆட்சியாளர்கள் வீழ்ச்சியடையத் தொடங்கினார்கள். இதுவரை அவர்கள் பயன்படுத்தி வந்த அரச உடைகள், ஆயுதங்கள், கலைப் பொருட்கள் போன்ற ஆடம்பரப் பொருட்களுக்கான தேவைகளும் குறையத் தொடங்கின.

மூன்றாவதாக, பரம்பரை அரச வம்சங்கள், பிரபுக்கள், செல்வந்தர்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்தனர். அவர்கள் பயன்படுத்திவந்த பரம்பரை ஆடம்பரப் பொருட்களின் தேவையும் பெருமளவு குறைந்தன.

நான்காவதாக, தொழிற்புரட்சியின்போது ஐரோப்பாவில் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கைத்தறிகளுக்குப் பதில் விசைத்தறிகள் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவிலும் இயந்திரங்கள் சிறிது சிறிதாக கொண்டுவரப்பட்டதால், கைத்தொழில் நசிந்தது. இயந்திரத்தைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மலிவான விலையில் கிடைத்தன. குறைந்த நேரத்தில் அதிக பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

ஐந்தாவதாக, புதிய தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளும் பொதுமக்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்தின. முன்பு, மாட்டு வண்டிகளும் படகுகளும் பொருட்களை கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டன. ஆனால், பின்னர் ரயில்பாதைகளும் நீராவிப் படகுகளும் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டன. நாட்டின் உட்பகுதிகளை இணைக்கும் வகையில் சாலைகளும் போடப்பட்டன. இங்கிலாந்திலிருந்து எளிதாக உற்பத்திப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இந்தியர் பலர் வேலையிழந்தனர். இந்திய கைத்தொழில் வல்லுநரும், கலைப்பொருட்கள் செய்வோரும் வாழ்வாதாரத்தை இழந்தனர்.

**கற்றல் அடைவுகள்**

*இப்பாடத்தைக் கற்று மாணவர் பெற்ற தகவல்கள்:*

1. *பிரிட்டிஷாரின் வேளாண் கொள்கையின் நோக்கங்கள்.*
2. *நிலையான நிலவரித்திட்டம், ரயத்துவாரி முறை, மகல் வாரி முறை.*
3. *பிரிட்டிஷாரின் நிலவருவாய் நிர்வாகத்தால் ஏற்பட்ட விளைவுகள்*
4. *இந்திய கைத்தொழில்களும் அவற்றின் சிறப்பும்.*
5. *பிரிட்டிஷாரின் சுரண்டல் கொள்கை*
6. *இங்கிலாந்தில் நடைபெற்ற தொழிற்புரட்சியில் இந்திய கைத்தொழில் நலிந்த விதம்.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. நிலையான நிலவரித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர்

அ. காரன் வாலிஸ் பிரபு  ஆ. வெல்லெஸ்லி பிரபு

இ. வில்லியம் பெண்டிங் பிரபு  ஈ. டல்ஹவுசி பிரபு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மகல்வாரி முறையின் கீழ் நிலவரித்திட்டத்தின் அடிப்படை அலகு______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மஸ்லின் | அ. | பனாரஸ் |
| 2. | பட்டு | ஆ. | தஞ்சாவூர் |
| 3. | கம்பள விரிப்புகள் | இ. | டாக்கா |
| 4. | உலோக வேலைப்பாடுகள் | ஈ. | லாகூர் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. நிலையான நிலவரித்திட்டம் ஜமீன்தார்களிடமிருந்து நீதித்துறை பணிகளை திரும்பப் பெற்றது.

ஆ. இரயத்துவாரி முறையின்கீழ் குடியானவருக்கும் அரசுக்கும் இடையே ஜமீன்தார்கள் போன்ற இடைத்தரகர்கள் இருந்தார்கள்.

இ. 16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய கைத்தொழில்கள் நசியத் தொடங்கின.

ஈ. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சி இந்திய கைத்தொழில்களை ஊக்குவித்தது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு நிலத்தை ஏலத்துக்கு விட்டு ஆண்டுக்குத்தகை முறையை அறிமுகப்படுத்தினார்.

2. பூவேலைப்பாடுகளுக்கு பனாரஸ் புகழ்பெற்று விளங்கியது.

3. இந்திய வணிக நலன்களுக்கு ஏற்றவாறு கிழக்கிந்திய வணிகக்குழு தனது சுங்க வரிக் கொள்கைகளை மாற்றியமைத்தது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. மகல்வாரி முறை

2. இரயத்துவாரி முறை

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. நிலையான நிலவரித்திட்டத்தின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

2. இந்திய கைத்தொழில்கள் பற்றி குறிப்பு எழுதுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. பிரிட்டிஷாரின் நில வருவாய் கொள்கைகளின் பொருளாதார தாக்கத்தை ஆய்க.

2. இந்திய கைத்தொழில்கள் அழிவதற்கான காரணங்களை ஆய்க.

# பாடம் – 8

## கல்வி, சமுதாய சீர்திருத்தங்கள்

**கற்றல்அடைவுகள்**

*இந்தப் பாடத்தை பயில்வதால் மாணவர்பெறும் தகவல்கள் :*

1. *பிரிட்டிஷாரின் கல்வி மற்றும் மொழிக்கொள்கை.*
2. *இந்தியாவில் ஆங்கிலக் கல்வி அறிமுகம் பற்றிய விவாதம்.*
3. *இந்தியாவில் சமுக சீர்திருத்தங்கள் செய்யப்படுதல்.*
4. *மகளிர் தொடர்பான சட்டங்கள்.*
5. *ஜாதி முறைக்கு எதிரான போராட்டமும், ஜாதி பாகுபாட்டைப் போக்குவதற்கு கொண்டுவரப்பட்ட சட்டங்களும்.*

**மொழி மற்றும் கல்விக் கொள்கை**

ஆரம்ப காலத்தில் கிழக்கிந்திய வணிகக்குழு கல்வி தொடர்பான நடவடிக்கைகிளில் அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை. 1757ல் ஆங்கிலேயர் வங்காளத்தைக் கைப்பற்றியபோதும், கல்வியைப் புகட்டும் பொறுப்பு இந்தியர்களிடமே இருந்தது. அரபி, பாரசீகம், வடமொழி ஆகியவற்றில் எழுதப்பட்ட நூல்களே கற்பிக்கப்பட்டு வந்தன. 1781ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் ஒரு மதரஸாவை நிறுவி அங்கு அரபி, பாரசீக மொழிகள் உட்பட முஸ்லீம் சட்டங்கள் கற்பிக்கப்படுவதை ஊக்குவித்தார்.

பத்தாண்டுகளுக்குப் பிறகு 1791ல் பிரிட்டிஷ் தூதுவரான ஜோனாதன் டங்கன் என்பவரது சீரிய முயற்சியால் காசியில் ஒரு வடமொழிக் கல்லூரி நிறுவப்பட்டது. இங்கு, இந்துச் சட்டங்கள் மற்றும் தத்துவம் போன்றவை கற்பிக்கப்பட்டன. இதனால், 19ஆம் நூற்றாண்டின் முதல் மூன்று பத்தாண்டுகளில் பாரம்பரிய கல்வி முறைகளும், கல்விக்கூடங்களுமே கல்வியைப் பரப்பி வந்தன என்பது தெளிவாகும்.

வங்காளத்தில் மட்டும் ஏறத்தாழ 80,000 பாரம்பரிய கல்விக்கூடங்கள் செயல்பட்டு வந்ததாக அரசாங்க மற்றும் திருச்சபை ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. அதாவது, அந்த மாகாணத்தில் மட்டும் குறைந்தபட்சம் 400 பேருக்கு ஒரு கல்விச்சாலை என்ற விகிதத்தில் செயல்பட்டன. இதுவே, கீழ்த்திசை கல்விமுறையின் சிறப்பாகும். சென்னை, பம்பாய், பஞ்சாப் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் இத்தகைய கல்வி நிலை இருந்ததையே உறுதிப்படுத்துகிறது. அன்றைய இந்தியாவில் கிராமந்தோறும் பள்ளிகள் இருந்தன.

கிழக்கிந்திய வணிக்குழுவின் ஆட்சி, கல்வியைப் பொறுத்தவரை ஒருவித இரட்டை நிலைக்கொள்கையைப் பின்பற்றியது. நடைமுறையிலிருந்த கீழ்த்திசை கல்விமுறையை ஊக்குவிக்க மறுத்தது. மாறாக, ஆங்கில மொழிக்கும் மேலை நாட்டுக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்தது. 1813 ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கென அரசு ஆண்டுக்கு ஒரு லட்சம் ஒதுக்க வகை செய்தது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இச்சட்டம் இயற்றப்பட்டபோதே இது குறித்து நீண்ட விவாதம்

நடைபெற்றது. சட்டம் இயற்றப்பட்டு இருபது ஆண்டுகள் ஆகியும் இது குறித்த புதிய விவாதங்கள் தோன்றிக்கொண்டே இருந்தன. எனவே, கல்விக்கென அரசு சல்லிக்காசும் செலவிடவில்லை.

அக்காலத்தில் பிரிட்டிஷ் அறிஞர்கள் இந்தியாவில் கல்வி வளர்ச்சி குறித்து இருவேறு கருத்துக்களை கொண்டிருந்தனர். கீழ்த்திசைவாதிகள் (ஓரியண்டலிஸ்ட்) என்றழைக்கப்பட்ட குழுவினர் இந்திய மொழிகளும் கீழ்த்திசை பாடங்களும் வளர்க்கப்பட வேண்டும் என வாதிட்டனர். மற்றொரு பிரிவினரான, ஆங்கிலவாதிகள் (ஆங்கிலிசிஸ்ட்) மேலை நாட்டு அறிவியலும் இலக்கியமும் ஆங்கில மொழிவழி கற்பிக்கப்பட வேண்டும் என்று கூறினர்.

1828ல் தலைமை ஆளுநராக பதவியேற்ற வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவில் ஆங்கில மொழி வழிக்கல்வி வேண்டும் என வலியுறுத்தினார். 1835 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கல்விக் குழுவில் இடம் பெற்றிருந்த 10 உறுப்பினர்களும் இருவேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர். குழுவின் தலைவர் மெக்காலே பிரபு உள்ளிட்ட ஐந்து பேரும் ஆங்கில மொழி வழிக்கல்வியை ஆதரித்தனர். எஞ்சிய ஐந்து பேர் கீழ்த்திசை மொழிகளுக்காக வாதாடினார். இந்த முட்டுக்கட்டை நிலை பிப்ரவரி 2ம் நாள் வரை தொடர்ந்தது. அன்றுதான், குழுவின் தலைவரான மெக்காலே பிரபு ஆங்கில மொழி வழிக்கல்வியை ஆதரித்த தனது புகழ்பெற்ற குறிப்பை அறிவித்தார். பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளையும் மீறி 1835 மார்ச் 7 ஆம் நாள் பெண்டிங் பிரபு தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இந்த தீர்மானத்தின்படி, இனிமேல் மேலை நாட்டு அறிவியல் மற்றும் இலக்கியங்களை ஆங்கிலமொழி வழியில் பயிற்றுவிப்பதற்கே அரசு நிதி செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டது.


மெக்காலே பிரபு

1854 ஆம் ஆண்டு சர் சார்லஸ் உட் என்பவர் தனது பிரமாண்டமான கல்விக் கொள்கையடங்கிய அறிக்கையை அனுப்பி வைத்தார். ஐந்து மாகாணங்களிலும் கல்வித்துறை நிறுவப்பட்டது. தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக மானிய உதவி அளிப்பதற்கான திட்டமும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும், இந்த குறிப்பு தொழிற்கல்வி, ஆசிரியர் பயிற்சி மற்றும் பெண் கல்வி ஆகியவற்றுக்கான பள்ளிகள் நிறுவப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. அனைத்துக்கும் மேலாக, கல்கத்தா, பம்பாய், சென்னை ஆகிய மூன்று மாகாணங்களிலும் லண்டன் பல்கலைக்கழகத்தை அடியொற்றி தலா ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்றும் கூறியது. இவற்றின் பலனாக, அடுத்த ஐந்து ஆண்டுகளில் இந்தியக் கல்வி விரைவாக மேலை நாட்டுமயமாக்கப்பட்டது.

**சமூகக் கொள்கைகளும் சட்டங்களும்**

தொடக்கத்தில், ஆங்கிலேயரின் கவனம் வாணிபத்தைப் பெருக்குவதிலும், பொருளாதாரத்தை சுரண்டி அதிக லாபம் ஈட்டுவதிலுமே இருந்தது. ஆகவே, சமூக, சமய சீர்திருத்தங்களில் அவர்கள் அவ்வளவாக ஈடுபாடு காட்டவில்லை. மேலும், இந்தியர்களின் சமூக, சமய பழக்கங்களிலும், அமைப்புகளிலும் தலையிட்டால் தங்களது வணிக நலன்கள் பாதிக்கப்படலாம் என அவர்கள் அஞ்சினர். எனவே, மிகுந்த முன்னெச்சரிக்கையுடனும் இந்திய சமூகப் பிரச்சினைகளில் பாராமுகத்துடனும் இருந்தனர்.

அதே சமயம், இந்தியர்களின் பழக்க வழக்கங்களை விமர்சித்து வந்ததன் மூலம், இந்தியர்களிடையே ஒருவித தாழ்வு மனப்பான்மையையும் அவர்கள் உருவாக்கினர் என்றும் கூறலாம்.

19ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவில் தோன்றிய சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் வணிகக்குழு ஆட்சியின் கவனத்தை ஈர்த்தன. கிறித்துவ சமயப்பரப்பாளர்களின் பிரச்சாரம் படித்த இந்தியர்களிடையே ஒருவித சலசலப்பை ஏற்படுத்தியது. மேலை நாட்டு கருத்துக்களும் கல்வியும் செய்தித்தாள்கள் மூலமாக சென்றடைந்து பொது மக்களிடையே போதிய தாக்கத்தை ஏற்படுத்தியது. வில்லியம் பெண்டிங் பிரபு போன்ற ஒரு சில பிரிட்டிஷ் ஆட்சியாளர்களும் தங்களது தனிப்பட்ட கவனத்தை இதில் செலுத்தினர். குறிப்பாக, பெண் விடுதலை குறித்தும் ஜாதிப்பாகுபாடு குறித்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன.

**மகளிர் குறித்த சமூக சட்டங்கள்**

பிரிட்டிஷார் தங்களது ஆட்சியை இந்தியாவில் நிறுவிய காலக்கட்டத்தில் பெண்களின் நிலைமை திருப்திகரமாக இல்லை. சதி என்ற உடன்கட்டையேறும் வழக்கம், பர்தா அணியும் முறை, குழந்தைத் திருமணம், பெண் சிசுக்கொலை, வரதட்சணை, பலதாரமணம் போன்ற சமூகக் கொடுமைகள் பெண்களின் வாழ்க்கையை சீரழித்தன. பெண் என்பவள் நான்கு சுவற்றுக்குள் அடைத்து வைக்கப்பட்டாள். கல்விக் கதவுகள் அவளுக்கு திறக்கப்படவில்லை. பொருளாதார ரீதியாகக்கூட அவளது நிலை பரிதாபமாகவே காணப்பட்டது. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சமூக, பொருளாதார சமத்துவம் காணப்படவில்லை. ஒரு இந்துப்பெண் சொத்துக்கு வாரிசாக வழியில்லை. மொத்தத்தில், அவள் ஆண்களை நம்பியே வாழவேண்டியிருந்தது.

சமூக சீர்திருத்தவாதிகள், மனித நேயமிக்கவர்கள், சில பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆகியோரின் தீவிர முயற்சிகளால், இந்திய சமுதாயத்தில் பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்காக 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. இவற்றில் முதலாவதாக வில்லியம் பெண்டிங் பிரபு ஆட்சிக்காலத்தில் இயற்றப்பட்ட சதிமுறை ஒழிப்பு சட்டத்தைக் கூறலாம்.

**பெண் சிசுக்கொலை**

19ஆம் நூற்றாண்டின் பின் இந்திய சமுதாயத்தை உலுக்கிய பிரச்சனை மனிதாபிமானமற்ற கொடும் செயலான பெண்சிசுக் கொலையாகும். ராஜபுதனம், பஞ்சாப், வடமேற்கு மாகாணங்களில் இது பரவலாக காணப்பட்டது. கர்னல் டாட், ஜான்சன் டன்கன், மால்கம் போன்ற பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பெண் சிசுக்கொலை குறித்து விளக்கமாக ஆய்வு செய்தனர். குடும்பப் பெருமை, பெண்ணுக்கு ஏற்ற வரன் கிடைக்காது என்ற அச்சம், வரப்போகும் மாமியாரிடம் பணிந்து போவதற்கு தயக்கம் போன்ற காரணங்களால் பெண்சிசுக்களை கொல்லும் வழக்கம் நிலவியதாக இவர்கள் கருதினர். பெண் குழந்தைகள் பிறந்த உடனேயே, அபினியை விழுங்கச் செய்தல், கழுத்தை நெரித்தல், வேண்டுமென்றே ஒதுக்குதல் போன்ற வழிமுறைகளைக் கையாண்டு அவற்றை கொன்றனர். 1795, 1802, 1804 பின்னர் 1870 ஆகிய ஆண்டுகளில் இந்த வழக்கத்தை தடை செய்து சில சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால், இந்த கொடிய சமூகத்தீங்கை சட்டங்களால் மட்டுமே முழுதும் ஒழிக்க முடியவில்லை. கல்வி மற்றும் பொதுக் கருத்தை உருவாக்குதல் போன்ற நடைமுறைகள் வாயிலாகவே படிப்படியாக இவ்வழக்கம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**விதவைகள் மறுமணம்**

பண்டைய இந்தியாவில் விதவைகள் மறுமணம் வழக்கத்திலிருந்தது என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. காலப்போக்கில் இது கைவிடப்பட்டு, 19ஆம் நூற்றாண்டில் விதவைகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் பெருகியது. எனவே, மீண்டும் விதவைகள் மறுமணத்தை நடைமுறைக்கு கொண்டுவர வேண்டியது சமூக சீர்திருத்தவாதிகளின் முக்கிய கடமையாக இருந்தது. அக்கால பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் விதவைகள் மறுமணம் குறித்து கட்டுரைகள் எழுதிய இவர்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

இராஜா ராம்மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யா சாகர் இத்தகைய சீர்திருத்தவாதிகளில் குறிப்பிடத்தக்கவர்கள். புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பலர் கையெழுத்திட்ட விண்ணப்பங்கள் போன்ற பிரச்சார யுக்திகள் மூலமாக இவர்கள் விதவை மறுமணத்தை ஆதரித்து பெருமளவு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். 1856 ஜூலையில் தலைமை ஆளுநர் ஆலோசனைக்குழு உறுப்பினரான ஜே.பி. கிராண்ட் என்பவர் விதவை மறுமணம் குறித்த சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தினார். 1856 ஜூலை 13ம் நாள் இது நிறைவேற்றப்பட்டது. 1856 ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் என்று இது அழைக்கப்பட்டது.

**குழந்தை மணம்**

குழந்தை மணம் என்பது இந்தியாவில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த மற்றொரு அநீதியாகும். கேசவ சந்திர சென் என்பவரது முயற்சியால் 1870ல் இந்திய சீர்திருத்த கழகம் தோற்றுவிக்கப்பட்டது. 'மசாபாப் பாலவிவாகம்' என்ற இதழை பி.எம். மலபாரி என்பவர் தொடங்கி குழந்தை மணத்துக்கு எதிராகப் போராடினார். 1846ல் திருமணத்துக்கான குறைந்தபட்ச வயது பெண்ணுக்கு 10 ஆக இருந்தது. 1891ல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அது 12 ஆக உயர்த்தப்பட்டது. 1930 ஆண்டு சாரதா சட்டப்படி குறைந்தபட்ச வயது 14 ஆக உயர்த்தப்பட்டது. இந்திய விடுதலைக்குப்பிறகு அது 14 லிருந்து 18 ஆக உயர்த்தப்பட்டது.

**பர்தா முறை**

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் பர்தா அணியும் வழக்கத்துக்கெதிராக குரல்கள் எழுந்தன. குடியானவர்களிடையே இந்த வழக்கம் கடுமையானதாக இல்லை. தென்னிந்தியாவிலும் இவ்வழக்கம் பெருமளவு காணப்படவில்லை. தேசிய இயக்கத்தில் அதிக அளவிலான பெண்கள் கலந்து கொண்டனர். காலப்போக்கில் எந்தவொரு குறிப்பிட்ட சட்டமும் இயற்றப்படாமலேயே இவ்வழக்கம் மறைந்து போயிற்று.

**ஜாதி முறைக்கு எதிரான போராட்டமும் அது தொடர்பான சட்டங்களும்**

பெண்கள் விடுதலைக்கு அடுத்த நிலையில் சமூக சீர்திருத்தவாதிகள் ஜாதிக் கொடுமைகளுக்கு எதிரான இயக்கங்களை முன்னின்று நடத்தினர். இந்திய சமுதாயத்தில் ஜாதிமுறை ஒரு பலவீனமாகவே திகழ்கிறது. அடிப்படையில், பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்காக சமுதாயம் பிரிக்கப்பட்டிருந்தது. சமுதாயத்தில் இந்த பிளவுகளால் வேறுபாடுகள் நிலவின. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் பிறப்பால் அடையாளப்படுத்தப்பட்ட பல்வேறு கிளை ஜாதிகளும் மலிந்திருந்தன.

இதற்கிடையே சமூக விழிப்புணர்வு இந்திய மக்களிடையே தோன்றியது. 19ஆம் நூற்றாண்டு சமூக, சமய சீர்திருத்த இயக்கங்களில் தீண்டாமை ஒழிப்பும் முக்கிய

பிரச்னையாக முன்னிறுத்தப்பட்டது. மகாத்மா காந்தி தனது அபிவிருத்தி திட்டத்தில் தீண்டாமை ஒழிப்பையும் ஒரு பகுதியாக சேர்த்திருந்தார். 'ஹரிஜன்' என்ற செய்தி ஏட்டை நடத்திய அவர் 'ஹரிஜன் சேவக் சங்' என்ற அமைப்பையும் ஏற்படுத்தினார்.

டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் தனது வாழ்நாள் முழுவதையும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவே அர்ப்பணித்தார். இதற்காக அவர் 1924ம் பம்பாயில் "பகிஷ்கிரிட் ஹிட்காரினி சபை" என்ற அமைப்பை உருவாக்கினார்.




**டாக்டர் அம்பேத்கர்**

பின்னர், ஜாதிக் கொடுமையை எதிர்த்து 'அகில பாரதீய தலித் வர்க்க சபை' என்ற அமைப்பையும் தோற்றுவித்தார். மேற்கு இந்தியாவில் ஜோதிராவ் பூலே சத்ய சோதக் சமாஜத்தையும், கேரளாவில் ஸ்ரீ நாராயணகுரு ஸ்ரீ நாராயண பரிபாலனயோகம் என்ற அமைப்பையும் தோற்றுவித்து தாழ்த்தப்பட்ட மக்களிடையே சுயமரியாதை உணர்வை ஏற்படுத்தினர்.



**ஜோதிராவ் பூலே**



**நாராயண குரு**

20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் ஈ.வெ.ரா.பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கி நடத்தினார். ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து பல தனி நபர்களும் நிறுவனங்களும் போராடின. பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கத் தடை, கோயிலில் நுழையத் தடை, பள்ளிகளில் சேர தடை போன்ற ஹரிஜனங்களுக்கு இழைக்கப் பட்டுவந்த அநீதிகளை எதிர்த்து இப்போராட்டங்கள் நடைபெற்றன.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர்கள் புரிந்துகொண்டது.*

1. *பிரிட்டிஷாருக்கு முன்பு இந்தியாவில் நிலவிய கல்விமுறை.*
2. *இந்தியாவில் கல்வி வளர்ச்சிக்கு வணிகக்குழு பின்பற்றிய கொள்கை.*
3. *மேலைக் கல்வி ஆங்கிலமொழி அறிமுகம்தொடர்பான கீழ்த்திசை வாசிகளுக்கும், மேலைக்கல்வியாளருக்கும் நடைபெற்ற விவாதங்கள்.*
4. *கல்வி பற்றிய மெக்காலே குறிப்பு – உட் அறிக்கை*
5. *சதிமுறை ஒழிப்பு, பெண் சிசுக்கொலை தொடர்பான சமூகத் தீங்குகளை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை, சட்டங்கள்.*
6. *இந்திய சமுதாயத்தில் பெண்கள் நிலைமை – பெண் விடுதலைக்கு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய தொண்டு மற்றும் அது தொடர்பான சட்டங்கள்.*
7. *ஜாதி வேறுபாடுகளைக் களைய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஜோனாதன் டங்கன் வடமொழிக் கல்லூரியை நிறுவிய இடம்

அ. சென்னை ஆ. பம்பாய்

இ. கல்கத்தா ஈ. பனாரஸ்

2. விதவைகள் மறுமண சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

அ. 1846 ஆ. 1856

இ. 1870 ஈ. 1891

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சாரதா சட்டம் பெண்களின் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை ஆண்டுகளாக உயர்த்தியது _______________

2. ஹிடாகாரிணி சபையை அமைத்தவர் _______________

3. மெக்காலேவின் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு_______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹரிஜன் சேவக் சங்கம் | அ. | நாராயண குரு |
| 2. | சத்ய சோதக் சமாஜம் | ஆ. | பெரியார் ஈ.வெ.ரா. |
| 3. | நாராயண தர்ம பரிபாலன யோகம் | இ. | அம்பேத்கர் |
| 4. | சுயமரியாதை இயக்கம் | ஈ. | மகாத்மா காந்தி |
| 5. | அகில பாரதீய தலித் வர்க்க சபை | உ. | ஜோதிராவ் பூலே |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. கீழ்த்திசைவாதிகள் கீழ்த்திசை பாடங்களை இந்திய மொழிவழி கற்பிக்க வேண்டுமென வாதிட்டனர்.

ஆ. 1829 ஆம் ஆண்டு விதவை மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது.

இ. ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் ஜோதிராவ் பூலேவால் நிறுவப்பட்டது.

ஈ. 1830ல் சாரதாச் சட்டம் இயற்றப்பட்டது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் பம்பாயில் ஒரு மதரசாவை நிறுவினார்.

2. ஆங்கில ஆதரவாளர்கள் மேற்கத்திய அறிவியல் மற்றும் இலக்கியத்தை ஆங்கில மொழிவழி பயிற்றுவிக்கவேண்டும் என்று வாதாடினர்.

3. ஈஸ்வர சந்திர வித்யா சாகர், விதவை மறுமணத்தை பிரபலப்படுத்த பிரச்சாரத்தை மேற்கொண்டார்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. மெக்காலேயின் குறிப்பு

2. பெண் சிசுக் கொலை

3. பர்தா முறை

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. சார்லஸ் வுட் அறிக்கை பற்றி குறிப்பு எழுதுக.

2. ஜாதி முறையின்கீழ் பின்பற்றப்பட்ட வேற்றுமைகளைக் களைய சீர்திருத்தவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை விவாதிக்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. பிரிட்டிஷாரின் கல்விக் கொள்கையை ஆய்க.

2. மகளிர் விடுதலைக்காக இயற்றப்பட்ட சமூக சட்டங்களை தொகுத்து எழுதுக.

# பாடம் – 9

## பாளையக்காரர் கிளர்ச்சி

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தை படிப்பதால் மாணவர் அறிந்து கொள்வது.*

1. *தமிழ்நாட்டில் பாளையக்காரர் முறை*
2. *பிரிட்டிஷாருக்கு எதிரான கிளர்ச்சியில் புலித்தேவரின் பங்கு.*
3. *கட்ட பொம்மனின் எழுச்சியும் பிரிட்டிஷாருக்கெதிரான கிளர்ச்சியும்.*
4. *மருது சகோதரர்களின் தலைமையில் இரண்டாவது கிளர்ச்சி.*

இந்தியாவின் பிற பகுதிகளில் நடைபெற்றதைப் போலவே, தமிழ்நாட்டிலும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஆரம்பகால உணர்வுகள் உள்நாட்டில் ஆங்காங்கே நடைபெற்ற கிளர்ச்சிகள் எழுச்சிகள் மூலமாக வெளிப்பட்டன. அவற்றில் முக்கியமானது கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கு எதிராக பாளையக்காரர்கள் செய்த கிளர்ச்சியாகும்.

தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சி விரிவுபடுத்தப்பட்டபோது பாளையக்காரர் முறை வளர்ச்சி பெற்றது. பாளையம் என்று அழைக்கப்பட்ட ஒருசில கிராமங்களை உள்ளடக்கிய நிலப்பகுதிக்கு உரிமையாளர் பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டார்.

பாளையத்தை பெற்றதற்கு ஈடாக ராணுவ சேவையும் ஆண்டுக் கப்பமும் பாளையக்காரர் மன்னருக்கு செலுத்த வேண்டும். ஆனால், சூழ்நிலைக்கேற்ப பாளையக்காரர்கள் தங்களது கடமைகளிலிருந்து தவறியதோடு அதிகாரத்தையும் பெருக்கிக் கொண்டனர். அவர்களது எண்ணிக்கை, பரந்த வலிமை, உள்நாட்டு செல்வாக்கு, சுயேட்ச்சையான செயல்பாடு போன்ற காரணிகளால் பாளையக்காரர்கள் தென்னிந்திய அரசியல் கட்டமைப்பில் மிகவும் சக்தி மிக்கவர்களாக விளங்கினார்கள். தங்களது பாளையத்திற்குள் சுதந்திரமான முழு அதிகாரம் உடையவர்களாக தங்களை கருதிக் கொண்டனர். தங்களுடைய நிலங்கள் 60 தலைமுறைகளாக தங்களுக்கு சொந்தம் என்று அவர்கள் கூறிக்கொண்டனர். இவற்றை கிழக்கிந்திய வணிகக்குழு நிராகரித்தது.

### பூலித்தேவர்

பாளையக்காரர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர். மேற்குப் பிரிவில் மறவர் பாளையக்காரர்களும், தெற்குப்பிரிவில் தெலுங்கு பாளையக்காரர்களும் இருந்தனர். நெல்கட்டும் செவல் பாளையத்தின் பூலித்தேவர் மறவர் பிரிவுக்கும் பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்த கட்டபொம்மன் தெலுங்கு பிரிவுக்கும் தலைவர்களாகக் கருதலாம். இவ்விருவருமே நவாப்பிற்கு செலுத்த வேண்டிய இஸ்த் அல்லது கப்பம் கட்ட மறுத்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அக்கம் பக்கம் இருந்த பாளையக்காரர்களும் ஏதோ ஒரு காரணத்தைக்காட்டி கப்பம் கட்டாமல் இருந்து வந்தனர். 1755ல் மாபஸ்கான் பிரிட்டிஷ் படைத்தளபதி கர்னல் ஹெரான் தலைமையிலான படைகளின் உதவியோடு பாளையக்காரர்கள் மீது படையெடுத்தார். பூலித்தேவரும் மறவர் பாளையக்காரர்களும் பிரிட்டிஷாருக்கு எதிராக உறுதியுடன் இருந்தனர். கர்னல் ஹெரான் மறவர் குடும்பத்தவரை அடக்குவதில் தீர்மானமாக இருந்தார்.

தனது ராஜதந்திர முயற்சிகள் மூலம் பூலித்தேவரின் மனதை மாற்ற கர்னல் ஹெரான் முயற்சித்தார். படைபலத்தைக் காட்டி மிரட்டினார். அவரது முயற்சிகள் பலனளிக்கவில்லை. மேற்கிலிருந்த மறவர்களை ஒன்று சேர்த்து தனது நிலையை புலித்தேவர் மேலும் வலிமைப்படுத்திக் கொண்டார். பிரிட்டிஷாருக்கு எதிராக மைசூரின் ஹைதர் அலி மற்றும் பிரஞ்சுக்காரர்களின் உதவியையும் நாடினார். பிரிட்டிஷார் ராமநாதபுரம், புதுக்கோட்டை அரசுகளிடமும் டச்சுக்காரர்களிடமும் ஆதரவு கோரினார். ஹைதர் அலி ஏற்கனவே மராட்டியருடன் மோதலில் ஈடுபட்டிருந்தமையால் பூலித்தேவருக்கு உதவ முடியவில்லை. பூலித்தேவரையும் அவரது கூட்டாளிகளையும் அடக்கும் பொறுப்பை பிரிட்டிஷார் யூசுப் கானிடம் (கான்சாகிப்) ஒப்படைத்தனர்.

பூலித்தேவர் மதுரையைத் தாக்கி மாபஸ்கானிடமிருந்து அதனைக் கைப்பற்றினார். புலித்தேவரின் இந்த ராணுவ வெற்றி மகத்தானதாகும். ஒரு இந்திய வீரர் பிரிட்டிஷாருக்கு எதிராக நின்று வெற்றி கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மறவர்களின் வீரத்தையும் தேசப்பற்றையும் அது வெளிப்படுத்தியது. ஆனால் மறுபடியும் மாபஸ்கான் மதுரையை மீட்டார். கிழக்கத்திய பாளையக்காரர்கள் மற்றும் திருவாங்கூர் அரசரின் உதவியோடு யூசுப்கான் பல வெற்றிகளைப் பெற்றார்.கடுமையான போருக்குப்பிறகு 1759ல் நெல்கட்டும் செவல்மீது தாக்குதல் தொடர்ந்தது. 1767ல் அது கர்னல் காம்ப்பெல் என்பவரால் கைப்பற்றப்பட்டது. பூலித்தேவர் அங்கிருந்து தப்பியோடினார். பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒடுக்க வேண்டும் என்ற தனது எண்ணம் நிறைவேறாமலேயே அவர் இறந்தார். அவரது முயற்சிகள் தோல்வியில் முடிந்த போதிலும், தென்னிந்திய வரலாற்றில் சுதந்திரப் போராட்டத்தை துவக்கிய பெருமைக்குரியவராகிறார்.

**வீரபாண்டிய கட்டபொம்மன்**


**கட்டபொம்மன்**

தனது தந்தை ஜெகவீர பாண்டியனின் மறைவுக்குப்பிறகு, முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக் காரராக பொறுப்பேற்றார். நடைபெற்ற பல்வேறு சம்பவங்களால் கட்டபொம்மனுக்கும் கிழக்கிந்திய வணிகக்குழுவிற்கும் சச்சரவுகள் தோன்றின. கப்பம் கட்டுவது சச்சரவுக்கு முக்கிய காரணமாயிற்று. 1792 ஆம் ஆண்டு கர்னாடக உடன்படிக்கைப்படி ஆர்க்காடு நவாப் இந்த உரிமையை ஆங்கிலேயருக்கு கொடுத்திருந்தார். எனவே, பாஞ்சாலங்குறிஞ்சி பாளையக்காரரான கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்ட வேண்டியிருந்தது. 1798ல் கட்டபொம்மன் கட்டவேண்டிய கப்பம் நிலுவையிலிருந்தது.

கலெக்டர் ஜாக்சன் தனக்கேயுரிய அகந்தையுடனும் முரட்டுத் தனத்துடனும் கட்டபொம்மனுக்கு மிரட்டல் கடிதங்களை அனுப்பினார். "வானம் பொழிகிறது, பூமி விளைகிறது எதற்காக நாங்கள் ஆங்கிலேயருக்கு வரி கட்ட வேண்டும்" என்று கட்டபொம்மன் கூறியதாக வழக்காறு உள்ளது. 1798 மே 31ம் நாள் கணக்குப்படி கட்டபொம்மன் கட்டவேண்டிய கப்பத்தொகை நிலுவை 3310 பகோடாக்களாகும் (பகோடா என்பது ரூபாய்). ஜாக்சன் தனது படையை கட்டபொம்மனுக்கு எதிராக அனுப்ப விரும்பினார். ஆனால் சென்னை அரசாங்கம் அனுமதிக்கவில்லை.

1798 ஆகஸ்ட் 18ம் நாள் தம்மை ராமநாதபுரத்தில் வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு ஆணையனுப்பினார். இதற்கிடையில், ஜாக்சனை சந்திக்க கட்டபொம்மன்

திருக்குற்றாலத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும் இருமுறை முயற்சித்தார். ஆனால், அவமதிப்பே மிஞ்சியது. ராமநாதபுரத்தில்தான் கலெக்டரை சந்திக்கமுடியும் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், கட்டபொம்மன் ஜாக்சனைத் தொடர்ந்து அவர் சென்ற பாதையிலேயே 400 மைல்கள் சென்று செப்டம்பர் 19ஆம் நாள் ராமநாதபுரத்தை அடைந்தார்.

ஜாக்சனை சந்திக்க அனுமதி கிடைத்தது. இச்சந்திப்பின்போது கட்டபொம்மனும் அவரது அமைச்சர் சிவசுப்ரமணியபிள்ளையும் கலெக்டர் முன்பு மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டனர். அதற்குப்பிறகும் அவர்களை வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. கட்டபொம்மன் ஜாக்சனுடைய திட்டத்தை உணர்ந்து கொண்டார். எனவே, தனது அமைச்சருடனும் தம்பி ஊமைத் துரையுடனும் அங்கிருந்து தப்ப முயற்சித்தார். கோட்டை வாயிலில் மோதல்கள் நடந்தன. லெப்டினென்ட் கிளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். சுப்ரமணியபிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் தப்பிச் சென்றார்.

பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய கட்டபொம்மன் நடந்த உண்மைகளை விளக்கி சென்னை அரசாங்கத்துக்கு மேல் முறையீடு செய்தார். ஒரு குழுவின் முன்பு ஆஜராகுமாறு கட்டபொம்மன் கேட்டுக்கொள்ளப்பட்டார். இதற்கிடையே, அரசாங்கம் சிவசுப்ரமணியபிள்ளையை விடுதலை செய்தது. கலெக்டர் ஜாக்சன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். எனவே, கட்டபொம்மன் வில்லியம் பிரவுன், வில்லியம் ஆரம், ஜான் காசாமேயர் ஆகியோர் அடங்கிய குழுவின் முன்பு ஆஜரானார். கட்டபொம்மன் குற்றமற்றவர் என்று குழு தீர்மானித்தது. ஜாக்சனுக்குப் பதில் எஸ்.ஆர்.லூஷிங்டன் என்பவர் கலெக்டராக நியமிக்கப்பட்டார். பின்னர், ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

**பாளையக்காரர்களின் கூட்டமைப்பு**

ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனின் குறையைப் போக்கினாலும், தான்பட்ட அவமதிப்பை கட்டபொம்மன் மறக்கவில்லை. தமது தன்மானத்துக்கு இழுக்கு ஏற்பட்டதாக அவர் கருதினார். இச்சமயத்தில் சிவகங்கையைச் சேர்ந்த மருது பாண்டியர் பிரிட்டிஷாருக்கு எதிராக தென்னிந்திய கூட்டிணையை உருவாக்கினார். திருச்சிராப்பள்ளி அறிக்கை வெளியிடப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சிக்கும் தனது தூதுவர்களை மருதுபாண்டியர் அனுப்பி வைத்தார். இவ்வாறு கட்டபொம்மனுக்கும் மருதுபாண்டியனுக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டது. இந்த சம்பவங்கள் புதிய சிக்கலை உருவாக்கியது. 1798 ஆகஸ்டில் சிவகிரி பாளையக்காரரின் புதல்வரும், ஆலோசகரும் பாஞ்சாலங்குறிச்சிக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். சிவகிரி பாளையக்காரர் வணிகக்குழுவின் திறை செலுத்தும் பாளையம் என்பதால் சென்னை கவுன்சில் இந்த நடவடிக்கையை ஒரு சவாலாகக் கருதி, கட்டபொம்மனுக்கு எதிராக போர்தொடுப்பதாக அறிவித்தது.

**பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுப்பு**

1799 மே திங்களில், சென்னையிலிருந்த வெல்லெஸ்லி பிரபு, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை போன்ற இடங்களிலிருந்த பிரிட்டிஷ் படைகளை திருநெல்வேலிக்கு செல்லுமாறு உத்தரவிட்டார்.

மிகுந்த அதிகாரங்களைப் பெற்ற மேஜர் பானர்மேன் இந்த படையெடுப்புக்கு தலைமை வகித்தார். 1799 செப்டம்பர் முதல் நாள் கட்டபொம்மனை சரணடையுமாறு அவர் இறுதி எச்சரிக்கை விடுத்தார். 4ம் தேதி பாளையங்கோட்டையில் வந்து சந்திக்குமாறும் கூறினார். நல்ல நாள் பார்த்து விட்டு வருவதாக கட்டபொம்மன் பதில் அனுப்பினார்.

பானர்மேன் இந்த பதிலை அலட்சியப்போக்கு என்று கருதி ராணுவ நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். செப்டம்பர் 5 ஆம் நாள் கட்டபொம்மனின் கோட்டை தாக்கப்பட்டது. 16 ஆம் நாள் பாளையங்கோட்டைக்கு மேலும் தளவாடங்கள் வந்து சேர்ந்தன. கோலார்பட்டியில் நடந்த மோதலில் பாளையக்காரர்படை பலத்த சேதமடைந்தது. சிவசுப்ரமணியபிள்ளை மீண்டும் சிறைப்பிடிக்கப்பட்டார். கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பியோடினார். களப்பூர் காடுகளில் இருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ஆட்சியாளர் கைப்பற்றி பிரிட்டிஷாரிடம் ஒப்படைத்தார்.

**கட்டபொம்மனின் வீழ்ச்சி**

பானர்மேன் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை பாளையக்காரர் கூடியிருந்த சபையின் முன் நிறுத்தி பெயருக்கு ஒரு விசாரணை நடத்தி அவர்களுக்கு மரண தண்டனை விதித்தார். செப்டம்பர் 13 ஆம் நாள் சிவசுப்ரமணிய பிள்ளை நாகலாபுரத்தில் தூக்கிலிடப்பட்டார். அக்டோபர் 16 ஆம் நாள் கயத்தாற்றில் கூடியிருந்த பாளையக்காரர்கள் முன்னிலையில் கட்டபொம்மன் மீது விசாரணை நடத்தப்பட்டது. பின்னர், பானர்மேன் மரண தண்டனையை அறிவித்தார். அக்டோபர் 16 ஆம் நாள் கட்டபொம்மன் கயத்தாறு கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டார். வீரபாண்டிய கட்டபொம்மன் தனது வாழ்வின் இறுதி நேரத்தை ஒரு வீரனுக்குரிய பெருமிதத்துடன் எதிர்கொண்டார்.

**மருது சகோதரர்கள்**

1799ல் பாளையக்காரர்கள் கடுமையான வகையில் ஒடுக்கப்பட்ட போதிலும், 1800ல் மீண்டும் கிளர்ச்சி வெடித்தது. இச்சமயம், கிளர்ச்சி ஒன்றுபட்டதாகவும் இருந்தது. 1800 – 1801 ஆண்டு கிளர்ச்சி இரண்டாவது பாளையக்காரர் போர் என்று பிரிட்டிஷ் ஆவணங்களில் குறிக்கப்பட்டிருந்தாலும், கிளர்ச்சியின் தன்மை முன்னதைவிட மேலும் பெரிதாகவே இருந்தது. சிவகங்கையைச் சேர்ந்த மருதுபாண்டியன், திண்டுக்கல் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மா, மைசூரின் கிருஷ்ணப்ப நாயக்கர் மற்றும் துண்டாஜி ஆகியோர் அடங்கிய ஒரு பெரும் கூட்டிணைவு இக்கிளர்ச்சியை முன்னின்று நடத்தியது.

1800 ஜூன் மாதம் கோயம்புத்தூரில் வெடித்த கலகம் விரைவில் ராமநாதபுரம், மதுரைப் பகுதிகளுக்கும் பரவியது. 1801 மே மாதத்தில் வடக்கு பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. மருது பாண்டியன், மேலப்பன் ஆகியோர் இதற்கு தலைமை வகித்தனர். கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரை முக்கிய தலைவராக எழுச்சி பெற்றார். 1801 பிப்ரவரியில் ஊமைத்துரையும் அவருடன் சென்ற 200 பேரும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை சாமர்த்தியமாக கைப்பற்றினர். அந்த கோட்டை மீண்டும் புனரமைக்கப்பட்டு எழுச்சியின் மையமாக மீண்டும் உருவெடுத்தது. மருதுபாண்டியனால் அனுப்பிவைக்கப்பட்ட, மதுரை, ராமநாதபுரத்தைச் சேர்ந்த 3000 பேர் பாஞ்சாலங்குறிச்சி படைகளுடன் இணைந்து கொண்டனர். இருப்பினும், பிரிட்டிஷ் படைகள் சுதாரித்துக்கொண்டு, பாஞ்சாலங்குறிச்சிப் படைகளை வீழ்த்தின. அரசாங்கத்தின் உத்திரவின் பேரில் கோட்டை தரைமட்டமாக்கப்பட்டு, உழவு செய்யப்பட்டு, மீண்டும் குடிபுகாத வண்ணம் உப்பும் ஆமணக்கு எண்ணெயும் தூவப்பட்டது.

எஞ்சியிருந்த கலகக்காரர்களையும் பிரிட்டிஷ் படைகள் முறியடித்தன. மருது சகோதரர்களும் அவர்களின் புதல்வர்களும் கொல்லப்பட்டனர். 1801 நவம்பர் 16 ஆம் நாள் பாஞ்சாலங்குறிச்சியில் ஊமைத்துரை, செவத்தையா ஆகியோரின் தலைகள்

துண்டிக்கப்பட்டன. ஆங்கிலேயர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான அழிவு வேலைகளால், அப்பகுதி முழுவதுமே படுபயங்கரமாக காட்சியளித்தது.

1799 மற்றும் 1800 – 1801 ஆண்டுகளில் நடைபெற்ற பாளையக்காரர் கிளர்ச்சிகளை ஒடுக்கியதன் மூலம் குறுநிலத்தலைவர்கள் அறவே ஒழிக்கப்பட்டனர். 1801 ஜூலை 31ல் கையெழுத்திடப்பட்ட கர்னாடக உடன்படிக்கைப்படி தமிழ்நாடு முழுவதையும் பிரிட்டிஷார் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர். பாளையக்காரர் முறை முடிவை சந்தித்தது. வணிகக்குழு அந்த இடங்களில் ஜமீன்தாரி முறையை அறிமுகப்படுத்தியது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை கற்ற மாணவர்கள் அறிந்த செய்திகள்*

1. *தமிழ்நாட்டில் பாளையக்காரர் முறை செயல்பட்ட விதம்.*
2. *திறை செலுத்துபவர்களாக பிரிட்டிஷாருடன் அவர்கள் மேற்கொண்டிருந்த உறவு.*
3. *பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக புலித்தேவனின் எழுச்சியும் வீழ்ச்சியும்*
4. *பிரிட்டிஷ் அகந்தைக்கு எதிராக வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரம் கலந்த போராட்டம்.*
5. *மருது சகோதரர்களின் கிளர்ச்சியும், பிரிட்டிஷாரின் வலிமைக்குமுன்பு அதன் தோல்வியும்.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. நெல் கட்டும் செவல் பகுதியை கைப்பற்றியவர்

அ. கர்னல் ஹெரான் ஆ. கர்னல் கேம்ப்பெல்

இ. காலின் ஜாக்சன் ஈ. புலித்தேவர்

2. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை வந்து சந்திக்க சொன்ன இடம்

அ. மதுரை ஆ. பாஞ்சாலக்குறிச்சி

இ. ராமனாதபுரம் ஈ. ஸ்ரீவில்லிபுத்தூர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வீரபாண்டிய கட்டபொம்மனின் தந்தை பெயர் ______________
2. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் ______________
3. பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்த தளபதி ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. மருது பாண்டியர் | | அ. | நெல்கட்டும் செவல் |
| 2. கோபால நாயக்கர் | | ஆ. | மைசூர் |
| 3. கேரள வர்மா | | இ. | மலபார் |
| 4. கிருஷ்ணப்ப நாயக்கர் | | ஈ. | திண்டுக்கல் |
| 5. புலித் தேவர் | | உ. | சிவகங்கை |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. வட இந்தியாவின் அரசியலில் பாளையக்காரர்கள் வலிமைபெற்று விளங்கினர்.

ஆ. யூசுப் கான், கான் சாகிப் என்றும் அழைக்கப்பட்டார்.

இ. சிவசுப்ரமணிய பிள்ளை, மருதுபாண்டியரின் அமைச்சர்.

ஈ. தென்னிந்திய கூட்டிணைவு ஊமைத்துரையின் தலைமையில் அமைக்கபட்டது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. தமிழ்நாட்டில் விஜயநகர ஆட்சி விரிவுபடுத்தப்பட்டபோது பாளையக்காரர் முறை தோன்றியது.
2. சிவகிரி பாளையக்காரர் ஆங்கிலேயர் வணிகக் குழுவிற்கு கட்டுப்பட்டிருந்தார்.
3. 1801ல் ஊமைத்துரை, செவத்தையா ஆகியோரின் தலைகள் மதுரையில் துண்டிக்கப்பட்டன.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. புலித்தேவர்
2. பாளையக்காரர் முறை
3. பானர்மேன்

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. 1801 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. பிரிட்டிஷாருக்கு எதிராக கட்டபொம்மன் மேற்கொண்ட வீரப்போராட்டத்தை மதிப்பிடுக.

# பாடம் – 10


## வேலூர் கலகம்

**கற்றல் நோக்கங்கள்**

*இப்பாடத்தின்மூலம் மாணவர் அறிந்து கொள்ளப்போவது*

1. *வேலூர் கலகத்துக்கான காரணங்கள்*
2. *கலகத்தின் நோக்கங்கள்*
3. *கலகம் ஒடுக்கப்படுதல்*
4. *பிரிட்டிஷாருக்கு எதிரான இந்த எழுச்சியின் தன்மை.*

தமிழ்நாட்டின் முந்தைய வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகர் வேலூர். தற்போது வேலூர் மாவட்டம் என்றே அழைக்கப்படுகிறது. இது கோட்டையுடன் கூடிய அழகிய நகரமாகும்.



**வேலூர் கோட்டை**

இந்தியாவில் கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சி விரிவடைந்த போது உள்நாட்டு அரசர்களும் அவர்களை அண்டியிருந்தவர்களும் துன்பத்திற்கு உள்ளானார்கள். ஒன்று அவர்கள் அடங்கிப் போனார்கள் அல்லது கிளர்ந்து எழுந்தார்கள். இத்தகைய கிளர்ச்சிகள் தொலைநோக்குப் பார்வையுடனோ கொள்கையுடனோ நடத்தப்படவில்லை. மாறாக, உள்நாட்டு அரசர்கள் தாங்கள் இழந்த பகுதியை மீட்கவும், பழைய நிலமானிய அமைப்பை மீண்டும் கொண்டுவருவதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். புலித்தேவர், கான் சாகிப், கட்டபொம்மன், மருது சகோதரர்கள் போன்ற தனிநபர்களின் வீரத்திற்கும் தியாகத்திற்கும் ஈடு இணை கிடையாது. ஆனால், இந்த தலைவர்கள் ஒன்றுபட்ட காரணத்துக்காக அல்லது கொள்கைக்காக சாமானிய மக்களை ஒன்று திரட்டத் தவறினார்கள். தேசியம், அரசியல் விழிப்புணர்வு, ஒன்றுபட்ட போராட்டம் என்ற இந்த கருத்துக்கள் பிந்தைய நாட்களிலேதான் தென்பட்டன.

**1806**ல் வேலூரிலிருந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இந்த நிகழ்ச்சி இதற்கு முன்பு நடந்த கிளர்ச்சியிலிருந்து தன்மை ரீதியாக வேறுபடுகிறது. வேலூர்க்

கலகம் சிப்பாய்களால் நடத்தப்பட்டது. முந்தைய கிளர்ச்சிகள் அந்தந்த பகுதியின் நலனுக்காக நடைபெற்றன. ஆட்சியாளர்கள் தங்களது பதவியைத் தக்க வைத்துக்கொள்ள கிளர்ந்தெழுந்தனர். ஆனால், வேலூர்க்கலகம் வணிக்குழுவின்கீழ் பணியாற்றிய சிப்பாய்களிடமிருந்து இயற்கையாய் வெளிவந்த உணர்வுகளின் வெளிப்பாடாகும். இது வணிகக்குழுவிற்கு எதிராக சிப்பாய்கள் எழுப்பிய கண்டனக் குரலாகும். இந்த எதிர்ப்பு வருங்காலத்தில் எழவிருந்த கலகத்திற்கு கட்டியம் கூறுவதாக அமைந்தது.

**காரணங்கள்**

வேலூர் கலகத்தற்கு பல காரணங்கள் கூறுப்படுகின்றன. வணிகக் குழுவின் ராணுவத்தில் பணியாற்றிய சிப்பாய்கள் பல்வேறு சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது. சுதேச அரசர்கள் அரசியல் களத்திலிருந்து மறையத் தொடங்கியதால், சிப்பாய்கள் வணிகக்குழுவிடம் பணியாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கண்டிப்பான ஒழுக்கம், நடைமுறை, புதியவகை ஆயுதங்கள், புதிய வழிமுறைகள், சீருடை போன்றவை சிப்பாய்களுக்கு புதியதாக தோன்றின. நீண்டகாலமாக பழைய பழக்கங்களில் ஊறித் திளைத்தவர்களுக்கு புதியன புகுதல் என்பது சற்று கடினமாகவும் தவறாகவும் புலப்படும் என்பது இயற்கையே.

அப்போது சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் அனுமதியோடு, படைத்தளபதி சர் ஜான் கிரடாக் தலைப்பாகையுடன் கூடிய புதிய சீருடையை அறிமுகப்படுத்தினார். இந்த தலைப்பாகை ஐரோப்பிய தொப்பியைப் போலவே இருந்தது. காதணிகளை அணிவதும், சமய சின்னங்களை இட்டுக்கொள்வதும் தடை செய்யப்பட்டன.

மேலும் சிப்பாய்கள் தங்களது முகத்தை நன்றாக மழித்து, மீசைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும் என்று விதிக்கப்பட்டனர். ஆனால், இந்த நடவடிக்கைகளை தங்களது சமய மற்றும் சமூகப்பழக்க வழக்கங்களுக்கு இழைக்கப்பட்ட அவமதிப்பாக சிப்பாய்கள் கருதினார்கள். மேலும், அவர்கள் அனைவரையும் கிறித்துவ சமயத்திற்கு மாற்றும் முயற்சிக்கு இது முன்னோடி என்ற பரவலான கருத்தும் நிலவியது.

ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்களை தாழ்ந்தவர்களாக நடத்தினர். இனப்பாகுபாடும் காணப்பட்டது. வணிகக்குழுவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சிப்பாய்களின் கிளர்ச்சிகளுக்கு இது மன ரீதியான காரணமாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னர் சிப்பாய்கள் தங்களது மண்ணின் மைந்தர்களான இந்து அல்லது முஸ்லிம் ஆட்சியாளர்களிடம் பணிபுரிந்தனர். தற்போது அந்நியருக்கு பணியாற்றினாலும், முதன்மையான நாட்டுப்பற்றை அவர்கள் மறந்துவிடவில்லை.

வேலூர் கலகம் வெடிக்குமுன்பே, இந்திய சிப்பாய்கள் தங்களது எதிர்ப்புகளை அவ்வப்போது வெளிப்படுத்தி வந்தனர். 1806 மே திங்களில் வேலூர்ப் படையின் ஒரு பிரிவினர் புதிய விதியை எதிர்த்தனர். ஆனால், அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அந்த சிப்பாய்களும் தண்டிக்கப்பட்டனர். 500 முதல் 900 கசையடிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட தண்டனையாகும்.

ஜுன் 17ம் தேதி 1806ம் ஆண்டு முதல் படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவசிப்பாய் முஸ்தபா பெக் தன்னுடைய உயர் அதிகாரியான கர்னல் போர்ப்ஸிடம் இரகசியமாக ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளையும், துருப்புகளையும் பூண்டோடு அழிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்பதை தெரிவித்தார். ஆனால் இச்செய்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

வேலூர் கலகம் உருவாகுவதற்கு முன் திப்புவினுடைய மூத்த மகன் பதே ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக ஒரு கூட்டணியை மராத்திய, பிரெஞ்சு உதவியுடன் அமைக்க முற்பட்டார்.

மேலும் பதே ஹைதர் இரகசிய தகவல்களை முகமது மாலிக் என்பவர் வாயிலாக பெற்றார். குறிப்பாக வேலூர் இராணுவப் புரட்சிக்கு பதே ஹைதர் மற்றும் மொய்சுதீன் இருவரும் இணைந்து திட்டம் தீட்டினர்.

வேலூர்கலகம், முறையாக திட்டமிடப்படாவிட்டாலும், அப்பகுதியில் மீண்டும் முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற விருப்பம் இருந்தது. புலித்தேவர், கான்சாகிப், கட்டபொம்மன், மருது சகோதரர்கள், திப்பு சுல்தான் போன்றோருக்கு ஏற்பட்ட கதியை சிப்பாய்கள் நன்கு அறிந்திருந்தனர். ஆகவே, பிரிட்டிஷாரைப்பற்றிய ஒரு கசப்புணர்வு அவர்களுக்கு இருந்தது. இத்தகைய காரணங்களால், வேலூர்க்கலகம் மூண்டது.

**கலகத்தின் போக்கு**

ஜூலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவை நேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர். இப்படைப் பிரிவுகளின் இராணுவ அதிகாரி கர்னல் பான்கோர்ட் இக்கலகத்திற்கு முதல் பலியானார். 23வது படைப்பிரிவின் இராணுவ அதிகாரியான கர்னல் மி கேரஸ் அணிவகுப்பு மைதானத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டார். இக்கலகத்தின் போது அடுத்ததாக கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஆம்ஸ்ராங் ஆவார். ஏறத்தாழ 12க்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

வேலூர் கோட்டைக்கு வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் 14 மைல்களுக்கு அப்பாலுள்ள இராணிப்பேட்டைக்கு விரைந்து சென்று அங்கிருந்த இராணுவத்தளபதி கர்னல் ஜில்லஸ்பியிடம் காலை 7 மணியளவில் வேலூர் புரட்சியைப் பற்றி தெரிவித்தார். சுமார் காலை 9 மணியளவில் ஜில்லஸ்பி இராணுவ படையுடன் வேலூர் கோட்டையை அடைந்தார்.

கிளர்ச்சியாளர்கள் திப்பு சுல்தானின் மூத்த மகன் பதே ஹைதர் என்பவரை புதிய சுல்தானாக அறிவித்தனர். திப்பு சுல்தானின் புலிக்கொடியையும் பறக்கவிட்டனர். ஆனால், இக்கிளர்ச்சி கர்னல் ஜில்லெஸ்பியினால் உடனடியாக அடக்கப்பட்டது. கோட்டைக்குள் மட்டும் 800 இந்திய சிப்பாய்கள் இறந்து கிடந்தனர். திருச்சியிலும் வேலூரிலும் 600 சிப்பாய்கள் சிறைப்படுத்தப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கலகம் ரத்தக்களரியில் முடிவடைந்தது. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

வேலூர்க்கலகம் தோல்வியடைந்தது. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சியில் தோன்றிய சிப்பாய்களின் எதிர்ப்புகளுக்கு இது ஒரு தொடக்கமாக அமைந்தது. 18ஆம் நூற்றாண்டு குறுகிய ஆட்சியாளர்களின் எதிர்ப்புக்கு பெயர் பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் முதல் அறுபது ஆண்டுகள் சிப்பாய்களின் எதிர்ப்பை பிரிட்டிஷார் சந்தித்தனர்.

வேலூர்க்கலகம் 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்துக்கு வழிவகுத்தது என்ற கூற்றை கே.கே. பிள்ளை என்ற வரலாற்று ஆசிரியர் மறுக்கிறார். 1857 ஆம் ஆண்டு முதல் இந்திய சுதந்திரப் போருக்கு வேலூர் கலகம் முன்னோடி என்று சவார்க்கர் கருதுகின்றார். இந்திய விடுதலைக்கு தமிழர்களே முன்னோடிகளாகத் திகழ்ந்தனர் என்று என். சஞ்சீவி கூறியுள்ளார். காலனியாதிக்கத்தை எதிர்த்து மருது சகோதரர்கள் நடத்திய போராட்டத்தின் தொடர்ச்சியே வேலூர்க் கலகம் என்று கே. ராசய்யன் என்ற வரலாற்று அறிஞர் கூறுகிறார்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர்கள் அறிந்து கொண்டவை*

1. *வேலூர் சிப்பாய் கலகத்துக்கான பல்வேறு காரணங்கள்*
2. *பிரிட்டிஷார் ராணுவத்தில் நடைமுறைப்படுத்திய பல்வேறு புதிய விதிமுறைகளும், சிப்பாய்களின் குறைகளும்.*
3. *கலகம் அடக்கப்பட்டது.*
4. *இந்த கலகத்தின் தன்மை.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருவனவற்றுள் வேலூர் கலகத்திற்கான காரணம் எது ?

அ. வாரிசு இழக்கும் கொள்கை

ஆ. கப்பம் வசூலித்தனர்

இ. புதிய ஆயுதங்களையும் சீருடைகளையும் அறிமுகப்படுத்தியது.

ஈ. பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதார சுரண்டல்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வேலூர் கோட்டையின் இராணுவத் தளபதி _______________

2. _______________கோட்டைக்கு வெளியே இருந்துகொண்டு இராணிப்பேட்டைக்கு சென்று உதவியை நாடினார்.

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பதே ஹைதர் | அ. | சென்னை ஆளுநர் |
| 2. | கர்னல் பான்கோர்ட் | ஆ. | கலகத்தை அடக்கியவர் |
| 3. | வில்லியம் பெண்டிங் | இ. | திப்புவின் மகன் |
| 4. | கர்னல் ஜில்லெஸ்பி | ஈ. | கலகத்தில் கொல்லப்பட்டவர் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. வேலூர் கலகத்திற்கு புதிய இராணுவ விதிமுறைகள் முக்கிய காரணம்.

ஆ. வேலூர் கோட்டையில் திப்புவின் குடும்பம் சிறை வைக்கப்படவில்லை.

இ. திப்புவின் மகன் பிரான்சின் உதவியை நாடவில்லை.

ஈ. கலகத்திற்குப் பின் திப்புவின் மகன்கள் பெனாங்கிற்கு கைதிகளாக அனுப்பப்பட்டனர்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. வேலூர் கலகத்தைப் பற்றி இந்திய சிப்பாயான முஸ்தபா பெக் முன் எச்சரிக்கை செய்தார்.
2. வேலூர் கலகத்தின்போது ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் ஒருவர் கூட கொல்லப்படவில்லை.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. சர் ஜான் கிரடாக்
2. கர்னல் ஜில்லஸ்பி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. வேலூர் கலகத்தின் போக்கினை விவரி

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. 1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

# பாடம் – 11

# 1857 ஆம் ஆண்டு பெருங்கலகம்

**கற்றல் நோக்கங்கள்**

*மாணவரை பின்வருவனவற்றை அறியும்படி செய்தல் :*

1. *1857 ஆண்டு பெருங்கலகத்தின் தன்மை.*
2. *கலகத்திற்கான அடிப்படைக் காரணங்கள்.*
3. *கலகம் வெடித்ததற்கு உடனடிக் காரணம்*
4. *கலகத்தின் போக்கு*
5. *கலகம் தோல்வியடைந்ததற்கான காரணங்கள்*
6. *கலகத்தின் விளைவுகள்*

இந்திய மக்களின் ஆழ்மனதில் ஊறிக்கிடந்த தேசியத்திற்கான விதைகளை 1857 ஆம் ஆண்டு கலகம் ஊன்றியது. 1947 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற இடைவிடாத போராட்டத்தின் துவக்கமாக இக்கலகம் இருந்தது. எனவே, 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் தன்மை, பண்பு மற்றும் காரணங்களை நன்கு ஆய்வதன்மூலம் அதற்குப்பின் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நன்கு புரிந்துகொள்ளலாம்.

**கலகத்தின் தன்மை**

1857 ஆம் ஆண்டு கலகத்தின் பண்பினை பிரிட்டிஷ் அறிஞர்களுடைய வரலாற்று ஏடுகள் குறைத்தே மதிப்பிடுகின்றன. சர் ஜான் லாரன்ஸ் இக்கலகத்தை வெறும் ராணுவப் புரட்சி என்றும், பிரிட்டிஷ் ஆட்சியைத் தூக்கியெறிய நடத்தப்பட்ட சதி அல்ல என்றும் கருதுகின்றார். ஆனால், இந்திய அறிஞர்கள் 1857 ஆம் ஆண்டு கலகத்தை புகழ்ந்து எழுதியுள்ளனர். வீரசவார்க்கர் இதனை முதல் இந்திய விடுதலைப் போர் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆர். சி. மஜூம்தார், எஸ்.என். சென் என்ற இரண்டு இந்திய வரலாற்று அறிஞர்கள் 1857 ஆம் ஆண்டு கலகத்தை ஆழ்ந்து ஆய்வு செய்துள்ளனர்.

இவ்விருவருமே தங்களது கருத்துக்களில் மாறுபடுகின்றனர். எஸ்.என். சென் 1857 ஆம் ஆண்டு கலகம் இந்திய விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதி என்று கருதுகிறார். ஆர்.சி. மஜீம்தார் 1857 ஆம் ஆண்டுக்கு முன்பு தோன்றிய சிவில் அல்லது ராணுவ கிளர்ச்சிகள் அனைத்தும் ஆங்காங்கே நடைபெற்றவை என்றும், பின்னர் அவை 1857 ஆம் ஆண்டு பெரும் கலகமாக உச்சவடிவம் பெற்றது என்றும் குறிப்பிடுகிறார்.

**கலகத்துக்கான காரணங்கள்**

**அரசியல் காரணங்கள்**

மக்களின் மனக்குறையும் அமைதியின்மையும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிரான கலகங்களாக வெடித்தன. இவை ஆட்சியாளர்கள் மற்றும் அரச குடும்பங்களை

மட்டும் சார்ந்தது எனக் கூறமுடியாது. மாறாக, எந்தவொரு பகுதியில் பிரிட்டிஷ் அரசு காலூன்றினாலும் பிரிட்டிஷ் ஆட்சியை அப்பகுதி மக்கள் விரும்பவில்லை. குறிப்பாக, பிரிட்டிஷ் பேரரசுடன் நீதிக்குப்புறம்பான வகையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பர்மா, அஸ்ஸாம், குடகு, சிந்து, பஞ்சாப் போன்ற பகுதிகளில் பிரிட்டிஷ் எதிர்ப்புணர்வு அதிகமாக காணப்பட்டது. வாரிசு இழப்பு கொள்கையும் அதனை டல்ஹவுசி பிரபு நடைமுறைப்படுத்திய விதமும், அதனால் நேரடியாக பாதிக்கப்பட்ட இந்திய ஆட்சியாளர்களிடையே தீராத மனக்குறையையும் அச்சத்தையும் தோற்றுவித்தது.

**பொருளாதார காரணங்கள்**

செல்வச் சுரண்டல், தொழில் நலிவு, அதிகரிக்கப்பட்ட நிலவரி ஆகியவையே 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட பொதுவான இந்தியப் பொருளாதார நிலையாகும். கிழக்கிந்திய வணிகக்குழு அரசியல் சக்தியாக மாறிய பிறகு, இந்தியர்களின் நலனுக்கு குந்தகமாக, அதனை தங்களது வணிக முன்னேற்றத்துக்கு பயன்படுத்திக் கொண்டது. பிரிட்டனில் இந்தியப் பொருட்களின் மீது அதிக வரிகளை விதித்து இந்திய வணிகத்தையும் தொழிலையும் ஒருபுறம் அழித்தனர். இந்தியாவிற்குள் பெருமளவு பிரிட்டிஷ் பொருட்களை கொண்டுவந்து குவித்து இந்தியத் தொழிலை மேலும் சீரழித்தனர்.

இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின்போது கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்பட்டனர். ஆனால், கூடவே இயந்திரத் தொழில்கள் வளர்ச்சியடைந்தமையால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது. ஆனால், இந்தியாவில் கைத்தொழில் நசிந்து ஆயிரக்கணக்கான கைவினை கலைஞர்கள் வேலையிழந்து தவித்தபோது, புதிய தொழிலமைப்புகள் ஏதும் உருவாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1833ல் இந்தியாவில் புதிய பண்ணை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால், குடியானவர்கள் எண்ணற்ற துன்பங்களுக்கு ஆளானார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் புதிய பண்ணைகளை வாங்குவதற்கு அனுமதிக்கப்பட்டனர். வங்காளம், பீகார் பகுதிகளில் அவுரிச்செடி பண்ணைகளிலிருந்த குடியானவர்கள் இந்த பண்ணை முறையில் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

**சமூகக் காரணங்கள்**

இந்தியர்கள்மீது ஆங்கிலேயர் காட்டிய அகந்தையும், தாறுமாறான தாக்குதல்களும் பொதுமக்களை பெரிதும் பாதித்தன. கிறித்துவ சமயப்பரப்பாளர்களின் நடவடிக்கைகள் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களிடையே பெரும் அச்சத்தை தோற்றுவித்தன. அவர்கள் ஏற்படுத்திய கல்விக் கூடங்களில் கீழ்த்திசை பாடங்களுக்குப் பதில் மேலை நாட்டுக்கல்வியும் பண்பாடும் பின்பற்றப்பட்டன. இந்தியக் குடிமக்கள் தங்களது சமுதாய அடையாளங்களை இழந்து வருவதாகக் கருதினர்.

**ராணுவ காரணங்கள்**

பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்திய வீரர்களிடையே பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. குறைந்த ஊதியம், பதவி உயர்வுக்கான சாத்தியக் கூறுகள் இல்லாமை ஆகியவற்றால் அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். இந்திய சிப்பாய்களின் சமூகப் பழக்கவழக்கங்களுக்கும், சமய உணர்வுகளுக்கும் பிரிட்டிஷ் உயர் அதிகாரிகள் சற்றும் மதிப்பளிக்கவில்லை. பொதுவாக, தங்கள் எஜமானர்களுக்கு நம்பிக்கையானவர்களாக அவர்கள் இருந்தபோதிலும், இத்தகைய காரணங்களால் அவர்கள் கலகத்தில் ஈடுபடும்படி ஆயிற்று.

1857 ஆம் ஆண்டு கலகத்திற்கு முன்னோடியாக விளங்கிய 1806 ஆம் ஆண்டு வேலூர்க் கலகம் பிரிட்டிஷ் அதிகாரிகளின் மனப்பாங்கை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

அயல்நாடுகளில் சென்று பணியாற்றும்போது அளிக்கப்பட்டு வந்த இரட்டைப்படி (பேட்டா) ரத்து செய்யப்பட்டதும் சிப்பாய்களின் அதிருப்தி மேலோங்குவதற்கு மற்றொரு முக்கிய காரணம் ஆகும். எனவே, பிரிட்டிஷாருக்கு எதிரான வெறுப்பு பரவலாகவே காணப்பட்டது. 1857 ஆம் ஆண்டு குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துச் சிதறுவதற்கு தயாராக இருந்தது. நெருப்பை கொழுந்துவிட்டு எரியச் செய்வதற்கு ஒரு தீப்பொறி மட்டுமே தேவைப்பட்டது.

**கலகத்தின் தோற்றம்**

கொழுப்பு தடவிய தோட்டக்கள் 1857 ஆம் ஆண்டு கலகத்துக்கு உடனடி காரணமாக அமைந்தன. இந்திய ராணுவத்தில் புதிய வகை என்பீல்டு துப்பாக்கிகள் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் தோட்டாக்களில் கொழுப்பு தடவப்பட்டிருந்தன. துப்பாக்கிகளுக்குள் பொருத்தப்படுவதற்கு முன்பு சிப்பாய்கள் அதனை வாயால் கவ்வி உறைகளை அகற்ற வேண்டியதாக இருந்தது. அதில் தடவப் பட்டிருந்த கொழுப்பு மாட்டு இறைச்சி மற்றும் பன்றி இறைச்சியிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இதனால், இந்து மற்றும் முஸ்லிம் சிப்பாய்களின் சமய உணர்வுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அரசாங்கம் வேண்டுமென்றே தங்களது சமய மற்றும் கலாச்சார அடையாளங்களை அழிக்க முற்படுகிறது என சிப்பாய்கள் எண்ணினர். எனவே, அவர்கள் கலகத்தில் ஈடுபட்டனர்.

1857 மார்ச் 29 ஆம் நாள் பாரக்பூரில்தான் முதலில் கலகம் வெடித்தது. மங்கள் பாண்டே என்ற சிப்பாய் கொழுப்பு தடவிய தோட்டாக்களை பயன்படுத்த மறுத்து, தன்னந்தனியாகவே தனது அதிகாரியைத் தாக்கி அவரைக் கொன்றான். இதற்காக, மங்கள்பாண்டே தூக்கிலிடப்பட்டான். அவனது படைப்பிரிவும் கலைக்கப்பட்டது. கிளர்ச்சிக்கு காரணமாக இருந்த சிப்பாய்களும் தண்டிக்கப்பட்டனர்.

பிரிட்டிஷாரின் இந்த நடவடிக்கை பதட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது. தொடர் நிகழ்ச்சிகளுக்கும் வித்திட்டது. 1857 மே திங்களில் 3வது படைப்பிரிவைச் சேர்ந்த 85 சிப்பாய்களுக்கு, அவர்கள் கொழுப்பு தடவிய தோட்டாக்களை பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்தமைக்காக, நீண்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. எனவே, மே 10 ஆம் நாள் அவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, தங்களது அதிகாரிகளைக் கொன்றுவிட்டு, சிப்பாய்களை விடுதலை செய்தனர். பின்னர், டெல்லி நோக்கி புறப்பட்டனர். மீரட்டிலிருந்த தளபதி ஹுவட் என்பவரால் இதனைத் தடுக்க முடியவில்லை.



**இரண்டாம் பகதூர் ஷா**

மறுநாள் காலை, கிளர்ச்சியாளர்கள் டெல்லியை அடைந்தனர். 1857 மே 12ம் நாள் டெல்லியைக் கைப்பற்றினர். டெல்லியிலிருந்து படையதிகாரி லெப்டினன்ட் வில்டாஷ்பி என்பவரால் கலகக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முகலாய வம்சத்தைச் சேர்ந்த வயதான, பெயரளவுக்கே பேரரசராக இருந்த இரண்டாம் பகதூர்ஷா என்பவரை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர். வடக்கு மற்றும் மத்திய இந்தியாவிலிருந்த லக்னோ, அலகாபாத், கான்பூர், பனாரஸ், பீகாரின் சில பகுதிகள், ஜான்சி போன்ற இடங்களிலும் கலகம் வேகமாகப் பரவியது.

**டெல்லி**

டெல்லியில் பகதூர் ஷா பெயரளவுக்கே கலகத்துக்கு தலைமை வகித்தார். உண்மையில் பகத்கான் என்ற தளபதி கலகக்காரர்களை வழி நடத்தினார். பிரிட்டிஷ் தரப்பில், நிக்கல்சன், வில்சன், பெய்ர்ட் ஸ்மித், நெவில் சாம்பர்லின் போன்றவர்களின் கூட்டு முயற்சியால் 1857 செப்டம்பரில் டெல்லி கலகக்காரர்களிடமிருந்த மீட்கப்பட்டது. இரண்டாம் பகதூர்ஷா சிறைப்பிடிக்கப்பட்டு ரங்கூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 1862ல் அங்கேயே அவர் இறந்தார்.

**கான்பூர்**



நானா சாகிப்



தாந்தியா தோப்

கடைசி பேஷ்வா, இரண்டாம் பாஜிராவின் தத்துப் புதல்வரான நானா சாகிப் கான்பூரில் நடைபெற்ற கலகத்துக்கு தலைமையேற்றார். அங்கிருந்த ஆங்கிலேயரை விரட்டியடித்து விட்டு தம்மை பேஷ்வாவாக அறிவித்துக் கொண்டார். நானா சாகிப்புக்கு பக்கபலமாக தாந்தியா தோப் மற்றும் அசிமுல்லா என்ற இருவரும் இருந்தனர். 1857 ஜுன் 27 அன்று கான்பூர் படைப்பிரிவின் பிரிட்டிஷ் தளபதி சர் ஷோ வீலர் கலகக்காரர்களிடம் சரணடைந்தார். ஆனால், பிரிட்டிஷ் தளபதி சர்காலின் காம்ப்பெல் என்பவரால் கான்பூர் விரைவில் மீட்கப்பட்டது.

**லக்னோ**



அயோத்தி பேகம்

லக்னோவில் நடைபெற்ற கலகத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது அயோத்தி பேகம் ஆவார். சிப்பாய்கள், ஜமீன்தார்கள், குடியானவர்கள் ஆகியோரின் உதவியோடு, அயோத்தி பேகம் பிரிட்டிஷாருக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டார். முதன்மை ஆணையர் ஹென்றி லாரன்ஸ் பிரிட்டிஷாரைக் காப்பாற்ற முயற்சித்தார். ஆனால் நடைபெற்ற மோதலின்போது ஒரு வெடி விபத்தில் அவர் கொல்லப்பட்டார். சர் காலின் கேம்ப்பெல் லக்னோவிற்கு விரைந்து வந்து கலகத்தை ஒடுக்கி பிரிட்டிஷ் துருப்புக்களை விடுவித்தார்.

**ஜான்சி**

ஜான்சியைச் சேர்ந்த, கங்காதர்ராவின் விதவையான, ராணி லட்சுமிபாய் இக்கலகத்தில் பெரும்பங்கு வகித்தார். டல்ஹவுசியின் வாரிசு இழப்புக் கொள்கையால் நேரடியாக பாதிக்கப்பட்டவர், ராணி லட்சுமிபாய். தாந்தியா தோப் அவருடன் சேர்ந்து கொண்டார். ராணியும், தாந்தியா தோப்பும் சேர்ந்து குவாலியரைக் கைப்பற்றினர். ஆனால், 1858 ஏப்ரல் 3 ஆம் நாள் சர் ஹோ ரோஸ் தாந்தியா தோப்பை முறியடித்து ஜான்சியை வீழ்த்தினார். பின்னர், குவாலியரையும் கைப்பற்றினார். 1858 ஜுன் 17ல் ஜான்சி ராணி போர்க்களத்திலேயே வீரமரணம் அடைந்தார். தாந்தியா தோப் சிறைப்பிடிக்கப்பட்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டது மற்றும் கான்பூர் படுகொலை ஆகிய குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டார்.



ராணி லட்சுமி பாய்

**பீகார்**

அயோத்திக்கு அருகிலிருந்த ஜக்தீஷ்பூரின் ஜமீன்தார் கன்வர்சிங் பிரிட்டிஷ் ஆட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டார். பீகாரில் நடைபெற்ற கலகத்தை வழிநடத்தியவர் இவரேயாவார். பிரிட்டிஷாருடன் ஏற்பட்ட மோதலில் படுகாயமடைந்த இவர் ஜக்தீஷ்பூரில் 1858 ஏப்ரல் 27ல் இறந்தார்.

இறுதியாக, 1857 ஆண்டு கலகம் ஒடுக்கப்பட்டது. பிரிட்டிஷார் வெற்றி பெற்றனர். அரசப் பிரதிநிதி கானிங் பிரபு இந்தியா முழுவதும் அமைதியை அறிவித்தார்.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்**


இக்கலகத்தின் தோல்விக்கு தலையாய காரணம், ஒட்டுமொத்த இந்தியாவும் பங்கெடுக்கவில்லை என்பதாகும். சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரான, வட்டிக்கு கடன் கொடுப்போர் (Money lenders), வியாபாரிகள், படித்த இந்தியர்கள் ஆகியோர் இக்கலகத்தை ஆதரிக்கவில்லை. அறிவு ஜீவிகள் இக்கலகத்தில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை. மேலும், பிரிட்டிஷ் பேரரசின் வலிமை கலகக்காரர்களைவிட பன்படங்கு அதிகமாகும். அதேபோல், கிளர்ச்சியாளர்களிடம் ஒரு பொதுவான திட்டமோ, அல்லது திட்டம் வகுத்து செயல்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு மத்திய அமைப்போ காணப்படவில்லை.

மாறாக, பிரிட்டிஷாரிடம் நல்ல போர்த் தளவாடங்கள் இருந்தன. புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளான தந்திமுறை, அஞ்சல் தொடர்புகள் அவர்களுக்கு கலகத்தை அடக்குவதற்கு பேருதவியாக இருந்தன. இதனால், பிரிட்டிஷார் இந்தியாவின் அனைத்து பகுதிகளுடனும் தொடர்பு கொள்ளவும், துருப்புக்களை தேவைக்கேற்ப ஆங்காங்கே உடனுடக்குடன் அனுப்பி வைக்கவும் ஏதுவாக இருந்தது. இத்தகைய காரணங்களால் 1857 ஆம் ஆண்டு கலகம் தோல்வியடைந்தது. பிரிட்டிஷார் வெற்றி பெற்றனர்.

**கலகத்தின் முக்கியத்துவம் மற்றும் விளைவுகள்**

1857 ஆம் ஆண்டு கலகம் ஒடுக்கப்பட்ட போதிலும், அது இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்தது. பிரிட்டிஷாருக்கு பரவலான எதிர்ப்பு இருப்பதை இது புலப்படுத்தியது. இந்திய சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து பிரிவினரும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக சிலிர்த்து எழுந்தனர். பொதுமக்களும்கூட ஆங்காங்கே ஆயுதமேந்தி போரிட்டனர். ஈட்டி, கோடரி, வில், அம்பு, கழி, கம்பு போன்ற கையில் கிடைத்த ஆயுதங்களை அவர்கள் பயன்படுத்தினர். ஆனால், இத்தகைய பொதுமக்களின் பங்கு நாடு முழுவதும் காணப்படவில்லை. ஓரிரு இடங்களில் அவ்வப்போது மட்டுமே மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர். இருப்பினும், இந்த மக்களின் பங்களிப்பு 1857 ஆம் ஆண்டு கலகத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தை கொடுத்தது. இக்கலகத்தில் காணப்பட்ட இந்து – முஸ்லிம் ஒற்றுமையும் மற்றொரு சிறப்புக் கூறாகும்.

இக்கலகத்தினால் பல முக்கிய விளைவுகளும் ஏற்பட்டன. இந்திய ஆட்சியில் அடிப்படை மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. 1858 நவம்பர் 1 ஆம் நாள் பேரரசியின் அறிக்கைப்படி பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சி நடைமுறைக்கு வந்தது. இந்திய தலைமை ஆளுநர் அரசப்பிரதிநிதி (வைஸ்ராய்) என்று அழைக்கப்பட்டார். 1858 ஆண்டு சட்டப்படி கானிங் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராகவும், முதல் அரசுப் பிரதிநிதியாகவும் செயல்படும் நல்வாய்ப்பை பெற்றார்.



1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி
◆ தீவிரமாக நடைபெற்ற இடங்கள்
காஷ்மீர்
சீனாப் நதி
சிந்துநதி
சட்லெஜ் நதி
மீரட்
பகவல்பூர்
நேபாளம்
கையாபூர்
டெல்லி
பாரய்லி
லக்னோ
பிரம்மபுத்திரா ஆறு
அஜ்மீர்
சிந்தியா
கான்பூர்
அசாம்
குவாலியர்
பெனாரசு
ஜான்சி
பீகார்
வங்காளம்
பேரக்பூர்
பரோடா
போபால்
கொல்கத்தா
நர்மதா நதி
சம்பல்பூர்
தப்தி நதி
நாக்பூர்
கோதாவரி ஆறு
மும்பை
ஐதராபாத்
வங்கக் கடல்
அரபியக் கடல்
கோவா
கிருஷ்ணா நதி
சென்னை
மைசூர்
காவிரி ஆறு
புதுச்சேரி
வ
மே
கி
தெ
இலங்கை
இந்து மகாக் கடல்
◆ – புரட்சி நடைபெற்ற இடங்கள்

பேரரசியின் அறிக்கைப்படி 1858 நவம்பர் முதல் நாள் அலகாபாத்தில் கானிங் பிரபு புதிய அரசாங்கத்தை முறைப்படி அறிவித்தார். பேரரசியின் அறிக்கை இந்திய மக்களின் 'மேக்னா கார்ட்டா' (உரிமை சாசனம்) என்று அழைக்கப்படுகிறது. புதிய பகுதிகள் இணைக்கப்படமாட்டாது, சமய சகிப்புத்தன்மை பின்பற்றப்படும், இந்திய அரசர்களின் உரிமைகள் மதிக்கப்படும், தனது குடிமக்களான ஐரோப்பியர், இந்தியர் அனைவரும் சமமாக நடத்தப்படுவர் என்று பல வாக்குறுதிகளை இந்த அறிக்கை வழங்கியது.

1857 ஆம் ஆண்டு கலகம் ஒரு சகாப்தம் முடிந்து மற்றொன்று தொடங்கியதைக் குறிப்பிடுகிறது. இந்திய வரலாற்றில் இரண்டு முக்கிய காலக் கட்டங்களை வேறுபடுத்திக்காட்டும் நிகழ்வாக இந்தக் கலகம் விளங்குகிறது. கலகத்துக்கு முன்பு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் தலைமைப் பண்பு வெளிப்பட்டது. கலகத்துப்பின், 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இந்திய தேசியத்தின் வளர்ச்சி முக்கிய வரலாற்று நிகழ்வாகும்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர்கள் அறிந்து கொண்டவை*

1. *1857 ஆம் ஆண்டு கலகத்தின் இருவேறுபட்ட தன்மைகள்*
2. *அடிப்படைக் காரணங்கள் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் ராணுவத் தொடர்பானவை.*
3. *உடனடிக் காரணம், சிப்பாய்களின் தனிப்பட்ட குறைகள்*
4. *கலகத்தின் போக்கு – ஒரே சமயத்தில் நடைபெறவில்லை. ஆங்காங்கே, அவ்வப்போது பொது மக்களும் பங்கேற்றனர்.*
5. *மேம்பட்ட வலிமை கொண்ட பிரிட்டிஷார் கலகத்தை ஒடுக்கினர்.*
6. *கலகத்தின் தோல்வி இந்திய சிப்பாய்கள் மற்றும் கலகத் தலைவர்களின் பலவீனம் வெளிப்பட்டது.*
7. *கலகத்தின் விளைவுகள் மற்றும் முக்கியத்துவம்.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருபவர்களில், 1857 ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப்போர் என்று கருதியவர் யார் ?

   அ. சர் ஜான் லாரன்ஸ் ஆ. வீர சவார்க்கர்

   இ. எஸ்.என். சென் ஈ. ஆர்.சி. மஜூம்தார்

2. பின்வருவனவற்றுள் 1857 ஆம் ஆண்டு கலகத்திற்கு உடனடி காரணமாக இருந்த நிகழ்ச்சி எது ?

   அ. பிரிட்டிஷார் இந்தியப் பொருளாதாரத்தை சுரண்டியது.

   ஆ. டல்ஹவுசி பிரபுவின் வாரிசு இழக்கும் கொள்கை.

   இ. கிறித்துவ சமயப் பரப்பாளர்களின் நடவடிக்கைகள்.

   ஈ. கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பாரக்பூரில் கொழுப்பு தடவிய துப்பாக்கி தோட்டாக்களை பயன்படுத்த மறுத்த சிப்பாய் ______________

2. பேரரசியின் அறிக்கையை கானிங் பிரபு ______________எனும் இடத்தில் படித்தார்.

**III. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. | பகதூர் ஷா | அ. | கான்பூர் |
| 2. | நானா சாகிப் | ஆ. | ஜான்சி |
| 3. | அயோத்தி பேகம்கள் | இ. | பீகார் |
| 4. | ராணி லட்சுமி பாய் | ஈ. | டெல்லி |
| 5. | கன்வர் சிங் | உ. | லக்னோ |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1857 ஆம் ஆண்டு கலகத்தின்போது இரண்டாம் பகதூர் ஷா இந்தியாவின் பேரரசராக அறிவிக்கப்பட்டார்.

ஆ. பிரிட்டிஷ் தளபதி ஜான்சன் கான்பூரை மீண்டும் கைப்பற்றினார்.

இ. கிளர்ச்சியை ஈடுபட்டதற்காக ராணி லட்சுமிபாய் தூக்கிலிடப்பட்டார்.

ஈ. அயோத்தி பேகம்களின் படைத்தலைவர்களில் தாந்தியா தோபேயும் ஒருவர்

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று குறிப்பிடுக.**

1. இரண்டாம் பகதூர் ஷா கைது செய்யப்பட்டு ரங்கூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

2. 1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகம் 1857 ஆம் கலகத்திற்கு ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறது.

3. 1857 ஆம் ஆண்டு கலகம் இந்து – முஸ்லிம்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள்

2. நானா சாகிப்

3. ராணி லட்சுமிபாய்

4. 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. 1857 ஆம் ஆண்டு கலகத்தின் தன்மை பற்றி குறிப்பு எழுதுக.

2. 1857 ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகளை ஆய்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. 1857 ஆம் ஆண்டு கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

2. 1857 ஆம் கலகத்தின் போக்கினை விவரி.

# பாடம் – 12

# 1858 ஆம் ஆண்டுக்குப்பின் பிரிட்டிஷ் இந்தியா : லிட்டன் பிரபு (1876–1880), ரிப்பன் பிரபு (1880–1884) கர்சன் பிரபு (1899–1905)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்ளப்போவது:*

1. *லிட்டன் பிரபுவின் கொள்கைகள் - பஞ்சக் கொள்கை, இந்தியப் பத்திரிகைகள், வாணிபம்.*
2. *இரண்டாம் ஆப்கானியப் போர்*
3. *கல்வி, உள்ளாட்சி அமைப்புகள் குறித்த ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்கள்.*
4. *இல்பர்ட் மசோதா குறித்த சர்ச்சையும், இந்தியர்கள் நலனில் ரிப்பன் பிரபு காட்டிய பரிவும்.*
5. *கர்சன் பிரவுவின் சீர்திருத்தங்களும், வங்கப் பிரிவினையும்*

1857 ஆம் ஆண்டு கலகத்திற்குப்பின் இந்தியாவை ஆட்சிபுரியும் பொறுப்பை பிரிட்டிஷ் அரசாங்கமே எடுத்துக் கொண்டது. 1858ல் கானிங் பிரபு முதல் அரசப் பிரதிநிதியாக பொறுப்பேற்றுக் கொண்டார். 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டமும், பேரரசியின் அறிக்கையும் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களை காட்டுகின்றன. இந்தியாவில் பிரிட்டிஷார் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக பின்பற்றிய கொள்கைக்கு பேரரசியின் அறிக்கையே அடிப்படையாக அமைந்தது. இக்காலத்தில், லிட்டன் பிரபு, ரிப்பன் பிரபு, கர்சன் பிரபு ஆகியோரது நிர்வாக நடவடிக்கைகள் முக்கியமானவையாகும்.

## லிட்டன் பிரபு (1876 – 1880)

லிட்டன் பிரபு ஒரு அனுபவம் மிகுந்த ராஜதந்திரி, திறமையும் ஆற்றலும் பெற்று விளங்கியவர். எனவே, பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி அவரை இந்திய வைஸ்ராயாக நியமித்தார். அவர் பதவியேற்றபோது இந்தியாவில் நிலவிய பஞ்சமும், வடமேற்கு எல்லைப்புறத்தில் காணப்பட்ட அரசியல் பதட்டங்களும் பிரிட்டிஷாருக்கு பெரும் கவலையை அளிப்பதாக இருந்தன.


**விக்டோரியா பேரரசி**

### பஞ்சக் கொள்கை

தொடர்ந்து இரண்டு பருவமழைகள் பொய்த்துப் போனதால் 1876– 78 ஆண்டுகளில் இந்தியாவில் பஞ்சம் தலை விரித்தாடியது. 2,50,000சதுர மைல்கள் பரப்பில் வாழ்ந்த 58 மில்லியன் மக்கள் இந்த பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டனர். சென்னை, மைசூர், ஹைதராபாத், பம்பாய், மத்திய இந்தியா மற்றும் பஞ்சாப் ஆகிய பகுதிகள் மிக மோசமாக பாதிக்கப்பட்டன. ஒரே ஆண்டில் 5 மில்லியன் மக்கள் மடிந்தனர். காலரா மற்றும் கடும் சுரத்தால் மக்கள் பட்ட துன்பங்கள்


லிட்டன் பிரபு

மேலும் அதிகரித்தன. நிலைமையை சமாளிப்பதில் லிட்டன் அரசாங்கம் பெரும் தோல்வி கண்டது. அரசாங்கத்தில் நிவாரண நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை. சர் ரிச்சர்டு ஸ்ட்ரோச்சி தலைமையில் முதலாவது பஞ்சக்குழு (1878–80) ஏற்படுத்தப்பட்டது. போற்றத்தக்க பல பரிந்துரைகளை இக்குழு அரசாங்கத்துக்கு அளித்தது. ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பஞ்ச நிவாரணத்திற்கும் கட்டமைப்பு வேலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று இக்குழு வலியுறுத்தியது. 1883 ஆம் ஆண்டிலிருந்து பஞ்சங்கள் குறித்த சட்டத் தொகுப்பு நடைமுறைப் படுத்தப்பட்டது.

### நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம், மற்றும் ஆயுதங்கள் சட்டம் (1878)

1878 ஆம் ஆண்டு நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஒரு நாட்டுமொழி செய்தித்தாளின் ஆசிரியர், பதிப்பாளர் மற்றும் அச்சக உரிமையாளர் ஆகியோரிடம், ஆங்கிலேய அரசாங்கத்திற்கு எதிராக ஏதும் பிரசுரிக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை ஒரு நீதிபதி கேட்டுப் பெறுவதற்கு வகை செய்யப்பட்டது. உறுதிமொழி மீறப்பட்ட குற்றத்திற்காக, அச்சகத்தின் சாதனங்களை பறிமுதல் செய்யவும் இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டது. இந்த சட்டம் இந்தியப் பத்திரிக்கைகளின் சுதந்திரத்தை நசுக்கியது. இச்சட்டத்தினால், பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான பொதுக் கருத்து உருவாயிற்று. அதே ஆண்டில், ஆயுதங்கள் சட்டமும் இயற்றப்பட்டது. சரியான உரிமங்கள் இன்றி இந்தியர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கு இச்சட்டம் தடைவிதித்தது. இச்சட்டத்தை மீறுவது கிரிமினல் குற்றமாகும். ஆனால், ஐரோப்பியரும், ஆங்கிலோ – இந்தியரும் இச்சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தனர்.

### பிற சீர்திருத்தங்கள்

பிரிட்டிஷ் இந்தியா முழுவதற்கும் ஒரே மாதிரியான உப்பு வரியை லிட்டன் பிரபு அறிமுகப்படுத்தினார். மேலும், அவர் பல்வேறு இறக்குமதி வரிகளை ரத்து செய்தார். தடையற்ற வணிகக் கொள்கையை அவர் ஆதரித்தார். இது இந்தியப் பொருளாதார நலன்களை பெரிதும் பாதித்தது. மேயோ பிரபு ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட நிதி பன்முகப்படுத்தும் கொள்கை லிட்டன் ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டது. நிலவரி, சுங்கவரி, பத்திரங்கள், சட்டம் ஒழுங்கு போன்ற துறைகளில் செலவிட சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. எனினும், மாகாண அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. வருவாய் வசூலிப்பதில் மாகாணங்கள் பெரும் பங்கு ஆற்றவேண்டும் என்று லிட்டன் விரும்பினார். அப்போதுதான் மாகாணங்களின் நிதிநிலைமை வலுப்படும் என்று அவர் கருதினார். 1878 ஆம் ஆண்டு இந்தியருக்கென தனி சட்டப்படியிலான ஆட்சிப் பணித்துறை நிறுவப்பட்டது. பின்னர், இது கலைக்கப்பட்டது.

### லிட்டனும் இரண்டாம் ஆப்கானியப் போரும் (1878–80)

இந்தியா மீது ரஷ்யா படையெடுக்கும் என்ற அச்சமே பிரிட்டிஷாரின் ஆப்கானியக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது. முதல் ஆப்கானியப் போர் (1838–42) இந்தியாவிலிருந்த பிரிட்டிஷாருக்கு பெரும் துன்பமாக முடிவடைந்தது. லிட்டன் பிரபு இந்திய வைஸ்ராயாக நியமிக்கப்பட்டபோது, முற்போக்குக் கொள்கையைப் பின்பற்றுமாறு தாய்நாட்டு அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்டார். ஆப்கானிஸ்தானத்திற்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பிவைக்க ரஷ்யா முயற்சியெடுத்தது. இதுவே இரண்டாம் ஆப்கானியப் போருக்கு முக்கிய காரணமாகும்.

1878ல் போர் தொடங்கியவுடன், பிரிட்டிஷ் படைகள் காபூல் மற்றும் காண்டகார் இடையிலான பகுதியை கைப்பற்றின. ஆப்கானிய ஆட்சியாளர் ஷெர் அலி நாட்டைவிட்டு ஒடி, 1879ல் இறந்தார். அவரது மகன் யாகூப்கான் அடுத்து ஆட்சிக்கு வந்தார். அவருடன் பிரிட்டிஷார் **கண்டமக் உடன்படிக்கையை** செய்து கொண்டனர். காபூலுக்கு ஒரு பிரிட்டிஷ் தூதர் அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால், பிரிட்டிஷ் தூதரையும் அவருடனிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளையும் ஆப்கானிய கிளர்ச்சியாளர்கள் படுகொலை செய்தனர். பிரிட்டிஷ் படைகள் மீண்டும் காபூலை கைப்பற்றியபோதிலும், ஆப்கானிய கிளர்ச்சியாளர்களின் நடவடிக்கைகளினால், அதனைத் தக்கவைத்துக் கொள்வது பெரும் பிரச்சினையாக இருந்தது. 1780ல், திடீர் திருப்பமாக லிட்டன் தனது பதவியிலிருந்து விலகும்படி பணிக்கப்பட்டார். இங்கிலாந்தில் பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டது.

லிட்டனது ஆப்கானியக் கொள்கை மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. காபூலில் பிரிட்டிஷ் தூதரும் அதிகாரிகளும் கொல்லப்பட்டதற்கு அவரே பொறுப்பு என்றும் கருதப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பஞ்சத்தினால் மடிந்தனர். அவர் கொண்டு வந்த நாட்டு மொழி செய்தித் தாள் சட்டம் லிட்டனுக்கு தீராத அவப்பெயரைத் தேடிக் கொடுத்தது.

### ரிப்பன் பிரபு (1880–84)

தல சுய ஆட்சியில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த ரிப்பன் பிரபு ஒரு தாராள மக்களாட்சி வாதியாவார். இங்கிலாந்தின் லிபரல் கட்சி பிரதமரான கிளாட்ஸ்டன் என்பவரால் ரிப்பன் இந்தியாவின் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார். லிட்டன் பின்பற்றிய ஆப்கானிய கொள்கையை திரும்பப் பெறும்படி ரிப்பனுக்கு அறிவுறுத்தப்பட்டது. எனவே, அவர் இந்தியாவுக்கு வந்தவுடனேயே பிரிட்டிஷ் கவுரவத்துக்கு எந்த இழப்பும் ஏற்படாத வகையில் ஆப்கானிஸ்தானத்துடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். காபூலில் பிரிட்டிஷ் தூதரை நியமிக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டது. மைசூரில் ஒரு இந்து அரசரை மீண்டும் நியமித்தது ரிப்பனின் மற்றொரு வரவேற்கத்தக்க நடிவடிக்கையாகும். மேலும், ரிப்பன் நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்துசெய்து இந்திய மக்களிடையே பெரும்புகழ் பெற்றார். பின்னர், இந்திய ஆட்சியமைப்பை தாராளமயமாக்குவதில் ரிப்பன் தமது கவனத்தை செலுத்தினார்.



ரிப்பன் பிரபு

### தல சுய ஆட்சியை அறிமுகப்படுத்துதல் (1882)

அரசியல் பண்புகளில் மிகவும் உயரிய மற்றும் செம்மையான பண்பு தலசுய ஆட்சி என்பது ரிப்பன் பிரபுவின் நம்பிக்கையாகும். ஆகவே, நகரங்களில் நகரசபை குழுக்கள், தாலுக்காக்கள் மற்றும் கிராமங்களில் உள்ளாட்சி கழகங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளை அவர் போற்றி வளர்த்தார். நகரசபைகளின் அதிகாரங்கள் மேலும் அதிகரிக்கப்பட்டன. அவற்றின் தலைவர்கள் அதிகாரிகள் அல்லாதவர்களாக இருக்க வேண்டும். சுகாதாரம், கழிவுநீர் சுத்திகரிப்பு, குடிநீர் வழங்குதல், தொடக்கக்கல்வி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி நிர்வகிக்கும் பொறுப்பு நகரசபைகளிடம் வழங்கப்பட்டது. மாவட்ட மற்றும் தாலுக்கா கழகங்கள் உருவாக்கப்பட்டன. இந்த கழகங்களின் பெரும்பான்மை உறுப்பினர்கள் அதிகாரிகள் அல்லாதவர்களாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகள் தங்களிடமிருந்த நிதி ஆதாரங்களைப் பொறுத்தவரை முழு அதிகாரம் பெற்று விளங்கின. இந்தியாவின் ஆட்சியதிகாரம் படிப்படியாக படித்த இந்தியர்களின் கைக்கு மாற்றப்பட வேண்டும் என்பது ரிப்பனின் விருப்பமாக இருந்திருக்கலாம். அரசாங்க நியமனங்களுக்குப் பதில் உள்ளாட்சி கழகங்களுக்கு தேர்தல்கள் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று ரிப்பன் வலியுறுத்தினார்.

நிர்வாகத்தில் திறமையைப்புகுத்துவது ரிப்பனின் முக்கிய நோக்கமல்ல; மாறாக நிர்வாகம் பரவலாக்கப்பட்டு மக்களுக்கு நெருக்கமானதாக மாற்றப்பட வேண்டும் என்று அவர் கருதினார். தல சுய ஆட்சியே ரிப்பனின் மகத்தான சாதனையாகும். இன்று நாட்டில் காணப்படும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளம் அமைத்தவர் ரிப்பன் பிரபு ஆவார்.

**கல்வி சீர்திருத்தங்கள்**

வில்லியம் பெண்டிங் பிரபுவைப் போலவே, ரிப்பன் பிரபுவும் இந்தியர்களின் கல்விக்காக பாடுபட்டார். உட்ஸ் அறிக்கையின் அடிப்படையில் இந்தியக் கல்விமுறையின் செயல்பாட்டை ஆய்வு செய்ய ரிப்பன் முடிவு செய்தார். கல்வியமைப்பை மேலும் மேம்படுத்துவதற்காக 1882ல் சர் வில்லியம் ஹண்டர் தலைமையிலான குழு ஒன்றை நியமித்தார். இதுவே ஹண்டர் கல்விக்குழு என்று அழைக்கப்படுகிறது. மக்களின் தொடக்கக் கல்வியை மேம்படுத்தி விரிவுபடுத்த வேண்டும் என இக்குழு பரிந்துரைத்தது. இடைநிலைக் கல்வி இரண்டு கோணங்களில் மேம்படுத்தப்படவேண்டும் என்று இக்குழு கூறியது. அவை பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கு இட்டுச் செல்லக்கூடிய இலக்கியக் கல்வி, மற்றும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் தொழிற்கல்வியாகும்.

பெண் கல்வியின் பிற்போக்கு நிலை குறித்தும் இக்குழு குறிப்பிட்டது. தொடக்கக் கல்வியை கிராமங்களிலும், நகரங்களிலும் அமைக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் நிர்வகிப்பதை இக்குழு ஊக்குவித்தது. இந்தப் பரிந்துரைகளால், இந்தியாவில் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியது.

**முதல் தொழிற்சாலைச் சட்டம் (1881)**

இந்தியாவின் தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களின் பணிநிலைமைகளை மேம்படுத்துவதற்காக ரிப்பன் பிரபு 1881 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஏழு வயதுக்கு குறைவான குழந்தைகளை தொழிற்சாலைகளில் வேலைக்கு நியமிப்பதை இச்சட்டம் தடைசெய்தது. குழந்தைகளின் வேலை நேரத்தையும் இது குறைத்தது. தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அபாயகரமான இயந்திரங்களைச் சுற்றி கட்டாயமாக வேலியமைக்க வேண்டும் என்று இச்சட்டம் கூறியது.

**இல்பர்ட் மசோதா குறித்த சர்ச்சை (1884)**

இந்தியாவில் இருவேறு வகையான சட்டத்தை நீக்குவதற்கு ரிப்பன் முயற்சி எடுத்தார். இந்தியாவிலிருந்த சட்ட அமைப்பின்படி, ஒரு ஐரோப்பியர் குறித்த வழக்கை ஐரோப்பிய நீதிபதி மட்டுமே விசாரிக்க முடியும். இந்திய நீதிபதி விசாரிக்க முடியாது. நீதிமன்றங்களில் பதவியிலிருந்து இந்திய நீதிபதிகளுக்கு இந்த சட்டப்பாகுபாடு பெருத்த அவமானத்தை அளிப்பதாக இருந்தது. சட்ட உறுப்பினரான சி.பி. இல்பர்ட் 1883ல் நீதித்துறையில் காணப்பட்ட இந்த பாகுபாட்டைப் போக்குவதற்காக ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால், ஐரோப்பியர்கள் இம்மசோதாவை கடுமையாக எதிர்த்தனர். இம்மசோதாவை எதிர்த்துப் போராட

பாதுகாப்பு சங்கம் ஒன்றை அமைத்த அவர்கள் போராட்ட நிதியாக ஒன்றரை லட்ச ரூபாயையும் திரட்டினர். ஆங்கிலேயரை இந்திய நீதிபதிகளின் விசாரணைக்கு உட்படுத்துவதைவிட, இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்கொண்டு வருவதே மேல் என்று அவர்கள் கூறினர். இங்கிலாந்து பத்திரிக்கைகளும் அவர்களுக்கு ஆதரவு அளித்தன. எனவே, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் இருந்த ஆங்கிலேயரை திருப்திப்படுத்துவதற்காக ரிப்பன் இம்மசோதாவில் திருத்தம் கொண்டு வந்தார்.

இல்பர்ட் மசோதா குறித்த சர்ச்சை இந்திய தேசியம் வளருவதற்கு பெரிதும் உதவியது. இந்திய தேசிய இயக்கத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். இந்த சர்ச்சையால் பெரிதும் மனமுடைந்த ரிப்பன் தனது பதவியைத் துறந்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார். இந்த நிகழ்வின் உடனடி விளைவாக, 1885 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.

### ரிப்பன் குறித்த மதிப்பீடு

இந்தியாவிற்கு இங்கிலாந்து அனுப்பிவைத்த வைஸ்ராய்களிலேயே மிகவும் புகழ்மிக்கவர் ரிப்பன் பிரபு ஆவார். இந்தியர்களின் பிரச்சினைகளை கனிவுடனும், பரிவுடனும் கையாண்ட காரணத்தால் அவரை 'ரிப்பன் தி குட்' (ரிப்பன் எங்கள் அப்பன்) என்று இந்திய மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். நீதித்துறையில் நிலவிய இனப்பாகுபாட்டை ஒழிக்க முயற்சியெடுத்தது, நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை திரும்பப் பெற்றது, தல சுய ஆட்சியை அறிமுகப்படுத்தியது, மைசூரைத் திரும்பி வழங்கியது போன்ற நடவடிக்கைகள் இந்தியர்களிடையே அவரது புகழை மேலும் உயர்த்தியது. அவரது செயல்பாடுகளை நன்றியுடன் போற்றிய இந்தியர்கள் ரிப்பன் பதவி விலகியதற்காக மிகவும் வருத்தப்பட்டனர்.

### கர்சன் பிரபு (1899–1905)



கர்சன் பிரபு

பிரிட்டிஷ் இந்திய ஆட்சியாளர்களில், வெல்லெஸ்லி பிரபு, டல்ஹவுஸி பிரபு ஆகியோரின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் கர்சன் பிரபு ஆவார். அவர் ஒரு முழுமையான பேரரசுக் கொள்கையாளர், ஆட்சியை திறமையாக நடத்தும் நோக்கத்துடன் கர்சன் பிரபு ஆட்சியமைப்பை நன்கு சீரமைத்தார். அவரது உள்நாட்டு நிர்வாகத்தை பின்வரும் தலைப்புகளில் பார்க்கலாம்.

### கல்வி சீர்திருத்தங்கள்

கல்வி நிறுவனங்களில் கட்டுப்பாடும், கல்வித்தரமும் குறைந்து வருவதை கர்சன் உணர்ந்தார். பல்கலைக்கழகங்கள் இந்திய அரசியல் புரட்சியாளர்களை உருவாக்கும் தொழிற்சாலைகள் என அவர் கருதினார். நாட்டில் பல்கலைக்கழகங்களின் செயல்பாட்டை ஆய்வு செய்வதற்கு 1902ல் ஒரு பல்கலைக்குழுவை நியமித்தார். அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 1904 ஆம் ஆண்டு இந்திய பல்கலைக்கழகங்கள் சட்டத்தை கர்சன் பிரபு கொண்டுவந்தார். இந்தியாவின் அனைத்து பல்கலைக்கழகங்களும் அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டன.

**காவல்துறை, ராணுவ சீர்திருத்தங்கள்**

திறமையிலும் கட்டுப்பாட்டிலும் கர்சன் நம்பிக்கையுடையவர். 1902ல் சர் ஆண்ட்ரூ பிரேசர் தலைமையில் காவல்துறைக் குழு ஒன்றை அவர் நியமித்தார். அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்தினார். அதிகாரிகளுக்கும் காவலர்களுக்கும் பயிற்சிப்பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. மாகாண காவல் பணித்துறை அறிமுகப்படுத்தப்பட்டது. ராணுவத்தை சீரமைப்பதற்கு, இந்தியாவில் படைத்தளபதியாக இருந்த கிச்சனர் பிரபுவின் கையில் விடப்பட்டது.

**கல்கத்தா மாநகராட்சி சட்டம் (1899)**

1899 ஆம் ஆண்டு கர்சன் கல்கத்தா மாநகராட்சி சட்டத்தைக் கொண்டு வந்தார். இதன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, அதிகாரிகள் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. மேலும், கல்கத்தா மாநகராட்சியில் இந்தியர்களைவிட, ஆங்கிலேயருக்கு அதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. கர்சனது இந்த மக்கள் விரோத நடவடிக்கை இந்திய உறுப்பினர்களிடையே மனக்கசப்பை உண்டாக்கியது.

**தொல்பொருள் சின்னங்களை பாதுகாத்தல்**

இந்தியாவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பண்டைய சின்னங்களை பாதுகாப்பதில் கர்சன் ஆர்வம் கொண்டிருந்தார். அவருக்கு முன்பும் சரி பின்பும் சரி எந்தவொரு வைஸ்ராயும் தொல்பொருள் சின்னங்களின்பால் இவ்வளவு அக்கறை காட்டியதில்லை.

1904 ஆம் ஆண்டு பண்டைய தொல்பொருள் சின்னங்கள் சட்டத்தை அவர் கொண்டுவந்தார். அதன்படி அரசாங்கமும், உள்ளாட்சி அதிகாரிகளும் தங்கள் ஆட்சிப்பகுதியில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களை பாதுகாக்கவேண்டும். அவற்றை அழிப்பது குற்றம் என்றும் அறிவிக்கப்பட்டது.

**வங்கப் பிரிவினை (1905)**

1905 ஜூலை 4 ஆம் நாள் வங்காளத்தை இருமாநிலங்களாக பிரிக்கும் நடைமுறை மேற்கொள்ளப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்கு வங்காளத்தில் அஸ்ஸாம், டாக்கா, ராஜகாஹி, சிட்டகாங் போன்ற பகுதிகள் அடங்கியிருந்தன. இதன் தலைநகர் டாக்கா. நிர்வாக வசதியை கர்சன் தமது வங்கப்பிரிவினைக்கு காரணமாகக் கூறினாலும், வங்காளத்திலிருந்த இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிளவுபடுத்துவதாக இது அமைந்தது. இதனால், நாடு முழுவதும் வங்கப் பிரிவினைக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றன. இதனால் தேசிய இயக்கம் மேலும் வலுப்பட்டது.

**கர்சன் பற்றிய மதிப்பீடு**

தனது நாற்பதாவது வயதில் கர்சன் பிரபு இந்த பதவியை ஏற்றார். அவர் தனது சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு, ஆய்வுக் குழுக்களை அமைத்து, அவற்றின் பரிந்துரைகளைக் கேட்டறிந்தார். இந்தியரின் பிரச்சினைகளை நன்கு ஆய்வு செய்தார். தொடக்கத்தில் அவர் புகழ்பெற்றிருந்தாலும், வங்கப்பிரிவினை அவற்றை விரைவிலேயே மங்கச் செய்தது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை கற்றதனால் மாணவர் அறிந்து கொண்டது.*

1. *நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம், பஞ்சத்தைப் போக்க எடுத்த அரைகுறை நடவடிக்கை போன்ற லிட்டனின் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள்.*
2. *ஆப்கானிய கொள்கையின் தோல்வி - பிரிட்டிஷ் அதிகாரிகள் கொலை.*
3. *கல்வி, தலசுய ஆட்சி, தொழிலாளர் நலன் உள்ளிட்ட ரிப்பனின் தாராள சீர்திருத்தங்கள்.*
4. *நீதித்துறையில் இனப்பாகுபாட்டை போக்க அவர் எடுத்த முயற்சிகள் - இல்பர்ட் மசோதா - தேசிய இயக்கத்திற்கு அது வித்திட்டது.*
5. *கர்சனின் சீர்திருத்தங்கள் - வங்கப் பிரிவினை அதன் விளைவுகள்*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையை தேர்வு செய்க.**

1. இந்தியாவின் முதல் வைஸ்ராய்

அ. வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ. டல்ஹவுசி பிரபு

இ. கானிங் பிரபு ஈ. ரிப்பன் பிரபு

2. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு எது ?

அ. 1878 ஆ. 1882

இ. 1898 ஈ. 1902

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. முதலாவது பஞ்ச நிவாரணக்குழு _______________ தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.
2. இந்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு _______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | படைக்கலச் சட்டம் | அ. | ஆண்ட்ரு பிரேசர் |
| 2. | உள்ளாட்சி அமைப்புகள் | ஆ. | கர்சன் பிரபு |
| 3. | கல்விக் குழு | இ. | ரிப்பன் பிரபு |
| 4. | வங்கப்பிரிவினை | ஈ. | வில்லியம் ஹண்டர் |
| 5. | காவல்துறைக் குழு | உ. | லிட்டன் பிரபு |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. லிட்டன் பிரபுவின் ஆப்கானிய கொள்கையை பின்பற்றும்படி ரிப்பன் பிரபு அறிவுறுத்தப்பட்டார்.

ஆ. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தை ரத்து செய்து இந்தியர்களிடையே ரிப்பன் பிரபு புகழ் பெற்றார்.

இ. ரிப்பன் பிரபு கல்வி சீர்திருத்தங்களில் சொற்ப கவனமே செலுத்தினார்.

ஈ. 1882ல் ரிப்பன் பிரபு தொழிற்சாலை சட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று குறிப்பிடுக.**

1. பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி, லிட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்தார்.
2. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் இந்திய பத்திரிகைகளின் சுதந்திரத்தை நசுக்கியது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம்
2. ஹண்டர் குழு
3. இல்பர்ட் மசோதா சர்ச்சை

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. லிட்டன் பிரபுவின் பஞ்ச நிவாரணக் கொள்கையைப் பற்றி குறிப்பு எழுதுக.
2. உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க.
3. கர்சன் பிரபுவின் கல்வி சீர்திருத்தங்களை குறிப்பிடுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. லிட்டன் பிரபுவின் ஆப்கானிய கொள்கையை ஆய்க.
2. ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.
3. கர்சன் பிரபுவின் ஆட்சியைப் பற்றி தொகுத்து எழுதுக.

# பாடம் – 13

## சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்

**இந்த பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்:**

1. *பிரம்ம சமாஜமும் அதன் சேவைகளும்*
2. *ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண இயக்கம் மற்றும் பிற அமைப்புகள்*
3. *இராஜா ராம்மோகன் ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, விவேகானந்தர் போன்ற சீர்திருத்தவாதிகளின் சேவைகள்*
4. *இந்திய முஸ்லீம்களிடையே தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள்*
5. *சீக்கிய, பார்சி சீர்திருத்த இயக்கங்கள்*
6. *தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கங்கள் - ராமலிங்க அடிகள், வைகுந்த சுவாமி, ஈ.வெ.ரா. பெரியார்*

நவீன இந்திய வரலாற்றில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இராஜாராம் மோகன் ராய், சுவாமி தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர் போன்ற தலைவர்களின் வழிகாட்டுதலில் மக்களிடையே சமூக பண்பாட்டு விழிப்புணர்வு தோன்றியது. மேற்கத்திய தாராளச் சிந்தனைகள் பரவியதும், சீர்திருத்த இயக்கங்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தன. இந்திய மக்களின் சமூக, சமய வாழ்க்கையில் இந்த இயக்கங்கள் குறிப்பிடத் தக்க மாறுதல்களை தோற்றுவித்தன.

### இராஜா ராம்மோகன் ராய்



ராஜா ராம்மோகன் ராய்

1772ல் வங்காளத்தின் ஹூக்ளி மாவட்டத்தில் பிறந்த அவர் ஆற்றல்மிகு சுயசிந்தனையும் பகுத்தறியும் திறனும் மிக்கவராக விளங்கினார். விவிலியத்தையும், இந்து மற்றும் முஸ்லீம் சமய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். ஆங்கிலம், சமஸ்கிருதம், பாரசீகம், அராபிக், பிரஞ்சு, லத்தீன், கிரேக்கம், ஹூப்ரூ உள்ளிட்ட பல மொழிகளிலும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார்.

1815ல் ஆத்மிய சபையை அவர் நிறுவினார். பின்னர் 1828ல் இந்த சபையே பிரம்ம சமாஜமாக வளர்ச்சி பெற்றது. இந்த அமைப்பின்மூலம் 'கடவுள் ஒருவரே' என்று ராம் மோகன் ராய் பிரச்சாரம் செய்தார். உபநிடதங்கள், விவிலியம், குர்ஆன் போன்ற சமய நூல்களின் கருத்துக்களை ஒன்றிணைத்து பல்வேறு சமயத்தினரிடம் ஒற்றுமையேற்படுத்த அவர் முயற்சித்தார். ஆத்மிய சபையின் பணியை மகரிஷி திபேந்திரநாத் தாகூர் மேற்கொண்டார். (ரவிந்திரநாத் தாகூரின் தந்தை). இவர்தான் பிரம்ம சமாஜம் என்று இச்சபைக்கு பெயர்மாற்றம் செய்தார். இந்தியாவின் தலைசிறந்த சமூக அமைப்பாக பிரம்ம சமாஜத்தை உருவாக்கினார்.

1829ல் வில்லியம் பெண்டிங் பிரபு சதி முறையை ஒழிக்க முன்வந்தபோது, ராஜா ராம்மோகன் ராய் அவருக்கு உறுதுணையாக நின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். குழந்தை திருமணத்தையும், பெண் சிசுக்கொலையும் அவர் கடுமையாக எதிர்த்தார். விதவைகள் மறுமணம், பெண் கல்வி, பெண்களுக்கான சொத்துரிமை போன்றவற்றை அவர் ஆதரித்தார். இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு சாதிமுறை பெரும் தடைக்கல்லாக இருப்பதை அவர் உணர்ந்தார். மனித குலத்தின் சமத்துவத்தில் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். பிராமண புரோகிதர்களின் ஆதிக்கத்தில் அவருக்கு நம்பிக்கையில்லை. கலப்பு திருமணத்தையும் அவர் ஆதரித்தார். தாமே ஒரு முஸ்லீம் குழந்தையை தத்து எடுத்துக்கொண்டார். 1817ல், சமயப்பரப்பாளரான டேவிட் ஹேர் என்பருடன் இணைந்து கல்கத்தாவில் இந்துக் கல்லூரியை (இதுவே தற்போதைய கல்கத்தா மாநிலக் கல்லூரி) நிறுவினார். பெண்களுக்கான பள்ளிகளையும் அவர் நிறுவினார்.

இராம்மோகன் ராய் வங்காள மொழியில் வெளிவந்த முதலாவது வார இதழான ‘சம்வாத்கௌமுதி’யை தொடங்கினார். பாரசீக வார இதழான மீரத்–உல்–அக்பர் என்பதற்கும் ஆசிரியராகத் திகழ்ந்தார். 1833ல் இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் என்ற இடத்தில் அவர் மறைந்தார்.

### ஹென்றி விவியன் டெரோசியோவும் இளம் வங்காள இயக்கமும்

இளம் வங்காள இயக்கத்தை நிறுவியவர் ஹென்றி விவியன் டெரோசியோ ஆவார். 1809ல் கல்கத்தாவில் பிறந்த அவர் கல்கத்தா இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1833ல் காலரா நோய் கண்டு இளம் வயதிலேயே இறந்தார். அவரது சீடர்கள் டெரோசியன்கள் என்றும் அவரது இயக்கம் இளம் வங்காள இயக்கம் என்றும் அழைக்கப்ட்டது. பழமையான கண்மூடிப்போன பழக்கவழக்கங்களை இவர்கள் கடுமையாக தாக்கிப் பேசினர். பெண் உரிமை, பெண் கல்வியை பெரிதும் ஆதரித்தனர். உருவ வழிபாடு, ஜாதிமுறை, மூட நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிராக பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்தியும் விவாதங்கள் நடத்தியும் சீர்திருத்தத்தில் ஈடுபட்டனர்.



**விவியன் டொராசியோ**

### சுவாமி தயானந்த சரஸ்வதியும் ஆரிய சமாஜமும்

1875 ஆம் ஆண்டு பம்பாயில் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தார். குஜராத்தின் கத்தியவார் பகுதியில் பிறந்த சுவாமி தயானந்தர் (1824–83) சிறந்த அறிஞர், நாட்டுப்பற்று மிக்கவர், சமூக சீர்திருத்தவாதி, மறுமலர்ச்சியாளர். வேதங்கள் தாம் உண்மையான அறிவுக்கு அடிப்படை என்று அவர் நம்பினார். "வேதகாலத்திற்கு திரும்புங்கள்" என்பதே அவரது முழக்கமாகும். உருவ வழிபாடு, குழந்தை திருமணம், பிறப்பின் அடிப்படையிலான ஜாதிமுறை போன்றவற்றை அவர் எதிர்த்தார். கலப்பு மணத்தையும், விதவை மறுமணத்தையும் அவர் ஆதரித்தார். பிற சமயங்களுக்கு மதம் மாறியவர்களை மீண்டும் இந்து அமைப்புக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் அவர் ‘சுத்தி’ இயக்கத்தை தொடங்கினார். அவரது கருத்துக்களை உள்ளடக்கிய ‘சத்யார்த்த பிரகாஷ்’ என்னும் நூலையும் அவர் எழுதினார்.



**தயானந்த சரஸ்வதி**

பம்பாயில் தோற்றுவிக்கப்பட்ட போதிலும், ஆரிய சமாஜம் பஞ்சாபில் சக்திமிக்க இயக்கமாக வளர்ந்து இந்தியாவின் பல பகுதிகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆரிய சமாஜம் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டது. 1886ல் முதலாவது தயானந்த ஆங்கிலோ வேத பள்ளி (டி.ஏ.வி) லாகூரில் நிறுவப்பட்டது. பிற்காலத்தில் இந்தியாவின் பிறபகுதிகளில் மேலும் பல பள்ளிகள் தொடங்கப்பட்டன. ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த லாலாலஜபதி ராய் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கேற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**பிரார்த்தனை சமாஜம்**

1867ல் பம்பாயில் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங் என்பவரால் பிரார்த்தனை சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. இது பிரம்ம சமாஜத்திலிருந்து உதயமானதாகும். இந்து சமயத்திற்குள்ளேயே சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது இதன் நோக்கமாகும். சமபந்தி, கலப்பு மணம், விதவைகள் மறுமணம், பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு போன்றவற்றில் இந்த இயக்கம் அதிக கவனம் செலுத்தியது. 1870ல் நீதிபதி எம்.ஜி.ரானடே, ஆர்.ஜி. பண்டார்க்கர் இருவரும் இதில் சேர்ந்து இந்த இயக்கத்திற்கு மேலும் வலிமை சேர்த்தனர். நீதிபதி ரானடே தக்காண கல்விக் கழகத்தையும் போற்றி வளர்த்தார்.



**எம்.ஜி.ரானடே**

**சுவாமி விவேகானந்தரும் ராமகிருஷ்ண இயக்கமும்**

சுவாமி விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா (1863–1902). ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் முக்கிய புகழ்பெற்ற சீடராக அவர் விளங்கினார். கல்கத்தாவில் செல்வமிக்க வங்காளக் குடும்பத்தில் பிறந்த நரேந்திர நாத் தத்தா ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பயின்றார். 1886ல் நரேந்திரநாத் தத்தா துறவறம் பூண்டார். விவேகானந்தர் என்ற பெயரால் அழைக்கப்பட்டார். வேதாந்த தத்துவத்தை அவர் போதித்தார். ஜாதிமுறையை சாடிய அவர் அப்போது இந்து சமயத்தில் ஊறிக்கிடந்த சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கண்டனம் செய்தார். 1893 செப்டம்பரில் சிகாகோ (அமெரிக்கா)வில் நடைபெற்ற உலக சமயங்களின் மாநாட்டில் கலந்துகொண்ட சுவாமி விவேகானந்தர் இந்தியா மற்றும் இந்து சமயத்தின் புகழை உலகறியச்செய்தார்.

விவேகானந்தர் வலிமை மற்றும் தன்னம்பிக்கையை தமது அடிப்படை கொள்கைகளாகக் கொண்டிருந்தார். ஏழை மற்றும் தாழ்த்தப்பட்டோரின் வாழ்க்கையை மேம்படுத்த உழைக்குமாறு மக்களை அவர் கேட்டுக்கொண்டார். மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு ஆற்றும் சேவை என்று அவர் திடமாக நம்பினார்.



**சுவாமி விவேகானந்தர்**

1897ல் ஹவுராவிலுள்ள பேலூர் என்ற இடத்தில் ராமகிருஷ்ண இயக்கத்தை அவர் தோற்றுவித்தார். அது ஒரு சமூக சேவை மற்றும் அறக்கொடை அமைப்பாகும். பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள் போன்றவற்றை நிறுவி, அவற்றின் மூலம் மக்களுக்கு உதவியும் சமூகத்திற்கு சேவையும் செய்வதே இந்த இயக்கத்தின் குறிக்கோளாகும்.

**பிரம்மஞான சபை**

1875 ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையார் மற்றும் அமெரிக்கா கர்னல் ஹென்றி ஸ்டீல் ஆல்காட் என்ற இருவராலும் நியூயார்க்கில் (அமெரிக்கா) பிரம்ம ஞான சபை நிறுவப்பட்டது. இன, நிற, சமயப்பாகுபாடுகள் இன்றி உலக சகோதரத்துவத்தை ஏற்படுத்துவதும் பண்டைய சமயம் மற்றும் தத்துவங்களை ஆய்வு செய்வதும் அவர்களது முக்கிய நோக்கங்களாகும். இந்தியாவிற்கு வந்த அவர்கள் 1882ல் சென்னை, அடையாற்றில் தங்களது தலைமையிடத்தை நிறுவினர். பின்னர் 1893ல் திருமதி. அன்னி பெசன்ட் அம்மையார் இந்தியாவிற்கு வந்து, ஆல்காட்டின் மறைவுக்குப்பின் இச்சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். திருமதி. அன்னி பெசன்ட் மதன் மோகன் மாளவியாவுடன் இணைந்து பனராசில் மத்திய இந்துப்பள்ளியை நிறுவினார். பின்னர் அது பனாரஸ் இந்து பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது.



**பிளாவட்ஸ்கி அம்மையார்**

**பண்டித ஈஸ்வர சந்திர வித்யா சாகர்**

பண்டித ஈஸ்வர சந்திர வித்யா சாகர் ஒரு சிறந்த கல்வியாளர், மனித நேயமிக்கவர், சமூக சீர்திருத்தவாதி. 1820ல் வங்காளத்தில் மிட்னாபூரில் ஒரு கிராமத்தில் பிறந்தார். நன்கு படித்து வில்லியம் கோட்டை கல்லூரியில் வங்காள மொழித் துறையின் தலைமைப் பண்டிதரானார். இந்திய சமுதாயத்தில் கல்வியைப் பரப்புவதன் மூலமாகவே சீர்திருத்தம் கொண்டுவர முடியும் என்று அவர் கருதினார். பெண்களுக்காக பல பள்ளிகளை நிறுவினார். பெதூன் பள்ளியை நிறுவ ஜெ.டி. பெதூன் என்பவருக்கு உறுதுணையாக இருந்தார். கல்கத்தாவில் மெட்ரோ போலிடன் நிறுவனத்தை ஏற்படுத்தினார். குழந்தை திருமணத்தை கடுமையாக எதிர்த்த அவர் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். 1856 ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. கல்வியைப் பரப்புவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டும் விதத்தில் அவருக்கு வித்யா சாகர் என்ற பட்டம் வழங்கப்பட்டது.



**பண்டிட் வித்யா சாகர்**

**ஜோதிபா கோவிந்தா பூலே**

மகாராஷ்டிரத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் ஜோதிபா கோவிந்த பூலே. உயர்ந்த ஜாதி ஆதிக்கத்துக்கும் பிராமணிய சக்திகளுக்கும் எதிராக அவர் தனது வாழ்நாள் முழுவதும் நீண்ட போராட்டத்தை மேற்கொண்டார். 1873ல் ஜாதிமுறையை எதிர்த்துப் போராட **சத்யசோதக் சமாஜம்** என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். மகாராஷ்டிரத்தில் விதவைகள் மறுமண இயக்கத்திற்கு முன்னோடியாக அவர் செயல்பட்டார். பெண் கல்விக்காகவும் பாடுபட்டார். ஜோதிபா கோவிந்தா பூலே மற்றும் அவரது மனைவி இருவரும் இணைந்து 1851ல் பூனாவில் முதலாவது பெண்கள் பள்ளியை நிறுவினர்.

**முஸ்லிம் சீர்திருத்த இயக்கங்கள்**

தொடக்கத்தில் மேலை நாட்டுக் கல்வியை முஸ்லிம்கள் புறக்கணித்தமையால், அவர்களிடையே சீர்திருத்த இயக்கங்கள் சற்று தாமதமாகவே தோன்றின.அத்தகைய முதல் முயற்சி 1863ல் கல்கத்தாவில் தோற்றுவிக்கப்பட்ட முகமதிய இலக்கிய கழகம்

ஆகும். ஆங்கிலக் கல்வியையும் மேலை நாட்டு அறிவியலையும் பரப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். வங்காளத்தில் இந்த அமைப்பு பல பள்ளிகளை நிறுவியது.

**அலிகார் இயக்கம்**

அலிகார் இயக்கத்தை தோற்றுவித்தவர் சர் சையது அகமது கான் (1817–98) ஆவார். முஸ்லீம்களின் சமூக மற்றும் கல்வி மேம்பாட்டுக்காக இது தோற்றுவிக்கப்பட்டது. இடைக்காலத்திய பிற்போக்குத் தன்மையை போக்கி, சமயத்தில் முற்போக்கு சிந்தனைகளை அவர் ஏற்படுத்தினார். முஸ்லிம்களிடையே தாராளக் கருத்துக்களைப் பரப்புவதற்காக 1866ல் அவர் முகமதிய கல்விக் கழகத்தை தோற்றுவித்தார். முஸ்லிம்களுக்கு ஆங்கிலக் கல்வி புகட்டுவதற்காக 1875ல் அலிகாரில் அவர் ஒரு பள்ளியை நிறுவினார். இதுவே பின்னர் முகமதிய ஆங்கிலேய கீழ்த்திசைக் கல்லூரியாகவும், தற்போதைய அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாகவும் வளர்ச்சி அடைந்தது.




**சையது அகமது கான்**

**தியோபாண்ட் பிரிவு**

முஸ்லிம் உலேமாக்களின் வைதீக பிரிவினரால் தோற்றுவிக்கப்பட்டதே தியோபாண்ட் இயக்கமாகும். இது ஒரு மறுமலர்ச்சி இயக்கமாகும். இதன் இரண்டு முக்கிய குறிக்கோள்கள் : 1) குர்ஆன் மற்றும் ஹாடிஸ் இல் உள்ளவாறு இஸ்லாமிய போதனைகளை முஸ்லிம்களிடையே பரப்புவது. 2) அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் என்ற உரிமைப் போராட்டத்தை தொடர்வது. முகமது உல் ஹாசன் என்ற புதிய தியோபாண்ட் இயக்க தலைவர் இப்பிரிவின் சமய கருத்துக்களில் அரசியல் மற்றும் அறிவார்ந்த சிந்தனைகளைப் புகுத்தினார். இஸ்லாமின் தாராளமான விளக்கங்கள் இவ்வியக்கத்தினரிடையே ஒரு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

**சீக்கிய சீர்திருத்த இயக்கம்.**

இந்தியாவின் பிற இடங்களைப் போலவே பஞ்சாபிலும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. பாபா தயாள் தாஸ் என்பவர் நிரங்காரி இயக்கத்தை தோற்றுவித்தார். கடவுளை உருவமற்றவராக (நிரங்கார்) வழிபடவேண்டும் என்று அவர் கூறினார். பாமா ராம் சிங் நாம்தாரி இயக்கத்தை நிறுவினார். இவரது சீடர்கள் வெள்ளை உடை அணிந்து, புலால் உண்பதை தவிர்த்தனர். 1870ல் லாகூர் மற்றும் அமிர்தசரசில் துவக்கப்பட்ட சிங் சபாக்கள் சீக்கிய சமுதாயத்தை சீர்திருத்த முற்பட்டன. 1892ல் அமிர்தசரசில் கால்சா கல்லூரி நிறுவப்படுவதற்கு இந்த சபாக்கள் உறுதுணையாக இருந்தன. குருமுகி மற்றும் பஞ்சாபி இலக்கியத்தை இவை ஆதரித்தும் போற்றின. சீக்கிய குருத்வாரக்களிலிருந்து ஊழல்மிக்க மகர்த்களை (பூசாரிகளை) நீக்குவதற்கு 1920ல் அகாலிகள் ஒரு இயக்கத்தை தோற்றுவித்தனர். இது தொடர்பான சட்டங்களை இயற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டது. பின்னர், அகாலிகள் தங்களை ஒரு அரசியல் கட்சியாக மாற்றிக் கொண்டனர்.




### பார்சி சீர்திருத்த இயக்கம்

1851ல் பிர்துஞ்சி நவுரோஜி மற்றும் எஸ்.எஸ். பெங்காலி என்பவர்களால் பம்பாயில் பார்சி சமய சீர்திருத்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பெண் கல்வியை அவர்கள் ஆதரித்தனர். தங்கள் சமூகத்தில் நிலவிய திருமண சடங்குகளில் சீர்திருத்தம் கொண்டுவர அவர்கள் விரும்பினர். 'ஜகத் மித்ரா' என்ற மாத இதழை நவ்ரோஜி நடத்தி வந்தார். இத்தகைய சீர்திருத்த முயற்சிகளால் பார்சி சமுதாயம் பெரும் முன்னேற்றம் கண்டது. 20ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் பார்சிகளில் பெரும்பாலோர் முக்கிய பொறுப்புகளை ஏற்று இந்தியாவின் வளர்ச்சிக்கு சிறப்பான தொண்டினை ஆற்றினர்.

### இராமலிங்க அடிகள்

19 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்த சமயத் தலைவர்களில் தலைசிறந்தவர் இராமலிங்க அடிகளாவார். 1823 அக்டோபர் 5ல் சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூரில் ராமய்யா பிள்ளை, சின்னம்மையார் தம்பதிக்கு கடைசி மகனாக அவர் பிறந்தார்.

ஆன்மீக வாழ்க்கையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த அவர் 1858ல் வடலூருக்கு அருகில் கருங்குழி என்ற இடத்திற்கு சென்றார். பின்னாளில் அவர் வடலூரில் இருப்பிடத்தை அமைத்துக் கொண்டார். அவரது தெய்வீக ஆற்றல் பதினோராவது வயதிலேயே வெளிப்பட்டது. சாதிபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட தமது

கருத்துக்களை பரப்புவதற்காக 1865ல் சமசர **சுத்த சன்மார்க்க சங்கத்தை** நிறுவினார். மக்களிடையே அன்பையும் கருணையையும் போதித்தார்.அவர் திருஅருட்பா என்ற நூலை இயற்றினார். அவரது மற்ற இலக்கியப் படைப்புகளில் 'மனுமுறை கண்ட வாசகம்', 'ஜீவகாருண்யம்' என்ற நூல்களும் அடங்கும். பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவரது மொழி நடை மிகவும் எளிமையாகவே இருந்தது.




இராமலிங்க அடிகள்

1870ல் வடலூருக்கு மூன்று மைல் தொலைவிலிருந்த மேட்டுக்குப்பம் என்ற இடத்துக்கு சென்றார். அங்கு 1872ல் சத்திய ஞான சபையை கட்டத் தொடங்கினார். கடவுளை ஜோதி வடிவமாக வழிபடலாம் என்று அவர் மக்களுக்கு எடுத்துக் கூறினார்.


### ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள்

1809 ஆம் ஆண்டு தமிழ்நாடு, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சாமித்தோப்பு என்ற ஊரில் ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் பிறந்தார். அவரது இயற்பெயர் முடிசூடும் பெருமாள் என்றாலும் முத்துக்குட்டி என்றே அனைவரும் அழைத்தனர். ஜாதி முறை மற்றும் தீண்டாமைக்கு எதிராக அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். சமய சடங்குகளை அவர் சாடினார். பலர் அவரை வழிபடுவதற்காக அவரது இருப்பிடம் தேடி வரத் தொடங்கினர். அவரது போதனைகள் காலப்போக்கில் 'அய்யாவழி' என்று பெயர் பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் மத்தியவாக்கில், அய்யாவழி ஒரு தனிப்பட்ட சமயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தென் திருவாங்கூர் மற்றும் தெற்கு திருநெல்வேலி பகுதிகளில் அது வேகமாகப் பரவியது. அவரது மறைவுக்குப் பிறகு, அவர் இயற்றிய சமய நூல்களான அகிலத்திரட்டு அம்மானை, அருள்நூல் மற்றும் அவரது போதனைகளை அடிப்படையாகக் கொண்டு அய்யா வழி சமயம் பரவியது. பல இடங்களில் 'நிழல் தங்கல்' என்ற வழிபாட்டுத் தலங்கள் கட்டப்பட்டன.



**சுயமரியாதை இயக்கமும் ஈ.வெ.ரா பெரியாரும்**

பெரியார் ஈ.வெ.ராமசாமி ஒரு சிறந்த சீர்திருத்தவாதியாவார். 1921 கள்ளுக்கடை மறியலின்போது, தன் சொந்தத் தோப்பிலேயே 1000 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். 1924ல் அவர் வைக்கம் அறப்போராட்டத்தில் கலந்து கொண்டார். கேரளாவில், வைக்கம் என்ற இடத்தில் ஆலயத்துக்கு அருகில் இருந்த சாலையில் தீண்டத்தகாதவர்கள் நடந்து செல்ல விதிக்கப்பட்டிருந்த தடையை எதிர்த்து இந்த போராட்டம் நடத்தப்பட்டது. வ.வே.சு. ஐயரின் சேரன் மாதேவி குருகுலத்தின் வருணாசிரம நடவடிக்கையை அவர் எதிர்த்தார். 1920 முதல் 1925 வரை பெரியார் காங்கிரசில் இருந்து கொண்டே வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார். பின்னர், 1925ல் அவர் சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். திராவிடர்களின் முன்னேற்றம், பிராமணீய ஆதிக்கத்தற்கு எதிர்ப்பு, இந்து சமய மக்களின் வாழ்வில் அவர்கள் ஏற்படுத்தியிருந்த கட்டுபாடுகளை உடைத்தெரிதல் போன்றவையே சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களாகும். ஜாதிமுறை, குழந்தைகள் திருமணம், கட்டாயப்படுத்தப்பட்ட விதவை முறை போன்றவற்றை அவர் கடுமையாக சாடினார். கலப்புத் திருமணங்களை அவர் ஆதரித்தார். சடங்குகள் இல்லாத பல திருமணங்களை அவரே முன்னின்று நடத்தி வைத்தார். அத்தகைய திருமணம் சுயமரியாதை திருமணம் என்று அழைக்கப்பட்டது. பிறந்த குழந்தைகளுக்கு சமய சார்பற்ற பெயர்களையும் அவர் சூட்டினார். இந்து சமுதாயத்தின் சமூக அடிப்படையான ஜாதிமுறையைப் பற்றிய விளக்க ஏடான மனுதர்ம சட்டங்களை அவர் கடுமையாக எதிர்த்தார். குடியரசு, புரட்சி, விடுதலை போன்ற தமிழ் ஏடுகளைத் தொடங்கி அவற்றின் மூலம் தனது கருத்துக்களை பெரியார் பரப்பி வந்தார்.



**தந்தை பெரியார்**

பெரியாரின் அரும்பணியைப் பாராட்டி தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 1938 ஆம் ஆண்டு ஈ.வெ.ராவுக்கு ''பெரியார்'' பட்டம் வழங்கப்பட்டது. 27.06.1970 ஆம் ஆண்டு ஐ.நா.வின் யுனெஸ்கோ நிறுவனம் – தந்தை பெரியாரை 'தெற்கு ஆசியாவின் சாக்ரடிஸ்' என பாராட்டி போற்றியது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டவை :*

1. *இராஜா ராம் மோகன்ராய் மற்றும் பிரம்ம சமாஜம்*
2. *சுவாமி தயானந்த சரஸ்வதி, ஆரிய சமாஜத்தின் சேவைகள்*
3. *சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை, கொள்கைகள், இராமகிருஷ்ண இயக்கத்தின் சேவைகள்*
4. *தியோபாண்ட், அலிகார் இயக்கம் போன்ற முஸ்லீம் சீர்திருத்த இயக்கங்கள்.*
5. *சீக்கியர்களிடையே தோன்றிய நிரங்காரி, நாம்தாரி இயக்கங்கள் பார்சி சீர்திருத்த இயக்கம்.*
6. *இராமலிங்க அடிகளின் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், வைகுண்டசாமியின் அய்யாவழி, பெரியாரின் சுய மரியாதை இயக்கம்.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பிரம்ம சமாஜம் நிறுவப்பட்ட ஆண்டு

அ. 1827 ஆ. 1828

இ. 1829 ஈ. 1838

2. பின்வருபவர்களில் அலிகார் இயக்கத்தை தொடங்கியவர் யார் ?

அ. சர் சையது அகமது கான் ஆ. சலி முல்லா கான்

இ. முகமது அலி ஜின்னா ஈ. முகமது அல்–ஹாசன்

3. சத்திய ஞானசபை நிறுவப்பட்ட இடம்

அ. மதுரை ஆ. இராமேஸ்வரம்

இ. வடலூர் ஈ. சிதம்பரம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இராஜா ராம்மோகன் ராய் தொடங்கிய வங்காளப் பத்திரிகை ______________

2. சுவாமி தயானந்த சரஸ்வதி எழுதிய நூல் ______________

3. சத்ய சோதக் சமாஜத்தை நிறுவியவர் ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆத்மிய சபை | அ. | ஆல்காட் |
| 2. | இளம் வங்காள இயக்கம் | ஆ. | இராஜா ராம்மோகன் ராய் |
| 3. | பிரார்த்தனை சமாஜம் | இ. | பாபா தயாள் |
| 4. | நிரங்காரி இயக்கம் | ஈ. | ஹென்றி விவியன் டெரோசோ |
| 5. | பிரம்மஞான சபை | உ. | ஆத்மாராம் பாண்டுரங் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1815ல் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆத்மிய சபையை நிறுவினார்.

ஆ. இராஜா ராம்மோகன் ராய் வங்காளத்தின் முதல் வார இதழான சம்வத்குமுதி துவக்கினார்.

இ. இளம் வங்காள இயக்கத்தை தோற்றுவித்தவர் தாசவர் ஆவார்.

ஈ. 1867ல் பம்பாயில் பிரார்த்தனை சமாஜம் நிறுவப்பட்டது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று குறிப்பிடுக.**

1. ‘வேத காலத்திற்கு திரும்புங்கள்’ என்பது சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கையாகும்.

2. இராமகிருஷ்ணரின் உண்மையான பெயர் நரேந்திரநாத் தத்தா.

3. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவை மறுமணத்தை எதிர்த்தார்.

4. இராமலிங்க அடிகள் திருஅருட்பாவை இயற்றினார்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ஆரிய சமாஜம்

2. சுவாமி விவேகானந்தர்

3. ஜோதிராவ் பூலே

4. ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள்

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

2. இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்களை ஆய்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. ‘இராஜா ராம்மோகன் ராய் இந்திய மறுமலர்ச்சியின் தந்தை’ வாதிடுக.

2. 19 ஆம் நூற்றாண்டு இந்தியாவில் தோன்றிய சமூக – சமய சீர்திருத்த இயக்கங்களின் முக்கியத்துவத்தை ஆய்க.

# பாடம் – 14

# இந்திய தேசிய இயக்கம் (1885 – 1905)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தைப் படிப்பதன் மூலம் மாணவர் அறிவது:*

1. *இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்*
2. *இந்திய தேசிய காங்கிரஸின் தோற்றம்*
3. *தொடக்க கால தேசிய இயக்கத்தின் நோக்கங்களும் நடைமுறைகளும்*
4. *இக்கால தலைவர்கள்*
5. *மிதவாதிகளின் சாதனைகள்*

**இந்தியாவில் தேசியம் வளர்ந்தமைக்கான காரணங்கள்**

இந்தியாவில் தேசியம் தோன்றி வளர்ச்சி பெற்றதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

**1. அரசியல் ஒற்றுமை :**

இந்தியாவின் பல்வேறு பகுதிகளும் அரசியல் அடிப்படையிலும் ஆட்சியடிப்படையிலும் முதன்முறையாக ஒரு குடையின்கீழ் (பிரிட்டிஷ் ஆட்சி) கொண்டுவரப்பட்டது. ஒரே சீரான சட்டமும் அரசும் அறிமுகப்படுத்தப் பட்டன.

**2. தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சி**

ரயில் பாதைகள், தந்தி, அஞ்சல் சேவைகள் மற்றும் சாலைகள் கால்வாய்கள் மூலமாக போக்குவரத்து வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டதால் மக்களிடையே தகவல் தொடர்பு எளிதாகியது. இந்தியர்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாயினர். மேலும், அகில இந்திய அடிப்படையில் தேசிய இயக்கம் தோன்றவும் இது வழிவகுத்தது.

**3. ஆங்கில மொழியும் மேலைநாட்டுக் கல்வியும்**

நாட்டில் தேசியம் வளர ஆங்கில மொழி பெரும் பங்காற்றியது. ஆங்கிலம் கற்ற இந்தியர்கள் தேசிய இயக்கத்தை வளர்த்து தலைமை தாங்கி நடத்திச் சென்றனர். மேலை நாட்டுக்கல்வி மூலம், சுதந்திரம், சமத்துவம், விடுதலை, தேசியம் போன்ற மேலைநாட்டு கருத்துக்கள் இந்தியாவில் பரவி தேசியம் தோன்றலாயிற்று.

**4. பத்திரிக்கைகளின் பங்கு**

இந்தியாவில் வெளியான ஆங்கிலம் மற்றும் நாட்டு மொழி பத்திரிக்கைகள் தேசியச் சிந்தனையைப் பரப்பின.

**5. 19ஆம் நூற்றாண்டு சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள்**

பிரம்ம சமாஜம், இராமகிருஷ்ண இயக்கம், ஆரிய சமாஜம், பிரம்ம ஞான சபை போன்ற அமைப்புகள் தாய்நாட்டின் பெருமைகளை மக்களிடையே எடுத்துரைத்து நாட்டுப்பற்று குறித்த உணர்வைத் தூண்டின.

### 6. பிரிட்டிஷாரின் பொருளாதாரச் சுரண்டல்

இந்தியாவை ஆட்சிபுரிந்த பிரிட்டிஷாரின் பொருளாதாரக் கொள்கை மக்களிடையே பிரிட்டிஷ் எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியது. இந்திய வணிகத்தையும் கைத்தொழிலையும் ஆங்கிலேயர் திட்டமிட்டு அழித்தனர். எனவே, பிரிட்டிஷாரின் பொருளாதாரச் சுரண்டல் இந்திய தேசியம் தோன்றுவதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாகும்.

### 7. இனப்பாகுபாடு

1857 ஆம் ஆண்டு கலகம் பிரிட்டிஷாருக்கும் இந்தியருக்கும் இடையே தீராத வெறுப்புணர்வையும், பரஸ்பர சந்தேக உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. ஆங்கிலேயரின் உயர்வு மனப்பான்மை மேலும் பெருகியது. இந்தியாவும், இந்திய மக்களும் பல்வேறு அவமானங்களுக்கும் ஒடுக்குதல்களுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

### 8. லிட்டனது நிர்வாகம்

லிட்டன் பிரபு, இந்தியாவின் பெரும்பகுதி பஞ்சத்தினால் துன்பத்தில் துவண்டு கிடந்தபோது டெல்லி தர்பாரை நடத்தினார். நாட்டு மொழி செய்தித்தாள் சட்டத்தையும் கொண்டுவந்து இந்தியாவில் பத்திரிக்கை சுதந்திரத்தை ஒடுக்கினார். ஆயுதங்கள் சட்டம் இந்தியர்கள் ஆயுதங்கள் வைத்துக் கொள்வதற்கு தடை விதித்தது. லிட்டனின் இத்தகைய நடவடிக்கைகள் இந்தியரிடையே பரவலான வெறுப்பை ஏற்படுத்தியது.

### 9. இல்பர்ட் மசோதா சச்சரவு

ரிப்பன் பிரபு ஆட்சிக் காலத்தில் மத்திய சட்டசபையில் இல்பர்ட் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றங்களில் ஐரோப்பிய நீதிபதிகளுக்கும் இந்திய நீதிபதிகளுக்கும் இடையே நிலவிய இன வேறுபாட்டை களைவதற்காக இம்மசோதா கொண்டுவரப்பட்டது, இந்தியாவில் வாழ்ந்த பிரிட்டிஷார் இதனை கடுமையாக எதிர்த்தனர். இறுதியில் இது திரும்பப் பெறப்பட்டது.

இத்தகைய பல்வேறு காரணங்களால் இந்தியாவில் தேசியம் தோன்றியது. இந்திய தேசிய காங்கிரசும் தோற்றுவிக்கப்பட்டது.

**ஆரம்பகால அரசியல் கழகங்கள்**

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷ் இந்தியக் கழகம் | – | 1851 வங்காளம் |
| பம்பாய் கழகம் | – | 1852, தாதாபாய் நவ்ரோஜி |
| கிழக்கு இந்திய கழகம் | – | 1856, லண்டன் |
| சென்னை சுதேசி சங்கம் | – | 1852 |
| பூனா சர்வஜனச் சபை | – | 1870 |
| சென்னை மகாஜன சங்கம் | – | 1884 |

**இந்திய தேசிய காங்கிரஸ் (1885)**

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவர் ஒரு அகில இந்திய அமைப்பை தோற்றுவிக்க முயற்சிகள் எடுத்தார். அதன் விளைவாக, இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டு அதன் முதல் கூட்டம் 1885ல் பம்பாயில் நடைபெற்றது. டபிள்யூ.சி. பானர்ஜி அதற்கு தலைமை வகித்தார். இந்தியா முழுவதிலுமிருந்து 72 பிரதிநிதிகள் அதில் கலந்து கொண்டனர். இவர்கள் பல்வேறு சமயப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. சமய, ஜாதி, மொழி மற்றும் பிராந்திய வேறுபாடுகள் இன்றி அனைத்து இந்தியர்களின் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் நடை பெற்றன. எனவே, இந்திய தேசிய காங்கிரஸ் தொடக்கத்திலிருந்தே இந்திய சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய சமய சார்பற்ற இயக்கமாகவே செயல்பட்டது. காங்கிரசின் இரண்டாவது கூட்டம் 1886ல் கல்கத்தாவிலும், மூன்றாவது கூட்டம் 1887ல் சென்னையிலும் நடைபெற்றது.



ஏ.ஓ.ஹியூம்

இந்திய தேசிய இயக்கத்தின் வரலாற்றை மூன்று முக்கிய நிலைகளாக அறிந்து கொள்ளலாம்.

1. மிதவாதி தேசியம் (1885 – 1905) – இக்காலத்தில் காங்கிரஸ் பிரட்டிஷாருக்கு விசுவாசமாகவே செயல்பட்டது.

2. 1906 முதல் 1916 வரையிலான காலத்தில் சுதேசி இயக்கம், தீவிரவாத தேசியம், தன்னாட்சி இயக்கம் போன்றவை நடைபெற்றன.

3. 1917 முதல் 1947 வரையிலான காலத்தை காந்தி காலம் எனப்படுகிறது.

**மிதவாத தேசியம்**

தேசிய இயக்கத்தின் தொடக்க காலமான இந்த கட்டத்தில் ஏ.ஓ.ஹியூம், டபிள்யூ. சி. பானர்ஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ் ஷா மேத்தா, கோபால கிருஷ்ண கோகலே, பண்டிட் மதன்மோகன் மாளவியா, பக்ருதீன் தியாப்ஜி, நீதிபதி ரானடே, ஜி. சுப்ரமணிய அய்யர் போன்றவர்கள் முக்கிய தலைவர்களாக இருந்து வழி நடத்திச் சென்றனர்.



கோகலே

சுரேந்திரநாத் பானர்ஜி இந்தியாவின் ‘பர்க்’ என்று அழைக்கப்பட்டார். வங்கப் பிரிவினையை அவர் கடுமையாக எதிர்த்தார். 1876ல் அரசியல் சீர்திருத்தங்கள் கோரி போராடுவதற்காக இந்தியக் கழகம் ஒன்றை தோற்றுவித்தார். அவர் நிறுவிய இந்திய தேசியப் பேரவை (1883) பின்னர் 1886ல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைக்கப்பட்டது.

ஜி. சுப்ரமணிய அய்யர் சென்னை மகாஜன சபை மூலம் தேசியத்தை பரப்பினார். ‘தி இந்து’, ‘சுதேச மித்ரன்’ போன்ற பத்திரிக்கைகளையும் அவர் நிறுவினார்.

தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் முதுபெரும் மனிதர் என்று அழைக்கப்பட்டார். இந்தியாவிற்கான அதிகாரபூர்வமற்ற தூதராக இங்கிலாந்தில் இவர் கருதப்பட்டார். பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பொதுமக்கள் அவையில் உறுப்பினரான முதல் இந்தியர் இவரே ஆவார்.

கோபால கிருஷ்ண கோகலே காந்தியின் குருவாக கருதப்பட்டவர். 1908ல் அவர் இந்தியப் பணியாளர் கழகத்தை தோற்றுவித்தார். நாட்டிற்காக தொண்டு செய்ய இந்தியர்களுக்கு பயிற்சியளிப்பதே இக்கழகத்தின் நோக்கமாகும்.

முதல் சில ஆண்டுகள் காங்கிரஸ் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்றுத் திகழ்ந்தது.

1885 முதல் 1905 வரை காங்கிரஸ் தலைவர்கள் மிதவாதிகளாக இருந்தனர். அவர்களது கோரிக்கைகள் மிதமாகவே இருந்தமையால், மிதவாதிகள் என்று அழைக்கப்பட்டனர். மேலும், தங்களது கோரிக்கைகளை வென்றெடுக்க அமைதியான, அரசியல் சட்ட நெறிமுறைகளின் வழிமுறைகளையே மிதவாதிகள் பின்பற்றினர்.

**மிதவாதிகளின் முக்கிய கோரிக்கைகள்**

- சட்டசபைகளை விரிவாக்குதல், சீர்திருத்துதல்
- ஐ.சி.எஸ். தேர்வுகளை ஒரேசமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடத்தி உயர் பதவிகளில் இந்தியர்களுக்கு அதிக வாய்ப்புகளை ஏற்படுத்துதல்
- நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையை பிரித்தல்
- உள்ளாட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்குதல்
- நிலவரியைக் குறைத்தல் – நியாயமற்ற நில உடைமையாளரிடமிருந்து குடியானவர்களை பாதுகாத்தல்
- உப்பு வரி, சர்க்கரை வரியை ஒழித்தல்
- ராணுவ செலவுகளைக் குறைத்தல்
- பேச்சுரிமை, எழுத்துரிமை மற்றும் சங்கங்கள் அமைக்கும் உரிமை கோருதல்

**மிதவாதிகளின் வழிமுறைகள்**

பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாயத்தில் மிதவாதிகள் பெருத்த நம்பிக்கை வைத்திருந்தனர். உற்சாகத்திற்கும், வழிகாட்டுதலுக்கும் அவர்கள் இங்கிலாந்தை எதிர்நோக்கியிருந்தனர். கோரிக்கை மனுக்களை அளித்தல், தீர்மானங்கள் போடுதல், கூட்டங்கள் நடத்துதல், துண்டு பிரசுரங்களை விநியோகித்தல், தூதுக்குழுக்கள் மூலம் பேச்சு நடத்துதல் போன்ற வழிமுறைகளையே மிதவாதிகள் பின்பற்றினர். படித்தவர்கள் மட்டுமே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அரசியல் உரிமைகளையும் தன்னாட்சியையும் படிப்படியாக அடைவதே அவர்களது குறிக்கோளாகும்.

ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கமும் இந்திய தேசிய காங்கிரசின் தோற்றத்தை வரவேற்றது. 1886ல் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டின் உறுப்பினர்களுக்கு தலைமை ஆளுநர் டப்ரின் பிரபு தேநீர் விருந்தளித்தார். அரசாங்க அதிகாரிகளும் காங்கிரஸ் கூட்டங்களில் கலந்து கொண்டனர். காங்கிரசின் கோரிக்கைகள் அதிகரிக்க அதிகரிக்க, அரசாங்கம் அதற்கு எதிராகத் திரும்பியது. முஸ்லிம்களை காங்கிரசிலிருந்து விலகியிருக்குமாறு ஊக்குவித்தது. இந்த காலக்கட்டத்தில் பிரிட்டிஷாரால் நிறைவேற்றப்பட்ட காங்கிரசின் கோரிக்கை ஒன்றே ஒன்றுதான். அது 1892 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய கவுன்சில்கள் சட்டமாகும்.

**மிதவாதிகளின் சாதனைகள்**

1. மக்களிடையே பரந்த தேசிய விழிப்புணர்வை மிதவாதிகளால் உருவாக்க முடிந்தது.

2. ஜனநாயகம், சிவில் உரிமைகள், பிரநிதித்துவ நிறுவனங்கள் போன்ற சித்தாந்தங்களை அவர்கள் பிரபலப்படுத்தினார்கள்.

3. பிரிட்டிஷார் எவ்வாறு இந்தியர்களைச் சுரண்டுகிறார்கள் என்று அவர்கள் மக்களுக்கு புரியவைத்தனர். தாதாபாய் நௌரோஜி எழுதிய "இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" என்ற நூலில் "செல்வச் சுரண்டல்" கோட்பாட்டை விளக்கியிருந்தார். இந்தியாவின் செல்வம் எந்தெந்த வழிகளில் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதை பட்டியலிட்டுக் காட்டினார். (அ) ஊதியங்கள் (ஆ) சேமிப்பு (இ) ஓய்வூதியங்கள் (ஈ) இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கான செலவினங்கள் (உ) பிரிட்டிஷ் வணிக நிறுவனங்களின் லாபம் என்பவை அந்தப் பட்டியலில் அடங்கியிருந்தன. இதைப்பற்றி விசாரிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் வெல்பி குழுவை நியமித்தது. அதில் முதல் இந்திய உறுப்பினராக தாதாபாய் நியமிக்கப்பட்டார்.

4. ரானடே, கோகலே போன்ற ஒரு சில மிதவாதிகள் சமூக சீர்திருத்தங்களிலும் கவனம் செலுத்தினர். குழந்தை திருமணம், விதவைகளின் அவலம் போன்றவற்றை அவர்கள் எதிர்த்தனர்.

5. 1892 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டத்தின் வாயிலாக சட்டசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தியதும் மிதவாதிகளின் சாதனையாகும்.

**கற்றல் அடைவுகள்**

*மாணவர்கள் இந்த பாடத்திலிருந்து அறிந்து கொண்டவை.*

1. *இந்திய தேசியத்தின் வளர்ச்சிக்கான காரணங்கள்.*
2. *இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமும் வளர்ச்சியும்.*
3. *மிதவாத தேசியம் குறித்த சுருக்கமான தகவல்*
4. *தங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற அவர்கள் பின்பற்றிய வழிமுறைகள்.*
5. *இந்தியப் பொருளாதாரத்தை பிரிட்டிஷார் எவ்வாறு சுரண்டினர் என்பதும் செல்வச் சுரண்டல் கோட்பாடும்.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்

அ. டபிள்யூ.சி. பானர்ஜி　　ஆ. ஏ.ஓ. ஹியூம்

இ. மகாத்மா காந்தி　　ஈ. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

2. பின்வருபவர்களில் மிதவாதிகளின் தலைவராக இல்லாதவர் யார் ?

அ. சுரேந்திரநாத் பானர்ஜி　　ஆ. கோபால கிருஷ்ண கோகலே

இ. பாலகங்காதர திலகர்　　ஈ. பிபின் சந்திரபால்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இந்திய தேசிய காங்கிரஸ் முதல் மாநாடு நடைபெற்ற இடம் ______________

2. பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் உறுப்பினரான முதல் இந்தியர்______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | டெல்லி தர்பார் | அ. | எஸ்.என். பானர்ஜி |
| 2. | இல்பர்ட் மசோதா சிக்கல் | ஆ. | கோகலே |
| 3. | இந்திய சங்கம் | இ. | லிட்டன் பிரபு |
| 4. | இந்தியப் பணியாளர் சங்கம் | ஈ. | தாதாபாய் நௌரோஜி |
| 5. | செல்வச் சுரண்டல் கோட்பாடு | உ. | ரிப்பன் பிரபு |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1857 ஆம் ஆண்டு கலகம் ஒரு விதமான நிரந்தர கசப்புணர்வை ஆங்கிலேயர் மற்றும் இந்தியர்களுக்கிடையே ஏற்படுத்தியது.

ஆ. இந்தியாவின் பெரும்பகுதி பஞ்சத்தின் பிடியில் இருந்தபோது ரிப்பன் பிரபு டெல்லி தர்பாருக்கு ஏற்பாடு செய்தார்.

இ. 1855 ஆம் ஆண்டு இந்திய காங்கிரசின் முதல் தலைவர் ஏ.ஓ.ஹுயூம் ஆவார்.

ஈ. கோகலே இந்திய பர்க் என்று அழைக்கப்பட்டார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று குறிப்பிடுக.**

1. இந்திய தேசிய காங்கிரசின் முதல் தலைவர் டபிள்யூ.சி. பானர்ஜி.

2. ‘வறுமையும் இந்தியாவில் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்’ என்ற நூலை எஸ்.என். பானர்ஜி எழுதினார்.

3. லிட்டனது ஆட்சி இந்தியாவில் தேசியம் தோன்ற வழிவகுத்தது.

4. 1906 முதல் 1916 வரையிலான காலம் மிதவாத தேசியக்காலம் எனப்படுகிறது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. இந்திய தேசிய காங்கிரஸ்

2. தாதாபாய் நௌரோஜி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. மிதவாதிகளின் கோரிக்கைகள் பற்றிய ஒரு குறிப்பு எழுதுக.

2. இந்திய தேசிய இயக்கத்தின் முதற்பகுதியில் மிதவாதிகள் பின்பற்றிய வழிமுறைகளைப் பற்றி விவாதிக்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

2. மிதவாதிகளின் சாதனைகளை மதிப்பிடுக.

# பாடம் – 15

# இந்திய தேசிய இயக்கம் (1905 – 1916)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தைப் படிக்கும் மாணவர் அறிந்து கொள்வது*

1. *இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றியதற்கான காரணங்கள்.*
2. *தீவிரவாதிகளின் நோக்கங்களும் வழிமுறைகளும்*
3. *திலகர், பிபின் சந்திரபால், லாலாலஜபதிராய் போன்ற தீவிரவாத தலைவர்கள்.*
4. *தேசிய இயக்கத்தில் வங்கப் பிரிவினையின் தாக்கம்*
5. *சுதேசி இயக்கமும் தீவிரவாதிகளின் சாதனைகளும்*
6. *முஸ்லீம் லீகின் தோற்றம்*
7. *தன்னாட்சி இயக்கம்*

இந்திய தேசிய இயக்கத்தில் 1905 ஆம் ஆண்டு தொடங்கி தீவிரவாத காலம் தொடங்கியது. தீவிரவாதிகள் அல்லது தீவிர தேசியவாதிகள் துணிச்சலான வழிமுறைகளைக் கையாண்டு வெற்றிபெறமுடியும் என்று நம்பினர். பாலகங்காதர திலகர், லாலாலஜபதிராய், பிபின் சந்திரபால் ஆகிய மூவரும் தீவிரவாத தலைவர்களில் முக்கியமானவர்கள்.

**தீவிரவாதம் தோன்றுவதற்கான காரணங்கள்**

1. 1892 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டப்படி சட்டசபை விரிவாக்கம் தவிர வேறு எந்த குறிப்பிடத்தக்க வெற்றியையும் மிதவாதிகள் பெறத்தவறினர்.
2. 1896–97 ஆண்டு தோன்றிய பஞ்சத்தினாலும், பிளேக் நோயினாலும் நாடு முழுவதிலும் மக்கள் கடும் துன்பத்திற்கு ஆளாயினர்.
3. மக்களின் பொருளாதார நிலைமை மேலும் மோசமாகியது.
4. நிறவெறி காரணமாக தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் மோசமாக நடத்தப்பட்டனர்.
5. 1904–05 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ரஷ்ய–ஜப்பானியப் போரில் ஐரோப்பிய நாடான ரஷ்யாவை ஜப்பான் வென்றது. இதனால், ஐரோப்பிய நாடான பிரிட்டனை இந்தியர்களாலும் வெல்லமுடியும் என ஊக்கம் பிறந்தது.
6. கர்சன் பிரபுவின் பிற்போக்கான ஆட்சி தீவிரவாதத்துக்கு உடனடி காரணமாக அமைந்தது.

– அவர் கல்கத்தா மாநகராட்சி சட்டத்தை (1899) கொண்டு வந்து இந்தியரின் அதிகாரத்தை குறைத்தார்.

– பல்கலைக்கழகங்கள் சட்டம் (1904) பல்கலைக்கழக அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களின் தன்னாட்சித் தன்மை குறைக்கப்பட்டது.அவை அரசின் துறைகளாக மாற்றப்பட்டன.

– இராச துரோகக் குற்றம் (Sedition) சட்டம், அதிகாரிகள் ரகசிய காப்புச் சட்டம் மக்களின் உரிமைகளைப் பறித்தது.

– அவரது மோசமான நடவடிக்கை வங்கப் பிரிவினையாகும் (1905).

**தீவிரவாதிகளின் முதன்மை குறிக்கோள்**

தீவிரவாதிகளின் தலையாய குறிக்கோள் சுயராஜ்யம் அல்லது முழு விடுதலையே தவிர வெறும் தன்னாட்சி அல்ல.

**தீவிரவாதிகள் பின்பற்றிய வழிமுறைகள்**

பிரிட்டிஷாரின் நீதியுணர்வில் தீவிரவாதிகள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. எப்படி பிரிட்டிஷார் பலவந்தமாக இந்தியாவை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர். அரசியல் உரிமைகளை போராடித்தான் பெறவேண்டும் என்பது அவர்களது நம்பிக்கையாகும். தன்னம்பிக்கையும் தன் முனைப்பும் அவர்களது உணர்வில் ஊறியிருந்தன.

**அவர்கள் பின்பற்றிய வழிமுறைகள் வருமாறு :**

1. அரசு நீதிமன்றங்களையும், பள்ளிகளையும், கல்லூரிகளையும் புறக்கணிப்பதன் மூலம் பிரிட்டிஷ் அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்க மறுப்பது.

2. சுதேசிப் பொருட்களை ஆதரிப்பது; அந்நியப் பொருட்களை வாங்க மறுப்பது.

3. தேசியக் கல்வியை அறிமுகப்படுத்தி வளர்ப்பது.

**தீவிரவாதிகளின் தலைவர்கள்**

பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், பிபின் சந்திரபால், அரவிந்த கோஷ் போன்ற தலைவர்கள் தீவிரவாத தேசிய இயக்கத்தை முன்னின்று நடத்தினர்.

இந்தியாவில் பிரிட்டிஷாருக்கு எதிரான ஒரு முழுமையான இயக்கத்தை தோற்றுவித்தவர் பால கங்காதர திலகர் ஆவார்.அவரை 'லோக மான்ய திலகர்' என்றும் அழைப்பர். மராட்டா மற்றும் கேசரி என்ற வார இதழ்களின் வாயிலாக பிரிட்டிஷாரின் கொள்கைகளைச் சாடினார். தேசிய இயக்கத்தில் பங்கு கொண்டதற்காக பிரிட்டிஷாரால் இரண்டு முறை சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், 1908ல் 6 ஆண்டு கால சிறை வாசத்திற்காக மாண்ட்லே கொண்டு செல்லப்பட்டார். 1916ல் பூனாவில் தன்னாட்சி கழகத்தை அமைத்தார்.'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை அதை நான் அடைந்தே தீருவேன்' என்று முழங்கினார்.



**திலகர்**

லாலா லஜபதி ராய் "பஞ்சாபின் சிங்கம்" என்று பலராலும் அறியப்பட்டவர். சுதேசி இயக்கத்தில் இவர் ஆற்றிய பங்கு மகத்தானது. அமெரிக்காவில் 1916ல் தன்னாட்சி கழகத்தை லஜபதி ராய் தோற்றுவித்தார்.அரசுக்கெதிரான பிரச்சாரத்துக்காக மாண்ட்லே சிறையில் வைக்கப்பட்டார். சைமன் குழுவிற்கு எதிரான போராட்டத்தில் போலீஸ் தடியடியில் காயமடைந்து 1928 நவம்பர் 17ல் உயிர் நீத்தார்.



**லாலா லஜபதி ராய்**

பிபின் சந்திரபால் ஒரு மிதவாதியாக தனது வாழ்க்கையைத் தொடங்கி தீவிரவாதியாக மாறியவர். சுதேசி இயக்கத்தில் பங்கு கொண்டு முக்கிய பங்காற்றினார்.தனது அனல் பறக்கும் பேச்சுக்களாலும் எழுத்துக்களாலும் தேசியத்தை நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பினார்.

மற்றொரு தீவிர தேசியவாதியான அரவிந்த கோஷ் சுதேசி இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார். அதற்காக சிறைப்படுத்தப்பட்டார். விடுதலையான பிறகு பிரஞ்சுப் பகுதியான பாண்டிச்சேரியில் தங்கி ஆன்மீக நடவடிக்கைகளில் கவனம் செலுத்தினார்.

**வங்கப் பிரிவினையும் தீவிரவாத எழுச்சியும்**

இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றுவதற்கு 1905 ஆம் ஆண்டு வங்கப்பிரிவினை ஒரு தீப்பொறியாக அமைத்தது. கர்சனது உண்மையான குறிக்கோள்கள் ;

– இந்திய தேசியத்தின் அடித்தளமாக விளங்கிய வங்காளத்தில் வளர்ந்துவரும் தேசியத்தின் வலிமையை முறியடித்தல்.
– வங்காளத்திலிருந்த இந்துக்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைப்பது.
– தான் நினைத்ததை சாதித்து பிரிட்டிஷ் அரசின் வலிமையை வெளிப்படுத்துவது.


**அரவிந்த கோஷ்**

1905 அக்டோபர் 16 ஆம் நாள் வங்கப் பிரிவினை நடைமுறைக்கு வந்தது.அன்றே வங்காள மக்கள் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தி அன்றைய தினத்தை துக்க தினமாக அனுசரித்தனர். வங்காளத்தின் அரசியலில் பெரும் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. இந்தியாவில் உண்மையான விழிப்புணர்வு வங்கப் பிரிவினைக்குப் பின்புதான் தோன்றியது என்று காந்தி எழுதினார்.பிரிவினை எதிர்ப்பு போராட்டம் சுதேசி இயக்கமாக வலுப்பெற்று, இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் பரவியது.

தீவிர தேசியவாதிகளின் செயல்பாடுகள் மிதவாதியான தாதா பாய் நௌரோஜியையே 1906 கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டில் சுயராஜ்யம் குறித்து பேசவைத்தது. அந்த மாநாட்டில் சுதேசி, அந்நியப் பொருட்களுக்கு தடை குறித்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மிதவாதிகள் இதனால் களிப்படையவில்லை. மாறாக, அரசியலமைப்பு ரீதியாகத்தான் சுயராஜ்யம் வெல்லப்பட வேண்டும் என்று அவர்கள் கருதினர். இத்தகைய கருத்து மோதல்களால்தான் 1907 ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவுப்பட்டது. இதுவே சூரத் பிளவு எனப்படுகிறது. திலகர் தலைமையில் தீவிரவாதிகள் மாநாட்டை விட்டு வெளியேறினர்.


**தாதாபாய் நௌரோஜி**

**சுதேசி இயக்கம்**

சுதேசி இயக்கம் பல்வேறு திட்டங்களைக் கொண்டதாகும்.அரசுப் பணி, நீதிமன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை புறக்கணித்தல், அந்நியப் பொருட்களை வாங்க மறுத்து சுதேசிப் பொருட்களை வாங்கி ஆதரித்தல், தேசியப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவி தேசியக் கல்வியை வளர்த்தல் ஆகியன இத்திட்டங்களில் அடங்கும். சுதேசி இயக்கம் ஒரு அரசியல் பொருளாதார இயக்கமாகும்.

சுதேசி இயக்கம் மாபெரும் வெற்றி பெற்றது. வங்காளத்தில் பெரும் நிலச்சுவான்தார்களும் இதில் பங்கேற்றனர். மகளிரும், மாணவரும் மறியலில் ஈடுபட்டனர். அந்நிய காகிதத்தாலான கையேடுகளை மாணவர்கள் மறுத்தனர்.

சுதேசி இயக்கத்தை ஒடுக்குவதற்கு அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. இதற்காக பல சட்டங்களையும் இயற்றியது. சுதேசி தொண்டர்கள் கடுமையாக தாக்கப்பட்டனர். வந்தே மாதரம் முழங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டது. பள்ளிகளும் கல்லூரிகளும் தங்களின் மாணவர்கள் இதில் கலந்து கொள்ளாமலிருக்க நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தப்பட்டன. இல்லையென்றால் உதவித்தொகை நிறுத்தப்படும் என்று எச்சரிக்கையும் விடப்பட்டது. சிலர் தங்களது அரசு பணிகளை இழந்தனர். தீவிரவாத தலைவர்களான பாலகங்காதர திலகர், லாலா லஜபதி ராய், பிபின் சந்திரபால், அரவிந்த கோஷ் போன்றோர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

**தீவிரவாதிகளின் சாதனைகள்**

தீவிரவாதிகளின் சாதனைகளாக பின்வருவனவற்றை தொகுத்துக் கூறலாம்.

1. சுயராஜ்யத்தை பிறப்புரிமையாக முதலில் கோரியவர்கள் தீவிரவாதிகளேயாவர்.
2. விடுதலை இயக்கத்தில் மக்களை பெருமளவில் ஈடுபடுத்தியது மற்றொரு சாதனையாகும். தேசிய இயக்கத்தின் சமூக அடிப்படை மேலும் விரிவாக்கப்பட்டது.
3. முதன் முதலில் அனைத்து இந்திய அரசியல் இயக்கத்தை (சுதேசி இயக்கம்) அமைத்து நடத்தியது போற்றத்தக்கதாகும்.

**முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்படுதல் (1906)**

1906 டிசம்பரில் இந்தியாவெங்கிலுமிருந்து முஸ்லீம்கள் முஸ்லிம் கல்வி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக டாக்கா நகரில் கூடியிருந்தனர். இந்த தருணத்தை சரியாக பயன்படுத்திக்கொண்ட டாக்காவைச் சேர்ந்த நவாப் சலி முல்லா என்பவர் முஸ்லீம்களின் நலன்களுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கருத்து வெளியிட்டார். இந்த யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1906 டிசம்பர் 30 ஆம் நாள் அகில இந்திய முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசைப் போலவே, அவர்களும் ஆண்டு தோறும் மாநாடுகள் நடத்தி பிரிட்டிஷ் அரசுக்கு தங்களது கோரிக்கைகளை அனுப்பி வைத்தனர்.

தொடக்கத்தில் பிரிட்டிஷார் இதற்கு ஆதரவு காட்டினர். மின்டோ– மார்லி சீர்திருத்தங்களின்போது முஸ்லிம்களுக்கென தனித்தொகுதியை கேட்டுப்பெற்றது அவர்களது முதலாவது சாதனையாகும்.

**லக்னோ ஒப்பந்தம் (1916)**

1916 ஆம் ஆண்டு லக்னோ காங்கிரஸ் மாநாட்டின்போது இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரிந்த காங்கிரஸ் மிண்டும் ஒன்றிணைந்தது.1916 ஆம் ஆண்டு லக்னோ ஒப்பந்தம் கையெழுத்தானது.இதன்படி காங்கிரசும் முஸ்லீம் லீகும் பிரிட்டிஷாருக்கு எதிராக ஒன்றிணைந்து போராடுவது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. லக்னோ ஒப்பந்தம் இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்கு சாதகமாக எடுக்கப்பட்ட முக்கிய முடிவாகும்.

**தன்னாட்சி இயக்கம் (1916)**

1916 ஆம் ஆண்டு இரண்டு தன்னாட்சி கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் பூனாவில் திலகர் தன்னாட்சி கழகத்தை தொடங்கினார். செப்டம்பரில் அன்னி பெசன்ட் அம்மையார் சென்னையில் மற்றொரு தன்னாட்சி கழகத்தை நிறுவினார். தன்னாட்சி இயக்கத்தின் முக்கிய குறிக்கோள் பிரிட்டிஷ் பேரரசுக்குள்ளேயே இந்தியாவுக்கு தன்னாட்சி பெறுவதாகும். சுதந்திரம் என்பது அனைத்து நாடுகளுக்கும் உள்ள இயற்கையான உரிமை என்று இருவருமே நம்பினர்.மேலும், இந்தியாவின் வளங்கள் அதன் முன்னேற்றத்துக்காக பயன்படுத்தப்படவில்லை என்று தன்னாட்சி இயக்கத் தலைவர்கள் கருதினர்.

இரண்டு தன்னாட்சி கழகங்களுமே தங்களுக்குள் கூட்டுறவு மனப்பான்மையோடு நடந்து கொண்டன. காங்கிரசுடனும், முஸ்லிம் லீக்குடனும் சேர்ந்து போராடின. திலகரின் தன்னாட்சி இயக்கம் மகாராஷ்டிரத்தில் கவனத்தை செலுத்தியது. அன்னி பெசன்டின் இயக்கம் இந்தியாவின் இதர பகுதிகளில் செயல்பட்டது. தன்னாட்சி இயக்கம் இந்திய தேசிய இயக்கத்திற்கு மீண்டும் உயிர் கொடுத்தது எனலாம். சுதேசி இயக்கம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.பெண்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

1917 ஆகஸ்டு 20 ஆம் நாள் இங்கிலாந்து அயலுறவு அமைச்சர் மான்டேகு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டார். இந்தியாவின் எதிர்கால அரசியல் சீர்திருத்தங்கள் பற்றி இந்த அறிக்கை குறிப்பிட்டது. இந்தியாவில் படிப்படியாக தன்னாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும் என்று அவர் உறுதியளித்தார்.இந்த ஆகஸ்டு அறிக்கை தன்னாட்சி இயக்கத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

**புரட்சிகர இயக்கங்கள்**

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வங்காளம், மகாராஷ்டிரம், பஞ்சாப், சென்னை ஆகிய பகுதிகளில் புரட்சிவாத குழுக்கள் தோன்றின.மிதவாத, தீவிரவாத கொள்கைகள் இரண்டிலுமே இவர்களுக்கு உடன்பாடு இல்லை. எனவே, பல ரகசிய புரட்சி அமைப்புகளை அவர்கள் தோற்றுவித்தனர். வங்காளத்தில் '**அனுசிலான் சமிதி**', **ஜுகந்தர்**' ஆகிய ரகசிய இயக்கங்கள் நிறுவப்பட்டன. மகாராஷ்டிரத்தில் சவார்க்கர் சகோதரர்களால் '**அபினவ பாரத் சங்கம்**' தோற்றுவிக்கப்பட்டது. சென்னை மாகாணத்தில் நீலகண்ட பிரம்மச்சாரி '**பாரத மாதா**' சங்கத்தை தோற்றுவித்தார்.

பஞ்சாபில், இளைஞர்களிடையே புரட்சிக் கருத்துக்களை பரப்புவதற்கு அஜித் சிங் ஒரு ரகசிய அமைப்பை ஏற்படுத்தனார். லண்டனிலிருந்த இந்தியா ஹவுசில், ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா இந்திய தேசியவாதிகளான மதன்லால் திஸ்ரா, சவார்க்கர், வி.வி.எஸ். அய்யர், டி.எஸ்.எஸ்.ராஜன் போன்றோரை ஒன்று திரட்டினார். அமெரிக்காவில் லாலா ஹர் தயாள் என்பவர் காதர் கட்சியைத் தோற்றுவித்து இந்தியாவிற்கு வெளியே புரட்சியாளர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தார்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற அறிவு;*

1. *வங்கப்பிரிவினை போன்ற பிரிட்டிஷாரின் கொள்கைகளே தீவிரவாதத்திற்கு வித்திட்டன.*
2. *தீவிரவாதிகளின் குறிக்கோளும் செயல்பாடுகளும் மிதவாதிகளிடமிருந்து வேறுபட்டவை.*
3. *அரசு பள்ளிகள், கல்லூரிகளைப் புறக்கணித்த சுதேசி இயக்கம் ஒரு மக்கள் இயக்கமாகவே மாறியது.*
4. *தொடக்கத்தில் முஸ்லிம்களை பிரிட்டிஷார் ஆதரித்தனர்.*
5. *தன்னாட்சி இயக்கத்தின் முக்கியத்துவம்*
6. *இந்திய தேசியத்தில் புரட்சியாளர்களின் நடவடிக்கைகள்*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருவனவற்றுள் தீவிரவாதம் தோன்றுவதற்கான காரணம் இல்லாதது எது ?

   அ. இல்பர்ட் மசோதா    ஆ. கல்கத்தா மாநகராட்சி சட்டம்

   இ. பல்கலைக்கழகங்கள் சட்டம்    ஈ. வங்காளப் பிரிவினை

2. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

   அ. 1906    ஆ. 1909

   இ. 1916    ஈ. 1926

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சூரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்ட ஆண்டு ______________
2. அன்னி பெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை______________ இடத்தில் தொடங்கினார்.
3. பாரதமாதா சங்கத்தை தோற்றுவித்தவர் ______________

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கேசரி | அ. | மகாராஷ்டிரம் |
| 2. | பஞ்சாபின் சிங்கம் | ஆ. | முஸ்லிம் லீக் |
| 3. | சலிமுல்லா கான் | இ. | லாலா ஹர் தயாள் |
| 4. | காதர் கட்சி | ஈ. | பாலகங்காதர திலகர் |
| 5. | அபிநவ பாரத் | உ. | லாலா லஜபதி ராய் |

## IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது

அ. தீவிரவாதிகளின் தலைவராக கோகலே விளங்கினார்.

ஆ. பிரிட்டிஷாரின் நீதியுணர்வில் தீவிரவாதிகள் நம்பிக்கை கொள்ளவில்லை.

இ. தீவிரவாதிகள் அஹிம்சை கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஈ. அரசியலைப்பு நெறிகளின்படி அவர்கள் சுயராஜ்யத்தை அடைய விரும்பினர்.

உ. தீவிரவாதிகளுக்கும், மிதவாதிகளுக்கும் இடையே காணப்பட்ட வேறுபாடுகளினால் லக்னோ காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் பிளவுண்டது.

## V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.

1. கர்சன் பிரபுவின் பிற்போக்கு கொள்கையே தீவிரவாதிகளின் எழுச்சிக்கு உடனடி காரணமாக இருந்தது.
2. சுயராஜ்யத்தை பிறப்புரிமையாக கருதி முதலில் கோரிக்கை எழுப்பியவர்கள் தீவிரவாதிகளே ஆவர்.
3. 1905ல் அகில இந்திய முஸ்லீம் லீக் நிறுவப்பட்டது.

## VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | வங்கப் பிரிவினை | 2. | சூரத் பிளவு |
| 3. | முஸ்லீம் லீக் | 4. | லக்னோ ஒப்பந்தம் |

## VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)

1. இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றியது பற்றி குறிப்பு வரைக
2. சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக
3. விடுதலை இயக்கத்தில் தன்னாட்சி இயக்கத்தின் பங்கினை விளக்குக.

## VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. 1905 முதல் 1916 வரை நடைபெற்ற இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளைப் பற்றி விவாதிக்க

# பாடம் – 16

# இந்திய தேசிய இயக்கம் (1917 – 1947)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தை படிப்பதன்மூலம் மாணவர் அறியும் செய்திகள்;*

1. *மகாத்மா காந்தியின் வாழ்க்கை மற்றும் இந்திய விடுதலை இயக்கத்தில் அவரது ஈடுபாடு.*
2. *தேசிய இயக்கத்தில் ஜாலியன் வாலா பாக் படுகொலையின் தாக்கம்.*
3. *கிலாபத் இயக்கம் - ஒத்துழையாமை இயக்கம்*
4. *சட்ட மறுப்பு இயக்கம் - உப்பு சத்தியாக்கிரகம்*
5. *வெள்ளையனே வெளியேறு இயக்கம் - இந்திய விடுதலை இயக்கத்தில் அதன் தாக்கம்.*
6. *மௌன்ட்பேட்டன் பிரபுவின் வருகையும் இந்தியப் பிரிவினையும்*

**காந்தியின் வருகை**

தேசிய இயக்கத்தின் மூன்றாம் நிலை (1917–47) காந்தி காலம் எனப்படுகிறது. இந்த காலக்கட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய இயக்கத்தின் தன்னிகரற்றத் தலைவராக விளங்கினார். அவரது கொள்கைகளான **அகிம்சை** மற்றும் சத்தியாக்கிரகம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக செயல்படுத்தப்பட்டன. தேசிய இயக்கத்தை காந்தி **மக்கள் இயக்கமாக** மாற்றினார்.



மகாத்மா காந்தி

மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி 1869 அக்டோபர் 2 ஆம் நாள் குஜராத்தில் போர்பந்தர் என்ற ஊரில் பிறந்தார்.இங்கிலாந்து சென்று சட்டம் பயின்றார்.1891ல் இந்தியா திரும்பினார். 1893ல் தென் ஆப்ரிக்கா சென்ற அவர் அங்கு நிலவிய **இன ஒதுக்கல் கொள்கைக்கு** எதிரான போராட்டத்தில் 20 ஆண்டுகள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இறுதியாக, 1915ல் இந்தியா திரும்பினார். பின்னர், இந்திய தேசிய இயக்கத்தில் முழுமையாக பங்கேற்று வழி நடத்திச் சென்றார்.

1917ல் பீகாரில் **சம்ப்ரான்** என்ற இடத்தில் ஐரோப்பிய அவுரிச்செடி பண்ணையாளர்களுக்கெதிரான போராட்டத்தில் கலந்து கொண்ட அவர், அங்குதான் தனது **சத்யா கிரகம்** என்ற அறப்போர் முறையை முதன்முதலாக இந்திய மண்ணில் பரிசோதித்துப் பார்த்தார். அதற்கு அடுத்த ஆண்டில் குஜராத்தின் **கேடா** மாவட்டத்தில் மற்றொரு **சத்யா கிரக** போராட்டத்தை நடத்தினார். மோசமான விளைச்சலால் பாதிக்கப்பட்ட குடியானவர்களுக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காக இப்போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தின் போதுதான் சர்தார் வல்லபாய் படேல் காந்தியின் நம்பிக்கைக்குரிய சீடர்களில் ஒருவராக

எழுச்சி பெற்றார். 1918ல் **அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்**களின் கோரிக்கையை ஆதரித்து சாகும்வரை உண்ணா விரதத்தை காந்தி மேற்கொண்டார். இறுதியாக ஆலை அதிபர்கள் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொண்டனர்.

சம்ப்ரான், கேடா, அகமதாபாத் போன்ற சிறிய அளவிலான போராட்டங்கள்தாம் மகாத்மா காந்தியை மக்களிடம் நெருக்கமாக கொண்டு சென்றன. அவர்களது பிரச்சினைகளை காந்தியும் புரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு, காந்தி மக்களின் தலைவர் என்ற நிலைக்கு உயர்ந்தார்.

**ரௌலட் சட்டம் (1919)**

அரசுக்கு எதிரான சதி வேலைகளை ஆய்வு செய்வதற்காக சர் சிட்னி ரௌலட் என்பவரது தலைமையில் 1917ல் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவின் அறிக்கைப்படி, 1919 மார்ச் திங்களில் ரௌலட் சட்டம் மத்திய சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம். இத்தகைய கைதுகளை எதிர்த்து விண்ணப்பமோ அல்லது மேல்முறையீடோ செய்ய முடியாது. இச்சட்டம் கருப்புச் சட்டம் என்று கருதப்பட்டது.இச்சட்டத்திற்கு பலத்த எதிர்ப்புகள் தோன்றின.

1919 ஏப்ரல் 6 ஆம் நாள் இந்தியா முழுவதிலும் (ஹர்த்தால்) மறியல் போராட்டங்கள் நடத்தப்பட்டன. நாடு முழுவதும் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. டெல்லிக்கு அருகில் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார். பஞ்சாபின் முக்கிய தலைவர்களான டாக்டர் சத்யபால் மற்றும் டாக்டர் சைபுதீன் கிச்லு இருவரும் அமிர்தசரஸில் கைது செய்யப்பட்டனர்.

**ஜாலியன் வாலாபாக் படுகொலை (13 ஏப்ரல் 1919)**

1919 ஏப்ரல் 13 ஆம் நாள் நடைபெற்ற ஜாலியன் வாலா பாக் படுகொலை இந்திய விடுதலை இயக்கத்தில் ஒரு முக்கிய திருப்பு முனையாகும். ரௌலட் சத்யாக் கிரகப் போராட்டத்திற்கு பஞ்சாபில் பெருத்த ஆதரவு திரண்டது. வன்முறையை எதிர்நோக்கிய பஞ்சாப் அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஜெனரல் டையர் தலைமையிலான ராணுவத்திடம் ஒப்படைத்தது. அவர் பொதுக் கூட்டங்களுக்கு தடை விதித்து அரசியல் தலைவர்களை கைது செய்தார். ஏப்ரல் 13 ஆம் நாள் பைசாகி என்ற அறுவடைத் திருநாளன்று ஜாலியன் வாலா பாக் பூங்காவில் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.டையர் தனது படையுடன் அங்கு சென்று எவ்வித முன்னறிவிப்புமின்றி கூட்டத்தின்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார். துப்பாக்கிச் சூடு 10 முதல் 15 நிமிடங்கள் நீடித்தது. துப்பாக்கி தோட்டாக்கள் தீர்ந்த பிறகுதான் அது நிறுத்தப்பட்டது. அதிகாரப்பூர்வ தகவலின்படி 379 பேர் கொல்லப்பட்டனர்; 1137 பேர் படுகாயமடைந்தனர். இந்த படுகொலையை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன. ரவீந்திரநாத்தாகூர் தனது ‘நைட்’ பட்டத்தை துறந்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலை விடுதலை இயக்கத்திற்கு பெரும் உத்வேகத்தை கொடுத்தது.



**ஜாலியன் வாலாபாக் படுகொலை**

**கிலாபத் இயக்கம்**

முதல் உலகப் போரில் துருக்கியின் தோல்வியே கிலாபத் இக்கத்திற்கு முக்கிய காரணமாகும். செவெரஸ் உடன்படிக்கையும் (1920) முஸ்லிம்களுக்கு பெருத்த அவமானமாகப்பட்டது. உலக முஸ்லீம்களின் சமயத்தலைவராக (காலிப்) துருக்கி சுல்தானை கருதியதே இந்த இயக்கத்திற்கு அடிப்படையாக விளங்கியது. பிரிட்டன் துருக்கியை நடத்திய விதம் இந்திய முஸ்லிம்களை புண்படுத்துவதாக இருந்தது. எனவே, அவர்கள் கிலாபத் இயக்கத்தை தொடங்கினர்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத், எம்.ஏ. அன்சாரி, சைபுதீன் கிச்லு, அலி சகோதர்கள் இந்த இயக்கத்தை தலைமையேற்று நடத்தினார்கள். கிலாபத் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.1919 அக்டோபர் 19 ஆம் நாள் கிலாபத் தினம் அனுசரிக்கபட்டது. நவம்பர் 23 ஆம் நாள் மகாத்மா காந்தியின் தலைமையில் இந்துக்களும் முஸ்லிம்களும் கலந்து கொண்ட ஒரு மாநாடு கூடியது. நாட்டின் விடுதலைக்கு இந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒன்றுபடுத்த வேண்டியதன் கட்டாயத்தை மகாத்மாகாந்தி உணர்ந்திருந்தார். பின்னர், கிலாபத் இயக்கம் 1920ல் மகாத்மாகாந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்துடன் ஒன்று கலந்தது.

**ஒத்துழையாமை இயக்கம் (1920–1922)**

ரௌலட் சட்டம், ஜாலியன் வாலா பாக் படுகொலை, கிலாபத் இயக்கத்தை தொடர்ந்து மகாத்மா காந்தி தனது ஒத்துழையாமை இயக்கம் பற்றிய திட்டத்தை அறிவித்தார். 1920 டிசம்பரில் நடைபெற்ற நாக்பூர் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடும் இதனை ஏற்றது.

**செயல்திட்டங்கள்**

ஒத்துழையாமை இயக்கத்திற்கான செயல்திட்டங்கள் வருமாறு :– பட்டங்களையும் சிறப்புத் தகுதிகளையும் துறத்தல்.

– உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர் பதவிகளிலிருந்து விலகுதல்

– 1919 ஆம் ஆண்டு சட்டப்படி நடைபெறவிருந்த தேர்தல்களை புறக்கணித்தல்

– அரசு விழாக்களை புறக்கணித்தல்

– நீதிமன்றங்கள், அரசு பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றை புறக்கணித்தல்.

– அயல்நாட்டுப் பொருட்களை புறக்கணித்தல்

– தேசிய பள்ளிகள், கல்லூரிகள், தனியார் பஞ்சாயத்து நீதிமன்றங்கள் போன்றவற்றை நிறுவுதல்.

– சுதேசி பொருட்களையும் கதர் துணிகளையும் மக்களிடையே பிரபலப்படுத்துதல்.

மகாத்மாகாந்தி தனக்கு பிரிட்டீஷ் அரசு கொடுத்த சிறப்பு பட்டங்களைத் துறந்து இந்த இயக்கத்தை தொடங்கிவைத்தார். மற்ற தலைவர்களும் சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களும் தங்களது சிறப்புத் தகுதிகளையும், பட்டங்களையும் துறந்தனர். மாணவர்கள் அரசாங்கப் பள்ளிகளைவிட்டு வெளியேறினர். காசி வித்யா பீடம், பீகார் வித்யா பீடம், ஜாமியா மிலியா போன்ற தேசிய கல்விக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாட்டின் முக்கிய தலைவர்கள் தங்களது அதிக வருமானம் தரக்கூடிய வழக்குரைஞர் தொழிலைக் கைவிட்டனர்.

சட்டமன்றங்களும் புறக்கணிக்கப்பட்டன. காங்கிரஸ் தலைவர் எவரும் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை.

1921 வேல்ஸ் இளவரசர் இந்தியாவிற்கு வந்தபோது மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கம் அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டது. சுதேசி கருத்துக்கள் நாடெங்கும் பரவின. பெரும்பாலான குடும்பங்களில் ராட்டைகள் சுழன்றன.

உத்திரப் பிரதேசத்தின் கோரக்பூர் மாவட்டத்திலுள்ள சௌரி சௌரா என்ற இடத்தில் நடைபெற்ற சம்பத்தை தொடர்ந்து 1922 பிப்ரவரி 11 ஆம் நாள் ஒத்துழையாமை இயக்கத்தை காந்தி இடையிலேயே நிறுத்திவைத்தார். முன்னதாக பிப்ரவரி 5 ஆம் நாள் சௌரி சௌரா காவல் நிலையத்தை முற்றுகையிட்ட ஒரு கூட்டம் அதற்கு தீ வைத்தது. 22 காவலர்கள் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். இதுவே சௌரி சௌரா நிகழ்ச்சி எனப்படுகிறது. ஒத்துழையாமை இயக்கம் திடீரென நிறுத்திவைக்கப்பட்டதை அறிந்து நாட்டின் பல தலைவர்கள் அதிர்ச்சியடைந்தனர். 1922 மார்ச் 10 ஆம் நாள் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார்.

**ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவம்**

1. குடியானவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், பெண்கள் போன்ற சமுதாயத்தின் அனைத்து பிரிவினரும் பங்கேற்ற முதலாவது மக்கள் இயக்கமாக இது திகழ்ந்தது.
2. இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் தேசியம் பரவ இது வழிவகுத்தது.
3. கிலாபத் இயக்கமும் இதனுடன் ஒன்றிணைக்கப்பட்டதால், இந்து, முஸ்லிம் ஒற்றுமையின் உச்சகட்டமாக இது திகழ்ந்தது.
4. இந்திய மக்களுக்கு எத்தகைய துன்பத்தையும் தாங்கும் சக்தி உண்டு என்பதையும், எவ்வித தியாகத்திற்கும் அவர்கள் தயாராக உள்ளனர் என்பதையும் இது எடுத்துக் காட்டியது.

**சுயராஜ்ய கட்சி**

ஒத்துழையாமை இயக்கம் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1922 டிசம்பரில் நடைபெற்ற கயா காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரசில் பிளவு ஏற்பட்டது. மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்ற தலைவர்கள் காங்கிரசுக்குள்ளேயே 1923 ஜனவரி 1 ஆம் நாள் சுயராஜ்ய கட்சியை தோற்றுவித்தனர். சுயராஜ்ய கட்சியினர், சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு, உள்ளிருந்துகொண்டே அரசாங்கத்தை நிலை குலையச் செய்ய முடிவு செய்தனர். 1923 நவம்பரில் சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. இதில் சுயராஜ்ய கட்சி குறிப்பிடத்தக்க வெற்றிகளை பெற்றது. மத்திய சட்டமன்றத்தில் மோதிலால் நேரு கட்சித் தலைவராகவும் வங்காள சட்டமன்றத்தில் சி.ஆர். தாஸ் கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



மோதிலால் நேரு

சட்டமன்றத்தில் சுயராஜ்ய கட்சி பல முக்கிய பணிகளை மேற்கொண்டது. 1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தில் பல மாறுதல்களைக் கொண்டு வந்து இந்தியாவில் பொறுப்பு

வாய்ந்த அரசாங்கம் நடைபெற வந்து இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் நடைபெற இக்கட்சி பாடுபட்டது. அரசின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிராக பல தீர்மானங்களைக் கொண்டு வந்தனர்.உள்துறைக்கான உறுப்பினர் அலெக்சாந்தர் முட்டிமான் இரட்டையாட்சி முறையை போற்றி புகழ்ந்தபோது, மத்திய சட்டசபையில் அதற்கு எதிரான தீர்மானத்தை சுயராஜ்ய கட்சி கொண்டு வந்தது.1925 ஜூனில் சி.ஆர்.தாஸ் மறைந்தபிறகு, சுயராஜ்ய கட்சி பலவீனமடைந்தது.

**சைமன் குழு (1927)**

1919 ஆம் ஆண்டு சட்டம் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அதன் செயல்பாடுகள் மறு ஆய்வு செய்யப்படவேண்டும் என்று விதித்திருந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, 1927 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் மறு ஆய்வுக்குழு ஒன்றை நியமித்தது. இக்குழுவின் தலைவரான சர் ஜான் சைமன் என்பவரது பெயராலேயே 'சைமன் குழு' என்று இது அழைக்கப்பட்டது. இதில் இடம்பெற்றிருந்த ஏழு உறுப்பினர்களும் ஆங்கிலேயர்களாவர். இதில் ஒரு இந்திய உறுப்பினர்கூட இடம் பெறாமையால், இந்தியாவுக்கு வந்தடையும் முன்பே இக்குழுவிற்கு பலத்த எதிர்ப்புகள் தோன்றின.காங்கிரஸ் உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் இக்குழுவை எதிர்த்தன.

1928 பிப்ரவரி 3 ஆம் நாள் இக்குழு பம்பாய் வந்திறங்கியபோது நாடு முழுவதும் மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. சென்ற இடமெல்லாம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களும், '**சைமனே திரும்பிப்போ**' என்ற முழக்கங்களும் இக்குழுவை அதிர வைத்தன. 1928 அக்டோபர் 30 ஆம் நாள் லாகூரில் லாலா லஜபதி ராய் தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற போலீஸ் தடியடியில் லஜபதிராய் படுகாயமடைந்தார். ஒரு மாதம் கழித்து அவர் உயிர் பிரிந்தது.

1930 மே மாதம் சைமன் குழு அறிக்கை வெளியிடப்பட்டது.இரட்டையாட்சியின் குறைபாடுகளை இது சுட்டிக்காட்டியது. அதற்குப்பதில் மாநில சுயாட்சியை இக்குழு பரிந்துரைத்தது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்திற்கு இக்குழுவின் அறிக்கை அடிப்படையாக விளங்கியது என்பதில் ஐயமில்லை.

**நேரு அறிக்கை (1928)**

இதற்கிடையில் இங்கிலாந்தின் அயலுறவுச் செயலாளர் பிர்கன் ஹெட் பிரபு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்க முடியுமா என்று கேட்டு இந்தியர்களுக்கு சவால் விடுத்தார். இந்த சவாலை ஏற்ற காங்கிரஸ் 1928 பிப்ரவரி 28ல் அனைத்துக் சட்சி கூட்டத்தைக் கூட்டியது. எதிர்கால இந்தியாவின் அரசியலமைப்பு சட்டம் ஒன்றை வரைவதற்கு எட்டுபேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைவராக மோதிலால் நேரு நியமிக்கப்பட்டார்.

இக்குழுவின் அறிக்கையே '**நேரு அறிக்கை**' எனப்படுகிறது. இந்த அறிக்கையின் சிறப்புக் கூறுகளாவன

- நிலையாக டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுதல்
- மத்தியில் முழுப் பொறுப்பு வாய்ந்த அரசு
- மாகாணங்களுக்கு சுயாட்சி

– மத்திய மாகாண அரசுகளுக்கிடையே தெளிவான அதிகார பகிர்வு.

– மத்தியில் இரண்டு அவைகள் கொண்ட சட்டமன்றம்

முஸ்லிம் லீக் தலைவரான முகமது அலி ஜின்னா, நேரு அறிக்கை முஸ்லிம் மக்களின் நலனுக்கு எதிரானது என்று கருதினார்.அகில இந்திய முஸ்லீம்கள் மாநாட்டை கூட்டிய ஜின்னா, தனது பதினான்கு அம்ச கோரிக்கைகளை வெளியிட்டார்.

**சட்ட மறுப்பு இயக்கம் (1930 – 34)**

சலசலப்பான இந்த சூழ்நிலையில் 1929 டிசம்பர் மாதம் லாகூர் காங்கிரஸ் மாநாடு கூடியது. ஜவஹர்லால் நேரு இந்த மாநாட்டுக்கு தலைமை வகித்தார். 'பூரண சுயராஜ்யம்' அல்லது 'முழுச் சுதந்திரம்' குறித்த தீர்மானம் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. நேரு அறிக்கையை அரசு ஏற்க மறுத்தமையால், காங்கிரஸ் சட்டம் மறுப்பு இயக்கத்தை தொடங்குவது என முடிவு செய்தது. 1930 ஜனவரி 26 ஆம் நாள் இந்திய சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட்டது. அதுமுதல் ஜனவரி 26 ஆம் நாள் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினமாக அனுசரிக்கப்பட்டது. விடுதலைக்குப்பின் 1950 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த தினமான ஜனவரி 26 ஆம் நாள் குடியரசு தினமாக கொண்டாடப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தண்டி யாத்திரை**



தண்டியாத்திரை

காங்கிரசின் இரண்டாவது கட்ட போராட்டத்துக்கான களம் தயாராக இருந்தது. 1930 மார்ச் 12 ஆம் நாள் காந்தி தனது புகழ்பெற்ற தண்டி யாத்திரையை தொடங்கினர். அவரால் தெரிவு செய்யப்பட்ட 79 சீடர்கள் பின் தொடர உப்பு சட்டங்களை மறுப்பதற்காக அவர் புறப்பட்டார். 200 மைல்கள் நடந்து 1930 ஏப்ரல் 5 ஆம் நாள் தண்டி கடற்கரையை சென்றடைந்தார். ஏப்ரல் 6 ஆம் நாள் உப்புச் சட்டங்களை மீறியதன் மூலம் சட்ட மறுப்பு இயக்கத்தை அவர் முறைப்படி தொடங்கி வைத்தார்.

ஏப்ரல் 9 ஆம் நாள் மகாத்மா காந்தி இந்த போராட்டத்துக்கான செயல்திட்டங்களை வடிவமைத்தார். உப்புச் சட்டங்களை மீறும் வகையில் கிராமந்தோறும் உப்பு உற்பத்தி; மதுக்கடைகள், அபினி மற்றும் அந்நியத் துணிகள் விற்பனை நிலையங்கள் முன்பு பெண்கள் மறியலில் ஈடுபடுதல்; அயல்நாட்டுத் துணிகளுக்கு தீவைத்தல்; ராட்டைகள் மூலம் நூல் நூற்று துணி நெய்தல்; தீண்டாமையை ஒழித்தல், அரசு வேலைகளையும், பள்ளி கல்லூரிகளையும் புறக்கணித்தல் போன்றவை செயல்திட்டங்களில் முக்கியமானவையாகும். அனைத்துக்கும் மேலாக, அரசாங்கத்திற்கு வரிகட்ட வேண்டாம் என்று மக்களை காந்தி கேட்டுக்கொண்டார்.

விரைவில் இந்த இயக்கம் நாடு முழுவதும் பரவியது. மாணவர்கள், தொழிலாளர்கள், குடியானவர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த இயக்கத்தில் உற்சாகத்துடன் பங்கேற்றனர். பிரிட்டிஷ் அரசாங்கம் காங்கிரசின் முக்கிய தலைவர்களை கைது செய்து சிறையிலடைத்தது.

**வட்டமேசை மாநாடுகள் (1930 – 1932)**

வட்டமேசை மாநாடுகளை கூட்டி பல்வேறு அரசியல் கட்சிகளை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தும் சூழ்ச்சியை பிரிட்டிஷ் அரசு பின்பற்றியது. 1930 நவம்பரில் லண்டனில் நடைபெற்ற முதல் வட்ட மேசை மாநாட்டை காங்கிரஸ் புறக்கணித்தது.

1931 ஜனவரியில் பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு காங்கிரஸ் மீது விதித்திருந்த தடையை அரசு விலக்கியதோடு, தலைவர்களையும் சிறையிலிருந்து விடுதலை செய்தது. 1931 மார்ச் 8 ஆம் நாள் காந்தி – இர்வின் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதன்படி, மகாத்மா காந்தி சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தி வைக்கவும் இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளவும் ஒப்புக் கொண்டார். 1931 செப்டம்பரில் இரண்டாம் வட்ட மேசை மாநாடு லண்டனில் நடைபெற்றது. மகாத்மா காந்தி இதில் கலந்து கொண்டுவிட்டு பெருத்த ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார். முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சினை போன்றவற்றுக்கான எந்த தீர்வும் இந்த மாநாட்டில் காணப்படவில்லை.

1932 ஜனவரியில் சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டது. மகாத்மா காந்தி, சர்தார் பட்டேல், போன்ற தலைவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் கட்சியும் தடை செய்யப்பட்டது.

**பூனா ஒப்பபந்தம் (1932)**

1930 ஆம் ஆண்டு வாக்கில், டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக போராடும் தேசிய அளவிலான தலைவராக உருவெடுத்தார். முதல் வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை நிலையை எடுத்துரைத்த அம்பேத்கர், அவர்களுக்கு தனித்தொகுதி ஒதுக்கப்படவேண்டும் என்று கோரினார். 1932 ஆகஸ்டு 16 ஆம் நாள் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட் தனது 'வகுப்புக் கொடை'யை அறிவித்தார். இதன்படி, தாழ்த்தப்பட்ட மக்கள் தனி வகுப்பினராகக் கருதப்பட்டு அவர்களுக்கு தனித்தொகுதி வழங்கப்படும் என்று கூறப்பட்டது. 'வகுப்புக் கொடை'யை எதிர்த்து மகாத்மா காந்தி 1932 செப்டம்பர் 20 ஆம் நாள் எரவாடா சிறையில் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்.

இறுதியில் டாக்டர் அம்பேத்கருக்கும் காந்திக்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதுவே 'பூனா ஒப்பந்தம்' எனப்படுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கமும் இதனை ஏற்றுக்கொண்டது. இந்த ஒப்பந்தப்படி, பல்வேறு மாகாண சட்டமன்றங்களில் 148 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு காங்கிரஸ் ஒதுக்கீடு செய்தது. வகுப்புக் கொடையின்படி 71 இடங்களே இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

1932ல் மூன்றாவது வட்டமேசை மாநாடு முடிவடைந்தது.மறுபடியும் காங்கிரஸ் இதனை புறக்கணித்தது. இருப்பினும், 1933 மார்ச்சில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் வெள்ளை அறிக்கையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது.

**இரண்டாம் உலகப்போரும் தேசிய இயக்கமும்**

1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்ட விதிகளின்படி 1937ல் தேர்தல்கள் நடந்தன. இந்தியாவின் ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. 1939 செப்டம்பர் முதல் நாள் இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. மக்களை கலந்து

ஆலோசிக்காமலேயே பிரிட்டிஷ் அரசு இந்தியாவை போரில் ஈடுபடுத்தியது. காங்கிரஸ் இச்செயலை கடுமையாக எதிர்த்தது. தங்களது எதிர்ப்பை காட்டும் வகையில் 1939 டிசம்பர் 12 ஆம் நாள் மாகாணங்களில் பதவியிலிருந்த காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. இதனை முஸ்லீம் லீக் 'விடுதலை நாளாகக்' கொண்டாடியது. 1940 மார்ச்சில் முஸ்லீம் லீக் பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைத்தது.

**தனி நபர் சத்யாக்கிரகம்**



வினோபா பாவே

இரண்டாம் உலகப்போரின்போது இந்தியர்களின் ஆதரவைப் பெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் 1940 ஆகஸ்ட் 8ஆம் நாள் 'ஆகஸ்டு சலுகை'யை அறிவித்தது. போருக்குப்பின் புதிய அரசியலமைப்பை வரைவதற்காக இந்தியப் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காந்தி இதனை ஏற்க மறுத்து, தனி நபர் சத்யாகிரகத்தை தொடங்க முடிவு செய்தார்.

தனி நபர் சத்யாகிரகம் என்பது, வன்முறையற்ற, குறைந்த அளவில், ஒரு அடையாளமாக நடத்தப்பட்ட இயக்கமாகும். சத்யாகிரகத்தில் ஈடுபடுபவர்களை காந்தியே தேர்வு செய்தார். முதலில் தனிநபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டவர் ஆசார்ய வினோபா பாவே ஆவார். அவருக்கு மூன்று மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அடுத்து ஜவஹர்லால் நேரு தனி நபர் சத்யாகிரகத்தில் ஈடுபட்டு 4 மாத சிறை தண்டனை பெற்றார். தனி நபர் சத்யாகிரகம் 15 மாதங்கள் நீடித்தது.



சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ்

**கிரிப்ஸ் தூதுக்குழு (1942)**

இதற்கிடையில், வைஸ்ராய் லின்லித்கோ பிரபு 1941 ஜூலையில் மேலும் நான்கு இந்தியர்களை தனது நிர்வாகக் குழுவில் சேர்த்துக் கொண்டார். போர்க்காலத்தில் நிலவிய மோசமான சூழ்நிலையைக் கருதி இந்தியர்களின் ஒத்துழைப்பை பெறும் நோக்கத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கம் 1942 மார்ச் 23 ஆம் நாள் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

**கிரிப்ஸின் முக்கிய பரிந்துரைகள்**

– இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும்.

– சிறுபான்மையினர் பாதுகாப்பு – சுதேச அரசுகள் மற்றும் பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு அரசியலமைப்புக்குழு ஏற்படுத்தப்படும்.

– பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எந்த மாகாணமாவது இந்த அரசியலமைப்பை ஏற்க மறுக்கும் பட்சத்தில் தற்போதைய நிலையில் தொடரவோ அல்லது தங்களுக்கென தனி அரசியலமைப்பை வரைந்து கொள்ளவோ அனுமதிக்கப்படும்.

கிரிப்சின் யோசனைகளை நாட்டின் பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை. காந்தி கிரிப்சின் யோசனைகளை '**பின் தேதியிட்ட காசோலை**' என்று வர்ணித்தார். சுதேச அரசுகள் விரும்பினால் அரசியலமைப்பு குழுவிற்கு தனது பிரதிநிதிகளை அனுப்பலாம் அல்லது இந்திய ஒன்றியத்திலிருந்து விலகியே இருக்கலாம் என்ற யோசனையை அரசியல் கட்சிகள் ஏற்கவில்லை. பாகிஸ்தான் கோரிக்கை ஏற்கப்படாததால் முஸ்லீம் லீக் இதனை நிராகரித்தது.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942 – 44)**

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி, இந்தியா மீது ஜப்பான் படையெடுக்கும் என்ற அச்சம் போன்ற காரணங்களால் பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்யும் இயக்கத்தை மகாத்மா காந்தி தொடங்கினார். பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறினால் மட்டுமே ஓர் இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முடியும். இந்து, முஸ்லீம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்று காந்தி கருதினார்.

1942 ஆகஸ்ட் 8 ஆம் நாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடி புகழ் வாய்ந்த '**வெள்ளையனே வெளியேறு**' தீர்மானத்தை நிறைவேற்றியது. காந்தி ''செய் அல்லது செத்துமடி'' என்று அறைகூவலை விடுத்தார்.

1942 ஆகஸ்ட் 8 மற்றும் 9 ஆம் தேதகளில் காங்கிரசின் முக்கிய தலைவர்களை அரசாங்கம் கைது செய்தது. அரசின் இந்த திட்டமிட்ட நடவடிக்கையால் இந்திய மக்கள் இயக்கத்தை வழி நடத்த தலைவர்களின்றி விடப்பட்டனர். மகாத்மா காந்தி பூனா சிறையில் அடைக்கப்பட்டார். பண்டித ஜவஹர்லால் நேரு, அபுல் கலாம் ஆஸாத் போன்ற தலைவர்கள் அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

இத்தருணத்தில், ராம் மனோகர் லோஹியா, அச்சுதன், எஸ்.எம்.ஜோஷி போன்றோர் இயக்கத்தை தலைமையேற்று நடத்தினர். இந்த இயக்கத்தில் ஜெயபிரகாஷ் நாராயண் ஆற்றிய பங்கு சிறப்பானதாகும். பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறி இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். இளைஞர்கள் பலர் நாட்டுப்பற்றுடன் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். நகரங்களில் வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கிராமப்புறங்களுக்கும் இந்த இயக்கம் மெல்ல பரவத் தொடங்கியது. 1943ல் இந்த இயக்கம் மேலும் வலுவடைந்தது. வங்காளம், சென்னை போன்ற இடங்களில் அரசு கட்டிடங்கள் மீது தாக்குதல்களும் நடத்தப்பட்டன. 1944ல் மகாத்மா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

வெள்ளையனே வெளியேறு போராட்டம் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் உச்சகட்டமாகும். பிரிட்டிஷ் அரசாங்கம் அடக்குமுறையை ஏவியது. 538 முறை துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. குறைந்தது 7000 பேர் கொல்லப்பட்டனர். 60,229 பேர் சிறையிலடைக்கப்பட்டனர். இந்த இயக்கம் இந்திய விடுதலைக்கு நேரடியாக இட்டுச் சென்றது. இந்தியர்களிடையே வீரத்தையும், உற்சாகத்தையும், ஒட்டுமொத்த தியாக மனப்பாங்கையும் இந்த இயக்கம் தோற்றுவித்தது.

**இந்திய தேசிய ராணுவம்**



சுபாஸ் சந்திரபோஸ்

இரண்டாம் உலகப் போரின்போது ஆயுதம் ஏந்திய புரட்சியாளர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்தன. அத்தகைய நடவடிக்கைகளில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆற்றிய பங்கு மகத்தானதாகும். 1943 ஜூலை 2 ஆம் நாள் சுபாஷ் சந்திர போஸ் சிங்கப்பூரை சென்றடைந்தார். இந்திய தேசிய ராணுவத்தை '**டெல்லி சலோ**' என்று முழக்கமிட்டு உற்சாகப் படுத்தினார். இந்திய சுதந்திரக் கழகத்தின் தலைவரான அவர் இந்திய தேசிய ராணுவத்தின் தளபதியாகவும் பொறுப்பேற்றார். நாட்டிற்கு 'ஜெய்ஹிந்த்' என்ற முழக்கத்தை வழங்கியவர் அவரே. இந்திய

தேசிய ராணுவத்தின் மூன்று பிரிவுகளுக்கும் சுபாஷ் பிரிவு, காந்தி பிரிவு, நேரு பிரிவு என்று பெயரிடப்பட்டன. ராணி லட்சுமி பாய் பெயரைக் கொண்ட பெண்கள் பிரிவையும் அவர் தொடங்கினார்.

கோஹிமாவில் வெற்றியைப் பெற்ற இந்திய தேசிய ராணுவம் இம்பாலை நோக்கி முன்னேறியது. 1945ல் ஜப்பான் சரணடைந்த பிறகு அது தன் முயற்சிகளைக் கைவிட்டது. சுபாஷ் போஸ் தைவானுக்கு சென்றார். அங்கிருந்து டோக்கியோ செல்லும் வழியில் 1945 ஆகஸ்டு 18 ஆம் நாள் விமான விபத்தில் அவர் உயிர் நீத்தார் என நம்பப்படுகிறது.

டெல்லியிலுள்ள செங்கோட்டையில் இந்திய தேசிய ராணுவ வீரர்கள் மீதான விசாரணை நடைபெற்றது. பண்டித ஜவஹர்லால் நேரு, தேஜ் பகதூர் சாப்ரு வீரர்கள் அவர்கள் சார்பாக வாதிட்டனர்.

**காபினட் தூதுக்குழு (1946)**

இரண்டாம் உலகப் போருக்குப்பின், இங்கிலாந்து பிரதமராக அட்லி பிரபு பொறுப்பேற்றார். 1946 மார்ச் 15 ஆம் நாள் அவர் வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவின் சுயநிர்ணய உரிமையை ஏற்றதுடன் இந்திய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஒப்புதலையும் வழங்கினார். பிரிட்டிஷ் அமைச்சரவையைச் சேர்ந்த மூன்று பேர் – பெதிக் லாரன்ஸ், சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், ஏ.வி. அலெக்சாந்தர் – கொண்ட குழுவை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தார். இதுவே 'காபினட் தூதுக்குழு' என்ற பெயரைப் பெற்றது.

காபினட் தூதுக்குழு இந்தியாவின் அரசியலமைப்பு சிக்கலுக்கு ஒரு தீர்வை முன் வைத்தது. இதன்படி மாகாணங்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு தனித்தனி அரசியலமைப்புகளின் கீழ் இயங்கும். பிரிட்டிஷ் இந்திய மாகாணங்கள், சுதேச அரசுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்திய ஒன்றியம் ஒன்றையும் அது முன்மொழிந்தது. இந்த ஒன்றியம், அயலுறவுக் கொள்கை, பாதுகாப்பு, தகவல் தொடர்பு போன்றவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு எஞ்சிய அதிகாரங்களை மாகாணங்களிடமே ஒப்படைக்க வேண்டும். புதிய அரசியலமைப்பு எழுதப்பட்டு புதிய அரசாங்கம் பதவி ஏற்கும் வரை இடைக்கால அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தவும் யோசனை கூறப்பட்டது. முஸ்லிம் லீக், காங்கிரஸ் இரண்டுமே இத்திட்டதை ஒப்புக் கொண்டன.

1946 ஜூலையில் அரசியலமைப்புக் குழுவிற்கான தேர்தல்கள் நடைபெற்றன. 214 பொதுத் தொகுதிகளில் 205ல் காங்கிரஸ் வெற்றி பெற்றது.முஸ்லிம் லீக் 78ல் 73ல் வெற்றி பெற்றது. 1946 செப்டம்பர் 2 ஆம் நாள் ஜவஹர்லால் நேரு தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது.



மௌன்ட்பேட்டன் பிரபு

**மௌன்ட்பேட்டன் திட்டம் (1947)**

1947 பிப்ரவரி 20 ஆம் நாள் பிரதமர் அட்லி காமன்ஸ் அவையில் 1948 ஜூன் மாதத்திற்கு முன்பு இந்தியர்களிடம் ஆட்சி அதிகாரம் மாற்றப்படும் என்ற பிரிட்டிஷ் அரசின் திடமான எண்ணத்தை அறிவித்தார். இதனை நிறைவேற்றுவதற்கு, மௌன்ட் பேட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்ராயாக அனுப்புவது என்றும் அவர் முடிவு செய்தார்.

1947 மார்ச் 24 ஆம் நாள் மிகுந்த அதிகாரங்களுடன் மவுன்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக பதவியேற்றார். இந்தியாவை பிரித்து பாகிஸ்தானை உருவாக்குவது என்பது தவிர்க்க முடியாதது என்று அவர் கருதினார். நீண்ட விவாதங்களுக்குப் பிறகு 1947 ஜூன் 3 ஆம் நாள் இந்தியப் பிரிவினைக்கான தனது திட்டத்தை அவர் அறிவித்தார். காங்கிரசும், முஸ்லீம்லீக்கும் இத்திட்டத்தை ஒப்புக்கொண்டன.

**இந்திய விடுதலைச்சட்டம் (1947)**

மௌன்ட்பேட்டன் திட்டத்தை ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூலை 18 ஆம் நாள் இந்திய விடுதலை சட்டத்தை நிறைவேற்றியது. இந்த சட்டத்தின் முக்கிய கூறுகள்




**இந்திய விடுதலை**

– இந்திய – பாகிஸ்தான் பிரிவினை 1947 ஆகஸ்டு 15 முதல் நடைமுறைக்கு வரும். – பிரிட்டிஷ் அரசாங்கம் அனைத்து அதிகாரங்களையும் இவ்விரண்டு நாடுகளிடமும் வழங்கும்.

- பஞ்சாப், வங்காளம் இவ்விரண்டு மாகாணங்களின் எல்லைகளை வரையறுப்பதற்கு எல்லை வரையறுக்கும் ஆணையம் ஏற்படுத்தப்படும்.
- இவ்விரண்டு நாடுகளின் அரசியலமைப்பு குழுக்களுக்கு அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்படும்.

ராட்கிளிப் தலைமையிலான எல்லை வரையறுக்கும் ஆணையம் இந்திய – பாகிஸ்தான் எல்லைகளை வரையறுத்தது. 1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியாவும், ஆகஸ்டு 14 ஆம் நாள் பாகிஸ்தானும் சுதந்திர நாடுகளாயின.சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக மௌன்ட்பேட்டன் பிரபு பொறுப்பு ஏற்றார்.பாகிஸ்தானின் முதல் தலைமை ஆளுநராக முகமது அலி ஜின்னா பதவியேற்றார். 1948 ஜனவரி 30 ஆம் நாள் மிகவும் சோகமான நிகழ்ச்சியும் நடந்தேறியது.தேசத் தந்தை மகாத்மா காந்தியை அவர் வழிபாட்டுக் கூட்டத்துக்குச் செல்லும் வழியில் நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றார்.


1947 ஆம் ஆண்டு இந்தியாவும்
பாகிஸ்தானும்
ஜில்கிட்
ஜம்மு
காஷ்மீர்
ஆப்கானிஸ்தான்
சீனா
ஸ்ரீநகர்
திபெத்
குவெட்டா
பஞ்சாப்
லாகூர்
ஐக்கிய
மகாணங்கள்
பஞ்சாப்
மாநிலங்கள்
டெல்லி
பலுசிஸ்தான்
பீகானர்
ஜெய்பூர்
ஐக்கிய
மகாணங்கள்
நேபாளம்
கலாத்
இராஜபுத்தானா
லக்னோ
பூடான்
குவாலியர்
அலகாபாத்
பாட்னா
அசாம்
சிந்து
வங்காளம்
பீகார்
மேற்கு இந்திய
மகாணங்கள்
மைய மாநிலங்கள்
கிழக்கு
மாநிலங்கள்
இந்தோர்
ஜபூல்
பூர்
ஐக்கிய
மாகாணங்கள்
சந்திர நாகூர்(பி)
பரோடா
நாகபூர்
பேரர்
கொல்கத்தா
டையூ(போ)
மும்பை
கட்டாக்
டாமன்(போ)
ஒரிசா
பஸ்தார்
அரபிக் கடல்
தக்காண
மாநிலங்கள்
ஐதராபாத்
வங்கக் கடல்
ஏனாம்
கோவா (போ)
மைசூர்
வ
சென்னை
மங்களூர்
பெங்களூர்
மெட்ராஸ்
மாஹி
மே
புதுச்சேரி
கி
கோழிக்கோடு
காரைகால்
திருச்சிராப்பள்ளி
கொச்சின்
தெ
திருவனந்தபுரம்
இலங்கை
இந்துமாக் கடல்

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை கற்ற மாணவர்கள் அறிந்து கொண்டவை*

1. *காந்தியின் ஆரம்பகால சத்யாகிரக சாதனைகள் அவரை மக்கள் தலைவராக மாற்றின.*
2. *ஒத்துழையாமை இயக்கம் பெற்ற வெற்றி*
3. *சுயராஜ்ய அரசியல், சைமன் குழு எதிர்ப்பு இயக்கம் போன்ற 1922 முதல் 1930 வரை நடைபெற்ற அரசியல் இயக்கங்கள்.*
4. *சட்டமறுப்பு இயக்கம், வட்ட மேசை மாநாடு, பூனா ஒப்பந்தம்.*
5. *வெள்ளையனே வெளியேறு இயக்கமும் அதன் தாக்கமும்.*
6. *விடுதலை இயக்கத்தில் இந்திய தேசிய ராணுவத்தின் பங்கு.*
7. *காபினட் தூதுக்குழு முதல் இந்திய விடுதலை வரை.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. கேடா சத்யாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ?

அ. அவுரிப் பண்ணையாளர்கள் ஆ. ஆலைத் தொழிலாளர்கள்

இ. குடியானவர்கள் ஈ. தொழிற்சாலை பணியாளர்கள்

2. சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு

அ. 1920 ஆ. 1921

இ. 1922 ஈ. 1923

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______________

2. ‘முழுச் சுதந்திரம்’ பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம்______________

3. ‘வகுப்பு வாரி கொடை’யை அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜாலியன் வாலாபாக் படுகொலை | அ. | 1923 |
| 2. | சுயராஜ்ய கட்சி | ஆ. | 1931 |
| 3. | தண்டி யாத்திரை | இ. | 1930 |
| 4. | பூனா ஒப்பந்தம் | ஈ. | 1919 |
| 5. | காந்தி – இர்வின் ஒப்பந்தம் | உ. | 1932 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ரௌலட் சட்டத்தின்படி சந்தேகத்தின்பேரில் எவரையும் கைது செய்யலாம்.

ஆ. 1919 அக்டோபர் 29 ஆம் நாள் கிலாபத் தினம் அனுசரிக்கப்பட்டது.

இ. ஒத்துழையாமை இயக்கம் குறித்த தீர்மானம் லாகூர் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஈ. முஸ்லீம் லீக்கின் 14 கருத்துக்களை முகமது அன்சாரி முன்வைத்தார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. முதல் உலகப்போரில் துருக்கி தோற்றதே கிலாபத் இயக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.
2. டாக்டர் அம்பேத்காருக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்படுகிறது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. கிலாபத் இயக்கம்
2. சுயராஜ்ய கட்சி
3. தண்டி யாத்திரை
4. இந்திய தேசிய ராணுவம்
5. காபினட் தூதுக்குழு
6. மௌன்ட்பேட்டன் திட்டம்

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. ஜாலியன் வாலா பாக் படுகொலை பற்றி குறிப்பு எழுதுக
2. ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.
3. நேரு அறிக்கையின் கூறுகளை விவாதி
4. பூனா ஒப்பந்தம் பற்றி குறிப்பு எழுதுக.
5. இந்திய விடுதலைச் சட்டத்தின் பிரிவுகளை ஆய்க

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. சட்ட மறுப்பு இயக்கம் பற்றி தொகுத்து எழுதுக.
2. இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை மதிப்பிடுக.
3. 1919 முதல் 1935 வரை இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளைப் பற்றி விவரி.

# பாடம் – 17

# இந்திய தேசிய இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கு

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர்கள் அறிந்த கொள்வது :*

1. *தமிழ்நாட்டில் ஆரம்பகால தேசிய எழுச்சிகள்*
2. *சுதேசி இயக்கம்*
3. *தமிழ்நாட்டில் தன்னாட்சி இயக்கம்*
4. *தமிழ்நாட்டில் உப்பு சத்தியாக் கிரகம்*
5. *வெள்ளையனே வெளியேறு இயக்கம்*

இந்திய தேசிய இயக்கத்தில் தமிழ்நாடு முக்கிய பங்கினை ஆற்றியுள்ளது. 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்துக்கு முன்பேகூட, பாஞ்சாலங்குறிச்சி கலகம், 1801 ஆம் ஆண்டு நடைபெற்ற மருது சகோதரர்கள் தலைமையேற்ற தென்னிந்திய கலகம், 1806 ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகம் போன்ற பிரிட்டிஷாருக்கு எதிரான இயக்கங்கள் தமிழ்நாட்டில் நடைபெற்றுள்ளன. தேசியப் போராட்ட காலத்தில், ஜி. சுப்ரமணிய அய்யர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்ரமணிய பாரதி, சி.ராஜகோபாலாச்சாரி, தந்தை பெரியார், கு.காமராஜ் போன்ற தலைவர்களையும் தமிழ்நாடு உருவாக்கியுள்ளது. நாட்டின் பிற பகுதிகளில் நடைபெற்றதுபோல, தமிழ்நாட்டிலும் தேசிய இயக்கம் எழுச்சியுடன் காணப்பட்டது.

## தமிழ்நாட்டில் தேசிய இயக்கத்தின் தொடக்கம்

ஆரம்ப கால அரசியல் அமைப்பான, சென்னை சுதேசி சங்கம் 1852 ஜூலையில் தொடங்கப்பட்டது. லட்சுமிநரசு செட்டி மற்றும் சீனுவாச பிள்ளை ஆகியோரால் நிறுவப்பட்டது. வணிகக் குழுவின் ஆட்சி பின்பற்றிய கொள்கைகளை இச் சங்கம் கடுமையாக விமர்சித்தது. பின்னர், 1884ல் பி. அனந்தாச்சார்லு மற்றும் பி. ரங்கைய நாயுடு என்போரால் சென்னை மகாஜன சங்கம் நிறுவப்பட்டது. பின்னர், சென்னை சுதேசி சங்கமும் இதனுடன் ஒன்றாக இணைந்தது.

இந்திய தேசிய காங்கிரசின் நடவடிக்கைகளை சென்னை மகாஜன சங்கம் தீவிரமாக ஆதரித்தது. மேலும், சமூக சீர்திருத்தத்திலும் அது கவனம் செலுத்தியது. 1889 டிசம்பரில், ஜி.சுப்ரமணிய அய்யர் தனது விதவை மகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். 1885 ஆம் ஆண்டு முதலாவது காங்கிரஸ் மாநாட்டில் முதலாவது தீர்மானத்தையும் இவர் கொண்டு வந்தார். ஆங்கிலத்தில் "தி இந்து", தமிழில் "சுதேசமித்திரன்" போன்ற தேசிய இதழ்களையும் இவர் தொடங்கினார்.

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் வசித்த மக்களை ஒன்று திரட்டும் நோக்கத்துடன் சென்னை மாகாண சங்கம் ஒன்று 1892ல் நிறுவப்பட்டது. 1887ல் பக்ருதீன் தயாப்ஜி என்பவரது தலைமையில் இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு சென்னையில் நடைபெற்றது. இத்தகைய மாநாடுகள் பல சென்னை நகரில் பின்னரும் நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம்




சுப்ரமணிய பாரதி

1905 ஆம் ஆண்டு வங்கப்பிரிவினை தமிழ்நாட்டில் சுதேசிஇயக்கம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தை முன்னின்று நடத்தியவர்களில் வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1907 மே திங்களில் பாரதியார் காங்கிரஸ் இயக்கத்தின் தீவிரவாத தலைவர்களில் ஒருவரான பிபின் சத்திரபால் என்பவரை சென்னை நகருக்கு வரவழைத்து உரை நிகழ்த்தச் செய்தார். 1907 ஆம் ஆண்டு சூரத் பிளவுக்குப் பிறகு வ.உ.சியும் மற்ற தேசியவாதிகளும் இணைந்து சென்னை ஜன சங்கத்தை தோற்றுவித்தனர். சுப்ரமணியபாரதி சிறந்த முற்போக்குவாதியாகவும், பழமைவாதத்தை சாடுபவராகவும், புரட்சிகரமான அரசியல் சமூக சிந்தனைகளைக் கொண்டவராகவும் விளங்கினார். அவர் 'இந்தியா' என்ற தமிழ்வார இதழின் ஆசிரியராகவும் இருந்தார். 'சுதேசி கீதங்கள்' என்றழைக்கப்படும் தேசிய பாடல்களை அவர் எழுதினார்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒரு வழக்குரைஞராக தமது வாழ்க்கையைத் தொடங்கினார். 1905ல் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார். பால கங்காதர திலகரின் சீடராக அவர் திகழ்ந்தார். 1908ல் தூத்துக்குடியில் நடைபெற்ற பவழ ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினார். 1906ல் தூத்துக்குடியில் சுதேசி நீராவிக்கப்பல் கழகத்தை நிறுவினர். எனவே, 'கப்பலோட்டிய தமிழன்' என்று அவர் அழைக்கப்பட்டார். சுதேசி நீராவிக்கப்பல் கழகத்திற்கும் பிரிட்டிஷ் இந்திய நீராவிக்கப்பல் கழகத்திற்குமிடையே கடுமையான போட்டி நிலவியது. பிரிட்டிஷ் இந்திய நீராவிக்கப்பல் கழகத்தை புறக்கணிக்குமாறு வ.உ.சி. பிரச்சாரம் செய்தார். இதனால் 1908 மார்ச் திங்களில் திருநெல்வேலி கலகம் நடைபெற்றது. இவருக்கு உறுதுணையாக செயல்பட்டவர் சுப்ரமணிய சிவா. இவ்விருவரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். ஆறு ஆண்டு காலம் கடும் சிறைவாசத்தை இருவரும் அனுபவித்தனர். சிறைக்குள் அவர்கள் கடுமையான தண்டனைகளுக்குட்படுத்தப்பட்டனர். செக்கிழுக்கும் கொடுமைக்கு ஆளானதால், வ.உ.சி. 'செக்கிழுத்தச் செம்மல்' என்று அழைக்கப்பட்டார்.



சுப்ரமணிய சிவா



வ.உ.சிதம்பரம்

தேசியத் தலைவர்கள் சிறைக்குள் அடைக்கப்பட்டது, சிறைக்குள் சித்ரவதைகளுக்குட்படுத்தப்பட்டது, சுதேசி கப்பல் கழகத்தின் சிதைவு போன்ற காரணங்களால் சினந்தெழுந்த சிலர் பாரதமாதா சங்கம் என்ற புரட்சி அமைப்பை ஏற்படுத்தினர். இதில், நீலகண்ட பிரம்மச்சாரியின் பங்கு மகத்தானதாகும். இச்சங்கத்தைச் சேர்ந்த வாஞ்சிநாதன் 1911 ஜூன் மாதத்தில் ராபர்ட் வில்லியம் டி.ஆஷ். என்ற வன்செயலுக்கு பெயர்பெற்ற பிரிட்டிஷ் அதிகாரியை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்றார்.

## தமிழ்நாட்டில் தன்னாட்சி இயக்கம்

1916 முதல் 1918 ஆம் ஆண்டு வரை சென்னையில் அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கி நடத்தினார். 1915 செப்டம்பர் மாதத்திலேயே


**'நியூ இந்தியா'** என்ற தனது இதழில் அன்னிபெசன்ட் தன்னாட்சி இயக்கம் தொடங்கப் போவதற்கான முடிவை அறிவித்திருந்தார். 1915 டிசம்பரில் பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் அதற்கான காங்கிரஸ் கட்சியின் ஒத்துழைப்பையும் கோரினார். திலகரும் இவரது முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தார். முதல் உலகப்போர் காலத்தில் தன்னாட்சி இயக்கம் மிகவும் தீவிரமாக நடைபெற்றது.



**அன்னிபெசன்ட் அம்மையார்**

**ஒத்துழையாமை இயக்கம்**

1921 முதல் 1923 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கமும் தீவிரமாக நடைபெற்றது. அந்நியரின் விதிமுறைக்களுக்கு எதிரான போராட்டங்கள் 1921 மார்ச்சில் தொடங்கின. மாகாணத்தின் பல பகுதிகளிலும் மது அருந்ததுவதற்கு எதிரான இயக்கங்கள் 1921–22 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றன. குறிப்பாக மது அருந்துவதற்கு எதிரான போராட்டம் மதுரையில் தீவிரமாக நடைபெற்றது. பொதுவாகவே, தமிழ்நாடு முழுவதும் ஒத்துழையாமை இயக்கம் பரவலாக நடைபெற்றது. இதன் முக்கிய தலைவர்களாக சி. ராஜகோபாலாச்சாரி, எஸ்.சத்தியமூர்த்தி, ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்றோர் செயல்பட்டனர். அந்த சமயத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக ஈ.வெ.ராமசாமி நாயக்கர் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. காந்தியின் செயல்திட்டங்களில் சட்டசபை புறக்கணிப்பே முக்கியமானது என்று சி. ராஜகோபாலாச்சாரி வலியுறுத்தினார். ஆனால், கஸ்தூரிரங்க அய்யங்கார், சீனுவாச அய்யங்கார், வரதராஜுலு நாயுடு, விஜயராகவாச்சாரி போன்ற தலைவர்கள் இதனை ஏற்கவில்லை.



**கு.காமராஜ்**

இதற்கிடையில் பெரியார் ஈ.வெ.ரா.கேரளத்தில் வழக்கத்திலிருந்த சமூகப் பாகுபாட்டைக் கண்டித்து வைக்கம் சத்யாக்கிரகப் போராட்டத்தை தொடங்கினார்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான வி.வி.எஸ். அய்யர் நடத்தி வந்த சேரன் மாதேவி குருகுலத்தில் சமூகப்பாகுபாடு நிலவுவதைக் கண்டித்த பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறினார். புதுக்கோட்டையைச் சேர்ந்த எஸ்.சத்தியமூர்த்தியும் விடுதலைப்போராட்ட வீரர்களில் முக்கியமானவர். 1929ல் சைமன் குழு தமிழ்நாட்டுக்கு வந்தபோது, சைமன் குழு எதிர்ப்பு போராட்டத்திற்கு சத்தியமூர்த்தி தலைமை தாங்கினார்.

விருதுநகரைச் சேர்ந்த கு. காமராஜ் மற்றொரு விடுதலை வீரர் ஆவார். 1924ல் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதின் மூலம் அவர் தேசிய இயக்கத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1929ல் ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராகவும், பொருளாளராகவும் அவர் விளங்கினார். ஆரம்பத்திலிருந்தே காமராஜர் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார். எளிமையான நடையில் அவர் பேசுவார். நுண்ணறிவும், செயல்திறனும் மிக்கவராக அவர் திகழ்ந்தார். தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மக்களின் பல்வேறு பிரச்சினைகளை அவர் புரிந்து கொண்டார். தமிழ்நாட்டிலிருந்த சாமானியர்களில் ஒருவராக அவர் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டார். தமிழ்நாட்டின் கிராமங்களுக்கு காங்கிரஸ் இயக்கத்தை கொண்டு சென்றவர் காமராஜ் என்று கூறலாம்.

**உப்பு சத்தியாக்கிரகம்**

சட்டமறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக காந்தி உப்பு சத்தியாகிரகத்தை தொடங்கினார். 1930ல் அவர் தண்டி யாத்திரையை மேற்கொண்டார். 1930 ஏப்ரல் மாதத்தில் சி. ராஜகோபாலாச்சாரி தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக தமிழ்நாட்டில் உப்பு சத்தியாக்கிரகத்தை மேற்கொள்ளும் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டது. வரலாற்றுப் புகழ்பெற்ற வேதாரண்யம் உப்பு சத்தியாக் கிரக நடைப்பயணத்தை அவர் மேற்கொண்டார். திருச்சியிலிருந்து தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்த வேதாரண்யம் கடற்கரைக்கு நடைப்பயணம் மேற்கொள்வது என தீர்மானிக்கப்பட்டு தமிழ்ப் புத்தாண்டு அன்று (ஏப்ரல் 13) பயணம் தொடங்கப் பட்டது. 1930 ஏப்ரல் 28 ஆம் நாள் இப்பயணம் வேதாரண்யத்தில் முடிவடைந்தது. இரண்டு நாட்கள் கழித்து உப்புச் சட்டங்களை மீறியதற்காக ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார். வி.எஸ். எஸ். ராஜன், சர்தார் வேதரத்தினம் பிள்ளை, சி. சுவாமிநாத செட்டி மற்றும் கே.சந்தானம் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரகத்தில் பங்குபெற்றனர்.


**சி.ராஜகோபாலாச்சாரி**

கொடியேந்தி போராட்டம் நடத்திய திருப்பூர் குமரன் தடியடிக்கு ஆளானார். கொடியை கையில் பிடித்து போராடிய அந்த மாவீரன் கொடி காத்த குமரன் என்று அழைக்கப்பட்டார். இவரது நினைவைப் போற்றி இந்திய அரசு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது.


**திருப்பூர் குமரன்**

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையின் எழுச்சிமிக்க பாடல்களால் தேசிய இயக்கம் மேலும் வலிமை பெற்றது. விடுதலை இயக்கத்தில் காந்திய நெறிகள் பின்பற்றப்பட வேண்டிய அவசியத்தை அவரது பாடல்கள் எடுத்துக் கூறின. ‘‘கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது’’ என்று அவர் பாடினார். பிரிட்டிஷாருக்கு எதிரான அகிம்சைப் போராட்டத்தின் கொள்கையை விளக்குவதாக இந்த வரிகள் அமைந்தன.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்**

1935 ஆம் ஆண்டு சட்டப்படி 1937 ஆம் ஆண்டு தேர்தல்கள் நடந்தன. சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்று சி. ராஜகோபாலாச்சாரி தலைமையில் அமைச்சரவை பதவியேற்றது. அவரது அமைச்சரவையில் ஒன்பது அமைச்சர்கள் இருந்தனர். 1937 ஜூலை முதல் 1939 அக்டோபர் வரை இந்த அமைச்சரவை பதவியில் நீடித்தது. இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதைக் கண்டித்து காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகியபோது ராஜகோபாலாச்சாரி அமைச்சரவையும் பதவி விலகியது.

இரண்டாம் உலகப் போரின்போது, கிரிப்ஸ் தூதுக்குழு பரிந்துரைகள் தோல்வியடையவே, காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார். தமிழ்நாட்டில் நடைபெற்ற போராட்டத்தில் ஆலைத் தொழிலாளர்கள், மாணவர்கள், பொது மக்கள் ஏராளமாக கலந்து கொண்டனர். இது நாடுதழுவிய போராட்டமாக அமைந்தது.

பக்கிங்ஹாம் கர்னாடிக் ஆலை, துறைமுகப் பொறுப்புக் கழகம், டிராம்வே ஆகியவற்றின் தொழிலாளர்கள் என உழைக்கும் வர்க்கத்தினர் ஏராளமானோர் இதில் பங்கேற்றனர். வடஆர்க்காடு, மதுரை, கோயம்புத்தூர் உள்ளிட்ட இடங்களிலும் வெள்ளையனே வெளியேறு

இயக்கம் பரவியது. ராஜபாளையம், காரைக்குடி, தேவகோட்டை ஆகிய இடங்களில் போலீஸ் துப்பாக்கிச்சூடு நடத்தியது. சுபாஷ் சந்திர போசின் இந்திய தேசிய ராணுவத்திலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆண், பெண் வீரர்கள் சேர்ந்து விடுதலைக்காக போராடினர்.

1947 ஆகஸ்டு 15ல் இந்தியா விடுதலையடைந்தபோது, ஒ.பி. ராமசாமி ரெட்டியார் தலைமையிலான சென்னை அரசாங்கம் இந்திய விடுதலைச் சட்டத்தைப் பாராட்டி தீர்மானத்தை இயற்றியது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டவை*

1. *இந்திய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்ற தமிழ்நாடு எந்த வகையிலும் எவருக்கும் பின்தங்கியிருக்கவில்லை.*
2. *சுதேசி இயக்கத்தில் தமிழக மக்களை வழிநடத்தி சென்ற தலைவர்கள்*
3. *உப்பு சத்தியாகிரகத்தில் சி. ராஜகோபாலாச்சாரி உள்ளிட்ட தலைவர்கள் ஆற்றிய பங்கு.*
4. *தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் தன்மை*
5. *இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இயக்கத்தில் மக்கள் பெருமளவில் கலந்த கொண்ட முக்கிய இடங்கள்.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் முதல் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர்.

அ. சீனுவாசபிள்ளை    ஆ. லட்சுமிநரசு செட்டி

இ. ரங்கைய நாயுடு    ஈ. ஜி. சுப்ரமணிய அய்யர்

2. வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு தலைமையேற்றவர்

அ. காந்தி    ஆ. ராஜாஜி

இ. வ.உ.சி    ஈ. காமராஜ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சென்னை சுதேசி சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு ______________

2. சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை தொடங்கியவர் ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | சுப்பிரமணிய பாரதி | அ. | சுதேசமித்திரன் |
| 2. | அன்னிபெசன்ட் அம்மையார் | ஆ. | சென்னை மகாஜன சங்கம் |
| 3. | ஜி. சுப்ரமணிய அய்யர் | இ. | இந்தியா |
| 4. | பி. அனந்தா சாருலு | ஈ. | நியூ இந்தியா |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. சென்னை சுதேசி சங்கம் ஜி. சுப்பிரமணிய ஐயரால் தோற்றுவிக்கப்பட்டது.

ஆ. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது ஆண்டு பேரவைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இ. தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் பதவியில் பெரியார் ஈ.வெ.ரா. எப்பொழுதும் இருந்ததில்லை.

ஈ. வேதாரண்ய உப்பு சத்தியாகிரக யாத்திரை ஜனவரி 1, 1930ம் ஆண்டு திருச்சியில் இருந்து துவங்கியது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. சென்னை மகாஜன சங்கம் இந்திய தேசிய காங்கிரசை பலமாக எதிர்த்தது.
2. பாரதமாதா சங்கம் என்பது தமிழ்நாட்டில் செயல்பட்ட ஒரு புரட்சி இயக்கம்.
3. பெரியார் ஈ.வெ.ரா. வைக்கம் சத்யாகிரகத்தை தொடங்கினார்.
4. 1937ல் காமராஜ் தலைமையில் காங்கிரஸ் சென்னையில் அமைச்சரவையை அமைத்தது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ஜி. சுப்ரமணிய அய்யர்
2. வேதாரண்யம் யாத்திரை
3. சுப்ரமணிய பாரதி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. சென்னை மகாஜன சபை பற்றி குறிப்பு எழுதுக.
2. தேசிய இயக்கத்தில் வ.உ.சி.யின் பங்கினைப்பற்றி விவாதிக்க

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க.

# பாடம் – 18

# நீதிக்கட்சியின் ஆட்சி

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது :*

1. *சென்னை மாகாணத்தில் பிராமணர் அல்லாதார் இயக்கம் எழுச்சி பெற்றதற்கான காரணங்கள்*
2. *நீதிக்கட்சியின் தோற்றம்*
3. *நீதிக்கட்சியின் ஆட்சி*
4. *நீதிக்கட்சியின் சாதனைகள்*
5. *சென்னை மாகாணத்தில் நீதிக்கட்சி ஆட்சியின் முடிவு*

சென்னை மாகாணத்தில் நடைபெற்ற நீதிக்கட்சியின் ஆட்சி தென்னிந்திய வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. நீதிக்கட்சியின் கொள்கையும் நோக்கங்களும் தனித்தன்மையுடையதாகவும், காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளிலிருந்து மாறுபட்டதாகவும் காணப்பட்டன. நீதிக்கட்சி பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் பிரதிநிதியாக செயல்பட்டு, பணித்துறை மற்றும் கல்வித்துறை போன்றவற்றில் பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து ஒரு சமூகப்புரட்சியை உருவாக்கியது.

**நீதிக்கட்சியின் தோற்றம்**

பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் பிரதிநிதியான நீதிக்கட்சியின் தோற்றத்திற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். பிராமணர் அல்லாதார் இயக்கம் தோன்றியதற்கான முக்கிய காரணம் சமூகத்தில் பிராமணரின் ஆதிக்கம் மேலோங்கியிருந்ததேயாகும். சிவில் பணித்துறையிலும், கல்வி நிறுவனங்களிலும் அவர்கள் அதிக சதவிகித இடங்களில் அங்கம் வகித்தனர். மேலும், சென்னை சட்ட மன்றத்திலும் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு பிராமணர் அல்லாதார் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்தது. பத்திரிகைத்துறையிலும் பிராமணர்கள் முற்றுரிமை பெற்றிருந்தனர். தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியம் ஆகியன இருளிலிருந்து மீட்டெடுக்கப்பட்டதால் பிராமணர் அல்லாதோர் பெரும் உற்சாகம் அடைந்தனர். குறிப்பாக 1856 ஆம் ஆண்டு மறைத்திரு. ராபர்ட் கால்டுவெல் எழுதிய ‘திராவிட அல்லது தென்னிந்திய மொழிகள் குறித்த ஒப்பிலக்கணம்’ என்ற நூல் திராவிடர் என்ற கருத்தாக்கத்தை உருவாக்கியது. பின்னர், ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர் போன்ற தமிழ் அறிஞர்களின் முயற்சியால் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மீட்டெடுக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டன. வி. கனகசபை பிள்ளையின் 1800 ஆண்டுக்கு முன் தமிழர்கள் என்ற நூலில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே தமிழர்கள் மிகச் சிறந்த நாகரீகத்தை படைத்திருந்தனர் என்பதை சுட்டிக் காட்டினார். பிராமணர் அல்லாதோர் மத்தியில் திராவிட உணர்வுகளை இது மேலும் வளர்த்தது. மேற்கூறிய காரணங்களின் ஒட்டுமொத்த விளைவாக பிராமணர் அல்லாதார் இயக்கமும் நீதிக்கட்சியும் தோன்றின.

நீதிக்கட்சியின் முன்னோடி சென்னை ஐக்கிய கழகமாகும். இது 1912 நவம்பர் மாதத்தில் சென்னை திராவிட சங்கம் என்று பெயர் மாற்றம் பெற்றது. இந்த அமைப்பை வளர்ப்பதற்கு

டாக்டர் சி. நடேச முதலியார் முக்கிய பங்காற்றினார். 1916 ஆம் ஆண்டு பிராமணர் அல்லாத ஜாதி இந்துக்களின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' தோற்றுவிக்கப்பட்டது. பிட்டி – தியாகராய செட்டி, டாக்டர் டி.எம்.நாயர், பி. ராமராய நிங்கர் (பனகல் அரசர்) மற்றும் சி. நடேச முதலியார் போன்ற தலைவர்கள் இந்த அமைப்பு உருவாகக் காரணமாக இருந்தனர். தென்னிந்திய நல உரிமைச்சங்கம் 'ஜஸ்டிஸ்' (நீதி) என்ற பெயரில் ஒரு ஆங்கில மொழி செய்தித்தாளை நடத்தி வந்தது. இதனால் இந்த அமைப்பு நீதிக்கட்சி என்றே அழைக்கப்பட்டது. நீதிக்கட்சியை ஆதரித்த மற்றொரு தமிழ்ப் பத்திரிகை திராவிடன் ஆகும். மேலும் ஜஸ்டிஸ் கட்சி பல பொதுக்கூட்டங்கள், மாநாடு, சொற்பொழிவுகள் வாயிலாக பிராமணர் அல்லாதோர் இயக்கத்தை மக்களிடையே பரப்பியது அது போலவே ஜஸ்டிஸ் கட்சி மாவட்ட அமைப்புகளை உருவாக்கியது. மற்றும் பிராமணர் அல்லாத இளைஞர் அணியை தோற்றுவித்தது.

**நீதிக்கட்சியின் ஆட்சி**

மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தேர்தல்களில் வெற்றி பெற்று நீதிகட்சி ஆட்சிக்கு வந்தது. சென்னை சட்ட சபையில் 98ல் 63 இடங்களில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. பிட்டி தியாகராய செட்டி அமைச்சரவைக்கு தலைமையேற்க மறுத்துவிட்டதால் ஏ. சுப்பராயலு ரெட்டியார் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது. 1923 ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி சுயராஜ்ய கட்சியை எதிர்த்து போட்டியிட்டது. மீண்டும் பெரும்பான்மை இடங்களைப்பிடித்த நீதிக்கட்சி பனகல் அரசர் தலைமையின்கீழ் அமைச்சரவையை அமைத்தது. 1926 ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சியில் ஒற்றுமை குலைந்ததால், ஒட்டுமொத்த காங்கிரசை எதிர்த்து பெரும்பான்மை பெறமுடியவில்லை. எனவே, சுயேச்சை வேட்பாளர் ஏ. சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவை சுயராஜ்ய கட்சியின் ஆதரவுடன் பதவிக்கு வந்தது. 1930 ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் நீதிக்கட்சி பெரும்பான்மை பெற்றது. பி. முனுசாமி நாயுடு தலைமையிலான அமைச்சரவை பதவியேற்றது. 1932ல் பொப்பிலி அரசர் தலைமை அமைச்சரானார். 1934ல் இரண்டாவது முறையாக பொப்பிலி அரசர் அமைச்சரவைக்கு தலைமையேற்றார். 1937 ஆம் ஆண்டுவரை அவரது ஆட்சி தொடர்ந்தது.

**நீதிக்கட்சியின் சாதனைகள்**

மொத்தம் 13 ஆண்டுகள் நீதிக்கட்சி ஆட்சியிலிருந்தது. சமூக நீதியும், சமூக சீர்திருத்தங்களுமே இந்த ஆட்சியின் சிறப்புகளாகும். அரசப் பணியிடங்களில் பிராமணர் அல்லாத சமூகத்தினருக்கு போதிய பிரதிநிதித்துவத்தை நீதிக்கட்சி வழங்கியது. கல்வி சீர்திருத்தங்கள் மூலம் தாழ்த்தப்பட்டோர் நிலை உயர்வதற்கு அது பாடுபட்டது.

**நீதிக் கட்சி கல்வித்துறையில் பின்வரும் சீர்திருத்தங்களை அறிமுகப் படுத்தியது.**

1. கட்டணமில்லாத கட்டாயக் கல்வி முதன் முறையாக சென்னையில் அறிமுகப்படுத்தப் பட்டது.
2. ஏறத்தாழ 3000 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்களுக்கு மீன்வளத்துறையின் மூலமாக இலவச மீன் பிடிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
3. சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி பள்ளிகளில் இலவச மத்திய உணவு அளிக்கப்பட்டது.

4. 1934ம் ஆண்டு சென்னை துவக்க கல்வி சட்டம் திருத்தப்பட்டு 1935ல் துவக்க கல்வியின் தரம் மேம்படுத்தப்பட்டது.

5. பெண் கல்வி நீதிக் கட்சியின் ஆட்சியில் ஊக்குவிக்கப்பட்டது.

6. தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் கல்வி தொழிலாளர் நலத்துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டது.

7. ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.

மாவட்ட முன்சீப்புகளை நியமிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திடமிருந்து பறிக்கப்பட்டது. 1921 மற்றும் 1922 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டு அரசாணைகள், உள்ளாட்சி அமைப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பிராமணர் அல்லாதவர்களுக்கு இடஒதுக்கீட்டுக்கு வழிவகுத்தன.

1924 ஆம் ஆண்டு பனகல் அமைச்சரவையால் உருவாக்கப்பட்ட பணியாளர் தேர்வுக் கழகமே, 1929ல் பணியாளர் தேர்வு ஆணையமாக மாற்றப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக இத்தகைய அமைப்பு சென்னையில்தான் ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு பனகல் அமைச்சரவையால் இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஆலய நிர்வாகங்களில் நிலவிய ஊழலை ஒழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நீதிக்கட்சி பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தயது. தொழிற்சாலையின் வளர்ச்சிக்காக 1922ம் ஆண்டு சென்னை அரசாங்க தொழிற்சாலைகள் உதவிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இது பல புதிய தொழிற்சாலைகள் உருவாக காரணமாயின. உதாரணமாக சர்க்கரை தொழிற்சாலைகள், பொறியாளர் பணிகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள், அலுமினியம், சிமெண்ட் தொழிற்காலைகள், எண்ணெய் தொழிற்சாலைகள் உருவாயின. இந்த உதவிச்சட்டம், தொழிற்சாலைகளுக்கு நிலம், நீர்பாசன வசதிகள் வழங்க வழிவகை செய்தது.

அதுபோலவே நீதிக்கட்சி கிராமப்புற வளர்ச்சிக்காகவும், வேளாண் மக்களுக்கு உதவிட திட்டங்களை அறிமுகப்படுத்தியது. நோய்களை தடுக்க பொது சுகாதாரத் திட்டங்களை கொண்டு வந்தது. கிராமப்புற சாலைகளை மேம்படுத்த திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சென்னையில் நகர மேம்பாட்டு குழுவாயிலாக சென்னை மாநகராட்சி குடிசைகளை மாற்றி வீடு கட்டும் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. சமுதாய நல நடிவடிக்கைகளாக நீதிக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரிசு நிலங்களை வழங்கியது. பெண்களை இழிவுபடுத்தும் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் செயல்முறைகள் சீரமைக்கப்பட்டன. நீதிக் கட்சி ஆட்சியின்போதுதான், 1926ல் ஆந்திரப் பல்கலைக்கழகமும், 1929ல் அண்ணாமலை பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டன.

**நீதிக்கட்சி ஆட்சியின் முடிவு**

1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டப்படி மாகாண சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால், தேர்தலில் வெற்றிபெற்று பதவி ஏற்கும் இந்திய அமைச்சர்களிடமே மாகாணத்தை ஆட்சி செய்யும் பொறுப்பு என்ற நிலை தோன்றியது. இந்த தருணத்தில் நீதிக்கட்சியின் தலைவராக கே.வி.ரெட்டி நாயுடுவும், காங்கிரஸ் தலைவராக சி. ராஜகோபாலாச்சாரியும் பொறுப்பு வகித்தனர். 1937 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சட்டசபைக்கு 215 இடங்களில் 152 காங்கிரஸ் வெற்றிபெற்றது. சட்டமேலவையின் 46 இடங்களில்

26ஐ காங்கிரஸ் கைப்பற்றியது. 1937 ஜூலையில் சி. ராஜகோபாலாச்சாரி தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்றது. பல்வேறு சமூக முக்கியத்துவம் வாய்ந்த சட்டங்களை கொண்டுவந்த நீதிக்கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

1944 ஆம் ஆண்டு சேலத்தில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்றது.அம்மாநாட்டில் பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த தீர்மானங்கள்படி, "நீதிக்கட்சி", "திராவிடர் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**கற்றல் அடைவுகள்:**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற செய்திகள்:*

1. *பணித்துறை மற்றும் கல்வித்துறையில் பிராமணர்கள் செலுத்திய ஆதிக்கத்தால் பிராமணர் அல்லாதார் இயக்கம் தோன்றியது.*
2. *நீதிக்கட்சியின் தலைவர்கள்*
3. *1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி அமைச்சரவைகள்.*
4. *இடஒதுக்கீட்டு அரசாணைகள், இந்து சமய அறநிலைய சட்டம், தேவதாசிமுறை ஒழிப்பு போன்ற நீதிக்கட்சியின் சாதனைகள்.*
5. *நீதிக்கட்சியின் முடிவு.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ. 1912 ஆ. 1914

இ. 1916 ஈ. 1917

2. பின்வருவனவற்றுள் பெரியார் தொடங்காத பத்திரிக்கை எது ?

அ. குடியரசு ஆ. புரட்சி

இ. விடுதலை ஈ. சுயராஜ்யா

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இந்து சமய அறநிலைய சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | இட ஒதுக்கீட்டு அரசாணை | அ. | 1929 |
| 2. | பணியாளர் தேர்வுக் குழு | ஆ. | 1922 |
| 3. | தொழிற்சாலைகளுக்கு உதவி வழங்கும் சென்னை அரசின் சட்டம் | இ. | 1924 |
| 4. | அண்ணாமலை பல்கலைக்கழகம் | ஈ. | 1921 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழகம் என்ற நூலை எழுதியவர் சி.வி. தாமோதரம் பிள்ளை.

ஆ. சென்னை திராவிடர் கழகம் நவம்பர் 1912ல் துவக்கப்பட்டது.

இ. 1917ல் தென்னிந்திய முற்போக்கு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

ஈ. தமிழ் செய்தித்தாளான ஜஸ்டிஸ் நீதிக்கட்சியை ஆதரித்தது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. நீதிக்கட்சி ஆட்சி 13 ஆண்டுகளுக்கு நீடித்தது.
2. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை நீதிக்கட்சி அறிமுகம் செய்தது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பிராமணர் அல்லாதார் இயக்கம்
2. இட ஒதுக்கீட்டு அரசு ஆணை

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.
2. நீதிக்கட்சியின் முடிவு குறித்து ஒரு குறிப்பு வரைக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. நீதிக்கட்சியின் சாதனைகளை ஆய்க

# பாடம் – 19

# அரசியலமைப்பின் வளர்ச்சி (1858 – 1947)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறியும் செய்திகள் :*

1. *1858 ஆம் ஆண்டு முதல் 1935 வரை அரசியலமைப்பு வளர்ச்சியின் வரலாறு.*
2. *1861 மற்றும் 1892 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இந்திய கவுன்சில் சட்டங்களின் முக்கியத்துவம்.*
3. *மின்டோ – மார்லி சீர்திருத்தங்களின் முக்கிய கூறுகள்.*
4. *1919 ஆம் ஆண்டு சட்டத்தின் சிறப்புத் தன்மைகள்.*
5. *1935 ஆம் ஆண்டு சட்டத்தின் முக்கியத்துவம்.*

**1773** ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச்சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து இந்திய அரசியலமைப்பின் வரலாறு தொடங்குகிறது. **1784** ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் மற்றும் **1793** முதல் **1853** வரை இயற்றப்பட்ட பட்டயச் சட்டங்கள் கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு மாற்றங்களின் ஒரு பகுதியாகும். **1857** ஆம் ஆண்டு கலகம், இந்தியாவில் நடைபெற்ற பிரிட்டிஷ் ஆட்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தியாவின் ஆட்சி, இங்கிலாந்து அரசரின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. **1858** ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தில் இந்த மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. விக்டோரியா அரசியின் அறிக்கை இந்தியர்களுக்கு நல்லாட்சி வழங்கப்படும் என்ற உறுதியினையும் அளித்தது. அதன்பிறகு, நடைபெற்ற இந்திய தேசிய இயக்கத்தின் பின்னனியில் இந்திய அரசியலமைப்பில் முக்கிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

### 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம்

**1858** ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தை இங்கிலாந்து நாடாளுமன்றம் நிறைவேற்றியது. **1858** ஆகஸ்டு **2** ஆம் நாள் அரச அனுமதியையும் இச்சட்டம் பெற்றது.

இச்சட்டத்தின் முக்கிய பிரிவுகள் :

– கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்தது. இந்தியாவின் ஆட்சி அரசியின் நேரடிக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டது.

– இங்கிலாந்தில், இயக்குநர்கள் குழுவும், கட்டுப்பாட்டு வாரியமும் கலைக்கப்பட்டன. அவற்றுக்குப்பதில், இந்தியாவுக்கான அயலுறவுச் செயலர் ஒருவர் நியமிக்கப்பட்டார்; அவருக்கு ஆலோசனை வழங்க 'இந்தியா கவுன்சில்' என்ற அமைப்பும் ஏற்படுத்தப்பட்டது. அயலுறவுச் செயலர் பிரிட்டிஷ் அமைச்சரவையில் உறுப்பினராக இருப்பார். இந்தியாவுக்கான முதல் அயலுறவுச் செயலராக சர் சார்லஸ் வுட் நியமிக்கப்பட்டார். இந்தியா கவுன்சிலில் **15** உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர்.

– இந்தியாவின் தலைமை ஆளுநர் இந்தியாவின் வைஸ்ராய் (அரசுப் பிரதிநிதி) என்ற பொறுப்பையும் வகிப்பார். இந்தியாவின் முதல் வைஸ்ராயாக நியமிக்கப்பட்டவர் கானிங் பிரபு ஆவார்.

– இச்சட்டம் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டது.

**விக்டோரியா அரசியின் அறிக்கை**

1858 நவம்பர் 1 ஆம் நாள் விக்டோரியா அரசியின் அறிக்கையை அலகாபாத் நகரில் கானிங் பிரபு அறிவித்தார். இந்த அரச அறிக்கை இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பல்வேறு முக்கிய இடங்களில் பொது மக்கள் முன்னிலையில் படிக்கப்பட்டது. இந்தியாவில் வணிகக் குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்ததையும், அரசியார் ஆட்சிப் பொறுப்பை தாமே மேற்கொண்டதையும் இந்த அறிக்கை குறிப்பிட்டது. இந்திய அரசர்களுடன் வணிகக்குழு செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகளை ஒப்புக்கொண்டதுடன், அவர்களது உரிமைகள், கண்ணியம், மதிப்பு ஆகியவற்றை மதித்து நடப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது. சமமான மற்றும் பாரபட்சமற்ற சட்டப்பாதுகாப்பு தங்களது சமய மற்றும் சமூக பழக்கவழக்கங்களை பின்பற்றுவதற்கான உரிமை ஆகியன இந்திய மக்களுக்கு வழங்கப்படும் என்று அந்த அறிக்கை கூறியது. விக்டோரியா அரசியின் அறிக்கை 1858 ஆம் ஆண்டு சட்டத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதாக அமைந்தது.

**இந்திய கவுன்சில்கள் சட்டம் (1861)**

1861 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம் தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவிலிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து ஐந்தாக உயர்த்தியது. மேலும், தலைமை ஆளுநரின் நிர்வாகக்குழு மத்திய சட்டமன்றமாக விரிவுபடுத்தப்பட்டது. ஆறு முதல் பன்னிரண்டு 'கூடுதல் உறுப்பினர்கள்' தலைமை ஆளுநரால் நியமிக்கப்படுவர். இவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் அலுவலர் அல்லாதவர்களாக இருப்பர். இதனால் சட்டமன்றத்தில் இந்தியர்களை சேர்ப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டது. இந்த உறுப்பினர்களின் பணி சட்டமியற்றுவது மட்டுமே என்று தெளிவாகக் கூறப்பட்டது. நிர்வாகக் குழுவின் செயல்பாடுகளில் தலையிட இவர்களுக்கு உரிமையில்லை. நிர்வாகம் மற்றும் நிதி குறித்த அதிகாரங்கள் இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

மாகாணங்களிலும் இதேபோல் சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாகாணங்களில் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை நான்கு முதல் எட்டாக நிர்ணயிக்கப்பட்டது. முதன்முதலாக இந்தியர்களுக்கு சட்டமியற்றும் பணியில் பங்கெடுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டதால் அரசியலமைப்பின் வளர்ச்சியில் இச்சட்டம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவில் சட்டமியற்றும் முறை மெதுவாகத் தொடங்கி, 1892 மற்றும் 1909 ஆம் ஆண்டு சட்டங்களின் மூலம் மேலும் வளர்ச்சிபெற்றது.

**இந்திய கவுன்சில்கள் சட்டம் (1892)**

1892 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய கவுன்சில்கள் சட்டத்தை இந்திய தேசிய காங்கிரசுக்கு கிடைத்த முதல் வெற்றி என்று கருதலாம். மத்திய சட்டமன்றத்திலிருந்த கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கையை இச்சட்டம் மேலும் உயர்த்தியது. அவர்களது எண்ணிக்கை குறைந்தது பத்து என்றும் அதிகபட்சம் பதினாறு என்றும் நிர்ணயிக்கப்பட்டது. அலுவலர் அல்லாதோரின் விகிதமும் அதிகரிக்கப்பட்டது. 16 பேரில் 6 பேர் அலுவலர்கள், 10

பேர் அலுவலர் அல்லாதவர்கள், அரசின் வரவு – செலவு அறிக்கை மற்றும் நிதிக்கொள்கை பற்றி விவாதிக்க கூடுதல் உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல் மாகாண சட்டமன்றங்களிலும் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. கூடுதல் அதிகாரமும் வழங்கப்பட்டது.

**மின்டோ–மார்லி சீர்திருத்தங்கள் (1909)**

1909 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம் மின்டோ – மார்லி சீர்திருத்தங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. இந்தியாவுக்கான அயலுறவுச் செயலர் மார்லி பிரபு, இந்தியாவின் தலைமை ஆளுநர் மின்டோ பிரபு, இவ்விருவரும் இச்சட்டம் கொண்டு வரப்படுவதற்கு காரணமாக இருந்தனர். காங்கிரசிலிருந்து மிதவாதிகளை திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் முக்கிய பிரிவுகள்:

1. மத்திய சட்டசபையிலிருந்த கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகபட்சம் 60 ஆக உயர்த்தப்பட்டது. இவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 27 ஆகும். மீதமுள்ள நியமிக்கப்பட்டவர்கள் 33 பேரில் 28 பேர்களுக்குமேல், அதிகாரிகள் இருக்கக் கூடாது என்று விதிக்கப்பட்டது.

2. சட்டமன்றங்களுக்கு தேர்தல் என்ற கருத்து சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால், முஸ்லீம்களுக்கு சாதகமாக இருக்கும் பொருட்டு முதன்முறையாக வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்டது. முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

3. பெரிய மாகாணங்களின் சட்டமன்றங்களில் இருந்த கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்த்தப்பட்டது.

4. வரவு – செலவு அறிக்கை மற்றும் பொதுமக்கள் நலன் குறித்த விவகாரங்களைப்பற்றி விவாதிக்கவும், தீர்மானங்கள் நிறைவேற்றவும் சட்டமன்றங்களுக்கு உரிமை வழங்கப்பட்டது. ஆனால், வரவு – செலவு அறிக்கை மீதான விவாதத்திற்கு தலைமை ஆளுநர் அனுமதி அளிக்க மறுக்கலாம்.

5. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் முதன் முறையாக இந்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவ்வாறு நிமயமிக்கப்பட்ட முதல் இந்தியர் எஸ்.பி. சின்ஹா என்பவராவார்.

6. பம்பாய் மற்றும் சென்னை மாகாணங்களில் நிர்வாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கை 2 லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது. இந்தியர்களை இப்பதவிகளுக்கு நியமிக்கும் வழக்கமும் தொடங்கியது.

7. இங்கிலாந்திலிருந்த இந்தியா கவுன்சிலிலும் இரண்டு இந்தியர்கள் இடம் பெற்றனர்.

இந்தியாவில் ஒரு நாடாளுமன்ற அரசாங்க முறையை ஏற்படுத்தும் நோக்கம் மின்டோ – மார்லி சீர்திருத்தங்களுக்கு கிடையாது. இருப்பினும், இது தாராளமான நடவடிக்கையே என்று கருதிய மிதவாதிகள் இந்த சீர்திருத்தங்களை வரவேற்றனர். தனித்தொகுதிகளை ஒதுக்குதல் என்ற கோட்பாடு 1947 ஆம் ஆண்டு இந்தியப் பிரிவினைக்கு இட்டுச் சென்றது.

**மான்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் (1919)**

முதல் உலகப் போர் காலத்தில் நடைபெற்ற தன்னாட்சி இயக்கம் போன்ற அரசியல் நடவடிக்கைகளின் பலனாக ஆகஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டது. 1917 ஆகஸ்டு 20 ஆம் நாள் இந்தியாவிற்கான அயலுறவுச் செயலர் மான்டேகு, காமன்ஸ் சபையில் ஒரு முக்கிய அறிக்கையை வெளியிட்டார். இந்தியாவில் படிப்படியாக பொறுப்புள்ள அரசாங்கம் அறிமுகப்படுத்தப்படும் என்று அவரது அறிக்கையில் உறுதியளிக்கப்பட்டது. அதன் முதல் தவணையாக இங்கிலாந்து நாடாளுமன்றம் 1919 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தை நிறைவேற்றியது.

இந்த சட்டமே மான்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் என அழைக்கப்படுகிறது. அப்போது இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்தவர் செம்ஸ்போர்டு பிரபு ஆவார்.

**இச்சட்டத்தின் முக்கிய கூறுகளாவன:**

1. மாகாணங்களில் இரட்டையாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. மாகாண அதிகாரங்கள் யாவும் ‘ஒதுக்கப்பட்ட துறைகள்’ எனவும் ‘மாற்றப்பட்ட துறைகள்’ எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்ட துறைகளின்கீழ் காவல்துறை, சிறைச்சாலைகள், நிலவருவாய், நீர்பாசனம், வனங்கள் போன்ற துறைகளும், மாற்றப்பட்ட துறைகளின் கீழ், கல்வி, உள்ளாட்சி அமைப்புகள், பொது சுகாதாரம், துப்புரவு, வேளாண்மை மற்றும் தொழில்கள் போன்ற துறைகளும் இருந்தன. ஒதுக்கப்பட்ட துறைகள் ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் நிர்வாகத்தில் இயங்கின. மாற்றப்பட்ட துறைகளை ஆளுநரும் அவரது அமைச்சர்களும் நிர்வகித்தனர்.

2. மத்தியில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றம் ஏற்படுத்தப்பட்டது. மாநிலங்களவை என்றும் சட்டப்பேரவை என்றும் இவை அழைக்கப்பட்டன. சட்டப்பேரவையில் இருந்த மொத்தம் 145 உறுப்பினர்களில் 105 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் எஞ்சிய 40 பேர் நியமிக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். மாநிலங்களைவையிலிருந்த அதிகபட்ச உறுப்பினர்களான 60 பேரில் 34 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எஞ்சிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டவர்கள்.

3. இந்தியாவுக்கான அயலுறவுச் செயலர் மற்றும் அவரது உதவியாளர்களுக்கான ஊதியம் இனி பிரிட்டிஷ் வருவாயிலிருந்தே அளிக்கப்படும். இதுவரை, இந்திய வருவாயிலிருந்தே அவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

4. லண்டனில், இந்தியாவுக்கான உயர் ஆணையர் (தூதர்) ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இந்த சட்டத்தின் மிகப்பெரிய குறைபாடு, மாகாணங்களில் கொண்டுவரப்பட்ட இரட்டையாட்சி முறையின்கீழ் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டதேயாகும்.

**1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம்**

சைமன் குழு அளித்த அறிக்கை, வட்டமேசை மாநாடுகளின் நடவடிக்கைகள் மற்றும் 1933 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் அளித்த வெள்ளை அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் 1935 ஆண்டு இந்திய அரசுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1919 ஆம் ஆண்டு சட்டத்தில் இந்த சட்டம் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

**இச்சட்டத்தின் சிறப்புக் கூறுகள் வருமாறு:**

1. பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்த மாகாணங்கள் மற்றும் சுதேச அரசுகள் அடங்கிய அனைத்திந்திய கூட்டாட்சி ஒன்று மத்தியில் உருவாக்க வழிவகை செய்யப்பட்டது. (சுதேச அரசுகள் இதற்கு உடன்பட மறுத்தமையால் கூட்டாட்சி உருவாக்கப்படவில்லை).

2. மத்திய அரசின் அதிகாரங்கள் மூன்று பட்டியல்களாக பிரிக்கப்பட்டது – கூட்டாட்சிப் பட்டியல், மாகாண பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல்.

3. மத்தியில் இரட்டையாட்சி கொண்டு வரப்பட்டது. ஒதுக்கப்பட்ட துறைகள் தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டில் இருந்தன. மாற்றப்பட்ட துறைகள் அமைச்சரவையின் பொறுப்பில் விடப்பட்டன.

4. மாகாணங்களில் இரட்டையாட்சி ஒழிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண நிர்வாகக்குழுவின் தலைவராக ஆளுநர் இருப்பார். அமைச்சரவையின் ஆலோசனைகளின் பேரில் அவர் நிர்வாகத்தை நடத்துவார் எனவே மாகாண அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களின் பொறுப்பில் விடப்பட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சட்டப்பேரவைக்கு அவர்கள் பொறுப்புள்ளவர்களாவர்.

5. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம், பீகார் மற்றும் அஸ்ஸாம் மாகாணங்களில் இரண்டு அவைகளைக் கொண்ட சட்டமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

6. சீக்கியர்கள், ஐரோப்பியர்கள், இந்திய கிறித்துவர்கள் மற்றும் ஆங்கிலோ இந்தியர்களுக்கும் தனித்தொகுதி முறை விரிவு படுத்தப்பட்டது.

7. ஒரு தலைமை நீதிபதி, ஆறு நீதிபதிகள் கொண்ட கூட்டாட்சி நீதிமன்றம் டெல்லியில் நிறுவப்பட்டது.

மாகாண சுயாட்சி பல இடங்களில் வெற்றிகரமாக செயல்படவில்லை அமைச்சர்களின் ஆலோசனைகளை ஆளுநர் கட்டாயமாக கேட்டு நடக்க வேண்டியதில்லை என்ற நிலையே இதற்குக் காரணம். மாகாண அரசின் உண்மையான அதிகாரம் ஆளுநரிடமே இருந்தது. இத்தகைய குறைபாடுகள் இருந்த போதிலும் காங்கிரஸ் கட்சி நடக்கவிருந்த மாகாண சட்டமன்றத் தேர்தல்களில் கலந்து கொள்வது என முடிவெடுத்தது. முந்தைய சட்டங்களைவிட இச்சட்டம் இந்தியர்களுக்கு முற்போக்கானதாக காணப்பட்டது.

1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டப்படி 1937 பிப்ரவரியில் மாகாண சட்ட மன்றங்களுக்கு தேர்தல்கள் நடைபெற்றன. காங்கிரஸ் இத்தேர்கல்களில் மகத்தான வெற்றி பெற்றது. 1937 ஜூலை 7 ஆம் நாளன்று தலைமை ஆளுநர் லின்லித்கோ பிரபு அளித்த ஒத்துழைப்பை அடுத்து ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி அமைச்சரவைகளை அமைத்தது.

- **அரசியல் அமைப்பு வளர்ச்சிகள்**
  - **1750 - 1800**
    - **1773** ஒழுங்கு முறைச் சட்டம்
    - **1784** பிட் இந்தியச் சட்டம்
    - **1793** பட்டயச் சட்டம்
  - **1800 - 1850**
    - **1813** பட்டயச் சட்டம்
    - **1833** பட்டயச் சட்டம்
  - **1850 - 1900**
    - **1853** பட்டயச் சட்டம்
    - **1858** இந்திய அரசுச் சட்டம்
    - **1861** இந்திய மன்றங்களின் சட்டம்
    - **1892** இந்திய மன்றங்களின் சட்டம்
  - **1900 - 1950**
    - 1909 இந்திய மன்றங்களின் சட்டம் (மின்டோ–மார்லி சீர்திருத்தங்கள்)
    - 1919 இந்திய அரசுச் சட்டம் (மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள்)
    - 1935 இந்திய அரசுச் சட்டம்

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை படித்தபின் மாணவர் புரிந்து கொண்டது.*

1. *1858 ஆம் ஆண்டு சட்டம் கொண்டு வந்த மாற்றங்கள் மற்றும் பேரரசியின் அறிக்கை.*
2. *1861 மற்றும் 1892 ஆம் சட்டங்களின்படி மத்திய, மாகாண சட்டமன்றங்கள் விரிவாக்கப்படுதல்.*
3. *தேர்தல் முறை அறிமுகமும், 1909 ஆம் ஆண்டு சட்டப்படி முஸ்லிம்களுக்கு தனித்தொகுதி ஒதுக்கப்பட்டதும்.*
4. *1919 ஆம் ஆண்டு சட்டப்படி மாகாணங்களில் இரட்டையாட்சி அறிமுகப் படுத்தப்பட்டது. அதிகாரங்கள் ஒதுக்கப்பட்ட துறைகள், மாற்றப்பட்ட துறைகள் என இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டன.*
5. *1935 ஆம் ஆண்டு சட்டப்படி மாகாண சுயாட்சி கொண்டுவரப்பட்டாலும் இந்திய அமைச்சர்களுக்கு சொற்ப அதிகாரமே வழங்கப்பட்டது.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருவனவற்றுள் 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் ஷரத்து எது ?

   அ. இயக்குநர்கள் மன்றம் மற்றும் கட்டுப்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்டன.

   ஆ. வணிகக் குழுவின் ஆட்சி 20 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

   இ. 15 உறுப்பினர்கள் கொண்ட இந்தியா கவுன்சில் அமைக்கப்பட்டது.

   ஈ. முன்பு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் யாவும் ரத்து செய்யப்பட்டன.

2. சட்டமன்றங்களுக்கான தேர்தலை சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்ட சட்டம் எது ?

   அ) 1861 ஆம் ஆண்டு சட்டம் ஆ) 1892 ஆம் ஆண்டு சட்டம்

   இ) 1909 ஆம் ஆண்டு சட்டம் ஈ) 1919 ஆம் ஆண்டு சட்டம்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. 1919–ம் ஆண்டு அரசு சட்டம் ______________ வைஸ்ராயாக இருந்தபோது நிறைவேற்றப்பட்டது.

2. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாணங்களில் ______________ ஐ அறிமுகப்படுத்தியது.

3. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் இடம்பெற்ற முதல் இந்திய சட்ட உறுப்பினர் ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தியாவுக்கான அயலுறவுச்செயலர் | அ. | 1935 |
| 2. | மாகாணங்களில் இரட்டையாட்சி | ஆ. | 1909 |
| 3. | அனைத்திந்திய கூட்டாட்சி | இ. | 1919 |
| 4. | வகுப்புவாரி பிரதிநிதித்துவம் | ஈ. | 1858 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. விக்டோரியா மகாராணியின் அறிக்கையை கானிங் பிரபு அலகாபாத்தில் அறிவித்தார்.

ஆ. மின்டோ–மார்லி சீர்திருத்தங்கள் ஆளுநரான மார்லி பிரவுவையும், இந்திய செயலர் மின்டோ பிரபுவையும் குறிக்கிறது.

இ. 1919ம் ஆண்டு சட்டம் இரட்டையாட்சியை மத்தியில் அறிமுகப் படுத்தியது.

ஈ. மத்தியில் ஓர் அவை கொண்ட சட்டமன்றம் நிறுவப்பட்டது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. 1858 ஆம் ஆண்டு சட்டம் இந்தியாவின் தலைமை ஆளுநரை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்தது.
2. 1861 ஆம் ஆண்டு சட்டம் தலைமை ஆளுநரின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5லிருந்து 6 ஆக உயர்த்தியது.
3. 1919 ஆம் ஆண்டு சட்டப்படி லண்டனில் இந்தியாவிற்கான உயர் ஆணையர் நியமிக்கப்பட்டார்.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பேரரசியின் அறிக்கை
2. 1892 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டம்
3. இரண்டு அவை சட்டமன்றம்
4. இரட்டையாட்சி
5. மாகாண சுயாட்சி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக
2. 1861 ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டத்தின் பிரிவுகளை விவரி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. 1909 ஆண்டு மின்டோ–மார்லி சீர்திருத்தங்களின் பிரிவுகளை நுணுகி ஆய்க
2. 1919 ஆம் ஆண்டு சட்டத்தின் முக்கிய கூறுகளை ஆய்க.
3. ‘இந்தியாவின் அரசியலமைப்பு முறையில் 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் முக்கிய மாறுதல்களைக் கொண்டு வந்தது கருத்து கூறுக.

# பாடம் – 20

## விடுதலைக்குப்பின் இந்தியா


**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தை படிப்பதனால் மாணவர் அறிந்துகொள்வது:*

1. *இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்.*
2. *இந்திய அரசுகளை ஒருங்கிணைத்தல்*
3. *மொழிவாரி மாநிலங்களை சீரமைத்தல்*
4. *விடுதலைக்குப் பின் இந்திய பொருளாதார வளர்ச்சி*
5. *அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி*
6. *விடுதலைபெற்ற இந்தியாவின் அயலுறவுக் கொள்கை*

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை அடைந்த பிறகு இந்தியத் தலைவர்கள் ஆற்ற வேண்டியிருந்த அவசரப் பணிகள் இரண்டு. முதலாவதாக, இந்தியாவுக்கென ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது; மற்றொன்று இந்திய ஒன்றியத்தில் சுதேச அரசுகளை ஒருங்கிணைப்பது. மேலும், இந்தியாவை பொருளாதார மற்றும் அறிவியல் ரீதியாக நவீனப்படுத்த வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு இருந்தது. நீண்டகாலத் திட்டங்களாக, நாட்டில் நிலவிய வறுமையை ஒழித்து, மக்களிடையே கல்வியைப் பரப்ப வேண்டிய பொறுப்பையும் அவர்கள் மேற்கொண்டனர்.

**இந்தியாவின் அரசியலமைப்பு**



டாக்டர் ராஜேந்திர பிரசாத்

1946 டிசம்பர் 9 ஆம் நாள் அரசியலமைப்புக்குழு தனது பணியினைத் தொடங்கியது. அரசியலமைப்புக் குழுவின் தலைவராக டாக்டர் ராஜேந்திரபிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அரசியலமைப்பு வரைவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். நீண்ட விளக்கமான விவாதங்களுக்குப்பின், 1949 நவம்பர் 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்பை இக்குழு ஏற்றுக் கொண்டது. 1950 ஜனவரி 26 ஆம் நாள் முதல், அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது. அது முதல் இந்த தினம் குடியரசு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை, பாராளுமன்ற முறை, அடிப்படை உரிமைகள், அரசு நெறிமுறைக் கோட்டுபாடுகள் போன்ற அம்சங்களை இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளாகக் கொள்ளலாம். மத்தியில் ஒருமுகத்தன்மையும் கூட்டாட்சித் தன்மையும் கலந்த ஒரு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அதிகாரங்கள் மிகத் தெளிவாக மத்திய, மாநில, பொது – ஆகிய மூன்று பட்டியல்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்புத் தலைவராகவும், பிரதம அமைச்சர் நிர்வாகத் தலைவராகவும் செயல்படுகின்றனர். மக்களவையின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற கட்சியின் தலைவர் பிரதமர் பதவி வகிக்கிறார். இந்திய நாடாளுமன்றம் இரண்டு அவைகளைக் கொண்டுள்ளது – ராஜ்ய சபை அல்லது மேலவை, லோக் சபை அல்லது கீழவை. ஒவ்வொரு மாநில அரசும் முதலமைச்சரின்கீழ் இயங்குகிறது. மாநில சட்டப்பேரவையின் பெரும்பான்மை ஆதரவு பெற்ற கட்சித் தலைவர் முதலமைச்சராகிறார். எனவே, ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற அரசாங்கங்கள் நாட்டை ஆட்சி புரிகின்றன. முறையான காலங்களில் தேர்தல்கள் நடைபெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பாதுகாவலராக நீதித்துறை விளங்குகிறது. இந்திய நீதித்துறை அமைப்பில் மத்தியில் உச்ச நீதிமன்றமும், மாநில அளவில் உயர் நீதிமன்றங்களும் செயல்படுகின்றன. மாநிலத்திலுள்ள கீழ் நீதிமன்றங்கள் உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

**சுதேச அரசுகளை ஒருங்கிணைத்தல்**

விடுதலையின் போது இந்தியாவில் 11 பிரிட்டிஷ் மாகாணங்களும் ஏறத்தாழ 566 சுதேச அரசுகளும் இருந்தன. பிரிட்டிஷார் இந்தியாவைவிட்டு அகன்றபிறகு இந்திய அரசுகள் சுதந்திரமாக இருக்கலாம் என்று நினைத்தன. தனது ஆற்றல் மற்றும் அரசியல் வெல்திறன் காரணமாக சர்தார் வல்லபாய் பட்டேல் 1947 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்கு முன்பே இந்திய சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்தில் இணையும்படி செய்தார். ஜுனாகத், ஜம்மு காஷ்மீர், ஹைதராபாத் ஆகிய மூன்று சுதேச அரசுகள் மட்டும் அவ்வாறு சேர மறுத்தன. ஜுனாகத் அரசின் ஆட்சியாளர் தமது மக்களின் விருப்பத்துக்கு மாறாக பாகிஸ்தானுடன் இணைய விரும்பினார். எனவே, பட்டேல் இந்திய துருப்புக்களை அங்கு அனுப்பி மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தினார். அதன்படி ஜுனாகத் இந்தியாவில் இணைந்தது.



**வல்லபாய் பட்டேல்**

ஜம்மு – காஷ்மீர் அரசு இந்திய – பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் அமைந்திருந்தது. அதன் அரசர் ராஜா ஹரிசிங், தொடக்கத்தில் அவர் சுதந்திர அரசராக தம்மைக் கருதிக்கொண்டார். பாகிஸ்தானிய ராணுவ அதிகாரிகளால் வழிநடத்தப்பட்ட பட்டாணியர்கள் காஷ்மீர்மீது படையெடுத்தபோது, ஹரிசிங் இந்தியாவின் உதவியை நாடினார். காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டால் மட்டுமே, இந்தியா பன்னாட்டுச் சட்டப்படி தனது துருப்புக்களை உதவிக்கு அனுப்ப முடியும் என்று பிரதமர் நேரு எடுத்துக் கூறினார். ஆகவே 1947 அக்டோபர் 26 ஆம் நாள் ராஜா ஹரிசிங் இணைப்புறுதி பத்திரத்தில் கையெழுத்திட்டார். இதன்படி காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாயிற்று.


ஹைதராபாத் ஆட்சியாளர் நிசாம் இந்திய ஒன்றியத்துடன் இணைய மறுத்தார். பலமுறை எடுத்துக் கூறியும் நிசாம் பணிய மறுத்தமையால் 1948ல் இந்திய துருப்புக்கள் ஹைதராபாத்துக்குச் சென்றது. நிசாம் சரணடைந்தார். இறுதியாக, ஹைதராபாத் இந்திய ஒன்றியத்துடன் இணைந்தது.

**மொழிவாரி மாநிலங்கள் சீரமைக்கப்படுதல்**

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்வதற்காக எஸ்.கே. தார் தலைமையிலான முதலாவது மொழிவாரி மாகாண ஆணையம் 1948ல் அரசியலமைப்புக்குழுவால் ஏற்படுத்தப்பட்டது. இக்குழு அத்தகைய சாத்தியக்கூறுகள் இல்லை எனக் கூறியது. அதேயாண்டில், ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், பட்டாபி சீதாராமையா ஆகியோர் அடங்கிய ஜேவிபி குழுவை காங்கிரஸ் கட்சி அமைத்தது. இந்தக் குழுவும் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதை ஆதரிக்கவில்லை. ஆனால், நாட்டின் பல பகுதிகளில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கக் கோரி மக்கள் இயக்கங்கள் நடைபெற்றன. குறிப்பாக, ஆந்திராவில் இத்தகைய இயக்கம் தீவிரமடைந்தது. ஆகவே 1953 ஆம் ஆண்டு ஆந்திரா தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. அதே சமயம் சென்னை மாநிலமும் (தமிழ்நாடு) தமிழ்பேசும் மாநிலமாக ஏற்கப்பட்டது. இத்தருணத்தில், திருத்தணியை சென்னை மாநிலத்துடன் தக்க வைப்பதற்காக ம.பொ.சிவஞானம் தலைமையேற்று நடத்திய இயக்கம் தமிழக வரலாற்றில், நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

ஆந்திர இயக்கம் பெற்ற வெற்றி பிறமொழி பேசும் மக்களின் தனி மாநிலப் போராட்டங்களை மேலும் ஊக்குவித்தது. 1953ல் பிரதமர் ஜவஹர்லால் நேரு நீதிபதி பசல் அலி தலைமையிலான மாநிலங்கள் சீரமைப்புக் குழுவை நியமித்தார். இக்குழுவில் பண்டிட் ஹிருதயநாத் குன்ஸ்ரூ, சர்தார் கே.எம். பணிக்கர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். 1955 செப்டம்பர் 30ல் இக்குழு தனது அறிக்கையை அளித்தது. அதன் அடிப்படையில் 1956ல் நாடாளுமன்றம் மாநிலங்கள் சீரமைப்பு சட்டத்தை நிறைவேற்றியது. 16 மாநிலங்களும் ஆறு யூனியன் பிரதேசங்களும் இச்சட்டத்தில் இடம் பெற்றிருந்தன. தெலுங்கானா பகுதி ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது. மலபார் மாவட்டத்தை திருவாங்கூர் – கொச்சியுடன் இணைத்து புதிய கேரள மாநிலம் உருவாக்கப்பட்டது. திருவாங்கூர் பகுதியில் வசித்த தமிழ் மொழி பேசுவோர் தங்கள் பகுதியை (கன்னியாகுமரி) தமிழ்நாட்டுடன் இணைக்குமாறு போராட்டங்கள் நடத்தி வெற்றிபெற்றனர்.

**இந்திய அரசியல் (1947 – 2000)**



ஜவஹர்லால் நேரு

இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி என்று கருதப்படுகிறார். நாட்டின் ஒற்றுமையைக் காத்து, மக்களாட்சி நிறுவனங்களைப் போற்றி வளர்த்து இந்தியாவின் சுதந்திரத்தை மேலும் நிலைப்படுத்தினார். அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் அவர் வித்திட்டார். சுதந்திரமான அயலுறவுக் கொள்கையை பின்பற்றிய நேரு இந்தியாவை வலிமையான நாடாக உருவாக்கினார். 1964ல் அவர் மறைந்தார்.

நேருவின் மறைவுக்குப் பிறகு இந்தியாவின் பிரதமராக லால் பகதூர் சாஸ்திரி பதவிக்கு வந்தார். பொது வாழ்வில் நேர்மைக்கு இலக்கணமாக அவர் திகழ்ந்தார். 1965 ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தானியப் போரை, 1966 ஜனவரியில் செய்து கொண்ட தாஷ்கண்ட் ஒப்பந்தப்படி முடிவுக்கு கொண்டுவந்தார். அவரது அகால மரணம் நாட்டிற்கு பேரிழப்பாகும்.

1966 ஆம் ஆண்டு பிரதமராக பொறுப்பேற்ற நேருவின் மகளான இந்திரா காந்தி அப்போது நாட்டின் பெரும் சவால்களாக விளங்கிய உணவுப் பற்றாக்குறை, 1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் சிக்கல் போன்றவற்றை திறமையுடன் எதிர்கொண்டார். 1975ல் அவரது ஆட்சிக்கு எதிர்ப்புகள் வலுக்கவே, நாட்டில் அவசர நிலை ஆட்சியைக் கொண்டு வந்தார். இது இந்தியாவின் ஜனநாயக மரபுக்கு ஒரு கரும்புள்ளியாக அமைந்தது. இருப்பினும் 1977ல் பொதுத் தேர்தலை அறிவித்ததன் மூலம் மீண்டும் ஜனநாயம் மலர அவர் வித்திட்டார். இத்தேர்தலில் அவர் தோல்வியடைந்தார். பின்னர், 1980ல் ஜனநாயக வழியில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார். இவரது ஆட்சியில் 1983ஆம் ஆண்டு பஞ்சாப், அமிர்தசரஸ் பொற்கோவிலுக்குள் நீல நட்சத்திர நடவடிக்கையை இந்திய ராணுவத்தைக் கொண்டு எடுத்தார். இச் செயல் காரணமாக துரதிஷ்டவசமாக அவரது பாதுகாவலர்களாலேயே இந்திராகாந்தி 1984ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.


இந்திரா காந்தி

1977 முதல் 1980 வரை நடைபெற்ற ஜனதா கட்சியின் ஆட்சியின்போது இந்தியாவின் பிரதமராக மொரார்ஜி தேசாய் பதவி வகித்தார். விடுதலைக்குப் பிறகு பதவியேற்ற முதலாவது காங்கிரஸ் அல்லாத அரசு இதுவேயாகும். ஜனதா கட்சி தலைவர்களுக்கிடையே நிலவிய ஒற்றுமையின்மையின் காரணமாக ஜனதா கட்சி அரசு கவிழ்ந்தது.


1984ல் இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு அவரது புதல்வர் ராஜீவ் காந்தி பிரதமரானார். அந்நிய முதலீட்டை அவர் ஊக்குவித்தார். புதிய கல்விக் கொள்கையையும் அறிமுகப்படுத்தினார். இலங்கையில் நடைபெற்ற இன அடிப்படையிலான வன்முறைக்கு முடிவு கட்டும் நோக்கத்துடன் இந்திய அமைதிப் படையை அங்கு அனுப்பி வைத்தார். 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற அடுத்த தேர்தல் வரை அவர் பிரதமராக இருந்தார். பின்னர் 1991 மே திங்களில் இலங்கை தமிழ் தீவிரவாதிகளால் மனித வெடிகுண்டு மூலம் திரு பெரும்புதூரில் கொல்லப்பட்டார்.


மொராஜி தேசாய்

1989 முதல் 1990 ஆம் ஆண்டுவரை வி.பி.சிங் பிரதமராக இருந்தார். ஜனதா தளம் என்ற காங்கிரஸ் எதிர்ப்பு கூட்டணி அரசுக்கு அவர் தலைமை வகித்தார். அவர் தனது ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் மண்டல் குழு அறிக்கையை நடைமுறைப்படுத்த முடிவு செய்தார். அவரது அரசில் கூட்டணிக் குழப்பங்கள் ஏற்பட்டதால், 1990ல் அவர் பதவியைத் துறக்க வேண்டியதாயிற்று. அடுத்த பிரதமராக பதவியேற்ற சந்திரசேகர் 1990 நவம்பர் முதல் 1991 மார்ச் வரை அப்பதவியில் நீடித்தார்.


வி.பி.சிங்

1991 ஜூன் மாதத்தில் பி.வி. நரசிம்மராவ் பிரதமராக பதவியேற்றார். புதிய பொருளாதாரக் கொள்கைகளை அவர் தீவிரமாக செயல்படுத்த முடிவு செய்தார். அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைப்பது, சிக்கன நடவடிக்கைகளை பின்பற்றுவது, அந்நிய முதலீட்டை ஊக்குவிப்பது போன்றவை நடைமுறைப் படுத்தப்பட்டன. இதில் அன்றைய


ராஜீவ் காந்தி

நிதியமைச்சரான டாக்டர் மன்மோகன் சிங்கின் பங்கு முக்கியமானதாகும். இதன் விளைவாக, இந்தியா தாராளமயம், தனியார்மயம், உலக மயம் ஆகிய பாதைகளில் நடைபோடத் துவங்கியது.

1996 ஆம் ஆண்டு தேர்தலுக்குப்பிறகு, பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்த அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்றார். அவரால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமல் போனதால் பதவி துறக்க வேண்டியதாயிற்று. தேவ கவுடாவின் தலைமையில் கூட்டணி ஆட்சி பதவிக்கு வந்தது. கர்னாடக மாநிலத்தைச் சேர்ந்த அவர் நாட்டின் 11வது பிரதமராவார் (1996–97). பாரதீய ஜனதா மற்றும் காங்கிரஸ் கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் வெற்றியினால் கவுடா அரசும் கவிழ்ந்தது. அவரைத் தொடர்ந்து 1997ல் சிறிது காலம் ஐ.கே. குஜ்ரால் பிரதமராக பதவி வகித்தார். 1998ல் அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமரானார். 1999 தேர்தல்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று அடல் பிஹாரி வாஜ்பாய் மீண்டும் பிரதமராக பதவியேற்றார். அவரது ஆட்சியின்போது இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பாகிஸ்தானுடன் கார்கில் போர் நடைபெற்றது; மற்றொன்று பொக்ரானில் அணு ஆயுத சோதனை நிகழ்த்தப்பட்டது.

**பொருளாதார வளர்ச்சி**

1947ல் இந்தியா விடுதலையடைந்தபோது மக்கள் வறுமையில் உழன்றனர். வேலையில்லா திண்டாட்டமும் எழுத்தறிவின்மையும் எங்கும் காணப்பட்டது. வேளாண் உற்பத்தியில் தேக்கம் நிலவியது. தொழில் முன்னேற்றம் மெதுவாகவே இருந்தது. அடிப்படை வசதிகளும் போதுமானதாக இல்லை. நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல தேசிய அளவில் பெரும் முயற்சி எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நவஇந்தியாவின் சிற்பியான ஜவஹர்லால் நேரு, சோவியத் நாட்டின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் சாதனைகளைக் கண்டு வியந்தார். அதேசமயம் ஜனநாயக மரபுகள் போற்றப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் உணர்ந்திருந்தார். சமத்துவத்தையும், ஜனநாயத்தையும் இணைத்து அவர் வகுத்த கொள்கை 'ஜனநாயக சமத்துவம்' என்றே அழைக்கப்பட்டது. விரைவான தொழில் மற்றும் வேளாண் வளர்ச்சிக்கு அவர் திட்டமிடுதலை ஊக்குவித்தார். கனரகத் தொழில்களை வளர்ப்பதற்கு பொதுத்துறை நிறுவனங்களை அவர் நிறுவினார். கலப்பு பொருளாதாரமே வளர்ச்சிக்கு அடிப்படை என்று அவர் நம்பினார். சுயேச்சையான தற்சார்பு பொருளாதார சக்தியாக இந்தியாவை உருவாக்குவதே அவரது அடிப்படை நோக்கமாகும். 1950 மார்ச் 15 ஆம் நாள் தேசிய திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது. பிரதமர் நேருவே அதன் தலைவராக பொறுப்பேற்றார்.

**திட்டக்குழுவின் முக்கிய நோக்கங்களாவன**

1. தேசிய மற்றும் தனிநபர் வருமானத்தை பெருக்குவது
2. முழுவேலை வாய்ப்பை உருவாக்குவது
3. வருமானம் மற்றும் செல்வ வளத்தில் காணப்படும் சமத்துவமின்மையை குறைத்தல்.
4. சமத்துவம்மற்றும் நீதியை அடிப்படையாகக் கொண்ட சுரண்டலற்ற சமுதாயத்தை உருவாக்குவது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951–56) ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த அகதிகள் மறுவாழ்வு போன்ற பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தியது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்தான் (1956–61) பொருளாதார மேதை பி.சி. மகாலா நோபிஸ் முக்கிய பங்காற்றினார். நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கு இத்திட்டம் முன்னுரிமை

அளித்தது. விரைவான தொழில் மயமாக்கம், குறிப்பாக கனரகத் தொழில்களை வளர்ப்பது மூன்றாம் திட்டக்காலத்திலும் (1961 – 66) தொடர்ந்தது. இக்காலத்தில், இரும்பு எஃகு, ரசாயன உரம், கனரக இயந்திரங்கள் உற்பத்தி போன்றவற்றுக்கான தொழிற்சாலைகள் நாட்டின் பல பகுதிகளில் நிறுவப்பட்டன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969 – 74) நோக்கம் நிலையான வளர்ச்சி மற்றும் தற்சார்பை எட்டுவதற்கான தொடர்ச்சியான முயற்சி என்பதாகும். இத்திட்டத்தின் வரைவு அறிக்கை அசோக் மேத்தாவின் தலைமையில் 1966ல் தயாரிக்கப்பட்டது. ‘கரிபி ஹட்டாவோ’ அல்லது வறுமையை ஒழிப்போம் என்பதே இக்காலத்தில் நிலவிய புகழ்பெற்ற பொருளாதார முழக்கமாகும். பணவீக்கத்தின் விளைவால் நாடு பெரும் பொருளாதார சிக்கலில் தவித்துக் கொண்டிருந்தபோது ஐந்தாவது ஐந்தாண்டு திட்டம் (1974 – 79) அறிமுகப்படுத்தப்பட்டது. பெட்ரோலியப் பொருட்களின் விலையும் அதிகரித்தது. 1978 மார்ச்சில் திட்டத்தின் நான்காவது ஆண்டில் ஜனதா அரசாங்கம் இத்திட்டத்தை கைவிட்டது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் (1980 – 85) வேளாண்மை மற்றும் தொழில் துறையின் கட்டமைப்பை வலுப்படுத்துவது, மக்களின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டிருந்தது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் (1985 – 90) உணவுப்பொருள் உற்பத்தி, வேலைவாய்ப்பை பெருக்குதல், உற்பத்தி திறனை அதிகரிப்பது போன்றவற்றை வலியுறுத்துவதாக இருந்தது. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது, மக்களின் கல்வி மற்றும் சுகாதாரத் தேவைகளை நிறைவு செய்தல், முழுவேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, திட்டமிட்ட மக்கள் தொகைப்பெருக்கம் போன்ற நோக்கங்களை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992 – 97) குறிப்பிட்டது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் (1997 – 2002) வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளித்தது. விலைவாசியை கட்டுப்படுத்துவது, ஏழை எளிய மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு, மக்கள் தொகை கட்டுப்பாடு, பஞ்சாயத்து ஆட்சிமுறையை வளர்ப்பது மற்றும் மலைவாழ் இன, தாழ்த்தப்பட்ட இன மக்களின் முன்னேற்றம் போன்றவையும் இதன் நோக்கங்களாக அறிவிக்கப்பட்டன.

1966–69, 1978–79, 1979–80 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு அரசியல் பொருளாதார காரணிகளால் ‘ஆண்டு திட்டங்கள்’ மட்டுமே செயல்படுத்தப்பட்டன.

**பசுமைப்புரட்சி**

1950 ஆம் ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி அதிகரித்த போதிலும், 1960 ஆம் ஆண்டுகளின் மத்தியில் உணவுப் பஞ்சம் தோன்றியது. மக்கள் தொகை அதிகரிப்பு, தொழில் உற்பத்திக்கான திட்டச்செலவுகள் உயர்வு போன்ற காரணங்களால் வேளாண் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது. பல மில்லியன் டன்கள் உணவு தானியங்கள் இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சீனாவுடனும் (1962), பாகிஸ்தானுடன் (1965) இருபோர்களில் இந்தியா ஈடுபட வேண்டியதாயிற்று. 1965 – 66 ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி உணவு உற்பத்தியை பாதித்தது. இத்தகைய பின்னணியில்தான் உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டுவதற்காக இந்தியாவில் ‘பசுமைப்புரட்சி’ தொடங்கப்பட்டது.

அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி, உணவுத்துறை அமைச்சர் சி. சுப்ரமணியம், சாஸ்திரிக்குப்பின் 1966ல் பிரதமரான இந்திராகாந்தி வேளாண் உற்பத்தியை பெருக்க பெரும் முயற்சி எடுத்தனர். 1968ல் இந்திய விவசாயிகள் கோதுமை உற்பத்தியில் வியத்தகு அளவை எட்டிய போது, அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் காட் என்பவர்

‘பசுமைப்புரட்சி’ என்ற சொல்லை முதன்முதலாக பயன்படுத்தினார். வீரிய வித்துக்கள், ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், டிராக்டர்கள், பம்ப் செட்கள் போன்றவற்றை பயன்படுத்தும் நவீன வேளாண் முறைகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. 1980களில் இந்தியா உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைந்தது. பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திர பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்னாடகத்தின் ஒரு பகுதி மற்றும் தமிழ்நாடு ஆகிய இடங்களில் பசுமைப்புரட்சியின் தாக்கம் நன்கு வெளிப்பட்டது.

### அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

சுதந்திர இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் பெரும் வளர்ச்சி காணப்பட்டது. 1947க்குப்பின் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கிய தேவையை பிரதமர் நேரு நன்கு உணர்ந்திருந்தார். இந்தியாவின் முதலாவது தேசிய ஆய்வுக் கூடமாகிய **‘தேசிய இயற்பியல் ஆய்வுக்கூடம்’** நிறுவப்பட்டது. பல்வேறு துறைகளில் ஆய்வினை மேற்கொள்வதற்காக தொடர்ந்து அத்தகைய தேசிய ஆய்வுக் கூடங்கள் 17 ஏற்படுத்தப்பட்டன. அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுக் கழகத்தின் தலைவராக நேருவே பொறுப்பு வகித்தார்.

மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தை முன்மாதிரியாகக் கொண்டு 1952ல் முதல் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.டி) கோரக்பூரில் அமைக்கப்பட்டது.

பின்னர், சென்னை, பம்பாய், கான்பூர், டெல்லி ஆகிய இடங்களிலும் இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. அறிவியல் ஆய்வுக்கும், அறிவியல் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் ஆன செலவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்தது. பல்வேறு துறைகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக ஏறத்தாழ 200 ஆய்வுக்கூடங்கள் இந்தியாவில் உள்ளன. 1971 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அறிவியல் தொழில்நுட்பத் துறை அறிவியல் கொள்கையை வகுக்கும் பொறுப்பை மேற்கொண்டு வருகிறது.



**ஹோமி ஜே. பாபா**

### அணுசக்தி

அணுசக்தியின் முக்கியத்துவத்தை ஆரம்பத்திலேயே உணர்ந்த உலகின் ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. 1948 ஆகஸ்டில் அணுசக்தி ஆணையம் ஹோமி ஜெ. பாபா என்பவர் தலைமையில் நிறுவப்பட்டது. நாட்டில் மேற்கொள்ளப்படும் அணுசக்தி நடவடிக்கைகள் குறித்த கொள்கையை இது வகுக்கிறது. 1954ல் அணுசக்தி துறை ஏற்படுத்தப்பட்டது. அணுசக்தி திட்டங்களை இது நிறைவேற்றுகிறது. 1956ல் இந்தியாவில் முதலாவது அணுசக்தி நிலையம் பம்பாய்க்கு அருகிலுள்ள டிராம்பேயில் அமைக்கப்பட்டது. அணுசக்தி துறையில் ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பணிகள் மூன்று ஆய்வுக் கூடங்களில் நடைபெறுகின்றன. அவை, டிராம்பேயிலுள்ள பாபா அணுசக்தி ஆய்வு மையம், தமிழ்நாட்டில் கல்பாக்கத்திலுள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம், சென்னையிலுள்ள உயர் தொழில் நுட்ப மையம் என்பனவாகும்.

### விண்வெளி ஆய்வு

விண்வெளி ஆய்விலும் இந்தியா ஆர்வம் காட்டி வருகிறது. 1962ல் விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசியக் குழுமம் அமைக்கப்பட்டது. தும்பாவில் ராக்கெட் ஏவுதளம்

ஒன்றும் உருவாக்கப்பட்டது. (முதல்படியாக) நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முதல் தலைமுறை இந்திய விண்வெளி ஓடத்தை (இன்சாட் – 1) இந்தியா ஏவியது. நாட்டின் தொலைத்தொடர்பு மற்றும் வானியல் கோள் ஆய்வுக்கான தேவைகளை இன்சாட் 1A மற்றும் இன்சாட் 1B விண்வெளி ஓடங்கள் நிறைவேற்றி வருகின்றன.

இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு விண்வெளி ஆராய்ச்சி, தொழில்நுட்பம் போன்றவற்றை நிறைவேற்றுகிறது. இஸ்ரோ மையங்களிலேயே மிகப் பெரியதான திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் விண்வெளி ஏவு தொழில்நுட்பத்தைப் பற்றி முதன்மை ஆய்வை மேற்கொள்கிறது. இந்திய விண்வெளி திட்டத்தின் பகுதியான விண்வெளி ஓடத் தொழில் நுட்பத்தை பெங்களூரிலுள்ள இஸ்ரோ மையம் பெற்றுள்ளது. ஆந்திரப் பிரதேசத்தின் கிழக்குக் கடற்கரையிலுள்ள ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள ராக்கெட் ஏவுதளம் இஸ்ரோவின் முக்கிய ஏவுதளமாக விளங்குகிறது. தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மகேந்திரகிரி என்ற இடத்தில் ராக்கெட் என்ஜின் தயாரிக்கப்பட்டு வருகிறது. நவீன ரஷ்யா தொழில் நுட்பத்தின்படி கிரையோ ஜெனிக் என்ஜின் தயாரிக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றது வருகின்றன.

**இந்தியாவின் அயலுறவுக் கொள்கை**

1947 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா சுதந்திரமான அயலுறவுக் கொள்கையை பின்பற்றி வருகிறது. இதனை வடிவமைத்தவர் இந்தியாவின் முதலாவது பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார். இந்திய அயலுறவுக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகள் அவரால் உருவாக்கப்பட்டவையே. கெடுபிடிப் போர் காலத்தில் அணிசேரா இயக்கத்தை வடிவமைத்தவர் அவரேயாவார். குடியேற்ற நாடுகளின் விடுதலைக்காகவும் அவர் ஆதரவுக்கரம் நீட்டினார். நாடுகளுக்கிடையேயான உறவுகள் குறித்த **பஞ்சசீலம்** அல்லது சமாதான சகவாழ்வுக்கான ஐந்து கொள்கைகளை அவர் வெளியிட்டார். அவையாவன:

- ஒருவருக்கொருவர் பிறரது பிரதேச ஒருமைப்பாட்டையும் இறைமையையும் மதித்து நடப்பது
- ஆக்கிரமிப்பை விலக்குதல்
- பிறரது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
- சமத்துவம் மற்றும் பரஸ்பர உதவி
- சமாதான சகவாழ்வு

காமன்வெல்த், ஐக்கிய நாடுகள் சபை போன்ற பன்னாட்டு அமைப்புகளிலும் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. முன்னாள் பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளைக் கொண்ட அமைப்பான காமன்வெல்த்தில் இந்தியா உறுப்பினராக தொடரவேண்டும் என்று நேரு முடிவெடுத்தார். உலகின் பல்வேறு பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட ஐ.நா. பாதுகாப்பு படையிலும் இந்தியா தனது பங்கை ஆற்றியுள்ளது. கொரியா, இந்தோசீனா, சூயஸ் கால்வாய், காங்கோ போன்ற இடங்களில் செயல்பட்ட ஐ.நா. பாதுகாப்பு படைக்கு இந்தியா தனது துருப்புக்களை அனுப்பிவைத்தது.

காஷ்மீர் சிக்கல் காரணமாக இந்தியா பாகிஸ்தானுடன் மூன்று முக்கிய போர்களில் ஈடுபட்டது (1965, 1971, 2000). கெடுபிடிப்போர் காலத்தில் உலகின் வல்லரசுகளாக விளங்கிய அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுடன் இந்தியா நட்புறவையே கடைப்பிடித்தது.

பங்களாதேஷ் குறித்த சிக்கல் தோன்றியபோது இந்திய சோவியத் யூனியனுடன் 1971 ஆம் ஆண்டு இந்தோ – சோவியத் நட்புறவு உடன்படிக்கையை செய்து கொண்டது.

ஆசியாவின் முக்கிய நாடுகளாக இந்தியாவும் சீனாவும் விளங்குகின்றன. உலகின் மக்கள் தொகை மிகுந்த நாடுகளாகவும் அவை உள்ளன. மேலும், பண்டைக் காலந்தொட்டே நீண்ட வரலாற்றுப் புகழையும் பண்பாட்டுச் சிறப்பையும் இரண்டு நாடுகளும் பெற்றுள்ளன. 1949ல் மாசேதுங் தலைமையில் சீன மக்கள் குடியரசு அமைக்கப்பட்டபோது அதை முதலில் ஆதரித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவின் நட்புறவைப் பெற்றிருந்தபோதிலும், 1962ல் சீனா இந்தியா மீது படைபெடுத்தபோது தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.


இந்தியாவின் உதவியோடு பங்காளதேஷ் என்ற நாடு உதயமானது. மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாகும். மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தானுக்குமிடையே விடுதலை குறித்த சச்சரவு தோன்றியபோது இந்தியா கிழக்கு பாகிஸ்தானின் விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தது. பங்களாதேஷ் விடுதலை அமைப்பான முத்திவாகினியுடன் இந்தியப் படைகள் இணைந்து போராடியதால் 1971 டிசம்பரில் பங்களாதேஷ் விடுதலை பெற்றது. 1971ல் பங்களாதேஷ் விடுதலை பெற்றதிலிருந்தே இந்தியா அதனுடன் நட்புறவைப் பேணி வருகிறது.

தனது அண்டை நாடுகளுடனும் இந்தியா நட்புடனேயே இருந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே சார்க் எனப்படும் தெற்காசிய பகுதி ஒத்துழைப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், பூடான், மாலத்தீவுகள் ஆகியன இதில் உறுப்பு நாடுகள். உறுப்பு நாடுகளுக்கிடையே பரஸ்பர பொருளாதார, சமூக, பண்பாட்டு ஒத்துழைப்பை பெருக்குவதே சார்க் அமைப்பின் நோக்கமாகும். இந்த குறிக்கோளை எட்டுவதற்கு அவ்வப்போது மாநாடுகளும் கூட்டப்படுகின்றன.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் கற்றவை:*

1. *இந்திய அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள ஜனநாயக நெறிகள்.*
2. *சுதேச அரசுகளை ஒருங்கிணைத்ததில் வல்லபாய் பட்டேலின் பங்கு.*
3. *மொழிவாரி மாநிலங்கள் சீரமைப்பு*
4. *நேருவின் பொருளாதார திட்டம் மற்றும் ஐந்தாண்டு திட்டங்களின் நோக்கங்கள்*
5. *அணுசக்தி, விண்வெளி ஆய்வு போன்ற பல்வேறு துறைகளில் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி*
6. *இந்திய அயலுறவுக் கொள்கையின் அடிப்படைக் கூறுகள் மற்றும் உலக நாடுகளுடனும் அண்டை நாடுகளுடனும், இந்தியா மேற்கொண்டுள்ள உறவுகள்.*


இந்தியாவும் அதன் அண்டை நாடுகளும்
சார்க் அமைப்பு நாடுகள்
சீனா
திபெத்
பாகிஸ்தான்
நேபாளம்
பூடான்
இந்தியா
வங்காளதேசம்
மியான்மர்
அரபியக் கடல்
வங்கக் கடல்
வ
மே
கி
தெ
இலங்கை
மாலத் தீவுகள்
இந்து மகாக் கடல்
சார்க் அமைப்பு நாடுகள்

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருபவர்களில் அரசியலமைப்புக் குழுவிற்கு தலைவராக இருந்தவர் யார் ?

அ) டாக்டர் அம்பேத்கர் ஆ) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

இ) கே.எம். பணிக்கர் ஈ) ஜவஹர்லால் நேரு

2. இந்திய ஒன்றியத்தில் சேர மறுத்த அரசு

அ) ஹைதராபாத் ஆ) மைசூர்

இ) ஜெய்பூர் ஈ) திருவாங்கூர்

3. சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத முதல் அமைச்சரவைக்கு தலைமையேற்றவர்

அ) வி.பி. சிங் ஆ) நரசிம்மராவ்

இ) மொராஜி தேசாய் ஈ) ஏ.பி. வாஜ்பாய்

4. முதலாவது இந்திய தொழில்நுட்ப கழகம் துவங்கப்பட்ட இடம்

அ) கான்பூர் ஆ) பாம்பாய்

இ) சென்னை ஈ) கோரக்பூர்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இந்தியாவின் இரும்பு மனிதர் ______________

2. ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட ஆண்டு ______________

3. நவீன இந்தியாவின் சிற்பி எனக் கருதப்படுபவர் ______________

4. புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியவர் ______________

5. உணவில் தன்னிறைவை அடைவதை நோக்கமாகக் கொண்டு ______________ தொடங்கப்பட்டது.

6. பாபா அணு ஆய்வு மையம் அமைந்துள்ள இடம் ______________

7. பங்களாதேஷ் நாடு உருவான ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ராஜா ஹரிசிங் | அ. | அவசரநிலை ஆட்சி |
| 2. | இந்திராகாந்தி | ஆ. | அணுசக்தி கழகம் |
| 3. | வி.பி. சிங் | இ. | ஐ.எஸ்.ஆர். ஒ. (இஸ்ரோ) |
| 4. | ஹோமி. ஜே. பாபா | ஈ. | காஷ்மீர் |
| 5. | விக்ரம் சாராபாய் | உ. | மண்டல் குழு |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.**

அ. ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்பு ரீதியான தலைவர்.

ஆ. துணை ஜனாதிபதியை தலைவராகக் கொண்டு திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது

இ. இந்திராகாந்தி அணு ஆய்வு மையம் நெய்வேலியில் உள்ளது.

ஈ. ஐ.எஸ்.ஆர்.ஓ. (இஸ்ரோ) ஏவுகணை மையம் மங்களூரில் உள்ளது.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. பசல் அலி தலைமையில் மாநிலங்கள் சீரமைப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது.
2. பி.வி. நரசிம்மராவ் ஆட்சியின்போது டாக்டர் மன்மோகன் சிங் நிதியமைச்சராக இருந்தார்.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பசுமைப் புரட்சி
2. பஞ்சீலம்
3. ஐ.எஸ்.ஆர்.ஓ. (இஸ்ரோ)

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளைப் பற்றி விவாதி.
2. மொழிவாரி மாநிலச் சீரமைப்பு பற்றி குறிப்பு வரைக.
3. இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. இந்திய அரசுகளை ஒருங்கிணைத்ததில் வல்லபாய் பட்டேலின் பங்கிணை – ஆய்க.
2. ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் இந்தியா வளர்ச்சி பெற்றதை விவரி.
3. சுதந்திர இந்தியாவில் அறிவியல் தொழில்நுட்ப வளாச்சியை விவரி.
4. “ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி” எனக் கருதப்படுகிறார் – கருத்துக் கூறுக.

# பாடம் – 21

## மறுமலர்ச்சி

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்துகொள்வது :*

1. *மறுமலர்ச்சியின் பொருள்*
2. *இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள்*
3. *பண்டைய இலக்கியங்களின் மீட்சி*
4. *மறுமலர்ச்சி கால இலக்கியங்கள்*
5. *மறுமலர்ச்சி கால கலை*
6. *அறிவியல் வளர்ச்சி*
7. *மறுமலர்ச்சியின் விளைவுகள்*

மறுமலர்ச்சி என்ற சொல்லுக்கு ‘மறுபிறப்பு’ அல்லது ‘மீட்சி’ என்று பொருள். இடைக்காலத்திற்கும் தற்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற முக்கிய மாற்றங்களையே இச்சொல் குறிப்பிடுகிறது. அறிவாற்றல் ரீதியாக இலக்கியத்திலும் கலைத் துறையிலும் புதியதொரு மீட்சியை இக்காலத்தில் காண்கிறோம். எதையும் கேட்டு அறியும் உணர்வு மேலோங்கி இருந்தமையால் அறிவியல் கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. அரசியல் ரீதியாக, நிலமானிய முறை ஒழிந்து, தேசிய அரசுகள் தோன்றின. தனிமனித உணர்வும், மனிதப் பண்பும் சமூகத்தில் தழைத்தோங்கின. அக்காலத்தில் தோன்றிய சமயசீர்திருத்த இயக்கமும் மறுமலர்ச்சியின் வெளிப்பாடேயாகும். ஐரோப்பாவில் நிகழ்ந்த இத்தகைய மாற்றங்கள் அனைத்தும் மறுமலர்ச்சி என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் முடிவில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. இதனால், பண்டைய இலக்கியங்களும் கலையும் புறக்கணிக்கப்பட்டன. ஆனால், கான்ஸ்டான்டிநோபிள் பட்டணத்தை தலைநகராகக் கொண்ட கிழக்கு ரோமானியப் பேரரசில் இந்த கலைப் பொக்கிஷங்கள் பாதுகாப்புடன் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்தன. 1453 ஆம் ஆண்டு ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டிநோபிளை கைப்பற்றினார்கள். இதனால், அங்கு வாழ்ந்த பைசான்டிய கிரேக்க அறிஞர்கள் ரோமாபுரிக்கு தப்பியோடினர். தங்களோடு கிரேக்க ரோமானிய பாரம்பரிய சிறப்புக்களையும் அவர்கள் கொண்டு சென்றனர். மீண்டும் பண்டைய இலக்கியங்கள் இத்தாலியில் புத்துயிர் பெற்றமையால் ஏன், எதற்கு, என்று கேட்டு அறியும் உணர்வு மக்களிடம் மேலோங்கியது. இந்த உணர்வினால் அறிவியல், கலை, கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இலக்கியம், புவியியல் மற்றும் சமயத்துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டது.

**இத்தாலியில் மறுமலர்ச்சி**

இத்தாலியே மறுமலர்ச்சியின் தாயகம் எனப்படுகிறது. இதற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். அவற்றில் சிறப்பானவை:–

1. பண்டைய நாகரிகத்தின் தொட்டிலாகவும், லத்தீன் மொழியின் தாயகமாகவும் இத்தாலி விளங்கியது.

2. அங்கிருந்த செல்வமிக்க நகர அரசுகளான பிளாரன்ஸ் மற்றும் வெனிஸ் போன்றவை கலை, இலக்கியத்தைப் போற்றி வளர்த்தன.

3. மிகச்சிறந்த இத்தாலியக் கலைஞரான தாந்தே (1265–1321) தனது ‘தெய்வீக இன்பியல்’ என்ற நூலை அங்கு தான் பதிப்பித்தார். இது பிளாரன்ஸ் நகரத்தில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றுவதற்கு முன்னோடியாக விளங்கியது. பின்னர், மறுமலர்ச்சி ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் பரவி, 16 ஆம் நூற்றாண்டில் அதன் உச்சகட்டத்தை எட்டியது.

**பண்டைய இலக்கியங்கள் புத்துயிர் பெறுதல்**


பெட்ராா்க்

பண்டைய கிரேக்க, லத்தீன் இலக்கியங்கள் மீண்டும் புத்துயிர் பெற்று தழைக்கத் தொடங்கியது மறுமலர்ச்சி இயக்கத்தின் தனிச்சிறப்பாகும். இந்த மொழிகளில் சிறந்த புலமை பெற்று விளங்கிய பெட்ரார்க் (1304 – 1374) என்ற அறிஞர் இத்தகைய முயற்சிகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்றோரின் நூல்கள் அடங்கிய பண்டைய கையெழுத்துச் சுவடிகளை சேகரித்து அவற்றை தொகுத்தது இவரது அரும்பணியாகும். இவரது சீடரான பொக்காசியோ என்பவரும் பண்டைய இலக்கியங்கள் கற்பிக்கப்படுவதை ஊக்குவித்தார். கான்ஸ்டான்டி நோபிளிலிருந்து வந்த பல கிரேக்க அறிஞர்களும் கிரேக்க இலக்கியத்தைப் போற்றி வளர்த்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் மேனுவல் கிரிசாலோரஸ், இவர் பிளாரன்ஸ் நகரில் தங்கி கிரேக்க மொழி மற்றும் இலக்கியத்தை கற்பித்தார். மற்றொரு அறிஞரான பிராசியோலினி என்பவர் டேசிடஸ், லிவி, சோபோகிளஸ் என்போரின் பண்டைய நூல்களைத்தேடி அவற்றை புதுப்பித்தார். பதினைந்தாம் நூற்றாண்டில் ஐந்தாம் நிக்கோலஸ் என்ற போப்பாண்டவர் வாட்டிகன் நூல் நிலையத்தை நிறுவினார். அங்கு ஏராளமான பண்டைய நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அறிஞர்கள் படித்து ஆய்வு செய்தனர். லத்தீன் மொழி இலக்கியங்களை எராஸ்மஸ் (1463 – 1536) என்றஅறிஞர் திருத்தி பதிப்பித்தார். அவர் ‘புதிய ஏற்பாட்டை’ கிரேக்க மொழியில் பதிப்பித்தார்.


பொக்காசியோ


லிவி

ஜெர்மெனியைச் சேர்ந்த ஜான் குட்டன்பர்க் (1398 – 1468) என்பவர் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தது மறுமலர்ச்சி கால இலக்கியம் பரவ பெரிதும் துணைபுரிந்தது. முதலில் அச்சிடப்பட்ட நூல் விவிலியமே ஆகும். இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டன் என்பவர் அச்சுக்கூடத்தை நிறுவினார். பின்னர், ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலும் அச்சுக் கூடங்கள் நிறுவப்பட்டன. இதனால் மறுமலர்ச்சி இயக்கம் புதிய உத்வேகத்தைப் பெற்றது. குறைந்த விலையில் அச்சடிக்கப்பட்ட நூல்கள் கிடைத்தமையால், மக்கள் அவற்றை வாங்கிப் படித்தனர். இதனால், விழிப்புணர்வு அதிகரித்தது.



எராஸ் மஸ்

பண்டைய இலக்கியங்கள் புதுப்பிக்கப் பட்டதோடு, கிரேக்க, லத்தீன் மற்றும் பல்வேறு உள்நாட்டு மொழிகளிலும் இக்காலத்தில் நூல்கள் எழுதப்பட்டன. தாந்தே தனது 'தெய்வீக இன்பியல்' என்ற நூலை இத்தாலிய மொழியிலேயே எழுதினார் என்பதை ஏற்கனவே கண்டோம். அதேபோல், சாசர் தமது 'காண்டர்பரி கதைகள் என்ற இலக்கியத்தை ஆங்கிலத்தில் படைத்தார். சிறு கதைகளின் தொகுப்பான 'டெக்காமரான்' என்ற நூல் பொக்காஷியோவின் படைப்பாகும். பிளாரன்ஸ் நகரில் வாழ்ந்த மாக்கியவல்லி 'பிளாரான்ஸ் நகரின் வரலாற்றை' எட்டுத் தொகுதிகளாக எழுதி வெளியிட்டார். அவரது புகழ்பெற்ற 'இளவரசன்' என்ற நூல் அரசியல் அறிவியலில் மிகச்சிறந்த படைப்பாகும்.



**தாந்தே**

மறுமலர்ச்சி காலத்தின் புகழ்மிக்க அறிஞர்களை இத்தாலி உருவாக்கியிருந்த போதிலும், மறுமலர்ச்சிகால சிந்தனையை வெளிப்படுத்தும் பல்வேறு படைப்புகள் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் உருவாயின.



**மாக்கியவல்லி**


இங்கிலாந்தில் சர்தாமஸ்மூர் தனது 'கற்பனை உலகம்' ('உடோபியா') என்ற நூலை லத்தீன்மொழியிலேயேஎழுதினார். எனினும் ஆங்கில இலக்கியத்தின் மறுமலர்ச்சி 'எலிசபெத் மகாராணி'யின் காலத்திலிருந்தே தொடங்கியது. இக்காலத்தில், வில்லியம் ஷேக்ஸ்பியர், கிறிஸ்டோபர் மார்லோ, சார்லஸ் வெப்ஸ்டர் போன்ற நாடக ஆசிரியர்கள் வாழ்ந்தனர். எட்மண்ட் ஸ்பென்சர், சிட்னி, பென் ஜான்சன் போன்றவர்கள் கவிதைகளைப் படைத்தனர். ஹக்லயுத் இக்காலத்தில் எழுதிய பயணக் குறிப்புகள் போற்றத்தக்கதாகும்.

பிரெஞ்சு மொழி வல்லுனரான மான்டெய்ன் (1533–1592) மறுமலர்ச்சி கால இலக்கியத்திற்கு புகழ்பெற்றவராவார். மனித வாழ்க்கை தொடர்பான கருத்துக்களை இவரது படைப்புகள் வெளிப்படுத்தின. கல்வி குறித்து இவர் எழுதிய கட்டுரைகள் பல நூற்றாண்டுகள் நிலைத்திருந்தன. எழுத்திலும், எண்ணத்திலும் இவர் வால்டேர் என்ற அறிஞருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். சர்வாதிகார ஆட்சிக்கும் பழமைக்கும் எதிராக இவரது குரல் ஓங்கி ஒலித்தது. இதனால், மான்டெய்ன் 'நவீன மனிதர்' எனப் போற்றப்பட்டார்.



**தாமஸ் மூர்**

ஜெர்மனியைச் சேர்ந்த மாட்டின் லூதர் விவிலியத்தை ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். செபாஸ்டியின் பிராண்ட் என்பவர் 'முட்டாள்களின் கப்பல்' என்ற நூலை எழுதினார். ஸ்பானிய மொழியின் மிகச் சிறந்த காவியப்படைப்பான 'டான் குவிக்ஸோட்' என்ற இலக்கியத்தை செர்வான்டிஸ் படைத்தார்.



**ஷேக்ஸ் பியர்**

**மறுமலர்ச்சிக் கால கலை**

இடைக்காலத்தில் கலை என்பது கிறித்துவ சமயம் மற்றும் திருச்சபையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மறுமலர்ச்சி காலத்தில் பண்டைய கலைவடிவங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றன. இயற்கையை நேசிப்பதாகவும் மனித வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் மறுமலர்ச்சி காலத்தில் கலை விளங்கியது. ஆனால் மனிதப் பண்புகள்



**மார்டின் லூதர்**




லியானார்டோ டாவின்சி

காணப்பட்டாலும் மறுமலர்ச்சி காலத்திய பெரும்பாலான கலை வடிவங்களின்கருப்பொருள் மட்டும் கிறித்துவத்தையே பிரதிபலித்தது. மறுமலர்ச்சி கால ஓவியங்கள் இத்தாலியில் பிரகாசித்தன. லியானார்டோ டாவின்சி (1452– 1519), மைக்கேல் ஆஞ்சலோ (1475–1564) ரபேல் (1483–1520) ஆகிய மூவரும் இக்காலத்திய ஓவியர்களுள் மிகவும் புகழ்பெற்றவராவர்.

அவரது காலப்பகுதியில் பல்திறம் கொண்டவராக லியானார்டோ டாவின்சி விளங்கினார். கலைஞர் கவிஞர், இசைவாணர், பொறியியல் வல்லுனர் என்று பல்வேறு பரிமாணங்களை அவர் பெற்றுத் திகழ்ந்தார். எனவே, அவரை 'மறுமலர்ச்சி கால மனிதர்' என்று அழைக்கின்றனர். பிளாரன்ஸ் நகரில் பிறந்த அவர் பல நாடுகளையும் சுற்றித் திரிந்தார். மிலான் நகரத்து கோமகனால் ஆதரிக்கப்பட்டார். 'மோனோலிசா' மற்றும் 'இறுதி விருந்து' ஆகியன அவரது புகழ்பெற்ற ஓவியங்களாகும்.



மைக்கேல் ஆஞ்சலோ



ரபேல்

மைக்கேல் ஆஞ்சலோ ஒரு ஓவியராகவும், சிற்பியாகவும் திகழ்ந்தார். பிளாரன்ஸ் நகரில் வாழ்ந்த அவரை மெடிசி குடும்பத்தினர் ஆதரித்துப் போற்றினர். பின்னர், அவர் ரோமாபுரிக்குச் சென்றார். வாட்டிகனில் உள்ள சிஸ்டைன் தேவாலயக் கூரையில் காணப்படும் பிரம்மாண்ட எண்ணெய் ஓவியம் அவரது அரிய பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. இதில் 145 காட்சிகளும், 394 உருவங்களும் வரையப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சில பத்து அடி உயரம் வரை கூட அமைந்துள்ளது. 'இறுதித் தீர்ப்பு' என்ற அவரது ஓவியம் உலகத்திலேயே சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.

ரபேல் வரைந்த ஓவியங்கள் பக்திச்சுவையும் அழகுணர்வும் நிறைந்து காணப்படுகின்றன. அவர் 37வது வயதிலேயே மறைந்து விட்டாலும் எண்ணற்ற ஓவியங்களை இவ்வுலகத்திற்கு விட்டுச் சென்றுள்ளார். அவற்றுள் 'மடோன்னா' என்ற ஓவியம் மிகவும் புகழ்பெற்றதாகும்.



லொரன்சோ கிபர்ட்டி

மறுமலர்ச்சி கலையின் மதச்சார்பற்ற தன்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது வெனீஸ் நகரத்து கலைப்பணியாகும். உலக நடப்பை பிரதிபலிப்பதாகவே அவை அமைந்துள்ளன. திதியன் (1477–1576) மற்றும் டின்டோரெட்டோ (1518–1592) ஆகியோர் வெனீஸ் நகரத்தைச் சேர்ந்த புகழ்மிக்க ஓவியர்களாவர்.

**மறுமலர்ச்சி கால சிற்பங்கள்**




பிரான்சிஸ் பேகன்

மறுமலர்ச்சி காலத்தில் சிற்பக்கலையும் சிறந்து விளங்கியது. துல்லியத்திற்கும் அழகுக்கும் அவை புகழ்பெற்றவை. மறுமலர்ச்சி கால சிற்பத்தின் முன்னோடியாக விளங்கியவர் லொரன்சோ கிபர்ட்டி (1378–1455) என்பவராவார். பிளாரன்ஸ் நகரத்தின் ஞானஸ்நான தேவாலயக் கதவுகள் அவரது கைவண்ணத்தில் உருவானவையே. சொர்க்கத்தில் வைக்கப்பட வேண்டிய கதவுகள் என அவற்றின் அழகை மைக்கேல் ஆஞ்சலோ வியந்து போற்றியுள்ளார். பிளாரன்ஸ் நகரிலுள்ள செயின்ட்

ஜார்ஜ் சிலை மற்றும் வெனிஸ் நகரிலுள்ள செயின்ட் மார்க் சிலை ஆகியவற்றை டோனடெல்லோ (1386–1466) என்ற சிற்பி வடித்துள்ளார். ஓவியரான மைக்கேல் ஆஞ்சலோ சிறந்த சிற்பியாகவும் திகழ்ந்தார். பிளாரன்ஸ் நகரத்து மெடிசி குடும்பத்தினருக்காக அவர் சிறந்த சிற்பங்களை படைத்துள்ளார். பிளாரன்சிலுள்ள டேவிட் சிலை அவரது படைப்பாகும். புரூனெசெல்லஜி, ரோபியா ஆகியோர் இக்காலத்தின் புகழ்பெற்ற சிற்பிகளாவர். ரோமாபுரியிலுள்ள செயின்ட் பீட்டர் தேவாலயம் மறுமலர்ச்சி கால கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.



**கோபர் நிகஸ்**

**அறிவியல் வளர்ச்சி**



**கெப்ளர்**

மறுமலர்ச்சியுடன் இணைந்து அறிவியல் உணர்வும் இக்காலத்தில் வெளிப்பட்டது. இடைக்காலத்தில் அறிவியல் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பேரியக்கத்தை நடத்தியது. இயற்கை நிகழ்வுகளை கூர்ந்து நோக்கும் பண்பை மறுமலர்ச்சி ஏற்படுத்தியது. இத்தகைய கல்வியுணர்வு அறிவியல் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது.

பிரான்சிஸ் பேகன் (1561 – 1626) நவீன அறிவியலின் தந்தை எனக் கருதப்படுகிறார். உய்த்துணரும் முறையை சாடிய பேகன் அறிவியல் ஆய்வுக்கு தொகுப்பு வழிமுறையே சரியானது என்று வாதிட்டார். டெக்கார்த்தே (1596–1650) எதனையும் சோதித்து அறிய வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். ஐயப்பாடு குறித்த கருத்தை அவர் முன்மொழிந்தார், எதனையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாது, சோதித்து அறிவதற்கு ஐயப்பாடே அடிப்படையாக உள்ளது என்பதும், அறிவியலுக்கு அதுவே அடிப்படை என்பதும் தற்கால அறிவியல் வளர்ச்சிக்கு வித்தாக இருந்தது.


**கலிலியோ**

கோப்பர் நிகஸ் (1473–1543) சூரியனே பிரபஞ்சத்தின் மையம் என்ற கருத்தை முன்வைத்தார். கோள்கள் யாவும் பூமியை வலம் வருவதில்லை என்றும், அவை சூரியனை மையமாகக் கொண்டே வலம் வருகின்றன என்ற உண்மையை அவர் உறுதிப்படுத்தினார். கோபர் நிகசின் முடிவுகளை உறுதிப்படுத்தும் விதத்தில் கெப்ளர் (1571–1630) பல்வேறு கணிதவிதிகளை வடிவமைத்தார். தொலைநோக்கியை கண்டறிந்த கலிலியோ (1564–1642) கோபர் நிகசின் கோட்பாடுகளுக்கு புதிய ஆதாரங்களை முன்வைத்து அவற்றை உறுதிப்படுத்தினார்.


**நியூட்டன்**

வானில் உள்ள பொருட்களனைத்தும் ஈர்ப்பு விசையினால் இயக்கப்படுகின்றன என்ற கோட்பாட்டை கண்டறிந்தவர் நியூட்டன் (1642 – 1727). அப்போது நிறுவப்பட்ட புதிய வான இயல் அறிவினை அடிப்படையாகக் கொண்டு போப் பதிமூன்றாம் கிரிகோரி 1582ல் பழைய நிலையின் நாட்காட்டியை திருத்தியமைத்தார்.

மனிதன் குறித்த மறுமலர்ச்சி கால உணர்வுகளால் உந்தப்பட்டதால் மருத்துவம் மற்றும் உடற்கூறு இயல் குறித்த ஆய்வுகளும் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. வெசாலியஸ் (1514–1564) என்ற நெதர்லாந்து நாட்டவர் மனித உடற்கூறுகள் பற்றி ஒரு விளக்கநூலை எழுதினார். வில்லியம் ஹார்வி (1578 – 1657) இரத்த ஓட்டத்தை கண்டறிந்தது மருத்துவ

இயலுக்கு அவர் அளித்த கொடையாகும். மறுமலர்ச்சி காலத்தில்தான் வேதியியல் என்பது ஏறுவாதத்தற்கும் அப்பாற்பட்டது என்று உணரப்பட்டது.



வில்லியம் ஹார்வி

பாராசெல்சஸ் (1493 – 1541) என்பவர் மனித உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வேதியியல் மாற்றங்களே காரணம் என்று கூறினார். வேதிப் பொருட்களை மருந்துகள் தயாரிக்கவும் அவர் பயன்படுத்தினார். கார்டஸ் (1515 – 1544) என்பவர் கந்தக அமிலத்திலிருந்தும் எரிசாராயத்திலிருந்தும் 'ஈதர்' எனப்படும் மின்காந்த அலைகளை உருவாக்கினார். ஹெல்மாண்ட் (1577 – 1644) கரியமில வாயுவை கண்டறிந்தார்.

**மறுமலர்ச்சியின் விளைவுகள்**

நவீனகால தொடக்கத்தின் அடையாளமாக மறுமலர்ச்சி விளங்குகிறது. கேட்டு அறியும் உணர்வு அதனால் விளைந்த அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித குலவாழ்க்கையில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தின. திசை காட்டும் கருவி மற்றும் வான இயல் குறித்த புதிய நம்பிக்கை புவியியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தன. மக்களின் அரசியல் பொருளாதார வாழ்க்கையில் இந்த கண்டுபிடிப்புகளின் தாக்கம் மிகவும் ஆழமானதாகும். பகுத்தறியும் உணர்வினால் சமயசீர்திருத்த இயக்கம் தோன்றியது. சமயம் குறித்த மக்களின் கண்ணோட்டத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது.

| மறுமலர்ச்சி கால முக்கிய வரலாற்று நிகழ்வுகள் | |
|---|---|
| 1300 | இத்தாலியில் உள்ள பாதுவா பல்கலைக்கழகத்தில் மனித நலம் பற்றி போதிக்கப்பட்டது. |
| 1341 | ரோம் நகரில் பெட்ரார்கு அரசவைக் கவிஞர் பட்டம் வழங்கப்பட்டது. |
| 1349 | பிளாரன்ஸ் நகரில் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. |
| 1390 | ஜியாபெர்ரி சாசருடைய கேன்டர்பரி கதைகள் வெளியிடப்பட்டன. |
| 1436 | புரூனல்ஷி பிளாரன்சிலுள்ள டுமோவை வடிவமைத்தார். |
| 1454 | கூட்டன்பர்க் அச்சு இயந்திரத்தை கொண்டு பைபிளை அச்சிட்டார். |
| 1495 | லியனார்டோ டாவின்ஸி கடைசி விருந்து ஓவிடத்தை தீட்டினார். |
| 1512 | மைக்கேல் ஏஞ்சலோ சிஸ்டைன் திருச்சபை ஓவியங்களை தீட்டினார். |
| 1516 | தாமஸ் மோர் உத்தோப்பியாவை வெளியிட்டார் |
| 1543 | ஆன்டிரியா வெசாலியஸ் மனித உடற்கூறுகள் எனும் நூலை வெளியிட்டார். |
| 1582 | 13–ம் போப் கிரிகரி கிரிகோரியன் காலண்டரை அறிமுகப்படுத்தினார். |
| 1628 | வில்லியம் ஹார்வே இரத்த ஓட்டத்தை இதயத்துடன் தொடர்பு படுத்தி காட்டினார். |
| 1687 | ஐசக் நியூட்டனுடைய பிரின்சிபா மேத்தமாட்டிகா வெளியிடப்பட்டது. |

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தைக் கற்றதன் மூலம் மாணவர் பெற்ற அறிவு*

1. *மறுமலர்ச்சி என்ற சொல்லின் விரிவான பொருள்.*
2. *இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றியதற்கான காரணங்கள்*
3. *பண்டைய இலக்கியங்களுக்கு புத்துயிர் அளித்ததில் தாந்தே, பெட்ரார்க் போன்ற அறிஞர்களின் பங்கு.*
4. *மறுமலர்ச்சி கால கலையில் லியானார்டோ டாவின்சி மற்றும் பிஷரின் பங்கு.*
5. *மறுமலர்ச்சி காலத்தில் அறிவியலின் வளர்ச்சி*
6. *மறுமலர்ச்சியின் விளைவுகள்*

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்றிய ஆண்டு ?

அ) 1453 ஆ) 1533

இ) 1543 ஈ) 1443

2. பின்வருபவர்களின் நவீன அறிவியலின் தந்தை என்று கருதப்படுவர் யார் ?

அ) கோபர்நிகஸ் ஆ) பிரான்சிஸ் பேகன்

இ) கெப்ளர் ஈ) நியூட்டன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பொக்காசியோ _______________ன் சீடராவார்
2. 'இளவரசன்' என்ற அரசியல் அறிவியல் நூலை எழுதியவர் _______________
3. தொலைநோக்கியைக் கண்டறிந்தவர்_______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | 'இறுதி விருந்து' | அ. | மைக்கேல் ஆஞ்சலோ |
| 2. | 'இறுதித் தீர்ப்பு' | ஆ. | செபாஸ்டியன் பிராண்ட் |
| 3. | 'மடோன்னா' | இ. | சர் தாமஸ் மூர் |
| 4. | 'உடோபியா' | ஈ. | லியானார்டோ டாவின்சி |
| 5. | முட்டாள்களின் கப்பல்' | உ. | ரபேல் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ஜான் கூட்டன்பர்க் வெளியிட்ட முதல் புத்தகம் பைபிளாகும்.

ஆ. நவீன அறிவியலின் தந்தையாக டெகார்ட் கருதப்படுகிறார்.

இ. ஹீலியோ சென்ட்ரிக் கோட்பாட்டை நியூட்டன் உருவாக்கினார்.

ஈ. இரத்த ஓட்டத்தை கண்டுபிடித்தது தாமஸ் மூர் ஆவார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. தாந்தே தமது ‘தெய்வீக இன்பியல்’ நூலை லத்தீன் மொழியில் எழுதினார்.
2. அச்சு இயந்தியரத்தை முதலில் கண்டறிந்தவர் வில்லியம் காக்ஸ்டன்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. மறுமலர்ச்சியின் பொருள்
2. லியானார்டோ டாவின்சி
3. கோபர் நிகஸ்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றியதற்கான காரணங்களைக் கூறுக.
2. மறுமலர்ச்சி கால சிற்பங்கள் பற்றி குறிப்பு வரைக
3. மறுமலர்ச்சியின் விளைவுகளை ஆய்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. மறுமலர்ச்சி இலக்கிய வளர்ச்சிக்கு அறிஞர்களின் பங்கினை மதிப்பிடுக.
2. மறுமலர்ச்சி காலத்தில் அறிவியல் வளர்ச்சியை மதிப்பிடுக.

# பாடம் – 22

## புவியியல் கண்டுபிடிப்புகள்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *புவியியல் கண்டுபிடிப்புகள் காரணங்கள்.*
2. *புதிய கடல்வழிகளை கண்டறிந்ததில் போர்ச்சுகல் நாட்டின் பங்கு.*
3. *புதிய கண்டங்களை ஆய்வு செய்ததில் ஸ்பானியரின் பங்கு.*
4. *பிற புவியியல் கண்டுபிடிப்புகள்.*
5. *புவியியல் கண்டுபிடிப்புகளின் தாக்கம்.*

நவீன உலக வரலாற்றில் 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்த்தப்பட்ட புவியியல் கண்டுபிடிப்புகள் முக்கிய இடம் வகிக்கின்றன. கீழைப்பகுதிகளுக்கு புதிய கடல்வழிகளைக் கண்டுபிடித்தது மற்றும் அமெரிக்கா போன்ற புதிய கண்டங்களை ஆய்வு செய்ததும் வரலாற்றின் போக்கையே பெரிதும் மாற்றியமைத்தன. பார்த்தலோமியோ டயஸ், கிறிஸ்டோபர் கொலம்பஸ், பெர்டினாண்ட் மெகல்லன் போன்றோரின் துணிச்சல் மிக்க உணர்வுகள் வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தகைய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தன. இந்த கண்டுபிடிப்புகளுக்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

**புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள்**

1. கீழைப் பகுதிகளுக்கு முக்கிய வாணிபத்தடமாக விளங்கிய கான்ஸ்டான்டி நோபிள் பட்டணத்தை 1453 ஆம் ஆண்டு ஆட்டோமன் துருக்கியர்கள் கைப்பற்றினர். இதனால் கீழை நாடுகளுடனான ஐரோப்பிய வாணிபம் துருக்கியர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. அவர்கள் பொருட்களின்மீது ஏராளமான வரிகளை விதித்தனர். மற்றொரு புறம், அராபிய வாணிகர்கள் இந்தியக் கடற்கரைப்பகுதிகள் வழியாக தங்களது வாணிபத்தை தொடர்ந்து நடத்தி ஏராளமான லாபத்தை ஈட்டி வந்தனர். எனவே, கீழை நாடுகளுக்கு ஒரு மாற்று வழியை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்டது.

2. மறுமலர்ச்சி காலத்தில் நிகழ்த்தப்பட்ட புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் புவியியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தன. திசை காட்டும் கருவி கண்டுபிடிக்கப்பட்டதோடு, கப்பல் கட்டும் கலையும் பெரிதும் வளர்ச்சியடைந்தது. வானஇயல் மற்றும் அறிவியல் துறையில் காணப்பட்ட முன்னேற்றம் மாலுமிகளின் புதிய கடல்வழிகண்டு பிடிப்புகளுக்கு புதிய நம்பிக்கை ஊட்டின.

3. சீனா, இந்தியா, போன்ற நாடுகளைப் பற்றி மார்க்கோபோலோ, நிக்கோலோ போலோ ஆகியோரின் பயணக் குறிப்புகள் கீழை நாடுகளில் செல்வ வளத்தைப் பற்றிய பிரமிப்பை ஏற்படுத்துவதாக அமைந்தன. கடல் பயணங்கள் குறித்த பிற நூல்களும் கடலாய்வை ஊக்குவிப்பதாக இருந்தன. ‘**வணிகர்களின் கையேடு**’ என்ற நூல் ஐரோப்பாவிற்கும்

தூரக்கிழக்கு நாடுகளுக்கும் இடையிலான கடல்வழிகளைப் பற்றிய தகவல்களைக் கொண்டிருந்தது. அதேபோல் நம்பிக்கையுள்ள '**ஆய்வாளரின் ரகசியங்கள்**' என்ற நூல் ஆசிய நகரங்கள் குறித்த விவரங்களை உள்ளடக்கியதாக இருந்தது.

4. துணிச்சல் உணர்வு, புதிய நிலப்பகுதிகளைப் பெரும் ஆர்வம், ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் ஆய்வுக்கான போட்டாபோட்டி போன்ற பிற காரணங்களாலும் ஆய்வாளர்கள் புதிய கடல்வழிகளைத் தேடிப்புறப்பட்டனர்.

**போர்ச்சுகல்**

கடலாய்வின் முதலாவது தொடர் பயணங்களை போர்ச்சுகல் மேற்கொண்டது. அதன் ஆட்சியாளரான ஹென்றி (1394 – 1460) '**மாலுமி அரசர்**' என்றே பொதுவாக அழைக்கப்பட்டார். அவரது முயற்சிகளின் விளைவாகவே மெடீரா மற்றும் அசோர் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆப்ரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதியை ஆய்வு செய்வதே அவரது முக்கிய செயல்திட்டமாக இருந்தது. அவரது மாலுமிகள் எவர்டி தீவுகள் முனையை கண்டறிந்தனர். 1460ல் ஹென்றி மறைந்துவிட்ட போதிலும், அவரது தணியாத ஆர்வம் போர்ச்சுகல் நாட்டின் எதிர்கால ஆய்வுகளுக்கு தொடர்ந்து ஊக்கத்தை அளிப்பதாக இருந்தது.



**மாலுமி ஹென்றி**

1487 ஆம் ஆண்டு பார்த்தலோமியோ டயஸ் ஆப்ரிக்காவின் தெற்குமுனையை அடைந்தார். அங்கு அவர் அனுபவித்த புயல் காற்றின் சீற்றத்தினால் அந்த முனைக்கு '**புயல் முனை**' என பெயரிட்டார். இந்தியப் பெருங்கடலை அதன் வழியாக சென்று அடையலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியதால், பின்னர் '**நன்னம்பிக்கை முனை**' என அதற்கு பெயரிடப்பட்டது. இந்த வழியைப் பயன்படுத்தியே 1498 ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா இந்தியாவை வந்தடைந்தார். வாஸ் கோடகாமாவின் இந்தியாவிற்கான புதிய கடல்வழி கண்டுபிடிப்பு ஐரோப்பிய மற்றும் ஆசிய வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.



**பார்த்தலோமியோ டயஸ்**

**ஸ்பெயின்**

போர்ச்சுகலுக்கு அடுத்தபடியாக கீழை நாடுகளுக்கு புதிய கடல்வழியைக் கண்டுபிடிக்கும் பணியில் ஸ்பெயின் ஈடுபட்டது. ஜெனீவா நகரைச் சேர்ந்த மாலுமியான கிறிஸ்டோபர் கொலம்பஸ் மேற்குநோக்கி பயணம் செய்து கீழை நாடுகளை அடைவதற்கான திட்டத்தை வைத்திருந்தார். ஸ்பானிய அரசர் பெர்டினாண்ட், அரசி இசபெல்லா ஆகியோரின் பொருள் உதவியுடன் 1492ல் அட்லான்டிக் பெருங்கடலில் தமது பயணத்தை தொடங்கினார். நீண்ட கடுமையான பயணத்திற்குப் பிறகு 1492 அக்டோபர் 12 ஆம் நாள் பஹாமா தீவுகளை அடைந்தார். தாம் இந்தியாவின் கடற்கரையை சென்று அடைந்து விட்டதாக அவர் நம்பினார். எனவே, அங்கு வாழ்ந்த பழங்குடிகளை இந்தியர்கள் என்றே அழைத்தார். மேலும் மூன்று பயணங்களை மேற்கொண்ட அவர் கரீபியன் தீவுகளையும், மத்திய அமெரிக்காவையும் ஆய்வு செய்தார். இத்தீவுகளே தற்காலத்தில் மேற்கிந்தியத் தீவுகள் எனப்படுகின்றன.



**வாஸ்கோடாகாமா**



**கொலம்பஸ்**

பின்னர் 1501 ஆம் ஆண்டு, இத்தாலி மாலுமியான அமெரிகோ வெஸ்புகி என்பவர் ஸ்பானிய அரசரின் ஆதரவைப் பெற்று தென் அமெரிக்கப்பகுதிகளை ஆய்வு செய்தார். அப்போதுதான் கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தியா அல்ல என்றும் அது ஒரு 'புதிய கண்டம்' என்றும் முடிவு செய்தார். இதனால், அந்த புதிய கண்டத்திற்கு அமெரிக்கா என்ற பெயரே வழங்கலாயிற்று இருப்பினும், அமெரிக்காவை கண்டுபிடித்தவர் கொலம்பஸ் என்றே கருதப்படுகிறார்.


**அமெரிகோ வெஸ்புகி**

1493 ஆம் ஆண்டு, புதிய கடல்வழி கண்டுபிடிப்புகளிலும், ஆய்வுகளிலும் ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக்கிடையே நிலவிய போட்டியை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கத்துடன் போப் ஆறாம் அலெக்சார்தர் ஒரு ஆணையை வெளியிட்டார். அது 'போப்பின் ஆணை' என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. அதன்படி உலகை கிழக்கு, மேற்கு என இரண்டாகப் பிரித்து ஒரு கற்பனைக்கோடு வரையப்பட்டது. இக்கோட்டின் மேற்குப் பகுதியில் உரிமை கொண்டாட ஸ்பெயினுக்கும், கிழக்குப் பகுதியில் உரிமை கொண்டாட போர்ச்சுகல் நாட்டிற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதனால் நன்னம்பிக்கை வழியாக கிழக்கிந்திய தீவுகளை அடைவதற்கு ஸ்பெயினுக்கு தடங்கல் ஏற்பட்டது.

எனவே, ஸ்பெயின் மேற்கு நோக்கி பயணம் செய்து கீழை நாடுகளை அடைய திட்டமிட்டது. 1519 ஆகஸ்டு 10 ஆம் நாள் பெர்டினாண்ட் மெகல்லன் ஐந்து ஸ்பானியக் கப்பல்களோடு (அவற்றின் பெயர் = டிரினிடாட், சான் அந்தோனியோ, கன்சப்சியன், விக்டோரியா, சான்டியாகோ என்பதாகும்) செவில்லா துறைமுகத்திலிருந்து தமது பயணத்தை துவங்கினார். மெகல்லனது கப்பல்கள் தென் அமெரிக்காவின் தெற்குப் பகுதியிலுள்ள 373 மைல்கள் நீளமுள்ள நீண்ட ஜலசந்தியைக் கடந்து சென்றது. இதற்கு '**மெகல்லன் ஜலசந்தி**' எனப் பெயரிடப்பட்டது. அதற்கப்பால் இருந்த பெருங்கடல் அட்லான்டிக் பெருங்கடலைவிட அமைதியாக இருந்தமையால் அதற்கு மெகல்லன் '**பசிபிக் பெருங்கடல்**' என்று பெயரிட்டார். பசிபிக் பெருங்கடலைக் கடந்தபோது அப்பயணிகள் உணவின்றியும் குடிநீர் இன்றியும் சொல்லாவொணாத் துயரத்திற்கு ஆளாயினர்.

இறுதியில் 1521 மார்ச் 6 ஆம் நாள் அவர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளைச் சென்றடைந்தனர். அங்கிருந்த பழங்குடியினரால் மெகல்லன் கொல்லப் பட்டார். ஒரு சில மாலுமிகள் மட்டும் எஞ்சிய ஒரே கப்பலான விக்டோரியாவில் தொடர்ந்து நன்னம்பிக்கை முனை வழியாக பயணித்து 1522 செப்டம்பர் 9 ஆம் நாள் தாங்கள் புறப்பட்ட செவில்லா துறை முகத்தை வந்தடைந்தனர். உலகை வலம் வந்த முதல் பயணம் இதுவேயாகும்.


**மெகல்லன்**

**பிற புவியியல் கண்டுபிடிப்புகள்**

1497 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர் ஏழாம் ஹென்றி, ஜான் கேபட் என்பரை கடல் ஆய்வுக்காக அனுப்பிவைத்தார். அவர் நியூபவுண்ட்லாந்தை கண்டறிந்தார். தமது இரண்டாவது பயணத்தின் போது, வட அமெரிக்காவை ஆய்வு செய்தார். இந்த பயணத்தின் காரணமாகத்தான் இங்கிலாந்து வடஅமெரிக்கா நிலப்பகுதிகளில் உரிமை கோரியது. 1534 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் சார்பில் ஜேக்கஸ்


**ஜான் கேபட்**


**ஜேகஸ் கார்ட்டியர்**

கார்ட்டியர் வட அமெரிக்கா சென்று ஆய்வுகளை மேற்கொண்டார். அங்கு செவ்விந்தியரின் குடியிருப்புகளைக் கண்ட அவர் அப்பகுதிக்கு கனடா என்று பெயர் சூட்டினார்.

| ஐரோப்பியர்களின் கடற் பயணங்கள் | |
|---|---|
| 1492 | கிறிஸ்டோபர் கொலம்பஸ் பகாமா தீவுகளை அடைந்தார் |
| 1494 | போர்ச்சுகல் மற்றும் ஸ்பெயினுக்கிடையே ஆன கண்டுபிடிக்கப்படாத இடங்கள் |
| 1497 | இங்கிலாந்தைச் சார்ந்த ஜான் கேபட் வட அமெரிக்காவை ஆய்வு செய்தார் |
| 1498 | வாஸ்கோடாகாமா இந்தியாவில் உள்ள கள்ளிக்கோட்டை / கோழிக்கோடு வந்தடைந்தார். |
| 1499 | அமெரிக்கோ வெஸ்புகி தென் அமெரிக்க பகுதிகளை கண்டுபிடித்தார். |
| 1522 | மெகல்லன் கடல் வழியாக உலகைச் சுற்றி வந்தார் |
| 1571 | ஸ்பானியர்கள் பிலிப்பைன்ஸ் தீவுகளை கண்டுபிடித்தனர். |
| 1600 | ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது. |
| 1602 | டச்சு கிழக்கிந்திய கம்பெனி தோற்றுவிக்கப்பட்டது. |

**புவியியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகள்**

உலகின் பெரும்பகுதிகளில் நிகழ்ந்த அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களுக்கு இந்த புவியியல் கண்டு பிடிப்புகள் காரணமாக அமைந்தன அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

1. ஐரோப்பாவின் வாணிகம் வியக்கத்தக்க அளவிற்கு மேம்பட்டது. கடல்கடந்த வாணிபம் பெரிதும் தழைக்கத் தொடங்கியது.
2. வாணிப வளர்ச்சியினால் கப்பல் கட்டும் தொழில் மேலும் ஊக்கம் பெற்றது. பெரிய கப்பல்கள் மூலமாகத்தான் அதிக அளவிலான பொருட்களை ஏற்றிச்செல்ல முடிந்தது.
3. பெருத்த அளவில் வாணிபம் வளர்ந்தமையால், பங்குதாரர் வணிகக்குழுக்கள் மற்றும் வங்கி நிறுவனங்களும் தோன்றி வளர்ந்தன. ஐரோப்பிய வணிகக் குழுக்கள் ஆசியா, ஆப்ரிக்கா, லத்தீன் அமெரிக்காப் போன்ற பகுதிகளில் தங்களது வாணிப நிலையங்களை நிறுவினர்.
4. வாணிகக்குழுக்கள் படிப்படியாக அரசியல் சக்திகளாக உருவெடுத்து அந்தந்தப்பகுதிகளின் ஆட்சியைக் கைப்பற்றின. இதனால் குடியேற்ற ஆதிக்கமும் பேரரசு ஆதிக்கமும் தோன்றின.
5. ஐரோப்பாவில் குடியேற்ற வாணிபக் கொள்கையோடு முதலாளித்துவமும் வளர்ந்தன. இதனால், குடியேற்ற நாடுகள் பெரிதும் சுரண்டப்பட்டன.
6. புதிய குடியேற்றங்களுக்கான போட்டிகள் உருவாகின. இதனால் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பகைமை தோன்றி, இறுதியில் போர்களில் முடிந்தன.

7. அடிமை முறை பின்பற்றப்பட்டது. அமெரிக்கப் பண்ணையாளர்கள் ஆப்ரிக்காவிலிருந்து நீக்ரோ இன மக்களை அடிமைப்படுத்தி இட்டுச்சென்று தங்களது பண்ணைகளில் பணிக்கு அமர்த்தினர்.

8. ஐரோப்பாவில் காணப்பட்ட மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு புதிய புவியியல் கண்டுபிடிப்புக்கள் ஒரு தீர்வாகவும் அமைந்தது. ஐரோப்பியர்கள் பலர் அமெரிக்க கண்டங்களில் சென்று குடியேறினர்.

9. ஐரோப்பியப் பண்பாடு, ஆசியா, ஆப்ரிக்கா போன்ற உலகின் பல பகுதிகளுக்கும் வேகமாகப்பரவ இந்த கண்டுபிடிப்புகள் உதவின

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெற்ற அறிவு*

1. *கான்ஸ்டான்டி நோபிளின் வீழ்ச்சி, அறிவியல் கண்டுபிடிப்புகள் போன்ற காரணங்களால் புவியியல் கண்டு பிடிப்புகள் நிகழ்ந்தன.*
2. *மாலுமி ஹென்றி மற்றும் அவர் மேற்கொண்ட ஆய்வுகள்*
3. *பார்த்தலோமியோ டயஸ் போன்ற போர்ச்சுகீசிய மாலுமிகளின் முதல் முயற்சிகள்*
4. *கிறிஸ்டோபர் கொலம்பஸ், அமெரிகோ வெஸ்புகி போன்றோரின் ஆய்வுகள்*
5. *உலகை வலம் வந்த மாலுமி மெகல்லனின் பயணம்.*
6. *புவியியல் கண்டுபிடிப்புகளின் விளைவுகள்.*

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. மெடீரா மற்றும் அசோர் தீவுகளை கண்டுபிடித்தவர்

அ) ஹென்றி ஆ) பார்த்தலோமியோ டயஸ்

இ) கொலம்பஸ் ஈ) மெகல்லன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. வாஸ்கோடாகாமா இந்தியாவை சென்று அடைந்த ஆண்டு ______________

2. கனடாவை கண்டுபிடித்தவர் ______________

III. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பார்த்தலோமியோ டயஸ் | அ. | பஹாமாத் தீவுகள் |
| 2. | கொலம்பஸ் | ஆ. | நியூ பவுண்ட்லாந்து |
| 3. | அமெரிகோ வெஸ்புகி | இ. | புயல் முனை |
| 4. | ஜான் கேபட் | ஈ. | அமெரிக்கா |

IV. **சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த அரசர் பெர்டினான்டு பொதுவாக 'மாலுமி' என்று அழைக்கப்படுகிறார்.

ஆ. 1487 ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா ஆப்பிரிக்காவின் தென்முனையான 'புயல் முனை'யை அடைந்தார்.

இ. பெர்டினான்டு மெகல்லன் தனது பயணத்தின் பொழுது அமைதியான கடல் பகுதியை பசிபிக் பெருங்கடல் என்று பெயரிட்டார்.

ஈ. இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் கேபாட் வட அமெரிக்காவிற்கு சென்று அப்பகுதிகளை ஆராய்ந்தார்.

V. **பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. 1598ல் வாஸ்கோடகாமா இந்தியாவை வந்தடைந்தார்.
2. இத்தாலிய மாலுமியான அமெரிக்கோ வெஸ்புகி ஸ்பெயின் நாட்டு அரசரின் உதவியுடன் தென் அமெரிக்கா பகுதிகளை ஆராய்ந்தார்.

VI. **சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. 'மாலுமி' ஹென்றி
2. பெர்டினாண்ட் மெகல்லன்

VII. **சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. புதிய கடல்வழிகளைக் கண்டுபிடித்ததில் போர்ச்சுகல்லின் பங்கினை விவாதி
2. புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை ஆய்க.

VIII. **விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. புதிய நாடுகளைக் கண்டுபிடித்ததில் ஸ்பெயினின் பங்களிப்பை தொகுத்து எழுதுக.
2. புவியியல் கண்டுபிடிப்புகளின் தாக்கத்தை ஆய்க.

# பாடம் – 23

# சமய சீர்திருத்தம் மற்றும் எதிர்சமய சீர்திருத்த இயக்கம்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *சமய சீர்திருத்தத்திற்கான காரணங்கள்*
2. *சமய சீர்திருத்த இயக்கத்திற்கு மார்ட்டின் லூதரின் பங்கு.*
3. *உல்ரிச் ஸ்விங்ளி மற்றும் ஸ்விட்சர்லாந்தில் சமயசீர்திருத்தம்.*
4. *ஜான் கால்வின் – சமய சீர்திருத்த இயக்கத்தில் அவரது பங்கு*
5. *எதிர் சமயசீர்திருத்த இயக்கம்*
6. *சமய சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள்*

16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய ஒரு பெரும் இயக்கத்தை சமயசீர்திருத்த இயக்கம் என்று அழைக்கிறோம். ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலும் கிறிஸ்துவ திருச்சபைக்கு எதிராக பெரும் எதிர்ப்பு தோன்றியது. இதனால், புராட்டஸ்டண்ட் கிறித்துவ சமயம் எழுச்சி பெற்றது. இந்த சமய சீர்திருத்த இயக்கம் சமயத்தில் ஏற்பட்ட பெரிய மாறுதலை குறிப்பதோடு ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தையும் பறை சாற்றுகிறது. ஜெர்மனியில் தோன்றிய சமயசீர்திருத்தம் பின்னர் பிறநாடுகளுக்கும் பரவியது.

**சமய சீர்திருத்தத்திற்கான காரணங்கள்**

சமய சீர்திருத்த இயக்கத்திற்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

1. போப்பாண்டவரின் தலைமையின்கீழ் இயங்கிய கிறித்துவ திருச்சபை தொடக்கத்தில் மக்களின் பேராதரவுடன் திகழ்ந்தது. ஆனால், இடைக் காலத்தில் அது ஒரு நிலமானிய நிறுவனமாக வளர்ந்து ஏராளமான நிலங்களையும் செல்வத்தையும் உடையதாக திகழ்ந்தது.


   போப்பாண்டவர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்று, அரசியல் விவகாரங்களில் அதிகம் தலையிடத் தொடங்கினர். இதனால், அவர்கள் தங்களது ஆன்மீகக் கடமைகளை புறக்கணிக்கத் தொடங்கினர். போப்பாண்டவரும் குருமார்களும் ஆடம்பர வாழ்க்கையிலும் ஈடுபடத் தொடங்கினர். 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த ஆறாம் அலெக்சாந்தர், இரண்டாம் ஜுலியஸ், பத்தாம் லியோ போன்ற போப்பாண்டவர்கள் திருச்சபையின் மதிப்பையும் கண்ணியத்தையும் சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்டனர்.

2. மறுமலர்ச்சி இயக்கம் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. விவிலியத்தை அவர்கள் படிக்கத் தொடங்கினர். திருச்சபை மற்றும் குருமார்களின் செயல்பாடுகள் புனித நூல்களில் குறிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளிலிருந்து மாறுபட்டுள்ளதை அவர்கள் உணரத் தொடங்கினர். சமயசீர்திருத்த இயக்கத்திற்கு

முந்தைய காலத்திலேயே, பல்வேறு எழுத்தாளர்கள் திருச்சபையில் காணப்பட்ட ஆடம்பர வாழ்க்கை மற்றும் மூடநம்பிக்கைகளை கண்டித்தனர். இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் வைக்ளிப் (1330 – 1384) என்ற அறிஞர் போப்பாண்டவரின் அதிகாரத்தையும் பிற குறைபாடுகளையும் விமர்சித்தார். விவிலியத்தை அவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 'சமய சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி' என்று அவர் போற்றப்பட்டார். எராஸ்மஸ் (1466 – 1536) தனது 'முட்டாள்களின் கப்பல்' என்ற நூலில் குருமார்கள் பின்பற்றி வந்த மூடப்பழக்கங்களைச் சாடினார். 1509 ஆம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டது. பொஹிமியாவைச் சேர்ந்த ஜான் ஹஸ் (1369 – 1415) என்பவர் திருச்சபையை சீர்திருத்துவதற்காக பாடுபட்டார். ஆனால், அவரது எழுத்துக்கள் கடுமையாக கண்டிக்கப்பட்டதுடன், திருச்சபைக்கெதிரான குற்றங்களுக்காக அவர் உயிருடன் கொளுத்தப்பட்டார். இத்தகைய முதல் முயற்சிகள் 16 ஆம் நூற்றாண்டு பிற்பட்ட சமய சீர்திருத்த இயக்கத்திற்கு வித்தாக அமைந்தன.

**மார்ட்டின் லூதர் (1483 – 1546)**

ஜெர்மனியில் தோன்றிய சமய சீர்திருத்த இயக்கத்தை முன்னின்று நடத்தியவர் மார்ட்டின் லூதர் ஆவார். 1483 நவம்பர் 10 ஆம் நாள் அய்ல்பென் என்ற ஊரில் மார்ட்டின் லூதர் பிறந்தார். எர்பர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற லூதர் 1508 ஆம் ஆண்டு சமயத்துறவியானார். 1510ல் அவர் ரோமாபுரிக்கு சென்றிருந்தார். ரோமானிய குருமார்கள் அங்கு நடத்திவந்த உலகந்தழுவிய வாழ்க்கையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். 1512ல் அவர் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தில் சமயக் கல்விக்கான முனைவர் பட்டத்தைப் பெற்றார். பின்னர், அதே பல்கலைக் கழகத்தில் சமயவியல் பேராசிரியராகப் பணியாற்றினார். அப்போது, திருச்சபையின் தீமைகளை எதிர்த்து தொடர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார்.


**மார்ட்டின் லூதர்**


**ஜான் டெட்சல்**

1517 ஆம் ஆண்டு, ரோமாபுரியிலிருந்த புனித பீட்டர் தேவாலயத்தை புதுப்பிக்க வேண்டிய பணம் திரட்டும் நோக்கத்துடன் ஜான் டெட்சல் எனபவரை பாவ மன்னிப்பு சீட்டுகளை விற்பதற்காக போப் பத்தாம் லியோ ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தார். பாவமன்னிப்பு என்னும் கோட்பாடு கிறித்துவ சமயத்தில் ஒருவர் தாம் செய்த தவறுக்காக வருந்தி மனம் திருந்துவாரேயானால் அவருக்கு வழங்கப்படும் மன்னிப்பைக் குறிப்பதாகும். ஆனால் போப் பத்தாம் லியோ அதனை பணம் திரட்டும் வழியாகப் பயன்படுத்தினார். எனவே லூதர் பாவமன்னிப்பு சீட்டுக்கள் விற்பதை கடுமையாக எதிர்த்தார். ஜான் டெட்சல் விட்டன்பர்க் பல்கலைக்கழகத்தற்கு வந்தபோது, லூதர் தமது எதிர்ப்பை 95 கருத்துக்களாக எழுதி அவற்றை தேவாலயக் கதவுகளில் ஆணிகள் கொண்டு அறைந்தார். இதனைக் கண்ட போப் பத்தாம் லியோ அதிர்ச்சியடைந்து, 1521ல் லூதரை மதவிலக்கம் செய்தார். அந்த ஆணையை லூதர் மக்கள் முன்னிலையில் தீயிட்டுக்கொளுத்தினார்.


**போப் பத்தாம் லியோ**

பின்னர், போப்பாண்டவர், அப்போது புனித ரோமானியப் பேரரசராக இருந்த 5 ஆம் சார்லசிடம், திருச்சபைக்கெதிரான நடவடிக்கைகளுக்காக லூதருக்கு தக்க தண்டனை வழங்கும்படி கேட்டுக்கொண்டார். ஆனால், லூதருக்கு ஜெர்மானிய சிற்றரசர்களின்

ஆதரவு இருந்தது. இருப்பினும், 1521 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஓம்ஸ் டயட் சபையில் பேரரசர் ஐந்தாம் சார்லஸ் அவையில் லூதர் குற்றவாளி என முடிவெடுக்கப்பட்டது. ஆனால், லூதர் கைது செய்யப்படுவதற்கு முன்பே அவரது நண்பர்களின் துணையுடன் அழைத்துச் செல்லப்பட்டு வார்ட்பர்க் கோட்டையில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டார். அங்கிருந்த போதுதான் லூதர் கிரேக்க மொழியிலிருந்த மூல நூலான புதிய ஏற்பாட்டை ஜெர்மானிய மொழிக்கு மொழி பெயர்த்தார். 1529 ல் தனது புகழ்பெற்ற 'சிறுவினாவிடை' என்ற நூலை பதிப்பித்தார். 1546 ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை லூதர் தனிமையான வாழ்க்கையே வாழ்ந்தார்.



**5–ம் சார்லஸ்**

இத்தகைய சமய எதிர்ப்பில் ஜெர்மானியக் குடியானவர்கள் கலந்து கொண்டபோது. அது குடியானவர்களின் போராக (1524–25) மாறியது. குடியானவர்களின் கிளர்ச்சி இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்பட்டது. பல குடியானவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1526 ஆம் ஆண்டு கூட்டப்பட்ட ஸ்பெயர்ஸ் டயட் சபையில் மீண்டும் சமயம் குறித்த பிரச்சனையை ஜெர்மானிய சிற்றரசர்கள் எழுப்பினர். சிற்றரசர்கள் தாம் விரும்பிய சமயத்தைப் பின்பற்றிக் கொள்ளலாம் என டயட் சபை அமைதியளித்தது. ஆனால், 1529ல் பேரரசர் சார்லஸ் இந்த அனுமதியை ரத்து செய்தார். இதனை ஜெர்மானிய சிற்றரசர்கள் எதிர்த்தனர். எனவே, அவர்கள் எதிர்ப்பாளர்கள் அல்லது புரோட்டஸ்டன்டுகள் என அழைக்கப்பட்டனர். 1555 ஆம் ஆண்டு ஆக்ஸ்பர்க் அனுமதி உடன் படிக்கையில்தான் சிற்றரசர்கள் கத்தோலிக்க அல்லது புரோட்டஸ்டன்டு பிரிவை பின்பற்றுவதற்கான அனுமதி பேரரசரால் முறையாக வழங்கப்பட்டது. லூதரின் சமயப்பிரிவுக்கு மட்டுமே இந்த உடன்படிக்கை அங்கீகாரம் அளித்தது. கால்வீனிய சமயமோ, ஸ்விங்ளியின் சமயப்பிரிவோ அங்கீகரிக்கப்படவில்லை.

**உல்ரிச் ஸ்விங்ளி (1484 – 1531)**

ஸ்விட்சர்லாந்து நாட்டில் சமயசீர்திருத்தத்தற்கு வழிவகுத்தவர் உல்ரிச் ஸ்விங்ளி என்பவராவார். மார்ட்டின் லூதரின் சமகாலத்தவரான அவர் ஸ்விட்சர்லாந்தின் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தார். 1502 ஆம் ஆண்டு சூரிச் கான்டனில் கிறித்துவப் பாதிரியானார். பாவமன்னிப்பு சீட்டு விற்பனை போன்ற திருச்சபையின் முறைகேட்டை அவர் கண்டித்தார். விவிலியத்தின் கொள்கைகளை குருமார்கள் முறையாக கடைபிடிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார் பாவமன்னிப்பு சீட்டுகளை விற்பதற்காக போப்பாண்டவர் சாம்சன் என்பவரை சூரிச் நகருக்கு அனுப்பிவைத்தார். இதனை ஸ்விங்ளி கடுமையாக எதிர்த்தார். அதன்பிறகு, போப்பாண்டவரின் தலைமையை ஸ்விங்ளி எதிர்க்கத் தொடங்கினார். குருமார்களைப் போற்றி புகழ்வதையும், பிரம்மச்சரிய பாதிரி முறைமையையும் கூட அவர் கண்டித்தார். பிரம்மச்சரியத்திற்கு எதிரான ஸ்விங்ளியின் கொள்கையை பிஷப் ஆட்சேபித்தார். சூரிச் நகரசபை ஸ்விங்ளியின் கருத்தை ஏற்றுக்கொண்டு பிஷப்பின் எதிர்ப்பை நிராகரித்தது. இதன்மூலம் சீர்திருத்தத்தை சூரிச் ஏற்றுக்கொண்டது. 1523ல் போப்பாண்டவர் ஸ்விங்ளியை சமயவிலக்கம் செய்தார். ஆனால், சூரிச் கான்டன் திருச்சபையிலிருந்து விலகுவதாக அறிவித்தது. இதனால், ஐந்து கான்டன்கள் ஒன்றுசேர்ந்து சூரிச்மீது போர் தொடுத்தன. இப்போரில் 1531ல் ஸ்விங்ளி கொல்லப்பட்டார். இறுதியில் ஒவ்வொரு கான்டனும் தாங்கள் விரும்பிய சமயத்தைப் பின்பற்றலாம் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டனர்.



**உல்ரிச் ஸ்விங்லி**

**ஜான் கால்வின் (1509 – 1564)**

சமய சீர்திருத்தவாதியான கால்வின் பிரான்சில் பிறந்தவர். பாரிஸ் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் மற்றும் சட்டம் பயின்றார். 1532ல் சட்டவியலில் முனைவர் பட்டம் பெற்றார். ரோமானிய தத்துவ அறிஞர் செனீகாவின் டி கிலிமன்னீயா என்ற நூலுக்கு விளக்கவுரையை அவர் எழுதி வெளியிட்டார். 1536ல் அவர் ஜெனிவா சென்று தங்கினார். சமய நம்பிக்கையைப் பொறுத்தவரை விஷயமே இறுதியானது என்பது அவரது கருத்தாகும். ஆண்டவன் அருளாலேயே மனித வாழ்க்கைக்கு மேன்மை நிலை கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.


**ஜான் கால்வின்**

வருவதை முன்கூட்டியே அறியும் கோட்பாடு மற்றும் கடவுளே இறுதி முடிவெடுப்பவர் என்ற நம்பிக்கை ஆகியவற்றை கால்வின் வலியுறுத்தினார். தமது சமய கருத்துக்களை 'கிறித்துவ சமயத்தின் கோட்பாடுகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். அவரது சமயப்பிரிவு 'கால்வீனியம்' என அழைக்கப்பட்டது. ஜெனிவா திருச்சபையின் தலைவராக அவர் இருந்தார். கல்வியைப் பரப்புவதற்காக பல பள்ளிகளையும் அவர் நிறுவினார். ஜெனிவா பல்கலைக்கழகமும் அவரால் நிறுவப்பட்டதேயாகும். ஐரோப்பாவின் பல பகுதிகளுக்கும் கால்வீனிய சமயப்பிரிவு பரவியது.

**இங்கிலாந்தில் சமய சீர்திருத்தம்**

இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றி தொடக்கத்தில் மாட்டின் லூதருக்கெதிராக போப்பாண்டவரை ஆதரித்தார். இதனால் அவர் 'சமயக்காவலர்' என்று போப் பத்தாம் லியோவினால் போற்றப்பட்டார். ஆனால், விரைவில் போப்பாண்டவருடனான அவரது நல்லுறவு முறிந்தது. அரசியை மணவிலக்கு செய்துவிட்டு, ஆன்பொலின் என்பவரை எட்டாம் ஹென்றி திருமணம் செய்து கொள்ள விரும்பினார். இதற்கு போப் அனுமதி வழங்கவில்லை. எனவே, பாராளுமன்றத்திடம் கூறி ஆதிக்கச்சட்டம் ஒன்றை இயற்றச் செய்தார். இதன்படி மன்னரே இங்கிலாந்து திருச்சபைக்கும் தலைவர் என்று அறிவிக்கப்பட்டது. போப்பாண்டவரின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய இந்த புதிய திருச்சபை ஆங்கிலிக்கத் திருச்சபை என அழைக்கப்பட்டது. எட்டாம் ஹென்றி கத்தோலிக்க கோட்பாடுகளில் எவ்வித முக்கிய மாற்றத்தையும் செய்யவில்லை. ஆறாம் எட்வர்ட் (1547 – 1553) ஆட்சிக்காலத்தில்தான் ஆங்கிலிக்க திருச்சபை புரோட்டஸ்டன்ட் சமயமாக மாறியது. தொழுகை விதிகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன.


**எட்டாம் ஹென்றி**

**எதிர்சமய சீர்திருத்த இயக்கம்**


**ஆறாம் எட்வர்ட்**

சமய சீர்திருத்த இயக்கத்தின் வெற்றி ரோமானிய கத்தோலிக்க திருச்சபையில் ஒருவித வியப்பையும் பெரும் அச்சத்தையும் தோற்றுவித்தது. நிலைமை மேலும் மோசமாவதற்குள் புரோட்டஸ்டன்ட் சமயம் பரவுவதை தடுத்து நிறுத்துவதற்காகவும், திருச்சபைக்குள்ளேயே சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காகவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவே எதிர் சமய சீர்திருத்த இயக்கம் எனப்படுகிறது.

**இக்னேஷியஸ் லயோலா (1491 – 1556)** என்பவர் ஒரு ஸ்பானிய வீரர், ஒரு போரில் அவர் தனது கால்களை இழந்தார். அதன்பிறகு, ரோமானிய கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கு தமது ஆற்றலை பயன்படுத்த அவர் முடிவு செய்தார். 1534ல் 'ஏசு சபை' என்ற அமைப்பை அவர் நிறுவினார். இதற்கு போப்பாண்டவரும் ஒப்புதல் வழங்கினார். கத்தோலிக்க திருச்சபையின் இழந்த புகழை மீட்பதும், சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதும் இந்த சபையின் முக்கிய நோக்கங்களாகும். இந்த சபையின் உறுப்பினர்கள் 'ஜெசூட்டுகள்' என அழைக்கப்பட்டனர். தங்களது தன்னலமற்ற தொண்டினால் கத்தோலிக்க திருச்சபைக்கு நற்பெயரை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தனர். உலகின் பல பகுதிகளிலும் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவினர். சமயத்தை பரப்புவதில் அவர்கள் ஈடு இணையற்ற வெற்றியைப் பெற்றனர். கத்தோலிக்க சமயத்திற்கும் போப்பாண்டவருக்கும் அவர்கள் விசுவாசமாக இருந்தனர்.



**இக்னேஷியஸ் லயோலா**

**டிரன்ட் கவுன்சில் (1545 – 1563)** கத்தோலிக்க திருச்சபையில் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. குருமார்களிடம் காணப்பட்ட சீர்கேடுகள் ஒழிக்கப்பட்டன. பிரம்மச்சரியம் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. பதவிகளை விலைக்கு விற்பதும் நிறுத்தப்பட்டது. பாவ மன்னிப்பு சீட்டுகள் விற்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. குருமார்கள் தங்களது கடமைகளில் தீவிரமாக ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டனர். சமயத்தைப் பொறுத்தவரையில் போப்பாண்டவரே உச்ச அதிகாரம் படைத்தவர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

கத்தோலிக்க சமயத்துக்கு எதிரான புத்தகங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. கத்தோலிக்கர்கள் இந்த புத்தகங்களை படிக்க தடைவிதிக்கப்பட்டது.

அதேபோல், இடைக்காலத்தல் வழக்கத்திலிருந்த இன்குசிஷன் என்ற சமய விசாரணை நீதிமன்றங்கள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. சமய விரோதிகள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். திருச்சபைக்கு எதிரானவர்களுக்கு உயிரோடு கொளுத்துதல் போன்ற கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

புரோட்டஸ்டன்ட் சமயம் வேகமாகப் பரவுவது தடைப்பட்டதிலிருந்தே எதிர்சமய சீர்திருத்த இயக்கத்தின் வெற்றியை உணரமுடியும். தெற்கு ஜெர்மனி, பிரான்சு, போலந்து, ஸ்விட்சர்லாந்தின் சில கான்டன்கள் மற்றும் சவாய் ஆகியன மீண்டும் கத்தோலிக்க பிரிவுக்கு மாறின. இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாடுகளிலிருந்து புரோட்டஸ்டன்ட் சமயம் விரட்டியடிக்கப்பட்டது. இன்றைய உலகிலும்கூட ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஒரு பெரிய சமய அமைப்பாக நீடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

| மறுமலர்ச்சி காலத்தில் முக்கிய வரலாற்று நிகழ்வுகள் | |
|---|---|
| 1492 | ஸ்பெயின் நாட்டிற்காக கொலம்பஸ் பஹாமா மற்றும் கியூபா தீவுகளை கண்டறிந்தார். |
| 1517 | 95 ஆய்வு கட்டுரைகளை மார்டின் லூதர் எழுதினார். |
| 1522 | பைபிளை லூதர் ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். |
| 1525 | ஜெர்மனியில் குடியானவர் எழுச்சி |
| 1559 | இங்கிலாந்தில் ஆங்கிலேய திருச்சபை அரசர் / அரசியை தலைவராக கொண்டு நிறுவப்பட்டது |

**சமய சீர்திருத்தத்தின் விளைவுகள்**

சமய சீர்திருத்த இயக்கத்தின் முக்கிய விளைவுகள்:

1. கிறித்துவ சமயத்தில் கத்தோலிக்கர்கள், புரோட்டஸ்டன்டுகள் என இரண்டு பிரிவினர் உருவாயினர். இந்தப் பிரிவினால் சமய வேற்றுமைகளும், ஜெர்மனி மற்றும் ஐரோப்பாவில் சமய அடிப்படையிலான போர்களும் தோன்றின.

2. விவிலியத்தைப் படித்து சமயக்கருத்துக்களின் பயன்பாடுகளை மக்கள் உணர்ந்தனர். விவிலியத்துக்கான விளக்கங்களை புரோட்டஸ்டன்டுகள் தங்கள் விருப்பம்போல் புரிந்து கொண்டதால் சுயசிந்தனை வளர வழியேற்பட்டது. இதனால், கலை, இலக்கியம், அறிவியல் வளர்ந்தன.

3. திருச்சபையில், கொண்டுவரப்பட்ட ஜனநாயக நடைமுறை தேசியம் மற்றும் ஜனநாயக கருத்துக்கள் வளர வழிவகுத்தன. நாடுகள் தங்களுக்கென திருச்சபைகளை தோற்றுவித்துக் கொண்டன. போப்பாண்டவரின் இடத்தை தேசிய திருச்சபைகள் ஆக்ரமித்தன.

4. புரோட்டஸ்டன்டு சமயம் எதிர்சமய சீர்திருத்த இயக்கம் ஆகிய இரண்டும் விரைவாகப் பரவியதால் திருச்சபை தூய்மைப்பட்டது. கத்தோலிக்கர்களும், புரோட்டஸ்டன்டுகளும் சமயசீர்திருத்தத்திற்குப் பிறகு உயரிய ஒழுக்க நெறிகளை கடைப்பிடிக்கத் தொடங்கினர். கத்தோலிக்கர்கள் திருச்சபை நிறுவனங்களை சீரமைத்து சமுதாயத்தில் ஒழுக்க நெறிகளை போதித்தனர்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற அறிவு*

1. *திருச்சபையில் நிலவிய சீர்கேடுகளாலும் பிறகாரணங்களாலும் சமய சீர்திருத்தம் தோன்றியது.*
2. *மார்ட்டின் லூதரின் வாழ்க்கை மற்றும் ஜெர்மானிய சீர்திருத்த இயக்கத்தில் அவரது பங்கு.*
3. *சமயசீர்திருத்த இயக்கத்தில் ஜான்கால்வின், உல்ரிச் ஸ்விங்ளி ஆகியோரது பங்கு.*
4. *எதிர்சமய சீர்திருத்த இயக்கமும், இக்னேஷயஸ் லயோலாவின் பங்களிப்பும்*
5. *சமயசீர்திருத்தத்தின் விளைவுகள்*

## பயிற்சி

### பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருவனவற்றுள் எது மறுமலர்ச்சிக்கான காரணம் இல்லை.

   அ. மறுமலர்ச்சியால் ஏற்பட்ட வினவியறியும் உணர்வு.

   ஆ. ஐரோப்பாவில் தேசிய – அரசுகள் தோன்றியது

   இ. புவியியல் கண்டுபிடிப்புகள்

   ஈ. போப் மற்றும் குருமார்கள் நடத்திவந்த ஆடம்பர வாழ்க்கை

2. சமயசீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி எனக் கருதப்படுபவர்

   அ. எராஸ்மஸ் ஆ. மார்ட்டின் லூதர்

   இ. ஜான் ஹஸ் ஈ. ஜான் வைக்ளிப்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. இயேசு சபையை நிறுவியவர்______________

2. ஜெனிவா பல்கலைக்கழகத்தை தோற்றுவித்துவர்______________

**III. பொருத்துக.**

| | |
|---|---|
| 1. மார்ட்டின் லூதர் | அ. பிரான்ஸ் |
| 2. உல்ரிச் ஸ்விங்ளி | ஆ. ஸ்பெயின் |
| 3. ஜான் கால்வின் | இ. ஜெர்மனி |
| 4. இக்னேஷியஸ் லயோலா | ஈ. இங்கிலாந்து |
| 5. ஜான் வைக்ளிப் | உ. ஸ்விட்சர்லாந்து |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது.**

அ. எதிர்சமய சீர்திருத்த இயக்கம் புராட்டஸ்டண்டுகளால் துவக்கப்பட்டது.

ஆ. இக்னேஷியஸ் லயோலாவின் சீடர்கள் கல்வியைப் பரப்பினார்கள்.

இ. டிரன்ட் சபை எட்டாம் ஹென்றியால் கூட்டப்பட்டது.

ஈ. எதிர்சமய சீர்திருத்த இயக்கத்தின்போது தயாரிக்கப்பட்ட அட்டவணையில் விவிலியமும் இடம்பெற்றிருந்தது.

**V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா எனக் கூறுக.**

1. இங்கிலாந்து நாட்டின் அரசர் எட்டாம் ஹென்றி துவக்கத்தில் மார்ட்டின் லூதரை ஆதரித்து போப்பை எதிர்த்தார்.

2. ஆங்கிலேய திருச்சபை எட்வர்டு காலத்தில் முற்றிலும் பிராட்டஸ்டண்டு மதத்திற்கு மாறியது.

**VI. சிறுகுறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. உல்ரிச் ஸ்விங்ளி

2. எதிர்சமய சீர்திருத்தம்

3. இயேசு சபை

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. சமயசீர்திருத்த இயக்கத்தில் ஜான் கால்வினின் பங்கினை விவாதி.

2. சமய சீர்திருத்தத்தின் விளைவுகளை மதிப்பிடுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. சமய சீர்திருத்தத்திற்கான காரணங்களை ஆய்க.

2. ஜெர்மனியில் சமயசீர்திருத்த இயக்கத்திற்கு மார்ட்டின் லூதரின் பங்களிப்பை ஆய்க.

3. எதிர்சமய சீர்திருத்த இயக்கத்தின் போக்கை விவரி.

# பாடம் – 24

# அமெரிக்க விடுதலைப்போர் (1776 1783)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்தி:*

1. *அமெரிக்கா விடுதலைப்போருக்கான அடிப்படைக் காரணங்கள்*
2. *போருக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகள்*
3. *அமெரிக்க விடுதலை அறிக்கை*
4. *போரின் முக்கிய நிகழ்வுகள்*
5. *போரின் முக்கியத்துவம்*

**அமெரிக்காவின் ஆங்கிலேய குடியேற்றங்கள்**

அமெரிக்கக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து மக்கள் ஐரோப்பாவிலிருந்து புதிய உலகிற்கு தொடர்ந்து குடியேறிய வண்ணம் இருந்தனர். தென் அமெரிக்காவில் ஸ்பானிய குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. வட அமெரிக்காவில் ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் தங்களது குடியேற்றங்களை அமைத்தனர். 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் அட்லான்டிக் கடற்கரைப் பகுதியில் 13 ஆங்கிலேயக் குடியேற்றங்கள் நன்கு வேரூன்றியிருந்தன. நிலமில்லாக் குடியானவர்கள், சமயசுதந்திரம் வேண்டி நின்றோர், வணிகர்கள் என பல்வேறு தரப்பினரும் அங்கு குடியேறியிருந்தனர். தொடக்கத்தில் இந்த குடியேற்றங்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையே நல்லுறவு இருந்தது. இந்தக் குடியேற்றங்கள் ஆளுநர்கள் கட்டுப்பாட்டில் இருந்த போதிலும், அவை அரசியல் சுதந்திரம் பெற்று விளங்கின. ஒவ்வொரு குடியேற்றத்திலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் இருந்தது. உள்நாட்டைப் பொறுத்தவரையிலான சட்டங்களை அது இயற்றியது. ஆனால், தாய்நாட்டு அரசாங்கம் (பிரிட்டன்) பின்பற்றிய சில கொள்கைகளினால் மோதல்கள் உருவாயின. இது அமெரிக்க விடுதலைப் போருக்கு வழிவகுத்தது. இறுதியில் 13 குடியேற்றங்களும் விடுதலை பெற்றன. இந்தப் போருக்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

**அடிப்படைக் காரணங்கள்**

பிரிட்டிஷ் அரசாங்கம் குடியேற்ற வாணிபக் கொள்கையைப் (மெர்கன்டலிசம்) பின்பற்றியது. இதன்படி, குடியேற்றங்கள் தாய்நாட்டின் நலன்களுக்காவே அமைந்துள்ளன. கச்சாப்பொருட்களை அனுப்பிவைப்பதோடு தாய்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கும் நல்ல சந்தையாக குடியேற்றங்கள் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது. மேலும், தங்களது பொருட்களை பிரிட்டிஷாருக்கு சொந்தமாக கப்பல்களில்தான் கொண்டு செல்ல வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இத்தகைய வழிகளில் தாய்நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கு குடியேற்றங்கள் செயலாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. குடியேற்றக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான பல்வேறு சட்டங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்தது.

அமெரிக்க குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் நாவாய் சட்டங்களை பிரிட்டிஷ் நாடளுமன்றம் இயற்றியது. இச்சட்டங்களின்படி அனைத்து பொருட்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியன இங்கிலாந்துக் கப்பல்கள் மூலமாகவே நடைபெறவேண்டும் என அறிவிக்கப்பட்டது. நாவாய் சட்டங்களை நடைமுறைப்படுத்த குடியேற்றங்களில் சுங்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். ஆனால், அமெரிக்க குடியேற்றங்கள் இந்த சட்டங்கள் தங்களது உரிமைகளைப் பறிப்பதாகக் கருதின.

வெல்லப்பாகு சட்டம் அமெரிக்க குடியேற்றங்களுக்கு இறக்குமதி செய்யப்படும் வெல்லப்பாகு மற்றும் சர்க்கரை ஆகியவற்றின்மீது அதிக வரிகளை விதித்தது. இதனைத்தவிர, குடியேற்றங்களின் வணிகத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு வணிகச்சட்டங்களும் கொண்டுவரப்பட்டன. எடுத்துக்காட்டாக, 1732 ஆம் ஆண்டின் தொப்பி சட்டம் ஒரு குடியேற்றத்திலிருந்து மற்றொன்றிற்கு தொப்பிகள் இறக்குமதி செய்யப்படுவதற்கு தடை விதித்தது. 1750 ஆம் ஆண்டு இரும்பு சட்டம் குடியேற்றங்களில் பெருமளவு இரும்பு உற்பத்தி செய்யப்படுவதற்கு கட்டுப்பாடுகள் விதித்தது. இத்தகைய சட்டங்களை குடியேற்றங்கள் எதிர்த்தன.

இந்த கட்டுப்பாடுகளினால் தாய்நாட்டு அரசுக்கும் குடியேற்றங்களுக்கும் இடையே வெறுப்பு தோன்றியது. பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கேற்ற தருணத்தை குடியேற்றங்கள் எதிர்பார்த்து காத்திருந்தன.

**விடுதலைப் போருக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் ஏழாண்டுப் போரின் விளைவு**

1763 ஆம் ஆண்டு ஏழாண்டுப் போரின் முடிவில் கனடா பகுதியை பிரான்ஸ் இங்கிலாந்துக்கு விட்டுக்கொடுத்தது. இதனால் அமெரிக்கர்களுக்கு இருந்த பிரஞ்சு அச்சம் நீங்கியது. ஒருவேளை பிரஞ்சுக்காரர்கள் தாக்குதல் தொடுத்தால் தாய்நாட்டின் உதவியை நாடவேண்டிய நிர்ப்பந்தம் தற்போது இல்லாமல் போயிற்று. எனவே, பிரிட்டிஷாரின் குடியேற்ற ஆதிக்கக் கொள்கையை துணிச்சலுடன் எதிர்கொள்வது என அமெரிக்க குடியேற்றங்கள் தீர்மானித்தன.

**கிரன்வெல் நடவடிக்கைகள்**

கிரன்வெல் என்பவர் இங்கிலாந்து பிரதமராக இருந்தபோது அமெரிக்க குடியேற்றங்களின் நலன்களுக்கு எதிராக பல்வேறு சட்டங்களைக் கொண்டுவந்தார்.


1763 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி அமெரிக்க குடியேற்றத்தைச் சேர்ந்தவர்கள் அப்பலாச்சிய மலைத்தொடருக்கு அப்பால் நிலப்பகுதிகளை வாங்குவதற்கு தடைவிதிக்கப்பட்டது. 1764ஆம் ஆண்டு சர்க்கரைச் சட்டம் சர்க்கரை மீதான சுங்கவரியை உயர்த்தியது. இது குடியேற்றங்களின் நலன்களை பெரிதும் பாதித்தது. 1765 ஆம் ஆண்டு முத்திரைத்தாள் சட்டம் குடியேற்ற வணிக மற்றும் சட்டபூர்வமான ஆவணங்களில் பிரிட்டிஷ் முத்திரைத்தாள்கள் பயன்படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தியது. படைவீரர் தங்குமிடச்சட்டம், ஆங்கிலேய படைவீரர்களுக்கு உணவும் இருப்பிடமும் குடியேற்றங்கள் ஏற்படுத்தித்தர வேண்டும் எனக் கூறியது. இந்த நடவடிக்கைகளை குடியேற்றங்கள் கடுமையாக எதிர்த்தன. இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தங்களுக்கும் பிரிதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதைக் குறிக்கும் வகையில் ‘‘பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியில்லை’’ என்ற முழக்கத்தை குடியேற்றத்தைச் சேர்ந்த மக்கள் எழுப்பினர். தெருக்களில் வன்முறை வெடித்ததால் முத்திரைத்தாள் சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**டவுண்ஷெண்ட் சட்டங்கள்**

ஆனால், இங்கிலாந்து நிதியமைச்சர் சார்லஸ் டவுண்ஷெண்ட் கண்ணாடி, காகிதம், தேயிலை போன்ற பொருட்களின்மீது 1767 ல் புதிய வரிகளை விதித்தார். இவை டவுண்ஷெண்ட் சட்டங்கள் எனப்படுகின்றன. அமெரிக்கர்கள் இவற்றைப் புறக்கணித்ததோடு பிரிட்டிஷ் பொருட்களையும் வாங்க மறுத்தனர். 1770 மார்ச் 5 ஆம் நாள் பாஸ்டன் நகரில் நடைபெற்ற போராட்டத்தின் போது பிரிட்டிஷ் வீரர்கள் ஐந்து அமெரிக்கர்களை சுட்டுக் கொன்றனர். இதுவே **பாஸ்டன் படுகொலை** எனப்படுகிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு டவுண்ஷெண்ட் சட்டங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டன.


**பாஸ்டன் தேனீர் விருந்து**

1773 ஆம் ஆண்டு தேயிலை இறக்குமதியின் மீது வரிவிதிக்கும் புதிய சட்டமான தேயிலை சட்டம் கொண்டுவரப்பட்டது. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு குடியேற்றங்கள் மீது வரிவிதிக்க உரிமை உண்டு என்பதற்கு அடையாளமாக இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அமெரிக்கர்கள் இதனை எதிர்த்தனர். செவ்விந்தியர்கள் போல வேடம் தரித்த அமெரிக்கர்கள் சிலர் பாஸ்டன் துறைமுகத்திலிருந்த கப்பல்களில் ஏறி அங்கிருந்த தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசியெறிந்தனர். 1773 ஆம் ஆண்டு டிசம்பர் 16 ஆம் நாள் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி **'பாஸ்டன் தேநீர் விருந்து'** என அழைக்கப்படுகிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். இத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்துடன் அமெரிக்கர்களுக்கெதிரான பொறையின்மைச் சட்டங்களை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் 1774ல் கொண்டு வந்தது.



**பாஸ்டன் தேநீர் விருந்து**

**பிலடெல்பியா மாநாடு**

பிரிட்டிஷாருக்கெதிரான இப்போராட்டத்தில் ஒன்றிணைந்து செயல்படுவதென அமெரிக்க குடியேற்றங்கள் முடிவு செய்தன. 1774 செப்டம்பரில் பிலடெல்பியாவில் முதலாவது கண்ட மாநாடு நடைபெற்றது. ஜார்ஜியா தவிர எஞ்சிய 12 குடியேற்றங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். தொழில் மற்றும் வாணிகத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை விலக்கிக் கொள்ளுமாறு பிரிட்டிஷ் அரசருக்கு இம்மாநாடு வேண்டுகோள் விடுத்தது. தங்களது ஒப்புதலின்றி வரிவிதிக்கவேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டது.


**ஜெபர்சன்**


1775 மே மாதம் இரண்டாவது கண்ட மாநாடு பிலடெல்பியாவில் கூடியது. இதில் 13 குடியேற்றங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர். தாமஸ் ஜெபர்சன், பெஞ்சமின் பிராங்க்ளின் போன்ற புகழ்மிக்க தலைவர்களும் இதில் கலந்து கொண்டனர். அமெரிக்கப்படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தளபதியாக


**தாமஸ்பெயின்**

நியமிக்கப்பட்டார். இறுதி முயற்சியாக பிரிட்டிஷ் அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு ஒரு ஆலிவ் கிளை விண்ணப்பம் அனுப்பிவைக்கப்பட்டது. அவர் அதனை நிராகரித்தார். அமெரிக்க குடியேற்றங்கள் கிளர்ச்சியில் இறங்கியிருப்பதாக அரசர் அறிவித்தார்.

### விடுதலை அறிக்கை

1776 ஜனவரியில், தாமஸ் பெயின் என்ற அறிஞர் இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா வந்து தம்முடைய **"பொது அறிவு"** என்ற கட்டுரைக் குறிப்பை வெளியிட்டார். பரம்பரை முடியாட்சிக் கோட்பாட்டை அது எதிர்த்தது. மாறாக, மக்களாட்சி அரசின் நன்மைகளை அது எடுத்துரைத்தது. 50 பக்கங்கள் கொண்ட அந்தக் கையேடு ஒரு லட்சம் பிரதிநிதிகளுக்குமேல் அச்சிடப்பட்டு 13 குடியேற்றங்களிலும் விநியோகிக்கப்பட்டது. அமெரிக்கர்களிடையே போரிடும் உணர்வை தூண்டுவதாக அது அமைந்தது.



ஜார்ஜ் வாஷிங்டன்


1776 ஜூலை 4 ஆம் நாள் கண்ட மாநாட்டில் அமெரிக்க விடுதலை அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. தாமஸ் ஜெபர்சன் தலைமையிலான ஐந்துபேர் கொண்ட குழு அந்த அறிக்கையை தயாரித்தது. மனித உரிமையின் மாண்புகளை தாமஸ் ஜெபர்சன் அதில் குறிப்பிட்டிருந்தார். மனித குலத்திடமிருந்து பிரித்தெடுக்கமுடியாத மனித உரிமைகளான ''வாழ்வுரிமை சுதந்திர உரிமை மற்றும் மகிழ்ச்சியை நாடும் உரிமை'' ஆகியன விடுதலை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தன.

### முக்கிய போர் நிகழ்வுகள்

1775 ஆம் ஆண்டு போர் தொடங்கியது. மாசசூசெட்ஸ் குடியேற்றத்தில் லெக்சிங்டன் என்ற இடத்தில் குடியேற்ற படைகளுக்கும் பிரிட்டிஷ் வீரர்களுக்கும் இடையில் முதல் மோதல் நடைபெற்றது. அமெரிக்க குடியேற்றங்களின் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் படைத்தலைவராகப் பொறுப்பேற்றார். பங்கர் ஹில் போரில் பிரிட்டிஷ் படைத்தளபதி கேஜ் வெற்றி பெற்றார். 1776ல் சர் வில்லியம் ஹோ என்பவரது தலைமையிலான பிரிட்டிஷ் படை லாஸ் அய்லாந்து என்றவிடத்தில் வாஷிங்டனை முறியடித்தது. 1777 அக்டோபரில் தளபதி கேட்ஸ் தலைமையிலான அமெரிக்கப்படைகள் சாரடோகா என்றவிடத்தில் பிரிட்டிஷ் துருப்புக்களை தோற்கடித்தது. சாரடோகா வெற்றி போரின் திருப்புமுனையாக அமைந்தது. அமெரிக்கப் படைகளுக்கு உதவியாக லபாயத் தலைமையிலான பிரஞ்சுப் படைகளும் வந்தன. இறுதியில் 1781 ஆம் ஆண்டு யார்க்டவுன் என்ற இடத்தில் தளபதி காரன்வாலிஸ் தலைமையிலான பிரிட்டிஷ் படை வாஷிங்டனிடம் சரணடைந்தது. 1783 ஆம் ஆண்டு பாரிஸ் உடன்படிக்கைப்படி போர் முடிவுக்கு வந்தது.

### அமெரிக்க விடுதலைப்போரின் முக்கியத்துவம்

– அமெரிக்க குடியேற்றங்கள் விடுதலை அடைந்தன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசு ஏற்படுத்தபட்டது. எழுதப்பட்ட அரசியலமைப்புடன்கூடிய உலகின் முதலாவது ஜனநாயக அடிப்படையிலான அரசு என்ற கனவு நினைவாயிற்று. உரிமைகள் மசோதா அமெரிக்க குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்திரவாதமாக அமைந்தது.


நியூஹம்
ஸ்பெயர்
நியூயார்க்
மாசாசூசட்சு
கனக்டிக்கட்
ரோடு தீவு
பென்சில்வேனியா
திலாவாரே
மேரிலேண்டு
வெர்ஜீனியா
பதிமூன்று
அமெரிக்க
குடியேற்றங்கள்
வடக்கு
கரோலினா
தெற்கு
கரோலினா
ஜார்ஜியா
சார்லஸ்டன்

– பிரஞ்சுப்புரட்சிக்கு வித்திட காரணமாக இருந்தமையால் அமெரிக்க விடுதலைப்போர் அமெரிக்கப் புரட்சி எனவும் அழைக்கப்பட்டது. அது இங்கிலாந்துக்கு மட்டும் எதிரானப் போராக அமைந்துவிடாமல், செல்வாக்கு மிகுந்த பிற்போக்கு வாத சக்திகளுக்கு எதிரானப் போராகவும் அமைந்தது. குடியேற்ற ஆதிக்கத்திற்கு எதிரான போராகவும் இருந்தது.

– அமெரிக்க ஐக்கிய நாட்டில் புதியதொரு அரசியல், சமூக பொருளாதார அமைப்பு உருவாயிற்று. பிரஞ்சு சிந்தனையாளர் மான்டஸ்கியூவின் அதிகாரப்பிரிவினை கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக அரசு அங்கு அமைக்கப்பட்டது. முதலாளித்துவ பொருளாதார அமைப்பும் அங்கு நன்றாக வேரூன்றியது.

– இருப்பினும், மண்ணின் மைந்தர்களாகிய செவ்விந்தியர்கள் மற்றும் நீக்ரோக்களின் உரிமைகள் அக்காலத்தில் புறக்கணிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற அறிவு*

1. *அமெரிக்க விடுதலைப் போருக்கான அடிப்படை காரணங்கள்*
2. *கிரன்வெல் நடவடிக்கைகள், டவுண்ஷெண்ட் சட்டங்கள், பாஸ்டன் தேநீர் விருந்து உள்ளிட்ட போருக்கு இட்டுச்சென்ற நிகழ்வுகள்*
3. *அமெரிக்க விடுதலை அறிவிப்பும் அதன் சிறப்பும்*
4. *போரின் முக்கிய நிகழ்வுகள்*
5. *அமெரிக்க விடுதலைப்போரின் முக்கியத்துவம்.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 'பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியில்லை' என்ற முழக்கம் எந்த நாட்டில் நடைபெற்ற புரட்சியின்போது எழுப்பப்பட்டது ?

அ) பிரான்சு ஆ) சீனா

இ) அமெரிக்கா ஈ) ரஷ்யா

2. பொது அறிவு' என்னும் நூலின் ஆசிரியர்

அ) வால்டேர் ஆ) பெஞ்சமின் பிராங்க்ளின்

இ) தாமஸ் பெய்ன் ஈ) தாமஸ் ஜெபர்சன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. 1774ல் முதல் கண்ட மாநாடு நடைபெற்ற இடம் ______________

2. ஏழாண்டுப்போர் நிறைவடைந்த ஆண்டு ______________

3. அமெரிக்க விடுதலைப்போர்______________ உடன்படிக்கைப்படி முடிவுக்கு வந்தது

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | முத்திரைத்தாள் சட்டம் | அ. | 1764 |
| 2. | சர்க்கரைச் சட்டம் | ஆ. | 1765 |
| 3. | பாஸ்டன் தேநீர் விருந்து | இ. | 1767 |
| 4. | டவுன்ஷெண்ட் சட்டங்கள் | ஈ. | 1773 |

## IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது

அ. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அமெரிக்க குடியேற்றங்களின் நன்மைக்காக நாவாய்ச் சட்டங்களை இயற்றியது.

ஆ. படைவீரர் தங்குமிடச்சட்டம் ஆங்கிலேய சிப்பாய்களுக்கு கட்டாயமாக தங்குமிடத்தையும் உணவையும் அளிக்க வகை செய்தது.

இ. ஜார்ஜியா தவிர ஏனைய 12 குடியேற்றங்களும் இரண்டாவது கண்ட மாநாட்டில் கலந்து கொண்டன.

ஈ. 1774 ஜூலை 4 ஆம் நாள் கண்ட மாநாட்டில் அமெரிக்க விடுதலை அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா எனக் கூறுக.

1. சரடோகா வெற்றி அமெரிக்க சுதந்திரப் போரில் திருப்புமுனையாக அமைந்தது
2. 1781ல் ஆங்கிலேய துருப்புகளை தலைமைத் தாங்கிய தளபதி காரன்வாலிஸ் லெக்ஷிங்டென் எனுமிடத்தில் வாஷிங்டனிடம் சரணடைந்தார்.

## VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)

1. டவுன்ஷெண்ட் சட்டங்கள்
2. பாஸ்டன் தேநீர் விருந்து
3. முத்திரைத்தாள் சட்டம்

## VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)

1. அமெரிக்க விடுதலைப் போருக்கான அடிப்படைக் காரணங்களை ஆய்க.
2. பில டெல்பியா மாநாடுபற்றி குறிப்பு வரைக
3. அமெரிக்க விடுதலை அறிக்கையின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர்க.

## VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)

1. அமெரிக்க விடுதலைப் போருக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகளை ஆய்க.

# பாடம் – 25

# பிரஞ்சுப் புரட்சி (1789)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தைப் படிப்பதன் மூலம் மாணவர் அறியும் செய்திகள்*

1. *பிரஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள்.*
2. *பிரஞ்சு சிந்தனையாளர்களின் பங்கு*
3. *பாஸ்டில் சிறையின் வீழ்ச்சியும் புரட்சியின் தொடக்கமும்.*
4. *அரசியலமைப்புக் குழுவும் தேசிய பேரவையும்*
5. *'பயங்கர ஆட்சி'*
6. *புரட்சியின் முடிவு*

பிரஞ்சுப்புரட்சி ஐரோப்பிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்குவதாக அமைந்தது. மனிதகுல வரலாற்றிலும் அது ஒரு திருப்புனையாகும். பழமை வாய்ந்த எதேச்சாதிகார குடியாட்சி, நிலமானிய சட்டங்கள், சமூக அநீதி போன்றவற்றுக்கு அது முடிவுகட்டியது. **"சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம்"** ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையிலான குடியரசு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த கருத்துக்கள் ஐரோப்பா மற்றும் உலகையே தன்வயப்படுத்தியது.

### பிரஞ்சுப்புரட்சிக்கான காரணங்கள்

புரட்சி வெடிப்பதற்கு முன்பு பிரான்சில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகளே பிரஞ்சுப்புரட்சிக்கு வழிவகுத்தன.

### அரசியல் காரணங்கள்

பிரான்சு பூர்போன் வம்சத்தவரால் ஆளப்பட்டு வந்தது. அதன் அரசர்கள் தெய்வீக உரிமைக் கோட்டிபாட்டில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன்படி, அரசர்கள் கடவுளின் பிரதிநிதிகள், எனவே கடவுளுக்கு மட்டுமே பொறுப்பானர்வர்கள். பதினான்காம் லூயி பூர்போன் வம்சத்தின் வலிமையான ஆட்சியாளராகத் திகழ்ந்தார். அவர் செய்த போர்கள் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தன. அவரது வழித்தோன்றல்களான பதினைந்தாம் லூயி, பதினாறாம் லூயி ஆகியோர் ஆட்சித் திறமை குன்றியவர்களாக இருந்தனர்.



**16–ம் லூயி**

பதினைந்தாம் லூயி தமது ஆட்சியின் முடிவில் கூறிய வார்த்தைகள் "எனக்குப்பின் பிரளயம்" என்பதாகும். அவரது வார்த்தைகள் உண்மையாயின. பதினாறாம் லூயி மிகவும் திறமையற்ற ஆட்சியாளராக இருந்தார். அவரது துணைவியார் அரசிமேரி அண்டாய்னட் நிர்வாகத்தில் பெரிதும் தலையிட்டார். பிரஞ்சு மக்களின் துயரங்களைப் பற்றி சற்றும் அறியாதவராகவும் இருந்தார். ஆனால், பிரஞ்சு உயர்குடியினரின் நலன்களை பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார். உயர்குடியினர் மற்றும் குருமார்களின் நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு நீதித்துறை சீர்திருத்தங்களையும் அவர் அனுமதிக்கவில்லை.

**சமூகக் காரணங்கள்**

சமத்துவமின்மையின் அடையாளமாக பிரஞ்சு சமுதாயம் இருந்தது. பிரான்சில் உயர் குடியினர், குருமார்கள், பொதுமக்கள் என மூன்று சமுதாயப் பிரிவுகள் இருந்தன. உயர்குடியினருக்கு அரசியல் அதிகாரம் இல்லாவிட்டாலும் அரசரின் அடிவருடிகளாக அவர்கள் திகழ்ந்தனர். பல்வேறு சலுகைகளைப் பெற்று ஆடம்பரமான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்தனர். பிரான்சில் ஐந்தில் ஒரு பங்கு நிலம் அவர்களுக்கு சொந்தமானதாக இருந்தது. வரிவிதிப்புகளிலிருந்தும் அவர்கள் விலக்குப் பெற்றிருந்தனர். குருமார்களின் உயர்வர்க்கத்தினர் பிரான்சின் மூன்றில் ஒரு பகுதி நிலத்திற்கு உடைமையாளராக இருந்தனர். பிரான்சில் அவர்களது எண்ணிக்கை சுமார் 5000 ஆகும். அரண்மனை போன்ற வீடுகளில் அவர்கள் வசித்தனர். வரிகளிலிருந்தும் விலக்கு பெற்றிருந்தனர். ஆனால், குருமார்களில் கீழ்வர்க்கத்தினர் இத்தகைய சலுகைகளைப் பெற்றிருக்கவில்லை. எனவே, புரட்சியின் போது அவர்கள் உயர்வர்க்கத்தினருக்கு எதிராகத் திரும்பினர். மொத்தத்தில் சமுதாயத்தின் முதலிரண்டு பிரிவினரான உயர்குடியினரும், குருமார்களும் பொதுமக்கள் படும் துயரங்களைப் பொருட்படுத்தாது உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தனர்.

பிரான்சின் பெரும்பகுதி மக்கள் மூன்றாவது பிரிவில் இருந்தனர். வணிகர்கள், வழக்குரைஞர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், அரசு ஊழியர்கள், குடியானவர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகியோர் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள். உயர்குடியினரும் குருமார்களும் வரிவிலக்கு பெற்றுத் திகழ்ந்தபோது, பொது மக்களாகிய இவர்கள் அனைத்துவித வரிகளையும் செலுத்தி வந்தனர். ‘பிரபுக்கள் சண்டையிடுவர், குருமார்கள் தொழுவர், மக்கள் அனைத்து வரிகளையும் செலுத்துவர்’’ என்பதே பொதுவான வழக்காக இருந்தது. **டெய்ல்** எனப்பட்ட நிலவரியை குடியானவர்கள் செலுத்தவேண்டும். **கேபேல்** என்ற உப்பு வரி பொதுமக்களின் பெரும் சுமையாகும். குடும்பத்தலைவர் ஒவ்வொருவரும் தலைவரி செலுத்தவேண்டும். இத்தனைவித வரிகளையும் அரசனுக்கு செலுத்தும் அதே நேரத்தில் திருச்சபைக்கு **டைத்** என்ற வரியையும் மக்கள் செலுத்தினர். பிறரைவிட குடியானவர்களின் சுமை அதிகமாகவே இருந்தது. ஏனென்றால், அவர்கள் உயர்குடியினருக்கு சில கடமைகளை ஆற்றவேண்டியிருந்தது. பண்ணையிலிருந்து மாவு அரைக்கும், மதுபானம் தயாரிக்கும் ஆலைகளை அதற்கேற்ற கட்டணத்தை செலுத்திவிட்டு கட்டாயமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வேறு பல நிலமானிய சேவைகளையும் குடியானவர்கள் உயர்குடியினருக்கு ஆற்றிவந்தனர்.

**பொருளாதார காரணங்கள்**



ஜாகஸ் நெக்கர்

பதினாறாம் லூயி ஆட்சிக்காலத்தில் பிரான்சின் நிதிநிலைமை மோசமாகியது. நாட்டுக் கடன் எல்லைமீறிச் சென்றது. தேசிய வருமானம் செலவைவிட மிகக் குறைவாகவே இருந்தது. எனவே அரசாங்கத்தின் பதவிகளைப் பணத்துக்கு விற்று நிதியைத்திரட்ட அரசர் முற்பட்டார். இறுதியில், டர்காட், ஜேக்கஸ் நெக்கர் போன்ற நிதித்துறை வல்லுனர்களை நிதியமைச்சர்களாகவும் அவர் நியமித்தார். அவர்கள் அரசின் செலவுகளைக் குறைத்து அரசாங்கத்தின் வருவாயைப் பெருக்க முற்பட்டனர்.

ஆனால், அவர்களது நடவடிக்கைகளை உயர்குடியினர் ஆதரிக்கவில்லை. உயர்குடியினரின் ஆலோசனையைக் கேட்டு அரசி மேரி அண்டாய்ன்ட் இருவரையும் பதவி


நீக்கம் செய்தார். பின்னர், நிதிநெருக்கடியை சமாளிக்க கலோன் என்பவர் நியமிக்கப்பட்டார். புதிய வரிகளை விதிப்பதைத் தவிர வேறெந்த வழியும் அவருக்கு புலப்படவில்லை. எனவே, பதினாறாம் லூயி கிட்டத்தட்ட 175 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு மே 5, 1789ல் ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டியதாயிற்று.

**பிரஞ்சு சிந்தனையாளர்கள்**



மாண்டஸ் கியூ

பிரஞ்சு சிந்தனையாளர்களின் எழுத்துக்களும் பிரச்சாரமும் பொது மக்களை புரட்சிக்கு தயார் படுத்தியது எனலாம். அவர்களில் மாண்டஸ்கியூ, வால்டேர், ரூசோ ஆகிய மூவரும் குறிப்பிடத்தககவர்கள். மாண்டஸ்கியூ தனது **‘சட்டத்தின் சாரம்’** என்ற நூலில் அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் தேவையை வலியுறுத்தினார். மக்களாட்சி முறை செம்மையாக செயல்படுவதற்கு, நிர்வாகம், சட்டமியற்றுதல், நீதி வழங்குதல் ஆகிய மூன்று அதிகாரங்களும் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துக் கூறினார். மூடப்பழக்கங்கள் பரம்பரை நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு எதிராக வால்டேர் ஒரு நீண்ட போராட்டத்தையே தொடங்கினார். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பல்வேறு கட்டுரைகள், கவிதைகள், நாடகங்களை அவர் எழுதினார். பகுத்தறிவின் சிறப்பை அவர் ஆதரித்தார். திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களை அவர் கேலி செய்தார். வரம்புக்குட்பட்ட முடியாட்சி முறையே சிறந்தது என்றும் வால்டேர் கூறினார். பிரஞ்சுப்புரட்சியின் ‘பைபிள்’ என்றழைக்கப்பட்ட ‘சமூக ஒப்பந்தம்’ என்ற புகழ்மிக்க நூலின் ஆசிரியர் ரூசோ.



வால்டேர்

அரசின் உண்மையான இறைமையதிகாரம் மக்களிடமே பொதிந்துள்ளது என்று ரூசோ கூறினார். ‘‘மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான் ஆனால் பின்னர் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு விடுகிறான்’’ என்ற அவரது புகழ்மிக்க வாசகம் மக்களிடையே புரட்சியுணர்வைத் தூண்டியது. தீதரோ, டி ஆலம்பர்ட் ஆகியோர் ‘என் சைக்ளோபீடியா’ அல்லது கலைக் களஞ்சியத்தை வெளியிட்டனர். அதில் புரட்சி சிந்தனையாளர்கள் எழுதிய பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. சிந்தனையாளர்களின் புரட்சிக் கருத்துக்கள் பிரான்ஸ் முழுவதும் பரவி மக்களிடையே புரட்சியுணர்வை தோற்றுவித்தன. ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’ என்ற முழக்கத்தை சிந்தனையாளர்களே உருவாக்கினர். 1789 புரட்சியின்போது இவையே தாரகமந்திரங்களாக விளங்கின.



ரூசோ

**அமெரிக்க விடுதலைப் போரின் தாக்கம்**

இங்கிலாந்தின் கட்டுப்பாட்டிலிருந்து அமெரிக்காவிலிருந்த 13 குடியேற்றங்கள் விடுதலைபெற்றது பிரான்சு மக்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. லபாயத் தலைமையிலான பிரஞ்சுப்படைகள் குடியேற்றங்களுக்கு ஆதரவாகப் போரிட்டு அமெரிக்காவிலிருந்து அப்போதுதான் திரும்பியிருந்தன. அவர்களது அமெரிக்க அனுபவங்கள், மக்களாட்சியின் வெற்றி ஆகியன பிரஞ்சு மக்களிடையே உற்சாகத்தை தூண்டின. எனவே, பூர்போன் வம்ச கொடுங்கோலாட்சிக்கு முடிவுகட்ட பிரஞ்சு மக்கள் முடிவு செய்தனர்.

### ஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டப்படுதல்

பிரஞ்சுக் கருவூலம் காலியானதே பிரஞ்சுப் புரட்சியின் தொடக்கத்திற்கு காரணமாக அமைந்தது.பதினாறாம் லூயி கடுமையான நிதிநெருக்கடிக்கு ஆளானார். புதிய வரிகளை விதிப்பதைத்தவிர அவருக்கு வேறு வழி ஏதும் புலப்படவில்லை. எனவே 1789, மே 5 ஆம் நாள் பதினாறாம் லூயி ஸ்டேட்ஸ் ஜெனரலின் கூட்டத்தை கூட்டினார். மக்கள்மீது விதிக்கப்படவிருந்த புதிய வரிகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காகவே ஸ்டேட்ஸ் ஜெனரல் கூட்டம் கூட்டப்பட்டது. நெக்கர் மீண்டும் நிதியமைச்சராக்கப்பட்டார்.

### தேசிய மன்றம்

ஸ்டேட்ஸ் ஜெனரல் மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். முதலாவது பிரிவில் உயர்குடியினரும், இரண்டாவது பிரிவில் குருமார்களும் மூன்றாவது பிரிவில் பொதுமக்கள் பிரதிநிதிகளும் இடம்பெற்றிருந்தனர். அரசர் கூட்டத்தை கூட்டியவுடன் மூன்று பிரிவுகளும் வழக்கம் போல் தனித் தனியே அமர்ந்தன. ஆனால், மூன்றாவது பிரிவினர் கூட்டுக் கூட்டம் நடைபெறவேண்டும் என்றும் ஒருவருக்கு ஒருவாக்கு என்ற முறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இதற்கு முதலிரண்டு பிரிவினரும் உடன்படாததால் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டது. 1789 ஜுன் 17 ஆம் நாள் மூன்றாவது பிரிவினர் தங்களை தேசிய மன்றமாக அறிவித்துக்கொண்டனர். அதிர்ச்சிக்குள்ளான அரசர் அவர்களை அவைக்குள் நுழையவிடாமல் தடுத்தார். ஆனால் தேசிய மன்ற உறுப்பினர்கள் அருகிலிருந்த டென்னிஸ் மைதானத்திற்கு சென்று புதிய அரசியலமைப்பை வரைவது என உறுதி எடுத்துக் கொண்டனர். இதுவே '**டென்னிஸ் மைதான உறுதிமொழி**' எனப்படுகிறது.


**டென்னிஸ் மைதான உறுதிமொழி**

1789 ஜுன் 23 ஆம் நாள் ஸ்டேட்ஸ் ஜெனரலின் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டது. மூன்றாவது பிரிவினரின் நடவடிக்கை சட்டத்துக்கு புறம்பானது என பதினாறாம் லூயி அறிவித்தார். மூன்று பிரிவினரும் தனித்தனியாக கூடவேண்டும் என்றும் அவர் ஆணையிட்டார். மூன்றாவது பிரிவினர் அரசரது ஆணையை எதிர்த்தனர். எனவே, வேறு வழியின்றி பதினாறாம் லூயி மக்களின் பிரதிநிதியாகக் திகழ்ந்த மூன்றாவது பிரிவினரின் விருப்பத்துக்கு கட்டுப்பட்டார். மூன்று பிரிவுகளும் கூட்டாக அமரும்படி அவர் கேட்டுக் கொண்டார். இதனால், தேசிய மன்றம் முழுமையடைந்தது.

### பாஸ்டில் சிறை தகர்ப்பு

தேசிய மன்றத்தை அரசர் அங்கீகரித்த போதிலும், அதனை ஒழித்துக்கட்ட அவர் முடிவு செய்தார். ஏராளமான வீரர்கள் பாரிசிலும், வெர்சாய் நகரிலும் குவிக்கப்பட்டனர். நிதியமைச்சர் நெக்கர் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதைக் கேட்ட பாரிஸ் நகர மக்கள் வன்முறையில் இறங்கினர். அரசாங்கத்தின் சிறையான பாஸ்டில் சிறையைத்தாக்கிய அவர்கள், பாதுகாவலர்களைக் கொன்று கைதிகளை


**பாஸ்டில் சிறைதகர்ப்பு**

விடுவித்தனர். பாஸ்டில் சிறை தகர்ப்பு சுதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியாக பிரான்சு முழுவதும் கருதப்பட்டது. பாஸ்டில் சிறை வீழ்ச்சிக்குப்பின், குடியானவர்கள் உயர்குடியினருக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். செல்வந்தர்களுக்கெதிராக பிரான்சு முழுவதும் கலவரம் வெடித்தது. உயர்குடியினர் தாக்கப்பட்டனர். அவர்களது மாளிகைகள் உடைத்தெறியப்பட்டன. நிலமானிய ஆவணங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. 1789 ஆகஸ்ட் 4 ஆம் நாள் உயர்குடியினர் நிலமானிய முறைப்படி பெற்றிருந்த உரிமைகளையும் சலுகைகளையும் குடியானவரிடமே ஒப்படைத்தனர். சமத்துவக் கொள்கை நிலைநாட்டப்பட்டது. வர்க்கபேதம் உடைத்தெறியப்பட்டது. இதற்கிடையே பாரிஸ் நகரில் ரொட்டிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. அக்டோபர் 5 ஆம் நாள் ஏராளாமான பெண்கள் ஊர்வலமாக அணிவகுத்து வெர்சாய் அரச மாளிகைக்கு சென்று விண்ணப்பம் அளித்தனர். அரசியின் பதில் திருப்தி அளிக்காததால், அரசன், அரசி அவர்களது குழந்தை ஆகியோரை பாரிஸ் நகருக்கே அழைத்து வந்தனர்.

**தேசிய மன்றத்தின் பணிகள் (1789 – 1791)**

தேசிய மன்றம் தம்மை அரசியலைப்புக்குழுவாக மாற்றிக்கொண்டு, '**மனித உரிமைகள் அறிவிப்பை**' வரைந்து வெளியிட்டது. புதிய அரசியமைப்பு ஒன்றையும் தயாரித்தது. அதன்படி பிரான்சில் வரம்புக்குட்பட்ட முடியாட்சி ஏற்படுத்தப்பட்டது. உயர்குடியினரின் பட்டங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட்டன. நீதித்துறை சீரமைக்கப்பட்டது. சித்ரவதை முறை ஒழிக்கப்பட்டது. புதிதாக மத்திய உள்ளாட்சி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருச்சபைக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மடாலயங்கள் ஒடுக்கப்பட்டன. சமய சகிப்புத்தன்மை தீவிரமாக கடைப்பிடிக்கப்பட்டது. திருச்சபை வசூலித்துவந்த டைத் வரிகள் ஒழிக்கப்பட்டன. திருச்சபை, சொத்துக்களை தேசிய மயமாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய அரசிலமைப்பை எழுதியவுடன் தேசிய மன்றம் 1791ல் தாமாகவே கலைந்தது.

**அரசியல் குழுக்கள்**

பிரான்சின் பல்வேறு அரசியல் குழுக்கள் தோன்றின. அவற்றில் ஜாகோபியன் குழு, கார்டீலியர் குழு ஆகியன குறிப்பிடத்தக்கவை. ஜாகோபியர்களுக்கு ரோபஸ்பியர் தலைமை வகித்தார். இவர் ஒரு புரட்சிக்கர ஜனநாயகவாதியாவார். கார்டீலியர் குழுவிற்கு டான்டன் தலைமையேற்றார். படித்த இளைஞர்களின் இயக்கமாக கிராண்டியர்கள் திகழ்ந்தனர். குடியரசுத் தன்மையிலான அரசாங்கம் அமைய வேண்டும் என இவர்கள் பாடுபட்டனர். ரோலண்ட் அம்மையார் கிராண்டியர்களில் குறிப்பிடத்தக்கவர்.



டான்டன்



ரோபஸ்பியர்

**சட்டமன்றம்**

புதிய அரசியலமைப்பின்படி, 1791ல் சட்டமன்றம் கூடியது. புரட்சி வெடித்தபோது பல்வேறு உயர்குடியினர் பிரான்சைவிட்டு தப்பியோடினர். அவர்கள் பிரஞ்சுப் புரட்சிக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டு, பிற நாடுகளின் ஆதரவைத் திரட்டத்தொடங்கினர். ஆஸ்திரியா, பிரஷ்யா போன்ற நாடுகள் அவர்களது உதவிக்கு வந்தன. இத்தகைய உயர்குடியினருக்கு எதிராக சட்டமன்றம் சில சட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்றியது. ஆனால் அரசர் அவற்றுக்கு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டார்.

1791 ஆகஸ்ட் 27 ஆம் நாள் ஆஸ்திரிய அரசர் லியோபோல்டு புரட்சியாளர்களுக்கெதிரான புகழ்பெற்ற பில்னிட்ஸ் அறிக்கையை வெளியிட்டார். இதனால் 1792 ஆம் ஆண்டு புரட்சியாளர்களுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையில் போர்மூண்டது. புரட்சிப்படைகள் தோல்வியடைந்தன. இதனால் வெகுண்டெழுந்த புரட்சியாளர்கள் பிரஞ்சு அரசருக்கு எதிராகத் திரும்பினர். 1792 ஆகஸ்ட் 10 ஆம் நாள் டியூலரிஸ் நகரிலிருந்த அரசரது மாளிகை தாக்கப்பட்டது. அரசர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். வேறு புதிய அரசியலமைப்பை எழுதுவதற்காக தேசியப் பேரவை அமைப்பதற்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து **“செப்டம்பர் படுகொலைகள்”** நடைபெற்றன. பாரிஸ் நகரிலிருந்த டான்டன் தலைமையிலான புரட்சி அரசாங்கம், பிரஞ்சு அரசரின் ஆதரவாளர்கள் என்று சந்தேகத்தின் பேரில் 1500 பேரை கொன்று குவித்தார். பின்னர், பிரெஞ்சுப் படைகள் ஆஸ்திரியப் படைகளை வால்மி என்ற இடத்தில் முறியடித்தன.

### தேசிய பேரவை (1792 – 1795)

சட்டமன்றம் கலைக்கப்பட்டபிறகு, 1792 ஆம் ஆண்டு **‘தேசியப் பேரவை’** கூடியது. பிரான்சில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது. பதவி நீக்கம் செய்யப்பட்ட பதினாறாம் லூயி மன்னர்மீது விசாரணை நடத்தப்பட்டு அவர்மீதான குற்றம் ஒருமனதாக நிரூபிக்கப்பட்டது. சிறிய அளவிலான வாக்கு வித்தியாசத்தில் அவரது மரணதண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. 1793 ஜனவரி 21 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை கில்லடின் மூலமாக அவரது தலை துண்டிக்கப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு அரசி மேரி அண்டாய்னட்டும் கில்லடினுக்கு இரையானார்.

### பயங்கர ஆட்சி

மன்னரை சிரச்சேதம் செய்வது தொடர்பாக தேசியப் பேரவையில் கருத்து வேறுபாடு தோன்றியது. பேரவையில் பெரும்பான்மை பலம் பெற்றிருந்த ஜாக்கோபியர்களின் கருத்தை மிதவாதிகள் ஏற்கவில்லை. எனவே, மிதவாதிகளைப் பழிவாங்குவதற்காக ஜாகோபியர்கள் புரட்சி விசாரணை மன்றத்தை தோற்றுவித்தனர். இதுவே பயங்கர ஆட்சியின் தொடக்கமாகும். புரட்சியின் இறுதிக் கட்டமாகவும் இருண்ட கட்டமாகவும் இது அமைந்தது. லயன்ஸ், மார்செல்ஸ் போன்ற நகரங்களில் கலவரங்கள் வெடித்தன. 1793ல் புரட்சி அரசாங்கத்திற்கெதிராக ஐரோப்பிய நாடுகள் முதலாவது கூட்டணியை அமைத்தன.

ஜாக்கோபியர்கள் அரசியலமைப்பை ரத்து செய்து விட்டு, நிலைமையை சமாளிப்பதற்கென பொது மக்கள் பாதுகாப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தினர். இக்குழுவின் தலைவராக ரோபஸ்பியர் விளங்கினார். நாட்டிற்குள் எஞ்சியிருந்த அரசரின் ஆதரவாளாகளின் கிளர்ச்சிகளை இது நசுக்கியது. அரசரின் ஆதரவாளர்கள் என சந்தேகத்தின்பேரில் பலர் கொல்லப்பட்டனர். பிரான்சின் சர்வாதிகாரியாகவே ரோபஸ்பியர் மாறி விட்டிருந்தார். ஆனால், அவரது எதிரிகளால் 1794ல் கில்லட்டினுக்கு இரையாக்கப்பட்டார்.

### புரட்சியின் முடிவு

ரோபஸ்பியரின் வீழ்ச்சியோடு பயங்கர ஆட்சி முடிவுக்கு வந்தது. பொதுமக்களின் கருத்தும் பயங்கர ஆட்சிக்கு எதிராகத் திரும்பியது. புரட்சி விசாரணை மன்றமும் கலைக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்புக்குழுவின் பணிகளும் வரையறுக்கப்பட்டன. ஜாகோபியக்குழு மூடப்பட்டது. நீண்டகாலமாக கிடப்பில் போடப்பட்டிருந்த அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் தேசியப் பேரவை கவனம் செலுத்தியது. நிர்வாகம் 5 பேர் கொண்ட

ஒரு இயக்குநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. சட்டம் மற்றும் அதிகாரம் ஈரவை சட்டமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இதில் 500 பேர் அடங்கிய சபையும். மூத்தோர் சபையும் இருந்தன. அப்போது பாரிஸ் நகரில் இருந்த நெப்போலியனிடம் தேசியப் பேரவையைப் பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. பாரிஸின் புரட்சிக்கூட்டத்தை கலைத்து விரட்டிய நெப்போலியன் பேரவையைக் காப்பாற்றினார். அதுவே அவரது ஆற்றல்மிக்க வாழ்வின் தொடக்கமாகும். 1795 அக்டோபர் 26 ஆம் நாள் தேசிய பேரவை கலைந்தது. பிரஞ்சு அரசாங்கம் இயக்குநர்களின் கட்டுப்பாட்டில் வந்தது.


**நெப்போலியன்**

**புரட்சியின் விளைவுகள்**

1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சி மனித குல வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை தொடங்கி வைத்தது. **சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்** ஆகிய கருத்துக்கள் உலகம் முழுவதும் பரவின. பூர்போன் முடியாட்சி ஒழிக்கப்பட்டது. கொடுங்கோன்மை, தெய்வீக இறைமை, பிற்போக்குவாதம், நிலமானிய அமைப்பு போன்றவற்றுக்கு இப்புரட்சி முடிவு கட்டியது. அதே சமயம், இது பிரான்சில் ஒரு நிலையான குடியரசை ஏற்படுத்த தவறியது. பிரஞ்சுப் புரட்சி வன்முறைக்குத் திரும்பி இறுதியில் நெப்போலியனின் சர்வாதிகார ஆட்சிக்கு வித்திட்டது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெற்ற அறிவு*

1. *பிரஞ்சுப் புரட்சிக்கான அரசியல், சமூக பொருளாதார காரணங்கள்*
2. *வால்டேர், ரூசோ, மான்டஸ்கியூ போன்ற பிரஞ்சு சிந்தனையாளர்களின் பங்கு*
3. *பாஸ்டில் சிறையின் வீழ்ச்சியும் புரட்சியின் தொடக்கமும்.*
4. *அரசியலமைப்புக் குழுவும் புதிய அரசியலமைப்பும்*
5. *தேசியப் பேரவையின் நடிவடிக்கைகள்*
6. *ரோபஸ்பியரின்கீழ் பயங்கர ஆட்சி.*
7. *புரட்சியின் முடிவும் விளைவுகளும்.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. 1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சியின்போது பிரான்சின் மன்னர்

அ) பன்னிரெண்டாம் லூயி ஆ) பதினான்காம் லூயி

இ) பதினெட்டாம் லூயி ஈ) பதினாறாம் லூயி

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. 'சமூக ஒப்பந்தம்' என்ற நூலின் ஆசிரியர் ______________

2. ஸ்டேட்ஸ் ஜெனரலின் முதலாவது பிரிவு ______________ பிரதிநிதிகளைக் கொண்டது.

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கலைக்களஞ்சியம் | அ. | டான்டன் |
| 2. | செப்டம்பர் படுகொலைகள் | ஆ. | டி ஆலம்பர்ட் |
| 3. | பயங்கர ஆட்சி | இ. | மான்டஸ் கியூ |
| 4. | சட்டத்தின் சாரம் | ஈ. | ரோபஸ்பியர் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. அரசர் பதினாறாம் லூயி மானிட உரிமைகள் பிரகடனத்தை வெளியிட்டார்.

ஆ. கார்டிலியர் குழுவின் மிக முக்கிய உறுப்பினர் மேடம் ரோலண்ட் ஆவார்.

இ. புகழ் மிக்க பிளின்ட் பிரகடனத்தை பிரஷ்ய அரசர் லியோபோல்டு வெளியிட்டார்.

ஈ. ஜேக்கோபியன்கள் அரசியல் சட்டத்தை தள்ளி வைத்து விட்டு மக்கள் நலக்குழுவை அமைத்தனர்.

**V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா என கூறுக.**

1. மேரி அன்டாய்னட் பதினாறாம் லூயியின் அரசி மற்றும் மனைவியாவார்.

2. அதிகாரப் பிரிவினைக் கருத்தை மாண்டஸ்கியூ கூறினார்.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. தேசியப் பேரவை

2. ரூசோ

3. பயங்கர ஆட்சி

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. பிரஞ்சுப் புரட்சிக்கு பிரான்சு சிந்தனையாளர்களின் பங்களிப்பை ஆய்க.

2. பிரஞ்சுப் புரட்சியின் விளைவுகள் பற்றி குறிப்பு எழுதுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. 1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

2. 1789 ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சியின் போக்கை விவரி.

# பாடம் – 26

## வேளாண்மைப்புரட்சியும், தொழிற்புரட்சியும்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப்பாடத்தைப் படிப்பதன்மூலம் மாணவர் அறிந்து கொள்வது*

1. *வேளாண்மைப் புரட்சியின்போக்கு.*
2. *தொழிற்புரட்சியின் காரணங்கள்*
3. *தொழில் உற்பத்தியில் அறிவியல் கண்டுபிடிப்புகளின் பங்கு.*
4. *தொழிற்புரட்சியின் நன்மை மற்றும் தீமைகள்*

**வேளாண்மைப் புரட்சி**

17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் வேளாண்மை முறையில் ஏற்பட்ட பெரும் மாறுதல்களே வேளாண்மைப் புரட்சி எனப்படுகிறது. வேளாண் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பெருக்கம் காணப்பட்டது. பெருகி வந்த மக்கள் தொகையின் தேவையை அது நிறைவு செய்தது. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கு முன்னோடியாக வேளாண்மைப்புரட்சி திகழ்ந்தது. வேளாண்மைப் புரட்சியின்போது வேளாண் முறையில் நான்கு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. நிலங்களுக்கு வேலியமைத்தல், சாகுபடிக்கு இயந்திரங்களைப் பயன்படுத்துதல், பயிற்சுழற்சிமுறை மற்றும் வளர்ப்பு பிராணிகளின் தேர்ந்தெடுத்த பெருக்கம் என்பவையே அந்த நான்கு முக்கிய மாற்றங்களாகும்.

வேளாண்மைப் புரட்சிக்கு முன்பு ஐரோப்பா முழுவதும் இடைக்காலத்தில் நிலவிய வேளாண்முறையே தொடர்ந்து நீடித்தது. திறந்த வயல்வெளி முறை என்பது நிலமானிய அமைப்பின் தன்மையையே கொண்டிருந்தது. பொதுவான நிலத்தில் குடியானவர்கள் சாகுபடி செய்து விளைச்சலை தங்களுக்குள் பிரித்து எடுத்துக் கொண்டனர்.

12 ஆம் நூற்றாண்டிலிருந்தே பிரிட்டனில் பொது நிலங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு வேலியிடப்பட்டன. இந்த வேலியிடும் முறை 15 மற்றும் 16 ஆம் நூற்றாண்டுகளில் வேகமாகப் பரவியது. செம்மறியாடுகளின் வளர்ப்பு லாபகரமானதாக விளங்கியதால் வேலியிடும் முறை வேகமாகப் பின்பற்றப்பட்டது. இதனால், பல குடியானவர்கள் வேலையிழந்தனர். 16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் திருச்சபை வேலியிடும் முறையை கண்டித்தது. அதைத் தடுக்க சட்டங்களும் இயற்றப்பட்டன. இருப்பினும், 18 ஆம் நூற்றாண்டில் வேளாண்மையில் இயந்திரங்களின் பயன்பாடு அதிகரித்தமையால், வேலியிடப்பட்ட நிலங்களின் தேவை பெருகியது. இதற்காக அரசு பல சட்டங்களை இயற்றத் தொடங்கியது 1801 ஆம் ஆண்டு பொது வேலியிடும் சட்டம் இயற்றப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வேலியிடும் பணி நிறைவடைந்தது.

இக்காலத்தில் சாகுபடிமுறையில் பல பரிசோதனைகள் நடத்தப்பட்டன. விதைப்பதற்கும் அறுவடை செய்வதற்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. டவுண்ஷெண்ட் என்பவரால் பயிர்சுழற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் நிலங்களின் வளம் அதிகரித்தது.

பண்ணை விலங்குகளின் உற்பத்தியில் நவீன அறிவியல் முறையை பிளாக்வெல் என்பவர் கொண்டுவந்தார். குதிரையால் இழுக்கப்பட்ட கலப்பைகள், சமன்படுத்தும் கருவிகள், இடத்துக்கு இடம் மாற்றி எடுத்துச் செல்லக்கூடிய கதிரடிக்கும் இயந்திரம் உரம் தெளிக்கும் இயந்திரம், பல கலப்பைகளைக் கொண்ட இயந்திரம், பால் உற்பத்திக்கான இயந்திரங்கள் போன்றவற்றின் பயன்பாட்டினால் வேளாண் உற்பத்தி முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதனால் உணவு உற்பத்தி அதிகரித்தது. பிற வேளாண் பொருட்களின் உற்பத்தியும் பெருகியது.

**தொழிற்புரட்சி**

பிரான்சைச் சேர்ந்த ஜார்ஜ் மிஷ்லெட் மற்றும் ஜெர்மெனியின் பிரடரிக் ஏங்கல்ஸ் ஆகிய ஐரோப்பிய அறிஞர்கள் 'தொழிற்புரட்சி' என்ற சொல்லை பயன்படுத்தினர். 1764 முதல் 1820 வரை இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியைக் குறிப்பிடுவதற்காக இந்த சொல் பயன்படுத்தப்பட்டது. இங்கிலாந்தில் தொழிற்புரட்சி பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது. பின்னர் ஐரோப்பாவின் பிற பகுதிகளிலும், அமெரிக்காவிலும் அதேபோன்ற மாற்றங்கள் ஏற்பட்டன. இந்த நாடுகள் மற்றும் உலகின் இதர பகுதிகளிலும் கூட தொழிற்புரட்சி சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இக்காலத்தில் இங்கிலாந்தில் தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களில் புதிய வகை இயந்திரங்களுக்கும் தொழில்நுட்பங்களுக்கும் பெரும்பங்கு உண்டு. கைத்தொழில் மற்றும் கைத்தறித் தொழில்களுடன் ஒப்பிடும்போது பெருமளவு உற்பத்திக்கு இவை சாத்தியமாக இருந்தன. துணி மற்றும் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பிரிட்டனின் தொழிற்சாலைகளில் நீராவியால் இயங்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. நீராவி சக்தியைப் பயன்படுத்தி கப்பல்களும் ரயில்களும் விரைவாக இயக்கப்பட்டன. தொழிற்புரட்சியில் ஒருசிலர் நன்மையடைந்த போதிலும், தொடக்க காலங்களில் மகளிரும், குழந்தைகளும் மோசமான வாழ்க்கை மற்றும் பணி நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் எதிர்ப்புகள் தோன்றி, தொழிலாளர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கென அரசாங்கம் சட்டங்களை இயற்ற வேண்டியதாயிற்று.

**தொழிற்புரட்சிக்கான காரணங்கள்**

- இங்கிலாந்தின் சாதகமான புவியியல் அமைப்பு
- வேளாண்மை புரட்சியின் தாக்கம்
- புதிய கண்டுபிடிப்புகளும், இயந்திரங்களின் அறிமுகமும்
- தொழில் முனைவோர்களிடம் காணப்பட்ட ஆர்வம்
- இங்கிலாந்தில் ஏற்பட்ட முதலீட்டு வளர்ச்சி
- இங்கிலாந்திடம் இருந்த குடியேற்றங்கள் கச்சாப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், உற்பத்திப் பொருட்களுக்கு சந்தையாகவும் இருந்தன.

**அறிவியல் கண்டுபிடிப்புகள்**

**ஜவுளித் தொழில்**

தொழிற்புரட்சிக்கு அறிவியல் கண்டுபிடிப்புகளே அடிப்படையாக அமைந்தன. ஆரம்பகால இயந்திர கண்டுபிடிப்புகள் ஜவுளித் தொழில் சார்ந்தவையாக இருந்தன.

1733ல் ஜான்கே என்பவர் கண்டுபிடித்த எறிநாடா நெசவுத் தொழிலை மேம்படுத்தியது. 1764ல் ஹர்கிரீவ்ஸ் என்பவர் நூற்கும் ஜென்னியை கண்டுபிடித்தார். ஒரே சமயத்தில் எட்டு இழைகளை நூற்கக்கூடியதாக இது விளங்கியது. 1769ல் ஆர்க்ரைட் என்பவர் நூற்கும் ஜென்னியில் மேலும் மாறுதல்களை செய்தார். 1779ல் கிராம்டன் மேலும் அதனை ஆற்றல்மிக்கதாக மாற்றினார். 1785ல் கார்ட்ரைட் என்பவர் விசைத்தறியை கண்டுபிடித்தார். அமெரிக்கரான எலிவிட்னே பருத்தியிலிருந்து வேகமாக விதைகளைப் பிரித்தெடுக்கும் கருவியைக் கண்டுபிடித்தார். 1846ல் எலியாஸ் ஹோவே என்பவரின் படைப்பான தையல் இயந்திரம் ஆடை உற்பத்தியை விரைவு படுத்தியது. இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்த்தப்பட்ட கண்டுபிடிப்புகளால் ஜவுளித் தொழில் மட்டுமல்லாமல் பிற தொழில்களும் வேகமாக முன்னேறின. தற்காலத்தில் காணப்படும் சிக்கல்மிகு இயந்திரங்களும் இவ்வாறு தான் பரிணாம வளர்ச்சி பெற்றன.

**நீராவி இயந்திரம்**

கனரக இயந்திரங்கள் எரிசக்தியின்றி இயங்கமுடியாது. இதற்குத் தீர்வாகத்தான் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. 1765ல் ஜேம்ஸ் வாட் நீராவி சக்தியை இயந்திரங்களுக்கு பொருத்திப் பார்த்தார். முன்னும் பின்னும் இயக்குகிற பிஸ்டன் பொருத்திய நீராவி இயந்திரம் அவரால் உருவாக்கப்பட்டது. தொடக்கத்தில் ஜவுளித் துறையில் நீராவி இயந்திரம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது.




**ஜேம்ஸ் வாட்**

**போக்குவரத்து வளர்ச்சி**


தொழில்துறையின் வளர்ச்சிக்கும் போக்குவரத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. கச்சாப்பொருட்களை தொழில்சாலைகளுக்கு கொண்டுவரவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து இன்றியமையாததாகும். 17 ஆம் நூற்றாண்டுவரை கூட பெருவழிச்சாலைகள் மோசமாகவே காணப்பட்டன. குதிரை பூட்டிய வாகனங்கள் மட்டுமே சாலைகளில் ஓரளவு வேகமாக செல்லக்கூடியதாக இருந்தன. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஜான் மெக்காடம் (1756 – 1836) என்பவர் கெட்டியான மேற்பரப்பு கொண்ட சாலையை அமைத்தார். சேற்றுக்குப்பதிலாக தார்க்கலவை கொண்ட கற்கள் இதற்கு பயன்படுத்தப்பட்டன. இங்கிலாந்தின் இந்த வழிமுறையை பிரான்சும் பின்பற்றியது. அரசின் ஆதரவுடன் பல பெருவழித்தடங்கள் அமைக்கப்பட்டன.

பெருவழித்தடங்களை அமைப்பதற்கும் பராமரிக்கவும் பெரும் செலவு பிடித்தது. இது உள்நாட்டு நீர் வழிப்போக்குவரத்து வளர்ச்சிக்கு வித்திட்டது. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரையில் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் ஆயிரக் கணக்கான மைல்கள் தூரத்திற்கு செயற்கையான கால்வாய்கள் அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டன. 1761ல் இங்கிலாந்தின் வொர்ஸ்லி என்ற இடத்திலிருந்து மான்செஸ்டர் வரை வெட்டப்பட்ட கால்வாய், நிலக்கரியை சுரங்கத்திலிருந்து எரிஉலைக்குக் கொண்டு செல்ல பயன்பட்டது.



**ஜார்ஜ் ஸ்டீவன்சனின் ரயில் இயந்திரம்**

நதி மற்றும் கால்வாய் போக்குவரத்திலும் பெரும்குறைகள் காணப்பட்டன. பயணம் மெதுவாக இருந்ததோடு பராமரிப்பு செலவும் அதிகமாக இருந்தது. புவியியல் காரணங்களால் குறிப்பிட்ட பகுதிகளில்மட்டுமே கால்வாய் போக்குவரத்து சாத்தியமானதாக இருந்தது. இப்பிரச்னைகளுக்கு தீர்வாகத் தான் ரயில்பாதைகள் உருவாக்கப்பட்டன. முதலில் மரங்களால் அமைக்கப்பட்ட பாதைகளில் குதிரைகளால் இழுக்கப்பட்ட வண்டிகள் செலுத்தப்பட்டன. பின்னர் இருப்புப்பாதைகள் அமைக்கப்பட்டு நீராவி இயந்திரத்தால் இயங்கும் ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இது போக்குவரத்தில் பெரும் புரட்சியையே ஏற்படுத்தியது. 1814ல் ஜார்ஜ் ஸ்டீவன்சன் முதலாவது ரயில் இயந்திரத்தை உருவாக்கி இயக்கினார். 1825ல் இங்கிலாந்தில் ஸ்டாக்டன் மற்றும் டார்லிங்டன் என்ற இடங்களுக்கிடையே ரயில்போக்குவரத்து தொடங்கப்பட்டது. ரயில்பாதைக்காலம் இவ்வாறுதான் தொடங்கியது.




கிரஹாம் பெல்

## செய்தித் தொடர்பு

தற்கால போக்குவரத்தும், தொழில் நிறுவனங்களும் விரைவான மற்றும் ஆற்றலுடன் கூடிய தகவல் தொடர்பின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. தந்திமுறை செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் புறாக்கள் மூலமே தகவல்கள் விரைவாக அனுப்பப்பட்டன. பாரடே, வோல்டா, ஆம்பியர் மற்றும் பிராங்க்லின் ஆகியோரது அடிப்படையான ஆய்வுகளின் காரணமாகவே முதலாவது மின்னணு தந்தி முறை நடைமுறைப் படுத்தப்பட்டது. இது ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் தனித்தனியாக முறையே ஸ்டீன்ஹில், வீட்ஸ்டோன் மற்றும் மார்ஸ் என்பவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. 1845 ஆம் ஆண்டுக்குப் பிறகு தந்தி சாதனங்கள் பரவலாக நிறுவப்பட்டன.

1866ல் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அடியில் அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் இணைக்கும் தந்திக்கம்பி அமைக்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டின் இறுதிவாக்கில், உலகின் முக்கிய வர்த்தக மையங்கள் அனைத்தும் தொலைத் தொடர்புகளால் இணைக்கப்பட்டன. 1840ல் அஞ்சல் துறை ஏற்படுத்தப்பட்டது. 1875ல் அனைத்துலக அஞ்சல் குழுமம் ஏற்படுத்தப்பட்டதால் பன்னாட்டு அஞ்சல் போக்குவரத்து எளிதாகியது. 1876ல் கிரஹாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தார்.



எடிசன்

## மின் விளக்குகள்

தொழிற்சாலைகள், போக்குவரத்து, சமூக நடவடிக்கைகள், பொழுதுபோக்கு மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு செயற்கையான விளக்கொலி முக்கிய பங்காற்றுகிறது. 1784ல் எண்ணெய் விளக்குகளுக்கு ஏற்ற பர்னர் உருவாக்கப்பட்டது. பின்னர் அது கெரசின் விளக்குகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் செயற்கை வெளிச்சத்திற்கு எரிவாயுக்கள் பயன்படுத்தப்பட்டன. 1821ல் டேவி என்பவர் மின்சார வளையத்தைக் கண்டுபிடித்தார். 1879ல் எடிசன் மின்சார பல்பை கண்டுபிடித்தார்.

## இரும்பு எஃகு

மரம், நீர், காற்று போன்றவற்றினாலான பழைய தொழில் நுட்பங்களை நிலக்கரி மற்றும் இரும்புத் தொழில் மாற்றியமைத்தது. ஜான் ஸ்மீட்டன் சுழற்காற்றாடியுடன் கூடிய உருக்கு உலையை வடிவமைத்தார்.புதிய வகை இயந்திரங்களுக்கு தரமான இரும்பு தேவைப்பட்டது.

ஹென்றி கார்ட் மற்றும் பீட்டர் ஆனியன்ஸ் என்பவர்கள் 1784ல் இரும்பு உருக்காலைகளை அறிமுகப்படுத்தினர். 1740ல் எஃகு உற்பத்தியை ஷன்ட்ஸ்மேன் என்பவர் ஷெப்பீல்டில் தொடங்கினார். பின்னர், ஹென்றி பாஸ்மர் என்பவர் மலிவான, விரைவான எஃகு உற்பத்தி முறையைக் கண்டுபிடித்தார். 1777ல் முதலாவது இரும்புப் பாலம் அமைக்கப்பட்டது. 1790ல் முதலாவது இரும்பிலான கப்பல் கட்டப்பட்டது.

**தொழிற்புரட்சியின் நன்மைகள்**

**நகரமயமாக்கம்**

தொழிற்புரட்சி அறிமுகப்படுத்திய தொழிற்சாலை முறைகளினால் நகரங்கள் உருவாயின. மான்செஸ்டர், பர்மிங்ஹாம், லீட்ஸ் மற்றும் ஷெப்பீல்ட் போன்ற நகரங்கள் இங்கிலாந்தில் தோன்றின. ஆயிரக்கணக்கான மக்கள் கிராமப்புறங்களை விட்டு வெளியேறி வேலைதேடி நகரங்களில் குடியேறத் தொடங்கினர். அரைநூற்றாண்டு காலத்திற்குள் மான்செஸ்டரின் மக்கள்தொகை ஆறு மடங்கு அதிகரித்தது.

**இயந்திரங்கள்**

சக்திவாய்ந்த இயந்திரங்களின் அறிமுகத்தால் பொருள் உற்பத்தி விரைவாக அதிகரித்தது.

**அறிவாற்றல் இயக்கம்**

மக்களின் அறிவுத்திறன் அதிகரித்தது. பஸ்கள், கல்லூரிகள் செய்தித்தாள்கள், நூலகங்கள், வானொலி போன்றவை முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் வேகமாக வளர்ந்தன. காரல் மார்க்ஸ் செயின்ட் சைமன் போன்ற அறிஞர்கள் ‘தொழிற்புரட்சி’ குறித்த தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

**வேலை வாய்ப்பு பெருக்கம்**

புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டதால் ஆண், பெண் அனைவருக்கும் வேலைவாய்ப்பு பெருகியது.

**தொழிற்புரட்சியினால் விளைந்த தீமைகள்**

**புதிய சமுக சிக்கல்கள்**

தொழிற்சாலை நகரங்களின் பெருக்கத்தால் எழுந்த பிரச்னைகளுக்கு சுலபமான தீர்வுகள் காணப்படவில்லை. குடியிருப்பு வசதிகள், சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை போன்றவை போதுமான அளவுக்கு ஏற்படுத்தப்படவில்லை. நோய்களும், குற்றங்களும் பெருகின. குறைந்த ஊதியத்திற்கு மகளிரும், சிறாரும் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். அவர்கள் நாளுக்கு 12 முதல் 14 மணி நேரம் வேலை செய்தனர்.

**முதலாளித்துவம்**

தொழிற்சாலை முறையினால் பணப்புழக்கம் அதிகரித்தது. ஆனால், செல்வம் ஒரு சிலரிடமே குவிந்ததால் முதலாளித்துவம் வளர்ந்தது.

**வர்க்கபேதம்**

தொழிற்புரட்சியினால் சமுதாயத்தில் பூர்ஷ்வா எனப்பட்ட நடுத்தர செல்வந்தர்கள் என்ற வர்க்கமும், தொழிலாளர் வர்க்கமும் தோன்றின. உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள்,

சுரங்கமுதலாளிகள், வங்கித் தொழில் செய்தோர், தொழில் முனைவோர் பூர்ஷ்வா வர்க்கத்தில் இடம் பெற்றிருந்தனர். ஆலைத் தொழிலாளர்கள், தொழிற்சாலைப் பணியாளர்கள் அடங்கிய ஊதியம் பெறுவோர் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். முதலாளி, தொழிலாளி என்ற பாகுபாட்டினால் பல பொருளாதார, சமூக சிக்கல்கள் தோன்றின.

**குடியேற்றக்கொள்கையும் பேரரசுக் கொள்கையும்**

தொழிற்புரட்சி முதலாளித்துவத்தை வலிமைப்படுத்தியது. குடிறயேற்றங்கள் கச்சாப் பொருட்களை அனுப்பியும், உற்பத்திப் பொருட்களுக்கு சந்தையாகவும் செயல்பட்டன. இதனால், மேலும் குடியேற்றங்களைப் பெறும் நோக்கத்துடன் பேரரசுக் கொள்கை பின்பற்றப்பட்டது.

| தொழில்கள் | பெயர் | கண்டுபிடிப்புகள் | வருடம் |
|---|---|---|---|
| நெசவுத் தொழில் | ஜான்கே | எறிநாடா என்னும் கருவி (பறக்கும் நாடா) | 1733 |
| | ஹார்டு கிரீவ்ஸ் | ஜென்னி என்னும் நூற்கும் கருவி | 1764 |
| | ரிச்சர்டு ஆர்க்ரைட் | நீர்ச்சட்டம் என்னும் கருவி | 1769 |
| | சாமுவேல் கிராம்டன் | மியூல் என்னும் மென்மையான நூற்கும் கருவி | 1779 |
| | எட்மண்ட் கார்ட்ரைட் | விசைத்தறி | 1785 |
| | எலிவிட்னே | பருத்தியிலிருந்து விதைகளை பிரித்தெடுக்கும் கருவி | 1792 |
| | எலியாஸ் ஹோவே | தையல் இயந்திரம் | 1846 |
| நிலக்கரி மற்றும் இரும்புத் தொழில் | ஜான்ஸ்மீட்டன் | சுழற்காற்றாடியுடன் கூடிய உருக்கு உலை | 1760 |
| | ஹென்றி பேஸ்மன் | இரும்பு எஃகு உற்பத்தி முறை | 1850 |
| | சர்ஹம்ரிடேவி | பாதுகாப்பு விளக்கு | 1816 |
| மின் விளக்குகள் | ஜேம்ஸ்வாட் | நீராவிக் கருவி | 1736–1819 |
| | ஜார்ஜ் ஸ்டீபென்சன் | நீராவியால் இயங்கும் இரயில் இயந்திரம் | 1781–1848 |
| போக்குவரத்து வளர்ச்சி | ஜான்மெக் ஆடம் | சேற்றுக்கு பதிலாக உறுதியான தார் கலவை கொண்ட சாலைகளை அமைத்தார் | 1756–1836 |
| செய்தித் தொடர்பு | அலெக்சாண்டர் கிரஹாம்பெல் | தொலைபேசி | 1876 |

**கற்றல் அடைவுகள்**

*இந்தப்பாடத்திலிருந்து மாணவர் பெற்ற செய்திகள்*

1. *வேளாண்மைப் புரட்சியின் பொருளும், போக்கும்.*
2. *தொழிற்புரட்சிக்கான காரணங்கள்*
3. *தொழிற்புரட்சிக்கு வழிவகுத்த அறிவியல் கண்டுபிடிப்புகள்*
4. *ஜவுளி, போக்குவரத்து போன்ற தொழில் துறைகளின் வளர்ச்சி*
5. *தொழிற்புரட்சியின் நன்மை மற்றும் தீமைகள்*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பயிர்சுழற்சி முறையை அறிமுகப்படுத்தியவர்

அ) ஹெர்வி ஆ) டவுன்ஷெண்ட்

இ) மெக்காடம் ஈ) ஹார்கிரீவ்ஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அலெக்ஸாந்தர் கிரஹாம் பெல் ______________ கண்டறிந்தார்.
2. மின்சார விளக்கை கண்டறிந்தவர் ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பறக்கும் நாடா | அ. | ஹார்கிரீவ்ஸ் |
| 2. | நூற்கும் நாடா | ஆ. | எலியாஸ் ஹோவே |
| 3. | விசைத்தறி | இ. | ஜான்கே |
| 4. | தையல் இயந்திரம் | ஈ. | ஜேம்ஸ் வாட் |
| 5. | நீராவி இயந்திரம் | உ. | கார்ட்ரைட் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. பேக்வெல் பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கத்திற்கு அறிவியல் முறையை அறிமுகப்படுத்தினார்.

ஆ. தொழிற்புரட்சி என்னும் சொல்லை ஜார்ஜ் மிஷ்லெட் ஜெர்மனியில் பயன்படுத்தினார்.

இ. ஜான் மெக்காடம் இரயில் போக்குவரத்தை இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தினார்.

ஈ. 1879ல் எடிசன் நீராவி இஞ்சினை கண்டுபிடித்தார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருளைக் கொண்டு வருவதிலும், சந்தைக்கு உற்பத்திப் பொருளை எடுத்து செல்வதிலுமே தொழிற்புரட்சி பெரிதும் சார்ந்துள்ளது.

2. 1814ல் ஜான் ஸ்மீடன் முதலாவது ரயில் எஞ்சினை வடிவமைத்தார்.

3. பன்னாட்டு அஞ்சல் சேவைக்கு உதவியாக 1875 அனைத்துலக அஞ்சல் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ஜான் மெக்காடம்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. தொழிற்புரட்சிக்கான காரணங்களைக் கூறுக

2. இங்கிலாந்தில் தொழிற்புரட்சியின் போக்கை விவாதி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. தொழிற்புரட்சிக்கு வித்திட்ட அறிவியல் கண்டுபிடிப்புகளை தொகுத்து எழுதுக.

2. தொழிற்புரட்சியின் நன்மை, தீமைகளை ஆய்க.

# பாடம் – 27

## முதல் உலகப்போர்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது.*

1. *குடியேற்றக் கொள்கை, பேராதிக்கக் கொள்கை என்ற கோட்பாடுகளுக்கான விளக்கம் மற்றும் அவற்றின் தாக்கம்.*
2. *முதல் உலகப்போருக்கான காரணங்கள்*
3. *முதல் உலகப் போரின் போக்கு*
4. *முதல் உலகப் போரின் முடிவும் விளைவுகளும்*

### குடியேற்றக் கொள்கை

குடியேற்றக் கொள்கை என்பது ஒரு நாடு தனது இறைமையைதன் எல்லையைக் கடந்து பிற பகுதிகளின்மீது செலுத்துவதாகும். குடியேற்றங்களை ஏற்படுத்துபவர்கள் பொதுவாக, தாங்கள் குடியேறிய பகுதிகளில் உள்ள இயற்கை வளங்கள், தொழிலாளர் திறன், சந்தைகள் போன்றவற்றின்மீது ஆதிக்கம் செலுத்துவர். மேலும், தங்களின் சமூக பண்பாட்டுக் கூறுகள், சமய மற்றும் மொழி ஆகியவற்றை குடியேற்றங்களில் வாழும் மக்களின்மீது திணிப்பார்கள்.

15ஆம் நூற்றாண்டில் 'கண்டுபிடிப்புகளின் காலம்' தொடங்கிய பின் ஐரோப்பிய குடியேற்றக் கொள்கை தொடங்கியது. அமெரிக்க கண்டத்தையும், ஆப்ரிக்கா, மத்திய கிழக்கு, இந்தியா மற்றும் கிழக்காசியாவின் கடற்கரைப் பகுதிகளிலும் போர்ச்சுகீசியரும் ஸ்பானியரும் ஆய்வுகளை மேற்கொண்டனர். 17ஆம் நூற்றாண்டுவாக்கில் இங்கிலாந்து, பிரான்சு மற்றும் ஹாலந்து ஆகிய நாடுகள் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு கடல்கடந்த பேரரசுகளை உருவாக்கினர். இப்போட்டியில் ஸ்பெயின், போர்ச்சுகல் நாடுகளும் கலந்துகொண்டன. ஆனால், புதிய உலகில் தங்களது குடியேற்றங்களை இழந்தபிறகு ஸ்பெயினும் போர்ச்சுகல்லும் பலவீனமடைந்தன. பழைய உலகம் எனக் கூறப்பட்ட – குறிப்பாக தென் ஆப்ரிக்கா, இந்தியா, தென்கிழக்காசியப் பகுதிகளில் பிரிட்டன், பிரான்சு, ஹாலந்து ஆகிய நாடுகள் தங்களது குடியேற்றங்களை அமைத்தனர். 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொழிற்புரட்சியின் காரணமாக 'புதிய வகை பேராதிக்கம்' தோன்றியது. புதிய குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி முதல் உலகப்போருக்கு இட்டுச் சென்றது.

### பேராதிக்கக் கொள்கை

குடியேற்ற நாடுகளின்மீது ஆதிக்கத்தை விரிவுபடுத்துவது பேராதிக்கம் எனப்படுகிறது. ஒரு நாடு தொலைதூரப் பகுதிகளில் தமது ஆதிக்கத்தை செலுத்துவதைக் குறிப்பதற்கு இந்த சொல் பயன்படுத்தப்படுகிறது. பேராதிக்க காலம் என்பது, 1860 ஆம் ஆண்டு தொடங்கி பெரிய ஐரோப்பிய நாடுகள் பிற கண்டங்களில் குடியேற்றங்களை அமைக்கத் தொடங்கிய காலத்திலிருந்து தொடங்குகிறது. 1500களின் மத்தியவாக்கில் பிரிட்டனும் பிரான்சும் ஆப்ரிக்க மற்றும் அமெரிக்க கண்டங்களில் தங்களது ஆதிக்கத்தை விரிவுபடுத்தியதை குறிக்கவே 'பேராதிக்கம்' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. பேராதிக்கம் என்பது முதலாளித்துவத்தின்

உச்ச கட்டம் என்றும் கூறப்படுகிறது. புதிய சந்தைகளும், கச்சாப் பொருட்களும் இக்காலத்தில் பேராதிக்க நாடுகளுக்கு தேவைப்பட்டன என்பதை இது உணர்த்துகிறது. லெனின், ரோஸா லக்சம்பர்க் போன்றவர்கள் முதலாளித்துவம் தங்களது நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் எவ்வாறு விரிவுபடுத்தப்படுகிறது என்பதைக் கூறியுள்ளனர்.

**பொருளாதார சந்தை**

தொழிற்புரட்சியின் விளைவாக, ஐரோப்பிய நாடுகள் தங்களது உற்பத்தி பொருட்களுக்கான புதிய சந்தைகளைத் தேடவேண்டி வந்தது. அதேபோல், அவர்களது தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருட்களும் தேவைப்பட்டன. இத்தகைய இரட்டைத் தேவைகளினால், ஆசியா, ஆப்ரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்கப் பகுதிகளில் அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டன.

**தொலைத்தொடர்பு வளர்ச்சி**

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. நீராவிக்கப்பல்கள், ரயில்பாதைகள், சாலைகள் மேம்படுத்தப்பட்டன. வெல்லப்பட்ட நாடுகளின்மீது பேராதிக்கம் நன்கு வலுப்படுவதற்கு இவை பேருதவியாக அமைந்தன.

**தீவிர தேசியத்தின் எழுச்சி**

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியை தீவிர தேசியக்காலம் என்று கூறலாம். பல நாடுகள் பிறமக்களைவிட தாமே உயர்ந்தவர் என்ற உயர்வு மனப்பாங்கை வளர்த்துக்கொண்டன. தங்களது மதிப்பை உயர்த்திக் கொள்ளவும், வலிமையை பெருக்கிக் கொள்ளவும் மேலும் குடியேற்றங்கள் தேவை என்பதை அந்த நாடுகள் உணர்ந்தன. இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி ஆகிய நாடுகளின் எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் பேராதிக்கக் கோட்பாட்டை வளர்க்க நிறுவனங்களை ஏற்படுத்தினர். தங்களது பகுதிகளை பேரரசுகள் என கூறிக்கொள்வதில் ஐரோப்பிய நாடுகள் பெருமிதம் கொண்டன.

**'நாகரீகத்தூதுக்குழு'**

ஐரோப்பியர் பலரின் எண்ணத்தில் பேராதிக்கத்தின் விரிவாக்கம் என்பது ஒரு புனிதச் செயலாகவே இருந்தது. உலகின் பின்தங்கிய பகுதிகளில் வாழும் மக்களை நாகரீகப்படுத்தும் வழியாகவே அவர்கள் பேராதிக்கத்தை கருதினர். புதிய நிலப்பகுதிகளைக் கண்டறிந்தவர்கள், சமயப் பரப்பாளர்கள் ஆகியோர் பேராதிக்கத்தை பரப்புவதில் பங்கேற்றனர்.

**முதல் உலகப் போர் (1914 – 1918)**

**காரணங்கள்**

**உடன்படிக்கைகள்**

முதல் உலகப்போருக்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம். ரகசிய ஒப்பந்தங்களை செய்துகொள்ளும் முறையே அவற்றில் முக்கியமானதாகும். 1914 ஆம் ஆண்டுக்கு முன்பு ஐரோப்பிய நாடுகள் இரு அணிகளாக காணப்பட்டன. முதல் உலகப் போருக்கு முன்பு ஐரோப்பிய அரசியலில் இத்தகைய பிளவை ஏற்படுத்தியது ஜெர்மனியே ஆகும். பிரான்சை தனிமைப்படுத்துவதற்காக, ஆஸ்திரியாவுடன் ஜெர்மனி ஒப்பந்தம் செய்து கொண்டது ரஷ்யாவுடன் மற்றொரு உடன்படிக்கையை செய்து கொண்டதன் மூலம் பிஸ்மார்க் மூன்று

பேரரசர்கள் கழகத்தை உருவாக்கினார். பின்னர், ஜெர்மனி ரஷ்யாவை பொருட்படுத்தவில்லை. எனவே, ரஷ்யா இக்கூட்டிலிருந்து வெளியேறியது. ஆனால், ஜெர்மனி ஆஸ்திரியாவுடன் தொடர்ந்து உறவு கொண்டிருந்தது. இதற்கு இருவர் உடன்படிக்கை என்று பெயர். இத்தாலி இவர்களுடன் சேர்ந்தபிறகு அது **முக்கூட்டு உடன்படிக்கை** எனப்பட்டது.

இதற்கிடையில், ரஷ்யா, பிரான்சின் பக்கம் திரும்பியது. ஏற்கனவே, 1894ல் ஆஸ்திரிய – ஜெர்மனி கூட்டுறவுக்கு எதிராக பிரான்ஸ் – ரஷ்ய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அப்போது இங்கிலாந்து தனித்திருத்தல் கொள்கையை பின்பற்றி வந்தது. தனிமையை விட்டு ஜெர்மனியுடன் இணைய இங்கிலாந்து விரும்பியது. அந்த முயற்சி தோல்வியடையவே, 1904ல் பிரான்சுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. 1907ல் ரஷ்யாவும் இக்கூட்டில் சேர்ந்தது. இது '**மூவர் நட்புறவு**' எனப்பட்டது. இவ்வாறு ஐரோப்பா இரண்டு அணிகளாகியது. இந்த ஒப்பந்தங்களின் ரகசியத்தன்மையே, 1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போருக்கு வழிவகுத்தது.

ராணுவக் குவிப்பு ஐரோப்பிய நாடுகள் தங்களது தரைப்படை மற்றும் கடற்படைகளை தொடர்ந்து பெருக்கிக்கொண்டே வந்தன. ஐரோப்பிய நாடுகள் ஒவ்வொன்றும் மற்றவற்றுக்கு எதிரான, பயம், வெறுப்பு மற்றும் சந்தேகம் கொள்ள ஆயுதக்குவிப்பு காரணமாயிற்று. இங்கிலாந்தும் ஜெர்மனியும் கடற்படையில் வலிமை பெற்று விளங்கின. கடற்படை ஆயுதங்களை பெருக்குவதில் இருநாடுகளுக்கும் இடையே போட்டி நிலவியது. ஜெர்மனியில் கட்டப்படும் ஒரு கப்பலுக்கு பதில் இங்கிலாந்து இரண்டு கப்பல்களைக் கட்டியது.

குறுகிய நாட்டுப்பற்றும் இப்போருக்கு மற்றொரு காரணமாகும். ஒரு நாட்டின்மீது பற்று என்பது மற்றொரு நாட்டின் மீது காட்டப்படும் வெறுப்பு என்று உணரப்பட்டது. எடுத்துக்காட்டாக ஜெர்மனியை நேசிக்கவேண்டுமானால் பிரான்சை வெறுக்கவேண்டும். அதேபோல பிரஞ்சுக் காரர்களும் ஜெர்மனியரை வெறுத்தனர். கிழக்கு ஐரோப்பாவில் குறுகிய நாட்டுப்பற்று தீவிரமாக பின்பற்றப்பட்டது. செர்பியர்கள் ஆஸ்திரியா ஹங்கேரியை வெறுத்தனர்.

அல்சேஸ் – லொரேன் பகுதியை திருப்பவும் பெறவேண்டும் என பிரான்சு விரும்பியதும் முதல் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது. 1871ல் பிஸ்மார்க் அல்சேஸ் – லொரேன் பகுதிகளை பிரான்சிடமிருந்து கைப்பற்றி ஜெர்மனியுடன் இணைத்தார். அதிலிருந்தே இருநாடுகளுக்கும் இடையே பகைமை வளர்ந்து வந்தது. இந்த காரணத்தினால் தான், பிரான்சை தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் ஜெர்மனி பிறநாடுகளுடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டது.

ஜெர்மானியப் பேரரசரான இரண்டாம் வில்லியமும் முதல் உலகப்போர் தோன்ற காரணமாக இருந்தார். ஜெர்மனியை ஒரு வலிமைமிக்க நாடாக உருவாக்க அவர் விரும்பினார். பன்னாட்டு விவகாரங்களில் எந்தவொரு சமரசத்திற்கும் அவர் தயாராக இல்லை. கிரேட் பிரிட்டனின் வலிமை குறித்தும் அவர் தவறானதொரு கணிப்பையே கொண்டிருந்தார். இரண்டாம் வில்லியம் பிரிட்டிஷாரின் குணாதிசயம் பற்றி கொண்டிருந்த கருத்தே முதல் உலகப் போருக்கு இட்டுச் சென்றது.

ஜெர்மனியரிடம் காணப்பட்ட 'பிரஷ்ய உணர்வு' போருக்கு வழிவகுத்தது. உலகில் போர் புரிவது என்பது சட்டபூர்வமானதே என்று பிரஷ்யர்கள் கற்பிக்கப்பட்டிருந்தனர். போர் என்பது பிரஷ்யாவின் தேசியத் தொழில் எனக் கூறலாம். போர்குறித்த இத்தகைய தத்துவங்கள் ஜெர்மானிய இளைய தலைமுறையிடம் ஆழமாகப் பதிந்திருந்தது.

ஆஸ்திரியா – ஹங்கேரியிடமிருந்து டிரன்டினோ மற்றும் டிரியஸ்டி துறைமுகப் பகுதிகளை திரும்பப் பெற்வேண்டும் என இத்தாலி விரும்பியது. இப்பகுதிகளில் இத்தாலியர்கள் அதிகம் வசித்துவந்தனர். ஆனால், அவை ஆஸ்திரியா. ஹங்கேரி வசம் இருந்தன. ஏட்ரியாடிக் கடற்பகுதியில் ஆதிக்கம் செலுத்துவதில் இத்தாலிக்கும் ஆஸ்திரியாவிற்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது. ஆஸ்திரியா இத்தகைய போட்டிக்கு ஆயத்தமாக இல்லை என்பதால் இருநாடுகளுக்கும் இடையே வெறுப்புணர்வு அதிகரித்தது.

கீழைச்சிக்கலும் போருக்கு முக்கிய காரணமாக அமைந்தது. பால்கன் பகுதியில் இது பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. துருக்கியின் முறைகேடான ஆட்சி வெறுப்புணர்வை மேலும் அதிகரித்தது. மாசிடோனியாவைக் கட்டுப்படுத்துவதற்காக கிரீஸ், செர்பியா, பல்கேரியா ஆகிய நாடுகள் போட்டி போட்டன. போஸ்னியா சிக்கலின்போது ரஷ்யா, செர்பியாவை ஆதரித்தது. அனைத்து ஸ்லாவ் உணர்வு நிலைமையை மேலும் சிக்கல்ாக்கியது.

அல்சேஸ் – லொரேன் பிரச்னைபோலவே, பால்கன் பகுதியில் போஸ்னியா – ஹெர்சிகோவினா பற்றிய சிக்கல் நிலவியது. 1878 ஆம் ஆண்டு நடைபெற்ற பெர்லின் மாநாட்டின் முடிவுகளின்படி போஸ்னியா – ஹெர்சிகோவினா பகுதிகள் ஆஸ்திரியா ஹங்கேரிக்கு கொடுக்கப்பட்டன. இதனை செர்பியா கடுமையாக எதிர்த்தது. ஆஸ்திரியா – ஹங்கேரியிடமிருந்து அவற்றை பிரித்து செர்பியாவுடன் இணைக்கும் நோக்கத்துடன் செர்பியாவில் பலத்த போராட்டம் நடைபெற்றது. இதனால், செர்பியா மற்றும் ஆஸ்திரியா – ஹங்கேரி ஆகிய நாடுகளுக்கிடையே பகைமை மூண்டது. 1909 ஆம் ஆண்டுக்குப்பின் பகைமை கொழுந்து விட்டெரிந்தது. ரஷ்யாவின் ஆதரவு செர்பியாவுக்கு இருந்ததும் குறிப்பிடத்தக்கது. இருவரும் ஸ்லாவ் இனத்தவர்களேயாகும்.

**உடனடிக்காரணம்**

ஆஸ்திரிய அரியணைக்கு வாரிசான இளவரசன் ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்ட் படுகொலை செய்யப்பட்டதே முதல் உலகப் போருக்கு உடனடிக் காரணமாகும். 1914 ஜூன் 28 ஆம் நாள் போஸ்னிய தலைநகர் சிராஜிவோ நகரில் செர்பிய இளைஞன் ஒருவனால் ஆர்ச்டியூக் பிரான்சிஸ் பெர்டினாண்ட் படுகொலை செய்யப்பட்டார். இப்படுகொலை பல நாடுகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. ஏற்கனவே இருநாடுகளுக்கும் இருந்த பகையால், இந்த நிகழ்ச்சியை தனக்கு சாதகமாக பயன்படுத்தக் கொள்ள ஆஸ்திரியா – ஹங்கேரி நினைத்தது. தங்களது இளவரசனும் அவனது மனைவியும் கொல்லப்பட்டதற்காக சில நிபந்தனைகளை விதித்து செர்பியாவுக்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை ஆஸ்திரியா அனுப்பியது. செர்பியாவின் பதில் ஆஸ்திரியாவுக்கு திருப்தியளிக்கவில்லை. ஜெர்மனியின் பக்கபலத்துடன் ஆஸ்திரியா – ஹங்கேரி செர்பியா மீது போர் தொடுத்தது. செர்பியாவுக்கு ஆதரவாக ரஷ்யாவும் தனது படைகளைக் குவித்தது. இவ்வாறு முதல் உலகப்போர் தொடங்கியது.



**ஆர்ச் டியூக் பெர்டினாண்ட்**

**போரின் போக்கு**

போரின்போது, ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் ‘**கூட்டுறவு நாடுகள்**’ எனவும், இங்கிலாந்தும் அதன் நட்பு நாடுகளும் ‘**நேச நாடுகள்**’ எனவும் அழைக்கப்பட்டன.

ஆஸ்திரியாவுக்கு ஆதரவாக ஜெர்மனி போரில் இறங்கியது. விரைவில் இரு அணியிலிருந்த நாடுகளும் அவரவர் அணிக்காக களம் இறங்கின. துருக்கியும் பல்கேரியாவும் ஜெர்மனிக்கு ஆதரவாகப் போரிட்டன. முக்கூட்டணியை விட்டு வெளியேறிய இத்தாலி எதிரணியில் சேர்ந்து ஆஸ்திரியாவின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளை திரும்பவும் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் போரிட்டது.

இங்கிலாந்து ஜெர்மனிக்கெதிராகப் போரில் இறங்கியது. பிரெஞ்சு மண்ணில்தான் பெரும்போர்கள் நடைபெற்றன. வெர்டூன் போரில் நேச நாடுகள் வெற்றிபெற்றன. ஜெர்மனி, தமது நீர்மூழ்கிக்கப்பல்களை பெருமளவு பயன்படுத்தத் தொடங்கியது. கப்பற்படையின் பன்னாட்டு விதிகள் அனைத்தும் காற்றில் விடப்பட்டன.

1917 ஆம் ஆண்டுவரை ரஷ்யா நேச நாடுகளின் பக்கம் போரிட்டது. புதிதாகப் பதவியேற்ற போல்ஷ்விக் அரசாங்கம் ஜெர்மனியுடன் பிரஸ்ட் – லிடோவிஸ்க் என்ற உடன்படிக்கை செய்து கொண்டதால் ரஷ்யா போரிலிருந்து விலகியது.

ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பல்களால் லூசிடானியா கப்பல் தாக்கப்பட்டது. அதில் பயணம் செய்த அமெரிக்கர்கள் உயிரிழந்தனர். எனவே, அமெரிக்கா ஜெர்மனிமீது போர் தொடுத்தது. பெருமுயற்சி செய்தும் ஜெர்மனியால் தொடர்ந்து போரிட முடியாததால் 1918 நவம்பரில் நேச நாடுகளிடம் சரணடைந்தது.



**கெய்சர் வில்லியம்**

ஜெர்மானியப் பேரரசர் கெய்சர் வில்லியம் வெற்றி பெறும் நம்பிக்கையை இழந்தார். அவர் தமது அரியணையைத் துறந்துவிட்டு ஹாலந்துக்கு தப்பியோடினார். 1918 நவம்பர் 11 ஆம் நாள் ஜெர்மனி போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. ஜெர்மனியின் கூட்டாளி நாடுகளும் நேசநாடுகளின் படைகளால் முறியடிக்கப்பட்டன.

**போரின் விளைவுகள்**

முதல் உலகப் போர் பெருத்த உயிர் சேதத்தை ஏற்படுத்தயது. 10 மில்லியன் பேர் இறந்திருக்கலாம் என்றும் 20 மில்லியன் மக்கள் படுகாயம் அடைந்திருக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. உலகின் பல பகுதிகளில் வாழும் மக்கள் சொல்லொணாத் துயரத்துக்கு ஆளாயினர். மக்களின் சொத்துக்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. போருக்கான நேரடி செலவு 200 பில்லியன் டாலர்களுக்கு அதிகமாகவும், மறைமுக செலவு 150 பில்லியன் டாலர்களுக்கு மேலும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தீயைக்கக்கும் குண்டுகள், எறி குண்டுகள், விஷவாயு போன்ற கொடூரமான ஆயுதங்கள் இப்போரில் பயன்படுத்தப்பட்டன. கனரக டாங்குகள், நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் ஆகாய விமானங்களும் இப்போரில் ஈடுபடுத்தப்பட்டன.

போரில் பங்குபெற்ற நாடுகளின் பொருளாதாரத்தை இந்த போர் சின்னாபின்ன மாக்கியது. போரின் தொடக்கத்திலேயே சுமார் 25 நாடுகள் நேசநாடுகளுக்கு ஆதரவாக களத்தில் இறங்கின. போர் முடியுமுன்பே, வெற்றி பெற்ற நாடுகள் போர் ஏற்படுத்திய அழிவை உணரத் தொடங்கின. இந்த நாடுகள் அனைத்திலும் தேசியக் கடன்கள் அதிகரித்தன. உலகப் பொருளாதாரமே சீர்குலைந்தது. 1919 ஜூன் 28 ஆம் நாள் ஜெர்மனி, **வெர்சேல்ஸ் உடன்படிக்கை**யில் கையெழுத்திடும் படி வற்புறுத்தப்பட்டது. அது ஒரு திணிக்கப்பட்ட

உடன்படிக்கை என்ற போதிலும் அதனை எதிர்க்கும் வலிமை அப்போது ஜெர்மனியிடம் காணப்படவில்லை. அது அப்போது அனைத்தையும் இழந்திருந்தது. வெற்றிபெற்ற நாடுகளுக்கு எராளமான போர் இழப்பீட்டைத் தர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதால், ஜெர்மனியும் அதன் கூட்டணி நாடுகளும் பெரிதும் துன்புற்றன.

ஆஸ்திரியா – ஹங்கேரி செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ஹங்கேரி டிரியனோன் உடன்படிக்கையை 1920ல் நேச நாடுகளுடன் செய்து கொண்டது. 1919லேயே நியூலி உடன்படிக்கையை பல்கேரியா ஏற்றுக் கொண்டது.ஜெர்மனியை ஆதரித்த துருக்கி 1920ல் செவரஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் கற்றவை*

1. *குடியேற்றக் கொள்கையின் எழுச்சியும் அதன் தாக்கமும்.*
2. *பேரரதிக்க கொள்கையும், உலக அரசியலில் அதன் தாக்கமும்.*
3. *உடன்படிக்கைகளும், முதல் உலகப்போருக்கான பிற காரணங்களும்.*
4. *முதல் உலகப் போரின் முடிவில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளும் போரின் விளைவுகளும்.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பின்வருவனவற்றுள் குடிபெயர்ந்தோர் குடியேற்றம் எது ?

அ) பிரிட்டிஷ் இந்தியா ஆ) இந்தோசீனா

இ) 13 அமெரிக்கக் குடியேற்றங்கள் ஈ) இந்தோனேசியா

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. மூன்று பேரரசர்கள் கழகத்தை அமைத்தவர் ______________
2. பெர்லின் மாநாடு கூட்டப்பட்ட ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | வெர்சேல்ஸ் உடன்படிக்கை | அ. | ஆஸ்திரியா – ஹங்கேரி |
| 2. | செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை | ஆ. | துருக்கி |
| 3. | செவ்ரஸ் உடன்படிக்கை | இ. | ஜெர்மெனி |
| 4. | நியூலி உடன்படிக்கை | ஈ. | பல்கேரியா |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. இருவர் கூட்டணியில் இத்தாலி இணைந்த போது அது மூவர் கூட்டணியாக மாறியது.

ஆ. ஆஸ்திரிய இளவரசர் பிரான்சிஸ் பெர்டினான்டு ஆஸ்திரிய தலைநகரில் கொல்லப்பட்டார்.

இ. முதலாம் உலகப் போரில் உலகம் நேச நாடுகள், அச்சு நாடுகள் என இருப்பிரிவுகளாக பிரிந்தன.

ஈ. உலகப்போருக்குப்பின் பல்கேரியா ட்ரியானான் உடன்படிக்கையில் இணைந்தது.

**V. பின்வரும் வாக்கியங்கள் சரியா, தவறா எனக் கூறுக.**

1. முக்கூட்டு ஒப்பந்தம் ஜெர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா ஹங்கேரி நாடுகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்டது.
2. முதல் உலகப் போரின் போது இரண்டாம் வில்லியம் ஜெர்மனியின் அரசராக இருந்தார்.
3. ஆர்ச் டியூக் பெர்டினாண்டின் படுகொலை முதல் உலகப்போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது.
4. பிரஸ்ட் – லிடோவிஸ்ச் உடன்படிக்கை ரஷ்யாவுக்கும் இத்தாலிக்கும் இடையே ஏற்பட்டது.

**VI. சிறு குறிப்பு எழுதுக.(ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. குடியேற்றக் கொள்கை
2. பேரரசுக் கொள்கை
3. மூவர் நட்பு
4. வெர்சேல்ஸ் உடன்படிக்கை

**VII. சுருக்கமான விடை எழுதுக. (100 வார்த்தைகள்)**

1. குடியேற்றக்கொள்கையின் தாக்கத்தை விவாதி.
2. முதல் உலகப்போரின் போக்கை விவரி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. முதல் உலகப் போருக்கான பல்வேறு காரணங்களைக் கூறுக.
2. முதல் உலகப் போரின் விளைவுகளை ஆய்க.

# பாடம் – 28

# 1917 ஆம் ஆண்டு ரஷ்யப்புரட்சி

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப்பாடத்தை கற்பதன் மூலம் மாணவர் அறிந்து கொள்வது*

1. *ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்*
2. *ரஷ்யாவில் சோஷலிஸ்டுகளின் எழுச்சி*
3. *ரஷ்யப் புரட்சியின் போக்கு*
4. *புரட்சியின் முடிவும், விளைவுகளும்*

1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி 20 ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான நிகழ்வாகும். காரா்ல் மார்க்சின் சமத்துவக் கொள்கையும், உழைப்பாளர் புரட்சியும் முதன் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டன. ரஷ்யா மிகப்பெரிய, வலிமை வாய்ந்த நாடாகும். 1812ல் நெப்போலியன் போனபார்ட்டால் கூட ரஷ்யாவைக் கைப்பற்ற முடியவில்லை. ஆனால், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரஷ்யா தனது வலிமையை இழந்தது. இத்தருணத்தில் ரோமனாவ் வம்சம் ரஷ்யாவை ஆட்சிபுரிந்தது. புரட்சியின்போது இரண்டாம் சார் நிக்கோலஸ் ரஷ்யாவின் அரசராக இருந்தார். அவரது ஆட்சிக்காலத்தில் ரஷ்யா பல்வேறு உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுப் பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருந்தது. பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் விளைவாக 1917 ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சியினால், சார் மன்னரின் ஆட்சி தூக்கி எறியப்பட்டது. லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி புரட்சியை முன்னின்று நடத்தியது. புரட்சியின் பயனாக சோவியத் சோஷலிச குடியரசுகளின் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அது 1991 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

**ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்**

**அரசியல் காரணங்கள்**



**சார் இரண்டாம் நிக்கோலஸ்**

1904 – 05 ஆம் ஆண்டுகளில் ரஷ்யா ஜப்பானுடன் போரிட்டது. சிறிய ஆசிய நாடான ஜப்பான், பெரிய ஐரோப்பிய நாடான ரஷ்யாவை ஜப்பான் போரில் முறியடித்தது. இதனால், ரஷ்யாவின் புகழ் உள்நாட்டிலும், பன்னாட்டு அரங்கிலும் மங்கியது.



**ரஸ்புடீன்**


சார் மன்னர்கள் தெய்வீக இறைமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இரண்டாம் சார் நிக்கோலஸ் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்தார். மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாயினர். டூமாஸ் என்ற ரஷ்ய பாராளுமன்ற உறுப்பினர்கள் தாராள சீர்திருத்தங்களை மேற் கொள்ளுமாறு மன்னரை வேண்டினர். ஆனால், சார் மன்னர் அதற்கு உடன்படவில்லை. இதற்கிடையில் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தங்களது குறைகளைக் களையக் கோரி, சார் மன்னரின் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்று விண்ணப்பம் ஒன்றை அவர்கள் அளித்தனர். அவர்களுக்கு கேபன் என்பவர் தலைமை வகித்தார். மாளிகையை

நெருங்கும்போது ஊர்வலத்தினர்மீது காவலாளிகள் துப்பாக்கி சூடு நடத்தினர். 1905 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்ச்சி நடைபெற்றதால், இதற்கு '**குருதி ஞாயிறு**' எனப் பெயரிடப்பட்டது. 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்கு இது முன்னோடியாக விளங்கியது.

சார் மன்னரின் அரசவை, ரஸ்புடீன் என்ற தீயவரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டது. சார் மன்னரின் மனைவி அவரின் செல்வாக்கின் கீழ் இருந்தார். நிர்வாகமும் அவரது விருப்பப்படியே நடைபெற்றது. இதனால், பிரபுக்கள் ரஸ்புடீனுக்கு விஷம் வைத்துக் கொன்றனர்.

**பொருளாதாரக் காரணங்கள்**

ரஷ்யப் பொருளாதாரம் சற்று பின்தங்கியிருந்தமையே பொருளாதாரக் காரணங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. தனிப்பட்ட குடியானவர்களின் கட்டுப்பாட்டிலேயே ரஷ்ய வேளாண்மை இருந்தது. நவீன இயந்திரங்கள் ஏதும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. கடும்குளிர் அந்நாட்டு வேளாண்மையை மிகவும் பாதித்தது. ஆண்டுக்கு நான்கு முதல் ஆறுமாத காலமே அங்கு வேளாண்மை செய்வதற்கு உகந்த காலமாக இருந்தது. 1891 ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சம் பெரும்பாலான குடியானவர்களை வறுமைக்குட்படுத்தியது. அதிவிரைவாக ஏற்பட்ட தொழிற்புரட்சியினால் நகரங்களில் மக்கள் தொகை பெருகியது. நகரங்களில் வாழ்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரமும் மோசமாகவே இருந்தது. 1890 – 1910 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தலைநகர் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கின் மக்கள் தொகை 10,33,600லிருந்து 19,05,600 ஆக உயர்ந்தது. அதேபோல் மாஸ்கோவிலும் மக்கள்தொகை எண்ணிக்கை அதிகரித்தது. 1904 ஆம் ஆண்டு புள்ளிவிவரப்படி, செயின்ட் பீட்டர்ஸ்பர்க் குடியிருப்பு ஒன்றில் சராசரியாக 16 பேரும். ஒரு அறையில் 6 பேர் என்ற விகிதத்திலும் மக்கள் குடியிருந்தனர். சுத்தமான தண்ணீர் கிடையாது. மனிதக்கழிவின் பெருக்கம் பெருத்த சுகாதாரக்கேட்டை ஏற்படுத்தியது. இதனால், தொழிலாளர் சுகாதாரம் பாதிக்கப்பட்டது. பொதுவாகவே, தொழிலாளர்கள் ஒரு திருப்திகரமற்ற சூழ்நிலையிலேயே வாழ்ந்து வந்தனர்.



**காரல்மார்க்ஸ்**




**ஜார்ஜ் பிளக்னேவ்**

**சோஷலிச கட்சியின் எழுச்சி**

சோஷலிச இயக்கத்தின் வரலாற்றில், 1804 ஆம் ஆண்டு பன்னாட்டு உழைப்பாளர் சங்கம் அமைக்கப்பட்டது ஒரு முக்கிய நிகழ்வாகும். இதுவே **முதலாவது பன்னாட்டு அமைப்பு** என்றும் அழைக்கப்படுகிறது. (பர்ஸ்ட் இன்டர்நேஷனல்) மிகக் குறைந்த காலத்திலேயே, ஐரோப்பாவில் தொழிலாளர் இயக்கங்களிடையே பன்னாட்டு அமைப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1789 பிரஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டான 1889 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் நாள் **இரண்டாவது பன்னாட்டு அமைப்பு** உருவாக்கப்பட்டது. பல நாடுகளிலும் இருந்த சோஷலிச கட்சிகளை ஒருங்கிணைத்து ஒரு பன்னாட்டு அமைப்பை உருவாக்குவதற்காகவே இந்தப் பேரவை நடைபெற்றது. சோஷலிச வரலாற்றில் இரண்டாவது பன்னாட்டு அமைப்பு மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

ரஷ்யாவில் தொழிலாளர் அமைப்புகள் உருவான போது, அவை மார்க்சின் கருத்துக்களையே பெரிதும் ஏற்றுக்கொண்டன. மார்க்சீய கோட்பாட்டாளரான ஜார்ஜ் பிளக்னோவ் என்பவர் **1883**ல் ரஷ்ய சோஷியல் டெமாகிரடிக் கட்சியைத் தொடங்கினார். வேறு சில சோஷலிச அமைப்புகளை ஒன்றிணைத்துக் கொண்டு **1898**ல் இது ரஷ்ய சோஷியல் டெமாகிரடிக் உழைப்பாளர் கட்சி என்ற பெயரைப் பெற்றது. இருப்பினும், கொள்கை மற்றும் அமைப்புரீதியாக இக்கட்சி பிளவுபட்டது. சிறுபான்மை பிரிவினர் கொண்ட குழு மென்ஷ்விக் (ரஷ்ய மொழியில் சிறுபான்மை என்று பொருள்) என்றும், பெரும்பான்மையினர் போல்ஷ்விக்குகள் என்றும் அழைக்கப்பட்டனர்.



**லெனின்**

போல்ஷ்விக்குகளின் தலைவராக விளாடிமிர் இலயிச் உலயநோவ் விளங்கினார். லெனின் என்பது இவரது புகழ்வாய்ந்த பெயராகும். மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோருக்குப் பிறகு சோஷலிச இயக்கத் தலைவர்களில் பிரபலமாக விளங்கியவர் இவரேயாகும். புரட்சியை முன்னின்று நடத்தவல்ல ஒரு பேரியக்கமாக போல்ஷ்விக் கட்சியை லெனின் உருவாக்கினார். **1917** ஆம் ஆண்டு புரட்சிக்கு லெனின் ஆற்றிய பங்கு மகத்தானதாகும். இரண்டாவது பன்னாட்டு அமைப்பிலும் பிளக்னோவ் மற்றும் லெனின் போன்ற ரஷ்ய சோஷலிஸ்டுகள் பெரும் பங்கு வகித்தனர்.

தொழிலாளர் வர்க்கத்தினரின் கட்சிகளாக விளங்கிய மென்ஷ்விக், போல்ஷ்விக் கட்சிகளைத்தவிர, குடியானவரின் குரலை ஒலிக்கச் செய்வதற்கு சோஷலிஸ்ட் புரட்சி கட்சி ஒன்றும் ரஷ்யாவில் இருந்தது.

**முதல் உலகப்போர்**

ரஷ்யப் படைகளின் வரலாற்றில் தோல்வியென்பது சாதாரணமான ஒன்று. முதல் உலகப் போருக்கு முன்பு **1904 –1905**ல் நடைபெற்ற ரஷ்ய ஜப்பானிய போரில் ரஷ்யா, ஜப்பானியப் படைகளிடம் தோல்வியடைந்தது. அந்தப் போரில் ரஷ்ய கப்பல்கள் பல மூழ்கடிக்கப்பட்டன. **1914**ல் ஆஸ்திரியா – ஹங்கேரிக்கு எதிரான போரில் ரஷ்யப் படைகள் தொடக்கத்தில் வெற்றி பெற்றாலும் பின்னர் தோல்வியடைந்தது. நவீன கருவிகள் இல்லாமை, நவீன தொழில்நுட்பம் இல்லாமை (ஆகாய விமானங்கள், தொலைபேசிகள்) ரஷ்ய தோல்விக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

முதல் உலகப் போரின் தொடக்கத்திலேயே ரஷ்யா தோல்விகளை சந்தித்தது. **1914**ல் நடைபெற்ற டேனன்பர்க் போரில் **1,20,000** ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், ஜெர்மனி **20,000** வீரர்களை மட்டுமே இழந்தது. போரின் தொடக்கத்தில் ரஷ்ய அரசாங்கம் பெற்றிருந்த மக்களின் ஆதரவு குறையத் தொடங்கியது.

**1915**ல் மன்னர் நிக்கோலஸ் தாமே படைத்தலைமையை ஏற்றார். ஜெர்மானியப்படை போதுமான தளவாடங்களில்லாத ரஷ்யப் படையைவிட ஆற்றல்மிக்கதாகவே விளங்கியது. **1916** அக்டோபர் மாத வாக்கில் ரஷ்யா சுமார் **1.8** மில்லியன் வீரர்களை இழந்தது. **2** மில்லியன் வீரர்கள் சிறைப்பட்டனர். மேலும் ஒரு மில்லியன் வீரர்கள் காணாமல் போயினர். இத்தகைய பெரும் சேதத்திற்காளான ரஷ்யப் படையின் வீரர்கள் கலகத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

இத்தகைய இழிநிலைக்கு நிக்கோலசே பொறுப்பு என குற்றம் சாட்டப்பட்டார். அவருக்கு எதிர்ப்பு வலுக்கவே, **டூமா** என்ற நாடாளுமன்றம் அரசியலமைப்புக்குட்பட்ட

ஆட்சியை அமைக்குமாறு எச்சரிக்கை விடுத்தது. ஆனால், நிக்கோலஸ் அக்கோரிக்கையை நிராகரித்தார். எனவே, 1917 பிப்ரவரி மாதம் நடைபெற்ற புரட்சியின் போது ரஷ்யாவில் சார்மன்னரின் ஆட்சி கவிழ்ந்தது.

**பிப்ரவரி புரட்சி**

மேற்குறிப்பிட்ட அரசியல், சமூக, பொருளாதார காரணங்களால் பிப்ரவரி புரட்சி வெடித்தது. பிப்ரவரி புரட்சி வெடிக்கும் தருவாயில் தலைநகரில் உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டது. மக்கள் போருக்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

பல்வேறு அரசியல் கட்சிகளும் சார்மன்னரின் ஆட்சிக்கு எதிராக ஒன்று திரண்டன. பிப்ரவரி மாதம் பீட்டர்ஸ்பர்க் நகரில் மக்கள் கலகத்தில் ஈடுபட்டனர். வன்முறை தலைவிரித்தாடியது. காவல்துறை மற்றும் ராணுவத்தோடு மக்கள் மோத ஆரம்பித்தனர். பீட்டர்ஸ்பர்க்கிலிருந்த ராணுவ வீரர்களில் பெரும்பாலானோர் மக்களுடன் சேர்ந்து கொண்டனர்.

1917 மார்ச் 12 ஆம் நாள் தலைநகர் பீட்டர்ஸ்பர்க் புரட்சியாளர்களின் வசமாயிற்று. பின்னர், அவர்கள் மாஸ்கோவையும் கைப்பற்றினர். இரண்டாம் சார் நிக்கோலஸ் அரியணையைவிட்டு வெளியேறினார். மார்ச் 15ஆம் நாள் தற்காலிக அரசாங்கம் ஏற்படுத்தப் பட்டது. சார் மன்னரின் வீழ்ச்சியே பிப்ரவரி புரட்சி எனப்படுகிறது.

**கெரன்சிகியின் தற்கால அரசாங்கம்**

புரட்சியின்போது மக்கள் அரசாங்கத்தின் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் நான்கு – அமைதி ஏற்படுத்துதல், உழுதவருக்கே நிலத்தை உரிமையாக்குதல், தொழிற்சாலைகளை தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல் மற்றும் ரஷ்யர் அல்லாத குரு மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்குதல். கெரன்ஸ்கி தலைமையில் ஆட்சிப் பொறுப்பேற்ற தற்காலிக அரசாங்கம் இவை எதனையும் நிறைவேற்றவில்லை. எனவே, விரைவில் மக்களின் ஆதரவை இழந்தது.



கெரன்ஸ்கி

பிப்ரவரி புரட்சியின்போது ஸ்விட்சர்லாந்தில் இருந்த லெனின், ஏப்ரலில் ரஷ்யாவுக்கு திரும்பி தனது 'ஏப்ரல் வாக்குறுதிகளை' வெளியிட்டார். இது மக்களது தேவைகளை நிறைவேற்றுவதாக இருந்தது.அவரது தலைமையிலான போல்ஷ்விக் கட்சி போரை முடிவுக்கு கொண்டுவருதல், குடியானவர்களுக்கு நிலவுரிமைகளை மாற்றுதல் போன்ற தனது கொள்கைளை தெளிவாக மக்களிடம் கூறியது. **அனைத்து அதிகாரங்களும் சோவியத்துக்களுக்கே** என்று முழக்கம் செய்தது. லெனினும், அவரது நம்பிக்கைக்குரிய தோழர் லியோன் டிராட்ஸ்கியும் இணைந்து அக்டோபர் புரட்சியை வழி நடத்திச் சென்றனர்.

**1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி**

கெரன்ஸ்கி அரசாங்கத்திற்கான ஆதரவு நாளுக்கு நாள் சரிந்தது. அது அமைந்திருந்த வின்ஸ்டர் மாளிகையை வீரர்கள் கைப்பற்றினர். அனைத்து ரஷ்ய சோவியத்துக்ககளின் பேரவை அன்றே கூடி அனைத்து அரசியல் அதிகாரங்களையும் தம் வசம் எடுத்துக் கொண்டது. 1917 அக்டோபர் 25 ஆம் நாள் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. எனவே இதனை அக்டோபர் புரட்சி என்று கூறினர்.

**ரஷ்யப் புரட்சியின் விளைவுகள்**

முதல் உலகப் போரிலிருந்து ரஷ்யா விலகியது. பின்னர், ஜெர்மனியுடன் ஒரு ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. பண்ணையாளர்கள், திருச்சபை, சார் மன்னர் ஆகியோருடைய நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு குடியானவ சமூகத்திற்கு மாற்றப்பட்டன. தொழிற்சாலைகள் தொழிலாளர் குழுக்களின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன. 1918 ஆம் ஆண்டு மத்தியவாக்கில் காப்பீட்டு நிறுவனங்கள், பெரிய தொழிற்சாலைகள், சுரங்கங்கள், நீர்ப்போக்குவரத்து மற்றும் ரயில்பாதைகள் ஆகியன தேசிய மயமாக்கப்பட்டன. அயல்நாட்டுக் கடனை திருப்பிச் செலுத்த மறுத்ததுடன், அந்நிய முதலீடுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. அனைத்து தேசிய இனத்தவருக்கும் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் வகையில் மக்களின் சுதந்திர பிரகடனம் ஒன்று வெளியிடப்பட்டது. லெனின் தலைமையிலான மக்கள் பிரதிநிதிகள் அரசு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த புதிய நடவடிக்கைகள் சோஷலிச காலத்தின் துவக்கத்தை பறைசாற்றுவதாக இருந்தது.

1918 ஜூலை 10 ஆம் நாள் முதலாவது சோவியத் அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. சோவியத் குடியரசுகள் அடங்கிய ரஷ்ய கூட்டமைப்பை இது ஏற்படுத்தியது. 1922 டிசம்பர் 30 ஆம் நாள் சோவியத் குடியரசுகளின் யூனியன் செயல்படத் துவங்கியது. எனினும், புதிய சோவியத் அரசில் உள்நாட்டுப் போர் தோன்றியது வீழ்ச்சியடைந்த சார் மன்னரின் ஆதரவு வீரர்கள் புதிய சோவியத் அரசுக்கு எதிராக கலகத்தில் ஈடுபட்டனர்.

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான், அமெரிக்கா போன்ற பிற அயல்நாட்டுப்படைகளும் அவர்களுடன் சேர்ந்து கொண்டன. 1920 ஆம் ஆண்டு வரை இப்போர் நீடித்தது. புதிய அரசின் 'செஞ்சேனை' பழைய சார் மன்னரின் ஆட்சிப் பகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. 1923 வரை புரட்சி அலைகள் நீடித்தன என்று கூறலாம்.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்தை படித்ததன்மூலம் மாணவர் பெறும் பலன்*

1. *ரஷ்யப்புரட்சிக்கான அரசியல், சமூக, பொருளாதார காரணங்கள்.*
2. *ரஷ்ய புரட்சியில் லெனின் தலைமையிலான சோஷலிஸ்டுகளின் பங்கு.*
3. *புரட்சியின் போக்கு மற்றும் ரஷ்யாவில் சார் மன்னராட்சி முடிவுக்கு வருதலும்.*
4. *சோவியத் குடியரசு அமைக்கப்படுதலும், ரஷ்யப்புரட்சியின் விளைவுகளும்.*

# பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ரஷ்யாவில் போல்ஷ்விக் கட்சிக்கு தலைமையேற்றவர்

அ) கார்ல் மார்க்ஸ் ஆ) சார் நிக்கோலஸ்

இ) லெனின் ஈ) ஏங்கல்ஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ரஷ்ய சோஷலிச ஜனநாயகக் கட்சியை அமைத்தவர் ______________

2. சோவியத் சோஷலிஸ்டு கூட்டரசு அமைக்கப்பட்ட ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | சார்நிக்கோலஸ் | அ. | தற்காலிக அரசாங்கம் |
| 2. | குருதிஞாயிறு | ஆ. | லெனின் |
| 3. | ஏப்ரல் வாக்குறுதிகள் | இ. | 1905 |
| 4. | கெரன்ஸ்கி | ஈ. | ரோமானாவ் வம்சம் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ரஷ்யாவில் பிப்ரவரி புரட்சிக்கு தலைமையேற்றவர் லெனின்

ஆ. மென்ஷ்விக் அரசாங்கம் கெரன்ஸ்கி தலைமையில் அமைக்கப்பட்டது.

இ. போல்ஷ்விக் கட்சி மிதவாத அரசியல் இயக்கமாகும்.

ஈ. இரண்டாம் சார் நிக்கோலஸ் மென்ஷ்விக்குகளை ஆதரித்தார்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. முதல் உலகப்போரின் இடையில் ரஷ்யா விலகிக் கொண்டது.

2. லெனின் நம்பிக்கைக்குரிய தோழர் லியான் ட்ராட்ஸ்கி

**VI. சிறு குறிப்பு வரைக.(ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. குருதி ஞாயிறு

2. போல்ஷ்விக்குகள்

3. அக்டோபர் புரட்சி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. ரஷ்யப் புரட்சியில் லெனினின் பங்கினைக் குறித்து விவாதி.

2. பிப்ரவரி புரட்சி பற்றி குறிப்பு எழுதுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

2. 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சியின் போக்கைப் பற்றி விவாதி.

# பாடம் – 29

## பன்னாட்டுக் கழகம்


**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்தை படிப்பதனால் மாணவர் அறிந்து கொள்வது*

1. *பன்னாட்டுக் கழகம் நிறுவப்படுதல்*
2. *பன்னாட்டுக் கழகத்தின் அமைப்பு*
3. *பன்னாட்டு கழகத்தின் சாதனைகள்*
4. *பன்னாட்டு கழகத்தன் தோல்விக்கான காரணங்கள்.*

**பன்னாட்டுக் கழகம் நிறுவப்படுதல்**

முதல் உலகப் போர் வெடித்தபிறகு, எதிர்காலத்தில் இத்தகைய போர்கள் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு ஒரு பன்னாட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என உலகத் தலைவர்கள் கருதினர். உலக அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதற்கு ஒரு பன்னாட்டு அமைப்பு உருவாக்கப்படுவதற்காக ஒரு சட்டப்பிரிவும் வெர்சேல்ஸ் உடன் படிக்கையில் இடம் பெற்றிருந்தது. பன்னாட்டுக் கழகம் நிறுவப்படுவதற்கு காரணமாக இருந்தவர் அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சன் ஆவார். இதற்கான கருத்து அவருடையதேயாகும். உட்ரோ வில்சனின் 14 கோட்பாடுகளும் பல்வேறு நாடுகளை உள்ளடக்கிய சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. பாரிஸ் நகரில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின்போது பன்னாட்டுக் கழகம் அமைப்பதற்காக அவர் பெருமுயற்சி எடுத்தார். 1920 ஆம் ஆண்டுதான் பன்னாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் ஜெனீவா நகரில் அமைந்தது. இவ்வாறு பன்னாட்டுக் கழகம் ஏற்படுத்தப்பட்ட போதிலும் அதனால் இரண்டாம் உலகப் போர் தோன்றுவதை தடுக்க முடியவில்லை.



**உட்ரோ வில்சன்**

**பன்னாட்டு கழகத்தின் நோக்கங்கள்**

நாடுகளிடையே எழும் பிரச்சினைகளை அமைதியான பேச்சு வார்த்தை மூலம் தீர்த்து, போர்கள் ஏற்படாமல் தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். பன்னாட்டு பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் புரிதல் ஆகியவற்றின் துணைகொண்டு உறுப்பு நாடுகளின் சுதந்திரத்தை பேணிப் பாதுகாப்பதும் இக்கழகத்தின் நோக்கமாகும்.

**கழகத்தின் உறுப்புகள்**

இத்தகைய நோக்கங்களை திறப்பட செயல்படுத்துவதற்காக பன்னாட்டு கழகத்தின் பொது அவை மற்றும் நிர்வாக சபை போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டன. தொடக்கத்தில், ஜெர்மனியை முறியடித்த நாடுகளும் அதன் தோழமை நாடுகளும் இக்கழகத்தில் உறுப்பு நாடுகளாயின.

**பொது அவை**

பன்னாட்டுக் கழகத்தின் உச்ச அதிகாரம் படைத்த பொது அவையில் அதன் உறுப்பு நாடுகள் அங்கம் வகித்தன. ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படை பின்பற்றப்பட்டது. ஆனால், எந்தவொரு முடிவும் ஒருமனதாக எடுக்கப்பட வேண்டும் என விதிக்கப்பட்டது. பன்னாட்டு சட்டமன்றம் என்று இந்த அவையைக் கூறுலாம்.


**நிர்வாக சபை**

தொடக்கத்தில் நான்கு நிரந்தர உறுப்பினர்களும், பொது அவையால் தேர்ந்தெடுக்கப் பட்ட வேறு நான்கு உறுப்பினர்களும் நிர்வாக சபையில் இடம் பெற்றிருந்தனர். 1926ல் ஜெர்மனியும் இதில் நிரந்தர உறுப்பினராகியது. நிரந்தரமல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து அதிகபட்சம் பதினொன்றாகியது. இவ்விரண்டு உறுப்புகளில் பொது அவையே வலிமை பெற்று விளங்கியது.

**செயலகம்**

இது ஜெனீவா நகரில் அமைந்திருந்தது. இதன் பொதுச் செயலர் நிர்வாக சபையால் நியமிக்கப்பட்டார். பொது அவையும் இவரது நியமனத்தை ஏற்கவேண்டும். பொது செயலர், நிர்வாக சபையின் ஆலோசனையின்பேரில் செயலகத்தின் இதர பணியாளர்களை நியமித்தார். செயலகத்தின் செலவுக்கான நிதியை உறுப்பு நாடுகள் வழங்கின.

**பன்னாட்டு கழகத்தின் அமைப்பு**




**பன்னாட்டு நீதிமன்றம்**

திஹேக் நகரைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள பன்னாட்டு நீதிமன்றத்தில் 15 நீதிபதிகள் இருந்தனர். பன்னாட்டு சட்டம், உடன்படிக்கைகள், பரஸ்பர செயல்முறைகள் குறித்த

விளக்கங்களையும் முக்கிய தீர்ப்புகளையும் இந்த நீதிமன்றம் வழங்கியது. இந்த நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஒன்பது ஆண்டுப் பதவிக்காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பன்னாட்டு தொழிலாளர் சங்கம்**

ஜெனீவாவை தலைநகராகக் கொண்ட இந்த அமைப்பு பன்னாட்டு சங்கத்துடன் இணைந்த ஒன்றாகும். இதன் முக்கியக் குறிக்கோள் உலகத் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாப்பது ஆகும். இதன் நிர்வாகச் சபையில் முக்கிய உறுப்பினர்கள் அரசாங்கம், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் ஆவர்.

**மேன்டேட் முறை**

இந்த முறையை பன்னாட்டுக் கழகம் ஏற்படுத்தியது. ஜெர்மனி போன்ற ஒப்பந்த நாடுகள் மற்றும் துருக்கியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பகுதிகள் திரும்பவும் அந்தந்த நாடுகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. மாறாக, அப்பகுதிகளின் நிர்வாகம் பன்னாட்டு கழகத்தின் மேற்பார்வையின் கீழ் பல்வேறு நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

**பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகள்**

**ஆலந்து தீவுகள்**

இந்த தீவுகள் ஸ்வீடனுக்கும் பின்லாந்துக்கும் இடையில் உள்ளன. முன்னர் ஆலந்து தீவுகள் ஸ்வீடனின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஆலந்து தீவுகள் யாருக்கு உரிமையானது என்பது குறித்த சர்ச்சை ஸ்வீடனுக்கும் பின்லாந்துக்கும் இடையே 1920ல் தோன்றியது. பன்னாட்டுக் கழகத்தின் சார்பில் ஒரு சிறப்புக்குழு ஆய்வு செய்து, ஆலந்து தீவுகளை பின்லாந்திடம் ஒப்படைத்தது.

**மொசூல் எல்லைச்சிக்கல்**

கிரேட் பிரிட்டனின் பாதுகாப்பில் விடப்பட்டிருந்த ஈராக் மற்றும் துருக்கி நாட்டிற்கும் இடையே எழுந்த எல்லைச் சிக்கல் மொசூல் எல்லைச்சிக்கல் எனப்படுகிறது. எண்ணெய் வளம் மிகுந்த மொசூல் தமக்கே உரித்தானது என்று இரண்டு தரப்பும் கூறின. இருதரப்பு எல்லை குறித்து எந்தவொரு உடன்பாட்டுக்கும் வரவில்லை. எனவே, பன்னாட்டுகழகம் தனது இறுதி முடிவை அறிவித்தது. ஈராக், துருக்கி ஆகிய நாடுகளுக்கிடையில் பிரஸ்ஸல்ஸ் எல்லைக்கோடு நிரந்தர எல்லையாக முடிவு செய்யப்பட்டது. பின்னர் 1926 ஜூனில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கைப்படி கிரேட் பிரிட்டன் துருக்கிக்கு மொசூலின் ஒரு சிறு பகுதியை விட்டுக் கொடுத்தது. திருத்தப்பட்ட எல்லைக் கோடு இறுதியாக்கப்பட்டது. மொசூல் எண்ணெய் வயல்களுக்கு ஈடாக சன்மானத்தையும் துருக்கி பெற்றது.

**யூபென் மற்றும் மால்மடி**

1920 மற்றும் 1921 ஆம் ஆண்டுகளில் யூபென், மால்மடி பகுதிகள் பெல்ஜியத்திற்கு வழங்கப்பட்டன. இதனை எதிர்த்து ஜெர்மனி பன்னாட்டு சங்கத்திடம் முறையிட்டது. 1920 செப்டம்பரில் கழகத்தின் நிர்வாக சபை இது குறித்து விவாதித்தது. யூபென், மால்மடி பகுதிகளை பெல்ஜியத்திற்கு வழங்கியது இறுதியான முடிவு என்று ஜெர்மனி அரசுக்கு தகவல் அனுப்பியது.

**செர்பு நிகழ்ச்சி**

1923 ஆகஸ்டில் ஒரு இத்தாலிய தளபதியும் இரண்டு அதிகாரிகளும் கிரேக்கத்தில் படுகொலை செய்யப்பட்டனர். இத்தாலியர்கள் இந்த குற்றத்திற்கான இழப்பீட்டையும் மன்னிப்பையும் கோரினர். இத்தாலியின் கோரிக்கையை கிரேக்கம் மறுத்தது. எனவே, செர்பு தீவை இத்தாலி ஆக்ரமித்துக் கொண்டது. இந்த பிரச்சினையில் இங்கிலாந்தும் பிரான்சும் தலையிட்டு இத்தாலி கிரேக்க நாடுகளுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்தியது.

**கிரீஸ் மற்றும் பல்கேரியா இடையிலான பிரச்சனை**

கிரிஸ் பல்கேரியா நாடுகளுக்கிடையே எல்லைத்தகராறு இருந்து வந்தது. 1925ல் ஒரு கிரேக்கத்தளபதி படுகொலை செய்யப்பட்டார். இதனால், கிரேக்க ராணுவம் பல்கேரியாவுக்குள் நுழைந்தது. பன்னாட்டுக் கழக நிர்வாக சபை இந்த பிரச்சினையைப் பற்றி விசாரிப்பதற்காக பிரிட்டனையும் பிரான்சையும் கேட்டுக்கொண்டது. கிரேக்கப்படைகள் திருப்பியழைக்கப்பட்டன. பல்கேரியாவுக்கு இழப்பீடு வழங்கப்பட்டது.

**கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையிலான பிரச்னை**

டியூனிஸ் மற்றும் மொராக்கோ தேசியம் குறித்து கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் இடையில் பிரச்னை தோன்றியது. பன்னாட்டு நீதிமன்றத்தின்முன்பு இந்த பிரச்சினை எடுத்து செல்லப்பட்டது. இருப்பினும் இரு நாடுகளின் அயலுறவு அமைச்சர்கள் பரஸ்பர பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

**அரசியல் சார்பற்ற பணிகள்**

பன்னாட்டுக் கழகம் பல்வேறு அரசியல் சார்பற்ற பணிகளையும் ஆற்றியுள்ளது. 1925ல் ஜெனீவா நகரில் அடிமை முறை குறித்த மாநாடு நடைபெற்றது. 1932ல் ஒரு நிரந்தர அடிமைமுறை ஆணையம் நிறுவப்பட்டது. பன்னாட்டுக் கழகத்தின் நிதி ஆணையம் ஆஸ்திரியா, ஹங்கேரி, கிரீஸ் போன்ற நாடுகளுக்கு கடனுதவி வழங்கியது. 1923ல் பன்னாட்டுக் கழகம் ஒரு சுகாதார அமைப்பை ஏற்படுத்தியது. மலேரியா, அம்மை, நாய்க்கடி, வெறிநோய், புற்றநோய், காசநோய், இதயநோய் போன்ற நோய்களை ஒழிப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது, பல்வேறு நாடுகளின் தேசிய சுகாதாரத்தை மேம்படுத்த இந்த ஆணையம் உதவியது. பல்வேறு மாநாடுகளையும் இது கூட்டியது. போதைப் பொருள்தடுப்பு. குடியானவர் முன்னேற்றம் போன்றவற்றில் பன்னாட்டுக் கழகம் பெரும்பணிகளை ஆற்றியுள்ளது.

**பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்கள்**

உலக அமைதியை ஏற்படுத்தும் தலையாய கடமையில் பன்னாட்டுக் கழகம் தோல்வி கண்டது. இருபதாண்டுகள் பன்னாட்டுக் கழகம் அமைதிக்கான முயற்சிகளை எடுத்தபோதிலும், 1939ல் மீண்டும் உலகப் போர் தோன்றியது. பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கு பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

அமெரிக்கா, சோவியத்ரஷ்யா போன்ற பெரும் நாடுகள் இதில் உறுபிப்பினராக இல்லை. இது முக்கிய குறைபாடாகும்.

பன்னாட்டுக் கழகத்தின் சட்ட ஆவணம் அமைதி ஏற்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது மிகவும் துரதிர்ஷ்டமானதாகும். அவையிரண்டும் தனித்தனியாக இருந்திருந்தால்

நன்றாக இருந்திருக்கும். வெர்சேல்ஸ் உடன்படிக்கையை பல நாடுகள் பழிவாங்கும் உடன்படிக்கை என்று கருதி அதனை ஏற்க மறுத்தன. உடன்படிக்கையை ஏற்காததால் பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராக முடியவில்லை. பெரிய நாடுகள் உறுப்பினராகாததால் கழகம் பலவீனமடைந்தது. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் கழகத்தைவிட்டு வெளியேறின. இதனாலும் கழகம் வலிமையிழந்தது.

முதல் உலகப்போரில் வெற்றிபெற்ற நாடுகள் குறிப்பாக இங்கிலாந்து, பிரான்சு ஆகியவை கழகத்தில் ஆதிக்கம் செலுத்துவதாக உலக நாடுகளிடையே பரவலான கருத்து இருந்தது. எனவே, பன்னாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளை அந்த நாடுகள் சந்தேகத்துடன் நோக்கின.

ஜெர்மனி போன்ற நாடுகளை வெற்றிபெற்ற நாடுகள் அவமானப் படுத்தின. பொருளாதார சீர்குலைவில் சிக்கித்தவித்த தருணத்தில் ஜெர்மனி போர் இழப்பீட்டை செலுத்தும்படி கட்டாயப் படுத்தப்பட்டது. எனவே, அமைதிக்கான சந்தர்ப்பம் ஏதும் காணப்படவில்லை.

முதல் உலகப் போருக்குப்பின்பு இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் எழுச்சி பெற்றன. தூரகிழக்குப்பகுதியில் ஜப்பான் மஞ்சூரியாவைக் கைப்பற்றியது. ஜப்பானின் இந்த நடவடிக்கையை கண்டிக்கும் நிலையில் பன்னாட்டுக் கழகம் இல்லை. கண்டித்தால் கழகத்தைவிட்டு வெளியேறவும் ஜப்பான் தயாராக இருந்தது.

இத்தாலியிலும் பாசிச சர்வாதிகாரம் தோன்றியது. குறுகிய தேசிய உணர்வை மக்களிடம் பரப்பியது. இத்தாலி அபிசீனியாவைக் கைப்பற்றியது. இதனை பன்னாட்டுக்கழகம் தட்டிக் கேட்டபோது, இத்தாலி அதிலிருந்து வெளியேறியது.

வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி நடந்து கொள்ள ஜெர்மனியும் தயாராக இல்லை. அங்கு நாசிச சர்வாதிகாரம் எழுச்சி பெற்றது. போலியானதொரு தேசப்பற்றை ஹிட்லர் போதித்தார். பிற இனங்களைவிட ஜெர்மானிய இனம் உயர்ந்தது என்றும் அவர் கூறினார். ஆஸ்திரியா, போலந்து ஆகியவற்றின்மீது ஜெர்மனி ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று கூறி அவற்றை ஹிட்லர் கைப்பற்றினார். இந்த செயலைத் தட்டிக் கேட்டதால், ஜெர்மனி பன்னாட்டுக் கழகத்திலிருந்து வெளியேறியது.

பன்னாட்டுக் கழகத்தின் செயல்பாடுகளில் சிறிய நாடுகள் நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. பெரும் நாடுகள் மேற்கொண்டுவந்த ஆக்ரமிப்புகளை தட்டிக்கேட்கும் ஆற்றல் பன்னாட்டுக் கழகத்திற்கு இல்லை என அவை உணர்ந்தன.

பொருளாதார சிக்கலில் இருந்த ஜெர்மனியை போர் இழப்பீட்டைத் தருமாறு பிரான்ஸ் வற்புறுத்தியதால். அந்நாட்டு அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டது. வெய்மார் குடியரசு வீழ்ச்சியடைந்தது. இதனால், ஜெர்மனியில் ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றினார். பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கு அவரது நடவடிக்கைகள் காரணமாயின.

முதல் உலகப்போரின் முடிவில் பன்னாட்டுக் கழகம் உதயமானதை உலக நாடுகள் வரவேற்றன. ஆனால் அதன் உறுப்புநாடுகள் போதிய ஒத்துழைப்பை அளிக்கவில்லை. எனவே, தனது குறிக்கோளை கழகம் எட்டவில்லை. இரண்டாம் உலகப்போர் வெடித்தது. பன்னாட்டு கழகத்தின் சிதைவுக்குப்பிறகு ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்டது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெற்ற கருத்துக்கள்*

1. *பன்னாட்டுக் கழகம் நிறுவப்பட்டது.*
2. *அதற்கு உட்ரோ வில்சன் ஆற்றிய பங்கு.*
3. *உலக அமைதிக்காக பன்னாட்டுக் கழகத்தின் சாதனைகள்*
4. *பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்கள்*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பன்னாட்டுக் கழகம் உருவாகக் காரணமாக இருந்தவர்

அ) ஜார்ஜ் ஆ) ஹாரி ட்ரூமன்

இ) எம்.டி. ரூஸ்வெல்ட் ஈ) உட்ரோ வில்சன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பன்னாட்டுக் கழகம் நிறுவப்பட்ட ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | பன்னாட்டுக் கழகத்தின் தலைமையிடம் | அ. | தி ஹேக் |
| 2. | பன்னாட்டு நீதிமன்றம் | ஆ. | செர்பு தீவு |
| 3. | இத்தாலி | இ. | துருக்கி மற்றும் ஈராக் |
| 4. | மொசூல் எல்லை கோடு | ஈ. | ஜெனிவா |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. அமெரிக்கா பன்னாட்டுக் கழகத்தில் உறுப்பினராகவில்லை.

ஆ. உலகப் போரைத் தடுப்பதில் பன்னாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இ. ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்காமல் பன்னாட்டுக் கழகம் தடுத்தது.

ஈ. பன்னாட்டுக் கழகத்தின் முடிவுகளை ஹிட்லரும் முசோலினியும் மதித்து நடந்தனர்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. பன்னாட்டுக் கழகம் பாதுகாப்பு முறையை கொண்டுவந்தது.
2. பன்னாட்டுக் கழகத்துக்குப் பதில் ஐ.நா. சபை ஏற்படுத்தப்பட்டது.

**VI. சிறு குறிப்பு எழுதுக.(ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு
2. பாதுகாப்பு முறை
3. செர்பு நிகழ்ச்சி

**VII. குறுகிய விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. பன்னாட்டுக் கழகம் அமைக்கப்பட்டதை தொகுத்துக் கூறுக.
2. பன்னாட்டுக் கழகத்தின் முக்கிய உறுப்புகளை விவரி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. பன்னாட்டு கழகத்தின் சாதனைகளை ஆய்க
2. பன்னாட்டுக் கழகத்தின் தோல்விக்கான காரணங்களை ஆய்க

## பாடம் – 30

## பாசிச, நாசிச கொள்கைகளின் எழுச்சி

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்தி*

1. *இத்தாலியில் பாசிசத்தின் எழுச்சியும் அதற்கான காரணங்களும்.*
2. *முசோலினியின் அயல்நாட்டுக் கொள்கை*
3. *ஜெர்மனியில் நாசிசத்தின் எழுச்சியும் அதற்கான காரணங்களும்*
4. *ஹிட்லரின் அயல்நாட்டுக் கொள்கையும் அதன் விளைவுகளும்.*

**முசோலினியும் பாசிச இத்தாலியும்**

**இத்தாலியில் பாசிசம் கொள்கை வளரக் காரணங்கள்**

பாரிஸ் அமைதி மாநாட்டில் இத்தாலி பெரும் எதிர்பார்ப்புகளோடு கலந்துகொண்டது. 1915 ஆம் ஆண்டு நேச நாடுகளுடன் இத்தாலி ரகசியமாக செய்து கொண்ட லண்டன் உடன்படிக்கை அதற்கு நம்பிக்கையளிப்பதாக அமைந்தது. பாரிஸ் மாநாட்டில், இத்தாலிய அமைச்சர் ஆர்லாண்டோ தமது கோரிக்கைகளை முன்வைத்தார். ஆனால், அமெரிக்க அதிபர் உட்ரோவில்சன் லண்டன் உடன்படிக்கையை நிராகரித்துவிட்டார். ஏட்ரியாடிக் கடல்பகுதியிலிருந்த தீவுகள், சில துருக்கிய மாகாணங்கள் மற்றும் பால்கன் பகுதியிலிருந்த அல்பேனியா ஆகியவற்றை இத்தாலி தமக்கு வேண்டுமென கோரியிருந்தது. இவையனைத்தும் நிராகரிக்கப்பட்டன. எனவே, பாரிஸ் அமைதி மாநாட்டில் இத்தாலிக்கு எந்த பயனும் கிட்டவில்லை. **“இத்தாலி போரில் வென்றது : ஆனால் அமைதியை இழந்தது.”**

**பொருளாதார நிலை**

முதல் உலகப்போரின்போது இத்தாலி தனது தேசிய வருமானத்தைவிட அதிகமாகவே பெருந்தொகையை செலவிட்டது. இதனால் அதன் பொருளாதாரம் சீர்குலைந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. இத்தாலிய அரசாங்கமே இதற்கு காரணம் என்று மக்கள் நம்பினார்கள். எனவே, மாற்று அரசாங்கத்தை அமைக்க அவர்கள் தயாராக இருந்தனர். இத்தகைய அதிருப்தியினால்தான் பாசிச கட்சி இத்தாலியில் தோன்றியது எனலாம்.

**சோஷலிசம் பரவுதல்**



முசோலினி

வேலையில்லாத திண்டாட்டம், வறுமை, பணவீக்கம், போன்ற காரணங்களால் சோஷலிச கருத்துக்கள் இத்தாலிய மக்களிடையே வேகமாகப் பரவியது. மார்க்சீய கோட்பாட்டாளர்கள் ‘இத்தாலிய சோஷியல் டெமாகிரட்’ என்ற அரசியல் கட்சியை தொடங்கி நடத்தி வந்தனர். 1919 ஆம் ஆண்டு தேர்தலில் இக்கட்சி மொத்தமிருந்த 574 இடங்களில் 156 இடங்களில் வெற்றி பெற்றனர். இக்கட்சி இத்தாலியில் பாசிசம் வளர பேருதவியாக இருந்தது.

**முசோலினியின் எழுச்சி**

பாசிசக் கொள்கையை வகுத்தவர் பெனிடோ முசோலினி ஆவார். 1883 ஆம் ஆண்டு ஒரு இரும்புத் தொழிலாயிளின் மகனாகப் பிறந்த அவர் சோஷலிச கொள்கையை பெரிதும் கடைப்பிடித்தார். சிறுவயது முதலே சோஷலிச சித்தாந்தத்தில் அவர் அதிகம் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் பள்ளி ஆசிரியராகவும், தொழிற்சங்கவாதியாகவும் பின்னர் பத்திரிகையாளராகவும் திகழ்ந்தார். புரட்சி கருத்துக்களை பரப்பியதற்காக முசோலினி 1908இல் சிறைப்படுத்தப்பட்டார். 1912ல் சோஷலிச பத்திரிகையான **அவந்தி** என்ற ஏட்டின் பதிப்பாளரானார்.

முதல் உலகப்போர் தொடங்கியபோது இத்தாலிய அரசாங்கம் போரில் பங்கு பெறுவதில்லை என முடிவெடுத்தது. ஆனால், இத்தாலி நேசநாடுகளுக்கு ஆதரவாக போரில் இறங்க வேண்டும் என முசோலினி தீவிரமாக பிரச்சாரம் செய்தார். அதற்காக அவர் தண்டிக்கப்பட்டார். பின்னர், நேச நாடுகளுக்கு ஆதரவாக இத்தாலி போரில் இறங்க வேண்டியதாயிற்று. இதனால், முசோலினியின் புகழ் அதிகரித்தது. ஒரு வீரனாக முசோலினியும் போரில் கலந்துக்கொண்டார்.

1917 ஆம் ஆண்டு ரஷ்யாவில் போல்ஷ்விக் புரட்சி நடைபெற்றது. ரஷ்ய புரட்சி இத்தாலிய மக்களையும் வெகுவாகக் கவர்ந்தது. இத்தாலிய கம்யூனிஸ்ட்களும் ஒரு பெரும்புரட்சிக்கு திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். போல்ஷ்விக்குளை கடுமையாக எதிர்த்த முசோலினி, கம்யூனிசத்துக்கு எதிராக ஒரு அரசியல் கட்சி தொடங்க முடிவுசெய்தார். 1919 மார்ச்சில் முசோலினியின் தலைமையில் பாசிச கட்சி தொடங்கப்பட்டது. அதன் உறுப்பினர்கள் கருஞ்சட்டை அணிந்ததோடு கையில் ஆயுதமும் ஏந்தினர். கட்சிக்கொடியும் உருவாக்கப்பட்டது. அக்கட்சியின் உறுப்பினர்கள் கட்டுப்பாடு மிகுந்தவர்களாக இருந்ததோடு முசோலினியை தங்களது தலைவராக ஏற்றுக்கொண்டனர்.

மிலானில் நடைபெற்ற பாசிச கட்சியின் முதலாவது மாநாட்டில் முசோலினி கட்சியின் சாசனத்தையும் திட்டங்களையும் அறிவித்தார் அவையாவன :

- தொழிற்சாலைகளை தேசிய மயமாக்குதல்
- முதலாளித்துவவாதிகளிடமிருந்த அதிகப்படியான செல்வத்தை பறிமுதல் செய்தல்.
- வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை.
- திருச்சபை சொத்துக்களை பறிமுதல் செய்தல்
- தொழிற்சாலைகளில் எட்டு மணி நேர வேலை
- ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குதல்.

பாசிச கட்சியின் இந்த கோரிக்கைகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றன. கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை வேகமாகப் பெருகியது. 1919ல், 17000 பேர் மட்டுமே பாசிச கட்சியில் உறுப்பினர்களாயிருந்தனர். 1922ல் அது மூன்று லட்சம் பேராக அதிகரித்தது. சோஷலிச மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களை பாசிச கட்சியினர் வலிந்து கைப்பற்றினர்.

1922 அக்டோபரில் பாசிச கட்சி நேபிள்ஸ் நகரில் கட்சி மாநாட்டைக் கூட்டியது. அதில் கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமைச்சரவையில் பாசிச கட்சி உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ளவேண்டும்; சட்டமன்றங்களுக்கு புதிதாக தேர்தல் நடத்தவேண்டும்; தீவிர அயலுறவுக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்பதே இந்த கோரிக்கைப்பட்டியலின் முக்கிய அம்சங்கள். இதனை இத்தாலிய அரசாங்கம் ஏற்க மறுத்தது. எனவே, முசோலினியின் தலைமையில் ரோம் நோக்கி மாபெரும் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. பேரணியினர் அனைத்து அரசு அலுவலகங்களையும் கைப்பற்றினர். இத்தாலியில் ராணுவ ஆட்சியைக் கொண்டுவருமாறு அரசர் மூன்றாம் விக்டர் இம்மானுவேலை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. இறுதியில் ஆட்சியமைக்குமாறு முசோலினிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

**இத்தாலிய பிரதமராக முசோலினி**

முசோலினி செயல்திறம் படைத்த பிரதமராகத் திகழ்ந்தார். ஆட்சியை சீரமைக்க பல நடவடிக்கைகளை அவர் எடுத்தார்;

- நேபிள்ஸ், சிசிலி போன்ற பகுதிகளிலிருந்த கொள்ளையர்கள் நசுக்கப்பட்டனர்.
- தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலைமைகள் மேம்பட்டன.
- தொழிற்சங்கள் கலைக்கப்பட்டன
- நாடாளுமன்றத்தின் அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன.
- தலைவருக்கு நம்பிக்கையானவர்கள் மட்டுமே அமைச்சர்களாகவும், அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டனர்.

திருத்தப்பட்ட புதிய சட்டங்களின்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. தேசிய நாடாளுமன்றத்தில் பாசிச கட்சி அருதிப் பெரும்பான்மை பெற்றது. தேர்தல் வெற்றிக்குப் பிறகு எதிரிகளை ஒடுக்க முசோலினி சில நடவடிக்கைகளை எடுத்தார்.

- உள்ளாட்சி அமைப்புகள் அனைத்தும் முடக்கப்பட்டன.
- பாசிச வழக்குரைஞர்கள் மட்டுமே வழக்குகளில் வாதாட அனுமதிக்கப்பட்டனர்.
- 1926ல் அனைத்து அரசியல் கட்சிகளும் தடை செய்யப்பட்டன.
- அமைச்சரவை அரசாங்க முறை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
- பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்பட்டது.
- காவல்துறைக்கு வரம்பற்ற அதிகாரம் வழங்கப்பட்டது
- எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிறைப்படுத்தப்பட்டனர்.

**சர்வாதிகாரியாக முசோலினி**

ஒரே கட்சி, ஒரே தலைவர் என்பது பாசிச கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும். முசோலினிக்கு மக்களாட்சி முறையிலோ, பெரும்பான்மை ஆட்சியிலோ நம்பிக்கையில்லை. அரசின் எதேச்சாதிகாரத்தையே அவர் பெரிதும் நம்பினார். தனிமனித உரிமை என்பது ஏதும் இல்லை. மாறாக, அரசின் அதிகாரத்தையே தனிமனிதன் அங்கீகரித்து நடக்க வேண்டும் என்று அவர் கருதி, அதன்வழியாக தனது சர்வாதிகாரத்தை நிலைப்படுத்தினார்.

**ஜெர்மனியில் நாசிசம்**

முதல் உலகப்போருக்குப்பின்பு ஜெர்மனி மற்றும் பிற முறியடிக்கப்பட்ட நாடுகள்மீது அமைதி உடன்படிக்கைகள் திணிக்கப்பட்டன. இதன் விளைவாக ஜெர்மனியில் தீவிர தேசியம் பொங்கியெழுந்தது. பொருளாதார சீர்குலைவும் அதைத்தொடர்ந்து எழுந்த சோஷலிச சக்திகளும் ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கும் நாசிச கொள்கைகளின் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன. இத்தாலியிலும், ஜப்பானிலும்கூட அதே நிலைமைகள் நிலவின. இதனால் தான் இந்த மூன்று நாடுகளுக்குமிடையே அச்சு ஒன்று உருவாகியது. ஹிட்லரின் ஆக்ரமிப்பு நோக்கம் கொண்ட அயலுறவுகொள்கை இரண்டாம் உலகப்போருக்கு இட்டுச் சென்றது.

**முதல் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி**

முதல் உலகப்போரின் இறுதிக்கட்டத்தல் ஜெர்மானிய அரசர் வில்லியம் தனது பதவியைத் துறந்தார். ஜெர்மனி ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டது. சோஷலிச – டெமாகிரடிக் கட்சியின் தலைவரான எல்பர்ட் ஒரு தற்காலிக அரசை அங்கு அமைத்தார். பின்னர் அரசியலமைப்பு குழுவிற்க்ான தேர்தல் நடைபெற்றது. வெய்மார் நகரில் அரசியலமைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே **வெய்மார் அரசியலமைப்பு** எனப்படுகிறது.

**அரசு ஆதரவாளர்களின் கிளர்ச்சி**

வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஜெர்மனியை தண்டிக்கும் விதத்திலும், அவமானப்படுத்தும் விதத்திலும் அமைந்திருந்தது. ஜெர்மனி தனது நிலப்பகுதியில் பலவற்றை இழந்தது. ஆயுதக் குறைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. போர் இழப்பீட்டுத்தொகை பலமடங்கு நிர்ணயிக்கப்பட்டது. உலகப் போருக்கு ஜெர்மனியே காரணம் என்றும் கூறப்பட்டது. இதனால், ஜெர்மானியரின் உணர்வுகள் பெரிதும் புண்பட்டன. வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திடுவதையே ஜெர்மனியின் ஒரு பிரிவினர் கடுமையாக எதிர்த்தனர்.

1920 மார்ச் திங்களில், டாக்டர் காப் என்பவரது தலைமையில் அரச ஆதரவாளர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், இக்கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. அரச ஆதரவாளர்கள் குடியரசு அரசாங்கத்திடம் சரணடைந்தனர். பின்னர், லுடன்டார்ப் என்பவரது தலைமையில் இரண்டாவது கிளர்ச்சி நடைபெற்றது. இவருக்கு ஹிட்லர் பக்கபலமாக இருந்தார். லூடன்டாப், ஹிட்லர் இருவருமே கைது செய்யப்பட்டு ஐந்து ஆண்டு சிறைத்தண்டனைக்குட்படுத்தப்பட்டனர். இந்த சிறை வாசத்தின் போதுதான் ஹிட்லர் தனது புகழ்பெற்ற **'மெய்ன் காம்ப்'** அல்லது **'எனது போராட்டம்'** என்ற நூலை எழுதினார். பிற்காலத்தில இந்த நூலே நாசிச கட்சியின் புனித நூலாகத் திகழ்ந்தது.

**பொருளாதார சிக்கல்**

போருக்குப் பிந்தைய காலத்தல் ஜெர்மனி கடும் நிதிநெருக்கடிக்கு ஆளாகியது. போர் இழப்பீட்டை செலுத்துவதற்காக அரசாங்கம் பெருந்தொகை கடன் வாங்க வேண்டியிருந்தது. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. வணிகம் முடங்கிப்போயிற்று. வரிச்சுமை அதிகரித்தது. நிதி நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசாங்கம் காகிதப் பணத்தை மேலும் அச்சிட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. இதனால், பணவீக்கம் ஏற்பட்டு பணத்தின் மதிப்பு குறைந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது

**போர் இழப்பீடு**

வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி, போருக்குக்காரணம் என்று குற்றம் சாட்டப்பட்ட ஜெர்மனி போர் நஷ்டஈடாக பெரும்தொகையை செலுத்த வேண்டியிருந்தது. போர் இழப்பீட்டுத் தொகை 660 மில்லியன் பவுண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு ஜெர்மனியில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. முதல் உலகப்போருக்கு ஜெர்மனி காரணம் இல்லை என்றும் போர் இழப்பீடாக இவ்வளவு பெரிய தொகையை ஜெர்மனி செலுத்த வேண்டியதில்லை என்றும் எதிர்பாளர்கள் வாதாடினர்.

**டாஸ் திட்டம்**

ஜெர்மனியில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக, போர் இழப்பீட்டை குறைக்க வேண்டும் என்று வெய்மார் குடியரசு நேச நாடுகளை கேட்டுக் கொண்டது. இதனால் அமெரிக்க நிதி நிர்வாக வல்லுனரான டாஸ் என்பவரின் தலைமையில் பத்து உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழு வெர்சேல்ஸ் உடன்படிக்கையின் பிரிவுகளின் ஒருசில திருத்தங்களை செய்தது. ஜெர்மனியின் நிதிச்சுமை ஓரளவுக்கு குறைக்கப்பட்டது. 1929 ஆம் ஆண்டு மீண்டும் போர் இழப்பீட்டுப் பிரச்சினை தோன்றியபோது **யங் குழு** அறிவித்த திட்டத்தின்படி அதற்கு தீர்வு காணப்பட்டது.



**ஹிட்லர்**

**ஹிட்லரும் நாசிச ஜெர்மனியும்**

அடால்ப் ஹிட்லர் 1889 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவில் ஒரு கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். வறுமையின் காரணமாக அவர் முறையான கல்வி கற்க வாய்ப்பில்லாமல் போயிற்று. அவரை ஒரு அரசாங்க ஊழியராக்க வேண்டும் என அவரது தந்தை விரும்பினார். ஆனால், ஹிட்லர் சிறுவயது முதலே கலையில் ஆர்வம் காட்டினார். தனது 18வது வயதில் ஓவியம் மற்றும் கட்டிடக்கலை பயில்வதற்காக வியன்னா நகருக்கு சென்றார். வியன்னாவில் அவர் இருந்தபோது அங்கு வாழ்ந்த யூதர்களின் பழக்கவழக்கங்களை பார்க்க நேர்ந்தது. தனிப்பட்ட ஆளுமை, தேசியம், இனவாதம் போன்றவற்றுக்கு யூதர்கள் தார்மீகமான எதிரிகள் என அவர் உணர்ந்தார்.

மேலும், யூதர்கள் மார்க்சீய கொள்கையை ஆதரிப்பதாகவும் கருதினார். இளம் வயதிலேயே ஹிட்லரிடம் யூத எதிர்ப்பு கருத்துக்கள் வேரூன்றின. ஜனநாயகத்தை எதிர்த்த ஹிட்லர் ஜெர்மானிய இனத்தின் மேன்மையில் அசையாத நம்பிக்கை கொண்டார்.

முதல் உலகப்போரின்போது, ஹிட்லர் ராணுவத்தல் சேர்ந்து போரில் பங்குபெற்றார். போரில் ஆற்றிய வீரச் செயல்களுக்காக **'இரும்புச் சிலுவை'** என்ற விருது அவருக்கு வழங்கப்பட்டது. யூதர்களும், கம்யூனிஸ்டுகளுமே ஜெர்மனியின் தோல்விக்கு காரணம் என ஹிட்லர் நம்பினார். தோல்விக்கு பழிவாங்கும் திட்டங்கள் அவர் மனதில் உதிக்கத் தொடங்கின.

**நாசிச கட்சி**

தனது திட்டங்களை செயல்படுத்துவதற்காக, ஹிட்லர் தேசிய சோஷலிச கட்சி அல்லது நாசிச கட்சியைத் தொடங்கினார். நாசிச கட்சியின் சின்னம் ஸ்வஸ்திகா 1932 ஆம்

ஆண்டு வாக்கில் நாசிச கட்சியின் எண்ணிக்கை 70 லட்சத்தை தாண்டியது. தனது கட்சியில் இளைஞர்களை கவர்ந்திழுப்பதற்கு '**ஹிட்லர் இளைஞர் கழகம்**' என்ற அமைப்பையும் ஹிட்லர் தோற்றுவித்தார். இரண்டு ராணுவ அமைப்புகளையும் அவர் ஏற்படுத்தினார். பழுப்பு நிற சட்டை அணிந்த ஒரு அமைப்பினர் கைப்பட்டையில் சிகப்பு நிறத்தல் **ஸ்வஸ்திகா** சின்னத்தை பொறித்திருந்தனர். மற்றொரு பிரிவினர் '**கருஞ்சட்டையினர்**' என அழைக்கப்பட்டனர். இவர்கள் நாசிச கட்சியின் தலைவர்களுக்கு பாதுகாவலர்களாக இருந்தனர்.

1932ல் ஹிட்லர் அதிபர் பதவிக்கு போட்டியிட்டார். ஆனால் ஹிண்டன்பர்க் என்பவருக்கு எதிராக சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப்போனார்.அதே ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவரது கட்சி நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மை பெற்ற கட்சியாக வெற்றி பெற்றது. பெரும்பான்மை கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில், அரசியலமைப்பு விதிகளின்படி ஹிட்லர் ஜெர்மனியின் சான்சலராக நியமிக்கப்பட்டார். இவ்வாறு நாசிச கட்சி ஆட்சியில் அமர்ந்தது.

விரைவில் ஹிட்லர் நாசிச கட்சியின் சர்வாதிகாரத்தை ஏற்படுத்தினார். கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டு அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். மக்களின் சிவில் உரிமைகள் ரத்து செய்யப்பட்டன. வெய்மார் குடியரசு முடிவுக்கு வந்தது. ஹிட்லர் மூன்றாவது '**ரெய்ச்**' அமைக்கப்பட்டதாக அறிவித்தார். நாசிச கட்சியின் கொடியே தேசியக் கொடியாயிற்று நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அதன் அதிகாரங்கள் ஹிட்லருக்கு மாற்றப்பட்டன.

**யூதர்களுக்கு எதிரான கொள்கை**

தங்களது செல்வ வளத்தாலும், கல்வித் தகுதியாலும் யூதர்கள் ஜெர்மனியில் சலுகைபெற்ற வர்க்கத்தினராக வாழ்ந்து வந்தனர். ஹிட்லர் அவர்களை தேச விரோதிகள் எனக் கருதினார். யூதர்களை ஒடுக்க பல நடிவடிக்கைகளை அவர் எடுத்தார். யூதருக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டன. ஜெர்மானிய குடியுரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்டது. யூதர்களை பொருளாதார மற்றும் பண்பாட்டு ரீதியில் புறக்கணிப்பதற்காக அவர் கடுமையான ஒடுக்குமுறைகளை பின்பற்றினார்.

**ராணுவ சீர்திருத்தங்கள்**

ஜெர்மானிய தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு ஹிட்லர் ராணுவத்தை சீரமைத்தார். ஜெர்மானிய இனத்தவர் மட்டுமே ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஒரு எதேச்சாதிகார தன்மையுடன்கூடிய அரசை ஏற்படுத்தி அதன்மூலம் ஆக்ரமிப்பு நோக்கமுள்ள அயலுறவுக்கொள்கையை பின்பற்றத் தொடங்கினார்.

**ஹிட்லரின் அயலுறவுக் கொள்கை**

ஹிட்லர், வெர்சேல்ஸ் உடன்படிக்கையை ஏற்க மறுத்தார். அது ஒரு திணிக்கப்பட்ட உடன்படிக்கை என்பதால் அவமானச் சின்னமாகக் கருதினார். ஹிட்லரது இக்கருத்தை ஜெர்மானிய மக்களும் ஆதரித்து, அவரையே தங்களது தலைவராக ஏற்றனர். அவரது அயலுறவுக் கொள்னையின் முக்கிய அம்சங்களாவன.

**பன்னாட்டுக் கழகத்தைவிட்டு வெளியேறுதல்**

1932 பிப்ரவரி 3 ஆம் நாள் பன்னாட்டுக் கழகத்தின் ஆயுதக் குறைப்பு மாநாட்டிலிருந்த வெளியேறிய ஹிட்லர் பன்னாட்டுக் கழகத்திலிருந்தும் விலகுவதாக அறிவித்தார். ஜெர்மனியின் ராணுவத்தை மீண்டும் பெருக்கத் தொடங்கினார்.

**ஆயுதங்களைப் பெருக்குதல்**

1935 மார்ச் 16 ஆம் நாள் ஜெர்மானியர்கள் அனைவரும் கட்டாய ராணுவப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என அறிவித்தார். இங்கிலாந்து மற்றும் பிரான்சுக்கு இணையானதொரு விமானப் படையை ஜெர்மனி பெறவேண்டும் என்று அவர் கருதினார். சுய பாதுகாப்புக்காகவே ராணுவ வலிமையை பெருக்குவதாக அவர் கூறிக்கொண்டார்.

**ரைன்லாந்துப் பகுதியை ராணுவ மயமாக்குதல்**

வெர்சேல்ஸ் உடன்படிக்கைப்படி, ரைன்லாந்துப் பகுதி ராணுவமற்ற பகுதியாகப் பராமரிக்கப்பட வேண்டும். 1936 மார்ச் 7 ஆம் நாள் ஹிட்லர் ரைன்லாந்தின் மையப்பகுதிக்கே ராணுவத்தை அனுப்பியதோடு அங்கு ராணுவக் கட்டுமானங்களையும் ஏற்படுத்த தொடங்கினார். ஜெர்மனியின் இந்த நடவடிக்கையை பிரான்சு எதிர்த்தது. ஆனால், இங்கிலாந்து அமைதியுடன் ஹிட்லரின் நடிவடிக்கைகளை கவனித்துக் கொண்டிருந்தது. இதனால், பிரான்சும் இங்கிலாந்தும் இணைந்து ஹிட்லரின் ஆக்ரமிப்பு நடவடிக்கைக்கு முடிவு கட்டுவதற்கான வாய்ப்பை நழுவ விட்டன.

**ஸ்பானிய உள்நாட்டுப்போர்**

1931 ஆம் ஆண்டு ஸ்பெயினில் குடியரசு ஆட்சி நிறுவப்பட்டது. 1936ல் ஜெனரல் பிராங்கோ என்பவரது தலைமையில் பழமைவாதிகள் குடியரசுக்கு எதிராக உள்நாட்டுப் போரைத் தொடங்கினார்கள். ஜெர்மனியும், இத்தாலியும் பிராங்கோவை ஆதரித்தன. குடியரசை ரஷ்யா ஆதரித்தது. குடியரசு வீழ்த்தப்பட்டு பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சி நிறுவப்பட்டது. ஸ்பானிய உள்நாட்டுப் போரின் விளைவாக ஜெர்மனிக்கும் இத்தாலிக்கும் இடையே நட்புறவு மேலும் நெருக்கமடைந்து உடன்படிக்கைக்கும் இட்டுச் சென்றது

**ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு**

1936 அக்டோபரில் இவ்விரு நாடுகளும் ஒரு உடன்படிக்கையை செய்துகொண்டனர். இதன்படி, இத்தாலியின் அபிசினியா ஆக்ரமிப்பை ஜெர்மனி ஏற்றது. ஜெர்மனி ஆஸ்திரியாவை இணைத்துக் கொண்டதை இத்தாலி ஏற்றது. ஹிட்லர் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியை வெறுத்தார். எனவே, ரஷ்யாவின் எதிரியான ஜப்பானுடன் 1936 நவம்பரில் கம்யூனிச எதிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். 1937 நவம்பரில் இத்தாலியும் இந்த ஒப்பந்தத்தில் இணைந்து கொண்டது. இந்த மூவர் கூட்டிணைவே **ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு** என அழைக்கப்படுகிறது. இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு எதிராக இந்த அச்சு அமைக்கப்பட்டது. இதுவே, இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்தைக் கற்றதனால் மாணவர் பெற்ற செய்திகள்*

1. *இத்தாலியில் பாசிசம் வளரத்துணைபுரிந்த காரணிகள்*
2. *பாசிச கொள்கை மற்றும் முசோலினியின் ஆக்ரமிப்பு அயலுறவுக்கொள்கை*
3. *ஜெர்மனியில் நாசிசம் – அதன் கொள்கைகள்*
4. *ஹிட்லரின் அயலுறவுக் கொள்கை - ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு உருவாகுதல்.*
5. *நாசிச, பாசிச எழுச்சிகளின் தாக்கம்.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. முசோலினி வெளியிட்ட பத்திரிகை

அ) புதிய இத்தாலி ஆ) மெய்ன்காம்ப்

இ) அவந்தி ஈ) ரிசார்ஜிமென்டோ

2. தேசிய சோஷலிஸ்டு கட்சியை நிறுவியவர்

அ) ஹிட்லர் ஆ) முசோலினி

இ) கெய்சர் வில்லியம் ஈ) கார்ல் மார்க்ஸ்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பாசிசம் என்பது _______________ என்பவரது கொள்கையாகும்.
2. ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு உருவான ஆண்டு _______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | லண்டன் உடன்படிக்கை | அ. | 1917 |
| 2. | பாசிச கட்சி | ஆ. | 1932 |
| 3. | ஆயுதக் குறைப்பு மாநாடு | இ. | 1915 |
| 4. | போல்ஷ்விக் புரட்சி | ஈ. | 1919 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. முசோலினி சோஷலிச கருத்துக்களால் கவரப்பட்டார்.

ஆ. அவர் திருச்சபையை பெரிதும் ஆதரித்தார்.

இ. பாசிச கட்சியின் சின்னமாக ஸ்வஸ்திகா இருந்தது.

ஈ. பாசிச கட்சி உறுப்பினர்கள் சிவப்பு வண்ண சட்டை அணிந்தனர்.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா எனக் கூறுக.**

1. ஹிட்லரின் ஆக்ரமிப்பான அயலுறவுக்கொள்கை இரண்டாம் உலகப் போருக்கு வழி வகுத்தது.
2. ‘மெய்ன் கேம்ப்’ என்ற நூலை ஹிட்லர் எழுதினார்.
3. டாக்டர் காப் என்பவரது தலைமையில் ஸ்பானிய உள்நாட்டுப்போர் தொடங்கியது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பாசிசம்
2. நாசிசம்
3. ரோம் – பெர்லின் – டோக்கியோ அச்சு

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. இத்தாலியின் பாசிசம் தோன்றி வளர்ந்ததற்கான காரணங்களைக் கூறுக.
2. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கான காரணங்கள் யாவை ?
3. ஹிட்லரின் அயல்நாட்டுக் கொள்கையை விவாதி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. ஜெர்மனி மற்றும் இத்தாலியில் சர்வாதிகாரத்தின் எழுச்சியை தொகுத்துக் கூறுக.
2. ஜெர்மனியில் நாசிச கருத்துக்களை விவரித்து அதன் வளர்ச்சியை ஆய்க.

# பாடம் – 31

## இரண்டாம் உலகப்போர் (1939 – 1945)

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொள்வது*

1. *இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்*
2. *சர்வாதிகாரத்தின் எழுச்சியும் போருக்கான பிற காரணங்களும்.*
3. *இரண்டாம் உலகப் போரின் போக்கு*
4. *இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்*

1918 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது. 1919 ஆம் ஆண்டு பாரிஸ் அமைதி மாநாடு நடைபெற்றது. வெர்சேல்ஸ் உடன்படிக்கை உள்ளிட்ட பல உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன. இம்மாநாட்டிற்கு வெற்றிபெற்ற நாடுகள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. போரின் லாபத்தை பகிர்ந்து கொள்ளும் பொருட்டு வெற்றி பெற்ற நாடுகள் கூட்டிய கூட்டமாகவே இம்மாநாடு திகழ்ந்தது. தோல்வியடைந்த நாடுகள் மிக மோசமாக நடத்தப்பட்டன. உலகில் நிரந்தர அமைதி ஏற்படுத்துவது குறித்தும் இம்மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் முயற்சியால் உலக நாடுகளுக்கிடையே எழும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு பன்னாட்டுக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் உலக அமைதியை நிலைநாட்ட பன்னாட்டுக் கழகம் தவறியது. இதனால், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளில் சர்வாதிகார அரசுகள் தோன்றின. ரோம், பெர்லின், டோக்கியோ அச்சு உருவாகி இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்தது.

**இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்**

முதல் உலகப் போரில் ஜெர்மனி தோல்வியடைந்தது. பாரிஸ் அமைதி மாநாட்டுக்கு அது அழைக்கப்படவில்லை. கடுமையான மற்றும் அவமானகரமான உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி அது வற்புறுத்தப்பட்டது. ஜெர்மானிய நிலப்பகுதிகள் பல அதனிடமிருந்து பறிக்கப்பட்டன. அதன் குடியேற்றங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. கடற்படை முற்றிலும் கலைக்கப்பட்டது. ராணுவ வலிமை பெரிதும் குறைக்கப்பட்டது. ஜெர்மனியில் நிறுவப்பட்டிருந்த வெய்மார் குடியரசு போருக்குப்பின் தோன்றிய பிரச்சினைகள் எதையும் சமாளிக்க இயலாமல் தடுமாறியது. ஜெர்மனிக்கு நேர்ந்த அவமானத்தை துடைத்தெறிய அதன் மக்கள் துடித்தனர். எனவே, இரண்டாம் உலகப்போரை பழிவாங்குவதற்கான போர் என்றும் கூறலாம். இரண்டாம் உலகப் போருக்கான விதைகள் வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் ஊன்றப்பட்டிருந்தன.



**வெர்சேல்ஸ் உடன்படிக்கை**

**சர்வாதிகாரத்தின் எழுச்சி**

இரு உலகப்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஐரோப்பாவில் சர்வாதிகார அரசுகள் தோன்றின. இக்காலத்தை சர்வாதிகாரிகளின் காலம் என்றும் அழைத்தனர். ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஆசியாவில் ஜப்பான் ஆகிய நாடுகளில் சர்வாதிகாரம் வேரூன்றியது. ஜெர்மனியில் வெய்மார் குடியரசு பலவீனமாகவே காணப்பட்டது. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட நாசிசக்கட்சியின் தலைவரான ஹிட்லர் அரசாங்கத்தை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். ஆக்கிரமிப்பு கொள்கையைப் பின்பற்றிய அவர் ஆஸ்திரியா மற்றும் செக்கோஸ்லோவேகியா நாடுகளை கைப்பற்றினார். பின்னர் அவர் போலந்தை தாக்கியபோது இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.

இத்தாலியிலும் கிட்டத்தட்ட இதே நிலைமை காணப்பட்டது. பாரிஸ் அமைதி மாநாட்டில் தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாக இத்தாலி கருதியது. முசோலினி தனது பாசிச கட்சியை அங்கு தொடங்கி 1922ல் ஆட்சியைக் கைப்பற்றி தனது சர்வாதிகார ஆட்சியை நிறுவினார். அவரும் ஆக்கிரமிப்பான அயலுறவுக் கொள்கையையே பின்பற்றினார்.

ஸ்பெயின் மற்றும் ஜப்பானிலும் சர்வாதிகார உணர்வு தலையெடுத்தது. ஸ்பெயினில் தளபதி பிராங்கோ அங்கிருந்த குடியரசு ஆட்சியை கவிழ்த்துவிட்டு தனது சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தனார். இதற்கு ஹிட்லர் மற்றும் முசோலினியின் படைகள் அவருக்கு பக்கபலமாக இருந்தன. ரோம் – பெர்லின் டோக்கியோ அச்சு உடன்படிக்கையை உருவாக்கியதன் மூலம் ஜப்பான், ஹிட்லருக்கும் முசோலினிக்கும் நண்பனாயிற்று. இந்த உடன்படிக்கை உலக அமைதிக்கு கேடு விளைவித்து இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கும் காரணமாயிற்று.

**ராணுவ மயமாக்கல்**

முதலாம் உலகப் போருக்குப்பிறகு ஆயுதக் குறைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலனளிக்காததால் புதிய போர் மூண்டது. பாரிஸ் அமைதி மாநாட்டில் ஜெர்மனியின் படைபலம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. அதேசமயம், வெற்றிபெற்ற நாடுகளின் படைபலத்தையும் குறைக்குமாறு ஜெர்மனி கேட்டுக்கொண்டது. அதற்கு நேச நாடுகள் உடன்படாமல் போகவே, ஹிட்லர் தமது ஆட்சிக்காலத்தில் ஜெர்மனியின் படைவலிமையைப் பெருக்கினார். ஆயுதங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டதாலும், ராணுவ மயமாக்கத்தாலும் இரண்டாம் உலகப்போர் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

**பேரரசுக் கொள்கை**

இரண்டாம் உலகப்போருக்கு பேரரசுக் கொள்கையும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. முதல் உலகப் போரில் காணப்பட்ட பேரரசு ஆதிக்க உணர்வே இப்போதும் காணப்பட்டது. நேச நாடுகளைவிட பேரரசு ஆதிக்க உணர்வை அதிகம் பெற்றிருந்த ஜெர்மனியும் இத்தாலியும் பாரிஸ் அமைதி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளை துச்சமெனக் கருதின.

இரு நாடுகளும் தங்களது நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டன. ரைன்லாந்து, ஆஸ்திரியா, மெமல், செக்கோஸ்லோவேகியா போன்ற பகுதிகளை ஹிட்லர் ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார். ஜப்பான் மஞ்சூரியாவைத்தாக்கி அதனை சீனாவிடமிருந்து அபகரித்துக்

கொண்டது. அபிசீனியாவைக் கைப்பற்றிய முசோலினி தொடர்ந்து ஆக்ரமிப்பு நடவடிக்கைகளையே பின்பற்றினார்.

**குடியேற்றக் கொள்கை**

ஐரோப்பிய நாடுகள், தங்களது தொழில் வளர்ச்சிக்காக, கச்சாப் பொருட்களைப் பெறுவதற்கும் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தைகள் வேண்டும் என்பதற்காகவும் குடியேற்றங்களை ஏற்படுத்தும் போட்டியில் ஈடுபட்டனர். முதல் உலகப் போருக்குப் பின்பும்கூட இந்தப்போக்கு நீடித்தது. பாரிஸ் அமைதி மாநாட்டில் ஜெர்மனியின் குடியேற்றங்கள் அனைத்தும் பறிக்கப்பட்டன. நேச நாடுகளின் இந்த நடவடிக்கையை இத்தாலியும் விரும்பவில்லை. ஆசியாவில் வலிமைமிகுந்த நாடாக விளங்கிய ஜப்பானும் தனது வளங்களைப் பெருக்க முனைந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் மூன்றும் ஆக்ரமிப்பை அடிப்படையாகக் கொண்ட அயலுறவுக் கொள்கையை பின்பற்றின. அவர்களது ஆக்ரமிப்பு நடவடிக்கைகள் இறுதியில் இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டன.

**பன்னாட்டுக் கழகத்தின் தோல்வி**

முதல் உலகப் போருக்குப் பிறகு உலக அமைதியைக்காக்கவும், நாடுகளுக்கிடையே எழும் சிக்கல்களை சுமூகமாகத் தீர்க்கவும் பன்னாட்டுக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், கழகத்தின் உறுப்பு நாடுகளே அதன் கோட்பாடுகளை மதித்து நடக்கவில்லை. கழகத்தின் விதிகளை மீறிய நாடுகள், எவ்வித தண்டனையுமின்றி கழகத்தைவிட்டு வெளியேறவும் செய்தன.

எடுத்துக்காட்டாக, மஞ்சூரியாவை ஜப்பான் தாக்கியபோதோ, அபிசீனியாமீது இத்தாலி படையெடுத்தபோதோ பன்னாட்டுக் கழகத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஹிட்லரது நடவடிக்கைகள் கழகத்துக்கு பெரும் சவாலாகவே அமைந்தன. ஆக்ரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாடுகளைத் தட்டிக்கேட்க முடியாத பன்னாட்டு கழகத்தின் தோல்வியே இரண்டாம் உலகப் போருக்கு முக்கிய காரணமாயிற்று.

**தேசிய சிறுபான்மையினரின் மனக்குறை**


நேச நாடுகள் தங்களை சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் பாதுகாவலர்களாகக் கூறிக்கொண்ட போதிலும், அவற்றை அந்த நாடுகள் மதித்து நடக்கவில்லை. மத்திய ஐரோப்பாவின் ஒரு சில பகுதிகளில் தேசிய சிறுபான்மையினர் பிரச்சனை நீடித்தது. இந்த சிறுபான்மையினரின் வெறுப்பும் மனக்குறையுமே பூசல்களுக்கு வழிவகுத்தன. தேசிய சிறுபான்மையினரை ஒன்று சேர்க்கும் விதத்தில்தான் ஜெர்மனி, ஆஸ்திரியா, சுடட்டன்லான்ந்து நாடுகளை இணைத்துக் கொண்டதோடு, பின்னர் போலந்தின்மீதும் தாக்குதல் நடத்தியது.

**தேச நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகள்**

நேச நாடுகளுக்கிடையேயும் கூட்டுறவு நிலவவில்லை. ஜெர்மனியை சமாதானப் படுத்துவதையே இங்கிலாந்து நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது. ஜெர்மனி குறித்த பிரான்சு கொண்டிருந்த அச்சத்தை இங்கிலாந்து ஏற்கவில்லை. பன்னாட்டுக் கழகம் உருவாகக் காரணமாக இருந்த அமெரிக்கா அதில் உறுப்பினராகச் சேரவில்லை. நேச நாடுகளுக்கிடையே நிலவிய இத்தகைய வேறுபாடுகளால் வலிமைபெற்று வந்த சர்வாதிகாரிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று.

**போரின் போக்கு**

பாரிஸ் அமைதி மாநாட்டு முடிவுகளின்படி போலந்து சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. கிழக்கு பிரஷ்யா ஜெர்மனியிடமிருந்து பிரிக்கப்பட்டது. ஆனால் ஹிட்லர் கிழக்கு பிரஷ்யாவை மீண்டும் ஜெர்மனியுடன் இணைக்க விரும்பினார். இதனால், 1939 செப்டம்பர் 1–ஆம் நாள் ஹிட்லர் போலந்துமீது தாக்குதல் தொடுத்தார். செப்டம்பர் 3 ஆம் நாள் இங்கிலாந்து ஜெர்மனி மீது போர் அறிவித்தது. இவ்வாறு இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.




1940 ஏப்ரலில் ஜெர்மனி டென்மார்க் மற்றும் நார்வே நாடுகளைக் கைப்பற்றியது. 1940 மே மாதத்தில் ஹாலந்தும் பெல்ஜியமும் வீழ்ந்தன. 1940 ஜீன் மாதம் ஜெர்மனி பிரான்சைத் தாக்கி அதனையும் கைப்பற்றியது.

வட ஆப்ரிக்காவில் இத்தாலி பிரிட்டிஷ் துருப்புக்களை எதிர்கொண்டது. ஜெர்மனியின் உதவியுடன் முசோலினி கிரீஸ் நாட்டைத் தாக்கி கைப்பற்றிக் கொண்டார். யுகோஸ்லேவியா மற்றும் கிரீட் ஜெர்மானியரால் கைப்பற்றப்பட்டது.

பிரான்ஸ் வீழ்ச்சியடைந்தபின் பிரிட்டன் தனித்து விடப்பட்டது. ஜெர்மனி பிரிட்டன்மீது தொடர்ந்து குண்டுமழை பொழிந்தது. ஆனால் வின்ஸ்டன் சர்ச்சிலின் சீரிய தலைமையினால் பிரிட்டன் காப்பாற்றப்பட்டது. ஜெர்மனியால் பிரிட்டனைக் கைப்பற்ற முடியவில்லை.

இத்தருணத்தில், போர் மறுப்பு ஒப்பந்தத்தையும் மீறி, ஜெர்மனி, சோவியத் யூனியன்மீது தாக்குதல் நடத்தி மாபெரும் தவறிழைத்தது. ஸ்டாலின் கிராட் நகரில் நடைபெற்ற போர் மிகமுக்கியமானது. ஐந்து மாதங்கள் அப்போர் நீடித்தது. இரண்டு மில்லியன் மக்கள், 2000 ராணுவ டாங்குகள், 2000 போர் விமானங்கள் இதில் ஈடுபட்டன. இருப்பினும் ஜெர்மனியின் படைகள் விரட்டப்பட்டன. 1943 பிப்ரவரியில் சுமார் 90,000 ஜெர்மானிய வீரரர்கள் சரணடைந்தனர். இது போரின் முக்கியமான தொரு திரும்புமுனையாகும்.

1941 டிசம்பரில் ஜப்பான், அமெரிக்க கப்பல் படைத் தளமான பெர்ல் ஹார்பரைத் தாக்கியது. இதனால், அமெரிக்காவும் போரில் இறங்கியது. பசிபிக் பகுதியின் உயர் படைத்தளபதியாக ஜெனரல் மெக் ஆர்தர் நியமிக்கப்பட்டார். தென்கிழக்கு ஆசியப் பகுதியின் தளபதியான மவுண்ட்பேட்டன் பிரபு ஜப்பானியப் படைகளை பர்மாவை விட்டு விரட்டியடித்தார்.



பெர்ல் துறைமுகம்

ஆப்ரிக்க முனையில், அமெரிக்கா அபிசீனியாவைக் கைப்பற்றியது. இத்தாலிக்கு சொந்தமான சோமாலியாலாந்தும் கைப்பற்றப்பட்டது. பிரிட்டிஷ் படைத்தளபதி ஜெனரல் மான்ட்கோமரி ஜெர்மனியரிடமிருந்து லிபியாவைக் கைப்பற்றினார். மேலும், அவர் டிரிபோலியைக் கைப்பற்றி டினிசியாவுக்குள் நுழைந்தார். 1942ல் அல்ஜீரியா வீழ்ந்தது. 1943ல் பிரிட்டிஷ் – அமெரிக்கப் படைகள் சிசிலியைக் கைப்பற்றின. வட ஆப்ரிக்காவிலிருந்து ஜெர்மானிய – இத்தாலியப் படைகள் விரட்டப்பட்டன. பின்னர் இத்தாலி மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதற்குள் இத்தாலியில் கலகம் வெடித்தது. முசோலினி கைது செய்யப்பட்டார். ஆனால் ஜெர்மனியரின் உதவியுடன் அவர் தப்பினார். 1943 செப்டம்பரில் இத்தாலி நிபந்தனை ஏதுமின்றி சரணடைந்தது. 1945 ஏப்ரலில் முசோலினி இத்தாலியர்களாலேயே பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

1944ல் நேச நாடுகளின் படைகள் பிரான்சுக்குள் நுழைந்து அங்கிருந்த ஜெர்மானியப் படைகளை விரட்டியடித்தன. பின்னர், தென்மேற்கிலிருந்து ஜெர்மனியை நேச நாடுகளின் படைகள் தாக்கின. கிழக்கிலிருந்து ரஷ்யா ஜெர்மனிமீது தாக்குதல் தொடுத்தது. 1945 மே இரண்டாம் நாள் ரஷ்யப் படைகள் பெர்லின் நகருக்குள் நுழைந்தன. ஹிட்லர் தற்கொலை செய்துகொண்டார். ஜெர்மனி சரணடைந்தது.ஜெர்மனி சரணடைந்தபிறகும் கூட ஜப்பான் போரைத் தொடர்ந்து நடத்தியது. 1945 ஆகஸ்டு ஆறாம் நாள் ஹிரோஷிமாவிலும், ஒன்பதாம் நாள் நாகசாகியிலும் அமெரிக்கா இரண்டு அணுகுண்டுகளை வீசியது. இதனைத் தொடர்ந்து 1945 ஆகஸட் 14 ஆம் நாள் ஜப்பான் சரணடைந்தது.

இத்துடன் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. இப்போரில் 13 மில்லியன் ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர். 17 மில்லியன் சிவிலியன்கள் இறந்தனர். பெரும் நகரங்கள் அழிக்கப்பட்டன. வேளாண்மை சீர்குலைந்தது. உலகமே பல்வேறு நேரடி அல்லது மறைமுகமான துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டது.

**இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்**

– இரண்டாம் உலகப் போரின் முக்கிய விளைவு குடிறயேற்றங்கள் விடுதலையாகும். ஆசியா மற்றும் ஆப்ரிக்காவிலிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு சொந்தமான குடியேற்றங்கள் விடுதலையடைந்தன.

– பல துருவ உலகம் என்ற கோட்பாடு மறைந்து இரு அணிகளாக உலக நாடுகள் பிரிந்தன.

– அமெரிக்காவும், சோவியத் யூனியனும் வல்லரசுகளாயின.

– இதனால், கெடுபிடிப்போர் என்ற கோட்பாடுப் போர் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் இடையே தொடங்கியது.

**கற்றல் அடைவுகள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிந்து கொண்டவை*

1. *இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்.*
2. *சர்வாதிகாரத்தின் எழுச்சியும், ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு உருவாதலும்.*
3. *போரின் முக்கிய நிகழ்வுகளும், நேச நாடுகளின் வெற்றியும்.*
4. *இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்.*

## பயிற்சி

## பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஜப்பான் பெர்ல் துறைமுகத்தின் மீது தாக்குதல் தொடுத்த ஆண்டு

அ) 1940 ஆ) 1941

இ) 1942 ஈ) 1945

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. அமெரிக்கா ஹிரோஷிமா மீது அணுகுண்டை வீசிய நாள் ______________
2. பசிபிக் பகுதியின் தலைமைத் தளபதி ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | முசோலினி | அ. | ஜப்பான் படையெடுப்பு |
| 2. | மஞ்சூரியா | ஆ. | நாசிசம் |
| 3. | தளபதி மெக்ஆர்தர் | இ. | பாசிசம் |
| 4. | ஹிட்லர் | ஈ. | பசிபிக் பகுதியின் தலைமை தளபதி |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. செப்டம்பர் 1, 1940–ல் ஹிட்லர் போலந்தின் மீது படையெடுத்தார்.

ஆ. டிசம்பர் 1941–ல் ஜப்பான் பெர்ல் துறைமுகத்தை தாக்கியது.

இ. செப்டம்பர் 1945–ல் இத்தாலி சரணடைந்தது.

ஈ. மே 2, 1944–ல் ரஷ்ய துருப்புகள் பெர்லின் நகரில் நுழைந்தன.

**V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா என்று கூறுக.**

1. பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்துகொள்ள ஜெர்மனி அழைக்கப்பட்டது.
2. ஜெனரல் பிரான்கோ ஸ்பெயின் நாட்டின் சர்வாதிகாரி.
3. பன்னாட்டுக் கழகத்தில் அமெரிக்கா தீவிர உறுப்பினராக செயல்பட்டது.
4. ஸ்டாலின்கிராட் போர் ஜெர்மெனிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நடைபெற்றது.

**VI. சிறு குறிப்பு எழுதுக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. ராணுவ மயமாக்குதல்
2. பேரரசுக் கொள்கை
3. தேசிய சிறுபான்மையினர்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. இரண்டாம் உலகப் போரின் முக்கிய நிகழ்ச்சிகளைக் கூறுக.
2. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்க.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. இரண்டாம் உலகப் போருக்கான காரணங்களை தொகுத்து எழுதுக.

## பாடம் – 32

## ஆசிய நாடுகளின் வளர்ச்சி : சீனாவும் ஜப்பானும்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *நவீன சீனாவின் எழுச்சி.*
2. *சீன மக்கள் குடியரசின் தோற்றம்*
3. *நவீன ஜப்பானின் எழுச்சி*
4. *பெரும் பொருளாதார வலிமை பெற்ற நாடாக ஜப்பான் உருவாதல்.*

### நவீன சீனாவின் எழுச்சி

ஆசியக் கண்டம், தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா, கிழக்காசியா, மேற்காசியா என பொதுவாகப் பிரிக்கப்படுகிறது. சீனாவும் ஜப்பானும் கிழக்காசியாவில் அமைந்துள்ளன. 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சீன மக்கள் குடியரசு கிழக்காசியாவிலுள்ள மிகப் பெரிய நாடு. உலகில் நான்காவது பெரிய நாடாகவும் இது விளங்குகிறது. ஆசியாவிலுள்ள 14 நாடுகள் இதன் எல்லை நாடுகளாக அமைந்துள்ளன.

உலகின் மிகப் பழைய நாகரீகங்களில் ஒன்றாக சீனா திகழ்ந்தது. சீனாவை பல்வேறு அம்சங்கள் ஆட்சிபுரிந்தன. 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் சீனாவை மஞ்சு வம்சம் ஆட்சி செய்தது. மஞ்சுவம்ச ஆட்சியின்போது சீனா தனது வலிமையை இழந்தது. **ஆசியாவின் நோயாளி** என்றும் அது அழைக்கப்படலாயிற்று. மேற்கத்திய நாடுகளின் குடியேற்றமாகவும் அது மெல்ல மாறியது. சீனா ஐரோப்பியர்களை '**சிகப்பு காட்டுமிராண்டிகள்**' என அழைத்தது. ஐரோப்பிய வணிகர்கள்மீது சீனா பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தது.

ஐரோப்பிய வணிகத்தை கட்டுப்படுத்திய சீன வணிகர்கள் **கோஹாங்** என்று அழைக்கப்பட்டனர். இதனை ஆங்கிலேய மற்றும் பிரஞ்சு வணிகர்கள் விரும்பவில்லை. எனவே, சீன வணிகர்களிடையே அபினிப்பழக்கத்தை மெல்ல மெல்ல ஐரோப்பிய வணிகர்கள் புகுத்தினர். காலப்போக்கில் சீனாவில் அபினியை பெருமளவு இறக்குமதி செய்யத் தொடங்கினர். அபினிப்பழக்கம் சீனாவில் பரவியது. இதனைக் கட்டுப்படுத்த சீன அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. அபினி வர்த்தகம் தடை செய்யப்பட்டது. சீன அதிகாரி லின்சேசு என்பவரது கடும் நடிவடிக்கைகளால் முதல் அபினிப்போர் (1839 – 1842) ஏற்பட்டது. இதில் இங்கிலாந்து சீனாவை முறியடித்தது. இப்போர் நான்கிங் உடன்படிக்கைப்படி முடிவுக்கு வந்தது. 1856ல் இரண்டாம் அபினிப்போர் நடைபெற்றது. இப்போரில், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் சீனாவுக்கு எதிராகப் போரிட்டன. 1860ல் 'டியன்ட்சின் உடன்படிக்கைப்படி' இப்போர் முடிவுக்கு வந்தது.



லின்சேசு

இவ்வாறு, மேற்கத்திய நாடுகள் சீனாவில் தங்களது ஆதிக்கத்தை ஏற்படுத்தின. சீனாவின் பகுதிகள் மேற்கத்திய நாடுகளால் பல பொருளாதார மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. இதனையே ''சீன முலாம்பழம் துண்டுகளாக்கப்பட்டதாகக்'' கூறுவர். மஞ்சு

வம்சத்தின் தோல்வி சீனாவின் தைப்பிங் கலகம் (1851 – 1864) ஏற்படுவதற்கு காரணமாயிற்று. இதற்குத் தலைமையேற்றவர் சியூ சுவான். ஆனால், கலகம் ஒடுக்கப்பட்டது. 1860 முதல் 1908 ஆண்டு அவர் மறையும் வரை சீனா பேரரசி சுசீயின் கட்டுப்பாட்டில் இருந்தது. சுசீயின் பிற்போக்கான ஆட்சி சீனாவில் புரட்சி இயக்கங்கள் தோன்ற காரணமாயிற்று.

1894 – 1895ல் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே போர் மூண்டது. இது முதல் சீன – ஜப்பானியப் போர் எனப்படுகிறது. கொரியாவை யார் கட்டுப்படுத்துவது என்பதற்காக இப்போர் நடந்தது. இப்போரில் சீனா தோல்வியைத் தழுவியது. இதனால் பாக்சர் கலகம் தோன்றியது. சீனாவில் அந்நியர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து இக்கலகம் நடைபெற்றது. மேலை நாடுகளின் உதவியுடன் இக்கலகமும் நசுக்கப்பட்டது.

இத்தருணத்தில்தான் சீனாவின் தனிப்பெரும் தலைவராக அறிவாற்றால் மிக்க டாக்டர் சன்யாட்சென் தோன்றினார். சீனாவின் 'விடிவெள்ளி' என இவர் போற்றப்பட்டார். இளம் புரட்சியாளர்களை இவர் ஒன்று திரட்டி 1911 ஆம் ஆண்டு சீனப் புரட்சிக்கு வழிவகுத்தார். இப்புரட்சியின் விளைவாக, சீனாவில் மஞ்சுவம்ச ஆட்சி முடிவுக்கு வந்தது. புதிய கொடி, புதிய நாட்காட்டி நடைமுறைக்கு வந்தன. முதன்முறையாக சீனா ஒரு குடியரசாகியது. யுவான் ஷிகாய் என்பவர் சீனக்குடியரசின் அதிபராகப் பதவியேற்றார்.


டாக்டர் சன்யாட்சென்

முதல் உலகப் போரின்போது, சீனாவிடமிருந்து ஷான்டுங் மாகாணத்தை ஜப்பான் கைப்பற்றியது. போருக்குப்பின் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் ஷான்டுங் மாகாணத்தை திரும்பவும் பெற்றுத்தருமாறு சீனா கோரிக்கை விடுத்தது. ஆனால், நேச நாடுகள் ஷான்டுங் மாகாணத்தை ஜப்பானுக்கே கொடுத்தது. இதன் விளைவாக சீனாவில் '**மே நான்காம் நாள் இயக்கம்**' தொடங்கியது.

மீண்டும் டாக்டர் சன் யாட்சென் சீனாவை தம் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார். கோமிண்டாங் கட்சியை அவர் தொடங்கினார். ரஷ்யாவின் உதவியுடன் சீனாவில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர விரும்பினார். இந்த காலக்கட்டத்தில்தான் சீன கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. மாசேதுங் மற்றும் சூயன்லாய் ஆகியோர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவன உறுப்பினர்களாவர்.

1924ல் டாக்டர் சன் யாட் சென் மறைந்தார். கோமின்டாங் கட்சியின் தலைமைப் பொறுப்பை சியாங் கே ஷேக் ஏற்றார். தொடக்கத்தில் கோமின்டாங் கட்சிக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் நல்லுறவு இருந்தது. ஆனால், விரைவில் இருவரும் எதிரிகளாயினர். சியாங் கே ஷேக் மாவோ தலைமையிலான கம்யூனிஸ்டு கட்சியை ஒழிக்க விரும்பினார். மாவோ வட சீனாவிற்கு நெடும் பயணம் ஒன்றை மேற்கொண்டார். அங்கு கம்யூனிஸ்ட்கள் தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினார். 1945ல் கோமின்டாங் கட்சியினருக்கும் கம்யூனிஸ்ட்களுக்கும் இடையே உள்நாட்டுப்போர் மூண்டது. இறுதியில் 1949 அக்டோபரில் மாவோ சீன மக்கள் குடியரசை நிறுவினார். சியாங்கே ஷேக் தைவானுக்கு தப்பியோடினார். தைவான் தேசிய சீனா என்று அழைக்கப்பட்டது. கெடுபிடிப்போர் காலத்தில் அமெரிக்கா தேசிய சீனாவை ஆதரித்தது. எனவே, தேசிய சீனா 1971 ஆம் ஆண்டுவரை ஐ.நா. சபையில் உறுப்பினராக இருந்தது. 1971ல் தான் சீனா மக்கள் குடியரசு ஐ.நா.வில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டது.


மாசேதுங்

மாசே துங் சீனாவில் பெரும் பொருளாதார சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினார். இதற்கு – 1966ல், மாவோ பண்பாட்டுப் புரட்சியைத் தொடங்கிவைத்தார். பண்பாட்டுப் புரட்சியின்போது மாவோவுக்கு எதிரானவர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டனர்.

1976ல் மாவோ இறந்த பிறகு, நால்வர் குழுவினர் சிறைப்படுத்தப்பட்டனர். டெங் சியோபிங், மாவோவின் பின் தோன்றலான ஹுவா குவோபெங் என்பவரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றினார். டெங் பல்வேறு பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து சீனப் பொருளாதாரத்தில் காணப்பட்ட அரசுக் கட்டுப்பாடுகளை தளர்த்தினார். திட்டமிட்ட பொருளாதாரத்தைவிட்டு சீனா கலப்புப் பொருளாதாரத்தை பின்பற்றத் தொடங்கியது. சீனாவில் ஏற்பட்டுவரும் இந்த பொருளாதார மாற்றத்தினால் 2001ல் அது உலக வர்த்தக அமைப்பிலும் உறுப்பினராகியது.

**நவீன ஜப்பானின் எழுச்சி**

ஐரோப்பியார்களால் குடியேற்றங்கள் அமைக்கப்படாத நாடு ஆசியாவில் ஜப்பான் மட்டுமே. புவியியல் ரீதியாக, ஜப்பான் சிறிய நாடாக இருந்தபோதிலும், அது வலிமை மிக்க நாடாக உருவாகியது. மேற்கத்திய நாடுகளைப் போலவே, ஜப்பான் ஆசியாவில் பேரரசுக் கொள்கையைப் பின்பற்றியது. ராணுவ பலமும் அதனிடம் இருந்தது. இன்றைய ஜப்பான் ஒரு பொருளாதார வலிமைமிக்க நாடாகத் திகழ்கிறது.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பான் தனித்திருக்கும் கொள்கையையே கடைப்பிடித்து வந்தது. 1853 ஜுலை எட்டம் நாள் அமெரிக்காவைச் சேர்ந்த கம்மோடர் பெர்ரி என்பவர்தான் இதனை உடைத்தெறிந்தார். அவரது தூதுக்குழு ஜப்பான் மேலை நாடுகளுடன் வாணிகத் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வழிவகுத்தது. இந்த தருணத்தில் ஜப்பானை தோகுகவா ஷோகன்கள் கட்டுப்படுத்தி வந்தனர். பெர்ரியின் வருகையால் ஜப்பானிய அரசரிடம் மீண்டும் முழு அதிகாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இதுவே **மெய்ஜி முன்னிலை மீட்சி** எனப்படுகிறது.

மெய்ஜி முன்னிலை மீட்சியினால் ஜப்பானில் பல்வேறு சீர்திருத்தங்கள் தொடங்கி வைக்கப்பட்டன. நிலமானிய முறை ஒழிக்கப்பட்டது. மேற்கத்திய சட்டமுறை செயல்படுத்தப்பட்டது. பிரிட்டனில் இருந்ததைப் போல அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மெய்ஜி அரசியலமைப்பு இதற்கு வழிவகுத்தது. இவ்வாறு ஜப்பான் முழுவதுமாக நவீனமயமாக்கப்பட்டது.

பின்னர் ஜப்பான் தனது ராணுவ வலிமையைப் பெருக்கியதோடு பேராதிக்கொள்கையையும் கடைப்பிடிக்கத் தொடங்கியது. 1894–95 போரில் ஜப்பான் சீனாவை முறியடித்தது. பின்னர் 1904–05 ஆண்டு நடைபெற்ற போரில் ஐரோப்பாவின் மிகப்பெரிய நாடான ரஷ்யாவையும் ஜப்பான் முறியடித்தது. முதல் உலகப்போரின்போது, ஜெர்மனிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த சீனப்பகுதியான ஷான்டுங் மாகாணத்தை ஜப்பான் கைப்பற்றியது. சீனாவின்மீதான இருபத்தியொரு கோரிக்கைகளையும் ஜப்பான் திணித்தது. இவ்வாறு, முதல் உலகப் போரின் முடிவில் ஜப்பான் ஒரு ராணுவ வலிமைமிக்க நாடாக எழுச்சி பெற்றது. எனவே, ஜப்பானின் கடலாதிக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 1921–22ல் வாஷிங்டன் கடற்படை மாநாடு கூட்டப்பட்டது. ஆனால் இது ஒரு தற்காலிகத் தீர்வாகவே அமைந்தது.

1933ல் ஜப்பான் மஞ்சூரியாவைத் தாக்கி கைப்பற்றி அங்கு ஒரு பொம்மை அரசாங்கத்தை ஏற்படுத்தியது. 1937ல் ஜப்பான் மீண்டும் ஒருமுறை சீனாவைத் தாக்கியது. இறுதியில், ஜப்பான், ஜெர்மனி மற்றும் இத்தாலியுடன் சேர்ந்து அச்சு ஒப்பந்தத்தையும் செய்து கொண்டது. 1941ல் ஜப்பான் அமெரிக்கக் கப்பற்படை தளமான 'பெர்ல் ஹார்பர்' துறைமுகத்தை தாக்கியது. இதனால், பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா போன்ற நேச நாடுகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும் இரண்டாம் உலகப்போரில் இறங்க வேண்டியதாயிற்று.

1945 ஆகஸ்ட் 6 மற்றும் 9 ஆகிய தேதிகளில் அமெரிக்கா ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அணுகுண்டுகளை வீசியது. இதனால், ஜப்பான் அமெரிக்காவிடம் சரணடைந்தது.

**ஜெனரல் மெக்ஆர்தர் மற்றும் பேரரசர் ஷிரோ ஹிட்டோ**

போர் முடிந்தபின் ஜப்பான் தளபதி ஜெனரல் மெக் ஆர்தரின் கட்டுப்பாட்டில் விடப்பட்டது. 1947 மே மூன்றாம் நாள் அங்கு புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது. 1951 செப்டம்பரில் அமெரிக்கா மற்றும் 45 நேச நாடுகள் சான் பிரான்சிஸ்கோ அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கைப்படி, ஜப்பான் மீண்டும் சுதந்திர நாடாகியது. 1950 முதல் 1980 வரையிலான ஜப்பானிய வரலாறு அங்கு ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியை குறிப்பதாகவே உள்ளது. அமெரிக்கா, ஜப்பானுக்கு அதிநவீன தொழில்நுட்ப உதவியை அளித்தது. இதனால், ஜப்பான் மிகவிரைவாக கனரக தொழிற்சாலைகளை மீண்டும் அமைத்தது. எஃகு, கார் மின்னணு சாதனங்கள் ஆகியவற்றின் உற்பத்தி போன்ற பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு உலகின் மிகப்பெரிய பொருளாதார வலிமைபெற்ற நாடுகளில் ஒன்றாக ஜப்பான் எழுச்சி பெற்றது. பொருள் உற்பத்தியாளர்கள், வினியோகிப்பவர்கள் மற்றும் 'கெய்ரட்சு' எனப்பட்ட வங்கியாளர்கள் ஆகியோருக்கிடையே நிலவிய கூட்டுறவே ஜப்பானிய பொருளாதாரத்தின் தனிச் சிறப்பாகும். மிட்ஷுபிஷி, சுமிடோமோ, ஃபுயோ, மிட்சியூ, டெய்இச்சி காங்யோ மற்றும் சான்யோ போன்ற ஆற்றல்மிக்க நிறுவங்களை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.



**மெக் ஆர்தர்**

அரசியல்ரீதியாக, ஜப்பானில் லிபரல் டெமாகிரடிக் கட்சி மட்டுமே ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அரை நூற்றாண்டுக்கும் மேலாக அக்கட்சியே வெற்றிபெற்று ஆட்சியமைக்கிறது. 1989ல் பேரரசர் ஹிரோஹிட்டோ இறந்தபிறகு, அவரது மகன் அகிஹிட்டோ அரசனாகப் பதவியேற்றார்.

21 ஆம் நூற்றாண்டிலும் ஜப்பான் ஒரு பொருளாதார வலிமைமிக்க நாடாகவே திகழ்கிறது. வளர்ச்சி பெற்ற நாடுகளின் குழுவான G8ல் இடம் பெற்றுள்ள ஒரே ஆசிய நாடு ஜப்பான் மட்டுமே.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *நவீன சீனாவின் எழுச்சி மற்றும் அதன் சுருக்கமான வரலாறு.*
2. *சீனமக்கள் குடியரசின் எழுச்சியும் மாவோவின் பங்கும்.*
3. *நவீன ஜப்பானின் எழுச்சியும், உலக அரசியலில் அதன் பங்கும்.*
4. *20 ஆம் நூற்றாண்டில் பொருளாதார வலிமைமிக்க நாடாக ஜப்பான் வளர்ச்சிபெற்ற வரலாறு.*

## பயிற்சி

### பகுதி– அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஆசியாவின் நோயாளி என்று கருதப்பட்டது.

அ) துருக்கி ஆ) ஜப்பான்

இ) ரஷ்யா ஈ) சீனா

2. முதல் அபினிப் போரை முடிவுக்குக் கொண்டுவந்த உடன்படிக்கை

அ) நான்சிங் ஆ) பீகிங்

இ) டியன்ட்சின் ஈ) ஷாங்டன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கோமின்டாங் கட்சியை நிறுவியவர் ______________

2. சான்பிரான்சிஸ்கோ அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஆண்டு ____________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஹங் – சியு – சான் | அ. | பண்பாட்டுப் புரட்சி |
| 2. | டாக்டர் சன்யாட்சென் | ஆ. | ஜப்பானியப் பேரரசர் |
| 3. | மாசே துங் | இ. | மெய்ஜி முன்னிலை மீட்சி |
| 4. | கம்மோடர் பெர்ரி | ஈ. | சீனாவின் விடிவெள்ளி |
| 5. | ஹிரோஹிட்டோ | உ. | தைப்பிங் கலகம் |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. தைப்பிங் கலகத்தை டாக்டர் சன்–யாட்–சென் தலைமையேற்று நடத்தினார்.

ஆ. 1916 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பின் மாசேதுங் சீனாவின் தளபதியானார்.

இ. மெய்ஜி மீட்சிக்குப்பின் ஜப்பான் நவீன மயமாக்கப்பட்டது.

ஈ. ஜி–8 அமைப்பில் ஜப்பான் உறுப்பினராக இல்லை.

**V. பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக.**

1. அரசி சுசி சீனாவை 1860 முதல் 1908 வரை ஆட்சிபுரிந்தார்.

2. சன்யாட் சென் மறைவுக்குப் பிறகு, மாசேதுங், கோமின்டாங் கட்சிக்குத் தலைவரானார்.

3. ஆசியாவில் ஐரோப்பியர்களால் குடியேற்றம் அமைக்கப்படாத ஒரே நாடு ஜப்பான் ஆகும்.

4. முதல் உலகப் போரின்போது ஜப்பான் சீனா மீது 21 கோரிக்கைகளைத் திணித்தது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. தைப்பிங் கலகம்

2. நீண்ட பயணம்

3. மெய்ஜி முன்னிலை மீட்சி

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. மாசே துங் பற்றி ஒரு குறிப்பு வரைக.

2. போருக்குப் பிந்தைய ஜப்பானில் ஏற்பட்ட வளர்ச்சியை விவாதி.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. நவீன சீனாவை உருவாக்கியதில் டாக்டர் சன்யாட் சென்னின் பங்கினை மதிப்பிடுக.

2. நவீன உலகில் ஜப்பானின் எழுச்சியை தொகுத்து எழுதுக.

# பாடம் – 33

# ஐக்கிய நாடுகள் அவை

**கற்றல் நோக்கங்கள்**

*இந்த பாடத்திலிருந்து மாணவர் அறிவது*

1. *ஐ. நா. நிறுவப்படுதல்*
2. *ஐ.நா. வின் நோக்கங்கள்*
3. *ஐ.நா. அவையின் அமைப்பு*
4. *ஐ.நா.வின் சாதனைகள்*
5. *ஐ.நா.வின் அரசியல் சார்பற்ற நடவடிக்கைகள்*

முதல் உலகப் போரைவிட இரண்டாம் உலகப் போர் மனித குலத்திற்கு பெரும் அழிவை ஏற்படுத்தியது. முதன் முறையாக அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. அத்தகைய போர்கள் எதிர்காலத்தில் நிகழுமானால் உலகம் என்ன ஆகும் என்ற அச்சம் உலக மக்கள் மனதில் எழுந்தது. சச்சரவுகளில் ஈடுபடும் நாடுகளை சமாதான பேச்சு வார்த்தைக்கு இட்டுச் செல்ல ஒரு உலக அமைப்பு தேவை என அமெரிக்கா, சோவியத் ரஷ்யா மற்றும் கிரேட் பிரிட்டன் போன்ற நாடுகள் உணர்ந்தன. முதல் உலகப் போரின்போது ஏற்படுத்தப்பட்ட அமைப்பு தோல்வியில் முடிந்தபோதிலும், மீண்டும் அத்தகைய அமைப்பை உருவாக்கும் முயற்சியில் இந்த நாடுகள் தீவிரமாக இறங்கின. இம்முயற்சியின் பயனால் விளைந்ததே '**ஐக்கிய நாடுகள் அவை**' யாகும்.

**ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்படுதல்**

ஐ.நா. அவை நிறுவப்படுவதற்கு முன்பே அட்லாண்டிக் சாசனம், யால்டா மாநாடு மற்றும் 1944ல் அமெரிக்காவில் உள்ள டம்பார்ட்டன் ஒக்ஸ் ஆகிய இடங்களில் தொடர்ந்து மாநாடுகள் கூட்டப்பட்டன. இவற்றில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக ஐ.நா. அவை உருவாக்கப்பட்டது. 1945 ஜூன் 26 ஆம் நாள் சான் பிரான்சிஸ்கோ நகரில் 51 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டனர். நீண்ட விவாதங்களுக்குப்பிறகே, இந்த சாசனம் 51 நாடுகளின் பிரதிநிதிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1945 அக்டோபர் 24 ஆம் நாள் ஐக்கிய நாடுகள் அவை நிறுவப்பட்டது. ஐ.நா. வின் தலைமையகம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் அமைந்துள்ளது.

**ஐ.நா.வின் நோக்கங்கள்**

ஐ. நா. சாசனத்தில் அதன் அடிப்படை நோக்கங்கள் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

1. பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரித்தல்.
2. நாடுகளுக்கிடையே நட்புறவையும் அமைதியையும் ஏற்படுத்துதல்.
3. அனைத்து நாடுகளுக்கும் சமஉரிமைகளையும், சுய நிர்ணய உரிமைகளையும் வழங்குதல்.
4. பன்னாட்டு ஒத்துழைப்புடன் பொருளாதார, சமூக, பன்னாட்டு மற்றும் மனிதகுல பிரச்சினைகளை தீர்ப்பது.

5. மனித உரிமைகள், கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை போற்றி வளர்த்தல்.


6. எந்தவொரு நாட்டின் உள்விவகாரங்களிலும் நேரடியாக தலையிடாமல் இருத்தல்.

**ஐ. நா.வின் அமைப்பு**

ஐ. நா. அவையில் ஆறு முக்கிய உறுப்புகள் உள்ளன அவை

1. பொது அவை
2. பாதுகாப்பு சபை
3. பொருளாதார சமூக சபை
4. தர்மகர்த்தா சபை
5. பன்னாட்டு நீதிமன்றம்
6. செயலகம்

**ஐ.நா.வின் அமைப்பு**




**பொது அவை**

ஐ.நா. அமைப்பின் விவாதங்கள் நடைபெறும் முக்கிய இடமாக இது திகழ்கிறது. ஒவ்வொரு உறுப்பு நாடும் தலா ஐந்து பிரதிநிதிகள்வரை பொது அவைக்கு அனுப்புகின்றன. ஆனால், ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு. பன்னாட்டு அமைதி, பாதுகாப்பு குறித்த பிரச்சினைகளை இந்த அவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறது. முக்கிய பன்னாட்டு பிரச்னைகளும் இங்கு விவாதிக்கப்படுகின்றன. ஐ.நா. அவையின் நடிவடிக்கைகளை அதன் பொதுச் செயலாளர் நெறிப்படுத்துகிறார். ஐ.நா. அவையின் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக

ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யா, சீன மற்றும் அராபிய மொழிகள் உள்ளன. 2006 ஆம் ஆண்டு அளவில் ஐ.நா.வில் 192 உறுப்பு நாடுகள் உள்ளன.

**பாதுகாப்பு சபை**

ஐ.நா.வின் முக்கிய நிர்வாக அமைப்பு அதன் பாதுகாப்பு சபையேயாகும். இதில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். ரஷ்யா, சீனா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் கிரேட் பிரிட்டன் ஆகிய நாடுகள் இதில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. இந்த நாடுகளுக்கு **சிறப்பு ரத்து அதிகாரம்** வழங்கப்பட்டுள்ளது. உலகில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதே பாதுகாப்பு சபையின் முக்கிய பணியாகும். ஐ.நா. சட்ட திட்டங்களை மீறுபவர்கள்மீது பொருளாதார மற்றும் ராஜதந்திர ரீதியிலான நடவடிக்கையை பாதுகாப்பு சபை மேற்கொள்ள முடியும்.

**பொருளாதார, சமூக சபை**

இந்த சபையில் 18 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். தற்போது 27 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த சபையின் உறுப்பினர்கள் அனைவரும் பொது அவையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எனவே, இந்த சபை பொது அவைக்கே நேரடியாக பொறுப்புள்ளதாக அமைந்துள்ளது. மனித உரிமைகளுக்கு அனைத்துலக அங்கீகாரத்தை ஏற்படுத்துவதும், உலக சமூகத்தில் உயரிய பண்பாட்டை உருவாக்குவதும் இந்த சபையின் அடிப்படை நோக்கங்களாகும். மக்களுக்கு வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தி அதன்வழி அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் இச்சபையின் குறிக்கோளாகும். மக்களின் வாழ்க்கை தரத்தையும் பொருளாதார நிலையையும் உயர்த்துவதன் மூலமே உலக அமைதியை நிலைநாட்டமுடியும் என்பது ஐ.நா.வின் உயரிய நம்பிக்கையாகும்.

பல்வேறு சிறப்புக்குழுக்கள் மற்றும் அமைப்புகள் மூலமே பொருளாதார, சமூக சபை தனது பணிகளை திறம்பட செய்து வருகிறது. யுனெஸ்கோ எனப்படும் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம், ஐ. நா. உதவி மற்றும் புனர்வாழ்வு ஆணையம், உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம், பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு, உலக வங்கி, உலக சுகாதார நிறுவனம் போன்றவை பொருளாதார, சமூக சபைக்கு உரிய ஒத்துழைப்பை அளிக்கின்றன. 1945 ஆம் ஆண்டிலிருந்தே இந்த சபை மனித குலத்திற்கு அரிய சேவைகளை ஆற்றிவருகிறது என்பதில் ஐயமில்லை.

**தர்மகர்த்தா சபை**

பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தர்மகர்த்தா சபையில் இடம் பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர, குடியேற்றங்களை நிர்வகித்து வரும் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பொது அவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரும் இதன் உறுப்பினர்களாவர். தனது கட்டுப்பாட்டில் விடப்பட்டுள்ள பகுதிகளின் நலன்களை பாதுகாப்பதே தர்மகர்த்தா சபையின் முக்கிய பணியாகும். ஐ.நா.வின் கட்டுப்பாட்டிலுள்ள நாடுகளை நன்கு நிர்வகிக்கவும் பொது அவைக்கு தர்மகர்த்தா சபை ஒத்துழைப்பு அளிக்கிறது.

பன்னாட்டு நீதிமன்றம் ஐ.நா.வின் நீதிமன்றமாக பன்னாட்டு நீதிமன்றம் செயல்படுகிறது. பொது அவையாலும், பாதுகாப்பு சபையாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நீதிபதிகள் இதில் இடம்பெற்றுள்ளனர். ஐ.நா.வின் உறுப்பு நாடுகளுக்கிடையே எழும் சட்டரீதியான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதே இதன் முக்கிய பணியாகும்.

**செயலகம்**

ஐ.நா.வின் பணியாளர்களை உள்ளடக்கியதே அதன் செயலகமாகும். இதன் தலைவராக பொதுச் செயலாளர் செயல்படுகிறார். பாதுகாப்பு சபையின் பரிந்துரையின் பேரில் ஐ.நா. பொது அவையால் இவர் நியமிக்கப்படுகிறார். ஐ.நா.வின் அனைத்து உறுப்புகளும் சரிவர இயங்குவதற்கு உதவியாக இருப்பதே செயலகத்தின் முக்கிய பணியாகும்.

**ஐ.நா.வின் சாதனைகள்**

தொடக்கத்திலிருந்தே, பன்னாட்டு அளவில் தோன்றி வரும் பிரச்சினைகள் மற்றும் மோதல்களை ஐ.நா. அவை திறம்பட சந்தித்து அவற்றை முடித்து வைக்க பாடுபட்டுவருகிறது. ஐ.நா. பாதுகாப்பு சபை இதற்காக பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஆனால், பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தங்களிடமுள்ள ரத்து அதிகாரத்தை தாராளமாக பயன்படுத்துவதால் இத்தகைய முயற்சிகளுக்கு அவ்வப்போது தடங்கல்கள் ஏற்படுகின்றன. 1946 – 47 ஆம் ஆண்டுகளில் மட்டும் சோவியத் ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தை 22 முறை பயன்படுத்தியது. இத்தகைய தடங்கல்களையும் மீறி ஐ.நா. அவை பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வுகளைக்கண்டு சாதனை படைத்து வருகிறது. அத்தகைய சாதனைகளில் ஒருசிலவற்றை பின்வருமாறு காணலாம்.

**குடியேற்ற நாடுகளின் விடுதலை**

ஆசியா, ஆப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா போன்ற பகுதிகளிலிருந்த குடியேற்ற நாடுகள் விடுதலை பெறுவதற்கு ஐ.நா. உதவிக்கரம் நீட்டியது குறிப்பிடத்தக்கது. குடியேற்றங்களின் விடுதலை ஐ.நா. அவை அமைக்கப்பட்ட பிறகு வேகமாக நடைபெற்றது.

**அமைதியை நிலைநாட்டுதல்**

உலக அமைதியை பராமரித்தலே ஐ.நா. அவையின் முக்கிய பணியாகும். ஐ.நா. தலையிட்டு அமைதியை ஏற்படுத்திய மோதல் சம்பவங்கள் சிலவற்றை இப்போது காணலாம்.

**ஈரான் சிக்கல்**

1946 ஜனவரி முதல் நாள் ஈரான் ஐ.நா. அவையில் ரஷ்யாவுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை வைத்தது. ஈரானியப்பகுதியில் ரஷ்யா தனது துருப்புக்களை நிறுத்திவைத்திருந்ததே அக்குற்றச்சாட்டாகும். ஐ.நா. அவையின் கடுமையான எச்சரிக்கையை அடுத்து ரஷ்யா நீண்டகாலமாக ஈரானியப்பகுதியில் நிறுத்தி வைத்திருந்த துருப்புக்களை விலக்கிக்கொண்டது. ஐ.நா. அவையின் முதலாவது பெரும்சாதனை என்று இதனைக் கூறலாம்.

**சிரியா மற்றும் லெபனான்**

இதேபோன்ற குற்றச்சாட்டை சிரியாவும் லெபனானும் ஐ.நா. அவையின் கவனத்துக்கு கொண்டுவந்தது. தங்களது நிலப்பகுதிகளிலிருந்து பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு துருப்புக்கள் உடனடியாக விலக்கப்படவேண்டும் என ஐ.நா. அவையிடம் இந்த நாடுகள் முறையிட்டன. பாதுகாப்பு சபையின் தீவிர முயற்சிகளால், பிரிட்டன் மற்றும் பிரெஞ்சு துருப்புகள் ஆக்ரமிப்பு பகுதிகளிலிருந்து பின்வாங்கின.

**இந்தோனேசியா**

இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு இந்தோனேசியாவின் தேசியவாதிகள் அங்கு ஒரு குடியரசை நிறுவினார். ஆனால், ஜாவா மற்றும் சுமத்ரா பகுதியில் வாழ்ந்து வந்த டச்சுக்காரர்கள் தேசியவாதிகளுக்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஐ.நா. பாதுகாப்பு சபை தலையீட்டின் காரணமாக அங்கு அமைதி நிலைநாட்டப்பட்டது. இந்தோனேசியாவிற்கு முழு சதந்திரம் வழங்குவதற்கு டச்சுக்காரர்கள் உடன்பட்டனர்.

**பாலஸ்தீன சிக்கல்**

முதல் உலகப்போருக்குப் பின்பு, பாலஸ்தீனம் உரிமைக்கட்டளையின் கீழ் கிரேட் பிரிட்டனிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால், அங்கு வாழ்ந்த யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் இடையே பூசல் எழுந்தமையால் பாலஸ்தீனப் பகுதியில் பதட்டம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு பாலஸ்தீனிய பிரச்னை குறித்து ஆய்வு மேற்கொள்ள ஐ.நா. அவை ஒரு குழுவை நியமித்தது. இக்குழுவின் பரிந்துரைப்படி பாலஸ்தீனம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது (அராபியா நாடு, யூத நாடு மற்றும் ஜெருசலேம் நகரம்) ஜெருசலேம் ஐ.நா.வின் தர்மகர்த்தா சபையின் கட்டுப்பாட்டில் விடப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி, 1948ல் யூதர்களுக்காக இஸ்ரேல் என்ற தனிநாடு உருவாக்கப்பட்டது.

பாலஸ்தீனம் துண்டாக்கப்பட்டதை அராபியர்கள் கடுமையாக எதிர்த்தனர். யூதர்களுக்கு எதிராக கிளர்ச்சியிலும் இறங்கினார்கள். இதனால், புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேலுக்கும், அராபிய கூட்டமைப்பிற்கும் இடையே பாலஸ்தீனத்தில் உள்நாட்டுப் போர் தோன்றியது. பாலஸ்தீனத்தில் பதட்டத்தைப் போக்குவதற்கு ஐ.நா. பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது.

**காஷ்மீர் சிக்கல்**

காஷ்மீர் குறித்த சிக்கலால் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பூசல்கள் தோன்றின. இது ஐ.நா. அவையின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள விரிசலைப் போக்குவதற்கும் பகைமையை தணிப்பதற்கும் ஐ.நா. தன்னாலான முயற்சிகளை எடுத்தது. போர் நிறுத்தப்பட்டபோதிலும் காஷ்மீர் பிரச்சனை ஒரு அமைதியான, நிரந்தரமான தீர்வை எதிர்நோக்கியுள்ளது.

**கொரிய பிரச்னை**

இரண்டாம் உலகப்போருக்கு முன்பு கொரியப்பகுதி முழுவதும் ஜப்பானின் கட்டுப்பாட்டில் இருந்தது. போர் முடிந்த பிறகு. அமெரிக்காவும், ரஷ்யாவும் 38வது இணைக்கோட்டை மையமாகக் கொண்டு கொரியாவை இரண்டாக பிரித்தன. 1950 ஜூன் 24 ஆம் நாள் வடகொரியப் படைகள் தென்கொரியாவை கடுமையாகத் தாக்கின. இந்த பிரச்னை மீண்டும் ஐ.நா. அவையின் கவனத்துக்கு வந்தது. ஐ.நா. பாதுகாப்பு சபை வடகொரியா மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது என முடிவெடுத்தது. அமெரிக்க படைத்தளபதி ஜெனரல் மெக் ஆர்தர் தலைமையில் ஐ.நா. படைகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டன. 1953 ஜூலை 27 ஆம் நாள் ஒரு உடன்படிக்கை கையெழுத்தானதைத் தொடர்ந்து ஐ.நா. படைகள் திரும்பப் பெறப்பட்டன.

**பிற முக்கிய பிரச்னைகள்**

இவை தவிர, சூயஸ் கால்வாய் சிக்கல் (1956) சைப்ரஸ் பிரச்னை (1960) காங்கோ சிக்கல் (1960), வளைகுடாப் போர் போன்ற பல்வேறு பிரச்னைகளிலும் ஐ.நா. தலையிட்டு அமைதியை நிலைநாட்டியது.

**அரசியல் சார்பற்ற நடவடிக்கைகள்**

அரசியல் சாராத பல்வேறு துறைகளிலும் ஐ.நா. தனது சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. எடுத்துக்காட்டாக, தென் ஆப்ரிக்காவில் இன ஒதுக்கல் முறையை முடிவுக்கு கொண்டு வந்ததை குறிப்பிடலாம். மனித உரிமைகளைப் பாதுகாக்க ஐ.நா. பெரும் முயற்சிகளை எடுத்து வருகிறது. உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம், பன்னாட்டு வளர்ச்சி வங்கி போன்ற நிறுவனங்களின் உதவியுடன் வளரும் நாடுகளுக்கு ஐ.நா. பல உதவிகளையும் செய்து வருகிறது.

பன்னாட்டு சட்டம், பன்னாட்டு பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி, சமூக சமத்துவம் போன்றவற்றில் உலக நாடுகளின் ஒத்துழைப்புடன் தனது பங்கை ஐ.நா. ஆற்றி வருகிறது. பல்வேறு தடங்கல்களையும், தோல்விகளையும் பொருட்படுத்தாமல் தமது உயரிய குறிக்கோள்களை நடைமுறைப்படுத்த ஐ.நா. பாடுபட்டு வருகிறது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர்கள் பெறும் செய்தி*

1. *இரண்டாம் உலகப்போருக்குப் பின் ஐ.நா. அவை நிறுவப்பட்டது.*
2. *ஐ.நா.வின் நோக்கங்களும் குறிக்கோள்களும்*
3. *ஐ.நா. வின் அமைப்பும், நடைமுறையும்*
4. *நாடுகளுக்கிடையே எழும் சிக்கல்களை தீர்த்து உலக அமைதியை ஏற்படுத்துவதில் ஐ.நா.வின் சாதனைகள்*
5. *ஐ.நா.வின் அரசியல் சாரா நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள்.*

# பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. ஐ.நா. சபையின் தலைமையிடம் அமைந்துள்ளது

   அ) ஜெனிவா ஆ) தி ஹேக்

   இ) நியூயார்க் ஈ) சான்பிரான்சிஸ்கோ

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஐ.நா. சபை அமைக்கப்பட்ட நாள் ______________

2. ஐ.நா. சபையின் நீதித்துறை ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஐ.நா. சாசனம் | அ. | 1956 |
| 2. | சூயஸ் சிக்கல் | ஆ. | 1960 |
| 3. | சைப்ரஸ் சிக்கல் | இ. | 1990 |
| 4. | வளைகுடாப் போர் | ஈ. | 1945 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. உலக அமைதியை காப்பதற்கு நிறுவப்பட்ட முதல் உலக நிறுவனம் ஐ.நா. சபையாகும்.

ஆ. பன்னாட்டு தொழிலாளர் சங்கத்தின் தலைமையிடம் ரோம் நகரில் உள்ளது.

இ. பன்னாட்டு நீதிமன்றத்தில் 15 நீதிபதிகள் உள்ளனர்.

ஈ. உலக சுகாதார நிறுவனம் ஐ.நா. வின் முக்கிய அங்கங்களில் ஒன்றாகும்.

**V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா என்று கூறுக.**

1. 1945–ல் சான்பிரான்ஸிஸ்கோ நகரில் 51 நாடுகள் ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டன.

2. ஐ.நா. பாதுகாப்பு அவையில் உள்ள நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் தற்காலிக உறுப்பினர்கள் இருவருக்கும் சிறப்பு இரத்து அதிகாரம் உண்டு.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. பாதுகாப்பு சபை

2. காஷ்மீர் பிரச்சினை

3. அரபு – இஸ்ரேல் மோதல்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. ஐ.நா. சபையின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

2. யுனெஸ்கோவின் செயல்பாடுகள் பற்றி குறிப்பு எழுதுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. ஐ.நா.வின் பல்வேறு பணிகளை சுருக்கமாகக் குறிப்பு எழுதுக

2. உலக அமைதியைக் காப்பதில் ஐ.நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

# பாடம் – 34

# கெடுபிடிப்போர்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *கெடுபிடிப்போரின் தொடக்கம்*
2. *ராணுவ ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுதல்*
3. *அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா நாடுகளுக்கிடையில் பதட்டம் அதிகரித்தல்*
4. *கெடுபிடிப்போரின் முடிவு*

இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இருபெரும் வல்லரசுகளாக உருவெடுத்தன. சோவியத் ரஷ்யா சிதையும்வரை, இவ்விரு நாடுகளுக்கிடையே காணப்பட்ட, பாதகமான உறவுமுறையே கெடுபிடிப்போர் என அழைக்கப்படுகிறது. பெர்னார்ட் பரூச் என்பவரால்தான் முதன்முறையாக கெடுபிடிப்போர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு, வால்டர் லிப்மேன் என்ற அறிஞர் இந்த சொல்லை பிரபலப்படுத்தினார்.

பொதுவாக, மேற்கத்திய உலகத்திற்கும் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் இடையே நீடித்த பதட்டம் மற்றும் பூசல்களை கெடுபிடிப்போர் விவரிக்கிறது. குறிப்பாக அமெரிக்க சோவியத் நாடுகளுக்கிடையிலான பூசல்களையே இது எடுத்துரைக்கிறது. கெடுபிடிப்போரை, கருத்து ரீதியிலான போர் என்றும் அல்லது பிரச்சாரத்துக்கான போர் அல்லது அரசியல் வெல்திறனுக்கான போர் என்றும் கூறலாம். இது, உண்மையான போர் நிகழ்ச்சியை விவரிப்பதாகவோ அல்லது அமைதி நிலையை வெளிப்படுத்துவதாகவோ இல்லை என்பதே உண்மை. மாறாக ஒருவித சிக்கல் நிறைந்த அமைதியையே இது குறிக்கிறது.

### கெடுபிடிப்போரின் தொடக்கம்

இரண்டாம் உலகப்போர் முடிவடைவதற்கு முன்பே, சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளான போலந்து, பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி மற்றும் யுகேஸ்லாவியாவில் கம்யூனிஸ்ட் ஆட்சியை ஏற்படுத்தியது. போர் முடிந்தவுடன் சோவியத் யூனியன் கிழக்கு ஜெர்மனியை தனது செல்வாக்கின்கீழ் கொண்டுவந்தது. மேற்கு ஜெர்மனி அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது. பெர்லின் நகரில் மேற்குப் பகுதிக்கு செல்லும் சாலைகளில் சோவியத் யூனியன் தடைகளை ஏற்படுத்தியது. இதுவே **'பெர்லின் தடை'** எனப்பட்டது. கெடுபிடிப்போரின் இரண்டு குழுக்களிடையேயும் இவ்வாறு பதட்டம் ஏற்படத் தொடங்கியது. ரஷ்யாவின் செல்வாக்கு பரவுவதை மேற்கத்தியநாடுகள் கவலையுடன் நோக்கின. கம்யூனிச பரவலைத் தடுக்கும் பொறுப்பை அமெரிக்கா மேற்கொண்டது. 1947 ஜூன் 5 ஆம் நாள் அமெரிக்கா **மார்ஷல் திட்டத்தை** அறிவித்தது. இதன்படி மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு பொருளாதார உதவிகள் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஐரோப்பாவை வளர்ந்துவரும் கம்யூனிசத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்கான முதல் நடவடிக்கை இதுவேயாகும். அமெரிக்காவின் மார்ஷல் திட்டத்திற்கு பதிலடியாக சோவியத் ரஷ்யா

**மோலடோவ் திட்டத்தை** அறிவித்தது. 1948 மார்ச் 12 ஆம் நாள் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் தனது **ட்ருமன் கோட்பாட்டை** அறிவித்தார். இதன்படி கிரீஸ் மற்றும் துருக்கி நாடுகளில் கம்யூனிச தாக்கம் ஏற்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடன் சுமார் 400 மில்லியன் டாலர்கள் மதிப்புக்கு பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை அந்நாடுகளுக்கு வழங்க அமமெரிக்கா முடிவு செய்தது.

**நேட்டோ (வட அட்லான்டிக் ஒப்பந்த நாடுகளின் அமைப்பு)**

மேற்கு ஐரோப்பியப் பகுதியில் மேலும் கம்யூனிசம் பரவாமல் தடுப்பதற்காக அமெரிக்கா ஒரு ராணுவ ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தியது. 1948 லியே பிரஸ்ஸல்ஸ் உடன்படிக்கைப்படி இதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டிருந்தது. போர் ஏற்படுமேயானால் பிரிட்டன், பிரான்சு ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க் ஆகிய நாடுகள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக்குவருவது என இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. 1949 ஏப்ரல் நான்காம் நாள் ராணுவக் கூட்டமைப்பை ஏற்படுத்திய **வட அட்லான்டிக் உடன்படிக்கை** கையெழுத்தாயிற்று.

இந்த அமைப்பே வடஅட்லான்டிக் ஒப்பந்த நாடுகளின் கூட்டமைப்பு அல்லது நேட்டோ எனப்படுகிறது. இதில், அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஹாலந்து, பெல்ஜியம், லக்சம்பர்க், போர்ச்சுகல், டென்மார்க், இத்தாலி மற்றும் நார்வே ஆகிய நாடுகள் உறுப்பினராக சேர்ந்தன. எந்த ஒரு நாடாவது தாக்கப்பட்டால் மற்றவர்கள் ராணுவ உதவிக்கு வருவது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சோவியத் யூனியனுக்கு எதிராகவே இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

**வார்சா ஒப்பந்தம்**

1955 முதல் 1958 வரை கெடுபிடிப்போரின் மையமாக மேற்கு ஆசியா விளங்கியது. 1955ல் **பாக்தாத் உடன்படிக்கை** என்ற ராணுவ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இதுவே பின்னர் **மத்திய நாடுகள் ஒப்பந்த அமைப்பு** (சென்டோ) என்று அழைக்கப்பட்டது. இத்தகைய மேற்கு நாடுகளின் ராணுவ ஒப்பந்தங்களுக்கு பதிலடியாக, சோவியத் யூனியன் 1955 மே மாதம் 14 ஆம் நாள் தனது நட்பு நாடுகளுடன் **வார்சா ஒப்பந்தத்தை** செய்து கொண்டது. இக்காலத்தில பல்வேறு ராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன என்றாலும் மேற்கு நாடுகளுக்கும் கம்யூனிச நாடுகளுக்கும் இடையே பதட்டம் சற்று தணிந்தே காணப்பட்டது.

**சீனா**

1949 அக்டோபரில் மாசேதுங் சீனமக்கள் குடியரசை நிறுவியது சோவியத் கூட்டணிக்கு மேலும் வலிமை சேர்ப்பதாக அமைந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகரிக்க மறுத்துவிட்டது. மாறாக, தைவானில் தேசிய அரசாங்கத்தை அமைத்திருந்த சியாங்கே ஷேக் என்பவரை அமெரிக்கா ஆதரித்தது. தேசிய அரசை சட்டபூர்வமான சீன அரசாகக் கருதிய அமெரிக்கா, அதனை ஐ.நா. பாதுகாப்பு சபையிலும் நிரந்தர உறுப்பினராக்கியது. கம்யூனிஸ்டு சீனா அல்லது சீன மக்கள் குடியரசு ஐ.நா.வில் உறுப்பினராவதையே அமெரிக்கா தடுத்தது.

**கொரியச் சிக்கல்**

1950 ஆம் ஆண்டு கெடுபிடிப்போருக்கான களம் ஐரோப்பாவிலிருந்து கிழக்காசியாவிற்கு மாறியது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்பு, கொரியா நாடு வடகொரியா, தென்கொரியா என இரண்டு கூறுகளாக்கப்பட்டது. வடகொரியாவில்

சோவியத் ஆதரவிலான அரசு அமைக்கப்பட்டது. தென்கொரியாவில் அமெரிக்க ஆதர்வு அரசு நிறுவப்பட்டது. இரு கொரியாக்களும் ஒன்றுக்கொன்று எதிரிகளாகக் கருதின. 1950 ஜூன் 25 ஆம் நாள் வட கொரியா தென் கொரியாமீது தாக்குதல் தொடுத்தது. சோவியத் ஆயுதங்களோடும் சீனத்துருப்புக்களோடும் வடகொரியா போரிட்டது. தென்கொரியாவுக்கு ஆதரவாக ஐ.நா. படைகள் என்ற போர்வையில் அமெரிக்கா போரிட்டது. கெடுபிடிப்போரை உண்மையான ஆயுதம் ஏந்திய போராகவே கொரியப்போர் மாற்றியமைத்தது என்று கூறலாம்.

**வியட்நாம் போர்**

கெடுபிடிப்போர் வியட்நாமுக்கும் பரவியது 1954 மே 7 ஆம் நாள் டையன் பைன் பூ வீழ்ச்சியடைந்த பிறகு இந்தோசீனப்பகுதியில் பிரான்சின் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. ஜெனிவா ஒப்பந்தப்படி வியட்நாம் 17 பூமத்திய ரேகையை எல்லைக் கோடாகக் கொண்டு வடவியட்நாம் என்றும் தென் வியட்நாம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. வட மற்றும் தென் வியட்நாம்களுக்கிடையே பூசல்கள் தோன்றின. அமெரிக்கா தென் வியட்நாமுக்கு ஆதரவாகப் போரில் இறங்கியது. மேலும், தென் கிழக்கு ஆசியாவில் கம்யூனிசப் பரவலைத் தடுக்கும் நோக்கத்துடன் தென்கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகளின் கூட்டமைப்பு (சீட்டோ) ஒன்றும் 1954ல் ஏற்படுத்தப்பட்டது.

**பிராந்திய பாதுகாப்பு நடவடிக்கைகள்**

| நேட்டோ | | சீட்டோ | | சென்டோ | |
|---|---|---|---|---|---|
| விரிவாக்கம் : | வட அட்லாண்டிக் உடன்படிக்கை அமைப்பு | விரிவாக்கம்: | தென்கிழக்கு ஆசிய நாடுகள் உடன்படிக்கை அமைப்பு | விரிவாக்கம் : | மத்திய நாடுகள் ஒப்பந்த அமைப்பு |
| வருடம் : | 1949 | வருடம் : | 1954 | வருடம் : | 1955 |
| உறுப்பினர்கள்: | 12 + கிரீஸ், மேற்கு ஜெர்மனி, துருக்கி | உறுப்பினர்கள்: | அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் | உறுப்பினர்கள்: | ரஷ்யா,போலந்து, செசக்கோஸ்லோவாக்கியா ஹங்கேரி மற்றும் ருமேனியா |

**கியூபா ஏவுகனைச் சிக்கல் (1962)**

கம்யூனிஸ்ட் நாடும், சோவியத் யூனியனின் நட்பு நாடுமான கியூபாவில் சோவியத் யூனியன் தனது அணு ஆயுத ஏவுகணைகளை நிறுவியது. இச்செயலை அமெரிக்கா தனது பாதுகாப்புக்கு அச்சம் விளைவிக்கக்கூடிய செயலாகக் கருதியது. ஜான் எஃப் கென்னடி ஏழாவது அணு ஆயுதக்கப்பற்படையை கியூபா நோக்கி அனுப்பினார். இதனால், இரண்டு வல்லரசுகளும் போரின் எல்லை வரை நெருங்கிச் சென்றுவிட்டன. இருப்பினும், இருதரப்பிலும் நிதானமும் நல்லறிவும் நிலவியதால் சிக்கல் தவிர்க்கப்பட்டது. பின்னர், சோவியத் ரஷ்யா தனது ஏவுகணைகளை கியூபாவிலிருந்து விலக்கிக் கொண்டது.

**கெடுபிடிப்போரின் போர்ப் பதட்டநிலை குறைதல்**

1960 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் அணு ஆயுத சம வல்லமையைப் பெற்றன. எனவே எந்தவொரு அணு ஆயுதப்போரும் இருதரப்பினருக்கும் அழிவையே ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து வல்லரசுகள் இரண்டும் சமதான சகவாழ்வை நாடத் தொடங்கினர். இதனால், 1963ல் அவை **அணுஆயுத சோதனைத் தடை உடன்படிக்கை**யில் கையெழுத்திட்டன. இதைத் தொடர்ந்து வாஷிங்டனுக்கும் கிரம்ளின் மாளிகைக்குக்கும் இடையே எந்நேரமும் தொடர்பு கொள்ளக்கூடிய **ஹாட் லைன் ஒப்பந்தம்** கையெழுத்தாகியது.

1970 ஆம் ஆண்டுகளுக்குப்பிறகு, சோவியத் யூனியனுக்கும் கம்யூனிஸ்ட் சீனாவிற்கும் இடையே கருத்துவேறுபாடு தோன்றியது. சீன மக்கள் குடியரசு ஐ.நா. சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அமெரிக்க அதிபர் நிக்சன் 1972 மே மாதம் மாஸ்கோவிற்கு விஜயம் செய்தார். அப்போது முதலாவது **சால்ட் (ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம்) ஒப்பந்தம்** செய்து கொள்ளப்பட்டது.

1973 ஜுன் மாதத்தில் சோவியத் அதிபர் பிரஷ்னேவ் அமெரிக்காவில் ஒன்பது நாட்கள் பயணம் மேற்கொண்டார். ஆயுதக் குறைப்பு பேச்சு வார்த்தையில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. அமெரிக்கா – சோவியத் யூனியன் நாடுகளுக்கிடையிலான பதட்டம் வெகுவாகக் குறைந்தமையால் இக்காலத்தை **டிடன்ஷே காலம்** எனப்பட்டது.

**கெடுபிடிப்போரின் முடிவு**

சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதால் சோவியத் ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் கம்யூனிசம் வீழ்ச்சியடைந்தது. இருமுனை உலகம் ஒருமுனைக் கோட்பாட்டைக் கொண்ட உலகமாகியது. 1991 ஜுலை 31 ஆம் நாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், சோவியத் தலைவர் மைக்கேல் கோர்பசேவ் இருவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க **ஸ்டார்ட் ஒப்பந்தத்தை** மாஸ்கோ உச்சிமாநாட்டின்போது செய்து கொண்டனர். இதுவே கெடுபிடிப்போரின் முடிவைக் குறிப்பதாக அமைந்தது.

1945 ஆம் ஆண்டிலிருந்து கருத்துப் போராகக் கருதப்பட்ட கெடுபிடிப்போர் சுமார் 50 ஆண்டுகள் நீடித்தது. உலக நாடுகள் இரண்டு அணிகளாகத் திரண்டன. ராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. ஆயுதப் போட்டியும் நடந்தேறியது. அணு ஆயுதம் உலகை பல தருணங்களில் பயமுறுத்தியது. இருப்பினும் 1970களுக்குப் பிறகு பதட்டம் சற்றே தணிந்தது. பின்னர் சோவியத் யூனியனின் கலைப்புக்குப்பிறகு கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்தது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்தை படித்தபின் மாணவர் பெறும் தகவல்கள்*

1. *கெடுபிடிப்போர் குறித்த விளக்கம் மற்றும் அதன் தொடக்கம்*
2. *நேட்டோ, சென்டோ, சீட்டோ, வார்சா ஒப்பந்தம் போன்ற ராணுவ கூட்டமைப்புகளின் தோற்றம்.*
3. *கொரியப் போர், வியட்நாம் போர் போல கெடுப்பிடிப்போர் சில தருணங்களில் உண்மையான போர்களுக்கும் வித்திட்டது.*
4. *கெடுபிடிப்போரின் முடிவும் சோவியத் யூனியன் கலைக்கப்படுதலும்.*

# பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. கெடிபிடிப்போர் எனும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர்

அ) பெர்னார்ட்பரோச் ஆ) எப். டி. ரூஸ்வெல்ட்

இ) ஸ்டாலின் ஈ) சர்ச்சில்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் கையெழுத்தான ஆண்டு ______________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | நேட்டோ | அ. | 1955 |
| 2. | சென்டோ | ஆ. | 1947 |
| 3. | சீட்டோ | இ. | 1948 |
| 4. | வார்சா ஒப்பந்தம் | ஈ. | 1949 |
| 5. | ட்ரூமன் கோட்பாடு | உ. | 1954 |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. ஜூன் 5, 1947ல் ட்ரூமன் கோட்பாடு அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டது.

ஆ. ஏப்ரல் 4, 1949ல் வட அட்லாண்டிக் ஒப்பந்தம் கையெழுத்தானது

இ. மத்திய நாடுகள் ஒப்பந்த அமைப்பு வார்சா ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படுகிறது.

ஈ. டியன் பியன் பூ தாக்கப்பட்டது கொரியப்போர் மூண்டது.

**V. பின்வரும் வாக்கியங்களை சரியா, தவறா எனக் கூறுக.**

1. கியூபா ஏவுகணை நெருக்கடியின் போது அமெரிக்கா தனது ஏழாவது அணு ஆயுத கப்பற்படையை அனுப்பியது.

2. 1960–ல் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அணு ஆயுத சோதனை தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டன.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. கெடுபிடிப்போர்

2. வார்சா ஒப்பந்தம்

3. நேட்டோ

4. வியட்நாம் போர்

5. கொரியச் சிக்கல்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. கெடுபிடிப்போரின் தொடக்கத்தை விவரி.

2. சோவியத் யூனியன் கலைக்கப்பட்டதை சுருக்கமாகக் கூறுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. கெடுபிடிப்போரின்போது ராணுவ அணிகள் அமைக்கப்பட்டதை தொகுத்துக் கூறுக.

2. கெடுபிடிப்போரின் தாக்கத்தை நுணுக்கமாக ஆய்க.

# பாடம் – 35

# இன்றைய உலகம்

**கற்றல் நோக்கங்கள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர் பெறும் செய்திகள்*

1. *உருவாகிவரும் புதிய உலக அமைப்பு*
2. *அணு ஆயுதக் குறைப்பு*
3. *உலக மயமாக்கலும், உலக வர்த்தக அமைப்பும்*
4. *பயங்கரவாதத் தொல்லை*
5. *இன்றைய உலகம் எதிர்நோக்கியுள்ள சுற்றுச்சூழல் பிரச்னைகள்*

**புதிய உலக அமைப்பு**

நவீன உலகின் வரலாற்றில் 1945 ஆம் வருடம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பல்முனை உலகமும், வல்லமைச் சமநிலையும் அந்த ஆண்டில் விடைபெற்றன. இருமுனை உலக அமைப்பு உருவாகி. அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் ஆகிய இரண்டு வல்லரசுகள் எழுச்சி பெற்றன. 1990களில் சோவியத் யூனியனின் வீழ்ச்சி உலக அமைப்பை மீண்டும் மாற்றியமைத்தது. ஒருமுனை உலகம், உலகமயமாக்கம், புதிய வகை தொழில்நுட்பங்கள், தகவல் தொடர்புக்காலம் மற்றும் உலகளாவிய பயங்கரவாதம் போன்றவற்றை இன்றைய புதிய உலக அமைப்பில் காண்கிறோம்.

**சோவியத் யூனியனின் வீழ்ச்சி**

1985 மார்ச் மாதத்தில் மைக்கேல் கோர்பசேவ் சோவியத் யூனியனின் அதிபராகப் பொறுப்பேற்றார். **'கிளாஸ்நாஸ்ட்'** என்ற பெயரில் அவர் பல அரசியல் ரீதியான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். பத்திரிகைத் தணிக்கை தளர்த்தப்பட்டது. வெளிப்படையான அரசியலுக்கு வித்திடப்பட்டது. இதனால், எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டன. சோவியத் யூனியனில் அங்கம் வகித்த குடியரசுகளில் நீண்டகாலமாக அடங்கிக்கிடந்த தேசிய மற்றும் ரஷ்ய எதிர்ப்பு உணர்வுகள் வெளிப்படத் தொடங்கின.



**மைக்கேல் கோர்பசேவ்**

உள்நாட்டைப் பொறுத்தவரை கோர்பசேவ் 'பிரெஸ்த்ட்ரோகியா' என்ற பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார். இதனால், வாழ்க்கைத்தரம் உயரும், உற்பத்தி திறன் பொருளாதாரக் கொள்கை தனியார் துறை வளர வழிவகுத்தது.

இத்தகைய சீர்திருத்தங்கள் சோவியத் யூனியனில் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிவகுத்தன. 1991 டிசம்பர் 8 ஆம் நாள் ரஷ்யா, உக்ரேன் மற்றும் பைலோராசியன் ஆகிய குடியரசுகளின் தலைவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். அதில், சோவியத் யூனியன் கலைக்கப்பட்டுவிட்டதாகவும், அதற்குப் பதில் சுதந்திர அரசுகளின் காமன்வெல்த் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. இதனால், கோர்பசேவ் திடீரென நாடற்ற அதிபரானார்.

1991 டிசம்பர் 25 ஆம் நாள் மைக்கேல் கோர்பசேவ் தனது சோவியத் யூனியன் அதிபர் பதவியை விட்டு முறைப்படி விலகினார். தனது அதிகாரங்களை போரிஸ் எல்ட்சினிடம் ஒப்படைத்தார். மறுநாள் சோவியத் கூட்டமைப்பின் உயர்மன்றம் தம்மைத்தாமே கலைத்துவிட்டதாக அறிவித்தது. 1922 ஆம் ஆண்டு அதிகாரபூர்வமாக சோவியத் யூனியன் உருவாக்கப்பட்ட அறிவிப்பை விலக்கிக் கொள்வதாகவும் அறிவித்தது. இதுவே சோவியத் யூனியனின் முடிவைக் குறிப்பதாகும்.

**ஜெர்மனி மீண்டும் இணைக்கப்படுதல்**

இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஜெர்மனி இரண்டு தனித்தனி நாடுகளாகத் துண்டாடப்பட்டது. கிழக்கு ஜெர்மனி சோவியத் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்தது. மேற்கு ஜெர்மனியை அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் ஆதரித்தன. இரண்டு ஜெர்மனிகளின் எல்லைப்பகுதியில் பெர்லின் நகரின் குறுக்கே சுவர் ஒன்று எழுப்பப்பட்டது. இதுவே புகழ்மிக்க **'பெர்லின் சுவர்'** ஆகும். சோவியத் ரஷ்யாவின் கலைப்புக்குப்பிறகு 1990 ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் ஜெர்மனி மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு என்ற கிழக்கு ஜெர்மனி, ஜெர்மன் கூட்டாட்சி குடியரசு என்ற மேற்கு ஜெர்மனியுடன் இணைக்கப்பட்டது. 1990 மார்ச் 18 ஆம் நாள் கிழக்கு ஜெர்மனியில் நடைபெற்ற சுதந்திரமான தேர்தல்களையடுத்து, இரு ஜெர்மனிகளுக்கிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்று இறுதியில் ஒன்றிணைப்பு உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

**அணு ஆயுதக் குறைப்பு**

அணு ஆயுதங்கள் இதுவரை இரண்டு முறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை 1945 ஆகஸ்ட் 6 மற்றும் 8 ஆகிய நாட்களில் ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா மற்றும் நாகசாகி ஆகியவற்றின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசியதேயாகும். அதற்குப்பின்னர், பல்வேறு பரிசோதனைகளுக்காக இரண்டாயிரம் முறைகளுக்கு மேலாக அணுசக்தி பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை அணு ஆயுதங்களை தயாரித்து சோதித்துப் பார்த்துள்ள நாடுகளின் வரிசையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் அடங்கும்.

வருங்காலத்தில் அணு ஆயுதப் போர் ஏற்படும் அச்சத்தை தவிர்ப்பதற்காக **அணு ஆயுதப் பரவல்தடை ஒப்பந்தம்** ஒன்று ஏற்படுத்தப்பட்டது சிவில் பயன்பாட்டைத் தவிர்த்து ராணுவ ஆயுதங்கள் தயாரிக்க அணு சக்தியைப் பயன்படுத்துவதை தடுக்கவும், அவ்வாறு செய்ய முயற்சிக்கும் நாடுகள்மீது கட்டுப்பாடுகள் விதித்து மேற்பார்வை செய்யவும் இந்த உடன்படிக்கை வழிசெய்கிறது. இந்த உடன்படிக்கையில் சேர மறுக்கும் நாடுகளை சம்மதிக்க வைக்கும் நோக்கத்துடன் 'அணு ஆயுதங்களற்ற பகுதி' என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. அணு ஆயுதங்கள் இல்லாத நாடுகள் இனி அணுஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என்றும் தங்களது பகுதிகளை அணு ஆயுதமில்லாப் பகுதிகளாக வைத்திருப்பது என்றும் உறுதி மேற்கொள்ளவேண்டும். இதனைத் தொடர்ந்து சி.டி.பி.டி எனப்படும் **அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம்** செய்து கொள்ளப்பட்டது. இது அணு ஆயுத திட்ட நடவடிக்கைகளை மேலும் கட்டுப்படுத்துவதற்கான நடிவடிக்கையாகும்.

**உலகமயமாக்கல்**

நாடுகளின் பொருளாதாரத்திலும், பன்னாட்டுப் பொருளாதார விவகாரங்களிலும் உலகமயமாக்கம் என்பது ஒரு முக்கிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. உலகளாவிய வணிகச்

சூழலில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் உலக மயமாக்கம் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. உலக வர்த்தகத்தின் தற்போதைய வீச்சு ஒட்டுமொத்த உலகத்தையே ஒரு உலகக் கிராமமாகவே மாற்றிவிட்டது. உலகப் பொருளாதாரத்தில் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை ஒன்றிணைப்பது உலகமயமாக்கலின் தனிச்சிறப்பாகும். மேலும், அந்நிய முதலீடுகளை ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அனுமதிப்பதற்கு ஏற்ற வகையில் விதிகளையும் கட்டுப்பாடுகளையும் தளர்த்துவதையும் இது குறிக்கிறது. உலக மயமாக்கம் என்ற கருத்துக்கு மிகவும் விரிவாகப் பொருள் கொள்வோமானால், உலக நாடுகளுக்கிடையே தகவல்கள், கருத்துக்கள், தொழில்நுட்பங்கள், உற்பத்திப் பொருட்கள், சேவைகள், முதலீடுகள், நிதி மற்றும் மக்களையும் கூட ஒன்றுக்கொன்று பரிமாறிக் கொண்டு பொருளாதார, சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது என்றும் கூறலாம். நாடுகளின் எல்லைகளைத் தாண்டி பண்பாட்டு, சமூக அரசியல் மற்றும் பொருளாதார பரிமாற்றங்களுக்கு உலகமயமாக்கம் வழிவகுக்கிறது.

**இந்தியாவும் உலகமயமாக்கலும்**

1991 ஆம் ஆண்டு முதல் இந்தியா பின்பற்றி வருகின்ற பொருளாதாரக் கொள்கை இந்திய பொருளாதார வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு தொடங்கி இந்திய அரசாங்கம், இந்தியப் பொருளாதாரத்தை தாராளமயமாக்கவும், உலகமயமாக்கவும் பல்வேறு சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது.

இந்த பொருளாதார சீர்திருத்தங்களினால் இந்தியா உலகமயமாக்கம் மற்றும் சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியது. உலகப் பொருளாதாரத்தோடு இந்தியப் பொருளாதாரத்தை ஒன்றிணைக்கும் நோக்கத்துடனேயே இத்தகைய பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**உலக வர்த்தக மையம் (டபிள்யூ. டி.ஓ)**

1944ல் நடைபெற்ற பிரட்டன் உட்ஸ் மாநாட்டிலிருந்தே உலக வர்த்தக மையத்தின் வரலாறு தொடங்குகிறது. நாடுகளுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்தற்கான விதிகளையும் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துவதற்காக ஒரு பன்னாட்டு வணிக அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இந்த முயற்சியின் பலனாக '**காட்**' எனப்படும் வணிக மற்றும் வர்த்தகத் தொடர்பான பொது ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. '**காட்**' அமைப்பின்கீழ் ஏழு முறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. எட்டாவது முறை பேச்சுவார்த்தை உருகுவேயில் 1986ல் தொடங்கி 1995ல் நிறைவு பெற்றது. இறுதியில் உலக வர்த்தக மையம் நிறுவப்பட்டது. குறைந்த அளவிலான வர்த்தகத் தடைகளை மட்டுமே ஏற்படுத்துவது மற்றும் வர்த்தகத் தொடர்பான பேச்சு வார்த்தைக்கான களத்தை ஏற்படுத்துவது ஆகிய நோக்கங்களுக்காகவே உலக வர்த்தக மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

உலக வர்த்தக முறைக்கான விதிகளை உருவாக்குவதும், உறுப்பு நாடுகளுக்கிடையே எழும் சிக்கல்களைத் தீர்க்க முனைவது போன்ற பணிகளை உலக வர்த்தக மையம் மேற்கொள்கிறது. ஸ்விட்சர்லாந்திலுள்ள, ஜெனிவா நகரில் உலக வர்த்தக மையத்தின் தலைமையகம் அமைந்துள்ளது.

இந்த அமைப்பில் இதுவரை 149 நாடுகள் உறுப்பினராக சேர்ந்துள்ளன. 2007 ஜனவரியில் வியட்நாம் சேரவுள்ளது. உலக வர்த்தக மையத்தின் பொதுச் சபையே முக்கிய முடிவுகளை எடுக்கிறது. உலக வர்த்தக மையத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக பொதுச்சபை தொடர்ந்து கூடுகிறது.

உலக வர்த்தக மையம் செல்வந்த நாடுகளையும் பன்னாட்டு வணிக நிறுவனங்களையும் ஆதரிக்கிறது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இதனால், சிறு நாடுகள் பாதிக்கப்படுகின்றன. அறிவுசார் சொத்துரிமை (டிரிப்ஸ்) வர்த்தகம் தொடர்பான விதிகளும் உலக வர்த்தக மையத்தின் சட்டதிட்டங்களின்கீழ் கொண்டு வந்திருப்பதும் மற்றொரு குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுகிறது.

**ஐரோப்பியப் பொருளாதார கூட்டமைப்பு**

ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு (ஈஈசி) 1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பொதுச் சந்தை என்று முன்பு அழைக்கப்பட்ட இந்த அமைப்பில் பெல்ஜியம், பிரான்சு, இத்தாலி, லக்சம்பர்க், நெதர்லாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் இடம் பெற்றிருந்தன. 1967 ஆம் ஆண்டு இது மேலும் ஒன்றிணைக்கப்பட்டு ஐரோப்பியக் கூட்டமைப்பாக உருவாயிற்று. 1993 முதல் இது ஐரோப்பிய யூனியன் என்று அழைக்கப்படுகிறது. இது 25 ஐரோப்பிய நாடுகளை உறுப்பினராகக் கொண்டு செயல்படுகிறது.

**உலகளாவிய பயங்கரவாதம்**

பயங்கரவாதக் குழுவினரால், பெரும்பாலும் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது அரசியல் காரணத்துக்காக திட்டமிட்டு நடத்தப்படுகிற வன்முறைத் தாக்குதலே **பயங்கரவாதம்** எனப்படுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இத்தகைய செயலில் ஈடுபட்டிருந்தால் அது **பன்னாட்டு பயங்கரவாதம்** என்று கருதப்படுகிறது.

இன்றைய நிலையில் பயங்கரவாதம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. எனவே 2001 செப்டம்பர் 28 ஆம் நாள் ஐ.நா. பாதுகாப்பு சபை பயங்கரவாதத்துக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றியது. அரசியல், கருத்துவாதம், இனவாதம், மதவாதம், உள்ளிட்ட அனைத்து வகையிலான பயங்கரவாதத்தையும் இந்த தீர்மானம் கடுமையாகக் கண்டித்தது.



**செப்டம்பர் 11–உலக வர்த்தக மையம்**

உலகம் முழுவதும் பல்வேறு பயங்கரவாத செயல்கள் நடைபெற்றுவருகின்றன. 2001 செப்டம்பர் 11 ஆம் நாள் அமெரிக்காவின் நியூயார்க் நகரிலிருந்த உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்களைத் தாக்கி அழித்ததே மிகக் கொடுமையான பயங்கரவாதச் செயலாகும். அன்று காலை, அல்கொய்தா என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 19 பயங்கரவாதிகள் அமெரிக்காவுக்குச் சொந்தமான பயணிகள் விமானங்களை கடத்தினர். இவற்றில் இரண்டு விமானங்கள் நியூயார்க் நகரின் உலக வர்த்தக மையக் கட்டிடத்தின் மீது மோதியதில் இரண்டு அடுக்குமாடி கோபுரங்களும் அடியோடு சீர்குலைந்தன. வெர்ஜீனியா, ஆர்லிங்டன் கவுண்டியிலிருந்த பென்டகான் கட்டிடத்தின்மீது மற்றொரு விமானம் மோதியது. இந்த பயங்கரவாதச் செயலில் 2973 பேர் உயிரிழந்தனர். அவர்கள் பல நாடுகளையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1980 முதற்கொண்டு இந்தியாவும் பயங்கரவாத வன்முறைச் செயல்களுக்கு ஆளாகி வருகிறது. பஞ்சாபில் தொடங்கிய பயங்கரவாதம் ஜம்மு காஷ்மீருக்கும் பின்னர் இந்தியாவின் பிறபகுதிகளுக்கும் பரவியது. ஜம்மு காஷ்மீரில் மட்டும் துப்பாக்கி சூடு மற்றும் வெடிகுண்டுகளால் இதுவரை கிட்டத்தட்ட இருபதாயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், ஜம்மு காஷ்மீரில் இந்தியா எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

சமீப காலத்தில் நிகழ்ந்த பயங்கரவாத நிகழ்ச்சிகளில் 1992 ஆம் ஆண்டு பம்பாய் தொடர்குண்டு வெடிப்பு குறிப்பிடத்தக்கது. 1996ல் டெல்லி லாஜ்பட் பகுதியில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இத்தகைய குண்டுவெடிப்புகள் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன. ஆப்கானிஸ்தானில் தாலிபான் ஆட்சியின்போது இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் காண்டகாருக்கு பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டது. அதிலிருந்து 178 பயணிகளும் ஒருவார காலம் பிணைக்கைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர். இந்திய அரசாங்கம் பெருத்த நெருக்கடிக்கு ஆளாகியது. பிணைக் கைதிகளை மீட்பதற்கு சிறையிலிருந்து மூன்று பயங்கரவாதிகளை விடுவிக்க வேண்டியதாயிற்று. 2001 டிசம்பர் 13 ஆம் நாள் இந்திய நாடாளுமன்றத்தின்மீதே பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். எனவே, இந்தியா ஐ.நா. அமைப்புடன் சேர்ந்து உயிரைக் குடிக்கும் ஒன்றுமறியா அப்பாவிகளை பாதிக்கும் பயங்கரவாதத்தை கண்டித்து வருகிறது.

**சுற்றுச்சூழல் குறித்த பிரச்னைகள்**

உலகத்தின் பல பகுதிகளில் ஏற்பட்டுவரும் சுற்றுச்சூழல் மாற்றங்கள் உலக மக்களின் வாழ்க்கையையே அச்சுறுத்தும் அளவுக்கு உள்ளன. உலகளாவிய வெப்ப உயர்வு, ஓசோன் படலம் சேதமாதல் போன்ற இயற்கைச் சூழல் மாறுபாடுகள் ஏற்பட்டு வருகின்றன.

படித்தவர்கள் மட்டுமல்லாது பொது மக்களிடம்கூட சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவேண்டும், பூமியை மக்கள் வாழ்வதற்கேற்றவகையில் போற்றிப் பாதுகாக்க வேண்டும், என்ற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

**கற்றல் அடைவுகள்**

*இந்தப் பாடத்திலிருந்து மாணவர்கள் பெற்ற தகவல்கள்*

1. *சோவியத் யூனியன் கலைக்கப்பட்ட பின் ஏற்பட்டுள்ள புதிய உலக அமைப்பு.*
2. *அணு ஆயுதப் பரவலைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள்.*
3. *உலகமயமாக்கமும், இன்றைய உலகில் அதன் தாக்கமும்.*
4. *பயங்கரவாதத்தின் பெருக்கமும் இந்தியாவில் அதன் தாக்கமும்.*
5. *பூமியில் வாழ்க்கையை பாதிக்கும் சுற்றுச்சூழல் பிரச்னைகள்*

# பயிற்சி

## பகுதி – அ

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. பன்னாட்டு வாணிப அமைப்பை உருவாக்க காரணமாயிருந்தது.

அ) வாஷிங்டன் மாநாடு　　ஆ) வியன்னா மாநாடு

இ) ஐ.நா. மாநாடு　　ஈ) பிரிட்டன் – வுட்ஸ் மாநாடு

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. உலக வர்த்தக மையத்தின் இரட்டைக்கோபுரங்கள் தாக்கப்பட்ட ஆண்டு ________

2. உலக வர்த்தக மையத்தின் தலைமையிடம் உள்ளது ________

**III. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கோர்பசேவ் | அ. | சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு |
| 2. | அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் | ஆ. | 1958 |
| 3. | இ.இ.சி. | இ. | பிரஸ்ரோக்கியா |
| 4. | வெப்ப உயர்வு | ஈ. | அணு ஆயுத குறைப்பு |

**IV. சரியான சொற்றொடரை கண்டறிக. ஒரு சொற்றொடர் மட்டுமே சரியானது**

அ. 1990ல் மைக்கேல் கோர்பசேவ் சோவியத் யூனியனின் அதிபராகப் பொறுப்பேற்றார்.

ஆ. அவரது பொருளாதாரக் கொள்கை தனியார் உடைமையை விமர்சித்தது.

இ. 'கிளாஸ்நாஸ்ட்' என்ற பெயரில் அவர் பல அரசியல் சீர்திருத்தங்களை கொண்டுவந்தார்.

ஈ. 1995ல் அவர் சோவியத் யூனியன் அதிபர் பதவியிலிருந்து விலகினார்.

**V. பின்வரும் வாக்கியங்கள் சரியா, தவறா எனக் கூறுக.**

1. 1991–ல் இந்திய அரசு பல தொடர் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி தாராளமயமாக்கி மற்றும் உலக மயமாக்கலை இந்திய பொருளாதாரத்தில் ஏற்படுத்தியது.

2. டிசம்பர் 13, 2000–ல் இந்திய பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

**VI. சிறு குறிப்பு வரைக. (ஏதேனும் மூன்று குறிப்புகள்)**

1. அணு ஆயுத குறைப்பு

2. உலக வர்த்தக அமைப்பு

3. உலகளாவிய பயங்கர வாதம்

**VII. சுருக்கமான விடை தருக. (100 வார்த்தைகள்)**

1. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்ற நிகழ்ச்சிகளை விவாதி.
2. ஜெர்மனி மீண்டும் இணைக்கப்பட்டதை விவரி.
3. அணு ஆயுதப்பரவல் தடை சட்டத்தின் முக்கியக் கூறுகளைக் கூறுக.

**VIII. விரிவான விடை தருக. (200 வார்த்தைகள்)**

1. உலக மயமாக்கத்தின் போக்கு மற்றும் தாக்கத்தை விளக்குக.
2. உலக வர்த்தக அமைப்பை முறைப்படுத்துவதில் உலக வர்த்தக மையத்தின் பங்கினை ஆய்க.
3. உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கத்தை மதிப்பிடுக

# தேசிய இயக்கம்
## காலக் கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

1880

**1885 –** இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம்

1890

1895

1900

**1905 –** வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்

**1906 –** அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் தோற்றம்

**1907 –** சூரத் பிளவு

1910

1910

**1914 –** முதல் உலகப் போர் ஏற்படுதல்

**1915**

**1916 –** தன்னாட்சி இயக்கம்

**1919 –** ஜாலியன் வாலாபாக் படுகொலை

**1920 –** ஒத்துழையாமை இயக்கம்

**1922 –** சுயராஜ்ஜியக் கட்சி

1925

**1928 –** சைமன் குழு வருகை / நேருவின் அறிக்கை

**1929 –** பூரண சுயராஜ்ஜியம் அறிவிப்பு (லாகூர் காங்கிரஸ்)

**1930 –** சட்டமறுப்பு இயக்கம் / தண்டி உப்பு அறப்போர்

**1932 –** பூனா ஒப்பந்தம்

**1935 –** இந்திய அரசுச் சட்டம்

**1939 –** இரண்டாம் உலகப்போர் ஏற்படுதல்

**1940 –** தனி நபர் அறப்போர்

**1942 –** கிரிப்சு தூதுக்குழு / வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1945

**1946 –** காபினட் தூதுக்குழுவருகை

**1947** இந்திய விடுதலைச் சட்டம்

# நவீன உலகம் 20 ஆம் நூற்றாண்டு

## காலக் கோடு

1 அலகு = 10 ஆண்டுகள்

1900

**1905 –** இரஷ்ய – ஜப்பானியபோர்

1910

**1914 –** முதல் உலகப்போர் ஆரம்பம்

1915

**1917 –** ரஷ்யப்புரட்சி

**1918 –** முதல் உலகப்போர் முடிவு

**1920 –** பன்னாட்டு சங்கம் தோற்றுவித்தல்

1925

**1929 –** பெரிய பொருளாதார மந்தம்

1930

1930

**1931 –** ஜப்பான் மஞ்சூரியா மீது படை எடுத்தல்

1935

**1937 –** ரோம்–பெர்லின் – டோக்கியோ அச்சு ஒப்பந்தம்

**1939 –** இரண்டாம் உலகப்போர்

1940

**1945 –** ஐக்கிய நாடு அவை தோற்றுவிக்கப்படுதல்

**1949 –** நோட்டோ ஒப்பந்தம்

1950

**1954 –** சீட்டோ (மணிலா ஒப்பந்தம்)

**1955 –** வார்சா ஒப்பந்தம்

1960

**1963 –** அணு ஆயுதச் சோதனைத்தடை ஒப்பந்தம்

1965

**1970 –** அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் அமுல் படுத்தப்படுதல்

# Bibliography

## Modern India


Arnold, David. *The Congress in Tamilnadu.* New Delhi : Manohar, 1977.

Baker, *C.J.The Politics of South India 1920-1937*. Cambridge : Oxford University Press, 1976.

Chandra, Bipan. India's Struggle for Independence. New Delhi: Penguin Books India (P) Ltd., 1989.

*Nationalism and Colonialism in Modern India.* New Delhi : Orient Longman , 1984.

Desai, A.R. *Social Background to Indian Nationalism*. New Delhi : Vikas, 1978.

Eugene, Irschick. *F. Politics and Social Conflicts in South India: The Non-Brahmin Movement and Tamil Separatism, 1916-1929*. Berkeley: University of Chicago, 1964.

*Tamil Revivalism in the 1930s*. Madras: Cre-A, 1986.

Grover, B.L. & S.Grover. *A New look at Modern Indian History*. New Delhi : S. Chand & Company Ltd. 1995.

Majumdar, R.C. H.C. Raychaudhuri & Kalikinkar Datta, *An Advanced History of India*. New Delhi: Mac Millan India Ltd., 2003.

Mehrotra, S.R. *The Emergence of the Indian National Congrees,* Reprint. New Delhi: Rupa, 2004.

Nambi Arroran. *Tamil Renaissance and Dravidian Nationalism.* Madurai: Koodal Publishers, 1980.

Pillay, K.K. *Social History of the Tamil.* Madras: University of Madras, 1975.

Rajendran, *N. National Movement in Tamil Nadu*: Madras: Oxford University Press, 1994.

Rajaraman, *P. The Justice Party,* Madras, 1988

Sathianatha Aiyer. *History of India*, Vol.III Madras: S. Viswanathan Pvt. Ltd., 1982.

Seal, Anil. *The Emergence of Indian Nationalism*. Cambridge: Cambridge University Press, 1968.

Subramanian. P. *Social History of the Tamils*. New Delhi:: B.I. Publications, 1995.

Sumit, Sarkar. *Modern India* 1885-1947, Delhi: MacMillan, 1983.

Sundraralingam *R. Politics and Nationalists Awakening in SouthIndia 1852-1891*. Arizona: Arizona Press 1974.

## World History

Charles Downer Hazen. *Modern Europe Since 1789.* New Delhi: S. Chand & Company Ltd. 1995.

Clyde, *P.H. & Beers B.F. History of East Asia*. New Delhi: Tata Magraw Hill, 1980.

Elise *K. Tipton Modern Japan A Social and Political History.* London: Routledge 2002.

Eric Hobsbawm. *The Age of Empire 1875-1891*. New Delhi: Punguin Books India (Pt) Ltd., 1995.

Fisher. *H.A.L. History of Europe*. New Delhi: Omsons Publications, 1997. Ketelbey, C.D.M. A History of Modern Times from 1789. New Delhi: Oxford University Press, 2005.

Lowe, *N. Mastering Modern World History.* New Delhi: MacMillan India Ltd., 1992.

McKinley, Albert E., Arthur C.Howland & Mathew L.Dawn. *World History. Vol I & II*, New Delhi: Atlantic Publishers, 1994.

Norman Davis. *Europe A History.* New York: Oxford University Press, 1996.

Rao, *B.V. History of Europe (1450-1815).* New Delhi: Sterling Publishers Pvt. Ltd. – 1993.

Radhey Shyam Chaurasia. *History of Modern China*. New Nelhi: Atlantic Publishers, 2004.

Swain, *J.E. A History of World Civilization.* Reprint, New Delhi: Eurasia Publishers, 1970.

Wells, *H.G. A Short History of the World*. New Delhi Atlantic Publications, 1996.